உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குமரகுருபர அடிகள் பாடல்கள் - ஓர் ஆய்வு

மதுரை பல்கலைகழகத்தில் பிஎச்.டி. (Ph.D.) பட்டம் அளிக்கப் பெற்றது.

டாக்டர். ந. மாணிக்கம்
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
(M.A., M.Litt., Ph.D.)
மதுரை-9, தியாகராசர் கலைக் கல்லூரியில்
38 ஆண்டுகள் பணியாற்றியவர்.

விலை : ரூ.200/-

(இருநூறு மட்டும்)

குமர குருபர அடிகள் பாடல்கள் – ஓர் ஆய்வு

மதுரைப் பல்கலைக் கழகத்தில்
பிஎச்.டி (Ph.D) பட்டத்திற்கு
அளிக்கப்பெறும் ஆய்வு நூல்

ந. மாணிக்கம், எம்.ஏ., எம்.லிட்.,
தமிழ் விரிவுரையாளன்,
தியாகராசர் கல்லூரி, மதுரை – 9.

சனவரி, 1976

ந. மாணிக்கம், எம்.ஏ., எம்.லிட்.,
தமிழ் விரிவுரையாளன்,
தியாகராசர் கல்லூரி, மதுரை - 9.

மதுரை - 9.
சனவரி - 1976.

நூலாசிரியன் உறுதிமொழி

குமரகுருபர அடிகள் பாடல்கள் – ஓர் ஆய்வு என்னும் தலைப்பில் பி.எச்.டி. பட்டத்துக்கு எழுதப் பெற்றுள்ள இந்த ஆய்வு நூல் என் முயற்சியில் உருவானதேயாகும் என்றும், இதற்குமுன் எத்தகைய ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இஃது அளிக்கப்படவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

(ந. மாணிக்கம்)

பொருளடக்கம்

நூன்முகம்

'குமரகுருபர அடிகள் பாடல்கள் - ஓர் ஆய்வு' எனப் பெயரிய இந்த ஆய்வு நுல் மதுரைப் பல்கலைக் கழகத்தில் பி.எச்.டி. பட்டத்திற்கு அளிக்கப் பெறுவதாகும். 1970 சனவரியில் பதிவு செய்து, தனியாக ஆய்வு மேற்கொள்ளவும் தமிழில் தரவும் அனுமதிக்கப்பெற்று, 1975 சனவரியில் 5 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில், வேண்டிக் கொண்டவாறு, 1976 சனவரி வரை கால நீட்டிப்பு வழங்கப்பெற்று, அவ்வண்ணம் இப்பொழுது இந்த ஆய்வுநூல் அளிக்கப்பெறுகிறது. (குறிப்பு: பல்கலைக்கழகக் கடிதங்கள் (1) எண். 1479/A தேதி: 8.4.1970 (2) எண்.B4/Regn/II.3 தேதி: 3.1.1974 (3) எண்.B4/Regn/II.3 தேதி: 17.1.1975 இவ்வகையில் அனுமதி வழங்கிய பல்கலைக் கழகத்துக்கு நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

சங்க இலக்கியத்தில் பாலைத்திணைப் பாடல்கள் பற்றிச் சென்னைப் பல்கலைக் கழக எம்.லிட் பட்டத்திற்கு ஆராய்ந்தபொழுது, மதுரைத் தியாகராாசர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராய் விளங்கிய டாக்டர். சி. இலக்குவனார், எம்.ஏ,. எம்.ஓ.எல்,. பி.எச்.டி., அவர்களும், முதல்வராகத் திகழ்ந்த டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம்.ஏ., பி.எச்.டி., அவர்களும் முறையே எனக்கு மேற்பார்வைப் பொறுப்பேற்று ஆய்வு நெறிகளை அறிவுறுத்தியமை என்றும் நினைக்கத்தக்கதாகும். இந்த ஆய்வுக்கும் அவர்களின் அடிப்படை அறிவுரைகள் தோன்றாத் துணையாகத் திகழ்வன ஆதலின் அவர்களை நன்றியறிதலோடு நெஞ்சில் நினைத்து வழுத்துகின்றேன்.

அடிகள் பற்றிய இந்த நூலாக்கத்துக்கு உதவியுள்ள நூல்கள், கட்டுரைகள் எழுதிய அறிஞர் பெருமக்கள் யாவருக்கும் என் நன்றி உரியது. குறிப்பாக டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்களையும், கா. சுப்பிரமணியபிள்ளை, எம்.ஏ., எம்.எல்., அவர்களையும் நினைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அடிகள், மடம் தொடர்பாகக் கலந்துரையாட உதவியும், ஐயவினாக்களுக்குச் செய்திக் குறிப்பு எழுதியனுப்பியும் அருளிய திருப்பனந்தாள் காசிமடம் 21-ஆம் பட்டத்துத் தலைவர் உயர்தவத்திரு.

முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கு என் உள்ளார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் உரித்தாக்கிக் கொள்கிறேன். அடிகளின் மரபில் விளங்கிய திரு. டி.எம். குமரகுருபரன் பிள்ளை, பி.ஏ., பி.எல்., அவர்கள், கலந்துரையாட உதவியமைக்கும் எனது நன்றி உரியதாகும்.

இந்நூலாக்கம் தொடர்பாக மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும் முதுகலைத் தமிழ்த்துறைத் தலைவருமாகிய டாக்டர். சுப. அண்ணாமலை, பி.ஓ.எல்., (ஆனர்சு)., எம்.லிட்., பி.எச்.டி., அவர்கள் தக்க அறிவுரைகள் வழங்கியமைக்கும், தமிழப்பேராசிரியரும் இளங்கலைத் தமிழ்த்துறைத் தலைவருமாகிய திரு.நா. பாலுசாமி, எம்.ஏ., எம்.லிட்., அவர்கள் வழிப்படுத்தியமைக்கும், தமிழ்ப் பேராசிரியரும் சித்தாந்த அறிஞருமாகிய திரு. வித்துவான், அ. சங்கர நாராயணன், எம்.ஏ., எம்.லிட்., பி.டி., அவர்கள் உரிய அறிவுரைகள் அளித்தமைக்கும் என் மனமார்ந்த நன்றியறிதலைப் பணிவோடு புலப்படுத்திக் கொள்கிறேன். பல வகையிலும் இந்நூலாக்கத்துக்கு உதவிய யாவருக்கும் என் நன்றி உரியது.

இந்த ஆய்வுநூல், முதலில் அனுமதிக்கப்பெற்று 5ஆண்டுகளில் நிறைவுறாமல் அடுத்த ஆண்டில் நிறைவு பெற்றுள்ளமை, ஐந்தாண்டளவும் பேசாதிருந்து முருகனருளால் பின்னர்ப் பேசிய குமரகுருபர அடிகளைப் பற்றிய ஆய்வாக அமைந்துள்ள பொருத்தத்தால் இறையருள் செயலாய் அமைந்தது போலும். இப்பணியினை இனிது நிறைவுறச் செய்த செந்தமிழ் முருகன் திருவடி மலர்களை வழுத்தி இறைஞ்சுகிறேன்.

(ந. மாணிக்கம்)

மதுரை,
சனவரி, 1976.

சொற் குறுக்க விளக்கம்

அடிகள்	..	குமரகுருபர அடிகள்
அதி	..	அதிகரணம்
உ.வே.சா	..	உ.வே.சாமிநாதஐயர்
இல.விள.பாட்	..	இலக்கணவிளக்கப் பாட்டியல்
கா.சு.பிள்ளை	..	கா. சுப்பிரமணியபிள்ளை
காரிகை	..	யாப்பருங்கலக்காரிகை
கு.பி.தி. (இராம)	..	குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு, இராமலிங்கசுவாமிகள் பதிப்பு
கு.பி.தி.(உ.வே.சா)	..	ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு.உ.வே.சாமிநாதஐயர் குறிப்புரை ஆராய்ச்சியுடன், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்துப் பதிப்பு
குறள்	..	திருக்குறள்
குறுந்	..	குறுந்தொகை
கைலைக்கலம்	..	கைலைக்கலம்பகம்
சித்தியார்	..	சிவஞான சித்தியார்
சிலம்பு, புறஞ்சேரி	..	சிலப்பதிகாரம், புறஞ்சேரியிறுத்தகாதை
சிவ.இ; சிவ.இர.மா;		
சிவ.இ.மாலை	..	சிவகாமியம்மை இரட்டைமணிமாலை
சூ	..	சூத்திரம்
தண்டி	..	தண்டியலங்காரம்
திருமுருகு	..	திருமுருகாற்றுப்படை
திருவால	..	திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்

தொல்.சொல்	..	தொல்காப்பியம் சொல்லதிகாரம்
தொல்.பொருள்	..	தொல்காப்பியம் பொருளதிகாரம்
அகத்	..	அகத்திணையியல்
களவு	..	களவியல்
புறத்	..	புறத்திணையியல்
நச், நச்சர்	..	நச்சினார்க்கினியர்
நன்	..	நன்னூல்
பக்	..	பக்கம்
பு.சி.பு	..	பு.சி.புன்னைவனநாதமுதலியார்
புறம்	..	புறநானூறு
பெரிய	..	பெரியபுராணம்
மது.கலம்	..	மதுரைக்கலம்பகம்
மீ.இ; மீ.இ. மாலை	..	மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை
மீ.கு; மீ.குறம்	..	மீனாட்சியம்மை குறம்
மு.வ	..	மு. வரதராசனார்
அ.மு.ப	..	அ.மு. பரமசிவானந்தம்
I.L.R	..	Indian Law Report
P	..	Page
PP	..	Pages
T.P.M	..	T.P. Meenakshisundaranar

*****

குறிப்பு முறை

1. இந்நூல் அடிக்குறிப்பில் எண்கள் மட்டும் குறிக்கப்பெற்றிருப்பவை அடிகளின் பாடல் எண்களைக் குறிக்கும். ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு, உ.வே.சா. குறிப்புரை ஆராய்ச்சியுடன், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து வெளியீடு, நான்காம் பதிப்பு (1961) நூலில் குறித்துள்ள தொடர்எண்களும, பிறபாடல் எண்களும் அவ்வாறே மேற்கொள்ளப் பெற்றுள்ளன. பாடல் எண் மட்டும் அல்லது பாடல் எண்ணும் அதில் உள்ள வரி எண்ணும் குறிக்கப்பெறும். எடுத்துக்காட்டாக 62 என்பது அடிகளின் 62-ஆம் தொடர் எண்ணுக்குரிய பாடலைக் குறிக்கும்; 569: 23-43 என்பது 569-ஆம் பாடலில் 23-ஆம் வரிமுதல் 43-ஆம் வரிவரை என்று குறிக்கும். சில இடங்களில் கட்டுரைப் பகுதியிலும் இக்குறிப்புமுறை மேற்கொள்ளப்பெற்றுள்ளது.

2. கு.பி.தி. (உ.வே.சா) பக். 264 என்றாற்போல் மேற்குறித்த நூலின் பக்கம் குறிக்கப்பெறும்; பக்க எண் சிலபோது முன்னால் உள்ள ஆராய்ச்சிப் பகுதிப்பக்கத்தையும், சிலபோது அடுத்துள்ள நூற்பகுதிப் பக்கத்தையும் குறிக்கும்.

3. பிறசெய்யுள் நூல்களின் எண் அந்நூற்பாடல் எண்ணையோ, வரி எண்ணையோ அவை இரண்டையுமோ உணர்த்தும்.

4. இலக்கண நூல்களின் சூத்திர எண் குறிக்கப் பெற்றுள்ளது.

5. உரைநடை நூல்களின் பக்க எண் குறிக்கப் பெற்றுள்ளது.

6. சாத்திர நூல்களில் சூத்திர எண்ணும் அதில் உள்ள பாடல் எண்ணும் குறிக்கப்பெறும் (எ.டு) சித்தியார். சூ.5:9 என்பது சிவஞான சித்தியாரில் 5-ஆம் சூத்திரத்தில் 9-ஆம் பாடலைக் குறிக்கும்.

7. பாடல் வரிகள் கட்டுரைப் பகுதியில் எடுத்தாளப்பெறும் சில இடங்களில், அரிய சொற்புணர்ச்சிகள் தெளிவு கருதிப் பிரித்துக் குறிக்கப்பெற்றுள்ளன.

*****

துணை நூல்களின் நிரல்

தமிழ்

1. அண்ணாமலை, சுப., உருவும் உணர்வும், கயல்பதிப்பகம், மதுரை, 1975.
2. அமிதசாகரர், யாப்பருங்கலக்காரிகை, குணசாகரர் உரை, கழகம், 1956.
3. இலக்கண விளக்கப் பாட்டியல்
4. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், உ.வே.சா. பதிப்பு, சென்னை. 1968.
5. ஐயனாரிதனார், புறப்பொருள் வெண்பாமாலை, பொ.வெ.சோமசுந்தரனார் உரை, கழகம், சென்னை. 1959.
6. கந்தையாபிள்ளை, ந.சி., தமிழ்ப்புலவர் அகராதி, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம். சென்னை- 1. 1952.
7. கலைக்களஞ்சியம், தொகுதி 4, தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை, 1956.
8. கலைக்களஞ்சியம், தொகுதி 5, தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை, 1958.
9. கலைக்களஞ்சியம், தொகுதி 6, தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை, 1959.
10. கலைக்களஞ்சியம், தொகுதி 7, தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை, 1960.
11. களவியல் என்ற இறையனார் அகப்பொருள், நக்கீரர் உரை, கழகம், சென்னை. 1960.
12. குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு, சிதம்பரம் ஈசானியமடம் இராமலிங்கசுவாமிகள் பதிப்பு. சென்னை, சுபகிருது தை.
13. குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு. வி. சிதம்பர ராமலிங்கபிள்ளை அரும்பொருள் விளக்கத்துடன், கழகம். சென்னை, 1925.
14. குமரகுருபரன், மலர் 2, 1951
15. குமரகுருபரன், ஆண்டுமலர், 4,1953.

16. குமரகுருபரன், ஆண்டுமலர், 5,1954.
17. குமாரசுவாமிப்புலவர், சுன்னாகம். அ., தமிழ்ப்புலவர் சரித்திரம், கொக்குவில், நவ. கார்த்திகை.
18. குறுந்தொகை, எஸ். ராஜம் வெளியீடு, சென்னை - 1. 1957.
19. சிதம்பரப் பாட்டியல்
20. சிவஞான-சித்தியார் சுபக்கம், கா. சுப்பிரமணியபிள்ளை உரை - நடையுடன் தருமையாதீன வெளியீடு. 8.9.1962.
21. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், இரண்டாவது மாநாடு, கழகம், சென்னை - 1959.
22. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், முதலாவது மாநாடு, கழகம் சென்னை - 1958.
23. ஸ்ரீஆதிகுமரகுருபரசுவாமிகள் வரலாறும் (கந்தர் கலிவெண்பா சகலகலாவல்லிமாலையுடன்) அற்புதத் தேவாரத்திரட்டும் (திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி முதலியனவும்) பாலூர் கண்ணப்ப முதலியார் எழுதிய வரலாற்றுடன், ஸ்ரீகுமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1963.
24. ஸ்ரீஆதிகுமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு, டாக்டர் உ.வே. சாமிநாதஐயர் குறிப்புரை ஆராய்ச்சியுடன், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம், நான்காம் பதிப்பு, 1961.
25. சீனிவாசன், ரா. சங்க இலக்கியத்தில் உவமைகள், சென்னை - 1973
26. சுப்பிரமணியக்கவிராயர், ரா., குமரகுருபரசுவாமிகள் புராணம் கும்பகோணம், 1918.
27. சுப்பிரமணியபிள்ளை, கா., குமரகுருபர அடிகள் வரலாறு (குமரகுருபர அடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும்) கழகம், சென்னை - 1932.
28. செந்தமிழ்,12-ஆம் தொகுதி 1913-1914
29. செந்தமிழ்,48-ஆம் தொகுதி 1951-1952
30. செந்தமிழ்,57-ஆம் தொகுதி 1961-1962
31. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 25, திருவள்ளுவர் ஆண்டு 1981 - 1982, கழகம் சென்னை.
32. சேக்கிழார், பெரியபுராணம், ஆறுமுகநாவலர் சூசனத்துடன், சென்னை, துந்துபி, பங்குனி.
33. சோமலெ, திருநெல்வேலி மாவட்டம், சென்னை, 1965.

34. தண்டபாணிசுவாமிகள், புலவர் புராணம் - 1931.
35. தண்டியலங்காரம், கழகம், சென்னை - 1956.
36. தமிழ்ப்பொழில் துணர் 3, பிரபவ ஆண்டுத் தொகுப்பு
37. தமிழ்ப்பொழில் துணர் 5, சுக்கில ஆண்டுத் தொகுப்பு
38. தமிழ்ப்பொழில் துணர் 6, பிரமோதூத ஆண்டுத் தொகுப்பு,
39. தமிழ்ப்பொழில் துணர் 35, 1959
40. திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா, சகலகலாவல்லி மாலை (மூலம்) முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் முன்னுரையுடன், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம், 17.10.1963.
41. திருச்செந்தூர்ப் பிரபந்தத்திரட்டு, மு.ரா. அருணாச்சலக்கவிராயர் அரும்பதவுரையுடன் பதிப்பித்தது. மதுரை 1911.
42. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரப்பதிகங்கள் திருமுறை 1,2,3, கழகம், சென்னை - 1927.
43. திருநாவுக்கரசு,க.த. திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை - 1971.
44. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப்பதிகங்கள், திருமுறை 4,5,6, கழகம், சென்னை - 1928.
45. திருமூலர், திருமந்திரம், ஸ்ரீகுமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1960.
46. திருவள்ளுவர், திருக்குறள், பரிமேலழகருரை, ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை - 1956.
47. திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை, க.சு.நவநீதகிருட்டின பாரதியார், பத்மா பதிப்பகம், இலங்கை - 1954.
48. திருவாசக விரிவுரை, நான்கு அகவல்கள், உரையாசிரியர் மறைமலையடிகள், கழகம் - 1958.
49. திருவாரூர் நான்மணிமாலை, தி. பட்டுச்சாமி ஓதுவார் உரை, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் - 1962.
50. திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்.
51. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையருரை, கழகம் சென்னை - 1959.
52. தொல்காப்பியம், பொருளதிகாரம் 1 அகத்திணையியல் புறத்திணையியல், நச்சினார்க்கினியர் உரை, கழகம், சென்னை - 1955.

53. தொல்காப்பியம், பொருளதிகாரம் 2 களவியல் கற்பியல் பொருளியல், நச்சினார்க்கினியர் உரை 'கழகம்' - சென்னை - 1958.
54. தொல்காப்பியம், பொருளதிகாரம், 3 மெய்ப்பாட்டியல் உவமவியல் செய்யுளியல் மரபியல், பேராசிரியர் உரை, 'கழகம்,' சென்னை - 1959.
55. நக்கீரர், திருமுருகாற்றுப்படை, (பத்துப்பாட்டு), எஸ். ராஜம் வெளியீடு சென்னை - 1. 1957.
56. நீதிநெறி விளக்கம், தி.சு. பாலசுந்தரம்பிள்ளை உரை, கழகம், சென்னை - 1965.
57. பத்தாண்டு ஆட்சிமலர் 1933 - 1943, தருமபுர ஆதீனம், வெளியீடு எண். 64.1943.
58. பரந்தாமனார், அ.கி., மதுரை நாயக்கர் வரலாறு, சென்னை - 1960.
59. பவணந்தியார், நன்னூல், ஆறுமுகநாவலர், காண்டிகையுரை, சென்னை - 1955.
60. பழனிவேல்பிள்ளை, பெ. குமரகுருபரர் காட்டிய வழி, கழகம் 1946.
61. பன்னிருபாட்டியல் மதுரைத் தமிழ்ச்சங்கம் , 1951.
62. பாரதிதாசன், எதிர்பாராத முத்தம், செந்தமிழ் நிலையம், இராமச்சந்திரபுரம் 1972.
63. புறநானூறு எஸ்.ராஜம் வெளியீடு, சென்னை - 1958.
64. மகாதேவன், டி.எம்.பி. தமிழாக்கம் ஞா. இராஜாபகதூர், இந்துசமயத்தத்துவம், தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம். 1964.
65. மதுரைக்கலம்பகம், பு.சி. புன்னைவனநாத முதலியார் உரை, கழகம், சென்னை - 1969.
66. மதுரைக்கலம்பகம், வை.மு. சடகோபராமாநுசாசாரியர் உரை சே.கிருட்டினமாசாரியர் பதிப்பு.
67. மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ். பு.சி. புன்னைவனநாத முதலியார் உரை, 'கழகம்', சென்னை - 1959.
68. மாணிக்கவாசகர், திருக்கோவையார் (திருச்சிற்றம்பலக் கோவையார்) ஸ்ரீவைகுண்டம் 1960.
69. மாணிக்கவாசகர், திருவாசகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1964.

70. மீனாட்சிசுந்தரம்பிள்ளை மகாவித்துவான், குமரகுருபரஸ்வாமிகள் சரித்திரம், பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு. உ.வே.சா. சென்னை - 1910.
71. முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள், 21-ஆம் பட்டத்துத் தலைவர், திருப்பனந்தாள் காசிமடம், இந்நூலாசிரியனுக்கு எழுதியுள்ள கடிதம் எண் 1387/85 தேதி 3.10.75.
72. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், பு.சி.புன்னைவனநாத முதலியார் உரை, கழகம், 1968.
73. மெய்கண்ட சாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், முதற்பகுதி, கழகம், 1969.
74. மெய்கண்ட சாத்திரம் பதினான்கு, மூலமும் உரையும், இரண்டாம்பகுதி, கழகம், 1969.
75. மெய்கண்டார், சிவஞானபோதமும் மாதவச் சிவஞான யோகிகள் சிவஞான பாடியமும், கழகம், சென்னை - 1952.
76. மெய்கண்டார் சிவஞானபோத மூலமும் சிவஞானசுவாமிகள் சிற்றுரையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 1968.
77. வச்சணந்திமாலை என்னும் வெண்பாப் பாட்டியலும் வரையறுத்த பாட்டியலும், கொ. இராமலிங்கத் தம்பிரான் உரை, கழகம், சென்னை - 1951.
78. வரதராசன் மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1972.
79. வேங்கட கிருஷ்ணய்யங்கார், தி. துளசிதாசரின் இராமசரிதமானஸ் என்னும் இராமாயணத்தின் சுருக்கம், தமிழில், சென்னை,1967.

English


80. Aldous Huxley, The Pere-nnial Philosophy, London, fontana books 1958.
81. Annamalai, SP., A Critical study of Saint Ramalinkar's works, typed copy, Ph.D. Thesis, Madras University, July 1968.
82. Annamalai, SP., The Life and Teachings of Saint Ramalinkar, Bharatiya Vidya Bhavan, Bombay - 7. 1973.
83. Dorai Rangaswamy, M.A., The religion and Philosophy of Tevaram with special reference to Nampi Arurar (Sundarar) Book I, Madras University publication, 1958.
84. Ibid Book II, 1959.

85. Encyclopaedia Britannica, vol 15.p.586, 1960.
86. Encyclopaedia Britannica, vol 19.p.110, 1960.
87. Meenakshisundaram, T.P., A History of Tamil Literature, Annamalai University. 1965.
88. Mutharasu, P., Life and works of Saint Kumara Gurupara Swamigal, Kumaraguruparan Sangam, Srivaikuntam, 20.5.1973.
89. Paul Brunton, The Inner reality, London, Seventh Impression.
90. Pope/ G.U., Tiruvacagam, English Translation, Madras University 2nd Edition, 1970.
91. Radhakrishnan, S., An Idealist View of Life, London, 1951
92. Radhakrishnan, S., Religion and Society, George Allen & Unwin Ltd., London, Second Edition, 1948.
93. Selbie, W.B., The Paychology of Religion, clarendon press, Oxford, corrected impression, 1926.
94. Shankar Raju Naidu, S., Kambar and Tulsi or Pre-Matrimonial Love of Rama and Sita in Ramayana (Hindi), Madras University, 1956.
95. Srinivasachari, P.N., The Wisdom of Upanisads, Sri Krishna Library, Madras, 20.10.47.
96. The Cultural Heritage of India volume III The Philosophies- 'The Philosophy of Saivism' by S.S. Suryanarayana Sastri.
97. The Indian Law Report, Madras Series, vol. X, 1887 January-December, Madras.
98. The Principal Upanisads, Bdited by S. Radhakrishnan, London 1953
99. William Henry Hudson, An Introduction to the Study of Literature, 1965.
100. William James, The Varieties of Religious Experiences, The Modern Library, New York, copy right to the authour 1902.

திமிரம தகற்றும் தெய்வக் கவிஞன்
குமரகுருபரன் குரைகழல் வெல்க!

- தனிப் பாடல்

குமர குருபரக் கோவே! பெரும!
எமக்கருள் ஈக இனிது.


உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
அருட்திரு. குமரகுருபர அடிகள்
(கி.பி. 1625 - கி.பி. 1688)

குமர குருபர அடிகள் பாடல்கள் – ஓர் ஆய்வு

முன்னுரை :

"அறங்கிளர் கல்வியானும் அணிகிளர் ஒழுக்கினானும்
நிறங்கிளர் உண்மையானும் நிகரிலாப் பெருமையாளர்"

என்றும்,[1]

"நடைகெழு கல்வியும் நயக்கும் ஞானமும்
தடையற எழுபிர சங்க வாய்மையும்
மடையுடைந் தெனக்கவி வடிக்கும் வாக்குமிக்கு
உடைமையின் நோக்கிஆங் குளர்வி யந்தனர்" என்றும்,[2]

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் மதிப்பிடப்பெறும் குமரகுருபர அடிகள் சைவமும்தமிழும் தழைக்கத் தோன்றிய தகையாளர் ஆவர். கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் தென்பாண்டி நன்னாட்டில் தண்பொருநைக் கரையில் தோன்றி, வட நாட்டில் கங்கைக் கரை வரையில் தம் தெய்வத் தமிழ் ஆற்றல் மேம்பட்டு விளங்கச் சைவப் பணியாற்றிய தவச் சான்றோராய்த் தனிச்சிறப்புடன் திகழ்கின்றார். அடிகள் அருளிய பாடல்களும், காசியில் நிறுவிய குமாரசாமி மடமும் இன்றும் நின்று நிலவித் தமிழின் பெருமையையும் சைவத்தின் மாண்மையும் உணர்த்தி வருகின்றன. அடிகளின் வழிவந்தோர்களால் கி.பி. 1720–ஆம் ஆண்டளவில் திருப்பனந்தாளில் தோற்றுவிக்கப்பட்ட திருப்பனந்தாள் காசிமடமும் அடிகளைப் பின்பற்றித் தொடர்ந்து நற்பணியாற்றி வருகின்றது.

தமிழிலக்கிய வரலாற்றிலும், சைவ சமய வரலாற்றிலும் குமரகுருபர அடிகள் குறிப்பிடத்தக்க இடம் பெற்று விளங்குகிறார் எனலாம். 'தமிழ் பயில்வாரிற் பெரும்பாலோர் தவறாமல் படித்துப் பயன்பெறும் பிரபந்தத் தொகுதிகளுள் முன்வரிசையிலே நிற்பது குமரகுருபர சுவாமிகளின் பிரபந்தத் தொகுதி'[3] என்று டாக்டர்.உ.வே. சாமிநாத அய்யர் அவர்கள் குறிப்பிடுதல் ஈண்டுக் கருதத்தகும். பிள்ளைத் தமிழ் என்ற அளவிலே, தமிழ் பயில்வார் யாவருக்கும் அடிகள் அருளிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழே முதலில் நினைவுக்கு

---

1. குமர குருபரஸ்வாமிகள் சரித்திரம். பா. 65
2. மேற்படி பா. 158
3. கு.பி.தி. (உ.வே.சா) முகவுரை. பக். 9

வருவதாக உள்ளது. அவ்வாறே அடிகளின் பிற பிரபந்தங்களும் மிக்க சிறப்புப் பெற்றுள்ளன. சமய அடிப்படையில், அடிகள் பாடல்கள் பாராயணம் செய்யப்படும் தகுதி பெற்றுள்ளன. கந்தர் கல்வெண்பா, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், சகலகலாவல்லிமாலை ஆகியவை அவ்வகையில் சிறப்பாகக் குறிக்கத்தக்க-வையாகும். 'அடிகளுடைய எந்த நூலிலும் கற்பனை வளம் காணலாம்;'[1] என்பது தக்க கூற்றாகும். 'பிற்காலத்தில் குமரகுருபரரைப் போன்று கொழிதமிழ்ப்பாடல் பாடினார் எவருமிலர் அவர் வாக்கே தெய்வவாக்கு'[2] என்று கூறும் நிலையில் பெரும்புகழ் வாய்ந்த வண்டதமிழ்க் கவிஞராய்த் திகழ்கின்றார். புலவர்களைப் போலவே கலைமகளைத் தன்பாற் பெற்ற பிரமனது படைப்பு, புகழைப் பெறாமலே அழிந்துவிடும்; ஆனால் புலவர் படைப்போ புகழைப் பெறுதலோடு அழியாமலும் நிற்கும்[3] என்று வண்டமிழோர் மலரவனைவிட மேம்பட்டு நிற்றலை அடிகள் உணர்த்தியுள்ளதற்கு ஏற்பத் தாமே இலக்கியமாக விளங்கியுள்ளார் என்பது சாலும். மூன்றாண்டில் திருவருள் பெற்ற ஞானசம்பந்தர் போல அடிகள் ஐந்தாண்டில் முருகன் திருவருள் பெற்றுத் துறவுபூண்டு சமயப்பணி மேற்கொண்டதாலும், சம்பந்தரைப் போலச் சிவிகை, சின்னம் முதலியவற்றோடு சென்றதாய் அறிதலாலும், அடிகள் 'குட்டித் திருஞானசம்பந்தர்' என்று கூறப்படுதல் உண்டு[4] அழியாத புகழ்மிக்க இலக்கியப்படைப்பால் இக்கூற்று மேலும் வலிவு பெறுகிறது எனலாம். 'ஞானத்துயர் சம்பந்தன நலங்கொள் தமிழ்' 'நற்றமிழ்க்கின்றுணை ஞானசம்பந்தன்'[5] என்றாற் போல் தமிழ்ச்சிறப்பால் சம்பந்தர் தன்னைக் குறிப்பிடுதல் போல், அடிகளும் , 'ஐந்திலக்கணமும் தோய்ந்து பழுத்த தமிழ்ப்புலமை'[6] பாலிக்கப் பெற்றுப் பாடல்களை அருளியுள்ளமை உணரத்தகும். இவ்வாறு சமயவழிப்பட்ட விழுமிய தமிழ்ப்பணியால், சைவ சமய குரவர் நால்வருள் ஒருவராகிய திருஞானசம்பந்தரை நினைவுறுத்தும் குமரகுருபர அடிகள், வடநாட்டுக்குச் சென்று சைவத்தமிழ்ப் பணி செய்து, அங்கு வழங்கிய மொழியைக் கற்று அம்மொழியில் சைவக் கருத்துக்களைப் பரப்பியதாகவும் கூறப்படும் நிலையில் தனிச்சிறப்புக்கு உரியவராக உயர்ந்து விளக்குகிறார்.

---

1. தமிழ் இலக்கிய வரலாறு, டாக்டர். மு.வ. பக். 199
2. செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு. 25. பக். 17 (ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை)
3. 212 4. குமர குருபர அடிகள் வரலாறு. கா. சு. பிள்ளை பக். 17
5. சம்பந்தர் தேவாரம். பதிகம் 14 : 11, 76 : 11
6. 1 : 119

அடிகளின் பாடல்கள் இலக்கியச் சுவைகள் பொதிந்து இனிப்பன; இறைமைப் பயனையும் உடன் பயந்து உவட்டாத இனிப்பாக இருப்பன; புதுமை உணர்வுடையோரையும் கவர்ந்திழுக்கும் ஆற்றலுடையன.[1] பாமாலை புனைந்ததைச் சரியையாகக் குறித்தலும்,[2] இறைவன் கவிதை கொண்டு ஆட்கொண்ட திறத்தைப் புலப்படுத்துதலும்,[3] பண்டார மும்மணிக்கோவை நித்தம் துதிக்க வல்லார் எடுத்த பிறப்பிலேயே எய்தாத பேரின்பம் எய்துவர்[4] என்பதும் அடிகளின் பாடல் தகுதியையும், பயனையும் ஒருங்கு உணர்த்தும். அடிகள் அருளிய நீதிநெறிவிளக்கம், 'திருக்குறள் பருவத்திலே பெற்ற பிள்ளை' என்று திரிசிபுரம் வித்துவான் சி. தியாகராசச் செட்டியாரால் பாராட்டப் படுதற்கேற்ப,[5] முப்பாலில் நாற்பால் மொழியும் பயனுடையதென்பதை உணரலாம். அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள் நான்கும் பொலியும் தகுதி இவ்வகையில் நீதிநெறி விளக்கமாகிய நூலுக்கு அமைதல் இயற்கை. இத்தகுதி அடிகளின் அனைத்து நூல்களிலும் விரவி நிலைபெற்றிருத்தல் உறுதி எனலாம். சிறப்பாக, அன்பு நெறியாலும் அறிவு நெறியாலும் இறைவனை அடைதற்குரிய வழிகளைப் பிரபந்தம் முழுவதும் காட்டியிருப்பதால், வீடு பேற்றுக்குப் பெரிதும் வழிகாட்டுதல் தெளிவாகிறது. எனவே 'அறம்பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே'[6] என்ற முழுமைப்பயன் அடிகள் பாடல்களால் கிடைத்தல் அறியலாகும். இவ்வாறு பல்வகைத் தகுதியும், சிறப்பும், பெருமையும் வாய்ந்த குமரகுருபர அடிகளின் பாடல்கள் அனைத்தையும் ஒருங்குவைத்து ஆயும் நோக்கில், 'குமரகுருபர அடிகள் பாடல்கள் - ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

---

1. பாரதிதாசன், 'எதிர்பாராத முத்தம்' என்னும் நூலில் அடிகளின் சிறப்பை வியந்து உரைத்திருத்தல் நோக்கத்தகும். 'கந்தரின் கலிவெண்பாவாம் கனிச்சாறு' (பக். 65) என்றும், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் கேட்கத்தேவர்கள் வந்திருந்ததைத், 'தேவர், துய்யநற்றமிழ்ச்சாராயம், துய்த்திடக் காத்திருந்தார்' (பக். 67) என்றும் கூறுதல் காண்கிறோம். இந்நூலின் இரண்டாம் பகுதி அடிகளின் சிறப்பையே முற்றிலும் உணர்த்திநிற்கிறது. (பக். 62-77)
2. 598
3. 634
4. 596
5. கு.பி.தி. (உ.வே.சா) முகவுரை பக். 10
6. நன்னூல். 10

குமரகுருபர அடிகள் பாடிய பிரபந்தப் பாடல்களாக 813 பாடல்கள் இந்த ஆய்வுக்குக் கொள்ளப்படுகின்றன.

இவ்வரையறை வருமாறு :–

		பாடல் எண்ணிக்கை
1.	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா (122 கண்ணி கொண்டது)	1
2.	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் (கடவுள் வாழ்த்து 1ம், 10 பருவத்துக்கு 101ம் ஆக)	102
3.	மதுரைக் கலம்பகம் (கடவுள் வாழ்த்துடன்)	103
4.	நீதிநெறி விளக்கம் (காப்பு நீங்கலாக; சிதம்பரச் செய்யுட்கோவையில் இப்பாடல் சேர்த்து எண்ணப்படும்)	101
5.	மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை	20
6.	மதுரை மீனாட்சியம்மை குறம் (51 காப்பு 1)	52
7.	திருவாரூர் நான்மணிமாலை (காப்பு உட்பட)	41
8.	வைத்தீசுவரன் கோவில் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் (கடவுள் வாழ்த்து 1ம், 10 பருவத்துக்கு 100ம் ஆக)	101
9.	சிதம்பர மும்மணிக் கோவை (கடவுள் வாழ்த்துடன்)	31
10.	சிதம்பரச் செய்யுட் கோவை	84
11.	தில்லைச் சிவகாமி அம்மை இரட்டைமணிமாலை	20
12.	பண்டார மும்மணிக் கோவை (காப்பு உட்பட 34 சில பழைய பதிப்புக்களில் இறுதியில் காணப்படும் 2 தனிச் செய்யுளாக வழங்குவதில் 1 ஆக)	37
13.	காசிக் கலம்பகம் (காப்பு உட்பட)	101
14.	சகலகலாவல்லி மாலை	10
15.	கைலைக் கலம்பகம் (கிடைத்துள்ளவை)	8
16.	பூதங்கடந்த ' என்று தொடங்கும் தனிச்செய்யுள்	1
	ஆகப்பாடல்கள்	813

மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மதுரை மீனாட்சியம்மை குறம், தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ஆகிய மூன்றும் உ.வே. சாமிநாத அய்யர் அவர்களால், அடிகள் பாடியவையாகக் கொள்ளப்படவில்லை. சில ஏட்டுப்பிரதிகளில் இம்மூன்றும் காணப்படாமையாலும், அய்யர் அவர்களுடைய ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் பிறரும் இவற்றை அடிகள் வாக்காகக் கருதாமையாலும் இக்கருத்தினை உ.வே.சா அவர்கள் கொண்டுள்ளனர்.[1] மிகப் பலர் இவற்றை அடிகள் வாக்காகக் குறிப்பிட்டுள்ளதாலும், இம்மூன்றிலும் காணலாகும். அடிகளின் சொற்பொருளமைதிகளாலும் இவற்றையும் அடிகளே பாடியிருக்கலாம் என்று கருதுவதற்கு இடம் உண்டு. 'அடிகள் பாடிய நூல்கள்' என்ற இயலில் இக்கருத்து வலியுறுத்தப்பெறும். எனவே இவை மூன்றும் அடிகள் பாடியனவாகவே இக்கட்டுரையாளனால் கொள்ளப்பட்டுள்ளன.

கைலைக் கலம்பகத்தில் கிடைத்துள்ள 8 பாடல்கள் மட்டும் கொள்ளப்பட்டுள்ளன. பழைய பதிப்புக்களில் பண்டார மும்மணிக் கோவையின் இறுதியில் 2 பாடல்கள் காணப்படுகின்றன என்று குறிப்பிட்டு அவற்றை அந்நூலைச் சேர்ந்தவையாகவே உ.வே.சா கருதியுள்ளார்கள்;[2] ஆயின் அவற்றைச் சேர்த்துத் தொடர் எண் இடவில்லை. அப்பாடற் கருத்தும், பொருத்தமுடையதாக அந்நூலோடு தொடர்ந்து விளங்கும் தகுதியில் இருப்பதால், அடிகள் பாடியவையாகவே கொள்தல் ஏற்புடையதே எனலாம். திருமயிலைச் சுப்பராய ஞானியாரால் பதிப்பிக்கப்பெற்ற பண்டாரமும் மணிக்கோவைப் பிரதியில் மற்றொரு பாடல் காணப்படுவதை உ.வே.சா. தனிச் செய்யுட்களில் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.[3] இதனையும் அடிகள் பாடலாகவே கருதுதல் பொருந்தும். எனவே இப்பாடல் ஒன்றும், முற்குறித்த பாடல் இரண்டும் பண்டாரமும் மணிக்கோவையில் சேர்த்துக் கணக்கிடப்பட்டுள்ளன.

'பூதங்கடந்த' என்று தொடங்கும் தனிச்செய்யுள் அடிகள் பாடியதாக, உ.வே.சா அடிக்குறிப்புக் கேற்பக்[4] கொள்ளப்பட்டிருக்கிறது.

'காட்டிருந்தாலும்' என்று தொடங்கும் தனிச் செய்யுளையும் அடிகள் இயற்றியதாகக் கூறுவர் என்று உ.வே.சா குறித்துள்ளார்கள்.[5] ஆயின் சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள் பதிப்பில் இச்செய்யுள், மாசிலாமணி தேசிகரால் அடிகளை நோக்கி அருளியதாகக் கூறப்படுகிறது.[6] எனவே இப்பாடல் அடிகள் பாடலாகக் கொள்ளப்படவில்லை. ஏனைய தனிச் செய்யுட்கள் நாளடைவில் ஏடெழுதுவோரால் சேர்க்கப் பெற்றவையாகவே கருதத்தகும் ஆதலின் அவற்றையும் அடிகள் பாடியவையாகக் கொள்ளவில்லை.

---

1. கு.பி.தி. (உ.வே.சா) முகவுரை பக். 11
2. கு.பி.தி. (உ.வே.சா) பக். 458
3. மேற்படி தனிச் செய்யுட்கள். பக். 16
4. மேற்படி தனிச் செய்யுட்கள். பக். 16
5. கு.பி.தி. (உ.வே.சா) 6. கு.பி.தி. (இராம) பக். 17

அடிகள் வடமொழி, இந்துத்தானி முதலிய பிறமொழிப் புலமையும் கைவரப் பெற்றவராவர். ஆயின் அம்மொழிகளில் நூல் எழுதியதாக அறியப்படவில்லை. அவை பற்றிய ஆய்வு இக்கட்டுரையாளனால் மேற் கொள்ளப் பெறவில்லை.

III

இந்த ஆய்வில் பின்வரும் ஆய்வு நெறிகள் மேற் கொள்ளப் பெற்றுச் சிறப்புக் கருத்துக்கள் அம்முறையில் கூறப் பெற்றுள்ளன:

1. அடிகள் பாடிய நூல்களைத் தனித்தனியாக ஆராயும் முறையிலும்,பாடல்கள் அனைத்தையும் ஒருங்கு வைத்து ஆராயும் முறையிலும், இவ்வாய்வு மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

2. அடிகளில் வரலாறு, அவர்தம் பாடல்களில் காணவாகும் அகச்சான்றுகளையும், சென்னைச் சட்டத் தீர்ப்பறிக்கைப் புத்தகம் 10 ஆவதில் காணலாகும் குறிப்புக்களையும் உடன் வைத்து ஆராயப் பெற்றுள்ளது.

3. அடிகள் ஐந்துவயது வரை பேசாதிருந்தமை, சமயவாதம் புரிந்தமை, காசியில் பழுக்கக் காய்ச்சிய இரும்பை ஏந்தியமை, உயிருள்ள சிங்கத்தில்ஏறி வந்தமை, சித்துக்கள் நிகழ்த்தியமை ஆகியன தக்க ஏதுக்களால் வலியுறுத்தப் பெற்றுள்ளன.

4.அடிகள் காலத்தில் முகரங்கியில் கிளைமடம் ஏற்படுத்தப்பெற்ற உண்மை பிற்கவிாலக் குறிப்புக்களால் தெளிவாக்கப் பெற்றுள்ளது.

5.கந்தர் கலிவெண்பாவில் ஆறுமுகம், பன்னிருகை வருணனை திருமுருகாற்றுப்படையோடு ஒப்பிடப் பெற்றுப் பொருத்தமும் விளக்கமும் ஆய்ந்து காட்டப் பெற்றுள்ளன.

6.பிள்ளைத் தமிழில் செங்கீரைப் பருவம், குழந்தை செங்கீரைத் தண்டு போல் அசைந்தாடுதலைக் குறிப்பது என்பதும், தாலப்பருவம், குழந்தை நாவசைப்பதைக் குறிப்பதென்பதும் அடிகளின் பாடல்கள் வழி வலியுறுத்தப் பெற்றுள்ளன.

7. கலம்பகங்கள் யாப்பு, உறுப்பு அடிப்படையில் வகைப்படுத்தப் பெற்று ஆராயப் பெற்றுள்ளன. ஒப்பீட்டுமுறையிலும் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

8.நீதிநெறிவிளக்கம் மதுரையில் பாடப்பெற்றதே என்பது உணர்த்தப்பட்டுள்ளது. அதில் உள்ள வெண்பாக்கள் யாப்பிலக்கண மரபில் ஆராயப் பெற்றுச் சில பாடல்கள் இன்னிசை வெண்பாக்களாக இருத்தல் காட்டப் பெற்றுள்ளது.

9. மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மீனாட்சியம்மை குறம், சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ஆகியவையும் அடிகளால் இயற்றப் பெற்றனவே என்பது அவற்றின் சொற்பொருளமைதிகளால் நன்கு வலியுறுத்தப் பெற்றுள்ளது.

10. அடிகளின் பாடல்களில் காணப்படும் உவமைகளை வகைப்படுத்தி விளக்கி, உவமைகூறும் அரிய உத்திகள் விளக்கப் பெற்றுள்ளன.

11. அடிகள் பாடல்களில் உருவகம், சிலேடை, மடக்கு, தற்குறிப் பேற்றம் முதலான அணிகள் புலமை நலம், பொருள் நலம் தோன்ற வகைப்படுத்தப் பெற்று விளக்கப் பெற்றுள்ளன.

12. அடிகளின் தற்குறிப்புச் சான்ற கற்பனைகள் பிற அணிநலன்களைவிடச் செம்மாந்து தழைத்திருத்தலும், அவை அடிகளின் விரிந்து பரந்த அறிவாற்றலையும், உள்ளத்தையும், உயர்ந்த பரம் பொருள் வேட்கையையும் புலப்படுத்திப் பயில்வாரையும் அவ்வகையில் ஈர்த்துச் செல்வனவாக இருத்தலும் உணர்த்தப் பெற்றுள்ளன.

13. அடிகள் பாடியுள்ள 43 வகையான யாப்புக்களும் அவற்றில் அமைந்த பாடல்களும் வகைப்படுத்தப் பெற்று அடிகளின் யாப்புத் திறம் வலியுறுத்தப் பெற்றுள்ளது.

14. அடிகளின் சந்தப் பாடல்களில் அமைந்துள்ள சந்தக்குழிப்புக்கள் 39 என்று வகைப்படுத்தப் பெற்றுள்ளன.

15. ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நாற்கவிவன்மை அடிகளிடம் விளங்குதல் எடுத்துக் காட்டி விளக்கப் பெற்றுள்ளது.

16.சிதம்பரச் செய்யுட் கோவை யாப்பருங்கலக்காரிகைக்கேற்ப அமைந்திருத்தல் ஒப்பீட்டு முறையில் தெளிவாக்கப் பெற்றுள்ளது.

17. அடிகளின் கட்டளைக் கலித்துறைப் பாடல்களில் கடையொரு சீர் விளங்காய்ச் சீராக மட்டுமன்றி, நாலசைச்சீராகவும் கனிச்சீராகவும் இருத்தல் வரலாற்று முறையில் ஆராயப்பெற்றுள்ளது.

18. அகப்பொருள், புறப்பொருள் மரபு சமயத் தொடர்பான அடிகளின் பாடல்களில் அமைந்துள்ளமை விளக்கப்பெற்றுள்ளது.

19. அரிய பொருள் மரபுச் செய்திகள், உலகியல் வழக்கச் செய்திகள் புலனாக்கப் பெற்றுள்ளன.

20.அடிகளின் சொல்லாட்சிகள் பாகுபடுத்தப் பெற்று விளக்கப் பெற்றுள்ளன.தமிழ்ச் சிறப்புணர்த்தும் சொற்களையும் தொடர்களையும் அடிகள் மிகுதியும் ஆண்டிருந்தல் காட்டப் பெற்றுள்ளது; தமிழை இறைத் தொடர்புடையதாகக் கண்டதன் விளைவாக அடிகள் அவ்வாறு சிறப்பித்திருத்தல் தகும் என்று உணர்த்தப் பெற்றுள்ளது.

21. பிறமொழிச் சிறப்பொலிகளை அப்படியே ஆளாமையும், தமிழ் ஒலி மரபிற் பயிலாவிடினும் தமிழ் ஒலிகளாகவே இருத்தல் பற்றி அரிய மெய்க்கூட்டுக்கள் உடைய சொற்களை யாப்பு, சந்தம் முதலிய காரணங்களால் ஆண்டுள்ளமையும் எடுத்துக் காட்ட பெற்றுள்ளன.

22. அடிகளின் பாடல்களில் உணர்த்தப் பெறும் இறைவன், உயிர், உலகம் ஆகிய முப்பொருள் பற்றிய சித்தாந்தக் கருத்துக்கள், சாத்திர தோத்திர நூல்களின் விளக்கங்களாக இருத்தல் ஒப்பீட்டு முறையில் நன்கு புலனாக்கப்பட்டுள்ளது.

23. உயிரைப்பற்றும் 'மூன்று நற்குணங்கள்' என்று அடிகள் கூறும் அரிய வழக்கு எடுத்துக் காட்டப் பெற்று, ஏற்ற அமைதி கூறப் பெற்றுள்ளது.

24. இறையருள் முறை, அடியவர் பெருமை, சமய வழிபாட்டு முறைகள், சமய வாழ்வை மலர்விக்கும் ஒழுக்கங்கள் அடிகளால் உணர்த்தப்பட்டிருப்பவை தெளிவாகக் காட்டப்பெற்று விளக்கப் பெற்றுள்ளன.

25. அடிகளின் இறையுணர்வும், அருள் வேட்கையும், அடக்கமும், தகுதியும், இறை நெருக்கமும், அருள்பெற்ற இன்ப அனுபவங்களும் விளக்கியுரைக்கப் பெற்றுள்ளன. சமயச் சான்றோர்கள் கூறியுள்ள மொழிகளுக்கேற்ப அடிகளின் இறையனுபவம் மேலானதாக விளங்குதல் நன்கு புலப்படுத்தப் பெற்றுள்ளது.

26. சமய வாழ்வுக்கும் சமுதாய வாழ்வுக்கும் அடிகள் வழிகாட்டியுள்ளமை வலியுறுத்தப் பெற்றுள்ளது. அடிகள் பெற்ற இறையனுபவப் பயன்களைப் போல் யாவரும் பெற்றுய்ய வேண்டும் என்ற விரிந்த அருள் நோக்கால் அடிகளின் வழிகாட்டும் மொழிகள் பாடல்களாகக் கிடைத்திருத்தல் உணர்த்தப் பெற்றுள்ளது.

27. அடிகள் இறையடியடைந்த தவப்பெருந் தொண்டராகவும், பெரும் புலவராகவும் திகழும் சிறப்பு உணர்த்தப் பெற்று, அடிகளின் பாடல்கள் இறவாத நிலைத்த உண்மை இலக்கியத் தகுதி முழுமையாகப் பெற்றிருத்தல் வலியுறுத்தப் பெற்றுள்ளது.

28. மக்களினம் இறைவனை நினைந்தும், சொல்லியும், இறைஞ்சியும் உய்தி பெற வேண்டும் என்பதே அடிகளின் அறிவுரையாக அவர்தம் பாடல்கள் அனைத்திலும் ஊடுருவி நிற்றல் உணரப் பெற வேண்டும் இன்றியமையாமை உடையது என்பது புலனாக்கப் பெற்றுள்ளது.

IV

அடிகளின் பாடல்கள் பற்றிய இந்த ஆய்வில் அமைத்துக் கொண்டள்ள ஆறு இயல்களின் பொருட்பொதிவுச் சுருக்கம் ஈண்டுக் குறிக்கத்தகும்.

1. முதற்கண் உள்ள 'குமரகுருபர அடிகள் வரலாறு' என்னும் இயலில் அடிகளின் வரலாறு, பாடல்களில் காணலாகும் அகச் சான்றுகளையும் உடன் வைத்துக் குறிக்கப்பெறுகிறது. கயிலாசபுரம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய இரண்டு ஊரும் அடிகள் பிறந்த ஊராகக் கூறப்பெறுவதில் கைலாசபுரமே பிறந்த ஊராகக் கொள்ளத்தகும் என்பது தெளிவுறுத்தப்படுகிறது. அடிகள் ஐந்து வயதுவரை பேசாதிருந்தமை, அடிகளின் பாடற் பகுதிகளில் குறிப்பாக உணர்த்தப்பட்டிருப்பது எடுத்துக் காட்டப்படுகிறது. முருகனருளால் பேசும் திறம் பெற்றமையும், இளமையிலேயே கவிபாடும் வன்மை பெற்றமையும் தெளிவுறுத்தப்பெறும். மதுரையில் விளங்கிய திருமலை நாயக்க மன்னர் அடிகளைச் சிறப்பித்தமையும், அம்மன்னனைப் பற்றி அடிகள் குறித்துள்ள குறிப்பால் அடிகளின் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பதும் வேறுபிற தொடர்புகளையும் உடன்வைத்து வலியுறுத்தப் பெறும். அடிகள் தலப்பயணம் மேற் கொண்டமை, சமயவாதங்கள் புரிந்து வென்றமை, தருமபுரம் ஆதீனம் 4-ஆம் பட்டத்துத் தலைவராகிய மாசிலாமணிதேசிகரை ஞானாசிரியராக அடைந்தமை, சிதம்பர தரிசனம் செய்து வந்தமை, தேசிகர்மீது பண்டாரமும்மணிக்கோவை பாடியமை ஆகியன விளக்கப்படுகின்றன. காசியில் அடிகளின் சைவப்பணியும், நிகழ்த்திய அற்புதச் செயல்களும் ஆராயப் பெறுகின்றன; அற்புதச் செயல்கள் நிகழ்ந்திருக்கலாம் என்பது புலப்படுத்தப்படுகிறது. துளசிதாசர், அடிகள் காலத்துக்கு முற்பட்டவர் என்பது தக்க ஏதுக்களால் காட்டப்படுகிறது. முகரங்கியில் கிளைமடம் விளங்கியமை பிற்காலக் கடிதச் சான்றுகளால் உறுதிப்படுத்தப்படுகிறது. அடிகள் கி.பி. 1688-இல் சாரூபமுத்தி பெற்றமை விளக்கப்படுகிறது.

அடிகளின் காலத்துக்குப்பின் காசிமடத்துப் பரம்பரை வரலாறு, கி.பி. 1720-இல் திருப்பனந்தாளில் மடம் நிறுவப் பெற்றமை, பின்

வரலாறுகள் ஆகியவை சென்னைச் சட்டத்தீர்ப்பறிக்கைப் புத்தகம் 10-ஆவதில் காணப்படும் குறிப்புக்களையும் துணையாகக் கொண்டு தெளிவாக்கப்படுகின்றன. அடிகளின் வரலாற்றுப்படங்கள் பிற்சேர்க்கையில் தரப்பெற்றுள்ளன.

(2) 'குமரகுருபர அடிகள் வரலாறு' என்னும் 2-ஆம் இயலில் அடிகளின் நூல்கள் வரையறை செய்யப் பெற்று, அவற்றின் அமைப்பு முறை, பொருட்டன்மை, தனி இயல்புகள் ஆகியன இலக்கிய வரலாற்று நோக்கில் தெளிவாக்கப்படுகின்றன. அடிகளின் நூல்களைத் தனித்தனியாக ஆராயும் முறையில் இவ்வியல் முழுமை பெற்று இலங்குகிறது.

பதினாறு நூல்களும், தனிச் செய்யுளும் அடிகள் அருளியனவாக விளக்கப்பெறும். கந்தர்கலிவெண்பா சைவ சித்தாந்த சாரமாக விளங்குதலும், முருகன் திருவுருவ வருணனைகள், திருத்தசாங்கம், திருவிளையாடல்கள், அடிகளின் விண்ணப்பம் ஆகியன சிறக்கப் பெற்று விளங்குதலும் காட்டப்படுகின்றன. ஆறுமுகம், பன்னிருகை வருணனை திருமுருகாற்றுப்படையோடு ஒப்பிடப்பெற்றுப் பொருத்தமும் விளக்கமும் ஆராயப் பெறும். அடிகளின் பிள்ளைத் தமிழ் நூல்கள் பருவ விளக்கங்களுக்குப் பொருந்தியனவாக அமைந்திருத்தல் காட்டப்படுகிறது. செங்கீரை என்பது செங்கீரைத் தண்டுபோல் அசைந்தாடும் பருவத்தைக் குறிக்கும் என்பதும், தால் என்பது குழந்தை நாவசைத்தலைக் குறிக்கும் என்பதும் வலியுறுத்தப் பெறும். இருவகைப் பிள்ளைத் தமிழிலும் அடிகள் திறம் பெற்று விளங்குதல் புலனாகும் வகையில் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளமை எடுத்துக் காட்டப் பெறுகிறது. கலம்பக இலக்கண முறைகளுக்கேற்ப அடிகளின் கலம்பகங்கள் திகழ்தல் விளக்கப்படுகிறது. மதுரைக் கலம்பகத்தில் 27 வகை உறுப்புக்களிலும், பொதுவான அகப்பொருள் புறப்பொருள்

மரபிலும்; காசிக்கலம்பகத்தில் 20 உறுப்புக்களிலும், பொதுவான அகப்பொருள் புறப்பொருள் மரபிலும் இறைவனைப் பாடியிருத்தல் வகைப்படுத்தி விளக்கப்படுகிறது; அவ்வத்தலச் சிறப்புக் கருத்துக்கள் கூறப்பெற்றுள்ளமை எடுத்துக் காட்டப் பெறுகிறது. கலம்பக யாப்பு வகைகளும், உறுப்புக்களும் கணக்கிடப் பெற்றுப் பிற்சேர்க்கையாகத்தரப் பெற்றுள்ளன. கைலைக் கலம்பகத்தில் கிடைத்துள்ள எட்டுப் பாடல்கள் ஆராயப் பெற்றுள்ளன. பல்வேறு உத்திகளில் இறைவனைப் பாடிப் பரவுவனவாக அடிகளின் கலம்பகங்கள் திகழ்தல் புலனாகும் வகையில் விளக்கப் பெற்றுள்ளன.

நீதிநெறி விளக்கம் மதுரையில் பாடப்பெற்றதென்பது வலியுறுத்தப் பெறுகிறது. கல்வி பொருள், காமம், அரசியல், நிலையாமை, உலகியல் ஒழுக்கம், துறவறம் என்றவாறு பகுத்துக் கொண்டு இந்நூற் செய்திகள் தெளிவுறுத்தப் பெற்றுச் சிறந்த நீதி நூலாகத் திகழ்தல் புலப்படுத்தப் பெறும். இந்நூல் வெண்பாக்கள் அனைத்தும் நேரிசை வெண்பாக்கள் அல்ல என்பதும், சில, இன்னிசை வெண்பாக்களாகும் என்பதும் யாப்பிலக்கண முறையில் தெளிவாக்கப் பெறும். மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மீனாட்சியம்மை குறம், சிவகாமியம்மை இரட்டை மணிமாலை ஆகியவை அடிகள் பாடிய நூல்களே என்பது அவற்றில் அமைந்துள்ள சொற்பொருளமைதிகளால் தெளிவாக வலியுறுத்தப் பெறுகிறது; அவை அடிகளின் புலமை நலம் தோன்ற விளங்குதலும் உணர்த்தப்படுகிறது. திருவாரூர்ச் சிறப்பும், தியாகர் அருளும் பெருமையும், நயமுறத் திருவாரூர் நான்மணிமாலையில் கூறப்பெறுதல் விளக்கப் பெறுகிறது. சிதம்பர மும்மணிக் கோவையில் தில்லைத் தரிசனத்தால் முத்தி கிடைத்தலும், நடனமாடும் இறைவன் நிலைகளும், அருட்டிறமும், அடிகளின் வேண்டுதலும் பிறவும் விளக்கப் பெறுதல் எடுத்துக்காட்டப் பெறும், சிதம்பரச் செய்யுட் கோவை எமபயம் போக்கும் தில்லைக் கூத்தையும்,

வீடுபயக்கும் மேன்மையையும் வலியுறுத்திப் புராணச் செய்திகளைப் புலமை நலத்துடன் கூறும் திறம் பெற்று; அகமரபில் அமைந்த பாநலமும் அமைந்து விளங்குதல் உணர்த்தப் பெறும்.

பண்டாரமும்மணிக் கோவையில் 37 பாடல்கள் கொள்ளத்தகும் என்பதும், மாசிலாமணிதேசிகர் சிறப்பும், ஞானசம்பந்தர் என்னும் பெயர்ச்சிறப்பும், பிறமணிகளோடு ஒத்தும் வேறுபட்டும் சிறந்து விளங்கும் தன்மையும், சிவனே குருவாக வந்துள்ள சித்தாந்த உண்மையும், அடிகள் வேண்டுதலும் தெளிவாதல் காட்டப் பெறும்; அது சிறந்த குருவணக்கப் பாமாலையாக இலங்குதல் புலனாக்கப்படும்.

சகலகலாவல்லிமாலை இனிய எளிய தோத்திரமாகக் கலைமகளை வாழ்த்தி, அடிகளின் வேண்டுகோட் சிறப்புடையதாகவும் விளங்குதல் உணர்த்தப் பெறும். காசித்துண்டிவிநாயகர் பதிகம் கிடைக்கப் பெறவில்லை என்பதும், அதைப்பற்றி யறியப்பெறும் தொடர்புடைய செய்திகளும், அடிகள் பாடிய தனிப்பாடல் பற்றியும் குறிப்பிடப் பெறும். அடிகள் பெருங்காப்பியம் இயற்றவல்லவர் என்பதை உறுதிப்படுத்துவனவாய் அடிகளின் நூல்கள் சிறந்த விளங்கிச் சான்று பகர்தல் புலனாக்கப்படுகிறது.

(3) 'அடிகளின் பாடற் பண்புகள்' எனப் பெயரிய 3-ஆம் இயல் இலக்கியச் சுவை தேரும் முறையில் அமைந்துள்ளது. சமயக் கருத்துகளைக் கூறும் நிலையிலும் கவிதை நலங்கள் துணை நிற்பனவே, புறம்பானவையல்ல என்ற உண்மை புலனாகும் வகையில், அடிகளின் பாடல்கள் அனைத்தையும் ஒருங்கு நோக்கிப் பல்வகை இலக்கிய நலங்களும் மதிப்பிடப்பட்டுள்ளன. அணிகள், யாப்பு, பொருள் மரபுகள், சொல்லாட்சிகள், ஒலியியல் என்ற உட்டலைப்புக்களில் இலக்கிய நலம் கருதப் பெறும்.

கற்பனையாற்றல் புலப்படச் சமயத் தொடர்பான செய்திகள்; மக்கள், நாடு, ஊர், நீர், தீ, காற்று, ஞாயிறு, திங்கள், விண்மீன், மின்னல், வானவில், இடி, மேகம், மலை, அருவி, கடல், மரஞ்செடிகொடிகள், மலர், கனி, விலங்குகள், பறவைகள், கலைப்பொருள்கள், கலை நிகழ்ச்சிகள், அணிமணிகள், படைக்கருவிகள் முதலிய பல்வகை இயற்கைப் பொருள்கள் உவமைகளாகக் கையாளப் பெற்றிருத்தல் வகைப்படுத்தி விளக்கப் பெறும். நுண் பொருள் உவமைகளும், அடிகளின் சிறப்பு உவமைகளும், அடிகளின் உவமைகளில் அரிய உத்திகளும் தெளிவுறுத்தப் பெறும். உவம ஆகுபெயராக வழங்கும் வழக்கு அடிகளிடம் பயில விளங்குதலும், அடிகள் கையாளும் குறிக்கத்தக்க உவம உருபுகளும் உணர்த்தப்படுகின்றன. சமய, தத்துவ விளக்க உருவகங்கள், உறுப்பு நல உருவகங்கள், பண்பு விளக்க உருவகங்கள், தொடர் உருவகங்கள் என்ற முறைகளில் உருவக அணி நலம் வகைப்படுத்தி விளக்கப்படுகிறது. இருவகைச்சிலேடை நலம் பொலியப்பாடும் ஈடுபாடும், மடக்கு என்னும் சொல்லணி அமையப்பாடும் திறமும் அடிகளிடம் சிறந்திருத்தல் வலியுறுத்தப் பெறுகிறது. கற்பனைச் சிறப்பைத் தெளிவுறுத்தும் தற்குறிப்பேற்றம் அடிகள் பாடல்களில் கவினுறத் திகழ்தல் காட்டப் பெறுகிறது. தெய்வத் தொடர்பான கற்பனைகளைச் சித்திரிக்கும் திறம் தெளிவாக்கப் பெறுகிறது. கருத்தை வலியுறுத்தி, வியப்புணர்வைத் தூண்டும் முறையில் இனிய மிகைக் கற்பனைகள், நிலவளம், நீர்வளம், மிகுதித் தன்மை, மாடங்களின் உயர்ச்சி முதலிய கருத்துக்களை விளக்குவனவாய், விண்ணையும் மண்ணையும் அளப்பவையாய் அமைக்கப் பெற்றுள்ள இயல்பு விளக்கப்படுகிறது. பிற அணி நலங்களும் காட்டப்படுகின்றன. அடிகளின் விரிந்து பரந்த அறிவாற்றலையும், உள்ளத்தையும், இறை வேட்கையையும் உணர்த்துவனவாய் இவ்வணி நலங்கள் பயன் தருதல் புலனாக்கப்படுகிறது.

ஆசு, மதுரம் சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிச்சிறப்பும் பெற்று அடிகள் பாடல்கள் திகழ்தல் தெளிவுறுத்தப் பெறுகிறது. அனைத்துப் பாவகைகளிலும், இனங்களிலுமாக அடிகள் 43 வகையான யாப்பு நிலைகளில் பாடியுள்ள யாப்புத்திறம் வரையறை செய்து உணர்த்தப்படுகிறது. அடிகள் பாடிய யாப்புக்களும் அவற்றில் அமைந்த பாடல்களும் பிற்சேர்க்கையில் வகைப்படுத்திக்காட்டப் பெறுகின்றன. ஆசிரிய விருத்தம், நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகியவற்றைப் பாடுவதில் அடிகள் மிகுந்த விருப்பம் காட்டியுள்ளமை உணர்த்தப்படுகிறது. 39 வகையான சந்தக் குழிப்புக்களில் அடிகளின் 49 சந்தப் பாடல்கள் விளங்குதல் வகைப்படுத்தப்பட்டுப் பிற்சேர்க்கையில் தரப் பெற்றுள்ளது; சந்த நலம் எடுத்துக்காட்டி விளக்கப் பெறுகிறது. அடிகளின் சிதம்பரச் செய்யுட் கோவை, யாப்பருங்கலக்காரிகைக்கு இலக்கியமாய் யாப்பிலக்கண வரையறைகளைத் தெளிவாக்குதல் உணர்த்தப்படுகிறது. காரிகை உரை விளக்கங்களும், ஒழிபியல் விதிவிலக்குச் செய்திகளும் அவ்வாறே அடிகளால் நினைவுகூரப் பெற்றுள்ளமை ஒப்பீட்டு முறையில் எடுத்துக்காட்டப் பெறுகிறது. அடிகளின் கட்டளைக் கலித்துறைப் பாடல்களில் கடையொரு சீர் விளங்காய்ச்சீராக மட்டுமின்றி நாலசைச் சீராகவும் கனிச் சீராகவும் இருத்தல் ஆராயப் பெறுகிறது. நாவுக்கரசர் காலம் முதல் இவ்வாறு இவ்வரையறை நெகிழ்ந்துள்ளமை குறிக்கப் பெறுகிறது. பாக்களுக்குரிய தளையும் சந்தமும் பேணும் முறையில் பிற மொழிச் சொற்களை ஆள்தல் பற்றியும், பிள்ளைத்தமிழ்ப் பாடல்களில் முடிப்பு வரி பற்றியும் விளக்கப் பெறும்.

அகப்பொருள் புறப்பொருள் மரபில் அடிகள் பாடியுள்ள திறம் மதிப்பிடப் பெறுகிறது. தெய்வக் காட்சிகளில் அகப்பொருள் மரபு

அமைக்கப்பட்டிருத்தலும், தலைவன் தலைவி உறவு முறையில் இறைவனைப் பாடியிருத்தலும், இறைவனுடைய பெயரையும் ஊரையும் குறிக்கும் வகையில் சில அகப்பாடல்கள் பாடப் பெற்றிருத்தலும் தெளிவுறுத்தப் பெறும். புறப்பொருளில் போர்த்திணை மரபிலும், அரசியல் மரபிலும் சமயத் தொடர்போடு செய்திகள் இடம் பெற்றிருத்தல் காட்டப் பெறுகிறது. அரிய பொருள் மரபுச் செய்திகள், உலகியல் வழக்கச் செய்திகள், புலனாக்கப்படுகின்றன.

அடிகள் பயன்படுத்தியுள்ள பொருட்பொருத்தம் மிக்க சொல்லாட்சிகள், அரிய சொல்லாட்சிகள், பேச்சு வழக்குச் சொற்கள், பிற மொழிச் சொற்கள், இலக்கண மரபுச் சொற்கள், யாப்புக்காகத் திரியும் சொற்கள், இலக்கணப் பொருள் மாறும் சொற்கள், தமிழ்ப்படுத்தப் பெற்ற பிற மொழிச் சொற்கள், தமிழ் ஒலி மரபிற்கு மாறான வட சொற்கள், தமிழ் ஒலி மரபுக் கேற்ப அமைந்த வட சொற்கள் வகைப்படுத்தி விளக்கப் பெறுகின்றன. தமிழ்ச்சிறப்புணர்த்தும் சொல்லாட்சிகள் பயில்வாரை ஈர்ப்பனவாய் விளங்குதல் வலியுறுத்தப் பெறுகிறது. தமிழை இறைத் தொடர்புடையதாகக் கண்ட அடிகள், அதில் மிகுந்த வேட்கையுற்றுச் சிறப்பிப்பதைத் தம் கடமையாகக் கொண்டு பாடினர் என்பது விளக்கப்படுகிறது. பிற மொழிச் சொற்களை ஆளும் போதும் அடிகள் பிற மொழிச் சிறப்பொலிகளை அப்படியே ஆளவில்லை என்பதும், தமிழ் ஒலி மரபில் பயிலாவிடிலும் தமிழ் ஒலிகளாகவே இருத்தல் பற்றிச் சில அரிய மெய்க்கூட்டுக்கள் மயங்கிவரும் சொற்களை யாப்பு, சந்தம் கருதி ஆண்டுள்ளனர் என்பதும் சுட்டிக் காட்டப் பெறுகின்றன.

(4) அடிகள் சமயக் கொள்கை என்னும் 4–ஆம் இயலில், அடிகள் பாடல்களில் வலியுறுத்தப்பெறும் சைவசித்தாந்தக் கருத்துக்களும், அருள் வழங்கும் முறைகளும், அடியவர் பெருமையும், வழிபாட்டு

முறைகளும், சமயவாழ்வை மலர்விக்கும் பிற ஒழுக்கங்களும் சைவ சாத்திர, தோத்திர நூல்களின் விளக்கங்களாக உணர்த்தப்பட்டிருத்தல் தெளிவாக்கப்படுகிறது.

சைவ சித்தாந்தச் சிறப்பும், அடிகள் விழுமிய சித்தாந்த நெறியில் நின்றவர் என்பதும் முதற்கண் உணர்த்தப் பெறும். இறைவனுடைய தன்னியல்பு(சொரூப இலக்கணம்) சித்தாந்த மரபுக்கேற்ப அடிகளால் விளக்கப்பட்டிருப்பது உணர்த்தப்படும். இறைவனது பொதுவியல்பை (தடத்த இலக்கணம்) விளக்கும் முறையில் ஐந்தொழில் நிலை, நவந்தரு பேதம், பல்வேறு உரு, அட்ட மூர்த்தம், குருவாய் அருளும் நிலை ஆகியன தெளிவுறுத்தப் பெறுகின்றன. முருகன் சிவனைப்போல் கூறப்பெறும் நிலை உணர்த்தப்படுகிறது. அறுமுகச் சிவனாகக் கூறப்படுதல், இறைவனுடைய ஐந்தொழில் நடனம், சித்தாந்த தத்துவங்களை உறவு முறையில் கூறுதல், இறைவன் விளங்கும் நிலைகள், இறைவன் உயிர்களோடு கொண்டுள்ள தொடர்பு, சிவனே பிற சமயத்தவர் பொருளாகவும் விளங்குபவன் என்பது, இறைவன் மந்திர வடிவாகவும், அத்துவா வடிவாகவும், கற்பனை கடந்தும் விளங்குதல் அடிகளின் பாடல் வாயிலாக வலியுறுத்தப் பெறுகின்றன.

உயிர்களின் இயல்புகளும், மும்மலம் உடைமையும், உயிர்கள் மூவகைப்படுதலும், பலவகையாப் பிறந்துழல்தலும் தெளிவுறுத்தப் பெறும். உயிர்கள் தநு கரண புவன போகங்களோடு தொடர்பு கொள்தலாகிய தத்துவத் தொடர்பு விளக்கப் பெறுகிறது. புருடதத்துவம் நீக்கி அடிகள் 35 தத்துவங்களைக் கூறுதல் காட்டப்படுகிறது. உயிர்கள் மாயையோடு தொடர்புறுத்தப் பெறுதல் பயன் கொள்தற்கே என்பதும், அவை அத்துவா சுத்தி செய்து, இருவினை ஒத்து, மலபரி பாகமுற்றுச் சத்திநிபாதம் பெறுதற்குரியன என்பதும், மூன்று அவத்தைகளும், நால்வகை நெறிகளும் விளக்கப்பெறும். உயிரைப்பற்றும் மூன்று

நற்குணம் என்று அடிகள் கூறியிருத்தல் அரிய வழக்காக இருத்தல் குறிக்கப்படுகிறது; ஏற்ற அமைதி காட்டப்படுகிறது. உயிர் தலைவியாகக் கருதப் பெறுதலும், குருவருள் உதவியும், பிற சித்தாந்த மரபுகளும் தெளிவாக்கப்படுகின்றன.

இறைவன் மூவகை உயிர்கட்கு அருளும் முறைகளும், அருளும் நலங்களும், இறைவன் ஒறுப்பதும் அருளே என்பதும் இறையருட் பெருமையை உணர்த்தும் வகையில் அடிகளால் காட்டப்பட்டிருத்தல் எடுத்துரைக்கப்படுகிறது.

அடியவர் உள்ளமே கோயிலாக விளங்குகிறது என்பதும், அடியவர்கள் செல்வச் செருக்கர்களாக இருத்தலும், அவர்களுக்கு இறைவன் அருளும் பயன்களும், அடியவர்களைச் சார்ந்தவர்கள் பெறும் பேறும், அடியவர்களுக்கு இறைவன் எளியனாக இருத்தலும், அடியவர்கள் அவாவற்று இறை விருப்புடன் திகழ்தலும், பிற இயல்பு நலங்களும், சைவ நாயன்மார் சிறப்பும் அடிகளால் உணர்த்தப் பெற்றிருத்தல் காட்டப்படும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் வழிபாட்டு மரபில் மலர்களால் வழிபடலும், பாடல்கள் பாடி வழிபடலும், தலங்களுக்குச் சென்று தீர்த்தமாடி இறைவனை வழிபடும் மரபும், பூசனை மரபும், சிலம்போசை ஒலிவழியே சென்று கும்பிடுதலும் அடிகள் காட்டியுள்ளனவாக விளக்கப்பெறுகின்றன.

சமய வாழ்வை மலர்விக்கும் வகையில் பிற உயிர்களிடத்தில் இரக்கம் காட்டுதலும், பசி போக்க உணவு வழங்குதலும், கொல்லாமை போற்றுதலும், ஊனும்கள்ளும் உண்ணாமையும், அவாவறுத்தலும் அடிகளால் உணர்த்தப் பெறும் ஒழுக்கங்களாக வலியுறுத்தப் பெறுகின்றன. இறையனுபவத்துக்கு இவை அடிப்படையாக அமைதல் உணர்த்தப் பெறுகிறது.

(5) 'அடிகளின் இறையனுபவம்' என்னும் 5-ஆம் இயலில் அடிகளின் இறையுணர்வும், அருள் வேட்கையும், அடக்கமும், தகுதியும், இறைநெருக்கமும், அருள் பெற்ற இனிய அனுபவங்களும் விளக்கப் பெறுகின்றன. அடிகள் பிறவித்துயரத்தை விளக்குதலும், எப்பொழுதும் இறைவனை மறவாதிருத்தலும், அருள் வேண்டி இறைஞ்சுதலும், தலைவி நிலையில் பிரிவுத் துயரை எடுத்துரைத்தலும், துன்ப நாட்டமுற்று அவாவின்றி விளங்குதலும், இறைவனிடம் வேண்டும் சில நலங்களும் அவர்தம் இறையுணர்வையும் வேட்கையையும் விளக்கி நிற்றல் தெளிவாக்கப்பட்டுள்ளது.

தம்மைப் பணிவாகக் கூறிக் கொள்தலும், இழித்துரைத்துக் கொள்தலும், தமக்குத் தகுதி இல்லை என்று நோதலும், இறைவனை நெருக்கமான உறவு முறையில் காணுதலும் அடிகளின் இறையனுபவ நிலையை உணர்த்துதல் தெளிவாக்கப்படுகிறது.

இறையருள் பெற்ற அடிகள் தம் நெஞ்சக் கோவிலில் இறைக் காட்சி பெற்றமையும், இறை இருப்புக்குரிய முறையில் அடிகளின் நெஞ்சம் விளங்கிய தன்மையும், தம் அனுபவத்தைப் பிறர்க்கு ஏற்றி அடிகள் கூறியிருத்தலும், இறைவனைக் கண்ணால் கண்டுணர்ந்த முறையும், தலையில் திருவடி பதிக்கப் பெற்றமையும், இறையருள் பெற்றதால் எமனுக்கு அஞ்சாதிருத்தலும், பிறவா நெறியாகிய வீடு பெற்றமையும், அருளனுபவமாக உண்முக நுகர்ச்சி பெற்றமையும், அருள் அனுபவத்தால் அடிகளிடம் ஏற்பட்ட பிற மாறுதல் விளைவுகளும் விளக்கப்படுகின்றன. சமயச் சான்றோர்களின் மொழிகளையும் உடன் வைத்து அடிகளின் இறையனுபவங்கள் மதிப்பிடப் பெற்றுள்ளன.

(6) 'அடிகள் காட்டும் வழி' என்னும் 6-ஆம் இயலில் அடிகள் சமய வாழ்வுக்கும் சமுதாய வாழ்வுக்கும் வழிகாட்டியுள்ளமை வலியுறுத்தப் பெறுகிறது. இறைவனிடம் ஆற்றுப்படுத்தி, இறைஞ்சிப் புகழுமாறு அறிவுறுத்திப் பிறவி நீக்குதற்கு வழிகாட்டியும், எமனுக்கு

அஞ்சாதிருக்கும் நிலையில் நிலையாமையுணர்ந்து எளிதினில் அரியது பெறுதற்குரிய நெறியை உணர்த்தியும், தொண்டர்களைச் சார்ந்தொழுகுமாறு அறிவுறுத்தியும், இறைவன் யாரிடம் வருவான் என்றும், இறைவன் எளியனே என்றும் புலப்படுத்தியும், உறுதி மொழி கூறி உய்யும் வழி காட்டியும் உலகோரைச் சமயவாழ்வில் தலைப்பட வைத்துள்ளமை வலியுறுத்தப் பெறும்.

சமுதாய வாழ்வில் மேற் கொள்ள வேண்டிய நீதிகள் உணர்த்தப் பட்டிருத்தலும் சுட்டப் பெறும். நாடாளும் மன்னர்க்கு அறிவுரைத்து வழிகாட்டியிருத்தலும் காட்டப்படுகிறது. அடிகள் தாம் பெற்ற இறையனுபவ இன்பப் பயனைப் போல் பிறரும் பெற்று உய்தல் வேண்டும் என்ற கருணைத் திறத்தால் இவ்வகையில் வழிகாட்டியுள்ளமை உணர்த்தப்படுகிறது.

முடிவுரையில், அடிகளின் பாடல்கள் இறவாத்தன்மை பெற்று விளங்குவனவாய், உண்மை இலக்கியத் தகுதியுடையனவாய், இலக்கிய அழகுகள் யாவும் செழித்து விழுமிய இறைப் பொருண்மையை நிலைநிறுத்துவனவாய் விளங்குதல், நூலோர் கருத்துக்களுக் கேற்பவும் நினைவு கூர்ந்து வலியுறுத்தப் பெறுகிறது. மக்களினம் இறைவனை வழிபட்டு உய்தி பெற வேண்டும் என்னும் நிலையான செய்தியே அடிகளின் பாடல்களில் உயிரோட்டமாக ஊடுருவி நிற்றலும், அடிகள் இறையடியடைந்த தவப்பெருந் தொண்டராகவும் பெரும் புலவராகவும் திகழ்தலும் நினைவுறுத்தப் பெறுகின்றன.

குமரகுருபர அடிகள் பாடல்கள் பற்றிய இந்த ஆய்வில், பாகுபடுத்திக் கொண்டுள்ள முறை, காட்டியுள்ள சான்றுகள், செய்துள்ள விளக்கங்கள், மேற் கொண்ட முடிவுகள் யாவும் ஒன்றிய ஆர்வத்தோடு இறையருட்டிறத்தால் நேரியனவாய் அமைக்கப் பெற்றுள்ளன என்று பணிவோடு கூறிக்கொள்ள விழைகின்றேன்.

இயல் – I

குமர குருபர அடிகள் வரலாறு

குமர குருபர அடிகளின் வரலாற்றை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் 'குமர குருபர ஸ்வாமிகள் சரித்திரம்' என்று 345 பாடல்களில் பாடியுள்ளனர். பிள்ளையவர்களுடைய பிரபந்தத் திரட்டில் இஃது இடம் பெற்றுள்ளது; உ.வே. சாமிநாதையரவர்களால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.[1] 'குமர குருபர ஸ்வாமிகள் புராணம்' என்னும் நூல் ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்களால் எழுதப்பட்டுள்ளது; 1001 கவிகளில் அமைந்துள்ள இந்நூலில் அடிகளின் சரித்திரச் சுருக்கமும் இறுதியில் தரப்பட்டுள்ளது.[2] தண்டபாணி சுவாமிகளால் இயற்றப்பெற்ற 'புலவர் புராணம்' என்னும் நூலில் 'குமர குருபர சுவாமிகள் சருக்கம்' 38–ஆவதாக இடம் பெற்றுள்ளது.[3] சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் இயற்றிய 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' என்னும் நூலில் அடிகளின் வரலாறும் கூறப்பட்டுள்ளது.[4] திருப்பனந்தாள் காசிமடத்து வெளியீடாகிய குமர குருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டில் உ.வே.சா. அவர்கள் அடிகளின் சரித்திரச் சுருக்கத்தை எழுதியுள்ளனர்.[5] கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் 'குமர குருபர அடிகள் வரலாறு' என்னும் நூலில் அடிகளின் வரலாற்றையும், வரலாற்று ஆராய்ச்சியையும் முதற்கண் எழுதியுள்ளனர்.[6] திருப்பனந்தான் காசிமடத்தின் மூலம் பதிப்பிக்கப் பெற்றுள்ள அடிகளின் நூல்களிலும், பிறபதிப்புக்களிலும் அடிகளின் வரலாற்றுக் குறிப்புக்கள் தரப்பெற்றுள்ளன. சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளால் பதிப்பிக்கப்பெற்ற 'குமர குருபரர் பிரபந்தத் திரட்டில்' அடிகளின் சரித்திர சார பஞ்சகமும், வரலாற்றுச்சுருக்கமும் இடம் பெற்றுள்ளன.[7] இ. கோவிந்தசாமிப்பிள்ளை அவர்கள் 'தமிழ்ப் பொழிலில்' எழுதியுள்ள 'குமர குருபரவடிகளும் அவர் நூல்களும்' என்னும் தொடர்கட்டுரையில் அடிகளின் வரலாற்றுச் செய்திகளை ஆராய்ந்துள்ளனர்.[8] அடிகள் வரலாற்றில் நிகழ்ந்தனவாகப்பல அற்புத நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. அடிகளின் பாடல்களில் காணலாகும் அகச்சான்றுகளையும் உடன் வைத்து அடிகளின் வரலாறு குறிக்கத்தகும்.

---

1. 1910 – இல் பதிப்பிக்கப் பெற்றது.
2. 1918 – இல் பதிப்பிக்கப் பெற்றது.
3. 3– ஆம்பதிப்பு, 1931
4. பக் 68–70 நள. (கார்த்திகையில்) பதிப்பிக்கப் பெற்றது.
5. கு.பி.தி. (உ.வே.சா.) பக் 19–23
6. குமர குருபர அடிகள் வரலாறு, 1932, பக். 1-26
7. இரண்டாம் பதிப்பு சுபகிருது தை.
8. தமிழ்ப்பொழில், துணர் 3,4,5,6.

பிறப்பும், ஊரும்

முன்பு பாண்டிய நாட்டைச் சேர்ந்ததும், தற்பொழுது திருநெல்வேலி மாவட்டத்தில் விளங்குவதுமாகிய, தண்பொருநை ஆற்றின் வடகரையில் உள்ள கைலாசபுரம் என்னும் ஊரில் பாண்டிவேளாளர் மரபில் வந்த சண்முகசிகாமணிக் கவிராயருக்கும், சிவகாமசுந்தரியம்மையாருக்கும் மகனாராக அடிகள் தோன்றினர். ஸ்ரீ வைகுண்டம் என்று வழங்கும் ஊரின் வடபகுதி கயிலாசபுரமாகும். சைவர்கள் திருக்கயிலை என்றும், வைணவர்கள் திருவைகுண்டம் என்றும் வழங்கும் நகரம் இஃது என்று மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் விளக்குகிறார்கள்.[1] 'பரமவைகுந்த நன்னகர் உதித்த செந்நெறிக்குரிசில்'[2] என்று ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்ததாகச் சிறப்புப்பாயிரம் குறிப்பிடுகிறது. சிறீவைகுண்டம் அடிகள் பிறந்த ஊராகச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் குறிப்பிடுகின்றனர்.[3] ஸ்ரீவைகுண்டமென வழங்குகிற கைலாசபுரம் என்று அவர் குறிப்பிடுகின்றனர்.[4] ஆயின் சரித்திர சார பஞ்சகத்தில் கைலாசபுரமே குறிக்கப்பட்டுள்ளது.[5] இவ்வாறு கைலாசபுரம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய இரண்டு ஊர்களும் அடிகள் பிறந்த ஊர்களாகக் கூறப்படுதல் காண்கிறோம். ஒரே ஊர் இரண்டுபெயர்களால் வழங்கப்படுகிறது. என்பது ஒரு சாரார்கருத்து எனலாம். எனவே இவ்விரு ஊர்களையும் குறிப்பிட்டுள்ளனர் என்று கொள்ளலாம். எனினும் ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்ததாகக்கயிலாசபுரம் இருத்தலின் தொடர்பு பற்றியே ஸ்ரீவைகுண்டம் அடிகள் பிறந்த ஊராகக் கூறப்பட்டது என்றும் கயிலாசபுரமே அடிகளின் பிறந்த ஊர் என்றும் தெளியலாம்.

குமர குருபரர் வைகுண்ட நகரினர் என்று கூறுவதைப்பற்றி இ. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் பின்வருமாறு குறிக்கின்றனர்; 'யாது கருதியோ எனின் கைலை எனச்சாற்றுதல் சிறு வழக்கிற்றாயும் வைகுண்டமெனப் பகர்தல் பெருவழக்கிற்றாயுமிருத்தல் பற்றிப் போலும், வைணவர்கள் சீரியது எனப்புகறல் வைகுண்டத்தையும், சைவர்கள் நேரியதென அறைதல் கைலையையும் என்பது புராண வாயிலாக இஃதுணரக் கிடக்கும். திருநெய்த்தானம் என்னும் பெயர் புலப்படாதபடி

1. குமர குருபரஸ்வாமிகள் சரித்திரம், பா. 12.
2. கு.பி.தி. (உ.வே.சா.) பக் 18.
3. தமிழ்ப்புலவர் சரித்திரம் பக் 68.
4. திருச்செந்தூர்ப் பிரபந்தத்திரட்டு, முரா. அருணாசலக்கவிராயர் பக் 281; மதுரைக்கலம்பகம், வை. மு. சடகோபராமானுசாச்சாரியார் உரை, பக் 1. கு.பிதி (இராம) சரித்திரச்சுருக்கம் பக் 1.
5. கு.பி.தி. (இராம) சரித்திர சார பஞ்சகம் பக் 1. பா.1.

விண்டு சமயத்தவர் தில்லைத்தானம் என வழங்கி வருவதும் காணத்தக்கதேயாம்'[1]

அடிகள் மதுரைக்கலம்பகம், காசிக்கலம்பகம் என்று பாடியிருத்தல் போல் 'கைலைக்கலம்பகம்' என்று பாடியிருப்பதில் கைலை என்பது கயிலாசபுரம் என்றும் ஊர்ப்பெயராக நின்று, ஆகுபெயராக அவ்வூர் இறைவனாகிய கைலாசநாதரைக் குறித்தல் உணரத்தகும். அந்நூலில் 'கயிலையிடத்தாரே'[2] என்றும் 'பொழிற்கயிலை'[3] என்றும், 'தென்கயிலை'[4] என்றும் 'கயிலைப்பிரான்'[5] என்றும் கயிலாசபுரம் குறிக்கப்படுகிறது. 'வைகுந்தைக்கயிலை'[6] 'வைகுந்தைக்கயிலேசர்'[7] 'கயிலைநாதர் வைகுந்தவாணர்'[8] 'கயிலேசர் ...... மாலானார் வைகுந்தத்தம்மானை'[9] என்று கயிலை வைகுண்டத்தோடு இணைத்தும் கூறப்படுகிறது. தொடர்பு பற்றியே வைகுண்டம் இணைத்துக் கூறப்படுகிறது என்றும் கைலைக்கலம்பகம் என்றே நூற்பெயர் இருத்தலின் கயிலாசபுரமே அடிகள் கருதும் ஊர்ப் பெயர் என்றும் உணரலாம். அடிகளின் பிறந்த ஊருக்குரியது கைலைக்கலம்பகம் என்பதால்[10] கயிலாசபுரம் என்பதே அடிகளில் ஊர் என்று தெளியலாம். கைலை நகருக்குச்சிவகாமிபுரம் என்னும் பெயரும் உண்டு என்று கூறப்படுகிறது.[11]

அடிகளின் பெற்றோர் பெயர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் குறிக்கப்படவில்லை; சிறப்புப்பாயிரத்திலும் காணப்படவில்லை. பிற குறிப்புக்களில் கூறப்பட்டுள்ளது; செவிவழிச் செய்தியாக வழங்கிவருகிறது. சைவ ஒழுக்கமும், தமிழ் நலமும் சிறந்த வழிமரபில் அடிகள் தோன்றியமை சைவவேளாளர் மரபு எனப்படுதலாலும், கவிராயர் என்று தந்தையார் அழைக்கப்படுதலாலும் உணரத்தகும். குமர குருபரன் என்னும் பெயர் அடிகளுக்குப் பெற்றோரால் இடப்பட்டது என்பர் சிலர்' [12] ஆயின் திருச்செந்தூர் முருகனால் 'குமர குருபரன்' என்னும் பெயர் [13] அடிகட்கு உரியதாய் இடப்பெற்றது என்பதே பெருவழக்காக உள்ளது.

---

1. தமிழ்ப்பொழில், துணர் 6. பக் 322
2. கைலைக்கலம்பகம் 3
3. கைலைக்கலம்பகம் 4
4. கைலைக்கலம்பகம் 8
5. கைலைக்கலம்பகம் 1
6. கைலைக்கலம்பகம் 2
7. கைலைக்கலம்பகம் 5
8. கைலைக்கலம்பகம் 6
9. கைலைக்கலம்பகம் 7
10. குமர குருபர அடிகள் வரலாறு, பக் 4.
11. குமர குருபர சுவாமிகள் புராணம், ரா.சுப்பிரமணியக்கவிராயர், பக் 169.
12. கு.பி.தி. (உ.வே.சா.) பக் 19; பாலூர்க் கண்ணப்ப முதலியார்; ஸ்ரீ ஆதி. குமர குருபரசுவாமிகள் வரலாறும் அற்புதத் தேவாரத்திரட்டும் பக் 1.
13. குமர குருபர சுவாமிகள் சரித்திரம், பா 50, 52; குமர குருபர அடிகள் வரலாறு பக் 3; சரித்திர சாரபஞ்சகம், 1.

முருகன் அருளால் ஊமைத்தன்மை நீங்கிப்பாடியமை

அடிகட்கு ஓராண்டு முடிவுற்றது; இரண்டாம் ஆண்டு முதல் பேசத் தொடங்குவார் என்று எதிர்பார்த்தனர்; அடிகள் பேசாத பண்புணர்ந்து பெரிதும் வருந்தினர்.[1] எத்தனை ஆண்டுகள் வரை அடிகள் பேசாது இருந்தனர் என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சுட்டவில்லை. "ஈராண்டு முதலாகப் பேசுவர் என்று எதிர்பார்த்தும்' எனப் - புலப்படுத்தாது விடுத்தனர். ஈராண்டு முதலாக எனக் கூறியவதனால் வயதெல்லை 3, 4, 5, 6, 7, 8,9, 10 வரையும் கொள்ளலாம் போலும், பேசற்குரியபருவம் ஐந்தற்கு மேலில்லை என்பதறிஞர் துணிவு. ஈராண்டு முதலாக என்பதையே ஓராதரவாகக் கொண்டு, கொழும்பு பொன் இராமநாதன்துரை அவர்கள், குமர குருபரர் பத்து வயதளவும் பேசாதிருந்தனர் என்று தம்மகராதியின்கண் வாளா உரைத்தனர். மழலைப் பருவமுடிந்து ஐந்தாம் வயதில் கலைப்பயிற்சி செய்விக்கப் பெறுங்காலம் வரவும், அடிகள் பேசாதிருந்தனர். அது குறித்துத் தாய் தந்தையர் வருந்தின ரென்றலே சாலச்சிறப்புடைத்தாம் என்று தோன்றுகிறது"[2] என்று இ. கோவிந்தசாமிப்பிள்ளை கருதுகின்றனர். ஐந்தாண்டு வரை அடிகள் பேசாதிருந்ததாகவே பெரும்பாலும் கொள்ளப்படுகிறது.[3] குழந்தை பேசாமை கண்டு பெற்றோர் ஊமைப்பிள்ளையென எண்ணிநொத்து, திருச்செந்தூருக்கு அழைத்துச் சென்று முருகப் பெருமானிடம் அடைக்கலம் புகுவித்தனர்; முருகவேள் திருவருளால் அடிகள் பேசும் ஆற்றல் பெற்றுக் கல்வியிலும் சிறப்புற்றனர்; சைவசித்தாந்த உணர்ச்சி நல்கப் பெற்றுக் குருபரன் என்ற பெயரும் இடப்பெற்றனர்; அந்நிலையில் திருச்செந்தூர் முருகன் மீது கந்தர் கலிவெண்பாப் பாடினர் எனப்படுகிறது.

அடிகள் ஐந்து வயது வரை பேசாதிருந்த நிலையில் மூங்கைப்பிள்ளை என்று கருதியிருப்ப முருகனருளால் பேசும் திறம் பெற்றுப்பெரும் புலவராகத் திகழ்ந்தமை அறியத்தகும். அடிகள் பாடிய கந்தர்கலிவெண்பாவின் இறுதியில் முருகனிடம் வேண்டும் போது, பலகோடி விக்கினமும் பல் பிணியும் வந்தாலும் அவற்றைப் பொடி படுத்தி வரம் தந்து அருள வேண்டுகிறார்.[4] பல் கோடி விக்கினம், பிணி என்று குறிப்பதில், அடிகளின் ஊமைத்தன்மையாகிய விக்கினம் நீக்கிய அருட்செயலை நினைத்து, நம்பிக்கையோடு அத்தகைய விக்கினம் பிணி எவ்வளவு வந்தாலும் நீக்க வேண்டும் என்று வேண்டுவதாகக் கருத இடமுண்டு. அடிகள் தம் ஞனாசிரியரிடம் வேண்டும் போது, "சத்திநிபாதத் தன்மை வந்தெய்தியவர்கட்கு மெய்ப் பொருள்

---

1. குமர குருபர சுவாமிகள் சரித்திரம் பா. 29.
2. தமிழ்ப் பொழில், துணர் 6, பக் 323
3. கு.பி.தி. (உ. வே.சா.) பக் 19 ; குமர குருபர அடிகள் வரலாறு பக் 3; Life and works of Saint Kumara Gurupara Swamigal, P.5.
4. 1 : 111-117

உணர்த்துதல் வியப்பில்லை; சொற்றமிழ் விரகனாகிய மாணிக்கவாசகர், கைசொலக் கேட்கும் கட்செவிமூங்கைக்கும் (ஈழத்தரசனுடைய ஊமைப்பெண்ணுக்கு) பேசுமாறு அருளியது வியப்பாகும்; அதுபோல் நின்கண் வந்து இன்னருள் பெறாதோர் ஒருவருமிலர் என்னும் வியப்பு உளதாமாறு பருவமில்லாத எனக்கும் அருள்க" என்கிறார்.[1] இங்கு மாணிக்கவாசகர் ஊமைப்பெண்ணைப் பேச வைத்த செயலைத் தனக்கருளும் நிலைக்கு உவமையாக எடுத்துக் காட்டுவது கருதத்தகும். அடிகள் இளமையில் ஊமையாக இருந்த குறிப்பு இங்குக் குறிப்பாக அமைந்து விளங்குகிறது எனலாம்.

அடிகள் முருகன் திருவருளால் பேசும் திறம்பெற்றனர் என்பதற்கேற்ப, முருகனைக் குறித்து முதற்கண் கலிவெண்பாப்பாடியுள்ளமை நோக்கத்தகும். முத்துக்குமார சுவாமிபிள்ளைத் தமிழும் அடிகள் முருகனை வழிபடுகடவுளாகக் கொண்டிருந்தமையைப்புலப்படுத்தும். "என்னுயிர்க் கொக்கும் இளஞ்சேய்"[2] என்று முருகனைத் தன் உயிராகக் கூறுவதும் ஈண்டுக் கருதத்தகும். "இவ்வாசிரியருக்கு வழிபடுகடவுள் முருகக் கடவுளாதலின் அவரை, என்னுயிர்க் கொக்கும் இளஞ்சேய்' என்றார்"[3] என்று உ.வே.சா. விளக்கியுள்ளனர். 'ஓதாதுணர்த்திடுபோதா'[4] என்று முருகனைக் குறிப்பதும் அவனருள் பெற்றமையை உள்ளடக்கி நிற்கிறது எனலாம். 'மெய் கண்ட தெய்வமித் தெய்வமல் லாற்புவியில், வேறில்லை'[5] என்று முருகனைக் கண்கண்ட தெய்வமாகக் குறிப்பிடுவது, அடிகள் கூறும் அனுபவ மொழியாகவே கருதத்தகும். இவற்றால் அடிகள் முருகனருள் பெற்றவர் என்று உறுதிப்படுகிறது. பின்னர் அடிகள் பிறந்த ஊரில் எழுந்தருளியுள்ள கைலாசநாதர் மீது கைலைக் கலம்பகம் இயற்றினர். இவ்வாறு ஐந்தாண்டுப் பருவத்தில் அருங்கவிதைகள் பாடினார் என்று சொல்லுதல் எங்ஙனம் பொருந்தும்? என்ற வினாவிற்கு ஒளவை சு.துரைச்சாமிப்பிள்ளையவர்கள் தரும் விளக்கம் ஈண்டுக்குறிக்கத்தகும்; 'சீர்காழியில் தோன்றிய ஞானசம்பந்தர் மூன்றாண்டுப் பருவத்தில் முத்தமிழ்ப்பாடல் இசைக்கவில்லையா?' இரண்டாண்டுப் பருவத்தில் மெய்கண்டார் திரண்ட சித்தாந்த உண்மைகள் பொதிந்த சிவஞான போதத்தைச் செப்பவில்லையா? அகத்தியர் அருள் வரத்தால் உதித்தருளிய சிவஞான முனிவர் ஐந்தாண்டில் செந்தமிழ்ப் பாடல் பாடவில்லையா? இன்றும் பர்மாவிலே நாலாண்டுக் குழந்தையொன்று

1. 581
2. 326
3. கு.பி.தி. (உ. வே.சா.) குறிப்பு பக் 235
4. 379
5. 415.

பெருங்கணக்குகளையெல்லாம் சொல்லியவுடனே விடைபகர்கின்றதே! இவையெல்லாம் அரிதில் வாய்க்கப்பெற்ற திறங்கள். முந்தை நல்வினைப் பயனால் முன்னவன் தந்தருளிய அருட்டிறமாகும்[1]

திருமலைநாயக்க மன்னர் தொடர்பு

துறவு மேற் கொண்ட அடிகள் இறைவன் எழுந்தருளியுள்ள தலங்கள் பலவற்றையும் கண்டு வணங்கி மதுரையை அடைந்தனர். மதுரையை ஆண்ட திருமலை நாயக்க மன்னனால் வரவேற்கப் பெற்று மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை அரங்கேற்றினார். வருகைப்பருவத்தில் 'தொடுக்கும் கடவுட் பழம் பாடல்' என்ற பாடலைப் பாடிய போது, மீனாட்சியம்மை, அருச்சகரின் குழந்தையாய் மன்னர் மடியில் இருந்தவள், அரசன் கழுத்திலணிந்திருந்த முத்து மாலையை அடிகள் கழுத்தில் அணிந்து மறைந்தனள் என்று கூறப்படுகிறது.[2] முத்தப்பருவத்தில் 'காலத்தொடு கற்பனை கடந்த' என்ற பாடலைப் பாடிய பொழுது இந்நிகழ்ச்சி நடந்ததாகவும் கூறப்படுகிறது'[3] பின்னர் மன்னரால் பல சிறப்புக்கள் செய்யப்பெற்ற அடிகள் மதுரை இறைவன் மீது மதுரைக்கலம்பகம் பாடினர்; மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மீனாட்சியம்மை குறம் ஆசியனவும் பாடினர்; மன்னர் வேண்டுகோட்கிணங்க நீதி நெறி விளக்கமும் பாடினர். 'அடிகள் பாடிய நூல்கள்' என்னும் இயலில் நூல்களின் வரலாறு விளக்கப் பெறும். நீதி நெறி விளக்கம் பாடியமைக்குப் பரிசிலாக 'அரிய நாயகிபுரம் மன்னனால் அளிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. நாயக்க மன்னனிடம் அடிகள் சமஸ்தான வித்துவானாக இருந்ததாக ஒருவர் குறிப்பிடுகிறார்.'[4]

அடிகள் தலப்பயணம் மேற்கொண்டு மதுரைக்கு வந்த போது அடிகளின் தம்பியாராகிய குமாரகவிகளும் உடன் வந்தனர் என்றும் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை அரங்கேற்றியபோது குமார கவிகள் அதனைப் படிக்கவும் அடிகள் அதற்குப்பொருள் விளக்கம் தந்து சொற்பொழிவு செய்யவுமாக அஃது அரங்கேற்றப்பட்டது. என்றும், அடிகள் மதுரையிலிருந்து பிறதலங்களுக்குப் புறப்பட்டபோது தமது தம்பியாரை இல்லறம் மேற்கொண்டு பிறந்த ஊரில் விளங்குமாறு[5] பணித்து அனுப்பினர் என்று கூறப்படுகிறது.

---

1. செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு 25 பக்கம் 20
2. குமர குருபர அடிகள் வரலாறு பக் 5.
3. கு.பி.தி. (இராம) பக் 5. 44
4. என்.ஆர். சுப்பிரமணியசர்மா, செந்தமிழ் 12-ஆம் தொகுதி பக் 389.
5. கு.பி.தி. (இராம) பக் 3-7

அடிகள் காலம்

அடிகள் தோன்றி விளங்கிய காலத்தை அறிவதற்குத் திருமலைநாயக்க மன்னர் தொடர்பு துணைபுரிகிறது. மீனாட்சியம்மை குறத்தின் இறுதியில் குறமகள் கூற்றாகக்கூறும் முறையில்,

'நீர்வாழி தென்மதுரை நின்மலனா ரருள்வாழி
கார்வாழி யங்கயற்கட் கன்னிதிரு வருள்வாழி
சீர்வாழி கச்சிநகர்த் திருமலைபூ பதிவாழி
பேர்வாழி யவன்செல்வம் பெரிதூழி வாழியவே'[1]

என்று வாழ்த்தப்படுகிறது. 'கச்சி நகர்த் திருமலை பூபதி' என்பது திருமலைநாயக்க மன்னனைக் குறிப்பதென்றும், அம்மன்னன் காலத்தவரே அடிகள் என்றும் அறிஞர்கள் கொள்கின்றனர்.[2] திருமலைமன்னன் ஆட்சிக்காலம் கிபி. 1623 முதல் 1659 வரை என்று குறிப்பிடுகின்றனர்.[3] கிபி. 1630-48இல் அடிகள் தென்னாட்டிலே சைவ சமயத்தை நிலைநாட்டினர் போலும் என்று காசு. பிள்ளை அவர்கள் கருதுகின்றனர். [4] கிபி. 1625 ஆனித்திங்கள் திருவாதிரை நன்னானில் அடிகள் தோன்றியதாகத் தி. பட்டுச்சாமி ஓதுவார் குறிப்பிட்டுள்ளனர்.[5] ஆனித் திங்கள் திருவாதிரை நன்னாளில் அடிகள் பிறந்ததாகப் பாலூர்க் கண்ணப்ப முதலியாரும் குறிப்பிட்டுள்ளனர். [6] இவ்வாறு உறுதியாகக் குறிப்பிடுவதற்குச் சான்று எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. 21-ஆம் பட்டத்தில் வீற்றிருக்கும் திருப்பனந்தான் காசிமடத்துத் தலைவர் அருள்தவத்திரு முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களிடம் திருப்பனந்தாளில் 8-8-75- ஆம் நாள் உரையாடிய போது, அடிகள் பிறந்த ஆண்டு, திங்கள், நாள் பற்றிய மேற்கண்ட குறிப்புப் பற்றி இக்கட்டுரையாசிரியனால் கேட்கப் பெற்றது. மடத்தில்

---

1. மீ.கு. 51.
2. கா.சு.பிளளை, குமர குருபர அடிகள் வரலாறு, பக் 15-16; ' இ. கோவிந்தசாமிப் பிள்ளை தமிழ்ப் பொழில் துணர் 6, பக் 329; அ.கி. பரந்தாமனார், செந்தமிழ் 57-ஆம் தொகுதி பக் 110; பு.ரா. புருடோத்தம நாயுடு, கலைக்களஞ்சியம் தொகுதி 6 பக் 12.
3. கலைக்களஞ்சியம் தொகுதி 6, பக் 25; மதுரைநாயக்கர் வரலாறு, அ.கி. பரந்தாமனார் பக் 150
4. குமர குருபர அடிகள் வரலாறு பக் 16. 5. திருவாரூர் நான்மணிமாலை உரை, காசி மட வெளியீடு பக் 5.
6. ஸ்ரீ ஆதி குமர சுவாமிகள் வரலாறும் அற்புதத் தேவாரத் திரட்டும், பக் 1.

அவ்வாறு எழுத்துச் சான்றுகள் எவையும் இல்லை என்றே அவர்கள் குறிப்பிட்டனர்.

கிபி. 1881-1887-இல் திருப்பனந்தாள் மடம் தொடர்பாகத் தருமபுர ஆதீனத் தலைவர் தொடுத்து நிகழ்ந்துள்ள வழக்கொன்றிலும் அடிகளுடைய காலம் ஏறத்தாழ 300 ஆண்டுகட்கு முற்பட்டது என்று பொதுப்படையாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.[1] என்.எம். வீரப்பன் என்பார், அடிகள் காலம் கிபி 1625-1688 என்று குறிப்பிட்டிருப்பதாக அறியப்படுகிறது.[2] எனினும் திருமலை நாயக்கர் பற்றிய அகச்சான்று மட்டுமே தெளிவாக இருத்தலின் அடிகள் தோன்றிய காலம் அதை ஒட்டியே கருதத்தக்கதாக உள்ளது. தோன்றி ஐந்து ஆண்டுகள் சென்ற பின்னரே மதுரைக்கு வந்துள்ளார் ஆதலின் அடிகள் பிறந்த ஆண்டு, திருமலை மன்னன் ஆட்சித் தொடக்க ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டுகள் முற்பட்டது. (1618) என்று மேல் எல்லையாகக் கருதலாம். அவ்வாறே கீழ் எல்லையாக அம்மன்னன் ஆட்சி இறுதி ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டுகள் முற்பட்டதாகிய 1654-ஆம் ஆண்டைக் கொள்ளலாம். எனவே திருமலை நாயக்கர் ஆட்சிக் காலத்தை முதன்மையாக வைத்து நோக்கும் போது அடிகள் பிறந்த காலம் கிபி. 1618க்கும் கிப். 1654க்கும் இடைப்பட்டதாகிய, 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பது தெளிவாகிறது. கிபி. 1625 அடிகள் பிறந்த ஆண்டென்பது இவ்வெல்லையுள் அமைந்துள்ள தெளிவான சான்றுடன் கூறப்படவில்லை என்பது நினைக்கத்தகும். வெள்ளியம்பலவாணத் தம்பிரான் அடிகளிடம் பயின்றவர் எனப்படுகிறார்[3] ஆதலின் அடிகள் அவர் காலத்தவர் என்று கொள்ளலாம். நான்மாடக் கூடலில் கல்வலிது என்று பாடிய அவ்வையார் பற்றி அடிகள் ஒரு பாடலிற் குறிப்பிடுவதால்[4]

---

1. (a) "About 300 years ago, a disciple of this Adhinam founded a Mutt at Benaras. - The Indian Law Report (Madras Series) Vol. X P. 378.
(b) It appears that about 300 years ago, when one Masilamani Desigar was the Pandara Sannadhi of Dharmapuram a Tambiran of his Adhinam called Gurupara Tambiran established the Mutt at Benaras." - Ibid. P.390
2. செந்தமிழ் 48-ஆம் தொகுதி, பக். 250-51
3. தருமபுரஆதீனம் பத்தாண்டு ஆட்சி மலர், பக். 83
4. மீ.கு. 33

அந்த அவ்வையார் காலத்துக்குப் பிற்பட்டவர் அடிகள் என்று கொள்ளலாம். ஆயின் இத்தொடர்புகளைக் கொண்டும் காலத்தைத் திட்பமாக அறிய முடியவில்லை. தருமையாதீன 4-ஆம்பட்டத்தில் வீற்றிருந்த மாசிலாமணி தேசிகரைக் குருவாக அடிகள் கொண்டதால் அவர் காலத்தவர் என்பது தெளிவு. அத்தொடர்பை நோக்கும் போது தருமையாதீனம் குருஞானசம்பந்தரால் 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோற்றுவிக்கப் பெற்றதாக அறியப்படுவதால்[1], 4-ஆம் பட்டத்தில் விளங்கிய மாசிலாமணி தேசிகர், தலைமுறைக்கு 25 ஆண்டு என்று கொண்டால், ஏறத்தாழக் கிபி. 1625 அளவில் தலைமைப்பொறுப்புக்கு வந்தனர் எனலாம். அடிகள் அவரைத் திருஞானசம்பந்தர் தள்ளரும் முதுமைப் பருவத்தில் விளங்குதல் போல் காணப்படுவதாகக் கூறுகிறார்[2]. எனவே இத்தொடர்பாலும் அடிகள் தோன்றிய காலம் முன்னர்க் கூறியபடி கிபி. 1618க்கும் கிபி. 1654க்கும் இடைப்பட்டது என்று கொள்வது பொருத்தமுடையதாகவே அமைந்துள்ளது. எனலாம்.

அடிகட்கு அரியநாயகிபுரம் பரிசாக அளிக்கப்பெற்றமை பற்றி வேறு சான்றுகள் காணப்படவில்லை. தில்லைநாயகத்தம்பிரான் 1725-இல் நாயக்க மன்னர்களிடமிருந்து மூன்று ஊர்களைக் கொடையாக அடைந்த செய்தி அறிப்படுகிறது.[3] நாயக்க மன்னர் தொடர்பு தொடர்ந்து இருந்து வந்தமையை இது காட்டுகிறது எனலாம். அரியநாயகிபுரத்தில் நூல்நிலையநிதி அறக்கட்டளையாக அருணந்தித்தம்பிரான் சுவாமிகளால் அளிக்கப்பட்டுள்ளமை[4] மேற்குறித்த தொடர்புநோக்கியதன்று என்று தெரிய வருகிறது. நாயக்க மன்னரிடம் அடிகள் சமஸ்தான வித்துவானாக இருந்தார் என்பது அடிகளின் சிறப்பும் உயர்வும் கருதிக்கூறும் கூற்றாகவே கொள்ளத்தகும். 'வேத்தவை காவார் மிகன் மக்கள்'[5] என்று அடிகள் கூறுதற்கேற்பத் தாமும் விளங்கியவர் என்றே கொள்ளலாம்.

அடிகளில் தம்பி குமாரகவிகள் இல்லறம் மேற்கொண்டு விளங்கினர் என்பது அறியப்படுகிறது. இவர்தம் மகள் வழி மரப்பில் ஏறத்தாழப் பத்தாவது தலைமுறையைச் சேர்ந்தவராகிய வழக்கறிஞர்

1. கலைக்களஞ்சியம், தொகுதி 5. பக் 529
2. 566
3. "He obtained.... three villages from the rulers of the Nayak Dynasty in 1725 (exhibit 782)" - I.L.R. Vol., X P. 394.
4. திருப்பனந்தாள் 20-ஆம் பட்டத்துத்தலைவர் அறக்கட்டளை எண் 46
5. 231.

டி.எம். குமர குருபரன் பிள்ளை அவர்களோடு ஸ்ரீவைகுண்டத்தில் 29-7-75-இல் இக்கட்டுரையாசிரியன் கலந்துரையாடிய போது அடிகளின் மரபினர் பற்றி அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. குமாரகவிகளின் மகன் வழி மரபில் சுப்பிரமணியபிள்ளை என்பவர் விளங்கி வருவதாகவும், அடிகள் மரபினர் வழிவழியாகக் கவிராயர்கள் என்று வழங்கப்படுவதாகவும், கயிலாசநாதர் கோயிலுக்குச் சென்று பாடுதலை இவர்கள் பணியாகக் கொண்டிருந்துள்ளனர் என்றும், அதற்கெனக் கோவில் மானியம் உண்டு என்றும் தெரிய வருகின்றன. கயிலாசபுரத்தில் அடிகள் பிறந்த வீட்டுப்பகுதியை அடிகளின் மடமாகப் புதுப்பித்து அமைத்துள்ளனர். 31-8-1952-இல் அருணந்தித் தம்பிரான் சுவாமிகளால் இந்த மடம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

தலப் பயணமும், சமயவாதமும்

கவிவன்மை, சொல்வன்மை, ஒழுக்கச்சிறப்பு ஆகியவற்றால் ஒப்பற்று விளங்கிய அடிகள் தம் தலப்பயணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு திருச்சிராப்பள்ளியை அடைந்தனர். ஆண்டு விளங்கிய மன்னனால் போற்றப்பெற்றனர். திருவரங்கத்தில் வதிந்த பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்ற வைணவர் சமய வாதம் புரியும் கருத்தை அறிவிக்கச் சமயவாதம் நிகழ்ந்ததென்றும், முடிவில் அடிகள் சைவத்தின் சிறப்பை நிலைநாட்டி வென்றனர் என்றும் கூறப்படுகிறது. இந்நிகழ்ச்சி பற்றிக் கா.சு. பிள்ளை கூறுவதாவது; "பிள்ளைப் பெருமாளய்யங்கார் இலக்கண இலக்கியம் வல்லராய்ப் பாவன்மையுடையராய்த்திகழ்ந்த அன்பர். அவர் சாத்திர நுட்ப முணர்ந்தவரல்வர்; தன் திருமால் பத்தி காரணமாகச் சைவத்தை மறுக்க முன்வந்தவர். அவர் எவ்வாறு சைவசித்தாந்தப் பேராசிரியராய குமர குருபரனாரை வெல்லுதல் கூடும்?"[1]

அடிகள், திருமாலைச் சிவபெருமானுக்கு மனைவி என்றும்,[2] பத்துப்பிறவியில் பிறந்துழன்றும் பிறப்பு வேட்கையுடையவனாகி, நடராசர் ஆடல் கண்டு பிறவி நீக்காமல் துயில்கின்றான் என்றும்[3], சிவன்தாள் காணாத திருமாலை மாதவன் என்பது அறனன்று என்றும்[4] சிவனுக்குத் திருமால் விடையாகிய வாகனம் என்றும்[5] கூறியிருத்தல் சிவனுடைய முழுமுதற்றன்மையையும், திருமால் நிலையையும் ஒருங்கு உணர்த்தி நிற்பன எனலாம். வியாசர் காசியில் திருமாலே முதல்வரென்று[6] கூறித் தம்கையிழந்தனர் என்ற செய்தியை அடிகள்

1. குமர குருபர அடிகள் வரலாறு பக். 24.
2. 695, 199, 491
3. 463
4. 482
5. 329, 545, 105, 108
6. 466: 21-23; 493; 547; தாழிசை 4

குறிப்பிட்டிருந்தலும் சிவனுடைய முதன்மையை உணர்த்தி நிற்பதாகும். திருவாரூர் இறைவனா முதல்வன்? என்று கல்லாதார் சொல்லும் கடாவிற்கு வெல்லும் விடையே விடையாக இருப்பவும் மெய்யுணராதவர்கள் ஐயுற்று இடையே மயங்குவது ஏன்? என்று அடிகள் கூறுகின்றனர்.[1] இவ்வகையில் சிவனுடைய முதன்மையை வற்புறுத்தியிருப்பதோடு, திருமாலே முதல்வன் என்பார் கருத்தையும் மறுத்துள்ளமை தெளிவாகக்குறிக்கப்பட்டிருக்கிறது. ஐயங்காருடன் சமயவாதம் புரிந்து வென்ற நிகழ்ச்சியை இவை உறுதிப்படுத்தி நிற்கின்றன என்றே கொள்ளவாம்.

மாசிலாமணி தேசிகரை ஞானாசிரியராக அடைதல்

பிறதலங்களையும் வழிபட்டுக் கொண்டு அடிகள் திருவாவடுதுறைக்கு வந்து ஆதீனத்தலைவராகிய நமசிவாய தேசிகரைக் கண்டு வணங்கிச் சித்தாந்த உண்மை தெளிந்து தம் குரவராகக் கொண்டு விடைபெற்றுச் சென்றதாக மீனாட்சிசுந்தரப்பிள்ளையவர்கள் குறிப்பிடுகின்றனர்[2] "நமசிவாய அடிகளைக் குரவராகக் கொண்டு சித்தாந்த உண்மை தெளிந்திருப்பராயின் அவ்வருட்குரவனார் மீது ஒரு செய்யுளாவது பாடா தொழிவரோ! அடிகள் திருமலை நாயக்கரையுமொரு பொருட்டாப் பாடினவருக்குப் பேரருட் குரவனைப் பாடுதல் ஒரு பொருட்டாகாதோ! என்னோ! இச்சரித்திரகாரர் வரலாறுரைப்பது விந்தையிலும் விந்தை!" என்று இந்நிகழ்ச்சியினை மறுத்துரைக்கக் கான்கிறோம்.[3] சரித்திரசார பஞ்சகத்திலும் திருவாவடுதுறை ஆதீனத் தொடர்பு கூறப்படவில்லை என்பது கருதத்தகும்.

அடிகள் தருமபுரம் மடத்திற்குச்சென்று அப்போது 4-ஆம் பட்டத்தில் ஆதீன முதல்வராய்த் திகழ்ந்த மாசிலாமணி தேசிகரை வணங்கி, இருக்கையில் அமர்ந்தனர்; தேசிகர் அடிகளை நோக்கி 'ஐந்து பேரறிவும்' என்று தொடங்கும் பெரியபுராணச் செய்யுளுக்கு அனுபவப்பொருளை வினவ அடிகட்கு வாக்குத் தடைப்பட்டது; திருச்செந்தூர் முருகன் பணித்ததுணர்ந்து தேசிகரையே குருவாகத் தெளிந்து இருக்கை விட்டெழுந்து பணிந்தனர்; பிழை பொறுத்து ஆட்கொண்டருள வேண்டினர்; தேசிகர் காசிக்குச் சென்று வருமாறு பணிக்க, அடிகள் காசி சென்று வருவதன் அருமையைக்கூறி வேண்டவும் சிதம்பரம் சென்று வருமாறு பணித்தனர் [4] என்று கூறப்படுகிறது. "அப்பாட்டின் சொற்பொருளை அடிகள்

---

1. 329
2. குமர குருபர ஸ்வாமிகள் சரித்திரம் பா. 144-152
3. இ. கோவிந்தசாமிப்பிள்ளை, தமிழ்ப்பொழில், துணர் 6, பக். 330 - 331
4. கு.பி.தி. (இராம) சரித்திரசார பஞ்சகம் 3,4; சரித்திரச் சுருக்கம் பக். 7-9

உணராதவரல்வர் அதன் அனுபவப்பயனையே தேசிகர்பாலுணந்தார்" என்று கா.சு. பிள்ளை விளக்குகின்றனர்.[1] இவ்வாறு சொல்லப் பெறும் பெரியபுராணப் பாடல் சுந்தரரைப் பற்றியதாக இருத்தற்கேற்ப அடிகள் சுந்தரர் பெருமையைப் பல இடங்களில் பாடியிருத்தல்[2] இந்நிகழ்ச்சியின் உண்மையை உணர்த்துகிறது எனலாம். மாசிலாமணி தேசிகர் மீது பண்டார மும்மணிக்கோவை பாடியிருத்தல் ஏற்ற சான்றாக நின்றும் உறுதிப்படுத்துகிறது. அதில் அடிகள் கதலித்தண்டில் தீமூட்டுதல் போல் தவமில் பேதையாகிய தமக்குப் பருவமின்றாயினும் அருள்க என்கிறார்[3]. இதனை வாக்குத் தடைப்பட்ட நிகழ்ச்சியின் விளைவாக அமைந்த கூற்று என்றே கருதலாம்.

சிதம்பர மும்மணிக் கோவை, 'முதற் செய்யுளில் காசிக்குச் செல்வதில் உளவாகும் துன்பங்களையும் சிதம்பரத்திற்குச் சென்று தரிசனம் செய்யும் எளிமையையும்,' 'காசியிலிறத்தனோக்கி' (451-இல் வரி 59) என்பது முதலிய அடிகளில் உணர்த்தியிருக்கின்றார். அவ்வடிகள் தம்மை ஆசிரியர் காசிக்குச் செல்லப் பணித்ததும் அதன் அருமையைத் தாம் விண்ணப்பித்துக் கொண்டபோது சிதம்பரவாசம் செய்யும்படி கட்டளையிட்டதுமாகிய நிகழ்ச்சிகளின் நினைவிலிருந்து எழுந்தனவென்றே தோன்றுகிறது.[4] என்று உ.வே.சா. அவர்கள் குறித்தல் ஏற்கத்தக்கதாகும். எனவே அடிகள் தருமை மாசிலமணி தேசிகரைத் தம் ஞானாசிரியராகத் தெளிந்து அவர் ஆணைப்படி சிதம்பரம் செல்லப் பயணம் மேற் கொண்டனர் என்று உணரலாம்.

சிதம்பரம் சென்று வந்தமை

சிதம்பரத்திற்குச் செல்லத் தலைப்பட்ட அடிகள் திருவாரூரில் இறைவனை வணங்கித் திருவாரூர் நான்மணிமாலை இயற்றி வழிபட்டனர்; அவ்வூரில் இருந்த சிவசமவாதியர் சிலரோடு சமயவாதம் புரிந்ததாகக் கூறப்படுகிறது. "சிவ சமவாதமென்பது சைவத்தின் உட்பகுதியாய அகச்சமயத்துள் ஒன்று; முத்தி நிலையடைந்த உயிரானது கடவுளைப் போல ஐந்தொழிலுமியற்றவல்லதாய்க் கடவுளைப் போன்ற பேரறிவுடையதாய் விளங்கும் என்ற கொள்கையுடையது" என்பர்.[5] அடிகள் பாடல்களில் காசியில் இறக்கும் உயிர்கட்குச்சாரூபம் கிடைக்கும் என்ற செய்தி வற்புறுத்தப் பட்டிருக்கக் காண்கிறோம்.[6] சிவனைப் போலவே உருவம் பெற்று விளங்குதல் சாரூபமுத்தியாகும்.

---

1. குமர குருபர அடிகள் வரலாறு பக் 21
2. 472; 11-14, 478; 18-21, 518, 538 தாழிசை 2
3. 581 : 39-44
4. கு.பி.தி. (உ.வே.சா.) பக். 21.
5. குமர குருபர அடிகள் வரலாறு பக். 25
6. 600, 621, 634, 650, 647.

இந்நிலையில் சிவனைப் போல விளங்கும் சாரூபர்கள் சிவனைப்போல ஐந்தொழிலும் இயற்றுவார்களா என்பதற்கு அடிகள் ஒரு பாடலில் குறிப்பாக விடை இறுக்கின்றார். 'சாரூபம் பெற்ற நிலையில் சிவனைப்போல் பெற்றம் ஊர்வதும் வெண்டலை ஓட்டில் பிச்சை ஏற்றுத்திரிவதும், பேய்கள் சுற்றமாகச் சுடலையில் வாழ்வதும், தோலுடுப்பதும் அரியன அல்ல; கற்பங்கள் தோறும் உலகை அழித்துப் படைத்தல் துன்பம் தரும் அரிய செயலாகும்; எனவே அப்பதவியைச் சிந்திப்பதில்லை' என்று அடிகள் கூறுகின்றனர்.[1] இதில் உலகை அழித்தலும் படைத்தலும் அரிய செயல்கள் எனப்படுதலின் அவை சாரூபர்க்குரியன அல்ல என்ற குறிப்பு உணர்த்தப்படல் அறியத்தகும். எனவே அடிகள் சிவசமவாதியரோடு வாதம் புரிந்து சைவக் கொள்கையை நிலைநாட்டினர் என்று கூறுவது ஏற்கத்தக்கதே. பிறசமயத்தவர் தத்தம் கொள்கைகளைச் சிறந்தனவென்று பிதற்றுவர் என்பதை,

"...... மற்றைச்
சமயத்து அமைவு பெறார்
தத்தமில் நின்று பிதற்றுவ பொருவ"[2]

என்கின்றனர் அடிகள். திருவாரூர் நான்மணிமாலையில்,

"இதுவே பொருளென்று எவரெவர் கூறினும் ஏற்பதெது
அதுவே பொருளென் றறிந்து கொண்டேன்"[3]

என்று குறிப்பது சிவபெருமானின் முழுமுதற்றன்மையை உணர்த்துவதோடு பிற சமயத்தவரோடு விவாதம் புரிந்த குறிப்பையும் உள்ளடக்கி நிற்கிறது எனலாம்.

அடுத்து, அடிகள் புள்ளிருக்குவேளூர் சென்று வழிபட்டு அவ்வூர் முருகன் மீது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் பாடினர். பின்னர்ச் சிதம்பரம் அடைந்தனர். தில்லை இறைவன் மீது சிதம்பர மும்மணிக்கோவை பாடினர். யாப்பருங்கலக்காரிகையில் எடுத்துக் காட்டுச் செய்யுட்கள் பெரும்பாலும் சமண சமயச் சார்புடையவையாக இருத்தலின் அந்நூலின் இலக்கணங்களுக்கு எடுத்துக்காட்டாகச் சைவச்சார்புடைய செய்யுட்களை இயற்றித்தர வேண்டும் என்று சிலர் வேண்டியதற்கிணங்க அடிகள் 'சிதம்பரச்செய்யுட் கோவை' என்னும் நூலும் இயற்றினர் என்பர்.[4] அடிகளை இலக்கணகவியா? வரகவிதானே என்று ஒருவர் கூற, யாப்பிலக்கண வலிமை புலப்படப் பாடியதாகவும் கூறப்படுகிறது.[5] சிவகாமியம்மை இரட்டை

---

1. 616
2. 82
3. 330

4. கு.பி.தி. (உ.வே.சா.) பக். 21. சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர், தமிழ்புலவர் சரித்திரம் பக். 69
5. கு.பி.தி. (இராம) சரித்திரச் சுருக்கம் – பக். 10

மணிமாலையும் இங்குப் பாடப்பெற்றது. இங்கு அடிகள் ஏகான்மவாதியரோடு வாதம் புரிந்ததாகக் கூறப்படுகிறது. முன்னர்க் காட்டியவாறு அடிகள் வாதம் புரிந்துள்ள குறிப்புக்கள் காணப்படுதலைக் கொண்டும், சைவசித்தாந்தத்தை மிக விழுமியதாக அடிகள் ...ண்டும்[1] பல சமய வாதிகளோடும் அடிகள் வாதம் ... எனலாம். பின்னர் அடிகள் தருமபுரத்துக்குத்

... மக்கோவை அருளியமை

... ஞானத்தலைவர் மாசிலாமணி தேசிகர் மீது பண்டார மும்மணிக் ...வை என்னும் நூல் இயற்றி, அடிகள் ஞானோபதேசம் புரிய வேண்டினார்; தேசிகரும் அருளினார். ஆனால் மாசிலாமணி தேசிகர் தம் ஆசிரியர் மீது ஒரு துதி நூல்பாட வேண்டிக் கொண்டதற்கிணங்க அடிகள் இந்நூலை இயற்றித்தந்ததாக மீனாட்சி சுந்தரம்பிள்ளை குறிக்கின்றனர்.[2] இந்நூலில் தேசிகரையே குருவாகச் சிறப்பித்துப் பாடி, அருளும்படி வேண்டியிருத்தலின்[3] இந்நூலின் பாட்டுடைத் தலைவர் மாசிலாமணி தேசிகரே என்பது தெளிவு. அங்குச்சில காலம் தங்கியிருந்தபோது 'பூதங்கடந்த' என்று தொடங்கும் தனிச்செய்யுள் முதலிய சில செய்யுட்கள் அருளியதாகவும் கூறப்படுகிறது.[4]

காசியில் சைவப்பணியும் அற்புதச்செயல்களும்

பின்னர், ஞானாசிரியர் ஆணைப்படி அடிகள் காசிக்குச் சென்றனர். இறைவனை வழிபட்டுக் 'காசிக்கலம்பகம்' என்னும் நூலும், துண்டி விநாயகர் மீது ஒரு பதிகமும் பாடியருளினர். அறமியற்றுதற்குரிய இடம் பெறுதற்காகக் காசி மன்னனைக் கண்டு பேச விரும்பினர். மன்னன் மொழி 'இந்துத்தானி' என்னும் வேறு மொழியாக இருந்ததால், அம்மொழியில் தேர்ச்சி பெறும் பொருட்டுக் கலைமகள் மீது 'சகலகலாவல்லிமாலை' என்னும் பதிகம் பாடி அம்மொழியறிவு எளிதில் கைவரப் பெற்றனர்.[5]

முதலில் அரசன் அடிகளுக்குத் தக்க இருக்கை நல்காமையின் அடிகள் பிறர் அஞ்சுமாறு ஒரு சிங்கத்தின் மேல் ஏறிச்சென்றார் என்பர்.[6] பிற பொருள்களைப் பேசும் வன்மையினை உணர்ந்து ஐயுறாத சில

1. 575, 569 : 19 -25
2. குமரகுருபரசுவாமிகள் சரித்திரம் 174-175
3. 569, 570, 572, 575, 566; விரிவு, இயல் 2. பக்.160-162
4. கு.பி.தி. (இராம) சரித்திரச்சுருக்கம் பக். 11
5. குமர குருபர அடிகள் வரலாறு பக். 10
6. குமர குருபர பக். 10; கு.பி.தி. (இராம) சரித்திரச் சுருக்கம் பக். 13

துருக்கர்கள், அடிகள் காதலைப்பற்றிப் பேசுவதில் ஐயுற்று, அனுபவமின்றி இவ்வாறு பேச முடியுமா என்று, அடிகளைப் பகல்துறவிபோலும் என்று கூறினர். அது கண்ட அடிகள் அவர்கள் முன்பாகவே மறுநாள் ஒரு செப்புப்பாத்திரத்தைப் பொன்னாக்குவதாகக் கூறி அவர்கள் காணும்படி மலத்தில் அதைப் புதைப்பித்தனர்; மறுநாள் அதை எடுப்பித்துப் பொன்னாகியிருப்பதைக் காட்டினர்; செம்பு பொன்னானது இரசவாதத்தாலன்று புளிக்கும் மலத்தில் இருந்ததால் இவ்வாறாயிற்று என்று சிலர் கூறினர்; உடனே அடிகள் 'நீங்கள் மலம் புளிப்பென்றீர்களே, அதையும் புசித்து அனுபவித்தீர்கள் போலும்' என்றார். இவ்வாறு தம்துறவொழுக்கத்தில் ஐயுற்றுக் கூறியவர்களை அடங்கச் செய்தனர் என்று ஒரு நிகழ்ச்சி கூறப்படுகிறது.[1]

அடிகள் கல்விச்சிறப்புடையராயினும், அவர் மெய்க்கடவுளை வழிபடுபவரல்வர் என்றுசில துருக்கர்கள் கூறி, அடிகள் மெய்க்கடவுளை வணங்குபவராயின் பழுக்கக்காய்ச்சிய இரும்பைக் கையிலேந்திச் சோதனை தருக என்றனர்; அடிகள் அதற்கிணங்கிச் சிவனே முழு முதற் கடவுள் என்பது உண்மையாயில், யான் அவன் அடித்தொழும்பன் என்றால் இவ்விரும்பு என்னைச் சுடாதொழிக என்று கூறி அதைக்கையிலேந்தி யாதொரு ஊனமுமின்றி விளங்கினர் என்று ஓர் அற்புத நிகழ்ச்சி கூறப்படுகிறது.[2]

அடிகள் பேதம் பாராட்டுபவரல்லர் எனில் நம்மோடு நம் இல்லத்தில் உண்ண வேண்டும் என்று சில துருக்கர்கள் அரசனிடம் கூற, முகமதிய அரசன் அடிகளை அவ்வாறே அழைத்தனன்; அடிகள் அதற்கிசைந்து தம்பணியாள் ஒருவனை ஒரு பாத்திரத்தில் செவ்வலரி மலரை வைத்து மூடிக் கொண்டு வரச்செய்து அரசன் உணவுச்சாலைக்குச் சென்றனர்; தமக்குப் படைக்கப்பட்டிருந்த இறைச்சிகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே வினாவிப் பன்றி இறைச்சி மட்டும் இல்லை போலும், அது நம்மிடம் உள்ளது என்று சொல்லிப் பணியாள் கொண்டு வந்த பாத்திரத்தை வாங்கும்படி கூறினர் ; பன்றியின் பெயரையும் சொல்லாத துருக்கர்களோடு அரசனும் வெட்கப்பட்டு அதைத் தடுத்தான்; அந்நிலையில் அடிகள் புலாலுணவுகளை உற்றுநோக்கி மரக்கறி உணவுகளாக மாற்றி அருந்திச் சைவ உணவின் சிறப்பையும் புனிதத்தையும் அரசனுக்குப் புலப்படுத்தினர் என்றும் கூறப்படுகிறது.[3]

---

1. கு.பி.தி. (இராம) சரித்திரச் சுருக்கம் பக். 13, 14
2. குமர குருபர அடிகள் வரலாறு பக். 11
3. கு.பி.தி. (இராம) சரித்திரச் சுருக்கம் பக். 15; குமரகுருபரஅடிகள் வரலாறு பக்.12

அரசன், அடிகளின் பெருமையை நன்குணர்ந்து வணங்கி அடிகள் வேண்டியவாறு, மடம் அமைக்கக் கேட்கும் விருப்பமான இடத்தைத்தர இசைந்தனன்; இறைவன் கனவில் உணர்த்தியவாறு உபயகருடன் வட்டமிட்ட இடமும், கேதாரகட்டத்தின் அருகில் உள்ளது மாகிய அரசனுடைய பள்ளிவாசல் இடத்தைக்குறிப்பிட அவ்வாறே மன்னன் எவ்விதத் தடையுமின்றி அந்தவிடத்தைக் கொடுத்தனன்; அடிகள் வீற்றிருந்து அறஞ்செய்வதற்குத் திருமடமும் அமைத்து அளித்தனன்; அதுவே குமாரசாமி மடம் என்று வழங்கப்படுகிறது; அங்கிருந்து கொண்டு அடிகள், கேதார கட்டத்தில் கேதார நாதருக்கு ஆலயம் அமைத்தனர்; திருமலை நாயக்கர் பெயரால் சத்திரம் கட்டுவித்தனர்; விதிப்படி பூசனை நியமங்களை நிலவச் செய்தனர்.[1] குமாரசாமி மடத்தில் சிவயோகம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தனர்; புராணசாலை ஏற்படுத்தித் தமிழ், இந்துத்தானி மொழிகளில் சொற் பொழிவுகள் செய்து வந்தனர்; அடிகள் வாயிலாகக் கம்பராமாயணக் கருத்துக்களை அறிந்து துளசிதாசர் இந்துத்தானி மொழியில் தாம் எழுதிய இராமாயணத்தில் அமைத்துக் கொண்டனர் என்பர் என்றும் கூறப்படுகிறது.[2]

ஆய்வு

கலைமகளைப் போல் கண்கண்ட தெய்வம் வேறு இல்லை[3] என்று அடிகள் சிறப்பித்துக் கூறுதற்கேற்ப அவளருளால் இந்துத்தானி மொழியறிவு கைவரப் பெற்றனர் எனல் ஏற்கத்தக்கதே. கலைமகள், தொண்டர் செந்நாவில் நின்று வடநூற்கடலையும், செழுந்தமிழ்ச் செல்வத்தையும் காப்பவள் எனப்படுகிறாள்.[3] இந்துத்தானி மொழி வடமொழியோடு தொடர்புடைய மொழி என்பதும், இவை இரண்டும் இந்தோ ஆரிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதும் ஈண்டு நினைக்கத்தகும். அடிகள் காலத்தில் காசியை ஆண்டு, அடிகளோடு தொடர்பு கொண்ட மன்னன் யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஒளரங்கசீப் என்ற மன்னன் ஆண்டதாகக் கருதுகின்றனர்[4] எனினும் தக்க சான்று காணப்படவில்லை. மன்னன் விருப்பப்படி அடிகள் திருக்குறளை இந்தியில் மொழிபெயர்த்தார் என்பதற்கும்[5] தக்க சான்று எதுவும் இல்லை.

---

1. கு.பி.தி. (இராம) சரித்திரச் சுருக்கம். பக். 16
2. கு.பி.தி. (உ.வே.சா) பக்.22 3. 703
4. தி. பட்டுச்சாமி ஓதுவார், திருவாரூர் நான்மணிமாலை உரை பக். 7
5. குமர குருபரன் மலர் 5 பக். 544

அடிகள் உயிருள்ள சிங்கத்தின் மீது ஏறிச்சென்றமை அருஞ்செயலாக நிகழ்ந்துள்ளது. காளியை வேண்டி, அவள் அளித்த சிங்கத்தின் மீது சென்றதாகக் கூறுகின்றனர்.[1] துர்க்கையாகிய காளி சிங்கத்தில் வீற்றிருப்பவள் எனப்படுதலின் இவ்வாறு கூறுதல் கேட்கப்படுகிறது எனலாம். 'சுழலும் கண்களையுடைய, வளைந்த பிடரிமயிர்பெற்ற சிங்கத்தை உகைத்து ஏறும் சூரரிப்பிணவு'[2] என்று அடிகள் துர்க்கையைக் குறிப்பிடக் காண்கிறோம். 'இடியுக அடல் அரி ஏறு உகைத்து ஆர்த்தவள்'[3] என்றும் அடிகள் காளையைச் சிங்கவாகனத்தோடு நினைக்கின்றனர். துட்டமிருகம் முதலாம் எவையும் தம்மை எவ்விடத்தில் எதிர்ந்தாலும், இடுக்கண் நீக்கி எவ்வரமும் தருதல் வேண்டும் என்று முருகனை வேண்டுதல் நினைக்கத்தகும்.[4] எனவே உயிருள்ள சிங்கத்திலேறிச் சென்றமை நிகழ்ந்திருக்கக் கூடுவதே எனலாம். இவ்வரிய நிகழ்ச்சியால் தான் அடிகளுக்கு உரிய வாகனம் சிங்கம் என்று குறிக்கும் வழக்கம் ஏற்பட்டுள்ளதெனலாம். 'சிங்கமுதுகின் மேற் குருபரனார் ஏறிச்சென்றமைக் கறிகுறியாகக் காசிமடத்திலே ஒருகல் வடிவம் அமைந்துள்ளது. இக்காரணம் பற்றியே, அம்முத்தி மாநகரின் கண் ஏனைய மடங்களினுங்குமாரசாமி மடத்திற்கு மிகுந்த மதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. புறச்சமயத்தார் நடுவே அற்புதங்களாலன்றி வழக்கீட்டினால் சமயத்தை நிலைநாட்டுதல் அரியதாகும்'[5] என்று கா. சு. பிள்ளை தெளிவுறுத்துகின்றனர். இ.கோவிந்தசாமிப்பிள்ளை இந்நிகழ்ச்சி குறித்துக் கூறுவதாவது: 'அடிகள் தம் பெயரால் நிறுவப்பெற்ற திருத்தளியின்கண் அரியேறூர்ந்து வந்து அம்மன்னனிடம் அத்தாணிக்கண் புக்க நிலை தொட்டு உருவம் அமைக்கப்பட்டுள்ளது. நிகழாத நிகழ்ச்சிக்கறிகுறியாக வுருவமெடுத்த

---

1. குமர குருபர சுவாமிகள் புராணம், பக்.205; கு.பி.தி. (இராம) சரித்திரச் சுருக்கம் பக்.13
2. 11　　　　3. 12
4. 1 : 113-117
5. குமர குருபர அடிகள் வரலாறு பக். 92-95

லொண்ணாது. நாடு அவன் நாடாகலானும், புறக் கொள்கையினையுடைமையினானும், அந்நாட்டார் அவ்வரயனைச் சார்ந்தவராகலானும் பொய்ம்மையாக எடுப்பித்தல் ஒல்லாததாய் முடியுமன்றோ'. [1] எனவே இந்நிகழ்ச்சியின் உண்மை உணரத்தகும். இப்பொழுதும் காசி குமாரசாமி மடத்தில் அடிகள் சிங்கத்தில் அமர்ந்துள்ள திருவுருவச்சிலை விளங்கி வருவதாகவும் அதற்கு நாள் வழிபாடு நடைபெற்று வருவதாகவும் தற்போது 21-ஆம் பட்டத்தில் விளங்கும் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள் தெரிவித்துள்ளனர். [2]

ஒழுக்கத்தை முருகனிடம் வேண்டியுள்ள அடிகள் [3] தாம் உரைத்துள்ள துறவு இலக்கணத்துக்கு [4] இலக்கியமாகத் திகழ்ந்தவர் எனலாம். எனவே தம் ஒழுக்கத்தில் ஐயுற்றார்க்கு நேரிடையாக மறுத்துரைக்காமல் நயம்பட இரசவாத நிகழ்ச்சி மூலம் உணர்த்தினர் எனலாம். சித்து என்னும் உறுப்பில் பல பொருள்களைப் பொன்னாக்கியதாக அடிகள் ஓர் இரசவாதி கூறும் முறையில் பாடியுள்ளமை காண்கிறோம். [5] இவ்வகையில் செம்பைப் பொன்னாக்கியதும், இறைச்சியுணவை மரக்கறி உணவாக்கியதும் அடிகள் இயற்றிய சித்துக்களாக ஏற்கத்தக்கவையே எனலாம். களியன் கூற்றாக அமைத்துள்ள கலம்பகப் பாடல் ஒன்றில், இறைச்சியும், கள்ளும் உண்பதைச் சிறப்பித்துக் கூறுவதாக அமைத்துள்ளார் அடிகள். [6] இப்பாடலில் 'மறுத்தவிரவில்லையே' என்ற தொடர் சிலேடைத் தொடராக அமைக்கப்பட்டு, இறைச்சியும் கள்ளும் உண்ணுதலை மறுத்த இரவில்லை என்றும், அவை உண்ணுதல் மறு-தவிரவில்லை - களங்கமுடையது-என்றும் உணர்த்தப்படுகிறது. களியன் கூற்றாகவே கள் இறைச்சி உண்ணுதல் மறுவுடையது என்று அடிகள் கூறும் குறிப்பே இதில் சிறப்பாகக் கருதத்தகும். முருகனால் போர்க்களத்தில் உயிரிழந்து சொர்க்கம் புகுந்து தேவமகளிரொடு இன்புறும் அவுணர்கள் தம்மை அவுணர் என்று உணராமல், அரக்கர்கூட்டம் சூரபதுமனோடு மாள விரைவில் கொல்லும்படி குமரக் கடவுளிடம் வேண்டுவதாக அடிகள்

---

1. தமிழ்ப்பொழில், துணர் 5, பக். 95
2. 8-8-75 வெள்ளிக்கிழமை திருப்பனந்தாளில் இக்கட்டுரையாசிரியற்கு 21-ஆம் பட்டத்துத்தலைவர் அவர்கள் கலந்துரையாட அருளினார்கள்; வினவிய சில ஐயவினாக்களுக்கு விளக்கம் தந்து 3-10-75-இல் ஒரு கடிதமும் எழுதியுள்ளார்கள்.

3. 1 : 119 4. 290,291,298,451,457 5. 161, 635 6. 638

கூறுவதில், [1] அரக்கர்களே அரக்கர்களைக் கொல்லுமாறு கூறுவதாக அமைத்தல்போல் - இங்கு அடிகள் களியனே இறைச்சி, மது உண்ணுதல் மறுவுடையது என்று கூறும் பொருள்பட அமைத்துள்ளார் எனலாம். இஃதோர் அறம் உணர்த்தும் உத்தி என்று கருதலாம். இங்ஙனம் அடிகள் சைவ உணவு உட்கொள்வதே மறுவற்றதன்மை என்று பெறவைத்துள்ளமை அறியப்படுகிறது. எனவே அடிகள் இறைச்சி உண்ணும் முகமதியர்களிடம் சைவ உணவின் சிறப்பைப் புலப்படுத்தினர் என்னும் நிகழ்ச்சியின் உண்மை உணரத்தக்கதாக உள்ளது.

'அற்புத நிகழ்ச்சிகள் நிகழ்வதன் மூலமே இறையருள் பெற்றுள்ள தன்மை உணரப்படுகிறது' [2] என்று ஆங்கிலக் கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. 'பகுத்தறிவாளர்கள் ஆன்மிகம் பற்றி ஒன்றும் அறியாததாலும், பொருளியல் உலகைப் பற்றிய எண்ணமே அவர்களால் மேலான தன்மையில் கருதப்படுவதாலும், அற்புத நிகழ்ச்சிகள் நிகழ்வதில்லை - நிகழவும் முடியாது என்று தம்மையும் பிறரையும் இசைவிக்க விழைகின்றனர். நிலைத்த தத்துவத்தை உணர்ந்த அடியவர்கள் ஆன்மிகவாழ்வையும் அதன் பயன்களையும் அனுபவித்தவர்களாக இருத்தலால், அற்புதங்கள் நிகழ்கின்றன என்பதை ஏற்று மொழிகின்றனர்; ஆயின் அவ்வற்புதங்களை அவர்கள் பெரிதாகக் கருதுவதில்லை ஆன்மிகத்துக்கு மாறானதாகவே கருதுவர்'[3] என்று ஆல்டசு அக்சிலி குறிப்பிடுகின்றார்.

அடிகள் நிகழ்த்திய அற்புதங்கள் இவ்வகையில் நோக்கத்தக்கவை எனலாம். திருவாரூரில் பிறந்தவர்கள் சிவகணங்களாகத் தோன்றுவர் என்பதைக் கூறுமிடத்து,

"இத்தலத்து உற்றவர் இனித்தலத்து உறார் எனக்
கைத்தலத்து ஏந்திய கனல்மழு உறழும்
மழுவுடைக் கையராகி விழுமிதின்
மாந்தர் யாவரும் காந்தியிற் பொலியும்
வரமிகு கமலை"

---

1. 386
2. "a divine initiative as is assumed in the recognition of the possibility of miracles" - Encyclopaedia Britannica (1960) P.586 (Vol.15)
3. "Because they know nothing of spirituality and regard the material world and their hypotheses about it as supremely significant, rationalists are anxious to convince themselves and others that miracles do not and cannot happen. Because they have had experience of the philosophy are convinced that miracles do happen, but regard them as spititual" The Perennial Philosophy P.266

என்கிறார் அடிகள்.[1] இதில் கனல் மழு ஏந்தும் இயல்பு அடிகளால் சுட்டப்பட்டுள்ளமை நினைக்கத்தகும். இவ்வாறே சைவத்தின் மேன்மையை உறுதிப்படுத்தப் பிறர் வேண்டியாங்கு அடிகள், பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கையில் ஏந்தினர் எனல், நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சியே எனலாம்.

உபய கருடன் வட்டமிட்ட பள்ளிவாசல் இடத்தைக் கேட்டனர் என்பதும் மன்னன் கொடுத்தனன் என்பதும் அடிகள் தகுதியையும் மன்னன் பணிவையும் ஒருங்கு புலப்படுத்துகின்றன எனலாம்.

"மண்கண்ட வெண்குடைக்கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவில் பணியச் செய்வாய்"

என்ற அடிகள் கலைமகளை வேண்டியுள்ளதற்கேற்ப,[2] மன்னனால் அடிகள் பெரிதும் மதிக்கப் பெற்றார் எனலாம். இவ்வகையில் இந்நிகழ்ச்சி ஏற்கத்தகும்.

குமரகுருபரசுவாமி மடம் என்பதே மருவிக் குமாரசுவாமி மடம் என்று வழங்கி வருகிறது என்பது உணரத்தகும். திருமலை நாயக்கர் பெயரால் சத்திரம் அமைத்திருந்தமை பலராலும் சுட்டப்படுகிறது.[3] ஆயின் இப்பொழுது அப்பெயரால் வழங்குவதாகத் தெரியவில்லை. பல்வேறு இடங்களில் வெவ்வேறு நினைவு அன்னதானப்பணிகள் நிகழுமாறு திருப்பனந்தாள் மடத்தினர் அமைத்திருத்தல், அடிகள், திருமலைநாயக்கர் பெயரால் தோற்றுவித்த அன்ன சத்திரத்தின் தொடர்ச்சியே என்று கருத இடமுண்டு.

அடிகள், மடத்தில் புராணசாலை அமைத்துச் சொற்பொழிவுகள் செய்து சைவத்தையும் இறையுணர்வையும் வளர்த்தனர் என்பது ஏற்றதேயாகும். சொல்வன்மை அடிகளால் விரும்பப் பெற்று விளங்கிய பண்பாகும்.[4] அடிகளின் கல்வி, அறிவு, ஒழுக்கங்கள் பேச்சாற்றலால் யாண்டும் பிறங்கிப் பெரும்புகழ் பரப்பின என்று கூறுதல் தகும். அடிகள் சிவயோகம் புரிந்து வாழ்ந்தனர் என்பது சித்தாந்த மரபுக்கு ஏற்றதாகக் கொள்ளத்தகும். யோகப் பயன் சாரூபமுத்தி ஆதலின் அடிகள் சாரூபமுத்தி பெற வேண்டிப் பாடியுள்ள பாடல்களும் இதன் உண்மையை உணர்த்துகின்றன எனலாம்.

---

1. 336 : 13-17
2. மு.ரா.அருணாசலக்கவிராயர், திருச்செந்தூர்ப் பிரபந்தத்திரட்டு பக்.283; குமரகுருபர சுவாமிகள் புராணம், பக் 210; வை.மு.சடகோபராமாநுசாச்சாரியார் மதுரைக்கலம்பகம் உரை பக்.2
3. 209,210
4. கலைக்களஞ்சியம் தொகுதி 4 பக்.39; செந்தமிழ் 48ஆம் தொகுதி பக் 249 - 251; தமிழ்ப்புலவர் அகராதி, ந.சி.கந்தையாபிள்ளை, பக் 130; தமிழ் இலக்கிய வரலாறு, மு.வரதராசனார் பக்.163; குமரகுருபரன் 4-ஆவது மலர் வை. சுந்தரேச வாண்டையார், பக்.537

அடிகள் வாயிலாகக் கம்பராமாயணக் கருத்துக்களைத் துளசிதாசர் அறிந்து தம் இராமாயண நூலில் அமைத்துக் கொண்டனர் என்னும் செய்தி பலராலும் கூறப்படுகிறது.[1] இஃது அடிகளின் பெருமையை உணர்த்துமெனினும், துளசிதாசர் காலத்துக்கும் அடிகளின் காலத்துக்கும் வேறுபாடு காணப்படுதல் நினைக்கத்தக்கதாக உள்ளது. துளசிதாசர் காலம் கிபி. 1497-1623 என்றும், அவர் தமது ராமசரிதமானஸ் என்னும் இராமாயண நூலை 1584-ஆம் ஆண்டில் தொடங்கி இரண்டாண்டு நான்கு மாதங்களில் முடித்தார் என்றும் கூறப்படுகிறது.[2] கிபி.1574 சித்திரை, சுக்கிலபட்ச நவமியில் தொடங்கி, இரண்டாண்டு ஏழு மாதம் இருபத்தாறு நாட்களில், 1576 மார்கழிச் சுக்கிலபட்சப் பஞ்சமியில் எழுதி முடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.[3]

திருமலை நாயக்க மன்னன் காலத்தவராகிய அடிகள், முன்னர்க்கூறியவாறு கிபி.1618க்கு முற்பட்டவராகார் ஆதலானும், துளசிதாசருடைய இராமாயண நூல் கிபி. 1576க்குள் அல்லது 1586க்குள் எழுதி முடிக்கப் பெற்றுவிட்டதாகக் கருதவேண்டியிருப்பதாலும், அடிகள் மூலம் அறிந்து துளசிதாசர் கம்பராமாயணக் கருத்துக்களை அமைத்தனர் என்பது ஏற்கத்தக்கதாக இல்லை. இராமனுக்கும் சீதைக்கும் திருமணத்துக்கு முன் விளங்கிய களவுக் காதல் பற்றித் தமிழில் உள்ள கம்பராமாயணத்தையும் இந்தியில் உள்ள துளசிராமாயணத்தையும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ள டாக்டர் எஸ். சங்கரசுப்பு நாயுடு அவர்கள், குமரகுருபரர் வழியாகத் துளசிதாசர் கம்பராமாயணக் கருத்துக்களை அறிந்திருக்கலாம் என்பர் என்னும் கருத்தை, டாக்டர்.உ.வே.சாமிநாதஅய்யர் அவர்களின் கருத்தை முதன்மை மேற்கோளாகக் காட்டிப் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளனர். இரண்டு வழிகளில் துளசிதாசர் கம்பராமாயணக் கருத்துக்களை அறிந்திருக்கலாம்; அவர் தென்னாட்டுக்குத் தலப்பயணம் வந்தபோது வடமொழிப் பண்டிதர்கள் மூலம் கேட்டறிந்திருக்கலாம் அல்லது காசியில் குமரகுருபரர் இந்தியில் நிகழ்த்திய கம்பராமாயணச் சொற்பொழிவுகள் மூலம் அறிந்திருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளனர்.[4] வேறு தக்க சான்று எதுவும், அடிகள் மூலம் துளசிதாசர் அறிந்தார் என்பதற்குக் கூறப்படாமையும், பொதுவாகவே கூறப்பட்டிருப்பதும், காலப்பொருத்தம்

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி 4, பக். 39; செந்தமிழ் 48-ஆம் தொகுதி பக்.249-251; தமிழ்ப்புலவர் அகராதி ந.சி.கந்தையாபிள்ளை பக்.130; தமிழ் இலக்கிய வரலாறு மு.வரதராசனா.ர் பக்.163 குமரகுருபரன் 4ஆவது மலர், வை.சுந்தரேசவாண்டையார், பக்.537
2. கலைக்களஞ்சியம், தொகுதி 6, பக். 116
3. துளசிதாசரின் இராமாயணம்- தமிழில், தி.வேங்கட கிருஷ்ணய்யங்கார், முன்னுரை பக். viii - 1
4. "Kambar and Tulsi" or Pre-Matrimonial Love of Rama and Sita in Ramayan (Hindi) - by Dr.S.Shankar Raju Naidu, PP.108, 109, 113-114 (Madras University.1956)

இன்மையும் ஈண்டுக் கருதத்தகும். எனவே அடிகள் வாயிலாகத் துளசிதாசர் கம்பராமாயணக் கருத்துக்களை அறிந்தனர் என்பது வலியுறவில்லை. அடிகள், துளசிதாசர் காலத்துக்குப் பிற்பட்டவர் என்பதும் உணரத்தகும்.

முகராங்கியில் கிளைமடம்

காசியில் சைவப்பணியும் தமிழ்ப்பணியும் ஆற்றிவந்த அடிகள் சிவகண்மணி நன்கு விளையும் இமயமலைச்சாரலில் ஒருமடம் அமைக்க விரும்பி, வாகீச முனிவர் என்பார்க்கு அறிவிக்க, அவர் நேபாள நாடு சென்று முகராங்கி என்னுமிடத்தில் ஒரு மடம் நிறுவிச் சிவகண்மணிகளை அங்கிருந்து காசிக்கு அனுப்பினர் என்று கூறப்படுகிறது. [1] சைவ சமயத்தவர் உருத்திராக்கம் அணிதல் மரபாகும். கண்டிகை என்றும் இது வழங்கும். முருகன் கண்டிகை அணிந்திருப்பதாக அடிகள் பாடுகிறார். [2] சிவனும் கண்டிகை அணிந்திருப்பதாகக் குறிப்பிடுகிறார். [3] எனவே சிவச்சின்னமாகிய உருத்திர கண்மணிகளைச்சைவர்கள் அணிதல் தக்கதாகும் என்று, அவை விளையும் முகராங்கி என்னும் இடத்தில் மடம் நிறுவப்பட்டது என்று கருதலாம்.

அடிகள் காலத்துக்குப்பின்னர் கிபி. 1881-1887-இல் திருப்பனந்தாள் மடத்து உரிமை தொடர்பாக நிகழ்ந்த வழக்கினைப்பற்றிய செய்திகள் சென்னைச் சட்டத்தீர்ப்பறிக்கைப் புத்தகம் 10-ஆவதில் காணப்படுகின்றன. அதில் முகராங்கி மடம் பற்றிய குறிப்புகளும் சுட்டப்பட்டுள்ளன. காசிமடத்துக்குக் கிளை மடங்கள் பல நாளடைவில் வட, தென் இந்தியப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டன என்றும் அவற்றுள் குறிக்கத்தக்கவை நேபாளத்திலுள்ள முகராங்கி, திருவாங்கூரில் உள்ள அச்சிரம், சிதம்பரம், இராமேசுவரம், கும்பகோணம், திருச்சிராப்பள்ளி என்றும் அறியப்படுகிறது. [4] 1827-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சடையப்பத்தம்பிரான் எழுதியுள்ள கடிதத்தில் முகராங்கி மடம் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. [5] இத்தகைய குறிப்புக்களால்,

---

1. குமரகுருபரஅடிகள் வரலாறு, பக் 12; குமரகுருபரஸ்வாமிகள் சரித்திரம், பா. 299;
2. 1:55 3. 565
4. "The evidence shows that in the course of its history, the Mutt at Benaras came to own several subordinate Mutts, both in Northern and Southern India, and among the rest, we may refer to the Mutts at Morangi in Nepaul and at Achiramin Travancore, at Chidambaram, Rameswaram, Kumbakonam and Trichinopoly" - I.L.R. Vol. X P.391.
5. "In April 1827 he states that he had instructed Aiyarappa to proceed to Morangi in Nepaul, and to arrange for providing the Tambiran there with an assistant and for the efficient management of the charities in that place, and to leave Ramalinga in charge of the Mutt at Benaras during his absence (exibit 937)" - Ibid, P.(401).

முகராங்கி மடம் தொடர்ந்து இயங்கி வந்திருத்தலில் ஐயப்பாடில்லை. காசிமடத்தின் கிளைமடமாக அடிகள் காலத்தில் அமைக்கப்பட்ட முதல் மடம் முகராங்கியில் அமைந்ததாகலாம் என்று கருதுவது பொருந்தும். ஆயின் முகராங்கி மடம் பற்றிய மேற்குறித்த செய்திகள் தவிரப் பின்னர் எவ்வித வரலாறும் அறியக்கூடவில்லை. இப்பொழுது அங்கு கிளைமடம் எதுவும் இயங்கி வரவில்லை என்று தற்பொழுது 21-ஆம் பட்டத்தில் வீற்றிருக்கும் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அடிகள் சாரூபம் பெற்றமை

அடிகள் காசியில் வீற்றிருந்து அறஞ்செய்து வந்த நிலையில், இடையில் மூன்றுமுறை தருமபுரம் வந்து தம் ஞானாசிரியரை வணங்கிச் சின்னாள் தங்கியிருந்து மறுபடியும் காசியடைந்தனர் ; நான்காம் முறை வந்து வணங்கியபோது தம் ஞானாசிரியரைத் தரிசிப்பதை விட்டுக் காசியில் இருக்க மனமில்லை என்று விண்ணப்பித்தனர்; ஞானாசிரியர் அடிகளை நோக்கி, எங்கிருந்தாலும் திருவாரூர் ஞானப்பிரகாசர் அருளால் பிறவாநெறி கிட்டும் என்பதைக் கூறிச் சொக்கலிங்கர் மீனாட்சியை எழுந்தருளப் பண்ணிக் கொடுத்துக் காசிக்குச் செல்ல விடை கொடுத்து அனுப்பினர் ; விடைபெற்றுக் காசிக்கு வந்த அடிகள் சிவதருமங்கள் இயற்றிச் சிலகாலம் வீற்றிருந்து வைகாசித் திங்கள், தேய்பிறைத் திருதியை நாளில் சிவபெருமான் திருவடி நிழலிற் கலந்தருளினார் என்று கூறக் கேட்கின்றோம்[1]. தமக்குப்பின் அறம் பாலிக்கும் தூயவராகச் சொக்கநாத முனிவரைத் தேர்ந்து வழிப்படுத்தி, அடிகள் இறைவனது திருவடி நீழலில் 'ஒன்றி ஒன்றாது மேவி உலப்பிலானந்த முற்றார்' என்று மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றனர்[2]. அடிகள் கங்கையுள் மறைந்தனரென்ற கதையும் கேட்கப்படுகின்றது என்பர்[3].

அடிகள் நான்குமுறை தருமபுரம் வந்து தம் ஞானாசிரியரைக் கண்டு வணங்கிச் சென்றனர் என்பது அடிகளின் குருபத்தியை உணர்த்துவதாகும். தம் ஞானாசிரியர் மீது 'பண்டார மும்மணிக்

---

1. கு.பி.தி. (இராம) சரித்திரச்சுருக்கம் பக். 17
2. குமரகுருபரசுவாமிகள் சரித்திரம் பா. 300 - 303
3. கும்ரகுருபர அடிகள் வரலாறு பக். 13.

கோவை' என்னும் விழுமிய பாமாலை பாடியவடிகள் இவ்வாறு பன்முறை வந்து கண்டு வழிபட்டனர் என்பது சாலப் பொருந்துவதே. மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் குருவின் புகழை நினைத்தும், சொல்லியும், இறைஞ்சியும் இன்புற்றனவாதலால், சிவகரணங்களாகத் திரிந்த கரணங்களாயின என்று அடிகள் குறிப்பதும்[1], சம்பந்தப் பெயர் தரித்தமையால் தன்னைச் சம்பந்தம் செய்யத் தகும் என்று வேண்டுதலும்[2] முதலான கூற்றுக்கள் குருவினிடத்தில் அடிகட்கு இருந்த மிக்க காதலை உணர்த்துவனவாகும். தேசிகரின் சந்நிதியடைந்து இன்னருள் பெறாதவர் யாரும் இலர் என்னும் வியப்பு உளதாமாறு தனக்கு அருளவேண்டும் அடிகள்[3] குருவின் சந்நிதியில் சென்று கண்டு வழிபடும் சிறப்பை உணர்த்தியுள்ளதற்கேற்ப மீண்டும் மீண்டும் தன் ஞானாசிரியரைக் கண்டு இறைஞ்சினர் என்று கூறல் தக்கதேயாம்.

அடிகள் சிவன் திருவடி சேர்ந்தமை சாரூபம் பெற்ற தன்மை எனலாம். காசிக் கலம்பகத்தில் காசியில் இறப்பவர்க்கு இறைவன் சாரூபம் வழங்குவதை விரிவாக விளக்கியுள்ள அடிகள் தமக்கும் அம்முத்தி வேண்டும் என்ற விருப்பத்தைப் புலப்படுத்தியுள்ளனர். உடல்விடும் போது நன்மணி கர்ணிகைத் துறையில் விட வேண்டும் என்ற ஆசை பூண்டவர் அடிகள்[4]. இறந்தவர்கள் காதில் பிரணவத்தை உபதேசித்தருளுதலின் மணிகர்ணிகை என்னும் பெயர் இத்துறைக்கு ஏற்பட்டதென்பர். இத்துறையில் இறப்பவர் சிவசாரூபம் பெறுதல் நூற்றுணிபு ஆதலின் இங்கு உடல் விடுதலை அடிகள் வேண்டியுள்ளார் என்பது உணரத்தகும். அடிகள் காசியில் இறத்தலையும் சாரூபமுத்தி பெறுதலையும் விரும்பி வேண்டுதல் பல பாடல்களில் அறியப்படுகிறது[5]. இவற்றால் உடம்பு குலையும் நாளில் மணிகர்ணிகைத் துறையில் சென்று தம் உடலை விடுமாறு இறைவனால் அருளப்பெற்றுச் சாரூபம் வழங்கப் பெற்றார் எனக் கருதலாம். கி.பி. 1688-ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் தேய்பிறை மூன்றாம் நாளாகிய திருதியையில் அடிகள் சாரூபமுத்தியடைந்தனர் என்று அறியப்படுகிறது[6]. இந்த நாள் அடிகளின் நினைவுநாளாக வழங்கி வருவதை அறிகிறோம்.

---

1. 587:25-33
2. 572:16-17
3. 581:35-44
4. 615
5. 636:26-40; 637
6. திருவாரூர் நான்மணிமாலை உரை, தி. பட்டுச்சாமி ஓதுவார், பக். 8

அவ்வகையில் 1975-ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் தேய்பிறை மூன்றாம் நாள் (வைகாசி 14/28-5-75) அடிகளின் 287-ஆம் ஆண்டு நினைவு நாளாகும். அடிகளின் ஆண்டு நினைவு நாளில் நூல் வெளியீடு, அன்னதானம் முதலிய அறப்பணிகள் திருப்பனந்தாள் மடத்தின் மூலம் நிகழ்ந்து வருதல் குறிக்கத்தக்கதாகும். அடிகளின் வரலாற்றுச் சித்திரங்கள் திருப்பனந்தாள் காசிமடத்தில் வரையப்பட்டிருப்பதோடு நூலிலும் இந்த அச்சிடப்பட்டுள்ளன[1].

அடிகளின் பின்னர்க் காசிமடத்துப் பரம்பரை

அடிகளின் காலத்துக்குப் பின் கி.பி. 1720-ஆம் ஆண்டிலேயே திருப்பனந்தாளில் மடம் நிறுவப் பெற்றுள்ளது. அதற்கு முன் ஏறத்தாழ நூறு ஆண்டுகள் காசியில் மடம் விளங்கியது எனலாம். அக்காலப் பகுதிவரை காசிமடத்துத் தலைவர்களாய் விளங்கியவர்கள் வருமாறு :

1. குமரகுருபரத் தம்பிரான் (தோற்றுவித்தவர், வைகாசி, தேய்பிறை, திருதியை)
2. சொக்கநாதத் தம்பிரான் (மார்கழி, தேய்பிறை, பஞ்சமி)
3. அருணாசலத் தம்பிரான் (ஆனி, வளர்பிறை, சஷ்டி)
4. அம்பலவாணத் தம்பிரான் (ஆவணி, வளர்பிறை, திருதியை)
5. சடையப்பத் தம்பிரான் (தை, தேய்பிறை, தசமி)
6. தில்லைநாயகத் தம்பிரான் (பங்குனி, தேய்பிறை, திரயோதசி) (1720 - 56)

இப்பரம்பரை விவரம் சட்டத்தீர்ப்பறிக்கை நூலிலும், மடத்து வெளியீட்டிலும் அறியப்படுவதாகும்[2]. தில்லைநாயகத் தம்பிரான் காலத்தில் வேறொருவரைக் காசியில் அறம்புரிய நியமித்து விட்டுச் சோழ நாட்டில் திருப்பனந்தாளில் ஒரு திருமடமமைத்துத் தாம் அங்கு வீற்றிருந்து அறம்புரிந்து வந்தனர் ; அவர் காலத்திலிருந்து திருப்பனந்தாள் தலைமை இடமாகவும் காசி கிளை இடமாகவும் கொள்ளப்படுவனவாயின என்று அறிகிறோம்[3]. மடத்தின் பொருள்

---

1. அடிகளின் வரலாற்றுப் படங்கள் இந்நூலில் பிற்சேர்க்கை 1-இல் இணைக்கப்பட்டுள்ளன.
2. I.L.R. Vol. X - P. 391 ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் வரலாறும், அற்புதத் தேவாரத் திரட்டும். பக். 4
3. குமரகுருபர அடிகள் வரலாறு, பக். 13 ; கலைக்களஞ்சியம் தொகுதி 6, பக். 12

வளத்தைப் பெருக்கும் நோக்குடன் திருப்பனந்தாளில் மடம் அமைக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. 'அறக்கட்டளை வருவாய்களைப் பெறவும், புதிய பொருட்கொடைகளை ஏற்கவும், காசியில் நிறுவிய தருமங்களுக்கு உதவியாகப் புதிய அறக்கட்டளைகளை ஏற்று நடத்தவும் ஒரு வங்கி நிலையம் போலத் திருப்பனந்தாள் மடம் அமைக்கப்பட்டது. திருப்பனந்தாள் மடத்திலிருருந்து தம்பிரான் உண்டியல்களைக் காசிமடத்தில் பணம் பெறுமாறு வழங்குதலும், காசியிலிருந்து அனுப்பப்பட்ட உண்டியல்கள் திருப்பனந்தாளில் மாற்றிக் கொள்ளப்படுதலும் நிகழ்ந்துள்ளன. இதன் மூலம் இரு மடத்துக்கும் கிடைத்த 'வட்டம்' வெளிவருவாயாக அமைந்திருந்தது'[1] என்று கூறப்படுகிறது. "காசியில் நடத்த வேண்டிய அறங்கள் திருப்பனந்தாளைச் சூழ்ந்த ஊர்களிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு நடத்த வேண்டினமையால் பனசையில் மடம் அமைந்தது என்று நினைத்தற்கிடமுண்டு" என்பர்[2].

தில்லை நாயகத் தம்பிரானுக்குப் பின் திருப்பனந்தாளைத் தலைமை இடமாகவும் காசியைக் கிளை இடமாகவும் கொண்டு விளங்கிய தம்பிரான்கள் வருமாறு[3] :

6. தில்லை நாயகத் தம்பிரான் (திருப்பனந்தாளில் மடம் தோற்றுவித்தவர்) (1720 - 1756) (பங்குனி, தேய்பிறை, திரயோதசி)
7. குமரகுருபரத் தம்பிரான் 2 (1756 - 1790) (கார்த்திகை, தேய்பிறை, சப்தமி)
8. சிதம்பரநாதத் தம்பிரான் (1790-1798) (மாசி, வளர்பிறை, தசமி)
9. சடையப்பத் தம்பிரான் (1798 - 1836) (தை, தேய்பிறை, நவமி)
10. கணபதித் தம்பிரான் (1836 - 1838) (வைகாசி, தேய்பிறை, துவாதசி)
11. இராமலிங்கத் தம்பிரான் (1838 - 1841) (சித்திரை, வளர்பிறை, சதுர்த்தசி)
12. சொக்கலிங்கத் தம்பிரான் (1841 - 1852) (ஆடி, வளர்பிறை, ஏகாதசி)
13. கணபதித் தம்பிரான் 2 (1852-1853) (ஐப்பசி, வளர்பிறை, ஏகாதசி)
14. இராமலிங்கத் தம்பிரான் 2 (1853-1880) (புரட்டாசி, வளர்பிறை, திரயோதசி)

---

1. Translated from I.L.R. Vol. X - P. 392 தமிழ்ப் பொழில், துணர் 35, பக். 193-194
2. குமரகுருபர அடிகள் வரலாறு, பக். 13 ; ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகள் வரலாறும் அற்புதத் தேவாரத்திரட்டும், பக். 5 ; I.L.R. Vol. X. P. 393
3. தமிழ்ப்பொழில், துணர் 35, பக்.193-194

இவ்வரிசையில் 7-ஆம் பட்டத்தில் குமரகுருபரத் தம்பிரான் என்பவர் விளங்கியதால், அடிகளை ஆதி குமரகுருபரர் என்று வழங்கும் வழக்கம் ஏற்பட்டது. எனினும் பொதுவாகக் குமரகுருபரர் என்பது அடிகளையே குறிக்கும் வகையில் இப்பொழுது வழங்கி வருகிறது எனலாம்.

கி.பி. 1880-இல் இராமலிங்கத் தம்பிரான் காலமான பின்னர் அவர் எழுதி வைத்த விருப்ப ஆவணத்தின்படி கந்தசாமித் தம்பிரான் என்பவர் தலைமைப் பொறுப்புக்கு வந்தனர். ஆயின் இவர் வேறு ஆதீனத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவராவர். அடிகள் தருமபுர ஆதீனத்துக் தம்பிரானாக விளங்கிய மரபை ஒட்டி, அடுத்தடுத்து வரும் பரம்பரையினர் தருமபுர ஆதீனத்துத் தம்பிரான்களிலிருந்து தேர்ந்து கொள்ளப் பெறுவதே வழக்கம் எனறும், எனவே கந்தசாமித் தம்பிரான் பொறுப்பு ஏற்றமை செல்லாது என்றும் தருமபர ஆதீனத் தலைவர் ஞானசம்பந்த பண்டார சந்நிதிகள் 1881-இல் வழக்குத் தொடர்ந்தனர். இவ்வழக்கு நிகழ்ச்சிகள் சென்னைச் சட்டத்தீர்ப்பறிக்கைப் புத்தகம் 10-ஆவதில் தரப்பட்டுள்ளன. திருப்பனந்தாள் மடம் தொடர்பான வரலாற்றுக் குறிப்புக்கள் சில இப்புத்தகத்தில் இடம் பெற்றிருத்தல் குறிக்கத்தக்கதாகும். இதில் பல கடிதங்கள் சான்றுகளாகக் காட்டப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளன; கல்வெட்டுக்குறிப்பும் சுட்டப்பட்டுள்ளது. காசி மடத்தில் 'தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த குமாரசுவாமிமடம்' என்று கல்வெட்டு இருந்தமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளமையும் குறிக்கத்தகும்[1]. நீதிமன்ற வழக்கினால் 1880-1894 வரை திருப்பனந்தாள் மடம் மடாதிபதிகளல்லாத பிற மூவர் ஆட்சிக்குள்ளிருந்தது[2]. தருமபுர ஆதீனத்தில் விளங்கும் தம்பிரான்களில் ஒருவரைத் தேர்ந்து தலைவராக அடுத்தடுத்து நியமித்துக் கொள்ளும் உரிமையும் பழக்கமும் உள்ள முறையை ஒட்டி 1894-இல் இருந்து அடுத்தடுத்த பரம்பரையினர் பொறுப்பேற்று வந்துள்ளமை அறியப்படுகிறது[3]. அவ்வரலாறு பின்வருமாறு :

15. பொன்னம்பலத் தம்பிரான் (1894-1898) (புரட்டாசி, வளர்பிறை, ஏகாதசி)

---

1. "Kumaraswami Mutt of the Dharmapuram Adhinam in the Kaidara Ghutt" (Benaras)" - I.L.R. Vol. X P. 392
2. குமரகுருபர அடிகள் வரலாறு, பக். 13
3. ஸ்ரீ ஆதிகுமரகுருபரசுவாமிகள் வரலாறும் .... அற்புதத் தேவாரத் திரட்டும். பக்.5-6

16. சோமசுந்தரத் தம்பிரான் (1898-1914) (கார்த்திகை, வளர்பிறை, துவாதசி)
17. சொக்கலிங்கத் தம்பிரான் 2 (1914-1919) (சித்திரை, வளர்பிறை, பஞ்சமி)
18. சொக்கலிங்கத் தம்பிரான் 3 (1919-1930) (மாசி, தேய்பிறை, ஏகாதசி)
19. சாமிநாதத் தம்பிரான் (1930-1944) (பங்குனி, வளர்பிறை, துவிதியை)
20. அருள்நந்தித் தம்பிரான் (26-3-1944 - 18-5-72) (வைகாசி, வளர்பிறை, சஷ்டி)

இப்பொழுது 21-ஆம் பட்டத்தில் வீற்றிருக்கும், தருமபுர ஆதீனத் தம்பிரான்களில் ஒருவராகிய வித்துவான் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள் 1972-ஆம் ஆண்டு முதல் திருப்பனந்தாள் மடத்துக்குத் தலைவராக விளங்கிச் சைவத் தமிழ்ப்பணிகளைச் செவ்வனே தொடர்ந்து நடத்தி வருகின்றனர். திருப்பனந்தாள் மடத்துத் தலைவர்கள், தம்பிரான்கள் என்றும், எசமான் சுவாமிகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். நூல்கள் வெளியிடுதல், பரிசுகள் அமைத்தல், சைவசித்தாந்தம் பரப்புதல், அன்னதானமளித்தல், கல்வியை வளர்த்தல், பொது அறங்களுக்கு உதவுதல் என்று நாட்டுக்குப் பயன்படும் பல நல்ல பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டு திருப்பனந்தாள் காசிமடத்தின் பரம்பரையினர், அடிகளின் தொண்டையும், புகழையும் பேணி வருகின்றனர் எனலாம்.

அடிகளின் வரலாற்றுப் பெருமை

"தமிழ்ப் புலவர்களுள் வடநாட்டுக்குச் சென்று தங்கியிருந்து தமிழ் நூல்கள் பாடியவர் அவர் ஒருவரே"[1] என்று சிறப்பித்துக் கூறப்பெறும் வரலாறு படைத்தவர் அடிகளாவர். அவர்தம் நூல்களின் வரலாறு விரிவாக அடுத்த இயலில் அறியத்தகும். கருவிலே திருவருள் வாய்க்கப் பெற்றுச் சமயஞானியாகவும், தத்துவ ஞானியாகவும், இலக்கிய ஞானியாகவும், முற்றும்துறந்த துறவியாகவும் திகழ்ந்து பணிபுரிந்த அடிகள், சைவ சமய வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், தமிழர் வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றவர் என்பது தகும்.

---

1. தமிழ் இலக்கிய வரலாறு, டாக்டர். மு. வரதராசனார் பக். 199

இயல் – 2
அடிகள் பாடிய நூல்கள்

குமரகுருபர அடிகள் பாடிய நூல்களை இலக்கிய வரலாற்று முறையில் விளக்குதல் இவ்வியலின் நோக்கமாகும். பதினாறு கலைகளையுடைய முழுமதிபோல அவர் நுற்கோவை விளங்குகின்றது[1]. என்று கா.சு. பிள்ளை அவர்கள் குறிப்பிடுவதற்கேற்ப அடிகள் அருளிய நூல்கள் பதினாறாகும். ஆயின் உ.வே.சா. அவர்கள் பதின் மூன்று நூல்களையே அடிகள் இயற்றியவைாகக் குறிப்பிடுகின்றனர் [2]. இப்பதின்மூன்றனுள்ளும், இரண்டு நூல்கள் அரைகுறையாகவே கிடைத்துள்ளன ஆதலால், அடிகள் அருளியவற்றுள் இப்பொழுது முழுமையாகக் கிடைத்திருப்பவை பதினோரு நூல்களே என்ற கருத்தை உ.வே.சா. அவர்கள் கொண்டிருத்தல் உணரத்தகும். மூன்று நூல்கள் அடிகளால் பாடப்பட்டவையல்ல என்பதும், இரண்டு நூல்கள் முழுவடிவில் கிடைக்கவில்லை என்பதும் முறையே கருத்துரையாகவும், தமிழ் மக்கள் தவக்குறையாகவும் அமைந்துள்ளன. அடிகள் அருவிய நூல்களின் எண்ணிக்கை பற்றிய பொது ஆய்வாக முதற்கண் சில கருத்துக்கள் இங்கு எண்ணத்தகும்.

அடிகள் அருளிய நூல்களின் எண்ணிக்கை குறித்துச் சிதம்பரம் ஈசானிய மடம், இராமலிங்கசுவாமிகள் பதிப்பித்த குமரகுருபரர் பிரபந்தத்திரட்டில் காணப்படும் சிறப்புப்பாயிரம் உணர வைக்கிறது.

"கலிவெண் பாவெனும் ஒலிபெறும் அலங்கல்அக்
குகன்திரு முடிதனக்கு உகந்திடச் சூட்டிப்
பிள்ளைக் கவிமுதல் வெள்ளைக் கிழத்தி
மாலை ஈறாகச் சால்பமை பிரபந்தம்

---

1. குமரகுருபர அடிகள் வரலாறு பக் 21

2. கு.பி.தி. (உ.வே.சா) முகவுரை, பக் 10

முந்நான் கியற்றித் தன்னாம், சமய
நிலையையும் காட்டி உலைவிலாது யாரும்
தீதெலாம் ஒருவி நீதியே புரிய
நீதிநெறி விளக்கமென்று ஏதமில் பனுவலும்
இயற்றினன்."

என்று வரும் அப்பாயிரக் கருத்துக் கேற்ப இப்பதிப்பில், 1. திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா 2. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் 3. மீனாட்சியம்மை குறம் 4. மீனாட்சியம்மை யிரட்டை மணிமாலை 5.. மதுரைக்கலம்பகம் 6. நீதி நெறி விளக்கம் 7. திருவாரூர் நான் மணிமாலை 8. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் 9. சிதம்பர மும்மணிக்கோவை 10. சிதம்பரச் செய்யுட் கோவை 11. சிவகாமியம்மைமயிரட்டைமணிமாலை 12. பண்டார மும்மணிக் கோவை 13. காசிக் கலம்பகம் 14. சகலகலா வல்லி மாலை ஆகிய 14 நூல்கள் இடம் பெற்றுள்ளன. இப்பதிப்பில் உள்ள சரித்திரசார பஞ்சகத்திலும் இப்பதினான்கு நூல்கள் சுட்டப்படுகின்றன. சிறப்புப் பாயிரக் கருத்துக்கேற்பச் சரித்திரசார பஞ்சகம், பதிப்பித்தவர்களால் எழுதப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. ஆயின் சிறப்புப் பாயிரம் முற் காலத்தது என்றும், இயற்றினோர் பெயர் காணப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சென்ற நூற்றாண்டில் தேவர்பிரான் கவிராயரென்பவரால் அப்பாயிரம் இயற்றப்பெற்றதாக உ.வே.சா. குறிப்பிடுகின்றனர்.[1] தேவர்பிரான் கவிராயர் காலத்தில், அவரளவில் அறியப்பட்ட அடிகளின் நூல்கள் 14-ஐப் பற்றி மட்டும் தாம் இயற்றிய பாயிரத்தில் குறித்துள்ளார் என்று கொள்ளலாம். அவை அடிகள் பாடியனவாக முழுமையும் வழங்கியதாலும் அவ்வாறு குறித்தனர் எனல் தகும். எனவே இப்பாயிரத்தில் கூறப்படும் நூல் எண்ணிகையினை முற்ற முடிந்ததாக எண்ண இயலாமலே உள்ளது.

கழகப் பதிப்பில்[2] மேற்கண்ட சிறப்புப் பாயிரத்தில் சிறிது மாற்றம் காணப்படுகிறது.

---

1. கு.பி.தி. (உ.வே.சா) பக். 18
2. கழக வெளியீடு 50, குரோதன, சித்திரை - 1925

"முந்நான் கன்றியு மொழிதரு கைலைக்
கலம்பகந் துண்டிக் களிற்றுப் பதிகம்
அவ்விரண் டியற்றிச் சைவநற் சமய"

என்னும் வரிகள் இடைமிடைந்து வருகின்றன. முற்குறித்தவற்றோடு கைலைக் கலம்பகம், துண்டி விநாயகர் பதிகம் ஆகிய இரண்டும் சேர்த்து 16 நூல்கள் அடிகள் இயற்றியனவாக இவ்வகையில் சொல்லப்படுகின்றன. இப்பதிப்பில் கைலைக் கலம்பகச் செய்யுட்கள் 8 சேர்க்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள், அடிகள் மரபில் வந்த ச. குமரகுருபரன் கவிராயரவர்களிடமிருந்து கிடைந்தன என்று அறியப்படுகிறது.[1] எனவே கைலைக் கலம்பகம் அடிகள் பாடியதாகப் பாயிரத்திலும் குறிக்க வேண்டுவதாயிற்று எனலாம். ஆயின் துண்டி விநாயகர் பதிகம் இப்பதிப்பில் இடம் பெறவில்லை. அடிகள் பாடியதாக அந்நூல் சொல்லப்படுவதை மதித்து அதனையும் பாயிரத்தில் சேர்த்துக் குறிப்பிட்டுள்ளனர் எனத் தோன்றுகிறது. எனவே 16 நூல்கள் அடிகளால் இயற்றப் பெற்றவையாகின்றன.

கைலைக்கலம்பகம் அடிகளால் இயற்றப்பெற்றது என்பதையும், ஆயின் சில செய்யுட்களே அதில் கிடைக்கின்றன என்பதையும், கழகப் பதிப்பில் அவை காணப்படுகின்றன என்பதையும், துண்டி விநாயகர் பதிகம் அடிகளால் பாடப் பட்டது என்பதையும், அது கிடைக்கவில்லை என்பதையும், உ.வே.சா. குறிப்பிட்டுள்ளனர் [2], ஆயின் ஏனோ கைலைக்கலப்பகச் செய்யுட்களைச் சேர்த்துப் பதிப்பிக்காமல் விட்டுவிட்டார்கள். கா.சு. பிள்ளை, துண்டிவிநாயகர் பதிகம் அடிகள் பாடியதாகக் கூறுவதுடன், பெரிய விருத்தங்களையுடையது என்றும் வடமொழிக் கலப்பு அதிகமாகக் காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.[3] எனவே அப்பதிகம் அவர்களால் அறியப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது. ஆயின் இப்பொழுது அது கிடைக்கப் பெறவில்லை.

---

1. முன்னுரை, பக், 8
2. கு.பி.தி. (உ.வே.சா.) பக், 10, 12, 22
3. குமர குருபர அடிகள் வரலாறு பக். 9, 21

வேறு நூல்களும் அடிகளால் இயற்றப்பெற்றிருக்கலாம். பண்டார மும்மணிக்கோவை தொடர்பாக இறுதியில் மூன்றும், தனிச் செய்யுட்களில் ஒன்றும் அடிகள் பாடியனவாகக் கருத இடமுண்டு. இவ்வாறு வேறு நூல்கள், பாடங்கள் நமக்கு அறியப்படாமலும் இழக்கப்பட்டிருத்தல் கூடும். எனவே இப்பொழுது அறிந்துள்ளவரை 16 நூல்கள் அடிகள் அருளியவை எனல் பொருந்துவதாகும்.

அடிகளின் நூல்களில் காணும் அமைப்புமுறை, பொருட்பொதிவு, தனி இயல்புகள் முதலியவற்றை இலக்கிய வரலாற்று முறையில் இனி நோக்கலாம். இவ்வாறு சில முறைகளை அமைத்துப் பயில்வது ஓர் ஆய்வுமுறை என்பர் வில்லியம் ஹென்றி அட்சன்[1].

1. திருச்செந்தூர்க்கந்தர் கலிவெண்பா

இஃது அடிகள் அருளிய முதல் நூல் ஆகும். 122 கண்ணிகள் கொண்ட கலிவெண்பா யாப்பில் அமைந்துள்ள நீண்ட பாடலாக இது விளங்குகிறது. சைவ சித்தாந்தக் கருத்துக்களை முறையாக எடுத்துக்கூறி, முருகனுடைய தோற்றம், அருட்செயல்கள் முதலியவற்றை விரிவாக விளக்கி, விண்ணப்பித்துக் கொள்ளும் முறையில் அமைந்துள்ளது. சைவர்கள் பலராலும் கல்வியும், அன்பும் விளைதற்பொருட்டும் பிணிகள் நீங்கும் பொருட்டும் இன்றும் நாடோறும் பாராயணம் செய்யப்பட்டு வரும் சிறப்புப் பெற்றுள்ளது. இதனைக் குட்டிக் கந்த புராணம் என்றும் புகழ்ந்துரைக்கக் காண்கிறோம்.[2]

சைவ சித்தாந்தக் கருத்துக்கள்

முதல் 36 கண்ணிகளில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் மரபுப்படி கூறப்படுகின்றன. சிவனுக்குக் கூறும் அனைத்து இயல்புகளும் நிலைகளும் முருகனுக்குக் கூறப்படுதல் சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும். இறைவன் இலக்கணமும் மூவகை

---

1. 'It is only when we introduce method into our reading that we become students' - An introduction to the study of Literature, W.Hudson P. 19

2. திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா, சகல கலாவல்லி மாலை மூலம், முத்துக்குமார சுவாமித் தம்பிரான் முன்னுரை பக். 3; சோமலெ திருநெல்வேலி மாவட்டம் பக். 285

உயிர்களுக்கு அருளும் முறைகளும் சுருக்கமாகவும் தெளிவாகவும் இடம் பெற்றுள்ளன. சைவசித்தாந்த சாரமாக இப்பகுதி விளங்குகிறது. அடிகளின் சமயக் கொள்கை என்னும் இயலில் விரிவாக இவை கருதப்பெறும்.

முருகன் திருவுருவ வருணனை

முருகனுடைய கேசாதிபாத வருணனை அடுத்து இடம் பெற்றுள்ளது. நவரத்தின மணிகள் இழைக்கப் பெற்ற பைம்பொன் முடியுடையான்; ஆறு பிறைத்துண்டுகளை வரிசையாக அமைத்தாற்போலப் புண்டரம் ஆகிய திருநீற்றுக்குறி பொலியும் நெற்றியன்; அருள் பொழியும் ஈராறுகண்ணுடையான்; பருதியெனச் சுடர்காலும் மகரக்குழையான்; புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயன்; பிறவித்துயர் தீர்க்கும் திருமொழியன்.[1]

முருகன் ஆறுதிருமுகங்கள்

முருகன் ஆறுதிருமுகங்களை வருணிக்கும் அடிகள், திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் அருளிய அமைப்பை மாற்றிக் கொண்டதுமன்றி, ஆண்டுச் சொல்லாததையும் குறிப்பிட்டுள்ளார். இரண்டு பகுதிகளையும் ஒப்பிட்டு நோக்கத்தகும்.

1. "விண்மலிதோள்
வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூர னைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமும்"

என்று அடிகள் முதலிற்குறிப்பிடும் முகம்,[2] திரு முருகாற்றுப்படையுள் ஐந்தாவதாகக் குறிப்பிடும் முகத்தோடு தொடர்புடையது.

"ஒரு முகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே"[3]

என்னும் நக்கிரர் கூற்றில் 'செறுநர்த் தேய்த்து' என்று பொதுவாகக் கூறியதை அடிகள் 'வெஞ்சூரனைத் தடிந்து' என்று விளக்கியிருக்கின்றனர். செல்சமம் முருக்கிக்கறுவு கொள் நெஞ்சமொடு களம் வேட்டிருக்கும் நிலையைத் தெவ்வர் உயிர்சிந்தும் நிலையாக

1. 1:36 - 41
2. 1:41 - 42
3. திரு முருகு : 98 - 100

அடிகள் பொருள் விளக்கம் செய்திருப்பது நோக்கத்தகும். 'செல்சமம் முருக்கல்' 'தெவ்வருயிர் சிந்தல்' இரண்டும் பொருந்து மாற்றால், நச்சினார்க்கினியர் முதலியோர் சமம் என்பதற்கு நடுவு நிலைமை எனக்கொண்டு 'நடுவுநிலைமையைக் கெடுத்து' என்றெழுதியது இவ்வாசிரியர்க் குடன்பாடாகாது எனல் தெளிவாம்,[1] என்று சித்தாந்தரத்நாகரம் வித்துவான் முத்து சு. மாணிக்கவாசக முதலியார் கூறுகின்றனர். அரசனுக்குரிய ஆறங்கங்களுள் படைக்குத் திருவள்ளுவர் முதலிடம் தந்திருத்தல் போல்,[2] அடிகள் ஆறுமுகங்களுள் பகைவரை அழித்த செயலுக்குரிய முகத்தை முதலிற்கூறியுள்ளமை சாலப்பொருந்துவதாகும்.

2. "எவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி யுலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும்"

என்று அடிகள் கூறும் இரண்டாவது முகம்[3], நக்கீரர் கூறும் மூன்றாம் முகத்தோடு கா.சு. பிள்ளையவர்களால் கருதப்படுகிறது. "மந்திரவிதியின் மரபுளிவழா அந்தணர் வேள்வியோர்க்கும்மே" என்ற கருத்தை அடிகள் நேராகத் தழுவிக் கொள்ளாவிடிலும், அதன் உயர் நோக்கினை எடுத்தியம்பினர். ஐவகை வேள்வியியற்றி அருந்தவம் புரிவார், ஞானமெய்தி வீடெய்துதற்குரியராகலின், 'ஊழ்வினையை மாற்றியுலவாத பேரின்ப வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும் என்றனர்[4] என்று கா.சு. பிள்ளை குறிப்பிட்டிருப்பதில், இப்பொருத்தம் நேராகத் தழுவிக் கொள்ளாத நிலையில் வலிந்து காட்டப்படுவதாகவே உள்ளது. முத்து சு. மாணிக்கவாசக முதலியார், அடிகள் கூறும் இரண்டாவது முகம் நக்கீரர் காட்டும் 'மாஇருள் ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்தன்று ஒரு முகம்'[5] என்ற முதல் முகத்தோடு பொருந்தும் என்று கொண்டு, 'மாஇருள்ஞாலத்தை உயிராயும், மறுவின்றி விளங்குதலை ஊழ்வினையை மாற்றுதலாயும்' 'பல்கதிர் விரிதலை உலவாத பேரின்ப வாழ்வுதரலாகவும்[6] பொருத்திக் காட்டுவர். ஆயின் அடிகள் உரைக்கும் 'பல்கதிரிற் சோதிவிடும்' நான்காவது முகம், நக்கீரர் கூறும் முதல் முகத்தோடு சாலப்பொருந்தும் ஆதலின் முதலியார் அவர்கள் காட்டும் பொருத்தம் ஏற்புடையதாகத் தோன்றவில்லை.

---

1. குமரகுருபரன், மலர். 2, பக். 7
2. குறள் : 381
3. 1 : 42 - 43
4. குமரகுருபரஅடிகள் வரலாறு. பக்.68
5. திருமுருகு : 91 - 92
6. குமரகுருபரன், மலர். 2 பக்.7

"ஒரு முகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசை விளக்கும்மே" [1]

என்று ஆற்றுப்படை காட்டும் நான்காவது முகமே அடிகளால் இரண்டாவது முகமாக உரைக்கப்படுகிறது எனலாம். 'எஞ்சிய பொருள்கள்' என்பது எல்லாவுயிர்களையும் குறிப்பதாகும்; ஏமுற நாடுதலாவது அவ்வுயிர்கள் பாதுகாப்புப் பெறும் வகையில் ஊழ்வினையை மாற்றுதலாகும்; திங்கள் போலத் திசைவிளக்குதல் உலவாத பேரின்ப வாழ்வு தருதலாகும். திங்களின் ஒளி உயிர்களை ஓம்பிப்பாதுகாத்து வாழ்வுதரும் இயல்புடையது என்பதைப் 'பகலொளி தன்னினும் பல்லுயி ரோம்பும், நிலவொளி விளக்கில்[2]' என்று இளங்கோவடிகள் கூறுவதாலும் தெளியலாம். இங்ஙனம் எல்லா உயிர்கட்கும் வாழ்வுதரும் முகம் அடிகளால் இரண்டாவதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

3. "சூழ்வோர்
வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும்"

என்று அடிகள் மூன்றாவது முகத்தைக் குறிப்பிடுகின்றனர். [3] இது நக்கீரர் உரைக்கும், 'ஒரு முகம், மந்திர விதியின் மரபுளிவழா' அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே[4] என்னும் மூன்றாம் முகத்தின் மறுதோற்றமே எனலாம். மந்திரவிதிப்படி மரபு தவறாமல் வேள்விகளை அந்தணர் இயற்றுதல் என்பதை விளக்கும் முறையில், பழ மறைகள் ஆகமங்கள் வாயிலாக அவற்றில் கூறப்பட்டுள்ள மந்திர விதிப்படி இயற்றுதல் என்று அமைந்துள்ளமை உணரலாம். ஓர்க்கும் முகம் என்று செவியுறக் கேட்டல் அளவில் நக்கீரர் கூறியிருப்பவும், முடித்துவைக்கும் முகம் என்று அடிகள் கூறுதல், முருகன் அருளை விளக்கும் சிறப்புடைய வளர்ச்சிக்கருத்தாக அமைந்துள்ளது எனலாம்.

4. "விடுத்தகலாப்
பாச விருடுரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்"

என்பது அடிகள் குறிப்பிடும் நான்காவது முகம்.[5] முன்னர்க்காட்டியவாறு இம்முகம் நக்கீரர் காட்டும் முதல் முகத்துக்கு ஏற்புடையதாகும். 'மாஇருள் ஞாலம் மறுவின்றி விளங்கப், பல்கதிர் விரிந்தன்று ஒரு முகம்'[6] என்பது நக்கீரர் வாக்கு, உயிர்களைச் சூழ்ந்துள்ள மாயிருள்

---

1. திருமுருகு; 96 - 98
2. சிலம்பு, புறஞ்சேரி : வரி 11-12
3. 1 : 43 - 44
4. திருமுருகு; 94 - 96
5. 1 : 44 - 45
6. திருமுருகு : 91-92

என்பதை, விடுத்தகலாப் பாச இருள் என்று அடிகள் அமைத்து, மறுவின்றி விளங்குதலை இருள் துரந்து என்று புலப்படுத்திப், பல்கதிர் விரிந்த முகம் என்பதை அதேபோல் 'பல்கதிரிற் சோதிவிடும் வாசமலர்வதன மண்டலம்' என்று காட்டியுள்ளமை தெளிவு.

5. "நேசமுடன்
போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோக மளிக்கும் முகம தியும்"

என்று ஐந்தாவது முகமாக அடிகளால் கூறப்படுவது,[1] 'ஒருமுகம், குறவர்மடமகள் கொடிபோல் நுகப்பிள்,' மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே,[2] என்ற நக்கீரர் குறித்துள்ளனர்; அடிகள் தெய்வயானையுடன் மகிழ்வதையும் குறித்துள்ளனர். மன்னுலகத்துயிர்கட்கும் விண்ணுலகத்துயிர்கட்கும் இல்வாழ்க்கை நிகழ்த்துதற்கு இரண்டு மணமும் கூறப்பட்டன என்று கருதுதல்[3] தக்கதேயாகும்.

6. "தாகமுடன்
வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்."

என்று இறுதியாக அடிகள் உரைப்பது,[4] 'ஒருமுகம், ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக், காதலின் உவந்து வரம்கொடுத் தன்றே[5]' என்னும் நக்கீரர் காட்டும் இரண்டாம் முகத்தின் விளக்கமாகும். 'ஆர்வலர்' என்ற 6சால்லின் பொருளைத் 'தாகமுடன் வந்தடியிற் சேர்ந்தோர்.' என்று விளக்கியுள்ளார். ஆர்வலர் ஏத்தியதால் முருகன் காதலின் உவந்து வரம் கொடுக்கும் நிலை நக்கீரர் காட்டும் இரண்டாம் முகத்தின் விளக்கமாகும். 'ஆர்வலர்' என்ற சொல்லின் பொருளைத் 'தாகமுடன் வந்தடியிற் சேர்ந்தோர்' என்று விளக்கியுள்ளார். ஆர்வலர் ஏத்தியதால் முருகன் காதலில் உவந்து வரம் கொடுக்கும் நிலை நக்கீரர் காட்டுவது. வேட்கையுடன் வந்து அடியில் பணிந்த அடியவர்க்கு

1. 1 : 45 - 46
2. திருமுருகு; 100 - 102
3. குமரகுருபரன், மலர். 2, பக்.8
4. 1 : 46-47
5. திருமுருகு : 92 - 94

அவர்கள் மகிழும்படியாக வரம்பலவும் அளிக்கும் நிலை அடிகள் காட்டுவது. இறைவன் உவந்து கொடுப்பதிலும், அடியவர் உவக்கும்படி வரம் கொடுத்தல் சிறப்புடையது என்று அடிகள் முருகன் அருட்பெருமையை உணர்த்தியுள்ளனர் எனலாம்.

இவ்வாறு ஆறுமுகங்களையும் அடிகள் விளக்கியிருக்கும் முறையை நோக்கும்போது, 'நக்கீரர் நல்கிய திருமுருகாற்றுப்படைக்குக் குமரகுருபரரின் கந்தர் கலிவெண்பாவில் பொருள் காணலாம்" என்று கூறுதலின் உண்மை நன்கு தெளிவாகிறது.

முருகன் பன்னிருகைகள்

முருகனுடைய பன்னிருகைகளும், திருமுருகாற்றுப் படையைத் தழுவி அடிகளால் சிற்சில மாறுபாடுகளோடு வருணிக்கப்படும்[2] வரிசையும் பொருத்தமும் பின்வருமாறு காட்டத்தகும்:

1. 'ஆரமுதம் தேவர்க் குதவும் திருக்கரம்' - அடிகள் (1)
   'விண்செலல்மரபின் ஐயர்க்கு ஏந்தியது, ஒருகை' - நக்கீரர் (1)
   தேவர்க்கு ஆரமுதத்தை ஏந்திய கை என்பது ஈண்டு அடிகளின் தெளிவுரையாகும்.
2. 'சூர்மகளிர், மேவக் குழைந்தணைந்த மென்கரம்' - அடிகள் (2)
   'ஒருகை, வானர மகளிர்க்கு வதுவை சூட்ட' - நக்கீரர் (12)
   வானர மகளிர்க்கு வதுவை சூட்டும் அளவில் மட்டும் நில்லாமல் அவர்கள் மேவக்குழைந்து அணைத்த மென்கரம் என்பது அடிகள் விளக்கும் கருத்து.
3. 'ஓவாது, மாரி பொழிந்த மலர்க்கரம்' - அடிகள் (3)
   'ஒருகை, நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய' - நக்கீரர் (11)
   மலிதுளி பொழிதலை, ஓவாது பொழிதலாக விளக்கியுள்ளமையும் மலர்க்கரம் என்று மென்மையும் தண்மையும் தோன்ற அடைமொழி புணர்த்துள்ளமையும் காணத்தகும்.
4. 'பூந்தொடையல், சேர வணிந்த திருக்கரம்' - அடிகள் (4)
   'ஒருகை, நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய' - நக்கீரர் (8)

---

1. செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு25, பக்.28, (ஔவை.சு.துரைச்சாமிப்பிள்ளை)
2. திருமுருகு : 107 - 118; 1:48 - 53

5. 'மார்பகத்தில், வைத்த கரதலமும்" - அடிகள் (5)
'ஒருகை, மார்பொடு விளங்க' - நக்கீரர் (7)

6. 'வாம மருங்கில் கரமும்' - அடிகள் (6)
'உக்கம் சேர்த்தியது ஒருகை' - நக்கீரர் (2)

உக்கம் என்பதை அடிகள், இடப்பக்கம் என்ற பொருளில் தெளிவுறக்காட்டியுள்ளனர்.

7. 'உய்த்த குறங்கில் ஒரு கரமும்' - அடிகள் (7)
'நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது ஒருகை,'
- நக்கீரர் (3)

கலிங்கம் அணிந்த குறங்கின் மிசை வைக்கப்பட்டுள்ள கை என்பது நக்கீரர் விளக்கம். செலுத்திய குறங்கில் ஒரு கரம் என்பது அடிகள் விளக்கம். தக்கவர்களுக்கு உதவத்தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்[1] என்ற குறிப்பை 'உய்த்தகுறங்கு' என்பதால் குறித்தார் எனலாம்.

8. 'மொய்த்த, சிறுதொடிசேர் கையும்' - அடிகள் (8)
'ஒருகை, கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப' - நக்கீரர் (9)

9. 'மணிசேர்ந்த தடங்கையும்' - அடிகள் (9)
'ஒருகை, பாடின் படுமணி இரட்ட' - நக்கீரர் (10)

10. 'கறுவுசமர் அங்குசம்சேர் கையும்' - அடிகள் (10)
'அங்குசம் கடாவ ஒருகை' - நக்கீரர் (4)

போர்க்களத்தில் என்ற குறிப்பு, 'கறுவுசமர்' என்பதால் காட்டப்படுகிறது.

11. தெறுபோர் அதிர்கேடகஞ் சுழற்றும் அங்கைத்தலமும் - அடிகள்(11)

12. 'கதிர்வாள் விதிர்க்கும் கரமும்' - அடிகள் (12)
'இருகை,ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப' - நக்கீரர் (5) (6)

ஐயிருவட்டம் என்பதைக் கேடகம் என்றும், எஃகு என்பதை வாள் என்றும் காட்டியுள்ளார்.

முருனுடைய பிற உறுப்பு வருணனைகள்

முருகன், மகளிர் வேட்டணைந்த அம்பொன் மணிப்பூண் அகன் மார்பினன்; முப்புரிநூல், கண்டிகை, பட்டாடை, அரைஞாண்,

---

1. குறள் : 1023

அரைக்கச்சை அணிந்து பொலிபவன்; அழகிய இடையுடையவன்; நாததத்துவத்தைக் கழலாகக் கொண்டவன்; கிண்கிணியும், சிலம்பும் பொருந்தியவன்; இளம்பருதி நூறாயிரங்கோடி போல வளந்தரும் தெய்வீக வடிவாளன்[1] என்று வருணிக்கப்படுகிறான்.

முருகன் திருத்தசாங்கம்

தசாங்கம் என்னும் சிற்றிலக்கிய மரபிற்கேற்ப[2] முருகனுடைய தசாங்க உறுப்புக்கள் அடிகளால் கூறப்படுகின்றன. முருகன் அடியவர் உள்ளத்துள் விளங்கும் இன்பப் பொருப்புடையான்; பேரின்ப வெள்ளப் பெருக்காறு பெற்றவன்; மேலான இன்பம் நல்கும் திருநாட்டான்; முத்தியை அணிநகராக உடையவன்; ஐந்தெழுத்தாகிய மந்திரத்தைக் குதிரையாகக் கொண்டவன்; பஞ்சமலத்தையும் போக்கும் சிவஞானக் கடாக்களிறு பெற்றவன்; சிவபூரணத்துட் பூரணமாய் விளங்கும் அறிவாகிய புதுமலரை அன்பு நாரால் கட்டும் நறுந்தொடையுடையவன்; ஐந்தொழிலும் இடைவிடாமல் செய்து உயர்ந்த வான் கொடி வாய்த்தவன்; நாததத்துவமே மணிமுரசாய்க் கொண்டவன்; புவனத்தை ஆக்கி அசைத்தருளும் ஆணை உடையவன்[3]. இவ்வாறு தசாங்க உறுப்புகளை முருகன் பெற்று விளங்குவதை இனிது புலப்படுத்தக் காண்கிறோம். பொதுவாகக் கிளியை வினவி, அதுகூறும் முறையில் தசாங்க உறுப்புக்கள் கூறப்படும். ஆயின் அடிகள் இங்குக் கிளியை வினவும் முறையில் அமைத்துக் கொள்ளாமல், தசாங்க உறுப்புக்களை மட்டும் கூறியுள்ளார். எனவே பத்துக் கண்ணிகளிலேயே சுருங்க உரைக்கும் பாண்மை அமைந்தது எனலாம்.

முருகன் திருவவதாரம்

சிவபெருமான், அசுரர்க்கு ஆற்றாத தேவர்களின் முறையீட்டுக்கு இரங்கி, ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் ஆகிய ஐந்து முகத்தோடு கீழ்நோக்கிய முகமாகிய அதோமுகமும் தந்தான். எனவே ஆறுதிருமுகங்கள் ஆகின.[4] அம்முகங்களில் விளங்கிய நுதற்றழற் கண் ஆறும், தீப்பொறியாறு உண்டாக்கின. தீப்பொறி புவனம் முழுவதும் பரவியது. தேவர்கள் கண்டு அஞ்சினர். திரண்ட தழற்பிழம்பைத் தன் பொற்கரத்தால் எடுத்து வாயுவிடம்

---

1. 1:53-57
2. வெண்பாப் பாட்டியல் 19-20 இலக்கண விளக்கப் பாட்டியல் 22,80
3. 1:65-74
4. தமிழில் : 1. ஈகை வள்ளலாகிய திருவருளுடையண்ணல்
   2. மலையாள் மணவாளப் பெருமான் 3. இன்முகப் பெருமான்
   4. அம்மையப்பர் 5. மெய்யப்பா 6. நீலமணிமிடற்று ஒருவன்

இறைவன் கொடுத்துக் கொண்டுபோகப் பணித்தான். வாயு அதைத் தீக்கடவுளிடம் அளிக்க, அவன் கங்கையாற்றில் உய்த்தனன்; கங்கையும் சிறிதுநேரமும் அத்தழற்பிழம்பைக் கொண்டமைதற் காற்றாள் ஆயினள். சரவணப் பொய்கையில் கொண்டுய்த்தனள். அங்கு அஃது ஆறுதிருவுருவாய் மாறியது. கார்த்திகை மாதர் அறுவர் பாலூட்டினர். இறைவன் உமையவளோடு வந்து அவளுக்கு அக்காட்சியைக் காட்ட, உமை ஆறு உருவத்தையும் எடுத்தணைத்து ஒன்றாக்கிக் கந்தன் என்று பேரிட்டுச் சீராட்டிப் பாலூட்டினாள். சிவன் மகிழுமாறு அவனிடம் திரும்ப அளித்தாள்[1]. கந்தபுராணம் திருவவதாரப்படலக் கருத்துக்கள் சுருக்கமாக இவ்வகையில் இடம் பெற்றுள்ளன எனலாம்.

முருகன் திருவிளையாடல்கள்

அடுத்து முருகன் திருவிளையாடல்கள் பேசப்படுகின்றன. உமையம்மையின் பாதச்சிலம்பில் அமைந்த ஒன்பது மணிகளில் நவசத்திகள் தோன்ற அவர்கள் ஒன்பது வீரர்களை அருளினர். அவ்வீரருள் முன்னவனே வீரவாகு. நாரதமுனிவருடைய வேள்வித்தீயில் தோன்றி உலகத்தையே அழித்து விளங்கிய ஆட்டுக்கிடாயினைப் பிடித்துவந்தான் அவன். அதனைச் செலுத்தியருளுமாறு முருகனை வேண்ட, அதன்மீது இவர்ந்து எண்திசையும் நடத்தி விளையாண்டவன் முருகன். அகந்தையுற்ற பிரமனுக்குப் பிரணவப்பொருளைச் சொல்லாததோடு, அவன் தலையில் குட்டிச்சிறையில் இருத்தியவன். சிவனுக்குப் பிரணவப் பொருளை மொழிந்தவன். தாரகாசுரனையும், கிரௌஞ்சமலையையும் தூளாகுமாறு வீரவடிவேல் விடுத்தவன். இந்திரனுக்கு அபயம் அளித்தவன். சூரனிடம் சென்று சோதித்து வருமாறு வீரவாகுவைத் தூதனுப்பியவன். சூரன் வானவரை விடுவித்துப் பணியாமையால் அசுரர்படைகளை அழித்துப் பானுப்பகைவன், சிங்கமுகன் ஆகியோரை வென்றவன். கடலில் தலைகீழாக மாமரமாகி நின்ற சூரன் உடல் கண்ட சுடர்வேலன். சூரன் உடம்பை இருகூறாக்கி ஒரு கூற்றில்தோன்றிய மயிலை வாகனமாகவும் மற்றொரு கூற்றில் தோன்றிய சேவலைக் கொடியாகவும் கொண்டவன்.

---

1. 1: 75-86

மும்மூர்த்திகளின் குறைதீர்த்துத் தேவர்களைச் சிறை விடுத்து ஆட்கொண்ட தேவன். இவ்வாறு முருகன் திருவிளையாடற் சிறப்பு உணர்த்தப்படுகிறது[1].

தெய்வயானை, வள்ளி திருமணம்

இந்திரன் மகளாகிய தெய்வயானையை மணந்தவன்; சிவமுனிவன் அருளால் மான் வயிற்றில் உதித்துக் குறவர் குலம் மகிழ அவர்களால் வளர்க்கப்பெற்றுத் தினைப்புனம் காத்திருந்து, தினையும் தேனும் அளித்த வள்ளிக் கொடியையும் மணந்தவன்; ஆறுதிருப்பதிகண்டு ஆறெழுத்து மந்திரத்தை அன்புடன் கூறுவோர் சிந்தையில் குடி கொண்டிருப்பவன் என்று முருகன் மணநிகழ்ச்சிகளும் இருப்பிடங்களும் கூறப்படுகின்றன[2].

அடிகளின் விண்ணப்பம்

அடுத்து முருகனிடம் வேண்டும் வேண்டுகோள் இறுதியாக இடம் பெறுகிறது. பல்கோடி சன்மப் பகையும், அகால இறப்பும், பல்கோடி இடையூறும், பல்பிணியும், பல்கோடி பாதகமும், செய்வினையாகிய ஏவலும், பாம்பும், பசாசும், வருத்தும் பூதமும், தீயும், நீரும், பொருபடையும், கொடிய நஞ்சும், துட்ட விலங்கு முதலாம் எவையும் எவ்விடத்தில் வந்து எதிர்த்தாலும் அவ்விடத்தில் முருகன் காப்பாற்றி அருள வருதல் வேண்டும் என்கிறார். பச்சை மயில் வாகனமும், பன்னிரு திண்டோளும், அச்சமகற்றும் கூர்வேலும், கச்சைத்திருவரையும், சீறடியும், செங்கையும், பன்னிரு அருள் விழியும், மாமுகங்கள் ஆறும், ஒளிகாலும் திருமுடிகள் ஓராறும் எந்தத்திசையிலும் எதிர்தோன்ற வேண்டுகிறார். அவ்வாறு காட்சிதந்து, இடுக்கண் எல்லாம் பொடிபடுத்தி, விளங்குமாறு உதவவேண்டுகிறார். பல்காப்பியத்தொகையும் எழுத்து முதலாகிய ஐந்திலக்கணமும் தோய்ந்து பழுத்த தமிழ்ப்புலமை அருளவும் வேண்டுகிறார். ஒழுக்கம் தவறாத நிலையில் இம்மைப் பிறப்பின் இருவாதனையாகிய அகப்பற்று, புறப்பற்றுக்களை நீக்கி மூன்று மலங்களையும் மோசித்து விடுவிக்க விண்ணப்பிக்கின்றார். பழைய அடியவர்களுடன் கூட்டிப் பேரின்பம் துய்க்கச் செய்து, மனம் பொருந்திய பூங்கமலக்கால் காட்டி ஆட்கொண்டு அருளும்படியாக வேண்டி முடிக்கிறார்[3]. இப்பகுதி அடிகளின் உயர்ந்த வேட்கைகளைப் புலப்படுத்துவதோடு முருகன் அருட்சிறப்பையும் காட்டி நிற்கிறது.இவ்வகைகளில் இந்நூல் தனிச்சிறப்புடன் விளங்குகிறது எனலாம்.

---

1. 1 : 86 - 105 2. 1 : 105 - 110
3. 110 - 122

உ. மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ் என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இதன் இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் எடுத்துரைக்கின்றன; காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை அம்புலி என்ற ஏழுபருவங்கள் ஆண்பாற்பிள்ளைத்தமிழ், பெண்பாற்பிள்ளைத்தமிழ் இரண்டுக்கும் பொதுவானவை; சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய மூன்றும் ஆண்பாற்பிள்ளைத்தமிழுக்கும், கழங்கு, அம்மானை, ஊசல் ஆகிய மூன்றும் பெண்பாற்பிள்ளைத்தமிழுக்கும் இறுதியில் அமைக்கப்படுபவை; ஆசிரியவிருத்தப்பாவில் பாடப்பெறும்; குழந்தையின் மூன்றாந்திங்கள் தொடங்கி இருபத்தொன்றாம் திங்கள் வரை, இரண்டு திங்களுக்கு ஒன்றாக ஒவ்வொரு பருவத்தையும் அமைத்துப் பத்துப்பருவங்களில் பாடுவது; கடைசி மூன்று பருவங்களுக்குத் திங்கள் கணக்கிடுவதற்குப்பதிலாக 3,5,7 என்ற ஆண்டுகளைக் கொள்வதும் உண்டு[1]. பெண்பாற்பிள்ளைத்தமிழில் கழங்குக்குப் பதிலாக நீராடல் பருவம் அமைதலும் உண்டு[2],

அடிகளின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் மேற்கூறிய இலக்கண அமைதிகள் காணத்தகும். கடவுள் வாழ்த்து ஒன்றும், காப்புப் பருவத்தில் பதினொன்றும், ஏனைய ஒன்பது பருவங்களில் பப்பத்து வீதம் தொண்ணூறும் ஆக 102 பாடல்கள் இந்நூலில் உள்ளன. அம்மையைக் குழந்தை நிலையில் வைத்து, அன்போடும், மரியாதையோடும், ஒப்பில்லாத மகிழ்ச்சியோடும் குமரகுருபரர் பாடி வழிபட்டுள்ளார்; துறவியாக இருப்பினும் குழந்தைப் பருவ அழகுகளை அனுபவித்துப்பாடியுள்ளார் என்று டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் குறிப்பிடுகின்றனர்[3]. பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் இந்நூலுக்குச் சிறப்பான இடம் உண்டு என்பதை டாக்டர். மு. வரதராசனார் எடுத்துரைக்கின்றார்[4].

காப்புப்பருவம்

தொடக்கத்தில் சொற்றமிழ் தழைய வேண்டுகின்ற விநாயகர் துதிகாணப்படுகிறது. அதன்பின் காப்புப்பருவம் அமைந்துள்ளது. இதில் திருமால், சிவபெருமான், சித்திவிநாயகர், முத்துக்குமாரர், பிரமன், தேவேந்திரன், திருமகள், கலைமகள், துர்க்கை, சத்தமாதர்கள்.

1. இலக்கண விளக்கப்பாட்டியல் 46,47,49,50, சிதம்பரப்பாட்டியல் 28; வெண்பாப்பாட்டியல் 6,7,8,
2. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள்,இரண்டாவது மாநாடு, பக். 16 (அ.மு.ப. தலைமை உரை)
3. Translated from "A History of Tamil Literature" - Dr. T.P.M., P.146
4. தமிழ் இலக்கிய வரலாறு – டாக்டர் மு. வரதராசனார், பக். 199

முப்பத்துமூவர் ஆகியோரை மீனாட்சியம்மையைக் காக்குமாறு அடிகள் வேண்டுகிறார். குழந்தை பிறந்த ஏழாவது நாள் காப்பிடலென்னும் வழக்கம் ஒன்று உண்டு அதனையொட்டி இலக்கிய வழக்கில் அமைந்தது இக்காப்புப்பருவம்[1]. காத்தற் கடவுளாதலாலும், திருமகள் கேள்வன் ஆதலாலும், சிறப்புடைய செம்மலாதலாலும் முதலில் திருமாலைக் குறித்ததாகக் காப்புப்பருவம் தொடங்கும் இலக்கண மரபுக்கேற்ப[2]. இங்கும் அடிகள் அமைத்துள்ளனர்.

"பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங் கொண்டலே"

என்று[3] திருமாலை விளித்து, அம்மையைக் காக்க வேண்டுகிறார். 'கணிகண்ணன்' போகின்றான் என்ற திருமழிசையாழ்வார் பாடலைக் கேட்டுத் திருமாலும் அவர் பின் சென்றதாக வழங்கப்படும் நிகழ்ச்சியில் தமிழ்ப்புலவராகிய ஆழ்வார் கூற்றிற்கேற்பவும், அவருக்குக் காவலாக இருக்கும் வகையிலும் திருவெஃகாவில் உறையும் திருமால் பின் சென்றதாக அறியலாம். எனவே அடியவரையும் அவர் சொல்லையும் காத்த ஒரு நிகழ்ச்சியால் திருமாலை விளித்து அம்மையைக் காக்க வேண்டுதல் அடிகளின் சிறப்பாகக் கருதத்தகும். அடிகள் தோன்றிய ஊர்ப்பகுதி நிகழ்ச்சியாகவும் இதனைக் கருத இடமுண்டு. தாமிரவருணி ஆற்றிற்கு வடகரையிலும், தென் கரையிலும் நவதிருப்பதிகள் என்று வழங்கப்படும் வைணவத்தலங்களில் உள்ள ஒன்பது பெருமாள் கோவில்களில் இருந்தும் திருமால், ஆழ்வார் திருநகரியில் நிகழும் நம்மாழ்வார் விழாவிற்கு எழுந்தருளுவதும், நம்மாழ்வார் ஸ்ரீவைகுண்டத்திற்கு வரும்போது ஆழ்வார்திருநகரித் திருமாலும் பின்னால் எழுந்தருளுவதும் நடைமுறையிலிருப்பதாக அறியப்படுகிறது. இந்நிகழ்ச்சியை ஒட்டியும் அடிகள் மேற்குறித்தவாறு திருமாலைப் பாடிக் காக்க வேண்டினர் என்று கருதலாம்.

முன்னர்க்குறித்தவாறு பிற தெய்வங்களை வேண்டும் காப்புப்பாடல்கள் தொடர்ந்து இடம் பெறுகின்றன. அவற்றுள் துர்க்கை காப்பு இருத்தல் கருதத்தக்கது. தலத்து இறைவி மீனாட்சி பாட்டுடைத் தலைவி ஆதலால், மீனாட்சியைக் கூறாமல், அக்குறையை நிரப்பும் பொருட்டுத் துர்க்கைக்குக் காப்புக் கூறினர் போலும் என்று உ.வே.சா.கருதுகின்றனர்[4]. 'ஒன்பது பதினொன் றென்பதுகாப்பே'[5]

---

1. கு.பி.தி. (உ.வே.சா.) பக்.80
2. பன்னிருபாட்டியல், 185,186
3. 3
4. கு.பி.தி.(உ.வே.சா) பக்.80
5. பன்னிருபாட்டியல், 188

என்ற இலக்கணத்திற்கேற்ப இப்பருவத்தில் பதினொரு பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

செங்கீரைப் பருவம்

கீர் என்பது சொல்லைக்குறிப்பது என்று கொண்டு செங்கீரைப்பருவம் என்பது குழந்தை செவ்விய சொற்களைப் பேசும் பருவம் என்று ஒரு சாரார் கருதுகின்றனர்; தொடையமைதி இல்லாத ஒன்றைச் செந்தொடையென்பது போலச் சொல்லுக்குரிய அமைதி இல்லாத, பொருளற்ற, மழலைக்கும் முற்பட்ட குழந்தைஒலியைச் செங்கீரை என்றனர் போலும் என்று இக்கருத்தை வற்புறுத்துகின்றனர்[1]. பிறிதொரு சாரார், குழந்தை இருகைகளையும் கீழே ஊன்றி ஒரு காலை மடக்கி ஒரு காலை மேல் நிமிர்த்தித் தலையசைத்தாடும் பருவம் என்று விளக்குகின்றனர்; இதற்கேற்பச் செங்கீரைப் பருவப்பாடல்கள் சிலவற்றையும் இவர்களில் சிலர் எடுத்துக்காட்டியுள்ளனர்[2]. செவ்விய சொற்களைப் பேசும் பருவம் என்போர் தம் கருத்துக்கு ஏற்பச் செங்கீரைப்பருவப் பாட்டு எதையும் தெளிவான சான்றாக எடுத்துக் காட்டவில்லை. உ.வே.சா. மேலும் குறிப்பிடுவதாவது: செங்கீரையை ஒரு நிருத்தவிசேஷமென்று சொல்வர் பெரியவாச்சான்பிள்ளை. செங்கீரை யென்பதன் சொற்பொருள் முன்னேகூறியதாயினும் செங்கீரையாடுக வென்னும் வழக்கை நோக்கின் அதனைக் குழந்தைகள்பால் இயல்பினமைந்த ஆடல் விசேஷ மென்றே கொள்வது பொருந்தும்.[3] "ஐந்து மாதக் குழந்தை இவ்வாறு தலையசைந்தாடுவது இயல்பாகலாலும் இவ்வாறே இலக்கியஞ் செய்தாரனைவரும் கூறுதலாலும், இலக்கண விளக்கவுரையில், செங்கீரை – தலையெடுத்து முகமசைதல் எனக் கூறப்படலாலும்...... செங்கீரைத்தண்டு போல் அசைந்தாடலாற் செங்கீரை யாடலெனவாயிற்று என ஒருவர்

---

1. அ.மு.பரமசிவானந்தம், சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (2–ஆம் மாநாடு) பக். 20: கு. சுந்தரமூர்த்தி, மேற்படி பக்.79; கு.பி.தி. (உ.வே.சா) பக். 80; சே.ரா.சுப்பிரமணியக் கவிராயர், தமிழ்ப்பொழில், துணர் 3 பக். 233

2. Dr. T.P.M. "A History of Tamil Literature" P. 144

கா.சு.பிள்ளை, குமரகுருபரஅடிகள் வரலாறு பக். 18; பு.சி. புன்னைவனநாத முதலியார். மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ், உரை, பக்.5; ச. தண்டபாணிதேசிகர். சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (2–ஆம் மாநாடு) பக்.6; மீ. கந்தசாமிப்புலவர். மேற்படி பக் 45: கு. பரமசிவன், மேற்படி பக். 179: அ. கந்தசாமிப்பிள்ளை, தமிழ்ப்பொழில் துணர் 3 பக். 234-237

3. கு.பி.தி. (உ.வே.சா) பக்.80

எழுதியிருப்பது பொருத்தமாகக் காணலானும் இதுவே பொருந்துமாறறிக[1]. என்று அ. கந்தசாமிப்பிள்ளை தரும் விளக்கத்தில் செங்கீரையாடல் என்பதற்குச் சொற்பொருளாகச் செங்கீரைத்தண்டு போலசைந்தாடல் என்று காட்டியிருத்தல் குறிக்கத்தக்கதாகும். இதற்கேற்ப இப்பருவப்பாடல்கள் பலவும் காணப்படுதலால் இக்கருத்து நன்கு வலியுறுவதாகவே தோன்றுகிறது.

"ஆடுகின்றபொழுது சுற்றத்தார் செவ்விய சொற்களைச் சொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொள்வதாக இரண்டு கருத்துக்களையும் சேர்த்து அமைப்பாரும் உண்டு. குழந்தை தலையெடுத்து முகமசைத்தாடும் நிலையையே பெரிதும் கூறுவர்[2]. என்று கலைக்களஞ்சியம் காட்டுகிறது. எனவே முகமசைந்தாடுதலே பெரும்பான்மை பாடப்படும் என்பதும், அதுவே இப்பருவத்துக்குரிய முதன்மைப் பொருள் என்பதும், ஒரோவழிக் குதலைச் சொற்கூறுமாறு வேண்டுதல் வரும் என்பதும் அறியத்தகும்.

தந்தையழைத்ததும் ஓடித்தவழ்ந்து சென்று, தண்ணிய மழலைப் பசுங்குதலையமுதினை இனிய தாயின் வயிறு குளிர ஊட்டித் தந்தையின் பணைத்தோள் எருத்தத்தில் ஏறி, மேனி ஒளி ததும்ப, வாய் முறுவல் விரிய நின்றாடும் பசுந்தோகையைச் செங்கீரையாட அடிகள் வேண்டும் பாடலில்,[3] குதலை மொழி கூறுதல் அரிதாகக் குறிக்கப்பட்டுள்ளது. எனினும் தோளில் ஏறி நின்றாடுதலே இங்கு முதன்மையாக வலியுறுத்தப்படுகிறது எனலாம். அடிகளின் செங்கீரைப் பருவப் பாடல்கள் பெரும்பாலும் தலையசைத்தாடுதலை உணர்த்துவனவாகும். செங்கீரைத்தண்டு போல் தலையசைத்தாடுதலால் நிகழும் பிற அசைவுகளாகிய ஆட்டங்களையும் காட்டுகிறார் அடிகள். முகத்தில் நகைநிலவாட, முடிக் கொண்டை ஆட, வளைந்த புருவக் கொடியும் நுதலிலிட்ட சுட்டியும் அசைந்தாட, விழிகளாகிய மகரமீன்களும் அவை பொருகின்ற குழைகளாகிய மகரமீன்களும் ஆட, நூபுர அடிபெயர்தலால் கிண்கிணி ஆடத் துகிலொடு இடை ஆட, ஆலிலை போன்ற வயிற்றில் உலகையே சூலாகக் கொண்டிருத்தலால் உலகமுடன் அஃது ஆட, அம்மையைச் செங்கீரை ஆட வேண்டுகிறார். [4] மார்பு ஆடவும் புன்னகை ஆடவும், இரங்கிடும் மேகலையோடு இடுக்கிடையாடவும், அசைந்து ஒசிகின்ற பசுங்கொடி என அம்மையை ஆட வேண்டுகிறார். [5] இறைவன் பன்முறை உலகத்தை அழிப்பவும் அம்மை முனியாது வைகலும் உலகைப் படைப்பதை ஒரு சிற்றில் விளையாட்டாக மேற் கொண்டுள்ளவளைச் செங்கீரையாடுக[6] என்பதில், செயற்கரிய

1. தமிழ்ப்பொழில், துணர் 3, பக். 233
2. கலைக்களஞ்சியம், தொகுதி, 7 பக். 370
3. 15 4. 19
5. 20 6. 16

செயலை விளையாட்டாகக் கொண்டவளுக்குத் தலையசைத்தாடுதல் அருமையில்லை என்ற குறிப்பை உணரலாம்.

இவ்வகையில் அம்மையின் அருட்செயலும், அருஞ்செயலும் எடுத்துரைக்கப்பெற்று அவற்றையெல்லாம் தன் இயல்பான ஆடல்களாகக் கொண்டவள், முகமசைய, உடலசைய, அணிகலன்கள் அசைய, வாய் முறுவல் தோன்ற அசைந்து செங்கீரை ஆடுதல் எளிது என்று வேண்டும் முறையில் இப்பருவம் அமைந்துள்ளது. இளமயில் செங்கோ செங்கீரை[1], என்று முடியும் இப்பருவத்து இரண்டு இறுதிப்பாடல்களில் இளமயில் என்று அம்மையை விளிப்பது, ஆடும் இயல்புடைய மயிலைப் போன்ற அம்மை செங்கீரையாடுதலின் பொருத்தத்தை உணர்த்தும் எனலாம். அடிகள் அருளிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழிலும் செங்கீரையாடுதல் என்பது பெரும்பாலும் அசைந்தாடுதலைக் குறித்து நிற்றல் அப்பகுதியில் அறித்தகும்.

தாலப்பருவம்

"குழந்தைகளைத் துயிலச் செய்வார் தம் நாவை அசைத்தலும் பாட்டுப் பாடுதலும் வழக்கம்"[2]. தால் – நா. அதனை அசைத்து எழுப்பும் ஒலியையும் அதனைத் தொடர்ந்து வரும் இன்னிசையையும் கேட்டுக் குழந்தை களிக்கும் பருவம். தாலாட்டைக் கேட்டால் மனம் ஒன்றும்; கண்குவியும்; குழந்தை உறங்கத் தொடங்கும்[3]. "குழந்தையைத் தொட்டிலில் இட்டுப் பாட்டுப்பாடி உறங்க வைப்பது தாய்மார்க்கு இன்பமான செயலாகும்.[4]" இவ்வாறு தாலப்பருவம் பலராலும் விளக்கப்படுகிறது. குழந்தையைத் துயிலவைப்பதற்காக நாவசைத்துப் பாடும் பருவம் என்பது இவ்விளக்கங்களின் சுருக்கமாகும்.

"பெற்றோரும் உற்றோரும் தாலாட்டுவதைக் குழந்தையறியும் பருவம் தாலாட்டுப்பருவம்" என்பது மற்றொரு விளக்கம்[5]. இக்கருத்துக்கேற்பவே, தாலப்பருவம்: தாலாட்டைக் கவனிக்கும் பருவம், தாலாட்டு – ஒருவகை நாவசைப்பு. என்ற விளக்கமும்[6], உள்ளது எனலாம். இவற்றில் குழந்தை, உறங்காமல் நாவசைப்பதைக் கவனிக்கும் பருவம், அறியும் பருவம் என்ற கருத்து உணர்த்தப்படுகிறது.

---

1. 22,23 2. கு.பி.தி. (உ.வே.சா.) பக். 81
3. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (2-ஆம் மாநாடு) ச. தண்டபாணி தேசிகர் பக். 6
4. டாக்டர். மு.வ. தமிழ் இலக்கிய வரலாறு பக்.109
5. கா.சு. பிள்ளை குமரகுருபர அடிகள் வரலாறு, பக்கம் 18.
6. பு.சி. புன்னைவனநாத முதலியார், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் உரை பக்.5

இவ்விருவகை விளக்கத்திலும் தாலாட்டுதல் என்பது தாயர் முதலியோர் செயலாகவே அமைந்திருக்கிறது. ஆயின் தாலாட்டுதல்- நாவசைத்தல் குழந்தையின் செயலாக எண்ணத்தகும் என்பதை, கு. பரமசிவன் என்பார் விளக்குகிறார். தாய்மார் நாவசைத்துத் தாலாட்டுப் பாடுதலன்றோ தாலப்பருவம் என்பராலெனின் அது பொருளன்றென விடுக்க, ஏனைச் செங்கீரை முதலியன தாயர் செயலோ, அன்றிக் குழந்தை செயலோ? பிள்ளையைத் தொட்டிலில் இட்டுத் தாய்மார் தாலாட்டுதல் ஏழாந்திங்களில் தான் தொடங்குமோ? மேல் எடுத்துக்காட்டப் பெறுவது போன்ற பாடல்கள் குழந்தை நாவசைத்து ஒலியெழுப்புதலையே குறிப்பன அல்லவோ, பிள்ளை ஏழாந்திங்கள் தொடக்கம் முதல் குதலை பேசுதலை இந்நாள் உலக வழக்கிலும் காண்கின்றோமன்றோ?[1]

தாய்மார் நாவசைத்துப் பாடுதல் தாலாட்டு என்பதில் ஐயமில்லையாயினும் பிள்ளைத்தமிழ் நூல்களில் தாலப்பருவம் என்பது குழந்தையின் செயலை உணர்த்தும் வகையில் பொருள் கொள்ளுதல் தக்கதாகத் தோன்றுகிறது. தாயர் நாவசைத்துப் பாடினும், குழந்தை அவ்வாறே நாவசைத்துப் பழகவேண்டும் என்பதே குறிப்பாகக் கொள்ளத்தகும்; அஃதாவது நாவசைத்தல், தாயாரிடத்தும் குழந்தையிடத்தும் இருப்பதாகக் கொள்ளத்தகும். எனவே தாயின் நாவசைப்பினைக் கவனித்தறியும் குழந்தை அவ்வாறே தானும் நாவசைத்து ஒலி எழுப்பப் பழகும் பருவம் தாலப்பருவம் என்று கருத இடமுண்டு. எனவே உறங்க வைக்கும் நோக்கத்தை உடையதாக உரைத்தலினும் இது பொருந்திய பொருளுடையதாக உள்ளதை உணரலாம்.

தாலாட்டையேல் தாலாட்டையேல் என்னும் அடுக்கு ஓ உடன்கூடித் தாலேலோ என இணைந்தும் தாலோ என மரூஉ ஆகியும் வந்தது என்று கருதப்படுவதால் [2] குழந்தையை விளித்து வேண்டுவதாகக் கொள்ளும் பொருள் ஏற்றதாக அமைகிறது. தாலாட்டையேல் என்பது முன்னிலை ஏவல் வினை முற்றாய் 'நாவசைப்பாயாக' என்று பொருள்படும் எனலாம்.

---

1. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (2-ஆம் மாநாடு) பக். 180
2. பு.சி. புன்னைவன நாதமுதலியார், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் உரை பக். 5.

இவ்வகையில் குழந்தையை உறங்க வைக்கும் தாயின் தாலாட்டு வேறு; நாவசைத்துக் குதலை பேசும் குழந்தையின் தாலாட்டு வேறு என்பது தெளிவாகும். அடிகளின் தாலப்பருவப் பாடல்கள் குழந்தை நாவசைப்பதாகிய தாலாட்டினை வேண்டும் முறையில் அமைக்கப்பட்டிருக்கக் காண்கிறோம். தமிழ் மதுரைக்கரசே தாலோ தாலேலோ,[1] என்று வேண்டுதலால் தமிழ் மொழிச் சிறப்புடைய மதுரைத்தலைவி நாவசைத்தல் எளிது என்பது உணர்த்தப்படுகிறது. தானைக்கடலொடு பொலியுந் திருமகள், சங்கம் வளர்ந்திட நின்ற பொலன் கொடி,[2] என்பதில் ஒலிமிகுந்த படையும், மொழி நலமும் கொண்ட அம்மைக்கு நாவசைத்துப் பேசுதல் எளிது என்ற குறிப்பு அமைந்துள்ளது எனலாம். முதுசொற் புலவர் தெளிந்த பசுந்தமிழ் நூல் பாழ்போகாமே..... மலயத்துவசன் வளர்த்த பசுங்கிளி தாலோ தாலேலோ,[3] என்பதில் தமிழ் நூல்கள் பாழாகாதவகையில் நாவசைப்பாயாக என்று பொருள் முடிவு பொருந்தக் காண்கிறோம். பசுங்கிளி என்று அழைப்பதும், சொல் பேசும் தன்மையால் தாலப்பருவத்துக்கு ஏற்ற உவமையாகுபெயராய் உள்ளது. இவ்வாறு ஒலியும், மொழியும் இயல்பாகவுடைய அம்மை நாவசைத்துக் குதலை பேசுதல் வேண்டும் என்ற முறையிலேயே இப்பருவம் அமைந்துள்ளது.

சப்பாணிப்பருவம்

கைகள் இரண்டையும் சேர்த்துக் கொட்டுமாறு குழந்தையை வேண்டுதல் இப்பருவத்தில் இடம் பெறும். ஊழிக்காலத்தில் சிவன் நடனமாடியபோது உமைதாளவட்டங்கொண்டு கைப்பாணி கொட்டியதுபோல் இப்போதும் சப்பாணி கொட்ட வேண்டும் என்கிறார். அம்மையின் கைகள், திக்குவிசயம் செய்தபோது வில்லில் நாணைத்தடவிய வீரப்பெருமை உடையவை;[5] தோழியரோடு புழுதி விளையாட்டயர்ந்தவை; குயிற்குஞ்சு, அன்னப்பார்ப்பு இவற்றை வளர்த்த அருளுடையவை; கண்பொத்தி விளையாடியவை; முத்தும் கழங்குமாடிச் சிவந்தவை;[6] பெருவிரல் சுவைத்துப் பருகிடப் பைந்தேறல் ஊறுவன;[7] உக்கிர குமாரனைத் தொட்டிலில் இட்டு ஆட்டுவன;[8] போர்க்களத்தில் வில்லில் நெடுங்கணைகளை வைத்துத் தொடுப்பன.[9]

---

1. 24, 25, 26, 27, 28
2. 30
3. 32
4. 34
5. 35
6. 36,
7. 37
8. 38
9. 39

இவ்வாறு அம்மையின் கைகளின் சிறப்பும் இயல்பும் விளக்கப்படுகின்றன. சிவனைத் தன் கண்ணம்பால் வென்ற அம்மையைச் சப்பாணி கொட்ட வேண்டுதல்,[1] வெற்றி முழக்கமாகக் கைகொட்டும் பொருத்தம் உடையதெனலாம்.

முத்தப்பருவம்

குழந்தையை முத்தம் தருமாறு இப்பருவப் பாடல்களில் வேண்டப்படும். தீங்குழலில் மதுரங்கனிந்த பசுங்குதலை மழலை யரும்பச் சேதாம்பல் மணம் விரியும் செங்கனிவாய் என்று சிறப்பித்து முத்தம் வேண்டப்படுகிறது[2]. பிற இடங்களில் கிடைக்கும் பலவகை முத்தங்களைவிட அம்மையின் வாய் முத்தமே மேலானது என்று அடிகள் விளக்குகிறார். அம்மையின கூந்தலுக்கு உடைந்த கொண்டல், குதலைக்கிளிமென் மொழிக்குத் தோற்ற கரும்பு, பொலன் சீறடிக்குடைந்த செந்தாமரை, பசுங்கழுத்துக்குடைந்த சங்கும் கமுகும், அழகிய தொய்யில் எழுதப் பெற்ற தோளுக்குடைந்த மூங்கில், பணைமென்முலைக்குடைந்த இணைமா மருப்பு ஆகியவை தருகின்ற முத்துக்கள் அம்மையின் திருமுத்துக் கொவ்வாதவை[3]. குமரித்துறைவிளை முத்தும், கொற்கைத்துறைக் குவியல் முத்தும், பொருநை ஆற்றில் படு தெண்ணிலாமுத்தும், பொதியச் சாரலில் அருவி சொரியும் குளிர் முத்தும் அடிகளால் இகழ்ந்தொதுக்கப்படுகின்றன. இவற்றை எல்லாம் அம்மையே வைத்துக்கொண்டு அவடன் கனிவாய் முத்தத்தை அளிக்க வேண்டும் என்கிறார்[4]. முடிச் செழியர் கோமகளாகித்தன் ஆணைச்சக்கரம், ஞாயிற்றுச்சக்கரத்தின் தனிமையைக் கெடுத்து யாண்டும் நிலவும்படி செய்தவள் அம்மை[5]. இத்தகு பெருமைமிக்க அம்மை தரும் முத்தம் கிடைத்தற்கரிது என்ற குறிப்பு இங்குக்கொள்ளத்தகும். இவ்வாறு தகுதியாலும், பெருமையாலும் அம்மையின் வாய்முத்தம் சிறந்து விளங்குவதை இப்பருவப்பாடல்கள் உணர்த்தும்.

வருகைப்பருவம்

குழந்தையைத் தன்னிடம் நடந்து வருமாறு அழைக்கும் பாடல்கள் இப்பருவத்தில் இடம் பெறும். எனவே அம்மையின் கால் சிறப்பை அடிகள் இப்பருவத்தில் விளக்கிக் காட்டுகிறார். அரம்பையர்கள் அம்மை

---

1. 41 2. 45 3. 46 4. 48 5. 52

பாதங்களில் பணிவதால், அவர்கள் தலையணியாகிய இளம்பிறையும், சிவன் ஊடல் தீர்க்க வணங்குவதால் அவன் திருமுடியிலுள்ள இளம்பிறையும் அம்மையின் கால்களில் சுவடு உண்டாக்கியிருக்கின்றன; அச்சுவடு தோன்ற வரவேண்டும் என்று பாடுகிறார்; அவ்வாறு வரும்போது கேட்கும் நூபுர ஒலியைத் தன் இனத்தின் ஒலி என்று கருதியோ, அம்மையின் நடையைக் கற்பதற்காகவோ அன்னங்கள் பின் வரும்; வரும்பொழுது சிற்றிடைக்கு ஒல்கி மேகலை இரங்கும்[1]. அம்மை பாதத்தின் மென்மையும் சிறப்பும் இவ்வாறு காட்டப்படுகின்றன. வளம்மிக்க தமிழ்மதுரை காவலன் மகளை வருக[2] என்பது, நாடாளும் தலைமைத் தன்மை தோன்ற வருமாறு வேண்டுவதாகும். மழவிளங்களிறாகிய விநாயகரை ஈன்ற பிடி வருக[3] என்பது வருகைச் செயலுக்கேற்ற பொருளும் உவமையும் உடையதாகும்.

வயல்வளம் சான்ற மதுரையரசி வரும் பொழுது இயற்கை மணத்தால் கூந்தல் பொலிய, அம்மணம் திசைக்களிறுகளின் நாசியை மடுக்கும்; தளரும் சிற்றிடை மென்காற்றுக்கு ஒசிந்து குடிவாங்கும்; திருமகளுக்கும், கலைமகளுக்கும் முறுவல் நிலவெறிக்கும், மடமான் கன்றே வருக என்கிறார்[4]. நடந்துவரும் அழகும் சிறப்பும் இவ்வாறு காட்டப்படுகின்றன. அடிகளின் வருகைப்பருவப் பாடல்களுள் அம்மையைப் பெரிதும் கவர்ந்து, ஈர்த்து, வரச்செய்த, தொடுக்கும் கடவுள் என்று தொடங்கும் பாடல்[5] சிறப்புமிக்கதாகும். இதில் மறைநூற் பயனாகவும், தமிழ்ச் சுவையாகவும் அடியவர் உள்ளத்து விளக்காகவும் இலங்கும் அம்மையை, இளமென்பிடி என்றும், சிவன் உள்ளத்தில் எழுதிப்பார்த்திருக்கும் உயிரோவியம் என்றும், இளவஞ்சிக்கொடி என்றும் கூறி அழைக்கின்றார் அடிகள். அவள் வருகை இவ்வாறெல்லாம் உணரத்தரும் என்பது கருத்தாகும்.

அம்புலிப்பருவம்

நிலவைக் குழந்தையோடு விளையாட அழைக்கும் பருவம் இது. பாடற்கரிது என்ற பொருளில் பிள்ளைக்கவிக்கு அம்புலி புலியாம் என்பர். சாம,பேத,தான, தண்ட முறைகளால் அம்புலியை அழைத்துப்பாடுவர். அடிகள் இவ்வகையில் முதல் மூன்று பாடல்களைச்

---

1. 54
2. 56
3. 57
4. 61
5. 62

சாம முறையிலும், அடுத்த மூன்று பாடல்களைத் தான முறையிலும், 7,8-ஆம் பாடல்களைப் பேத முறையிலும், இறுதி இரு பாடல்களைத் தண்ட முறையிலும் பாடியுள்ளார்.

அமைதிவழியில், அம்மையோடு அம்புலி ஒத்திருப்பதை முதலில் கூறுகிறார். அம்மையின கலாபேதமாகவே நிலவு உள்ளது என்று வேதங்கள் கூறுகின்றன; கலாநிதியாக விளங்கும் அம்மைபோல் நிலவும் விளங்குகிறது; அம்மையின் தந்தை மரபாகிய பாண்டிய மரபுக்கு நிலவு முதல்வனாகக் கூறப்படுகிறது; சிவன் சடையில் கண்ணியாக நிலவைக் கொண்டுள்ளான்; அம்மையின் தோழியாகிய திருமகள் திருப்பாற்கடலில் தோன்றியபோது நிலவும் கூடப்பிறந்தது.[1] நிலவு அம்மையோடு ஒப்புமையும் தொடர்பும் கொண்டிருப்பதைச் சுட்டி விளையாட அழைக்கின்றார். தேவர்கள் சுவைத்துமிழ்ந்த கோதாகவும், இருகோளின் உச்சிட்டமாகவும், களங்கம் பொதிந்த கயரோகியாகவும், விநாயகசதுர்த்தியன்று கண்கொண்டு பார்க்கத்தகாததாகவும், விண்மீன்களோடு நிலையின்றி ஓடித்திரிவதாகவும் உள்ள நிலவுக்கு மதுரையே புகலிடம் என்றும், விளையாட வந்தால் இக்குறைகள் எல்லாம் நீங்கும் என்றும் அடிகள் அழைக்கின்றார்.[2] நிலவு அம்மையின் நுதற் செவ்வியையும் ஒண்முகத்தொழுகு திருவழகையும் கவர்ந்து, அம்மையின் மாற்றவளோடு கேள்வர் மௌலியில் தங்கியது.[3] இவ்வாறு அம்மைக்கு வெகுளி உண்டாக்கும் செயல்களை உடைய நிலவை, அக்குற்றங்களை எல்லாம் மறந்து, அம்மை அருள் கொண்டு விளையாட அழைப்பதாகக் கூறப்படுகிறது.

நிலவு வானில் இருக்கும் நிலையில் பாம்பாகிய பகைத்துன்பம்; ஞாயிறோனோடு சேர்ந்தால் ஒளி மழுங்கும் துன்பம்; சிவன் சடையிலிருந்தால் பாம்பச்சத்தோடு, ஊடற்காலத்து அம்மையால் மிதிக்கப்படும் துன்பம்; இத்துன்பங்கள் இன்றி அண்ட பகிரண்டமும் அகண்டமும் பெறலாம், மீனாட்சியை அடைந்தால் என்று அடிகள் அழைக்கின்றார்[4]. துன்ப நீக்கத்தோடு பெறும் தானமாகிய நன்மை இவ்வகையில் குறிக்கப்படுகிறது. அம்மையின் புகழ்நெடுநிலாவில் எள்ளளவு மொண்டு கொண்டு வெண்ணிலவு பொழிகிறது; அம்மையின் விழிக்கருணை வெள்ளத்தில் திளைத்துத் தண்ணளி விளைக்கும் தகுதி பெற்றது; அம்மையின் சத்தியாலேயே பயிர்களை வளர்க்கிறது;

---

1. 64
2. 65
3. 66
4. 67

வேறொரு உரிமை இல்லை என்று குறிப்பிட்டு நிலவை அழைக்கக் காண்கிறோம்[1]. விளையாட வந்தால் அம்மையின் அருள் மேலும் கிடைக்கும் என்பது கருத்தாகும். மதுரைக்கு வந்தால் குருவைப் பிழைத்த பாவமும், மாமன் இட்ட சாபமும் நீங்கப் பெறலாம்; நரையும், திரையும், முதிர்கூனும் மாற்றிடப்பெற்று நல்ல இளமை பெறலாம்[1]. என்றும் நிலவு பெறும் நன்மைகள் கூறப்பட்டு அம்புலி அழைக்கப்படும் அழகைக் காண்கிறோம்.

நிலவு சிவன் முடியிலிருந்து கொண்டு, ஊடற்காலத்தில் சிவன் அம்மையைப் பணியும் பொழுது அம்மையின் சீறடிகளைக் கன்றிச் சிவக்கும்படி செய்வதோடு காமனுடைய குடையாகவும் உள்ளது.[2] இவ்வாறு சினங்கொள்வதற்கேதுவான தாழ்ந்த இயல்புகளை நிலவு பெற்றுள்ளது. மேலும், தன் பழைய மரபில் வந்துள்ள அம்மையோடு மகிழ்ந்து அளவளாவி வாழாமல், அமுதையும் கலையையும் இழந்து, மண்கலத்தில் இடும் புதுக்கூழுக்கு இரவு பூண்டு களங்கம் பெற்று உள்ளது; ஞாயிறோன் உண்டொழித்த எச்சிலை இரவில் அள்ளி உண்டு ஓடுகின்றது.[3] இவ்வாறு அம்மையினின்று பெரிதும் வேறுபட்டிருக்கும் தாழ்வு நிலையை உணர்த்தி விளையாட வருதல் வேண்டும் என்கிறார் அடிகள்.

இறுதி முயற்சியாக, வராவிடில் விளையும் தீமைகளை உணர்த்துகிறார். வருக என்றதும் வராததால் அம்மை சினம் கொண்டனள்; ஒருவாறு யாம்தப்புவித்தோம்; அம்மை வெகுண்டால் உனக்கு இனி ஒரு பிழைப்பு இல்லை[4] என்று அழைக்கின்றார். தண்டனையிலிருந்து நிலவை அடிகளே காப்பாற்றியிருப்பதாகக் கூறும் நிலையில் அடிகளின் சாதுரியப் பேச்சும் புலப்படுகின்றது. அம்மையின் சீறடிகள் நிலவிலும் விளங்குவன ஆதலால் நிலவு வஞ்சகமாகச் சிவன் முடியில் நதியோடு விளங்குகிறது; அம்மை மகிழுமாறு விளையாடவரின் இதுபோல் ஒரு நற்றவப்பேறு பிறிதொன்றில்லை [5] என்பதில், விளையாடவராவிடில் பெருங்கேடு உண்டாகும் என்ற குறிப்பு இருத்தல் கொள்ளத்தகும்.

இவ்வாறு அடிகளின் அம்புலிப்பருவப்பாடல்கள் நால்வகை முறைகளில் பொருத்தமுற அமைந்து சிலேடைநயமும், கற்பனை நலமும் செறிந்திருத்தல் அறிகின்றோம்.

---

1. 69
2. 70
3. 71
4. 72
5. 73

அம்மானைப்பருவம்

அம்மானை என்பது மரத்தால் பந்து வடிவாகக் கடையப்பட்டகாய்; மகளிர் பலர் கூடியிருந்து 3,5,7, காய்களை மேலெறிந்து பிடித்து விளையாடுவது வழக்கம் என்பர் [1], அடிகள், மீனாட்சி அம்மானை ஆடுதலை அழகுறக்கற்பனை செய்து பாடுகின்றார். அம்மானைக் காய்களை மேலெறிந்து ஆடுவது, விநாயகருக்கு வயிறு நிறையுமாறு கவளம் திரட்டிக் கொடுப்பது போலவும், அமுதுக்கு விரும்பும் தேவர் துயர்தீரத் தனித்தனியாக அமுதகலசம் ஈவது போலவும், முத்திழைத்த எறிபந்தின் வரிசைபோலவும், வெள்ளையன்னத்திரள் போலவும் காட்சியளிக்கிறது [2]. அம்மானை ஆடும்போது அம்மையின் கண்களும் உடன் சென்று வருகின்றன; அது சோற்றுருண்டையிற் பாயும் வண்டுகள் போலவும், மதியிற் பாயும் மான் போலவும் உள்ளது.[3] அம்மையின் கையால் அம்மானை சிவப்பு நிறமாகவும், கண்பார்வையால் கறுப்பு நிறமாகவும், வெண்ணகையால் வெள்ளிய நிலவு நிறமாகவும் தோன்றுகிறது. [4] சேடியரினும் விரைவாக அம்மை அம்மானை வீசுகிறாள்; அவை நிரை நிரையாய்க் ககனம் மேல் விளங்குதல் அகிலாண்டமும் நிரைத்து வைத்தாற்போல் உள்ளது. [5] திருமகளாகிய தோழி அம்மையோடு பந்தயமிட்டு அம்மானை ஆடும்போது அம்மானையைக் காணாது தேடி ஓடியாடித்திரியவும், அம்மை பெயராதிருந்து விளையாடுகிறாள்; சிவன் இதுகண்டு தலையாட்டிக் களிக்கின்றான்.[6]

இம்முறையில் அம்மானைக் காய்களின் சிறப்பும், அம்மையின் ஆடலால் நிகழும் நிற மாற்றமும், ஏற்ற உவமைகளும், கற்பனைகளும் இப்பருபத்தில் பொலியக் காண்கிறோம்.

நீராடற் பருவம்

பாட்டுடைத்தலைவியை நீராடும்படி வேண்டுவது இப்பருவம். அடிகள்இப்பருவத்தில் வையை ஆற்றின் வளத்தையும், அம்மை நீராடும் சிறப்பையும் விளக்கிப் பாடியுள்ளார். அம்மையின் சங்கு வளையலும், கயற்கண்ணும், கூந்தலும் முறையே நீர்ச்சங்கு, வரிக்கயல்மீன், கொடிப்பாசிக்கொத்து ஆகியவற்றோடு கேளிர்கள் தழுவிக் கொண்டாற்போல் காட்சிதருகின்றன.[7] அம்மை வைகையில்

---

1. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (2-ஆம் மாநாடு). ச. தண்டபாணி தேசிகர், பக்.9 2. 74 3. 75
4. 76 5. 78 6. 79 7. 84

குடைந்தாடுவது ஆனந்த மாக்கடலாகிய சிவனோடு திளைத்தாடுதல் போல் உள்ளது.[1] அம்மையின் மரகத ஒளியால் நீர்த்துறையிலுள்ள பவளக்கொடியும், முத்துக்களும், அன்னங்களும் முறையே பச்சைக்கொடியாகவும், மரகதங்களாகவும், மயில்களாகவும் தோன்றுகின்றன; எல்லாம் சத்திமயம் என்ற மறைப் பொருளை இக்காட்சி வெளியிடுவது போலுள்ளது.[2] அம்மை தோழியர் மீது குங்குமநீரைச் சிவிறியால் வீசுகிறாள்; நீர்த்துளி எங்கும் பரந்து சிவனது ஆடையாகிய திசை முழுதும் நனைத்துச் சிவப்பாக்குகிறது; அம்மை சிவனோடு மஞ்சள் விளையாடல்போல் இது விளங்குகிறது.[3] நீராடுங்கால் கலைமகளாகிய தோழி நீருள் மூழ்கி ஒளிக்கும்போது, அம்மை அன்னத்தைக் கலைமகள் என்று பிடிக்கின்றாள்; தனது சிலம்பின் ஓசையையும் இளநடையையும் கவர்ந்ததற்காகப் பின் தொடர்ந்து பிடித்தது போல் இஃது உள்ளது.[4] வையையில் நீராடச்செல்லுங்கால், சிவன் மண்சுமந்த இடம் இஃதென்று கலைமகள் கூறினாள்; உருகிய அம்மை, கண்களில் ஆனந்த வெள்ளம் பொழிந்து நின்றாள்; கண்ணீர் வெள்ளத்தால் மீண்டும் வைகை பெருகுமாறு செய்து சிவனுக்கு வேலை உண்டாக்குதல் தகுமா?[5] என்று நீராட வேண்டும் அடிகள் கூற்றில், அழகிய கற்பனை அமைந்துள்ளது. அம்மையின் குங்குமக்குழம்பு படிந்து ஆற்றங்கரையில் வண்டலாதலால் சிவனுக்கு மண்சுமக்கும் வேலை அமைந்து, ஒருத்தி பிட்டிடவும், அடித்தொருவன் வேலை கொளவும் நேரும் என்றும் சுவைபடக் காட்டுகிறார் அடிகள்.[6] நீராடலால் அம்மை அணிந்திருந்த விரைத்தொடை, சிந்துரதிலகம், மார்பில் எழுதிய குங்குமம் ஆகியன வெள்ளத்தால் கொள்ளை கொளப்பெற்று அம்மை இயற்கை வடிவழகோடு விளங்குகிறாள்; அஃது ஐயன் விழிக்கு விருந்து செய்கிறது[7].

வையை வளம் இடைமிடைந்து வருகிறது, பொருநைத் துறையொடு குமரித்துறையவள் புதுநீராடுகவே.[8] என்று கூறும் முறையில் அம்மை பாண்டிநாட்டரசி என்பதற்கேற்ப இம்மூன்று ஆற்றுக்கும் உரிமையுடையவள் என்பது காட்டப்படுகிறது. ஆற்றால் நாட்டின் எல்லையை உணர்த்தும் மரபை இங்கு அடிகள் மேற்கொண்டுள்ளமை அறியத்தகும்.

---

1. 85
2. 86
3. 87
4. 88
5. 90
6. 91
7. 92
8. 92,93

ஊசற்பருவம்

அம்மையை ஊசலாடும்படியாக வேண்டுவது இப்பருவம். ஊசல் என்பது, வழக்கில் ஊஞ்சல் என மூக்கொலி இடையில் பெற்று ஒலிக்கப் பெறுகிறது. அடியவர்களின் மனக்கமலமாகிய பலகையில் வீற்றிருந்து ஆடும் அம்மையைப் பவளக்கால் நட்டு வயிரவிட்டமமைத்து, முத்துவடம் வீக்கி அமைத்த மாணிக்கப்பலகையில் ஊசல் ஆடியருள வேண்டுகிறார் அடிகள்.[1] அம்மை முத்தாலாகிய ஊசலில் நித்திலம்பூண்டு ஆடுவது, வெண்டாமரைப் பொலியும் கலைமகளும் அம்மை வடிவமே என்பதை உணர்த்தும்; நிலவு மண்டலத்தில் அமுதமயமாய் அம்மை வீற்றிருப்பதையும் உணர்த்தும்[2], பொன்னூசல் ஆடும்போது அடிச்சுவடுபட்டு, அசோகு மலர்களை உதிர்க்கிறது; மன்மதன், சிவன் கரந்து நிற்பதை அறிந்து நமக்கு இதுவே தக்க இடம் என்று மலரம்புகளை இடைவிடாது சொரிவது போன்றுள்ளது இக்காட்சி.[3] அம்மை பொனனூசல் ஆட, ஐயனது அழகிய பார்வையால் பொன்னூசல் உருகிற்று; அம்மையின் கடைக்கண் நோக்கால் ஐயன் மனமும் உருகிற்று; எனவே உருகியாடுகின்ற ஒன்றே ஊசலாகத் தெரிவதால், கண்ணோக்கால் உருகி அசைந்தாடும் சிவனது உள்ளமே ஊசலாகும் என்ற உண்மை விளங்குகிறது.[4] இக்காட்சி அம்மையின் ஊசலுக்கும், சிவனது உள்ளத்துக்கும் உள்ள ஒப்புமையை உணர்த்துகிறது.

அம்மை ஊசலாடுதலால் சிவன்முடி அசைகிறது; முடியிலுள்ள அரவின் படத்தொகுதி அசைகிறது; எனவே சராசரமும் அசைகின்றன. இவ்வாறு அம்மை ஆடுதலால் அண்டமும் அகண்ட பகிரண்டமும் அசைந்தாடுவதுபோல் உள்ளது.[5] அம்மையின் அடி ஊசலை உதைத்தாடுமபோது திருமகள் அவ்வடியில் பதிந்துள்ள பிறையின் சுவட்டைக் கண்டு கலைமகளிடம் இதுசங்கரேகை கொல் என்று அசதியாடுகிறாள்; அதைக்கேட்ட அம்மை நாணத்தால் தலை கவிழ்கிறாள்.[6] இவ்வாறு அம்மையின் அடிபற்றியதாகவும் ஊசற்பருவப்பாடல் அமைதல் குறிக்கத்தகும்.

அவ்வப் பருவத்துக்கு ஏற்ற செய்திகளை அடிகள் பொருந்த உரைத்திருப்பது, அவர் தம் சிறப்பையும், நூற்சிறப்பையும் தெளிவாக்கி நிற்கிறது என்பதில் ஐயமில்லை.

---

1. 94
2. 95
3. 96
4. 97
5. 98
6. 101

3. மதுரைக்கலம்பகம்

மதுரை இறைவன் மீது இந்நூல் பாடப்பட்டுள்ளது. சிவன் பிறவாயாக்கைப் பெரியோனாய் முழுமுதல் தெய்வமாகப் போற்றப்பட்டமையின் அவனைப் பிள்ளையெனக் கொண்டு பிள்ளைத்தமிழ்பாடும் மரபு இல்லை.[1] எனவே கலம்பகம் என்னும் சிற்றிலக்கிய வகையில் அடிகள் சிவனைப் பாடியுள்ளார் எனலாம். புயவகுப்பு, தவம், வண்டு விடுதூது, அம்மானை, பாண், மதங்கியார், கைக்கிளை, சிந்து, ஊசல், களி, மடக்கு, ஊர், மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், மேகவிடுதூது என்னும் பதினெட்டு உறுப்புக்களை அமைத்துப் பாடுவது கலம்பகம் ஆகும்.[2] பிற்காலத்தில் பாட்டியலிற் கூறப்படாத மடல், கொற்றியார், பிச்சியார், வலைச்சியார், இடைச்சியார், கீரையார், யோகினியார், திருவடிவகுப்பு முதலிய புது உறுப்புகளில் சிலவும் பலவும் கலம்பகங்களில் இடம் பெற்றுள்ளன.[3] முதலில் ஒரு மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவும், வெண்பாவும், கலித்துறையும் வந்து பின்னர் ஆசிரியவிருத்தம், ஆசிரியம், வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம், வெண்டுறை, வெண்பா, மருட்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் முதலிய பாவும் பாவினமும் கலந்துவரப் பாடப்படுவது கலம்பகம்.[4] தேவர்க்கு நூறும், முனிவர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சர்க்கு எழுபதும், வணிகர்க்கு ஐம்பதும், ஏனையோர்க்கு முப்பதுமாகப் பாடுதல் வேண்டும்.[5] அந்தாதித் தொடையாய் அமைக்க வேண்டும்.[6]

கலம்பகம் என்பதைப்பற்றி லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் தரும் விளக்கம் ஈண்டு நினைவுகூரத்தகும்; "கலம்பகம்" என்பது, பலவகை உறுப்பும், பொருளும், பாட்டும் கலந்து பாடப்பெறுவது. "பல்பூமிடைந்து படலைக்கண்ணி" (வரி 174) என்னும் பெரும் பாணாற்றுப்படைத் தொடருக்குப், "பல பூக்கள் நெருங்கிய கலம்பகமாகிய மாலை", என்று நச்சினார்க்கினியர் உரை செய்திருக்கின்றனர். தொண்டரடிப்பொடியாழ்வார் இயற்றிய திருப்பள்ளியெழுச்சியில் வரும், களிவண்டுமிழற்றிய கலம்பகம் புனைந்த, அலங்கலந்தொடையல்,

---

1. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (2-ஆம் மாநாடு) பக்.11
2. வச்சணந்திமாலை, 10
3. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (முதல் மாநாடு) பக். 18; மதுரைக் கலம்பகம், பு.சி. புன்னைவனநாதமுதலியார் உரை, பக் 10
4. வச்சணந்திமாலை , 11 5. மேற்படி 12 6. பன்னிருபாட்டியல், 213

(செய்யுள் 5) என்னும் தொடர்மொழி, பலவகை மலர்களால் தொடுக்கப்பட்டமாலை என்னும் பொருள் தருகின்றது. இதனை இக்காலத்தார் கதம்பம் என்பர். ஆகவே, பல்வேறு வகைப்பட்ட நிறமும், வடிவும், மணமும் உடைய மலர்களால் தொடுக்கப்பட்ட பூமாலை கலம்பகம் என்னும் பெயர் பெற்றாற்போல், பலவகையான ஓசை நயமுடைய பாக்களும், இனங்களும், உறுப்புக்களும் பயின்று, அகமும், புறமும், அகப்புறமுமாகிய திணைகள் விரவி, உவகை, பெருமிதம் முதலிய சுவைகளையுடைத்தாய் அவை அமையப்பாடப்படும் பாமாலை, கலம்பகம் என்னும் பெயர்பெற்றது என்று கொள்ளலாம். இரட்டை மணிமாலை, மும்மணி மாலை, நான்மணிமாலை, என்னும் பெயர் பெறும் வேறு சிற்றிலக்கியங்கள், மாலை என்னும் பெயர் பெற்றிருந்தலும் இதனை வலியுறுத்தும். இவ்வாறன்றிக் கலம் என்பது பன்னிரண்டையும் பகம் என்பது அதனிற் பாதியையும் குறிப்பாய் உணர்த்துமெனக் கொண்டு, பதினெட்டு உறுப்புக்களையுடையது கலம்பகம் என்று கூறுதல் பொருத்தமாகத் தோன்றவில்லை.[1]

அடிகள் பாடியுள்ள மதுரைக்கலம்பகம் விநாயகர் காப்பு உட்பட 103 பாடல்கள் கொண்டுள்ளது; மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா 1; வெண்பா 13; கலித்துறை 22; மருட்பா 1; ஆசிரியப்பா 3; கலிப்பா 10; ஆசிரிய விருத்தம் 45; கலிவிருத்தம் 3; கலித்தாழிசை2; வஞ்சிவிருத்தம் 2; வஞ்சித்துறை 1; என்றவாறு காணப்படுகின்றன; இவை பலவாறு விரவி வந்துள்ளன; அடிகள் 27 வகையான உறுப்புக்களமையவும், பொதுவான அகப்பொருள், பறப்பொருள் மரபிலும் பாடியிருக்கிறார்[2]. அவற்றை முறையே அறியலாம்.

1. புயவகுப்பு

கலம்பகத் தலைவனாகிய சிவனுடைய தோள்களின் சிறப்பு ஒரு பாடலில் வருணிக்கப்படுகிறது. தேவ மகளிர் கண்களாகிய குவளை மலர்களில் புகுந்தும், மேருமலையை வளைத்தும், உலகைச் சுமந்தும், பேய்மகளிர் ஆடும் துணங்கைக்கு இணங்கியும், களிற்றுரி சுற்றியும், புலியாடை அணிந்தும், சரபாவதாரத்தில் நரசிங்கத்தின் வீரம் ஒடுக்கியும், சம்பந்தர் தமிழருமை அறிந்து தாளம் வழங்கியும், பாணபத்திரன்

---

1. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (முதல் மாநாடு) பக். 17-18
2. விரிவு பிற்சேர்க்கை 2-இல் தரப்பட்டுள்ளது.

பொருட்டு விறகு சுமந்து திரிந்தும், வெண்பிட்டு உகந்தும், மண் சுமந்தும், பிரம்படி பட்டுக்குலைந்தும், பசுந்தமிழ்மாலை புனைந்தும், அம்மை வளைத்தழும்பு அழுந்தக் குழைந்தும், மதலையின் மழலை ஊறல் கசிந்தும், மீனாட்சி அம்மையை மருவியும் பொலியும் தடம் பொற்புயங்களின் சிறப்பு வருணிக்கப்படுகிறது.[1]

2. தவம்

அரிய தவத்தை மேற்கொண்டு துன்புறாமல், எளிதாக இறைவனை நினைக்குமாறு வற்புறுத்தும் முறையில் இந்த உறுப்பு அமையும், அடிகள் இவ்வகையில் பாடவில்லை எனினும் தவம் பற்றிய கருத்துக்கள் இரண்டு இடங்களில் காணப்படுகின்றன. மன்மதன் வன்மையற்ற கரும்பு வில்லையும மலரம்பையும் கொண்டு ஒரு தலைவியின் உயிர் உளதோ இலதோ என்னும்படி செய்தமையின் அவனது ஆண்மையும், அதனைப்பெற அவன் செய்த தவமும் சிறந்தன என்று கூறப்படுகிறது. மதுரேசர் தந்த வரமே இவ்வலிமையை அவனுக்கு அளித்தது; வேறு தவம் என்ன பயனுடைத்து? என்று கூறக் காண்கிறோம்.[2] இறைவனது மாலையைப் பெறாத தலைவி ஒருத்தி, சண்டேசர் தவப்பயன் பெரிது என்கிறாள், அவர் மாலை பெறும் தகுதி நோக்கி[3].இவ்வாறன்றித் தனியாக இவ்வுறுப்புப் பாடப்படவில்லை.

3. வண்டுவிடு தூது

இவ்வகையில் ஒரு பாடல் உள்ளது. இறைவன் தன்னிடம் காதல் கொண்ட தலைவியைப் பாவை போலஇருக்கச் செய்துள்ளதாகவும், இவ்வாறு தலைவி நிலையுணர்ந்து அருளாமல் எளியாரை வருத்துவதால் இவர்க்கு என்ன பயன் விளையும்? என்றும் செவிலி வண்டுகளிடம் கூறும் முறையில் இப்பாடல் காணப்படுகிறது.[4]

4. அம்மானை

அம்மானை ஆடும் மகளிர் பாட்டுடைத்தலைவன் பண்பை உரைப்பதாக இஃது அமைவது. சிவபெருமான், சித்தன் என்பானுடைய அங்கத்தை வெட்டி வென்றனர்; ஆயின் அவர் உடம்பு இருகூறாக இருப்பது ஏன்? இருகூறாய் இருந்தாலும் காயமில்லை என்று முறையே மூன்று பெண்களின் கூற்றும், வினாவும், விடையுமாகச் சிலேடைப்

---

1. 115
2. 187
3. 118
4. 132

பொருளில் அமைந்துள்ளமை அறிகின்றோம்.[1] இருகூறு என்பது இரண்டு துண்டம் என்றும், இறைவன் கூறும் அம்மைகூறும் என்றும் பொருள் தரும்; காயம் என்பது புண் என்றும், உருவத்திருமேனி என்றும் பொருள் தரும். இவ்வொரு பாடல் தனிச்சிறப்புடையதாக எடுத்தாளப்படுவதாகும்.

5. பாண்

தலைவனால் ஊடல் தீர்க்கப் பெறும் பாணனிடம் தலைவி வெகுண்டு கூறும் முறையில் இவ்வுறுப்புப் பாடப் பெற்றுள்ளது. தலைவன் வீட்டில் உள்ளானா என்று தேடிவந்த பாணனிடம், பரத்தையர் இல்லத்தில் தலைவனை வைத்து இங்கே தேடுகின்றாய்; பொன்னை ஆற்றிலிட்டுக் குளத்தில் தேட முதுகுன்றையர் மதுரையோ நீ வாழுமிடம் என்கிறாள் தலைவி.[2] அகப்பொருள் முறையில் இறைவனைப்பற்றிய குறிப்பும் அமைந்திருக்கக் காணகிறோம்.

6. மதங்கியார்

இவ்வாறு ஒரு பாடல் உள்ளது. இருகைகளிலும் வாளேந்தி வீசிப் பாடியாடும் ஒரு மதங்கச்சாதி மங்கையை நோக்கி ஓரிளைஞன் காமுற்றுக் கூறும் கூற்றாக அமைவது. மதங்கியின் எறிவேல் போன்ற இருகண்களே உயிர்சோர உண்டு உலவுகின்ற நிலையில் இரண்டு வாள்களையும் வீச வேண்டுமோ?; என் நெஞ்சும் அலமரவே சுழன்றாடும் வேகம் மிகநன்று என்று இளைஞன் கூறும் முறையில் மதங்கியின் நலம் காட்டப்படுகிறது[3]. மதுரேசர் முன் மதங்கியின் விளையாடல் நிகழ்வதாக அமைத்துள்ளார் அடிகள்.

7. கைக்கிளை

இஃது ஒருதலைக்காமம்; தலைவன், தலைவிபால் அவளது இசைவு தெரியாத நிலையில் காதல் கொள்வது; அகத்திணைகளுள் ஒன்றாகத் தொல்காப்பியத்தில் விளக்கப்படுவது.[4] இவ்வகையில் உள்ள ஒரு பாடலில், தலைவியின் கண் கருங்கடல்போல்வது என்று கூறித் தன்நெஞ்சை அஞ்சாதிருக்கச் சொல்கிறான் தலைவன்[5]. சொக்கருக்கு அடிமை செய்யாதவரே அஞ்சுவர்; அவர்களைப் போலத் தலைவன் அஞ்ச வேண்டுவதில்லை. ஏனெனில் தலைவிகண்

---

1. 117
2. 178
3. 119
4. தொல், பொருள், அகத்திணையியல். 50
5. 148

கடல்போல்வதாதலால் கடலில் அமுதும் நஞ்சும் தோன்றியது போல அவள் கண்களிலும் அருட்பார்வையும் மருட்பார்வையும் தோன்றின என்று தலைவனால் நினைக்கப்படுகிறது; தன் காதல் கைகூடும் என்று கருத இடமுண்டாகிறது.

பொதுவாக அகப்பொருள் முறையில் அமையும் கலம்பகப் பாடல்களில் சில, தலைவி இறைவன் மீது காதல் கொண்டு விளங்குதலைக் கூறுகின்றன. இறைவனுடைய அன்பு கிடைக்கப்பெறாத நிலையில் அவை கைக்கிளைத்தன்மை உடையவையாகவே கருதத்தகும். இறைவன் தோளைத் தராவிடில் மன்மதன் எய்யும் மலரம்பே எமனாகும் என்று கூறுவதும்[1], கங்கைக்குச் சடையும், உமைக்குப் பாதி உடம்பும் அளித்துத் தலைவிக்கு மட்டும் தோளினைத் தராமல் இருப்பது நடுவுநிலையாகாதே என்பதும்[2], மாலைதராதிருப்பின் பெரும்பழி உண்டாக்கும் என்பதும்[3], இவ்வகையில் கொள்ளத்தகும்.

8. சித்து

இரசவாதி ஒருவன் தனது வியப்புக்குரிய திறமையைக் கூறுவதாக இது பாடப்படும். இயல்பாக இருப்பதைத் தான் ஆக்கியதாகச் சிலேடைப் பொருள் அமைய இப்பாடலில் கூறுதல் வழக்கம். இறைவன் கல்லானைக்குக் கரும்பு கொடுத்தான்; ஆயின் சிவனது கையில் செங்கல்லைப் பசும்பொன்னாக்கிய சித்தர்யாம் எனப்படுகிறது. செம்மையாகிய மலையைப் பசும்பொன்னாக ஆக்கினேம் என்பது உண்மைப் பொருள். வறிய பாழான வீட்டில் இருந்து சிவனுக்கு எருத்துக் கொட்டிலும் பொன் ஏய்ந்திடச் செய்த சித்தர் எனப்படுகிறது. சிவன் சிதாகாயமாக உள்ளமையும், திருமால் மனைவியாகிய திருமகள் பொன்னிறம் உடையவள் என்பதும் இயல்பான பொருள்கள்.[4] இவ்வாறு சொல்திறம் விளங்கச் சித்து உறுப்பு ஒரு பாடலில் இடம் பெற்றுள்ளது. 'அப்பா' என்று விளித்துக் கூறுவது இப்பாடலில் காணப்படுகிறது.

9. ஊசல்

மகளிர் ஊசலாடும் முறையில் இப்பாடல் அமையும். மகளிர் மதுரை இறைவன் சீர்பாடி, மென்மருங்குல் ஒசியப் பொன்னூசல் ஆடுமாறு அடிகள் ஒரு பாடல் அமைத்துள்ளார்.[5]

---

1. 131
2. 155
3. 146,158
4. 161
5. 127

10. களி

கட்குடியர்கள் கள்ளைச் சிறப்பித்துக் கூறுவதாக அமைவது இது. கள்தரும் பனைமரத்தை ஆசிரியருக்கு ஒப்பிட்டுக் கவி கூறுவதாக ஒரு பாடல் உள்ளது. சான்றாண்மை பயிலுதல், பலமளித்தல், கலை எழுதிய ஏடுகளைத்தாங்குதல், வீடளித்தல், மந்திரம் இவைகள் ஆசிரியரிடத்தும் உள்ளன ஆதலால் பனையை அவருக்கு ஒப்பிடலாம் என்கிறான் களி. மதுரை என்பது கள்ளையும் குறிக்கும் ஆதலால் மதுரை இறைவனை அமரர் தலைவனாகக் கொண்டு ஆடும் களி என்று தன்னை அறிமுகம் செய்து கொள்கிறான்.[1] சாற்றத்தகுமப்பா என்றாற்போல் விளித்துக்கூறல் இப்பாடல் இயல்பாக உள்ளது.

11. மடக்கு

ஒரே சொல் அல்லது தொடர் மீண்டும் வந்து வேறு பொருள் தந்து நிற்கும் முறையில் மடக்கு என்னும் சொல்லணி அமையும்.[2] இவ்வகையில் அடிகள் மூன்று பாடல்கள் பாடியுள்ளார். இறைவன் அணிந்திருப்பதும் அம்புதர் அங்கம் (தேவர்கள் எலும்பு); சுமந்திருப்பதும் அம்பு தரங்கம் (அலையையுடைய நீர்); எடுத்து நின்றதும் மாயவர் ஆகம் (திருமாலின் உடம்பு); எயிறு இறுத்ததும் மாய வராகம் (வராகம் மாயும்படி) ; அடுப்பதும் அந்தணர் பன்னகராசி (பல் நகர்ஆசி); அணிவதும் பன்னகராசி (பாம்புக் கூட்டம்) அடியவர்க்குக் கொடுப்பது ஐயர்கடம்பவனத்தை (தேவர்கள் தம் உலகத்தை) ; இடமாகக் கொண்டிருப்பது ஐயர் கடம்ப வனத்தை (ஐயராகிய தனக்குக் கடம்பவனமாகிய மதுரையை)[3]. இவ்வாறு சொல்லணிச் சிறப்புடைய மடக்குப் பாடல்கள், அடிகளின் புலமைச் சிறப்பை உணர்த்தி நிற்கின்றன.

12. ஊர்

பாட்டுடைத் தலைவன் ஊரைச் சிறப்பித்துக் கூறும் முறையில் இது பாடப் பெறும். கல்யாண சுந்தரர் மேவும் வண்பதி, உயர்ந்து நுடங்கும் ஒண்கொடி பிறைநிலவின் கூன் நிமிர்ந்திடுமாறு விளங்கும் கூடலம்பதியாகும்.[4], வடகலை, தென்கலை, பலகலையும் பொதி மதுரை வளம்பதியே கடவுள் நெடும்பதி [5]. இவ்வாறு மதுரையாகிய ஊர்ச்சிறப்புப் பாடப்படுகிறது.

---

1. 128
2. தண்டியலங்காரம், 92
3. 130
4. 147
5. 204

13. மறம்

மறவர், தம் மகளை மணம் பேச வந்த, மன்னன் தூதனை நோக்கி, மன்னனை இகழ்ந்து பேசி மணம் மறுப்பதாக இவ்வகைச் செய்யுள் அமையும். தொல்காப்பியர் காஞ்சித் திணையில் கூறும் மகட்பாற் காஞ்சி என்னும் துறையே[1], பிற்காலத்தில் மறம் என்னும் கலம்பக உறுப்பாக இடம் பெற்றுள்ளது எனலாம். சவுந்தரபாண்டியரைச் சேர்ந்த மறவர்கள் தம் வீரப்பெருமையைத் தம்மிடம் பெண் கேட்டுவந்த தூதுவனிடம் கூறி, விடுத்த மன்னவன் யார் என்று வினவி, ஓலைஎழுத்து அவ்வாறிருப்பின் விடுத்த மன்னன் தலை எழுத்தும் அறிவதற்கு அவனைக் கொண்டு வருக என்று தம் வீரரிடம் கூறுவதாக இப்பாடல் விளங்குகிறது. [2]

14. காலம்

தலைவன் வருவதாகச் சொல்லிச் சென்ற காலவரவு கண்டு, தலைவன் வாராத நிலையில், தலைவி தன் துன்பங்களைப் புனைந்து கூறுவது இது. அடிகள் ஒரு பாடலில் கார்கால நிலையை இவ்வகையில் புனைகின்றார். முல்லைமலர் மணம் உண்டாக்கும் காலம்; கணவனோடு இளமகள் மணந்து உவக்கும் காலம்; தெருக்களில் மகளிர் அழகுறத் திகழும்காலம்; மன்மதனும் வில்லால் வெகுண்டு இகழ்கின்ற காலம்; நிலவு பிரிந்துள்ள மகளிரை வருத்தும் காலம்; தென்றலும் உயிர் போகும்படி படரும் காலம்; நிறையும் நாணும் மாறுபடும் காலம்; நேசர்மதுரேசர் அகன்று பிரிந்து சென்றுள்ள காலம்.[3] என்று கார்கால வரவு கண்டு தலைவி கூறுவதாக இப்பாடல் உள்ளது.

15. தழை

தலைவன் தோழி மூலம் தலைவியைத் தழை ஏற்கும்படி கூறுவது இது. தழை என்பது மலர்களையும் இலைகளையும் சேர்த்துக் கட்டிச் செய்யப்பட்ட உடை என்பர் [4] தலைவன் விருப்புடன் அளித்துள்ள தழை உடை தலைவியின் மார்பாகிய யானைக்கு ஏற்றது என்றும் மதுரேசப் பாண்டியன் கல்லானைக்கிட்ட கரும்பிலும் சிறந்தது என்றும் அமைத்து அடிகள் பாடியுள்ளார்.[4]

---

1. தொல்.பொருள் புறத் 24: 14-15
2. 180
3. 159
4. கு.பி.தி. (உ.வே.சா) குறிப்புரை, பக் 132

16. இரங்கல்

தலைவனைப் பிரிந்துள்ள தலைவி துயர்மிகுதியால் வருந்துவதைக் கூறுவது இது. அகத்திணையுள் நெய்தல் ஒழுக்கத்தின்கண் சொல்லப்பெறுவதே இது. இவ்வகையில் அடிகள் 12 பாடல்கள் அமைத்துள்ளார். தலைவியின் அவல நிலையும், மெய்ப்பாடும், உரையாட்டும் நுட்பமாகவும், மனத்தைத் தொடும் வகையிலும் உணர்த்தப்படுகின்றன. தோழி, செவிலி ஆகியோர் தலைவிக்காக இரங்குதலும் இதில் அடங்கும்.

சோம சுந்தரக் கடவுளைக் காமுற்ற தலைவி அவரால் அருளப் பெறாததால் ஒருகோடி கூற்றுக்களால் அடர்க்கப் பெறுகிறாள்; இளந்தென்றலும், இளம் பிறைக்கீற்றும், கடலன்ன கண்ணீர் ஊற்றும் துன்புறுத்த உயிரிழந்த வெற்றுடம்பாகவே விளங்குகிறாள் என்று செவிலி எடுத்துக் காட்டுகிறாள். [1] பாதி உடம்பை உமைக்கு அளித்ததால் தனக்கென உடம்பு ஒன்றில்லாத சிவன், பொன்மன்று, வெள்ளிமன்றை விடுத்துச் சுடுகாட்டில் ஆடுகின்றவன்; அவனிடம் இரங்கும்படி கேட்டு என்ன பயன்?[2] என்று கூறக் காண்கிறோம். மன்மதனுக்கு எமனும் ஒப்பில்லை என்னும்படி வருந்துகிறான்.[3] தென்றல், வாடை, திங்கள் ஆகிய முப்பிணியும் தணியாமல் உள்ளன[4]. இறைவன் கருத்துள் இருப்பவும் பிறைக்கூற்றும் உயிரை வாய் மடுத்து உண்ணுவதால் நீதியற்ற மதுரையில் இனி இருக்க ஒண்ணாது,[5] மன்மதனோ ஐந்து கணை எடுக்கின்றான்; எய்தகணையோ எண்ணத்தொலையா; உலவாக் கோட்டை அளித்தது போல் சிவன் மன்மதனுக்கு உலவாத்தூணி கொடுத்தான் போலும்.[6] என்றெல்லாம் இரங்கிக்கூறும் பகுதிகள் அகப்பொருட்சுவை மிக்குப் பொலிகின்றன.

17. சம்பிரதம்

பிறர்கண்டு வியக்கத்தக்க மாயச் செயல்களைச் செய்யவல்லார் தமது ஆற்றலைத் தாமே சிறப்பித்துக் கூறும் முறையில் இது பாடப்பெறும். செய்தற்கெளிய செயல்களையே செய்தற்கரிய செயல்களெனப் பொருள்படுவதற்கேற்ற சொற்களால் இதைக் கூறுவர். உலகை ஓரிமைப்பில் மறைத்து உடனே வெளிப்படுத்துவதாகக் கூறி

---

1. 124
2. 109
3. 110
4. 135
5. 113
6. 197

வியக்கச் செய்வர்; ஒருமுறை கண்ணை மூடி மறைத்து உடனே இமைத்தலை விடுத்தல் என்னும் எளிய செயலுக்குரியதையே இவ்வாறு கூறுதல் அறியத்தகும். சொக்கர் குணம் எட்டையும், மகத்துவம் அனைத்தையும் ஒரு செப்பினுள் அடக்கிவிடுவதாகக் கூறுவர்; பிரணவமாகிய ஒரு சொல்லில் அவை எல்லாம் அடங்கும் என்பது உண்மைப் பொருள்; ஒரு சிறிய கலத்தில் (செம்பில்) அடக்கிவிடுவதாகக் கூறும் முறை வியப்புத் தருவதாகும்.[1]

18. மேகவிடுதூது

தலைவி, தன் காதல் நோயைத் தலைவனுக்கு உணர்த்துமாறு மேகத்தைத் தூது அனுப்புவதாகப் பாடுதல் இது. முகில்களே மாமதிப்பிஞ்சும், இரைதேர் குயிற்குஞ்சும் என் உயிரை வாய்மடுத்து உண்ணுகின்றன என்பதைச் சிவபெருமானுடைய கூடலிற் சென்று சொல்லுங்கள் என்று தூதனுப்பக் காண்கிறோம்.[2]

19. மடல்

காமம் மிக்கவர், தம் அனபுக்குரியவரைப் பெறாதவிடத்து அவர்தம் உருவத்தை எழுதிக் கையில் வைத்துக்கொண்டு பனைமடற் குதிரையில் பொதுவிடத்தே ஏறிவருவதாகப் பாடுதல் உண்டு. ஆண்மக்களே மடல் ஏறுவர், மகளிர் மடலேறுதல் மரபன்று[3]. மடலேறுதல் பெருந்திணையாகவும், மடலேறுவதாகக் கூறுதல் கைக்கிளையாகவும் விளக்குவர்.[4] தலைவி மதுரை இறைவனிடம் காமுற்று, அருளப் பெறாத நிலையில், தன் நெஞ்சிடம், இறைவனை எழுதிய படத்தோடு வெள்ளியம்பலத்தில் இன்றோ நாளையோ மடல் ஏறுவோம் என்று கூறுகிறாள்.[5] தலைவன் மடலேறுவதாகக் கூறுவது மற்றொருபாடல்.[6]

20. கொற்றியார்

வைணவக் கோலம் பூண்டு தெருவில் பிச்சைகேட்டு வரும் பெண்ணிடம் காமுகன் தன் காதலைப் பேசுவது கொற்றியார் என்பது. வெள்ளைத்திருநாமம் இட்டபொழுதே இளைஞரும் முனிவரும் கண்டு மயங்கித் தம் நிலையழிந்தனர் என்று சொக்கர் தமிழ்மதுரைக் கொற்றியாரிடம் ஒருவன் கூறுவதாக அமைக்கிறார் அடிகள்.[7]

---

1. 185
2. 184
3. தொல்.பொருள். அகத், 35
4. தொல். பொருள். அகத், 51 நச்சர் உரை
5. 137
6. 175
7. 139

௨௧. பிச்சியார்

பிச்சை வாங்கச் செல்லும் சிவவேடங்கொண்ட பெண்பிச்சியாரிடம் காமுற்றுக் கூறுவதாய்ப் பாடுவர். தவவேடம், புண்டரம் அணிந்த நெற்றி, தெருவில் பலியேற்றல், கையில்சூலம் ஆகிய நிலைகளால் சிவனைப்போலவே பிச்சியார் விளங்குவதாகவும், சிவன்கண்நோக்கால் மன்மதனையும், முறுவலால் முப்புரத்தையும் எரித்தாற்போல் பிச்சியாரின் கண்ணும் முறுவலும் உயிர் கொல்கின்றன என்றும் கூறக்காண்கிறோம்.[1]

௨௨. வலைச்சியார்

மீன் விற்கும் வலைச்சியிடம் காமுற்ற இளைஞன் கூறுவது இது. கழிக்கயல் விற்கும் வலைச்சியர், ஏழுலகமும் தங்கள் விழிக்கயலுக்கே முற்றும் விலையாம் என்பதை விளக்குகின்றார்கள்.[2] என்று மதுரைவலைவாணராகிய சிவனுடைய வாழ்வனைய வலைச்சியரிடம் காமுற்றுக் கூறும் முறை காணப்படுகிறது.

௨௩. இடைச்சியார்

தயிர்விற்கும் இடையர்சாதிப் பெண் மீது காமுற்ற இளைஞன் கூறுவது இது. தொண்டைவாய் அமுதிட்டு என்பால் தோயீர், வறிதே ஏன் நீர் மத்திட்டு மதிக்கின்றீர்.[3] என்று சிவனுடைய மதுரையில் விளங்கும் இடைச்சியிடம் கூறுவதில் அகப்பொருள் அமைதலோடு, அமுது (மோர்) இட்டுப் பாலைத் தயிராக உறையவைப்பீர் என்ற பொருளும், நீரை மட்டும் கடைந்து என்ன பயன் என்ற பொருளும் அமைந்துள்ளன.

௨௪. பறவைவிடு தூது

பாட்டியலில் வண்டுவிடுதூது, மேகவிடுதூது என்ற இரண்டும் தனித்தனியாகக் கூறப்படுவதால் பிற தூதுப்பாடல்களும் தனியே குறிக்கத்தகும். பறவைவிடுதூதாக ஒரு பாடல் உள்ளது. மதுரைச் சிவனிடம் தலைவியின் துயரை எடுத்துச் சொல்லுமாறு பறவையைத் தூதனுப்பும் செவிலி கூற்றாக அடிகள் இதனை அமைத்துள்ளார்.[4]

௨௫. கிள்ளைவிடுதூது

கிளியைத் தூதனுப்பும் முறையில் இரண்டு பாடல்கள் உள்ளன. சொக்கர் என்று கிளி அடிக்கடி சொல்லிப்பழகிய சொல்லுக்குப் பயனாகிய

---

1. 136
2. 170
3. 166
4. 134

அவர்தம் உடன்பாட்டைத் தேர்ந்து வரும்படியாகவும்,[1] உருவழிந்த தன்மேல் மன்மதன் அம்புகள் படுதலையும் தாய்கூறும் பழிமொழிகள் நிற்றலையும் எடுத்துச் சொல்லும்படியாகவும்[2] தலைவி தூதனுப்பக் காண்கிறோம்.

26. கார்

மேகத்திடம் கூறுவதாக அமைப்பது இது. ஒரு தலைவன் கார்காலம் வந்த நிலையில் மேகத்திடம், தலைவி கண்ணீர் சிந்துமாறு என்சொல்லை மறுத்துப் போகாதீர்கள்; மேகங்களைத் தளைப்படுத்திய ஊர் மதுரை ஆதலின் என்னை விடுத்து, நான் வராமல், நீங்கள் மட்டும் தனித்துச் செல்லுதல் நல்லதன்று [3] என்கிறான். மேகத்திடம் கூறுவதாக அமைதலின், காலம் என்ற உறுப்பிலிருந்து இது வேறுபட்டதாகிறது; தூதாக அமையாமையால் மேகவிடுதூது என்பதிலிருந்தும் இது வேறுபட்டுள்ளது. தலைவனுக்கு முன் கார்மேகம் செல்லும் நிலையில், தலைவியின் கண்ணீர்க் கடலை முகக்க அது செல்கிறதோ என்று தலைவன் கூறும் மற்றொரு பாடல் விளங்குகிறது; சிவனது மேருமலை போன்ற தேரினை ஓட்டும் பாகனிடம் கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளது.[4]

27. குறம்

பிரிவால் வருந்தும் தலைவியிடம் குறமகள் குறி சொல்வதாக அமைப்பது இது. தடாதகை சிவனை மணப்பாள் என்று குறி சொல்வதாக அறிமுகப்படுத்திக் கொள்ளும் குறமகள், தலைவிக்கு நெற்குறி கூறுகிறாள்; தலைவி நினைப்பது மார்புக்குறியும், வளைக்குறியும் உடைய சிவனையே என்று குறிப்பொருளை உணர்த்தக் காண்கிறோம்.[5]

பொதுவான அகப்பொருள் மரபில் 41 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவை மதுரைத்தல வரலாறுகளையும், இறைவனைப் பற்றிய குறிப்புக்களையும் இணைத்துப் பாடும் முறையிலும், அகப்பொருட் கருத்துக்களைப் புதிய முறையில் விளக்கும் முறையிலும் சிறந்து விளங்குகின்றன. பெண்கள் சிவன்பால் காமுற்று வளைகழல விளங்கும் நிலையில், வளையல் விற்ற நிகழ்ச்சியைத் தொடர்புபடுத்தி, வளையல் விற்பதற்கோ கொள்வதற்கோ வந்தீர் என்பதும்[6], எரியும் நிலவின் மீது விறகும் இட்டு மூட்டி மேலும் எரியச்செய்வதாகக் கூறுவதும்[7],

---

1. 157
2. 179
3. 165
4. 201
5. 181
6. 111
7. 189

மண்சுமந்து பட்ட அடி யாவர் மீதும் பட்டாற் போல், இப்போது தலைவி காமநோய்த் துன்பம் இறைவனுக்கும் உள்ளது கொல் என்பதும்.[1] தலவரலாறுகளை இணைத்துப்பாடும் அகப்பாடற் சிறப்புக்களை உணர்த்தும். உயிர் என்பது காணாத அருவப்பொருளன்று, பெண் உருவத்தில் உள்ளது என்று தலைவன் கூறுவதும்[2], காமன் செய்யும் கொடுமையைக் கூறுவதற்குத் தன்போற் காமன் என்பதும்[3] புதுமுறை விளக்கங்களாகும்.

பொதுவான புறப்பொருள் அடிப்படையில் 18 பாடல்கள் காணப்படுகின்றன. மதுரை இறைவன் பெருமையும், புகழும் இவற்றில் உணர்த்தப்படுகின்றன. திருவிளையாடற் செய்திகள் பல கூறப்படுகின்றன. அடிகளின் வேண்டுகோள்களும் இடம் பெறுகின்றன. சிவனும், உமையும், முருகனும் முறையே சுந்தரபாண்டியனாகவும், தடாதகாதேவியாகவும், உக்கிரகுமாரனாகவும் மதுரைக்கு வந்தமை தண்டமிழ் மதுரம் கூட்டுண எழுந்த வேட்கையால்தான் என்று தமிழ்ப் பெருமை காட்டப்படுகிறது.[4]

மதுரைக் கலம்பகப் பாடல்கள் ஒவ்வொன்றும் ஏதேனும் ஒருவகையில் பாட்டுடைத் தலைவனாகிய இறைவனைத் தொடர்புபடுத்தி அமைக்கப்பட்டிருத்தல் குறிக்கத்தக்கதாகும். இவ்வியல்பு அடிகளின் பிறகலம்பகங்களுக்கும் பொருந்தும். கலம்பகம் பாடிக் காவியம் பாடு, என்ற பழமொழிக்கேற்பக் காவியத்திலுள்ள பொருள்கள் பெரும்பாலும் கலம்பக நூல்களில் காணப்படுகின்றன. புலவர்கள் விரும்பியாங்குப்பாட விரிந்த இடம் கொடுத்துள்ள இலக்கிய வகையாகக் கலம்பகம் விளங்குகிறது எனலாம். அடிகளின் இந்நூல் இவ்வகையில் சிறந்து விளங்குவது என்பது தகும், “இலக்கியச் செய்யுட்களையும், நாட்டுப்பாடல் வடிவங்களையும் இணைக்கும் இலக்கிய வகையாகக் கலம்பகம் உள்ளது” என்று டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுகிறார்.[5] இந்நூலில் கட்குடியன் கூறுவதாக அமைத்தல், குறமகள் குறி சொல்லுதல், இடைச்சியார், வலைச்சியார் போன்ற பெண்களை அவர்கள் மொழியில் பாடுதல் முதலியவை நாட்டுப்பாடல் முறையில் இடம் பெற்றுள்ள கலம்பக உறுப்புக்கள் என்று கருதலாம். இரங்கல், தூது, கைக்கிளை, காலம் போன்ற இலக்கிய மரபு சான்ற உறுப்புக்களோடு

---

1. 160
2. 168
3. 190
4. 196
5. A History of Tamil Literature, Dr. T.P.M. P.152

நாட்டுப்பாடல் முறையில் அமைந்த உறுப்புக்களும் இணைந்து விளங்கும் நிலை குறிக்கத்தக்கதாகும்.

4. நீதிநெறி விளக்கம்

அடிகள் மதுரையில் இருந்தபோது, திருமலைநாயக்க மன்னன் ஒரு நாள் உணவு கொள்ளக் காலந்தாழ்த்தமைகண்டு, வகுத்தான் வகுத்தவகையல்லால் கோடி, தொகுத்தார்க்குந் துய்த்தல் அரிது,[1] என்ற குறளைக்கூற அதைக்கேட்டு வியந்த மன்னன், திருக்குறட் கருத்துக்களை எளிதாகவும் சுருக்கமாகவும் பாடியருளுமாறு வேண்டிக்கொண்டதற்கேற்ப, நீதி நெறி விளக்கம் அடிகளால் பாடப்பெற்றதென்பர்.[2] காப்புச்செய்யுளில், நிலையாமைகளை உணர்ந்து எம்பிரான் மன்றத்தை வழுத்தாதது என்னே? என்று கூறுவதை நடராசர் துதி என்று கொண்டு, இந்நூல் சிதம்பரத்தில் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று தோற்றுவதாக உ.வே.சா. கருதுகின்றனர்.[3] அக்கருத்துக்கேற்ப, இந்நூற்காப்புச் செய்யுள், அடிகளின் சிதம்பரச் செய்யுட் கோவையிலும் சேர்க்கப்பட்டிருக்கிறது.[4]

இலக்கியம் இயற்றவல்ல புலவர்கள் நீதிநூலும் இயற்ற விரும்புதல் அந்தக்காலத்து வழக்கமாக இருந்ததுபோல் தெரிகிறது. அதனால்தான் குமரகுருபரர் ஒரு நீதி நூலும் சிவப்பிரகாசர் மற்றொரு நீதி நூலும் இயற்றினார்கள்[5]. என்று டாக்டர் மு. வரதராசனார் குறிப்பிடுகின்றனர்.

அடிகளின் வரலாற்றுச் சூழலில், திருமலை நாயக்கர் மன்னனால் சிறப்புச் செய்யப்பெற்றவராகச் சொல்லப்படுவதால், அவன் வேண்ட மதுரையில் பாடியதாகக் கொள்வது ஏற்றதே எனலாம். நடராசர் துதி சிதம்பரத்திற்குச் சிறப்பானதெனினும், என்னே வழுத்தாத தெம்பிரான் மன்று,[6] என்ற தொடரில், எம் தலைவனுடைய மன்றத்தை வழுத்தாதது என்னே, என்றே பொருள் அமைந்திருப்பதால், வெள்ளி மன்றமாகிய மதுரையில் விளங்கும் தலைவனைக் குறிப்பதாகக் கருதுவதற்கும் இடமுண்டு. வெள்ளி மன்றாடும் ஆனந்த மாக்கடலே,[7] என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். கால்மாறியாடிய திருவிளையாடல் மதுரைக்குரியது ஆதலின் அடிகளால் சிறப்பித்தும் பாடப்பட்டதென்றும் கொள்ளலாம். அரசியல் பற்றிய நீதிகளும் கூறப்படுவதால், திருமலை மன்னனைக்

1. குறள் 377, 2. குமரகுருபரஅடிகள் வரலாறு, கா.சு.பிள்ளை, பக். 21; தமிழ்ப்புலவர் சரித்திரம், அ. குமாரசுவாமிப்புலவர், பக்.69
3. கு.பி.தி. (உ.வே.சா.) பக். 21 4. 489 5. தமிழ் இலக்கிய வரலாறு, டாக்டர். மு. வரதராசனார், பக். 194
6. நீதிநெறிவிளக்கம் காப்புச்செய்யுள், 8. மீ.இ. மாலை, 6, 7. 207,

கருதி மதுரையில் அடிகள் பாடினார் என்றே கொள்ளத்தகும். இப்பாடல் யாப்புக்கு எடுத்துக்காட்டாகச் சிதம்பரச் செய்யுட்கோவையிலும் வந்தது எனலாம். காப்பு உட்பட 102 அளவடி வெண்பாக்கள் இந்நூலில் உள்ளன. நீதிக்கருத்துக்களுக்கு முதன்மை இடம் அமைந்து, இலக்கிய இன்பமும் இணைந்து விளங்கக் காண்கிறோம். கல்வி, செல்வம், காமத்தின் இழிவு, அரசன் இயல்புகள், நிலையாமை, உலகியல் ஒழுக்கம், துறவறம் முதலிய கருத்துக்கள் பற்றி அடிகள் எடுத்துரைக்கின்றார்.

கல்வி

உயிர்களுக்குக் கல்வி, அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருளையும் தருவதாகும்; புகழை உண்டாக்கும்; மனக்கவலை வந்தாலும் தளரவிடாமல் காக்கும்[1]. கல்வி கற்கத் தொடங்குங்கால் துன்பமாய் இருப்பினும், முடிவில் இன்பம் பயப்பது; அறியாமையைப் போக்கி அறிவைப் பெருக்குவது;[2] கல்வியால் கவியியற்றும் பேறுபெற்றுப் பாடங்கூறும் வளமடைந்து, அவைசிறக்கப் பேசும் சொல்வன்மையும் பெறுதல் சிறப்பாகும்[3]. இடத்திற்கேற்ப உய்த்துணரும் அறிவு இருத்தல் வேண்டும்; உணர்ந்ததைச் சொல்வன்மையோடு எடுத்துச் சொல்லவும் வேண்டும்.[4] அவைக்கஞ்சி மெய்நடுங்குவார் கல்வியால் ஒரு பயனுமில்லை; கல்லாதார் அவை அஞ்சாமல் ஆரவாரமாகச் சொல்வதாலும் பயனில்லை.[5] புலவர்களைப்போலவே கலைமகளைத் தன்னிடம் பெற்றுள்ள பிரமனது படைப்பு அழிந்துவிடும்; புலவர் படைப்போ புகழைப்பெறுதலோடு அழியாமலும் நிற்கும்[6] என்று பிரமனைவிடப் புலவர் மேம்பட்டிருப்பதை அடிகள் குறிப்பிடுகிறார். வறுமையாளர் கல்வியால் எவ்விதச்சிறப்பும் அமையாது என்கிறார்.[7] கற்றவற்றைப் பாதுகாக்காமல், மேலும் கற்பதை அடிகள் பேதைமை என்கிறார்.[8] கற்றார்க்குக் கல்வி நலனே அழகுதரும் கலன் என்று உணர்த்துகிறார்.[9]

கல்விச் செருக்குக்கூடாது என்று வற்புறுத்துகிறார். கொல்லன் சம்மட்டியால் தகராத மலையும் சிற்றுளியால் தகரும்; எனவே முழுதும் கற்றதாகக் களியற்க என்கிறார்.[10] தம்மிலும் கற்றாரை நோக்கி,

---

1. 207
2. 208
3. 209
4. 210
5. 211
6. 212
7. 215
8. 214
9. 218
10. 219

இவருக்குமுன் நாம் கற்றதெல்லாம் என் என்று தன்னைத் தாழ்த்தி நினைக்க வேண்டுகிறார்[1]. கல்வியுடையார் பணிந்து நடக்கும்பொழுது கல்வி மதிக்கப்பெறும்[2]. செருக்கு இருப்பின் செய்யும் நல்வினையும் தீயதே? தன்னைத்தான் புகழுதல் தீயை நீர் ஊற்றி வளர்ப்பதொக்கும்[3] என்று உணர்த்துகிறார். கற்றவண்ணம் நிற்றல் வேண்டும் என்றும்,[4] தாம் கற்றவற்றை விற்பவர்கள் நரகத்துயரத்தை அடைவர் என்றும்[5] தெளிவாக்குகிறார்.

அடிகள் கல்வியைப்பல இடங்களிலும் பன்மையிலேயே ஆள்கின்றார். வருந்தித்தாம் கற்றன,[6] தாம்கற்ற விற்பார்,[7] கற்பன ஊழற்றார்,[8] என்றாற் போன்ற தொடர்கள் நோக்கத்தக்கவை. கல்வி கரையின்றி விளங்கும் குறிப்பை இவ்வாறு பன்மையில் ஆள்வதன் மூலம் காட்டுகிறார் என்று கருதலாம். குற்றமில்லாத நிலையான கல்வி, அறிவுமிக்கவர்களிடத்திலேயே பொருந்தும்; கருத்தில்லாத, வீண்பொழுது போக்குகின்ற நகையாளரிடத்தில் பொருந்தாது,[9] பிறரால் மதிக்கப்பட வேண்டுமாயின், 'பிறர்பிறர், சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து, யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்',[10] என்கிறார்.

பொருட்செல்வம்

செல்வம் நீர்த்திரைபோல் நிலையற்றதென்று தோற்றுவாய் செய்து காப்பில்[11] கூறிய அடிகள், உலகியலைக் காட்டும் முறையில் செல்வம் மதிக்கப்படுவதை உணர்த்துகிறார். இன்சொல்லும், பணிவும் இருந்தாலும் பொருட்செல்வம் இல்லாவிடில் உலகம் மதிப்பதில்லை; வன்சொல்கூறி இகழ்கிறது. ஆயின் பொருளுடையவன் வன்சொல்லும் மீதூர்ந்த ஒழுக்கமும் உடையனாயிலும் உலகம் அவனது காலின் கீழ் ஒதுங்கி நிற்கிறது.[11] உலகநிலையை நொந்து கூறுவதாக இஃது இருப்பினும் பொருளின் இயல்பை எடுத்துக்காட்டுகிறது. ஈத்துண்ணாதவர் செல்வத்தால் ஒரு பயனும் விளைவதில்லையாதலால் அவ்வாறு செல்வம் பூத்தலைவிடப் பூவாமை சிறந்தது என்று காட்டுகிறார்.[12] முற்பிறவியில் நோன்பு இயற்றாத வறியவர்கள், நோற்ற செல்வர்களிடம் பின்சென்று நிற்றல் அறிவுடைமையே என்கிறார்.[13] செல்வத்தில் தம்மிலும் குறைந்திருப்பவரைப் பார்த்துத்[14] தமது உடைமை

1. 220
2. 221
3. 224
4. 226
5. 227
6. 214
7. 227
8. 228
9. 229
10. 225
11. 216
12. 211
13. 217
14. 220

பெரியது என்று அகமகிழ வேண்டும். மனநிறைவு இன்றியமையாதது என்பதை இவ்வாறு வற்புறுத்தக் காண்கிறோம். செல்வர்கள் பணிவுடைமை பெற்றிருக்கும்போதே உண்மைச் செல்வர்களாவர்.[1] செல்வச் செருக்கால் பெரியோரை மதிக்காமல் இருப்பவர்களுக்கு மூத்தாள் சேர்க்கை தொலைவில் இல்லை.[2]

செல்வத்தின் பயன் ஈதலே, தம்மிடம் வருவாரைக் கண்ணால் இனிது நோக்கி, நகைமுகம் காட்டி, இன்மொழி கூறிக் கொடை வழங்குதல் செல்வப் பண்பாகும்; இவ்வியல்புடையோர் கற்பகதருப்போல்வர்.[3] புகழடைய விரும்புவோர் தம் உயிர் கொடுத்தும் பிறர்க்கு உதவுவர்[4]

பொருளுக்காகக் குலவொழுக்கம், வாய்மைநலம், தவம், உரிமை ஆகியவற்றை விற்றல் தகாது[5]. வறுமையிலும் இவற்றைப் பேண வேண்டும் என்பது கருத்து. தமது நிலைமைக்கும் குடிப்பிறப்புக்கும் வழுவாமல், பொருந்திய கடமையில் நின்று, பாவச்செயல் புரியாமல், பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல் இருப்போர்க்குச் செல்வம் அவர்கள் வீட்டுவாயிலில் வந்து குவியும்.[6] ஆயின் பிறரை அச்சுறுத்தி வஞ்சித்து ஈட்டும் பொருள், முலைபோல் பருத்திடினும் இடைபோல் தேய்ந்தழியும்.[7] தலையாயார் செல்வம் பொதுமகள் போலவும், இடையாயார் செல்வம் குலமகள் போலவும், கடையாயார் செல்வம் கைம்பெண்டிர் போலவும் இருத்தல் காட்டப்படுகிறது.[8] இழிந்த பரத்தையை இங்கு உயர்ந்தோர் செல்வத்துக்கு ஒப்பிட்டுள்ள திறம் குறிக்கத்தக்கது.

காமத்தின் இழிவு

அகப்பகையாகிய காமத்தின் இயல்புகள் காட்டப்படுகின்றன. காமம் முதலில் சிறிது இன்பம் தரும்; பெரும் பீழையை உண்டாக்கிவிடும்.[9] புறப்பகை கோடி இருப்பினும் அறிவுடையோர் காமத்துக்கு அஞ்சி அது தீங்குதராமல் காப்பர்.[10] கடமைக்குக் குறைவு நேராத வகையில், கல்வி கெடாத நிலையில், தருமம் தாழ்வுபடாமல், நலமும் குன்றாமல் மனைவிபால் இன்பம் நுகர்தல் தக்கது,[11] காமம் கதுவப்பட்டு விளங்குவோர் கொலை செய்ய அஞ்சார்; பொய்ந்நாணார்; மானம் ஓம்பார்; களவுமட்டுமின்றி எல்லாம் செய்வர்; பழிபாவம் பாரார்.[12]

---

1. 221
2. 241
3. 242
4. 245
5. 267
6. 270
7. 268
8. 271
9. 208
10. 260
11. 283
12. 284

திருவனைய மனையாள் வாய்த்திருப்பினும் பிறன்மனைக்கே பீடழிந்து நிற்பர்.[1] தகுதிமிக்க கணவன் இருப்பவும் கற்பில்லாத பெண்மனம் அயலார் மேல் செல்லும்[2]. கற்பில்லாத பெண்களைவிடப் பரத்தையர் மேலானவர்; ஏனெனில் பரத்தையர் ஒருவருக்கும் கேடு விளைவிப்பதில்லை.[3] முறையும், குடிமையும், பான்மையும், நிறையும், நாணமும் பேணாத கற்பில் மகளிர் பிறப்புப் பெரும் பாவமே ஆகும்.[4] எவ்வளவு தீச்செயல் உடையவராயினும் சிற்றின்பத் தவறுகள் இல்லையெனில் பகைவரும் அவர்களைத் திசை நோக்கி வணங்கி நிற்பர்; அத்தவறுகளைப் பெற்றிருப்பவர் எவ்வளவு உயர்ந்தவராயினும் இழிந்தோராலும் பழிக்கப்படுவர்.[5]

அரசன் இயல்புகள்

அரசன் பெருமை கூறப்படுகிறது. குலமகட்குக் கணவனே தெய்வம்; பிள்ளைகட்குப் பெற்றோரே தெய்வம்; அறவோர்க்கு ஆசிரியனே தெய்வம்; ஆயின் அனைவருக்கும் தெய்வமாக இருப்பவன் அரசன்[6]. குடிகளை வருத்தாமல் அளவறிந்து வரி வாங்க வேண்டும்.[7] இன்று பெறும் வரிகளை நாளை கொள்ளப் பொறுக்காதவனும், குடிகளின் குறைகளைக் கேட்டு முறை செய்யாதவனும், ஆவன கூறும் அமைச்சனை மதிக்காமல் சினப்பவனும் வேந்தனல்லன்.[8] அமைச்சர் உரைப்பதைக்கேட்காமல், இரக்கம் காட்டாமல் இருப்பவன் நெட்டுயிர்ப்போடு உற்ற பிணமே,[9] செங்கோல் அரசன் ஒற்றரால் குற்றங்களை அறிதல் வேண்டும்; மறைவாகத் தானே சென்றும் ஆராயவேண்டும்; அந்நிலையிலும் குற்றம் அறிய அரியது என்று அஞ்சுதல் வேண்டும்.[10] மன்னவன் குற்றமுடையனவற்றை நீக்கி நல்லவற்றைக் கொள்தலே அறிவுடைமை.[11] நட்புப்பிரித்தல், பகை நட்டல், ஒற்றை இகழ்தல், அமைச்சரை ஐயுறல், பெரியோர் மொழிகளைக் கொள்ளாமல் கோறல், குணம் வேறுபடல் இவை அரசனுக்குக் கேடு பயக்கும் குறிகளாகும்.[12] அரசன் ஈகைபுரியாவிடினும், நன்மதிப்போடு கூடிய முகப்பார்வை சிறந்தது.[13] பாகன் களிற்றைத் தன் வயத்தில் வைத்திருத்தல் போல் மன்னன் வெகுண்டுரைப்பினும் அமைச்சன் அஞ்சி விலகிவிடாமல்[14] உறுதிகூற வேண்டும்.

---

1. 285
2. 287
3. 288
4. 289
5. 294
6. 232
7. 234
8. 235
9. 236
10. 237
11. 238
12. 240
13. 244
14. 250

மேன்மக்கள் வேந்தன் அவையைக் காத்துக்கொண்டு அங்கேயே இருக்க மாட்டார்கள். சிலர் வேந்தன் அவையில் என்றும் இருந்தும் உகப்பெய்த மாட்டார்கள். இவர்களை முறையே வாயில் யானையும், அந்தப்புரத்துப் பூனையும் போல்பவர் என்கிறார் அடிகள்.[1] வீட்டினுள் இருப்பதால் பூனைக்கும், வெளியில் இருப்பதால் களிற்றுக்கும் யாதொரு பெருமையும் சிறுமையும் இல்லை என்ற குறிப்பு அமைந்துள்ளது. அரண்மனை வாயிலைக்காத்து ஒரு பயனுமில்லை என்று வருந்தவேண்டுவதில்லை; பலநாள் காத்த பயன் ஒருநாள் நலமாக விளையும்[2]. இவ்வாறு அறிவுடைய மேன்மக்களுக்கும், அரண்மனை அலுவலர்க்கும் ஏற்றவாறு நீதி கூறியுள்ளமை குறிக்கத்தக்கதாகும்.

நிலையாமை

இளமை நீர்க்குமிழி போல்வது; செல்வம் நீர்அலை போல்வது; உடம்பு நீரில் எழுத்துப் போல்வது என்று நிலையாமைக் கருத்தை இனிய உவமைகளால் புலப்படுத்தக் காண்கிறோம்[3]. உலகில் உறுதியாக இறக்காமல் வாழலாம் என்றால், ஆற்றலும் மானமும் இழந்து உயிரைப் பாதுகாக்கலாம் என்கிறார்[4]. யாக்கை அழிதல் இயல்பாதலின் இவ்வாறு கூறும் உத்தியை அடிகள் கையாள்கின்றனர். நிலையாமையை நன்குணர்ந்த கற்புடைய பெண்டிரும், துறவியரும், போர்வீரரும் இறப்புக்கு அஞ்சாமல் தம் மானம் காப்பர்.[5] உடம்பாலாகிய உண்மைப் பயனைக் கொண்டவர்கள் சுமையாகிய உடம்பை விடுவதற்கு வருந்தமாட்டார்கள்; வீணர்களே இறத்தலை நினைத்துப் பெருமூச்சு விடுவர்.[6] ‘பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பு மிகை.’[7] என்றும் திருக்குறள் கருத்து இங்கு நினைக்கத்தகும். இவ்வாறு நிலையாமையை உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது.

உலகியல் ஒழுக்கம்

உலகியலில் மக்கள் மேற்கொள்ளவேண்டிய ஒழுகலாறுகளை அடிகள் காட்டுகின்றனர். முயற்சியை நன்கு வலியுறுத்துகின்றார். நன்மை தரும் முயற்சிகள் முடிவு பெறாவிடினும் ஒருவன் இறக்கும் வரை முயலுதல் வேண்டும்; சாகும் நிலையிலும் மருந்து கொடுத்து முயலுதல்

---

1. 231
2. 253
3. நீதிநெறி விளக்கம் காப்பு
4. 246
5. 247
6. 248
7. குறள் 345

உலகில் உண்டு; அவ்வாறு, ஆகாதனபோல் தோன்றி முடிவில் ஆகும் வினைகளும் உண்டு.[1] எனவே எச்செயலையும் பயனளிக்காதென்று இடையில் விட்டுவிடாமல் அயர்வின்றி முடிவுவரை முயலவேண்டும் என்ற கருத்து நன்கு வற்புறுத்தப்படுகிறது. முயலாமல் இருந்துவிட்டு ஊழின்படி உள்ள பயன்கள் தப்பமாட்டா என்று கூறுவதில் பொருளில்லை. ஆற்றலில்லாத விளக்கு என்பதால் அதன் ஊழ்வலியைக் காண்போம் என்று அதைக் காற்றின் முன் யாரும் ஏற்றுவதில்லை[2]. விளக்குச் சிறிதேனும் எரியும் என்று பயன்கொள்ளப் பேணுதல்போல், ஊழ்வலி என்றிராமல் இயன்ற முயற்சிசெய்து பயன்பெற முயல்தல் வேண்டும் என்பது நன்கு உணர்த்தப்படுகிறது. முயற்சியால் ஊழையும் அதன் வலிமை குறையும்படி செய்யலாம் என்பதற்கு மார்க்கண்டேயனே எடுத்துக்காட்டு என்கிறார்.[3]

செயலாற்றுமுன் காலம், இடம், துணை, விளைவு, முதலியவற்றை நன்கு ஆராயவேண்டும்[4]. வினையை முட்டின்றி முடிக்க மெய்வருத்தம் கருதாமல், பசி நோக்காமல், துயிலாமல், எவர் செய்யும் தீமையையும் பொருட்படுத்தாமல், செவ்வி அருமை பார்க்காமல், அவமதிப்பையும் பொருட்படுத்தாமல் வினையிலேயே கண்ணாக இருக்க வேண்டுகிறார்.[5] 'வினையே ஆடவர்க்கு உயிர்'[6], என்பதன் விளக்கம்போலக் கருமமே கண்ணாயினார் இலக்கணம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது எனலாம்.

பகை சிறிது என்று கருதி அதைக் களையாதிருத்தல் தீமைபயக்கும்; குளத்தில் தெரியும் யானையின் நிழல், ஒரு தவளை நீரில் குதித்தாலும், காணமுடியாமல் போகிவிடும்[7]. இவ்வாறு வலியிற் சிறியாரும் பெருவன்மையுடையாருக்கும் தீங்கிழைப்பர் என்ற உலகியல் நிலையை உணர வைக்கிறார் அடிகள். இப்பகையை உடனே களைதல் வேண்டப்படுகிறது எனலாம். 'வினை', பகை இவற்றின் எச்சம் தீ எச்சம் போல் தெறும் என்றும், 'இளைதாக முள்மரம் கொல்க' என்றும் கூறும் திருக்குறட் கருத்துக்கள் இதில் விளங்குதல் உணரத்தகும்[8].

வஞ்சனை கலந்த நட்புடையவர் அழிதல் உறுதி[9]. குற்றமுடையவர்க்கு நல்ல செய்தாலும் தீயதாம் என்றும், மாசில்லா மேன்மக்களுக்குத் தீயவும் நலமாம் என்றும் அறிவுறுத்துகிறார்[10]. பொய், குறளை, வன்சொல், பயனில்சொல் ஆகிய சொல்வழுக்கள்

1. 254
2. 255
3. 256
4. 257
5. 258
6. குறுந். 135
7. 259
8. குறள் 674, 879
9. 262
10. 263

வாராமல் காத்து, ஐம்புலன்களை அடக்கி, மனமாசகற்றும் நலமே நல்ல நெறியாகும் என்று மனம், வாக்கு, காயம் என்ற முந்நிலையிலும் தூய்மையை வற்புறுத்துகிறார்[1]. ஈகை செய்யாவிடிலும் இன்சொல்லேனும் வழங்காதிருத்தல் தீதாம்[2]. அறமற்ற பாவச் செயல்கள் எளிதாகச் செய்யக்கூடுமாயினும்கைவிட்டுச், செய்தற்கரியவாயினும் அறச்செயல்களை விட்டு நீங்கக்கூடாது; சிறு முயற்சியில் பெரும் பயன் விளையுமெனில் தாழாது செய்தல் வேண்டும்[3].

புல்லியோர் அல்லனவற்றைச் செய்தாலும் வாய்விட்டு அரற்றுவர்; வல்லவர்கள் நல்லவர்கள், பிறர் செய்பபோல் செய்யத்தக்கவைற்றைச் செய்து, தாம் அறிந்தும் அறியார் போல இருப்பர்.[4] சான்றோர் ஊழ்வலியால் சில தீமை செய்தாலும், அதற்கு வருந்துவராதலின், தம்பெருமையில் குன்றிவிடமாட்டார்கள்.[5] தீயசெயல்கள் ஆக்கம் தரினும் நல்லவையாகா.[6] தெய்வம் உண்டென்பவர் தீமை செய்தால் தெய்வமே கண்ணோட்டமின்றி அவர்களைத் தண்டிக்கும். தெய்வம் இல்லை என்பார்க்கு அத்தகைய தண்டனை எதுவும் இல்லை. தம்மிடம் அன்புடைய இனிய மகனுக்கே பெற்றோர் என்றும் பயன்படும் நீதிகளைச் சொல்லுதல் போல், இறைவன், அடியவர்களையே தீயவற்றில் புகும்போது தண்டித்து அருளுகிறான் என்ற நுட்பத்தை அடிகள் உணர்த்துகிறார்.[7] இவ்வாறு உலகியல் ஒழுக்க முறைகளை அடிகள் இனிதின் விளக்கி அவற்றை உணர்ந்து செயலாற்றுமாறு செய்துள்ளார்.

துறவறம்

துறவற இயல்புகளை இறுதியில் 18 பாடல்களில் விளக்கியுள்ளார். துறவியர் பெண்மை வியவாமல், அவர் பெயரும் கூறாமல், கூர்ந்து நோக்காமல், பண் பாடல் விரும்பாமல், பண்பற்ற செயல்களைப் பாராட்டாமல் இருப்பர்.[8] பலசுவைக்கும் உணவுச்சுவையே காரணம் என்று உண்டி சுருக்குவர்; பித்தன் கருத்தின்றி உண்பதுபோல் உண்பர்.[9] புன்புலால் உடம்பை ஓம்பமாட்டார்கள்.[10] சிற்றின்பச் சேற்றில்[11] விழாமல் பேரின்ப மாக்கடலில் படிந்து ஆடுவர்.

---

1. 265
2. 273
3. 276
4. 277
5. 281
6. 280
7. 279
8. 290
9. 291
10. 292
11. 293

வாழ்நாள் எல்லை தெரியாது ஆதலால் விரைந்து தவம் மேற்கொள்ள வேண்டுகிறார்.[1] மனத்தைக் கட்டுப்படுத்தாத துறவுக் கோலத்தால் பயனில்லை; உள்ளத்தால் துறத்தலே உயர்வு[2]. இறைவன் எங்குமிருந்துகொண்டு அனைத்தையும் அறிபவன் ஆதலின் யாவரையும் வஞ்சித்தோம் என்று மகிழாதீர்கள்[3] ஏனெனில் மறைவாக நடந்திருந்தாலும் பழிச்சொல், புலால் நாற்றம் மூடியிருப்பினும் பரவுதல்போல் எங்கும் பரவிவிடும்.[4] நொய்தாக இருப்பவை விரைவில் விழமாட்டா, விழுந்தாலும் கேட்டிலிருந்து பிழைத்துக்கொள்ளும்; ஆனால் வலிய பொருள்கள் விழுந்தால் நிலைகுலைந்து போய் உய்தல் இயலாது. இவ்வாறே அறிவில் மெலிந்தவர்கள் தவறுசெய்தால் உய்ந்து விடலாம்; வலியவர்கள் தவறு செய்தால் உய்தல் அரிது என்று தக்க உவமையால் விளக்கக் காண்கிறோம்.[5]

அவரவர் தகுதிக்கேற்ப அருளும் ஞானாசிரியர் பெருமையும் காட்டப்படுகிறது.[6] மெய்யுணர்ந்த மேலோர், நிலையில்லாத பொருள்களில் பொறிகளைச் செலுத்தமாட்டார்கள்; மெய்யுணர்ச்சியாகிய தத்துவஞானம் வருதலையே கண்ணாகக்கருதி இருப்பர்; ஐம்பொறிகளைக் காத்தலாகிய நிலையும், பழிக்கு நாணுதலாகிய கதவும், நிறை என்னும் தாழ்ப்பாளும் உடையவர்கள்.[7] முற்றத்துறந்தவர்க்கு மெய்யுணர்வில் தோன்றுவதே இன்பம்; பிற இன்பங்கள் துன்பமே[8]. கற்று அறிந்து அடங்கித் தீயன நீக்கி நல்லன ஆற்றிப்பெற்றதைக் கொண்டு மனத்தை அமைத்து ஒருவழிப்படுத்திப் பரம்பொருளைப் பற்றிக்கொண்டு எல்லாச் செயலும் அடங்கநின்று பரம்பொருளை உணர்ந்து நிற்பவரே வீடுபெற முயல்பவர்[9]. ஐயம்திரிபு இல்லாமல் அளந்து உத்தியினால் தெளிந்து, மெய்யுணர்ச்சியாகிய கண் விழித்திருப்பவும், உலக நுகர்ச்சி கொள்ளாமல் துயிலும் ஞானியர் தம் உள்ளத்தே காண்பதுதான் காட்சி, அவர்களது கனவு நனவாகப் பொருந்துவதே முடிவான பொருளாகிய சித்தாந்தம்.[10] இவ்வாறு துறவறம் தொடர்பான செய்திகளும், துறவின் உண்மைப் பயன்களும் தெளிவாக்கப்படுகின்றன. குமரகுருபரஅடிகள், துறவு பற்றிய கருத்துக்களுக்கேற்ற உண்மைத்துறவியாக விளங்கினார் என்று கொள்வது தகும்.

---

1. 296
2. 298
3. 299
4. 300
5. 301
6. 303
7. 304
8. 305
9. 306
10. 307

யாப்பு

நீதிநெறிவிளக்கப் பாடல்கள் நேரிசை வெண்பாக்கள் போல இரண்டாம் அடியில் இறுதிச்சீர் தனிச்சொல்லாகப் பிரித்துப் பழைய பதிப்புக்களில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஆயின் சில பாடல்கள் இன்னிசை வெண்பாக்களாகக் காணப்படுகின்றன. உ.வே.சா பதிப்பித்த காசிமடத்துப் பதிப்பில் 12 பாடல்கள் தனிச்சொல்லாகப் பிரித்துக் கோடிடாமல் காணப்படுகின்றன.[1] நேரிசைவெண்பாக்களாக அவை பொருந்தவில்லை என்று கருதி, இன்னிசை வெண்பாக்களாக இருக்கலாம் எனற குறிப்பில் ஐயர் அவர்கள் அவ்வாறு பதிப்பித்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஐயரவர்கள் இந்நூற்பாடல்கள் அனைத்தையும் வெண்பா என்று பொதுவாகக் கணக்கிட்டுள்ளார்கள் என்பது அவர்கள் குறித்துள்ள வெண்பா 189 எனற எண்ணிக்கையைச்[2] சரிபார்க்கும்பொழுது தெளிவாகிறது. ஆயின் இந்த நூலில் எவ்விடத்திலும் இன்னவெண்பா என்று தலைப்பிடவில்லை. தனிச்சொல்லாகக் கோடிட்டுப் பதிப்பித்துள்ள பாடல்களிலும் 4 பாடல்கள்[3] நேரிசை வெண்பாவாக முற்றிலும் பொருந்தியிருப்பதாகத் தெரியவில்லை. இவற்றின் எதுகைச்சீர்களை இங்கு ஆய்தல் தகும்.

'குல மகட்கு, புதல்வர்க்கு-அறவோர்க்கு'; அடிகளே, இலைமுக (232) – இரண்டாம் வழுவா எழுத்தொன்றிய எதுகையாக இவை அமையவில்லை. யாப்பருங்கலக்காரிகை ஒழிபியலில் விதித்துக்கூறப்படும் எதுகைமுறைகளை மேலும் நெகிழ்த்திக் கொள்ளும்பொழுது இவை எதுகையாகப் பொருந்தியுள்ளன என அமைதிப்படுத்தலாம். 'குல', 'புத', 'அற' என்பவற்றில் உயிரெதுகை உள்ளது என்றும், 'கடி' 'இலை' என்பவற்றில் விதிவிலக்காக ஐகார உயிரில் இகரம் உள்ளதாகக் கொள்ளும் முறையில் உயிரெதுகை உள்ளது என்றும் கருதலாம், எனவே இதனை இருவிகற்பத்து நேரிசை வெண்பாவாக ஐயரவர்கள் கருதியிருக்கலாம். இவ்வாறே மற்ற மூன்று பாடல்களையும் நேரிசைவெண்பாவாக அமைதி கூறலாம்:

'இன்று, நின்று-சென்றொருவன்' ; 'ஆவன, வேடலன்' (235)
உயிரெதுகை
'புறநட், வெளியிட்டு – கழிபெருங்' ; 'கண், புண்' (261)
(ர)
இடையின வருக்க எதுகை

1. 217, 227, 230, 238, 250,252,260,267,272,278,300,307
2. கு.பி.தி. (உ. வே. சா) பக் 51
3. 232, 235, 261,271

'பொதுமகளே, குலமகளே-கலனழிந்த'; கைம்மையார், செல்வம்(271) மூன்றாம் எழுத்து உயிரெதுகை (அல்லது) மூன்றாம் எழுத்து உயிரெதுகை. மூன்றாம் எழுத்து மெல்லின எதுகை

இந்த அடிப்படையில் முற்குறித்த 12 பாடல்களையும் ஒழிபியல் எதுகைவிதிகளை மேலும் நெகிழ்த்தி அமைதிப்படுத்திப் பார்க்கும்போது 8 பாடல்களை நேரிசைவெண்பாவாகக் கூற இடமுண்டாகிறது. ஆயின் 238, 252,272,307 ஆகிய நான்கு பாடல்கள் இன்னிசை வெண்பாக்களாகவே கருத வேண்டியுள்ளன. பொது எதுகை விதியை மட்டும் வைத்துப் பார்க்கும் போது மேற்குறித்த 16 பாடல்களும் இன்னிசை வெண்பாக்களாகவே கருதத்தக்கவை. பிறிதோர் இயலில்[1] அடிகளின் யாப்புவகைகள் பற்றி மேலும் எண்ணுவோம்.

நீதிநெறிவிளக்கம் பற்றித் திருக்குறள் நீதி இலக்கியம் என்னும் நூலில் கூறுவது இங்குக்கொள்ளத்தகும். குமரகுருபரரின் நீதிநெறிவிளக்கம் இலக்கிய இயல்புகள் நிறைந்ததோர் இலக்கியமாகும். அதில் கருத்துக்களுக்கு முதன்மை இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. எனினும், ஆசிரியர் கற்பவர் உள்ளத்தைக் கவரத்தக்க முறையில் கலையழகும், கற்பனை வளமும் குன்றாத வகையில் அதைப்படைத்துள்ளார். தமிழிலுள்ள நீதிநூல்களுள், திருக்குறளுக்கு அடுத்த நிலையில் சிறப்புமிக்க நீதி இலக்கியமாக அது விளங்குகிறது. அதில் சொல் நயமும், பொருள் நயமும், இலக்கிய இன்பமும் இணைந்தும் இழைந்தும் உள்ளன. அதனால், அது கருத்திலே வலிவும் கலையழகிலே பொலிவும் பெற்றுத்திகழ்கிறது.[2]

5. மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை

வெண்பாவும் கலித்துறையுமாக இருபது பாடல்கள் அந்தாதியாக அமைத்துப்பாடுவது இரட்டைமணிமாலை எனப்படும்.[3] பவளமும் முத்தும் மிடைந்த மாலைபோல் இது கருதப்படுகிறது[4]. மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை நேரிசைவெண்பாவும் கட்டளைக் கலித்துறையுமாக அந்தாதித் தொடையில் இருபது பாடல்கள் பெற்றுள்ளது. இந்நூல் அடிகளால் பாடப்பெற்றதன்று என்று உ.வே.சா குறிப்பிடுவதாவது; மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மீனாட்சியம்மைகுறம், சிவகாமியம்மை இரட்டை மணிமாலை என்னும் மூன்று பிரபந்தங்களும் குமரகுருபர சுவாமிகள் இயற்றியனவாக அச்சுப் பிரதிகளிற் காணப்படுகின்றன. ஆயினும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி

1. 1. இயல் 3, பக். 251-267
2. திருக்குறள் நீதி இலக்கியம். க.த. திருநாவுக்கரசு, பக். 354 - 355
3. பன்னிருபாட்டியல், 255 4. கு.பி.தி. (உ. வே. சா) பக். 125

மடத்திலுள்ள பழமையான ஏட்டுப்பிரதிகளிலும் வேறு பழைய ஏட்டுப் பிரதிகளிலும் இம்மூன்றும் காணப்படவில்லை. பரம்பரையாகப் பாடம் சொல்லுபவர்கள் இம்மூன்றையும் குமரகுருபரசுவாமிகள் நூல்களோடு சேர்த்துச் சொல்வதில்லை. என்னுடைய தமிழாசிரியராகிய மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் வேறு பல வித்துவான்களும் இவற்றைக் குமரகுருபர முனிவர் வாக்காகக் கருதுவதில்லை. இவற்றின் சொற்பொருளமைதிகளை ஆராய்ந்தாலும் இவற்றிற்கும் இம்முனிவர் இயற்றிய பிரபந்தங்களுக்கும் உள்ள வேறுபாடு தெளிவாகப்புலப்படும். இதற்குமுன் வெளிவந்துள்ள பதிப்புகளில் இவையும் சேர்க்கப்பட்டுள்ளதை எண்ணி யானும் இவற்றைத் தனியே பின்னால் இப்பதிப்பில் சேர்த்திருக்கிறேன்,[1] "இதுமுதல் மூன்றையும் இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை.[2]" கா.சு.பிள்ளை, மு.ரா. அருணாசலக்கவிராயர், அ. குமாரசுவாமிப்புலவர், வை.மு. சடகோபராமாநுசாச்சாரியார், பு.சி. புன்னைவனநாத முதலியார், ந.சி. கந்தையாபிள்ளை முதலியோர் இவற்றை அடிகள் பாடிய நூல்களாகவே குறிப்பிட்டுள்ளனர்.[3] சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் பதிப்பிலும், கழகப் பதிப்பிலும் இம்மூன்று நூல்களும் அடிகளின் நூல்களாகவே பதிப்பிக்கப்பட்டுள்ளன. டாக்டர் மு. வரதராசனார், அ.கி. பரந்தாமனார் ஆகியோர் மீனாட்சியம்மை குறம் அடிகளால் பாடப் பெற்றதென்று குறிப்பிட்டுள்ளனர்.[4] இம்மூன்று நூல்களும் அடிகள் பாடியனவாகக் கொள்வதே பெருவழக்காக உள்ளது எனலாம். மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை அடிகளின் சொற்பொருள் அமைதியுடையதாகவே காணப்படுகிறது. பிறநூல்களில் அவரிடம் காணும் சொல்லாட்சி, கருத்து, கற்பனை முதலியவை இந்நூலிலும் இழையோடியிருத்தல் எடுத்துக் காட்டத்தக்கதாகவே உள்ளது.

---

1. கு.பி.தி. (உ.வே.சா) பக். 10, 11
2. மேற்படி பக். 125
3. குமரகுருபரஅடிகள் வரலாறு பக். 6.9; திருச்செந்தூர்ப் பிரபந்தத் திரட்டு, பக் 282, 283; தமிழ்ப்புலவர் சரித்திரம் பக் 69; மதுரைக் கலம்பகம், முன்னுரை பக். 1-2; மதுரைக்கலம்பகம், பக். 14-15; தமிழ்ப்புலவர் அகராதி பக். 129-130
4. தமிழ் இலக்கிய வரலாறு, பக். 254; செந்தமிழ் 57-ஆம் தொகுதி, பக்.110

சொல்லாட்சி ஒப்புமை

இந்நூலில், அம்மை தன் இரு மார்பால் சொக்கர் எண்தோள் குழையப் பொருத செயலைச் 'சொக்கர் எண்டோள் குழைய இருகுவட்டாற், பொரா நின்றதும்'[1] என்று குறிப்பிடக் காண்கிறோம். மார்பைக் 'குவடு' என்று உவமை நயம்பட ஆள்தல் அடிகளின் வழக்கமாகும். 'பங்கயச் செல்வியிரு கொங்கைக் குவட்டுவளர் பச்சைப் பசுங்கொண்டலே'[2], 'கொம்மைக் குவடசைய'[3] என்ற பகுதிகளும், குன்று என்று பல இடங்களில் மார்பினைக் குறிப்பிட்டிருப்பதும்[4] இப்பொருளில் ஒப்பக் கருத்தகும்.

'அம்மை அம் மணவாளர் தயவுக்குள்ளாய், வாரா நின்றதும்'[5] என்பதில் இறைவனுடைய அருள்மனப் பாங்கு 'தயவு' என்ற சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. மதுரைக் கலம்பகத்தில் இறைவன் தேவர்களைக் காத்து அவர்தம் பாவையர்க்கு மங்கலம் கெடாமல் அருளியதைக் குறிக்கும்போது, 'நாம் தேவர் என்பார், தம்பாவையர்க்கன்று காதோலை பாலித்த **தயவாளர்**'[6] என்று கூறுகின்றமை இங்கு ஒப்புநோக்கத்தகும். சிவபெருமானைத் தயவுடையவர் என்று வழங்கும் இவ்விரு வழக்கும் அடிகளின் சொல்லாட்சியாகவே எண்ண இடமுண்டு. 'தயவு' என்பதை அடிகள் வழங்கும் அருஞ்சொல்லாக உ.வே.சா. சுட்டியுள்ளமை[7] இதனை மேலும் வலியுறுத்துவதாக உள்ளது.

தழைதல் என்னும் சொல் அடிகளால் விருப்பமுடன ஆளப்படுவதாகும். 'அவனி **தழைந்திட** மவுலி புனைந்தவள்'[8], 'அழகு **தழைந்த** கல்யாண சவுந்தரி'[9], 'மதுரைப் **பதிதழை யத்தழையுங்கொடி**'[10], என்று ஆண்டுள்ளவாறு, இந்நூலிலும்,

> 'தானின் றுலகு தழையத் தழைந்த தமிழ்மதுரைக்
> கானின்ற பூங்குழற் கர்ப்பூரவல்லி', [11]

என்று கூறக் காண்கிறோம். இவை மீனாட்சியம்மையைக் குறிப்பனவாக இருத்தலும் ஈண்டு எண்ணத்தகும். அம்மையை இந்நூலில் 'கர்ப்பூரவல்லி' என்றும் 'அபிடேக வல்லி' என்றும் குறித்தல்[12] பிறநூற் பாடல்களிலும் அடிகளின் ஆட்சியாக விளங்குவனவே எனலாம்.

---

1. மீ.இ. மாலை,2
2. 350 3. 127
4. 28 (வார்க்குன்றுஇரண்டு); 59 (வடக்குங்குமக்குன்று இரண்டு)
5. மீ.இ.மாலை,2
6. 132
7. கு.பி.தி. (உ.வே.சா. பக்.98
8. 19,20,21, 9. 80,81,82,83
10. 32, 11. மீ.இ. மாலை 6.
12. மேற்படி 7,8,10,11

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின், 'மலைவல்லி கர்ப்பூர வல்லியபி ராமவல்லி மாணிக்க வல்லிமர கதவல்லி யபிடேக வல்லி சொற்றமிழ் தழையவே' 'என்று வரும் பகுதி ஒப்பு நோக்கத்தகும்.'கர்ப்பூர வல்லிதலை கவிழ்ந்து நிற்ப' [2], 'அம்பொன்முடி முடிசூடும் அபிடேக வல்லியொடும்'[3] என்ற பகுதிகளும் கருதத்தக்கவையாகும்.

அம்மையைக் 'கதம்பவனத்தேயிருந்த கள்வி' [4] என்றும், 'சொக்கர் வஞ்ச நெஞ்சைக் கரைக்கும் கனகள்வி' [5] என்றும் இந்நூலில் அழைக்கக் காண்கிறோம். முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழில் தையனாயகியம்மையைக் குறிக்கும்போது, 'இடைநுடங்கு மடநடை இளங்குமரி எனஇருந்த கனகள்வியை' [6] என்று கூறக் காண்கிறோம். சிவனை, 'ஒருதனிக்கள்வ' [7] என்பதும் ஒப்புநோக்கத்தகும். 'கள்ளம் பழுத்தகட் கடைசியர்' [8] என்றும் 'தாக்கணங் கனையார், கள்ளவாட் கருங்கண் ணேறு' [9] என்றும் பெண்களைக் குறிக்கும் இடங்களில் கள்ளமாம் தன்மையை ஏற்றிக் கூறியிருத்தலும் கருதத்தகும். எனவே 'கள்வி' என்னும் ஆட்சி, இந்நூல் அடிகளால் பாடப்பட்டதென்பதை வலியுறுத்தி நிற்கிறது எனலாம்.

கருத்து ஒப்புமை

அடிகளின் பிற நூற்பாடற் கருத்துக்களோடு ஒப்புமையுடையனவாகச் சில பகுதிகள் சுட்டிக் காட்டத்தகும். சிவன், மீனாட்சியின் பாதத் தாமரையை ஊமத்த மலரோடு முடியில் கொண்டுள்ளான் என்பதை வியந்து கூறும் கருத்து இந்நூலில் இடம் பெற்றுள்ளது.[10] இஃது ஊடற்காலத்தில் சிவன் அம்மையின் பாதங்களை வணங்கிய குறிப்புடையதாகும். இக்கருத்துப் பல இடங்களில் அடிகளால் கூறப்பட்டிருத்தல்[11] ஒப்புநோக்கத்தகும். அம்மை, எட்டுப் போர்க்களிறுகளால் ஏந்தப்படும் இந்திர விமானத்தில் வீற்றிருத்தல் கூறப்படுகிறது.[12] அம்மையின் பிள்ளைத் தமிழிலும் இச்செய்தி கூறப்பட்டிருப்பதை[13] உ.வே.சா அவர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர்.[14] 'அம்மையை விஞ்சி வருகின்ற எமனே! உன் செயல்கள் தக்கனவல்ல; உன் கருத்து என்ன?' [15] என்று எமனைப் பார்த்து வினவும் முறையில் எமபயமின்மை இந்நூலில் சுட்டப்படுகிறது. அடிகள்,

---

1. 2
2. 108
3. 105
4. மீ.இ.மாலை 3
5. மேற்படி 10
6. 352
7. 463
8. 418
9. 205
10. மீ.இ.மாலை 8
11. 46, 54, 58, 67, 70
12. மீ.இ.மாலை 12
13. 3
14. கு.பி.தி.(உ.வே.சா.) பக். 526 (அடிக்குறிப்பு)
15. மீ.இ.மாலை 11

'கூற்றெமை விட்டுஏகு' [1] என்றும், 'அங்கயற்கண், அம்மையிடங் கொண்டாரை யஞ்சலித்தேம் அஞ்சலம்மற்று, இம்மையிடம் கொண்டார்க் கினி' [2] என்றும், வேறு பல இடங்களிலும்[3] இறையடிவராகிய தமக்கு எமபயமில்லை என்று கூறுதல் நினைக்கத்தகும்.

நெஞ்சமே இறைவியின் கோவில் என்றும் அதில் 'ஏழாய் விளக்கிட்டிரு' என்றும் வேண்டக் காண்கிறோம்[4]. 'தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே' [5] என்று அடிகள் கூறுதல் இங்கு ஒப்புநோக்கத்தகும். இறைவனைக் கற்பக தருவாக இந்நூலிற் கூறியிருத்தல்[6], 'செக்கர் வார்சடைக் கற்பக தருவே' [7], 'தில்லைவனப் பூங்கற்பகத்தைப் புகழ்மினோ' [8] என்று அடிகள் குறிப்பிடும் கருத்தேயாகும். உ.வே.சா அவர்களும் இவ்வொப்புமையைச் சுட்டியுள்ளமை குறிக்கத்தகும்.[9] அம்மையே பாட்டுவிப்பதும் கேட்பதும் ஆகிய ஆடல்புரிகின்றாள் என்னும் இந்நூற் கருத்து,[10] சிதம்பர மும்மணிக் கோவையில், இறைவன் ஆணையால், தாம் பாடுவதாகவும், யாவர் கூற்றும் இறைவன் ஏவலின் நிகழ்வன என்றும் அடிகள் கூறுவதை[11] ஒத்துள்ளமை உணரத்தகும்.

கற்பனை முதலிய நயங்கள்

மீனாட்சியம்மையின் கருங்கண் செய்ய மீன் நின்று உலாவி விளையாடுமிடம், வெள்ளி மன்றத்தில் ஆடும் ஆனந்தமாக்கடலே என்று இந்நூலில் விளக்கப்படுகிறது.[11அ] இதே விளக்கம்,

> 'முருகுயிர்க்கு நறுந்தெரியன் மொய்குழலின் மையுண்கட்
> பொருகயற்குன் திருமேனி புதுவெள்ளப் புணரியே'

என்னும் பகுதியில்[12] இடம் பெற்றிருத்தல் அறியத்தகும். அம்மையின் கண்கள் இறைவன் திருமேனியழகில் ஈடுபட்டுத் திளைக்கும் என்னும் கருத்தை இவ்வாறு கற்பனை நயம்படக் கூறும் முறையில் ஒப்புமை அமைந்திருப்பதை உ.வே.சா. அவர்களும் சுட்டியுள்ளனர்[13].

மதுரேசர் செல்வமும், பாம்பும் உடையவர்[14] என்ற இருபொருள்படுமாறு, 'பணம்' கொண்டிருப்பதாகக் கூறுவதும்,

1. 152
2. 174
3. 318, 320, 465
   சிவ.இ.மாலை 7
4. 9 5. 62
6. மீ.இ.மாலை 12
7. 121
8. 549
9. கு.பி.தி.(உ.வே.சா)
10. மீ.இ.மாலை 7
11. 472 : 32-36
11அ. மீ.இ.மாலை 6
12. 537
13. கு.பி.தி. (உ.வே.சா)
    பக் 523 - 524
14. மீ.இ. மாலை 4

சொல்நயத்துக்குச் சான்றுகளாகும். இறைவனுக்குக் கன்னிநாடு ஈந்தும் தினமும் இரக்கின்றான் என்றும் சுவைபடக் கூறப்படுகிறது[1]. இவ்வாறு அமைப்பதில் அடிகள் மிக்க ஈடுபாடு உடையவர் என்பது தெளிவு. ஒரு பாடலில் நெஞ்சத்தையே மணவறையாக உருவகிக்கும் அணிநலம் காணப்படுகிறது. அம்மை சொக்கரைத் தழுவுவதும், புலந்து நிற்றலும், தயவுக்குள்ளாகி வருதலும் நெஞ்சமாகிய மணவறையில் வாய்க்கும்[2] என்று அம்மையின் திருவிளையாடல்களை மனமாகிய மணவறையில் நிகழ்வதாகக் கூறும் அழகு குறிக்கத்தக்கதாகும். இவ்வாறு கற்பனை முதலிய நயங்கள் அமைந்துள்ளன. தன்னைத் தாழ்த்திக் கூறுதலும் தன்பால் தவறுகளை ஏற்றிக் கொள்ளுதலும், அன்பு இல்லையே என்று ஏங்கி உரைத்தலும் காண்கிறோம்[3]. இவை அடிகளின் இயல்புகள் என்று கருதுதல் சாலும். இந்நிலைகளால் இந்நூல் அடிகளால் அருளப் பெற்றது என்றே கொள்ளலாம்.

தனியாகக் காப்புச் செய்யுள் இந்நூலுக்கு இல்லை. அம்மையின் அருள் பெற்றவர்களுக்குப் பிறவித்துயரம் இல்லை என்றும்[4], அம்மை கருத்தில் புகுந்ததால் கலைமகளும் நாவில் புகுந்தாள் என்றும்[5], அடியவர்கள் துறக்க இன்பம் நுகருமாறு அம்மை மதுரையில் வீற்றிருப்பவள் என்றும்[6] இந்நூலில் அம்மையின் பெருமையும் சிறப்பும் காட்டப்படுகின்றன.

6. மதுரை மீனாட்சியம்மை குறம்

'இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமுந்
திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே'[7]

என்ற இலக்கணத்திற்கேற்பக் குறத்தி குறி சொல்லுவதாக அமைந்த நூல் இது. மதுரை இறைவன் மீது காமுற்ற தலைவி ஒருத்தியிடம் குறத்தி குறி கூறும் முறையில் மீனாட்சியம்மையின் பெயரும் புகழும் சொல்லப் பெறுகின்றன. குறத்தியின் பொதியமலைச் சிறப்பும், அவளது

---

1. மீ.இ.மாலை 5
2. மேற்படி 2
3. மேற்படி 14, 16
4. மீ.இ.மாலை 1
5. மேற்படி 15
6. மேற்படி 19
7. பன்னிரு பாட்டியல் 336

வரலாறும், குறிச்சிறப்பும் விரிவாக இடம் பெற்றுள்ளன. அம்மைக்குரிய தசாங்கமும் கூறி வாழ்த்தும் முறையில் நூல் முடிவுறுகிறது.

'வருங்காலம், நிகழ்காலம், கழிகாலம் ஆகிய மூன்று காலங்களையும் ஒக்க வகுத்துப் பார்த்துத் தருகாலம் தெரிந்து உரைப்பது எளிது; அரியது அன்று எங்கள் குறச்சாதிக்கு' [1] என்று குறத்தி கூறுவது முற்குறித்த இலக்கணத்தை நினைவூட்டுவதாகும். முதலில் விநாயகர் காப்புப் பாடல் ஒன்றும் அடுத்துக் குறத்தியின் கூற்றாக 51 பாடல்களும் ஆக 52 பாடல்கள் இந்நூலில் உள்ளன. இவற்றில் 29 பாடல்கள் சிந்து என்னும் இசைப் பாடல்களாக இருத்தல் குறிக்கத்தகும்.

அடிகள் பாடல்களுடன் ஒப்புமை

முன்னர்க்கூறியபடி இந்நூலும் அடிகளால் இயற்றப் பெற்றதென்பதே பெருவழக்காக உள்ளது. அதற்கேற்பச் சொற்பொருள் ஆட்சிகள் சுட்டிக்காட்டத்தகும். மதுரை இறைவனைப் பழியஞ்சியார் [2] என்றும் 'பழியஞ்சிச் சொக்கர்'[3] என்றும் குறத்தி குறிப்பிடுதல் அடிகளின் வாக்காக மதுரைக் கலம்பகத்தில் பயில ஆளப்பட்டிருப்பதே[4] எனலாம். மதுரைத் தல வரலாற்றுக்கேற்ப இவ்வாறு குறிப்பிடுதல் அடிகளின் வழக்கமாகக் கருதத்தகும். 'பரசிருக்கும் தமிழ்க்கூடல்' [5] என்று இந்நூலில் ஆளும் தொடர், 'பரசிருக்கும் தமிழ்மூவர்' [6] என்ற அடிகளின் தொடரோடு தொடர்புடையதெனலாம்.

'பொய்க்குறிய சிறுமருங்குல்' [7] என்று அமைந்துள்ள தொடர், 'பொய்வந்த நுண்ணிடை' [8] என்ற அடிகளின் தொடர்க்கருத்தை அவ்வாறே பெற்றிருத்தல் கருதத்தகும். பொய்யான இடை, இல்லை என்னும் இடை என்றாற்போல் கூறுதல் அடிகளின் இயல்பு எனலாம். 'ஈயா மாக்கள் தீமொழி கவர்ந்த, சிற்றிடை'[9] என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். 'தென்னந்தமிழும் பசுங்குழவித், தென்றற் கொழுந்தும் திளைக்குமலை'[10] என்று இந்நூலில் பொதியமலைச் சிறப்புக் கூறப்படுகிறது. 'தென்னந்தமிழினுடன் பிறந்த சிறுகால்' [11] என்று அடிகள் தமிழையும் தென்றலையும் இணைத்துக் கூறியிருப்பதும்,

---

1. மீ.கு. 24
2. மீ.கு. 5
3. மீ.கு. 50
4. 135, 158, 133
5. மீ.கு. 50
6. 515
7. மீ.கு. 11
8. 35
9. 569 : 2-3
10. மீ.கு. 14
11. 24

தென்னந்தமிழ் என்ற சொல்லாட்சி அமைத்திருப்பதும் உணரத்தகும். தென்றலைக் கொழுந்து என்று ஆளுதலும் அடிகளின் வழக்கமாகும். 'கொழுந்து ஒன்று தென்றல்' [1] என்று மதுரைக் கலம்பகத்தில் அமைத்திருத்தல் ஈண்டுக் கருதத்தகும். 'வடகலை தென்கலை பயிலுமலை' [2] என்று பொதியமலை கூறப்படுகிறது. இது 'வடகலை தென்கலை பலகலையும் பொதிமதுரை வளம்பதியே' [3] என்றும் 'வடகலை தென்கலையோடு பயிலும் கவிவாணர்கள்' [4] என்றும் அடிகள் அமைத்திருக்கும் தொடர்களை நினைவுறுத்துகின்றது.

'அம்பொன்முடி சூடுமெங்கள் அபிடேகவல்லி' [5] என்ற இந்நூல் தொடர், 'அம்பொன்முடி முடிசூடும் அபிடேகவல்லியோடும்' [6] என்ற அடிகளின் ஆட்சியை நன்கு காட்டி நிற்கிறது. அம்மையின் சீறடியைப் பாடும்பொழுது குறத்தி கூற்றாக,

'கான்மணக்கும் சடைக்காட்டிற் கவின்மணக்குங் கடிக்கொன்றைத்
தேன்மணக்கும் பிறைநாறும் சீறடியைப் பாடுவனே'

என்று வருகிறது [7]. சிவனுடைய சடையிலுள்ள கொன்றையும் பிறையும் நாறும் சீறடி என்பது, சிவன் ஊடற்காலத்தில் அம்மையைப் பணிந்த குறிப்புடையதாகும். இக்கருத்தை அடிகள் தம் பாடல்கள் பலவற்றில் குறிப்பிட்டிருத்தல் [8] அறியத்தகும்.

குறத்தி குறி சொல்லும்போது தும்மல் தோன்ற அதனை நன்னிமித்தமாகத், 'தும்மலும் நல்லதேகாண்' [9] என்கிறாள். அடிகளின் மதுரைக் கலம்பகத்தில் குறம் என்னும் உறுப்பில் பாடப்பட்டுள்ள பாடலில் 'தும்மலும் நல்வரத்தே காண்' என்று குறிப்பிடக் காண்கிறோம்; அன்றியும் அப்பாடலில் சுளகில் நெற்குறிபார்த்தலும் கூறப்படுகிறது[10]. நெற்குறியின் விரிவு இந்நூலிலும் காட்டப்படுகிறது[11]. அடிகளின் மதுரைக் கலம்பகம், காசிக் கலம்பகம் ஆகிய இரண்டிலும் குறம் என்ற உறுப்பில் பாடல் இடம் பெறுதல்[12] குறிக்கத்தக்கதாகும். கலம்பக உறுப்பாகக் குறம் பாடியுள்ள அடிகள் மீனாட்சியம்மை குறத்தையும் பாடியிருத்தல் கூடுவதே. "குறச்செய்யுளின் சிறப்பு விரியை இவ்வாசிரியர் பாடியுள்ள 'மீனாட்சியம்மை குறம்' என்ற நூலிற் காணலாம்" [13] என்று பு.சி. புன்னைவனநாத முதலியார் குறிப்பிடுதல்

1. 109
2. மீ.கு.15
3. 204
4. 437
5. மீ.கு. 16
6. 105
7. மீ.கு.45
8. 46, 54, 58, 67, 70
9. மீ.கு. 27
10. 181
11. மீ.கு.26
12. 181, 641
13. மது, கலம், பு.சி.பு. உரை பக். 93

இங்குக் கருதத்தகும். 'மதுரைத் தேவர் (சிவன்) மணம் தடாதகா தேவிக்கு அன்று சொல்லிட்ட குறமகள் யான்' [1] என்று மதுரைக் கலம்பகத்தில் கூறியுள்ளதற்கேற்ப இந்நூலில்,

'முன்னொருநாள் அம்மைதடா தகைபிறந்த நாளின்
முகக்குறிகண் டிவளுலகம் முழுதாளும் என்றேன்
பின்னொருநாள் கைக்குறிபார்த் தம்மையுனக் கெங்கள்
பிஞ்ஞகர் தாம் மணவாளப் பிள்ளையென்று சொன்னேன்
அன்னையவள் மெய்க்குறிகள் அனைத்தையும்பார்த் துனக்கோர்
ஆண்பிள்ளை யுண்டுபிறந் தரசாளும் என்றேன்'

என்று [2] முன்னும் பின்னும் விரித்துக் குறி கூறியமை உணரத்தகும். 'கார்கொண்ட' [3] என்று இந்நூல் தொடங்கியிருப்பதும் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழும், 'கார்கொண்ட' [4] என்று தொடங்கியிருப்பதும் நினைக்கத்தகும். இவ்வொப்புமைகள், இந்நூல் அடிகளால் பாடப்பெற்றதே என்பதை நன்கு வலியுறுத்தி நிற்பனவயாகும்.

பொதியமலைச் சிறப்பு

இந்நூலில் குறத்தியின் மலையாகிய பொதியமலையின் சிறப்புக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அங்கயற்கண்ணம்மையின் மலை என்பது முதற்கண் நினைவு கூரும் சிறப்பாகும்[5]. மீனாட்சியின் பாண்டி நாட்டில் இருத்தலால் இவ்வாறு உரிமை கூறப்படுகிறது எனலாம். மதிதவழும் குடுமியை உடையது தென்பொதியமலை;[6] பொன்னும் முத்தும் சொரியும் வெள்ளருவி திகழ்வது;[7] தமிழ்முனிவனாகிய அகத்தியன் குடியிருப்பது[8].

'திங்கள்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு வருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை என்மலையே' [9]

என்பது பொதியமலைச் சிறப்பையும், அம்மையின் அருளையும் உடன் உணர்த்தும் பாடலாக அடிக்கடி எடுத்தாளப்படுவதாகும். வடக்கே உள்ள

---

1. 181
2. மீ.கு.23
3. மீ.கு. 1
4. 2
5. மீ.கு. 1
6. மீ.கு. 1
7. மீ.கு. 2
8. மீ.கு. 3, 16
9. மீ.கு. 13

இமயமலையைக் காட்டிலும் அழகுமிக்கது பொதியமலை என்று புகழக் காண்கிறோம்[1]. கந்தவேள் விளையாடுமலை; கனக நவமணி விளையுமலை;[2] சிங்கமும் களிறும் உடன்விளையாடும்; புலியும் மானும் பகையின்றி விளங்கும்; கரடி மரையொடு விளையாடும்; விடப்பாம்பும் மடமயிலும் விருந்தயரும்[3] என்று குறத்தி உயர்த்திப் பேசுகிறாள்.

மலைவளம் இனிது காட்டப்படுகிறது. குறவர்கள் கொழுங்கொடி வள்ளிக்கிழங்கு கல்லி எடுப்பர்; குறிஞ்சி மலர்களை முல்லைக் கொடியில் வைத்துத் தொடுப்பர்; பழச்சாறும் தேறலும் வாய்மடுப்பர்; பசுந்தழையும் மரவுரியும் உடுப்பர்; செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தினர்க்குக் கொடுப்பர்; புலித்தோலில் படுப்பர்[4]. புதுத்தினை பாறை முன்றில் தொறும் உணங்கும்[5]. இவ்வாறு பொதியமலைச் சிறப்பும் வளமும் காண்கிறோம்.

குறத்தி வரலாறு

குறத்தியின் குலம், முருகனுக்குப் பெருந்தடங்கண் கொச்சைச் சிறுமியாகிய வள்ளியைக் கொடுத்த பெருமை உடையது[6]. சிவனும் முருகனும் தங்கள் குடியைச் சேர்ந்தவர்களே என்று உரைக்கும் முறையில் குறத்தி தன் வரலாற்றுப் பெருமையைப் பேசுகிறாள். வெள்ளிமலைக் குறவனாகிய சிவனுக்கு மகன் பழனிமலைக் குறவன்; அவன் வள்ளியைக் கொண்ட காலத்தில் சீதனமாக மலையாட்சி குறவர்களால் வழங்கப்பட்டது; ஆயின் குறத்தியின் கணவன் மற்றொருத்தியைக் கொண்டதிலிருந்து பிள்ளை தனக்கு எண்ணெயில்லை; அரைக்கும் ஒரு துணியில்லை; குடிக்கக் கஞ்சியுமில்லை என்று தன் வறுமை நிலையைக் குறத்தி கூறுகிறாள்[7]. எனவே தான் குறிசொல்வதற்கு உதவியாக ஒருகாலங்கஞ்சியும் தன் குஞ்சு தலைக்கு எண்ணெயும் ஓர் உடுப்பும் இரந்து கேட்கும் நிலையில் விளங்குகிறாள்[8]. 'தூசும் ஒரு காசும் வை' என்றும் கேட்கிறாள். நெல்லும் தரவேண்டுகிறாள்[9]. தமிழ்ப்பாண்டி நன்னாடும் பிறநாடும், காடும், மலையும் திரிந்து குறிசொல்லிக் காலம் கழிப்பதாகவும், எனினும்

1. மீ.கு. 12
2. மீ.கு. 15
3. மீ.கு. 16
4. மீ.கு. 18
5. மீ.கு. 19
6. மீ.கு. 17
7. மீ.கு. 20
8. மீ.கு. 24
9. மீ.கு. 10
10. மீ.கு. 26, 6

குறவனுக்குக் கஞ்சி வாராதென்றும் தன் நிலையைக் குறத்தி உரைக்கிறாள்[1]. இவ்வாறு குறத்தியின் குலப்பெருமையும், வறுமை வாழ்வும் புலப்படுத்தப்படுகின்றன.

குறிச்சிறப்பும் குறிகூறும் முறையும்

குறி சொல்லுதற்குமுன் புழுகால் தரையினை மெழுகுமாறும், பிள்ளையார் வைக்குமாறும், கோலமிடுமாறும், நிறைநாழி நெல்லளந்து வைக்குமாறும் குறத்தி பணிக்கிறாள்[2]. குங்குமம் சந்தனம் குழைத்துத் தரை மெழுகிக் கோலமிட்டுக் குங்கிலியக் கொழும்புகைகாட்டிச் செங்கனக நவமணிகள் பரப்பித் தென்மேற்கு மூலையில் பிள்ளையார் வைத்து, மலரும், அறுகம் புல்லும் சாத்திப் புழுகுநெய் வார்த்து. விளக்கேற்றி, நிறை நாழி நெல் வைத்து அதன்பின் அம்மையை மனத்தில் வைத்துக் குறிசொல்லத் தொடங்குகிறாள் குறத்தி[3]. இவ்வாறு குறி கூறுவோர் மேற்கொள்ளும் வழக்கம் உரைக்கப்படுகிறது.

குறத்தி தன் முன்னோர் கூறியவாறு பல நிகழ்ச்சிகளும் நடந்தேறியுள்ளன என்றும், தான் கூறியவாறும் அவ்வாறே நிகழ்ந்துள்ளன என்றும் பெருமையோடு கூறிக் கொள்கிறாள். வள்ளிக்கு இளையவளாகிய குறத்திப் பாட்டி கூறியபடி திருமகள் திருமால் மார்பில் பொலிகின்றாள்; பெரியதாயாகிய குறத்தி சொன்னதுபோல் கலைமகள் நான்முகன் நாவில் வாழ்கின்றாள்; நற்றாயாகிய குறத்தி நவின்றதுபோல் இந்திராணி இந்திரனை அடைந்துள்ளாள்; சிறிய தாயாகிய குறத்தி சொன்ன குறிக்கு அளவில்லை; கன்னிமார் அறியச் சொல்கிறேன் இவை பொய்யில்லை; நாங்கள் சொன்ன சொல் தப்பாது[4], என்று குறத்தி தன் முன்னோர் குறிப் பெருமையை உணர்த்துகிறாள். தடாதகை உலகாளுவாள் என்றும், அவளுக்குச் சிவனே மணவாளன் என்றும், ஆண் குழந்தை பிறந்து அரசாளும் என்றும் சொல்லியபடி பலித்ததைத் தனது குறிப்பெருமையாகச் சொல்கிறாள்[5]. இவ்வாறு குறிகேட்போர் மனத்தை ஈர்க்கும் முறையில் பேசும் சொல்லாற்றலும் உலகியல் நுட்பமும் உடையவளாகக் குறத்தி காட்டப்படுகிறாள்.

---

1. மீ.கு. 21
2. மீ.கு. 6
3. மீ.கு. 25
4. மீ.கு. 22
5. மீ.கு. 23

சொக்கர்பால் கருத்திழந்த தலைவியிடம் குறத்தி, அவர் அவளைக் கூடுவார் என்று குறி கூறுகிறாள்[1]. பேசும் தன் குறி மோசமென்றிடில் யார்சொலும் பரியாசமே என்று தன் குறியின் உறுதிப்பாட்டை உணர வைக்கிறாள்[2]. பல்வேறு குறிமுறைகளில் குறி கூறக்காண்கிறோம். கைக்குறியை விட முகக்குறி நன்றாக உள்ளது; கவுளி சொல்லும், இடப்புறத்தே இன்று கேட்கிறது; சத்தமாதராகிய கன்னிமார் வந்து இக்குறி நன்று என்கின்றனர் ; இடக்கண்ணும் துடிக்கிறது; எனவே சிவனை அடைதல் உறுதி என்று கூறுகிறாள்[3]. நெற்குறியும் கூறுகிறாள். நாழிநெல்லை முக்கூறுசெய்து ஒருகூற்றை இரட்டைப்பட எண்ணியபோது ஒற்றைப்பட்டதால் எண்ணின கருமம் இமைப்பினில் கைகூடும் என்கிறாள்[4]. நெல் அளந்து தந்தபோது நிமித்தம் நன்று என்றும், இடத்தெழுந்த பல்லியும் வரத்தே சொன்னது என்றும், பத்தினிப் பெண்டிர் வாய்ச்சொல் நல்லதாக உள்ளது என்றும், தும்மலும் நல்லதே என்றும், ஆந்தைக் குரலும் அழகிது என்றும் நன்னிமித்தங்கள் கூறப்படுகின்றன[5].

மெய்த்தோற்றம் கண்டு குறி கூறுதல் காட்டப்படுகிறது. தலைவி தன் கையை மார்பில் வைத்திருப்பதால் சொக்கர் அணைவார் என்றும், மேற்குத் திசையில் கையெடுத்ததால் அவர் அந்திப் பொழுதில் வருவார் என்றும், கைமேல் கை கட்டியதால் தப்பாமல் நினைத்த செயல் கைகூடும் என்றும், மணிவயிற்றில் கைவைத்ததால் சிறுவர் பதினறுவரைப் பெறுவாள் என்றும் கூறுகிறாள் குறத்தி[6]. பதினாறு பேறுகள் என்று கூறும் வழக்கு உண்டெனினும் மக்கள் வழக்கில் பதினாறு பிள்ளைகள் என்னும் பொருள் வழக்கே கொள்ளப்படுவதால் அடிகளும் குறத்தி கூற்றில் வழக்குப் பொருளையே அமைத்தனர் என்று கொள்ளலாம்.

இரேகைப் பலனும் கூறப்படுகிறது. தனரேகையைப் பார்த்து அளவில்லாச் செல்வம் தரும் என்றும், துடி எனப்படும் தமருகஇரேகை அமைப்பு மதுரேசர் புயத்தில் தலைவியைச் சேர்க்கும் என்றும், புத்திரரேகை யாருக்கும் இல்லாதவாறு தலைவிக்கு உள்ளது என்றும்,

---

1. மீ.கு. 4,5,7,8,9,10,11
2. மீ.கு. 8
3. மீ.கு. 11
4. மீ.கு. 26
5. மீ.கு. 27
6. மீ.கு. 29

தோளில் உள்ள மச்சம் தலைவியை அங்கயற்கண்ணியோடு இருக்கத்தரும் என்றும் பல்வகை இரேகைகளைப் பார்த்துக் கூறக் காண்கிறோம்[1].

மீனாட்சியம்மை பெருமை

அம்மையின் பெருமைகளை விரிவாகப் பேசக் காண்கிறோம். 'கயற்கணி காலில் விழுந்து வினைகெடுப்போம்' [2] என்று குறத்தி கூறும்போது அம்மையே அவர்களை வாழ்விப்பவள் என்பது உணர்த்தப்படுகிறது. தலைவியின் கைக்குஉரிய குறிப்பயன்களை விளக்கும் போது, அம்மையைக் கும்பிடும் கை என்றும் கூறுதல் காண்கிறோம்[3].

குறிகூறி முடிக்கும்போது அம்மையின் தசாங்கம் கூறப்படுகிறது. அம்மைக்குத் தென்பொதியம் மலை; கடலில் கலக்காத வைகையே ஆறு; அம்மை தென்பாண்டி நாட்டினள்; பன்மாடக் கூடலாள்; வேப்பந்தாரினள்; கனவட்டப் பரியினள்; திசையானைகளை வென்ற யானை உடையவள்; மீனக் கொடியினள்; திசைஎட்டும் தனியாணை உடையவள் என்று கூறக் காண்கிறோம் ; முரசு என்னும் உறுப்பு வெளிப்படையாகக் கூறப்படாவிடிலும் 'இனியானையிலே அரசர்க்கு என்று' கூறியிருப்பதை முரசறைந்து சொல்லுவதைக் குறிப்பதாகக் கொள்ளத்தகும்[4]. பாண்டி நாட்டரசி என்ற தொடர்பில் இவ்வாறு கூறப்படுகின்றன. நாடாண்ட சிறப்பும், சிவனை மணந்து நாடளித்தமையும், உக்கிரகுமாரனை ஈன்றமையும் கூறப்படுகின்றன; குறியும் குணமும் இல்லாத இறைவனுக்கு வளைக்குறியும் முலைக்குறியும் அணிந்திட்ட மொய்குழல் என்றும் அம்மையைக் கூறுகிறாள்[5]. குறத்தி கூற்றாக இவ்வாறு பொருத்தமுறக் கூறுதல் அடிகளின் புலமைநலத்தை உணர்த்தி நிற்கிறது.

'ஒன்றாகி அனைத்துயிர்க்கும் உயிராகி எப்பொருளும்
அன்றாகி அவையனைத்தும் ஆனாளைப் பாடுவனே'

என்று[6] அம்மையின் இயல்பு சித்தாந்த முறையில் உணர்த்தப்படுகிறது.

---

1. மீ.கு. 30
2. மீ.கு. 18
3. மீ.கு. 28
4. மீ.கு. 31-39
5. மீ.கு. 48
6. மீ.கு. 50

திருமலை மன்னன் பற்றிய குறிப்பு

குறிகூறி முடிக்கும்போது குறத்தி கூற்றாக, இறைவன் இறைவியை வாழ்த்தி நாட்டு மன்னனாகிய திருமலை நாயக்க மன்னனையும் வாழ்த்தியுள்ளார் அடிகள்[1]. அடிகளின் காலம் பற்றி அறிவதற்குத் தெளிவான அகச்சான்றாக இக்குறிப்பு உதவுகிறது.

திருவாரூர் நான்மணிமாலை

வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம் என்னும் பாக்களில் 40 பாடல்கள் அமைப்பது நான்மணிமாலை ஆகும்[2]. அடிகளின் இந்நூல் நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரியவிருத்தம், நேரிசை ஆசிரியப்பா என்ற முறையில் 40 பாடல்கள் அந்தாதியாக அமைய இயற்றப் பெற்றதாகும். விநாயகர் காப்புடன் 41 பாடல்கள் உள்ளன. திருவாரூர்த் தியாகேசர் பற்றியது இந்நூல்.

திருவாரூர்ச் சிறப்பு

திருவாரூரை ஆரூர் என்றும்[3], அந்தண் ஆரூர் என்றும்[4], கமலை என்றும்[5], கமலாலயம் என்றும்[6] அடிகள் அழைக்கின்றனர். கமலை என்னும் பெயரே பயில வழங்கப்பட்டுள்ளது. மண்மகளுக்கு இதயகமலமாக விளங்குவது இவ்வூர் எனப்படுகிறது[7]. கமலா என்பது திருமகளைக் குறிப்பது என்றும், அவள் இவ்வூரில் தங்கித்தவம் புரிந்ததால் கமலாலயம் என்ற பெயர் வந்ததென்றும் காரணம் கூறுவதுண்டு. ஆயின் திருமாலின் இதயகமலத்திலும், திருமகளின் இதயகமலத்திலும் திருவாரூர் இறைவன் விளங்குதலால் கமலாலயம் என்ற பெயர் அமைந்தது என்று அடிகள் மற்றொரு காரணம் கூறுகின்றனர்[8]. ஆரூரின் நீர்வள நில வளங்களும், மக்கள் இன்ப வாழ்வும் பல பாடல்களில் விரிவாகக் கூறப்படுகின்றன[9]. இங்குப் பிறந்தவர்களுக்கு மீண்டும் பிறப்பில்லை என்றும், இங்குள்ளோர் சிவகணங்களாகவே பொலிகின்றனர் என்றும் அடிகள் உணர்த்துகின்றனர்[10]. திருவாரூர்த் தேர்ச்சிறப்பும் கூறப்படுகிறது[11].

---

1. மீ.கு. 51
2. வெண்பாப் பாட்டியல் 16
   பன்னிரு பாட்டியல் 257
3. 313, 327, 330
4. 312
5. 316, 317, 320
6. 315
7. 315, 327
8. 315
9. 312, 316, 320
   324, 328, 332
10. 336
11. 309

தியாகர் அருளும், பெருமையும்

திருவாரூர்த் தியாகருடைய அருளும், பெருமையும் நன்கு உணர்த்தப்படுகின்றன. தியாகர், தியாகேசர் என்ற பெயர்ப் பொருத்தத்தை நினைக்கும்போது இறைவன் இடக்கரமே வரதம் தருவது என்றும் அஃது அம்மையின் கூறாதலால், வலக்கையில் பிச்சை ஏற்றிருக்கும் இறைவனைத் தியாகர் என்பது பொருந்தாது என்றும், அறம் வளர்த்த அம்மையின் தொடர்பு பற்றியே அப்பெயர் வந்தது போலும் என்றும் கூறுகிறார்[1]. ஆயின் இவ்வையத்தை மற்றோரிடத்தில் தெளிவுபடுத்துகிறார். திருமாலுக்கு நிலமகளை அளித்தும், குபேரனுக்கு நவநிதியும் அளித்தும், அடியவர்களுக்கு வீடளித்தும், அம்மைக்கு உடம்பில் ஒரு கூறு அளித்தும் விளங்குதலால் தியாகர் என்பது இவர்க்கே தகும்; இது முகமன் அன்று; புகழுமன்றாம் என்கிறார்[2]. இவ்வாறு தியாகர் அருட்பெருமை நாட்டப்படுகிறது. வீதிவிடங்கர் என்பது தியாகர்க்குரிய மற்றொரு பெயர்[3]. டங்கத்தினால் (உளியினால்) செய்யப்படாதவர் என்ற பொருளில் சுயம்புவாக உள்ள நிலையையும் ஏனைச் சுயம்புகள் போலாது வீதியிலும் எழுந்தருளும் நிலையையும் குறிக்கும் முறையில் வீதிவிடங்கர் என்னும் பெயர் விளங்கக் காண்கிறோம்.

இருந்த நிலையில் ஆடும் இறைவனாக இருத்தல் பற்றி இருந்தாடுபவர் என்பதும் திருவாரூர் இறைவனுக்குரிய பெயராக வழங்குகிறது. திருவடிதெரிய நின்றாடினால் முன்னர்த் திருவடி காணாது மயங்கிய திருமால் கண்டதாகக் கூறக்கூடும் என்று கருதியோ, காலால் உதைபட்ட எமன் எடுத்ததிருவடி கண்டால் அஞ்சுவன் என்று நினைத்தோ, இறைவன், இங்கு இருந்தாடுகிறான் என்று அடிகள் காரணம் குறிப்பிடுகின்றார்[4]. திருமால் அறியாத பெருமையும், எமனை உதைத்த நிகழ்ச்சியும், அதனால் மார்க்கண்டேயர்க்கருளிய திறமும் இப்பெயர் விளக்கத்தால் உணர்த்தப்படக் காண்கிறோம். கிண்கிணிக்காலழகர் என்பது மற்றொரு பெயர்[5]. இதன் வரலாற்றையும் அடிகளே விளக்கக் காணலாம். திருமால் தலைகளைக் கிண்கிணியாகக்

---

1. 322
2. 331
3. 309, 347
4. 325
5. 327

கோத்துக் காலில் அணிவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், இல்லையேல், அடியைக் கண்டதாகத் திருமால் கள்ளம் மொழியக்கூடும் என்றும் குறிப்பிடுகிறார்[1]. வன்மீக நாதர் என்பதற்கேற்ப இறைவனைப் 'புற்றினில் குடிகொண்டிருந்தார்' என்று குறிப்பிடக் காண்கிறோம்[2]. கூந்தலையுடைய உமையம்மை (மயில்போல்) உடம்பில் இருத்தலால் துணிந்து பாம்புப் புற்றினிற் குடி கொண்டிருந்தார் என்று நயம்பட இச்செயலுக்கும் பெயருக்கும் விளக்கம் தருகிறார். இவ்வாறே கமலேசர்[3], அருமைப்பெருமாள்[4], தேவரகண்டர்[5] முதலிய பெயர்களும் இதய கமலத்தில் இருப்பவர் என்ற சிறப்பையும், அருமையும் பெருமையும் உடையவர் என்ற உயர்வையும், தேவரைக் காத்த நிகழ்ச்சியால் நஞ்சுண்ட கண்டத்தை உடையவர் என்ற அருளையும் முறையே உணர்த்தி நிற்கின்றன.

தியாகர் அருளும் பெருமையும் பிற வகைகளிலும் காட்டப்படுகின்றன. புள்வடிவில் வந்த பகாசுரன் வாயினைக் கிழித்த அம்பை (திருமாலை) உடையவர் என்றும், அவர் பெயர்களைச் சொன்னால் ஆயிரம் கூற்று உடன்றாலும் அஞ்ச வேண்டுவதில்லை என்றும் அடிகள் உணர்த்துகின்றார்[6]. இறைவன் தோளுக்குத் தோற்ற பொன்மலை, நாணால் வணங்கிச் சிலை என்றாயிற்று என்று தோளின் பெருமை நயமுற உணர்த்தப்படுகிறது[7]. பகலும், இரவும், மாலையும் இறைவனது வெள்ளாடை, கரியஆடை, செவ்வாடையாக இருப்பதாகக் கூறுகிறார்[8]. சிவனுக்குத் திசைகளே ஆடை ஆதலின் அத்திசைகள் முப்பொழுதிலும் விளங்கும் நிறங்களை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

மண்மகளின் இதயகமலமாகிய திருவாரூரில் பொலிதலால் தாமரையில் வைகும் பிரமனையும், திருமகள் வழிபட வீற்றிருத்தலால் திருமாலையும் ஒத்துவிளங்கும் சிவனே மும்மூர்த்தியாக விளங்குகின்றான் என்று புலமை நயமுறக் கூறுகிறார் அடிகள்[9]. வேதங்கள் இறைவனைத் தேவருள் முதல்வன் என்று கூறுதல் தகாது என்று விளக்கும் முறையில் இறைவன் பெருமை சுட்டப்படுகிறது.

---

1. 323
2. 342
3. 308
4. 344
5. 324
6. 318
7. 310
8. 313
9. 327

ஒத்தசாதிப் பொருள்களுக்குள்ளேயே உயர்வு தாழ்வு கூறுதல் மரபு. விலங்குகளுள் உயர்ந்தது கற்பகதரு என்று கூறுதல் மரபன்று. ஏனெனில் தரு விலங்கினத்தைச் சேர்ந்ததன்று. இறைவன் எழுவகைப் பிறப்பினுள் ஒன்றாகிய தெய்வப்பிறப்பைக் கடந்தவன். அந்நிலையில் தேவருள் முதல்வன் என்று கூறுவது தக்கதன்று. இவ்வாறு கூறின் இறைவனும் தேவருள் ஒருவன் போலும் என்ற மருட்சி உண்டாகும். ஆயினும் இறைவன் தனது நிலையைத் தானே மறைத்து இவ்வாறு தேவருள் முதல்வன் என்று கூறியதால்தான் மறை என்று கூறுகின்றார்கள் என அடிகள் குறிப்பது பொருட் செறிவுடையதாகும்[1].

'கற்பனை கடந்த கடவுள்' என்றும்[2], 'கண்ணுதற் கடவுள், கற்பனை கழன்று நிற்றலின் நிற்பதுஇந் நிலையெனும் நியமமோ இன்றே' என்றும்[3] இறைவனுடைய கடந்து நிற்கும் விரிந்த நிலை காட்டப்படுகிறது. இந்த உலகத்துக்கு இன்னுயிராக இருப்பவன் இறைவன் ; அவனது சேவடிக்கு ஆளாகியவர்கள் மட்டுமே எமனுக்கு ஆளாகாமல் தப்பலாம்[4] என்று உலகைக் காக்கும் அருள் காட்டப்படுகிறது.

இறைவனைப் புகழ்ந்துரைக்கும் வேதம் இறைவனால் அருளப்பெற்றதெனப்படுவதன் பொருத்தத்தை அடிகள் இலக்கண மரபில் நின்று வினவி விளக்குகிறார். தன் பெருமையை ஒருவன் தானே எடுத்துச் சொல்லுதல் இலக்கண மரபன்று. ஆயின் இறைவன் தன் பெருமையைத் தானே வேதத்தில் கூறுதல் காண்கிறோம். தன்னுடையாற்றல் முன்னார் முன்னர்த் தற்புகழ் கிளவியும் தகும் என்ற இலக்கண நெறிக்கேற்ப இறைவன் தனது பெருமைகளை வேதத்தில் கூறியுள்ளதாக அடிகள் விளக்குகிறார். மேலும் வேதத்தில் இறைவன் நிலை, மயங்க உரைக்கப்பட்டிருப்பதாகக் கூறுதல், திசையறியாத தன் மயக்கத்தைத் வேதத்தின் மேல் வைத்துக் கூறுவதாகும் என்றும் அடிகள் தெளிவாக்குகிறார்[5].

---

1. 328
2. 328
3. 332
4. 333
5. 336

அரிய பெருமான் ஆயினும் தியாகர், கண்ணப்பர் உமிழ்ந்த வாய்நீரை மஞ்சனநீராக ஆடியும், அளித்த மிச்சில் ஊன் மிசைந்தும், செருப்படிக்குச் செம்மாந்திருந்தும், விசயன் வில்லடிபொறுத்தும், பாண்டியன் பிரம்படிக்கு உவந்தும், சுந்தரர்க்காகப் பரவை வீட்டிற்கு இரவில் இருமுறை தூதாக நடந்து சென்றும் எளியரின் எளியராக விளங்குபவர்; அன்பர்கட்கு மிக்க அளியர் என்று காட்டுகிறார்[1].

தியாகேசர் அம்மையுடனும் முருகனுடனும் விளங்கும் தோற்றமும் கூறப்பட்டுள்ளது. அந்நிலையில் முருகன் மழலைச் சொற் கேட்டலும்[2], சிவனும் அம்மையும் முருகனும் முறையே வெண்மை, நீலம், செம்மை ஆகிய நிறங்களோடு விளங்க, சத்துவம், தாமதம், இராசதம் ஆகிய முக்குணங்களுக்கும் உருவம் போன்ற இவர்கள், உலகப்படைப்பு முதலியவற்றை நடத்துகின்றனர் போன்று இருத்தலும்[3], திரிவேணி சங்கமம் போன்று காணப்படுதலும்[4] அடிகளால் விளக்கப்படுகின்றன.

திருமால் விரும்பியவாறு அருளோடு தோன்றி, இந்திரன் வேண்டத் தெய்வ உலகம் சென்று, அங்கிருந்து முசுகுந்தனுக்கு அருள்புரிய மண்ணுலகுக்கு எழுந்தருளினார் தியாகேசர் என்னும் வரலாறும் கூறப்படுகிறது[5]. முருகனுடைய மழலைமொழி கேட்டின்புறும் இறைவனும் இறைவியும் அடிகளின் பொருளில் புன்மொழிகளையும் கேட்டு அருள் வழங்கிய அற்புதத்தை உணர்த்தக் காண்கிறோம்[6]. இயல்பாகவே கருணையுடன் விளங்கும் சிவன் பிறவித்துயரம் அறியாததால் அடிகளுக்கு அருளவில்லை போலும் என்று குறிப்பிடுகிறார்[7]. இவ்வாறு நயமுறக் கூறிப் பிறவிப்பிணி போக்க வேண்டும் குறிப்பு அமைக்கப்படுகிறது. பாடல் புனைந்து போற்றும் சிறப்பையும் அடிகள் உணர்த்துகிறார். திருமால் கண்மலர் சாத்தியும் காணமுடியாத இறைவன், சுந்தரர் பண்மலர் சாத்திப் பணி

---

1. 344
2. 312
3. 339
4. 345
5. 348
6. 312
7. 324

கொள்ளுமாறு விளங்கினான்; எனவே ஒண்மலர் சொல்மலர்க்கு ஒவ்வாது போலும் என்று காட்டுகிறார்[1].

அகப்பொருள்முறை

இந்நூலில் அகப்பொருள் முறையிலும் சிலபாடல்கள் இடம்பெற்றுள்ளன. தியாகரிடம் கருத்திழந்த தலைவி ஒருத்தி, தனக்கு இறைவன் அணிந்துள்ள பாதிமதி வேலைவிடம் போல் உள்ளது என்றும் அதிலிருந்து காக்க வேண்டும் என்றும் கூறுகிறாள்[2]. மற்றொருத்தி முக்கட்கரும்பே நற்கரும்பு என்கிறாள்; காமன் கைக்கரும்பு அவளுக்கு வேம்பாக உள்ளதாம்[3]. இறைவன் தோற்றத்தைக் கண்டால் மனத்தில் அவா அடங்காது என்கிறாள் இன்னொருத்தி[4]. ஒருத்தி இறைவன் பால் கருத்திழந்து உணவு கொள்ளவில்லை; பின் உணவை நஞ்சாகக் கண்ட நிலையில் இறைவன் உண்ட மிச்சில் என உண்டாள்; ஆனால் உள்ளத்தில் இறைவன் இருப்பதால், தான் உண்ட மிச்சிலை அவர் உண்ண நேருமே என்று மீண்டும் உமிழ்ந்துவிட்டாள்[5]. இவ்வாறு இறைவனைக் காமுற்ற மகளிர் நிலைகளைக் கூறும் முறையில் சில பாடல்கள் உள்ளன.

திருவாரூர் மக்கள் இன்பவாழ்வைக் குறிக்கும் முறையில் ஓர் அழகிய ஊடற்காட்சி காட்டப்படுகிறது. தலைவன் அணிந்திருந்த பொன் அணிகலனில் தலைவியின் உருவம் காணப்பட அதை வேறொருத்தி என்று கருதித் தலைவி ஊடுதலும் தலைவன் இறைஞ்சுதலும் விளக்கப்படுகின்றன[6]. திருவாரூர்த் தலைவி ஒருத்தி தலைவன் முன் நாணிக்கண் புதைத்து நிற்ப அவளிடம் அவன் கூறுகிறான்; 'மலர்ப்பொழில் குத்தகையாகத் தந்துவிட்டு, இரண்டு மாவடுவும் இளநீரும்

---

1. 338
2. 309
3. 341
4. 317
5. 343
6. 344

காணாமல் செய்த காரியம் என்ன' என்று [1] புறங்காட்டி அவள் நிற்றலால் கூந்தலை மட்டும் காணும் அவன் அவள் கண்களையும் மார்பையும் காணாத நிலையை இவ்வாறு குறிக்கின்றான். திருவாரூர்த் தொடர்பாக இப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

கற்பனை முதலிய நயங்கள்

புராணச் செய்திகளை நயமுறக் கூறும் பாடல்களும் உள்ளன. ஈதலும் இரத்தலும் உலகில் உண்டெனினும் இறைவனது ஒரே உருவத்தில் இடப்புறம் 32 அறங்களை வளர்க்கவும் வலப்புறம் இரந்து நிற்றல் திருவாரூர் இறைவனிடம் காணப்படும் புதுமை என்கிறார் அடிகள் [2] இறைவனது வலப்புறம் நீற்றொளியால் வெண்மையுடன் விளங்குவதால் வலப்பாகத்தை இறைவன் கங்கைக்கு அளித்துவிட்டானோ என்று கேட்கிறார் [3] தியாகேசரா நாதன்? என்று கேட்கும் வினாவுக்கு வெல்லும் விடையே விடை என்று உணர்த்தும் நயம் குறிக்கத்தகும் [4] பிரமனும் திருமாலும் முடிஅடி காணாத நிலையில், எமன், தண்டனையாகவேனும் இறைவன் திருவடித் தொடர்பு பெற்றமையால் நற்றவம் செய்தவன் என்று வியந்து 'நமனார்' என்று பன்மையாற் கூறக் காண்கிறோம் [5] உவமை நலம் பொருந்துமாறு இறைவன் தோற்றம் காட்டப்படுகிறது.சிவன் சடை தினைப்புனம் போல்வது; கங்கை புனங்காக்கும் குறமகள் போல்பவள்; சிவன் தலையிலுள்ள வெண்டலை புனத்தில் வைத்த பொம்மை போல்வது; பிறை கவண் போல்வது என்று சிவன் தலையை உவமிக்கிறார் [6] அடிகள் மற்றொரு பாடலில், சிவன் சடை எரிஒக்கும்; கொன்றை எரியிலிட்ட பொன்னொக்கும்; வண்டு கரி ஒக்கும்; கங்கை அணிகலன் செய்விக்கும் பெண் ஒக்கும்; பிறை அணிகலன் செய்யும் கிழக் கொல்லனை ஒக்கும் என்று உவமிக்கக் காண்கிறோம் [7] இவ்வாறு சுவையுற இறைவன் பற்றிய செய்திகள் விளக்கப்படுகின்றன.

---

1. 335
2. 316
3. 319
4. 329
5. 340
6. 334
7. 346

8. வைத்தீசுவரன் கோவில் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்

விநாயகர் துதியுடன் 101 பாடல்கள் இதில் உள்ளன. முருகனைப் பற்றிய ஆண்பாற் பிள்ளைத் தமிழாக இஃது அமைந்துள்ளது முன்னர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பற்றிக் குறித்த இலக்கணங்களுக்கேற்ப முதல் ஏழு பருவங்கள் இதிலும் அவ்வாறே முருகனைப் பற்றியனவாக இடம் பெற்றுள்ளன. இறுதியில் சிற்றிற்பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர்ப்பருவம் ஆகிய மூன்று பருவங்கள் இடம் பெற்றுள்ளன.

முதல் ஏழு பருவங்கள்:

காப்புப் பருவத்தில் திருமால், வைத்தியநாதர், தையனாயகி அம்மை ஆகிய தல மூர்த்திகளும் கற்பகவிநாயகர், பிரமதேவர், தேவேந்திரன், திருமகள், கலைமகள், சத்தமாதர்கள், முப்பத்துமுக்கோடி தேவர்கள் ஆகியோரும் முருகனைக் காக்குமாறு வேண்டப்படுகின்றனர். இந்திரனை வேண்டும்போது, முருகனுக்குத் தன்மகள் தெய்வயானையை மணமுடித்துக் கொடுத்த மாமனாதலால், கற்பகக்காவும், மூவுலகும் நிழற்றும் ஒற்றைக் கவிகையும் கீழ்திசைக்காவலும் பிறவும்உள காணியும் உரிமையாகப் பெற்றுள்ளான் என்று கூறக் காண்கிறோம் [1] மகளைக் கொடுத்து இந்திரன், தனக்குக் காணிபெற்றுக் கொண்ட நிலை குறிக்கத்தக்கதாகும். வள்ளியை மணந்து முருகன் சீதனக்காணியாக மலைச்சாரல், குறிஞ்சித் தலங்கள் முதலியவற்றைப் பெற்றதை அடிகள் வேறு இடத்தில் குறித்துள்ளார். [2] குறவர்கள் மலையாட்சியை வள்ளிக்குச் சீதனமாகத் தந்ததும் மீனாட்சியம்மை குறத்தில் கூறப்படுகிறது. [3] ஆயின் தெய்வயானையை மணந்த நிலையில் முருகன் சீதனம் தனக்குப் பெறாமல் மாமனுக்குத் தான் காணியாக நல்கியதைக் கூறுதல் புதுமையாக உள்ளது. தேவயானையை மணந்தபோது பொருள் கொடுத்தும், வள்ளியை மணந்தபோது பொருள் பெற்றும் மணந்த வேறுபாட்டு நிலை இங்கு உணரத்தக்கதாக உள்ளது.

செங்கீரையாடுதல் என்பது குழந்தை தன் இரு கையையும் நிலத்தில் ஊன்றி, ஒரு காலை மடக்கி ஒரு காலை நிமிர்த்து இருந்து, தலைநிமிர்ந்து முகமசைந்தாடுவதைக் குறிக்கும் என்று அடிகள்

---

1. 355 2. 384 3. மீ.கு.20

தெளிவாகக் காட்டுகின்றார் [1] முருகன் முகமசையக் செங்கீரை யாடுதலால் காணும் பிற ஆட்டங்களையும் பாதாதிகேசமாகக் காட்டக் காண்கிறோம். அடிகளில் கிண்கிணியோடு சிலம்பு கலந்தாட, அரையில் அரைஞாண் அரைமணியோடு ஒளிதிகழ் அரைவடமாட, தொந்தியொடு வயிறு சரிந்தாட, நுதலில் பொட்டொடு வட்டச்சுட்டி பதிந்தாடக் குண்டலமும் குழைகாதும் அசைந்தாட, சூழியக் கொண்டையும் உச்சிக் கொண்டையும் கதிர் முத்தொடும் ஆட, அம்பவழத்திரு மேனியுமாடச் செங்கீரை ஆடும்படி வேண்டக் காண்கிறோம். [2] குழையோடு குழை எதிர்மோதவும், குண்டலம் வெயில் வீசவும், வாய் குறுநகை நிலவூரவும், வாகுவலயமும் முன்கை முதாரியும் ஒளிகாலவும், முத்துக்கள் போல் வேர்வை முகத்தில் அரும்பவும் ஆட வேண்டுகிறார். [3] விளையாட்டு வீரர்களோடு திக்கெட்டும் விளையாடும் சேனாபதிக் கடவுள் [4] என்றும், தெய்வதப் பிடியொடும் விளையாடும் மழகளிறு [5] என்றும் கூறிச் செங்கீரையாட வேண்டக் காண்கிறோம். இவ்வாறு ஆடவல்ல முருகனுக்குச் செங்கீரைத் தண்டு போலசைந்தாடல் எளிது என்பது கருத்தாகக் கொள்ளத்தகும்.

தாலப்பருவத்தில், கந்தபுரிமாளிகைகளில் இருந்து வீசும் மரகத ஒளியைப் பசும்புல் என்று கருதிக் காமதேனு தன் செந்நாவினை வளைக்கும் என்பதில்,[5அ] காமதேனு உண்ண நாவசைத்தல் போல் முருகக் குழந்தையும் பேச நாவசைக்க வேண்டும் என்ற குறிப்பு உணர்த்தப்படுகிறது எனலாம். 'சங்கத்தமிழின் தலைமைப் புலவா தாலோ தாலேலோ' [6] என்பதும் 'தோலாத முத்தமிழ் நாவா [7] என்பதும் முருகனுக்கு நாவசைத்தல் எளிது என்னும் தகுதியை உணர்த்தி நிற்பன எனலாம். 'ஓதாது உணர்த்திடும் போதன், பிரணவச் சொற் சொல்பவன், நாதத்துவத்துக்குக் காரணமானவன்'[8] என்றெல்லாம் கூறி நாவசைக்கு மாறு அடிகள் முருகனை வேண்டும் பொருத்தமும் நுட்பமும் இப்பருவத்தில் அறியத்தகும்.

சப்பாணிப்பருவத்தில் முருகன் கைச் செயல்களும் சிறப்பும் கூறிச் சப்பாணி கொட்டுமாறு வேண்டுகிறார் அடிகள். வள்ளியின்

---

1. 367 4. 362 6. 375,376,377

2.365 5. 363 7. 378

3. 366 5அ. 370 8. 379

கூந்தலுக்கு அகிற்புகையூட்டி, மாலை சூட்டி, நுதலில் தோன்றிய வியர்வை துடைத்துக் கத்தூரித்திலகமிட்டுக் கண்ணுக்கு அஞ்சனம் எழுதிக் கொங்கைத் தடத்தில் பசுங்களபம் அப்பிக்குற்றேவல் புரிந்து தோள் கொட்டி ஆடியவன் என்று கூறிச் சப்பாணி கொட்டுமாறு வேண்டக் காண்கிறோம். [1] இவையாவும் வள்ளிபால் வேட்கையுடன் முருகன் கைகள் செய்த செயல்கள் என்பது குறிக்கத்தகும். தெய்வயானையை இந்திரன் நீரொடு கொடுப்பக் குடங்கை ஏற்று இன்புற்ற முருகன் என்று கூறிச் சப்பாணி கொட்ட வேண்டுகிறார். [2] முருகன் செங்கைவேல் சிறப்பித்துரைக்கப்படுகிறது. [3] வள்ளியின் அவயவங்களுக்கு உள்ள குணங்களைத் தனித்தனியாகத் தெரிந்து கூறும் தடமலர்க் கைத்தலம் சிவந்து ஒளிதுளும்பச் சப்பாணி கொட்ட வேண்டுகிறார். [4] வள்ளியின் உறுப்புக்கள் யாவற்றையும் நன்கு அளந்தறிந்த கை முருகனுடையது என்று அகப்பொருள் நலமுறுக் கூறியுள்ளமை காண்கிறோம். முருகன் கை அடியவர்களுக்கு நாகஉலகம், பூவுலகம், வித்தியாதரர்உலகம், திருமால் பதவி, பிரமபதவி, இந்திரபதவி முதலியவற்றை உரிமையாக வழங்கும் பெருமையுடையது என்று குறிப்பாக உணர்த்தப்படுகிறது? [5] சமர்விளையாடல் செய்யும் சுடர் வடிவேலைத் தொட்டவன்; [6] அவுணக்கடல் மாள வேலைக் கொண்டவன் [7] களவேள்வி செய்து வெற்றித்திருவைப் புணரும் சுடர் வேலவன் [8] என்று விளக்கும் முறையிலும் வேலைக் கையிற் கொண்ட கையின் சிறப்பும் அதனால் வேலவன் என்ற பெயர் அமைந்தமையும் புலப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு வள்ளன்மை, வீரம், அன்புநலம் ஆகிய சிறப்புக்கள் கைமேல் ஏற்றப்பெற்று அக்கைகளால் சப்பாணி கொட்ட வேண்டும் முறையில் இப்பருவப் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முருகனுடைய செங்கனிவாய்ச் சிறப்பைக்கூறி முத்தம் தருமாறு வேண்டுவது அடுத்த பருவம். இறைவனும் இறைவியும் களிப்ப, அம்தீங்குதலை மழலை கனிந்து, அமுதம் ஊறு பசுந்தேறல் நாறத் தெய்வமண முருகு நாறும் செங்கனிவாய்; [9] கார்த்திகைப் பெண்டிர் முகத்திலும் மார்பிலும் உதைத்துக் குறும்பு செய்தலால் தாள்நோகும் என்று அவர்கள் கோல் கொண்டு ஒச்சப் பெருந்தன்மை கொண்டு,

---

1. 380 4. 383 7. 386
2. 381 5. 384 8. 387
3. 382 6. 385 9. 390

அமுது நெக்குத் தேன் ஊறக்குறுமுறுவல் அரும்பும் செங்கனிவாய்; [1] சிவனுக்கு மழலை ததும்பப் பழ மறையை வடித்துத் தெளித்த பிரணவ வார்த்தை மொழியும் பவளச் செங்கனிவாய்; [2] கடவுள் மறையும் பசுந்தமிழும் நாற அம்மை முலைப்பால் நாறும் செங்கனிவாய்; [3] வள்ளியின் இதழ்த்தேன் சுவைகண்டு இன்பமுறமுயலும் குமுதக் கனிவாய் [4] என்று முருகனுடைய வாய்ப்பெருமைநினைவு கூரப்பட்டு முத்தம் வேண்டப்படுகிறது.

வருகைப்பருவத்தில் முருகன் நடைவருணனையும் பாதச் சிறப்பும் உணர்த்தப்படுகின்றன. கழலும் கிண்கிணியும் சிலம்பும் கலின்கலின் என்று ஒலிக்கவும், அரைமணி கிணின்கிணின் என ஒலிக்கவும், தோள்வளை கலிப்பவும், மார்பிலணிந்த சன்னவீரமும் முத்துமாலையும் ஒளி காலவும், மகரகுண்டலம் பருதியெனக்கதிர்க்கற்றை சுற்றவும், சுட்டியும் சூழியமும் நெற்றிப் பட்டமும் ஒளிவிட்டெறிப்பவும், முகத்தில் பனிமுறுவல் அரும்பவும் வர வேண்டுகிறார் அடிகள். [5] நடந்து வரும்போது கேட்கும் ஒலியும், விளங்கும் ஒளியும் இவ்வாறு அழகுறக் காட்டப்படுகின்றன. அம்மை மணிவயிறு குளிரத்தவழ்ந்து சிவன் மார்பில் குரவையாடிக் குறும்புகள் பல செய்து, சிவனது செம்மேனி வெண்ணீறு தூளெழ மிகப் புழுதியாட்டயர்ந்து, கங்கை நீரில் துளையமாடியவன் என முருகனை விளித்து வருமாறு, வேண்டக் காண்கிறோம்.[6] விளையாட்டுச் சிறப்பு இவ்வண்ணம் நினைவு கூரப்படுகிறது. நீரர மகளிருடன் அவன் ஆடும் விளையாட்டெனச் சரவணப் பொய்கைத்துறையில் வீரவாகு முதலிய குருளைகளோடு புனல் குடைந்து விளையாடியவன்;[7] தன்னை எடுத்தணைக்கும் இறைவிக்கும் இறைவனுக்கும் ஆறு முகத்தாலும் முத்தம் கொடுப்பவன்; கன்னத்தில் தெறித்து முத்தந்தருக என்ற கங்கைக்கு நல்காது அலறி ஓடலும், கண்ணீர் துடைத்து எடுத்து அம்மையால் கால்மலர் நீவப் பெற்றவன்.[8] இவ்வாறு முருகன் ஓடிவிளையாடிய நிகழ்ச்சியைக் கூறி, வரும்படி வேண்டக் காண்கிறோம். ‘இயலும் நடையும் வடிவும் அழகும் எழுத அரியன் வருகவே’ [9] என்று முருகனின் நடை முதலியவற்றின் அருமையும் பெருமையும் உணர்த்தப்படுகின்றன.

1. 391	4. 394	7. 402
2. 392	5. 400	8. 404
3. 393	6.401	9. 409

அம்புலியை விளையாட அழைக்கும் பருவத்தில் முதல் இரு பாடல்கள் சாமம் என்னும் முறையிலும், அடுத்த இரு பாடல்கள் பேதம் என்னும் முறையிலும், அடுத்த இரு பாடல்கள் தானம் என்னும் முறையிலும், இறுதி நான்கு பாடல்கள் தண்டம் என்னும் முறையிலும் அமைக்கப்பட்டுள்ளன. முழு மதிக்கடவுள் என்பது அம்புலிக்கும் முற்றறிவுடைய முருகனுக்கும் ஒப்புமை உடையது; நிலவுகடலில் தோன்றல்போல் முருகன் ஆனந்த மாக்கடலாகிய சிவனிடம் தோன்றியவன்; கொடியில் உள்ள குமுதம் மலரவும் தாமரை மூடவும் நிலவு விளங்குதல் போல் முருகன் குறமகளாகிய வள்ளியின் குமுதவாய் மலரும்படி கரத்தாமரையால் அஞ்சலி செய்கின்றவன்; உயிர்ப்பயிர் தளிர்ப்பத் தண்ணளி புரிதல் இருவர்க்கும் உள்ள பொது இயல்பு; சிவனுடைய கண்ணாகிய பொறியாக நிலவு இருப்பது, முருகனைச் சிவனது கண்பொறியில் தோன்றியவன் என்று நிலவுக்கும் முருகனுக்கும் உள்ள ஒற்றுமைகள் சிலேடை நயமுறக் கூறப்படக் காண்கிறோம். [1] நிலவு முருகனைவிட வேறுபட்டிருத்தல் நன்கு புலப்படுத்தப்படுகிறது. சிவனுக்கு நிலவு கண், ஆயின் முருகன் கண்ணினுள் மணியாவான்; நிலவு இரவோனாய்த்திரிய முருகன் எவர்க்கும் இரவினை ஒழித்தவன்; [2] நிலவு இரவுப்பொழுதில் இருட்டையே போக்கும், முருகன் அகவிருட்படலம் கிழிப்பவன்; அது குமுதத்தை மலர்விக்கும்; இவனோ உள்ளமாகிய திருமலரைத் திறப்பிப்பான் என்று முருகனின் மேம்பாடு காட்டப்படுகிறது. [3]

நிலவு முருகனை அடைந்தால் பெறுகின்ற பயன்கள் உணர்த்தப்படுகின்றன. சன்னதி அடைந்தால் நோயும் பிறவிப்பெரும்பிணியும் போக்கலாம் என்கிறார் நிலவின் கயரோகமும் முயற்கறையும் போக்குதற்குத் திருநீறும் திருச்சாந்தும் வேண்டுவதில்லை; கந்தபுரிச் சித்தாமிர்தத்தீர்த்தக் குறுந்திவலை ஒன்றே போதும் என்கிறார்[4]. இவ்வாறு தீர்த்தப் பெருமையும் நிலவு பெறும் நன்மையும் இனிது காட்டப்படுகின்றன. வேண்டிய வரங்கொடுக்கும் மெய்கண்ட தெய்வம் முருகனையன்றிப் புவியில் வேறில்லை என்றும், எவ்வுலகுவேண்டினும் தருவதோடு அழியாத வீடும் தரக்கடவன் என்றும்

---

1. 410 3. 413
2. 412 4. 414

நிலவுக்குத் தெளிவாக்குகிறார் அடிகள். 'நிலவுக்குத் கூறுமுகத்தான் உலகோர்க்கு அடிகள் முருகன் அருளை உணர்த்துகின்றார் எனலாம். நிலவு வராவிடில் அடையும் தண்டத்தை இறுதியில் நினைவுறுத்துகிறார். 'வருகென்றழைத்திடவும் வாராதிருத்தியால் மற்றிவன் முனிந்தால் உனக்கு அட்ட திக்கினிலும் ஒரு புகல் இல்லை' [2] என்று அறிவிக்கிறார். சூரன், பிரமன், இந்திரன் முதலாகிய எண்மர் முருகனிடம் பட்டபாடு பெரிது; நீ விளையாட வாராவிடில் முன்பு தக்கன் வேள்விக்களத்தில் பெற்ற துன்பம் மீண்டும் உனக்கு வரும் என்று எடுத்துரைக்கிறார்.[3] முருகன் வெகுளாது விடினும் வீரவாகு உன்னை விடுவானலன் என்கிறார். [4]

இவ்வாறு முதல் ஏழு பருவங்களிலும் முருகனுக்கேற்ப அடிகள் செய்திகளை அமைத்துப் பாடியுள்ளார். முருகன் அருளும் பெருமையும் கந்தபுரி வளமும் சிறப்பும் உடன் உணர்த்தப்படுகின்றன.

சிற்றிற்பருவம்

சிறுபெண்கள் தெருவில் மணல் வீடுகட்டி விளையாடும்போது ஆண்குழந்தை அவ்வீட்டைக் காலால் சிதைத்து அழிக்கும். அப்போது சிற்றில் சிதைக்காமல் இருக்குமாறு பெண்குழந்தைகள் வேண்டும் முறையில் இப்பருவப்பாடல்கள் அமைக்கப் பெறும். அம்மை ஒப்பனை புனைந்து விடுத்தது, சிறுபெண்கள் வருந்த வீதிகளில் இடுக்கண் செய்வதற்கோ எந்தாய்? என்று முருகனைச் சிற்றில் சிதையாதிருக்க அடிகள் வேண்டுகிறார். [5] சிற்றில் சிதைத்தால் நின் காலில் உறுத்துதலோடு அதனை உமையம்மை காணப்பொறாமல் அவள் கண்ணும் உறுத்தும்; புழுதிபடிந்த கால்களில் பணியும் வானவர் முடிகளிலும் அப்புழுதி படும் என்று குறிப்பிடக் காண்கிறோம்? [6] ஒதுக்குப்புறமாக அமைத்துள்ள வண்டல்மனை சூரனுடைய நகரமல்லவே அழிப்பதற்கு; விளையாடக்குவிந்துள்ள மணிக்குவியல் கிரவுஞ்சமலையல்லவே என்றும் வேண்டுகிறார். [7] சிற்றில் சிதைக்கும்

---

1. 415
2. 416
3. 417
4. 418
5. 420
6. 421
7. 422

முருகனது அழகை மொண்டு உண்டதற்காகவும், பருத்து ஓங்கிய தோளைக் கண்ணேறுபட வைத்ததற்காகவும் பகைபாராட்டிச் சிற்றில் சிதைத்தல் பண்பன்று என்று மகளிர் கூற்றாக அமைக்கக் காண்கிறோம். [1] தேவமகளிர்க்கு மாளிகையும் சூளிகையும் புதுக்கிக் கொடுத்து, ஞானியர்க்கு அழியாத வீடும் கொடுத்து உதவிய முருகன் சிறியமணல் வீட்டைச் சிதைக்காமல் விடுத்துச் சென்றால் என்ன என்று வினவுகின்றார்கள் பெண்கள். [2] வள்ளி தந்த தினைமாவும் தேன் தெளிவும் உண்டு சுவைகண்டாய் என்றுதான் சொன்னோம். அவள் மிச்சில் மிசைந்ததும், இதழ் அமுது விருந்தாடியதும் நாங்கள் வெளியில் சொல்லவில்லையே; எனவே சிதைக்காதே என்கின்றனர். [3] அருமைப்பிள்ளை நீயாயின் நாங்கள் சமைத்த சிறுசோறு வேண்டின் தருகின்றோம்; சிறு குறும்பு விளைத்தால் பொறுக்க விதியுண்டோ? என வினவுகின்றனர். [4] அம்மை அமைத்த பகிரண்டமாகிய மணற்சிற்றிலைச் சிவன் ஒரு கணத்தில் அழித்தாடுகின்றவன். அவன் மகனாகிய நீயும் எங்கள் சிற்றிலை அழிக்கத் தொடங்கினை, வித்தும் முளையும் வேறன்று என்பது நன்கு தெரிகிறது என்கிறார் அடிகள். [5] எங்களையும் உன்குற்றேவலுக்காம் அகம்படிமைக் குடியாகக் கொண்டருள வேண்டும். [6] நீயோ பகிரண்டம் படைத்தவன். நாங்கள் சிற்றில் இழைப்பது உன் சிருட்டித் தொழிலுக்கு ஏற்றதே, மாறானதன்று, எனவே சிற்றில் சிதையேல் [7] என வேண்டுகின்றனர். இவ்வாறு முருகன் அருளையும் சிறப்பையும் எடுத்துக்கூறி வேண்டிக் கொள்ளும் முறையில் இப்பருவச் செய்திகள் சுவைபடக் காட்டப்படுகின்றன.

சிறுபறைப்பருவம்

இப்பருவத்தில் முருகனைச் சிறுபறை முழக்குமாறு வேண்டுகிறார் அடிகள். முதல் ஐந்து பாடல்கள் வேளூரின் வளத்தை விரித்துக்கூறிப் பொதுவான முறையில் சிறுபறை முழக்குமாறு வேண்டுவன. பிற்பகுதிப் பாடல்களில் பறை முழக்குதலை விளக்கி உரைத்து வேண்டப்படும். மழை முகில் பிளிறும் முழக்கெனக் கருதி மயிலினம் அகவவும், கடல் ஒலியென விரக மகளிர் மனம் நெகிழவும்,

1. 423
2. 424
3. 425
4. 426
5. 427
6. 428
7. 429

பழமறை ஆர்ப்பெனத் தேவர் மகிழவும், பரநாதத்தொலியென ஞான அனுபவம் முதிர்ந்தவர் நெக்குருகவும், சிவன் நடனமாடும்போது வாணாசுரன் துவைத்திடும் குடமுழவும் திருமால் கொட்டும் முழவும் என்று அமரரும் முனிவரும் ஆர்ப்பவும் சிறுபறை முழக்க வேண்டக் காண்கிறோம். [1] பெருவெளி முகடு திறந்து அண்டச் சுவர் வெடித்து விடாமலும், மலைகள் உதிர்ந்து விடாமலும்,விண்மீன்கள் கொட்டி விடாமலும், திசைகள் செவிடுபடச் சிலர் குடர்கள் குழம்பாமலும், விரலால் பறை முழக்கும் போது நகக் கண்களில் செங்குருதி ததும்பாமலும், விரல் சிவப்ப முருகன் சிறுசெங்கை வருந்தாமலும் நோக்கி மெல்ல ஒருமுறை சிறுபறை முழக்க வேண்டுகிறார். [2] புலவரை அழைக்கும் கொடைமுரசமெனக் கவிவாணர்கள் ஓடிவரவும், தேவயானையை மணக்கும் மணமுரசென அம்மை ஐயனொடு மனங்குளிரவும், அரக்கரை அழித்துக் களவேள்வி செய்யும் திறல் முரசமெனத் தேவர் விழவயரவும் முருகன் சிறுபறை முழக்குமாறு வேண்டப்படுகிறான்.[3] இவ்வாறு கும்பிடும் கரமலரால் சிறுபறை முழக்க வேண்டும் முறையில் முருகன் கைபற்றிய விளக்கமும் காட்டப்படுகிறது. [4] ஆயினும் கைபற்றிய விளக்கம் விரிவாக இடம் பெறவில்லை. சப்பாணிப் பருவத்தில் கைபற்றி விரித்துப் பேசுதலால் இப்பருவத்தில் பறை பற்றியே விளக்கங்கள் பொருந்த அமைக்கப்படுதல் வழக்கமாக உள்ளது எனலாம்.

சிறுதேர்ப்பருவம்

முருகனைச் சிறுதேர் உருட்டுமாறு வேண்டும் முறையில் இப்பருவம் பாடப் பெற்றுள்ளது. புறமுதுகிட்டு அஞ்சி ஓடும் அவுணரைக் கொல்லாது முருகன் விடுத்த நிலையில் அஃது அவர்தம் மகளிர் தாலிக்கு வேலியாயிற்று. எனவே அம்மகளிர் முருகனைத் தேரோடும் சிலையோடும் தம்கண்களில் இருத்தி அவன் அருளை நினைக்கின்றனர். இவ்வாறு போர்அறம் மிக்க வீர முருகனைச் சிறுதேர் உருட்ட வேண்டுகிறார் அடிகள். [5] பேய்கள் ஆடும்போர்க்களத்தில் தடந்தேர் உருட்டிவரு சேவகன் [6] என்றும் சூரன் செலுத்திய இந்திர

1. 435
2. 436
3. 437
4. 438
5. 440
6. 441

ஞாலத்திண் தேரினை உருளாது நிற்கப் பணித்தவன் [1] என்றும், கடுகிச் செல்லும் மயிலாகிய வாம்பரி உகைத்தவன் [2] என்றும் குறிப்பிட்டுச் சிறுதேர் உருட்ட வேண்டுகின்றனர். முருகனது வீரச்சிறப்பினைக் காட்டி, அத்தகு வீரனுக்குச் சிறுதேர் உருட்டுதல் எளிதே என்ற குறிப்பில் இவ்வாறு அமைத்துள்ளனர் எனலாம். சிவனும் உமையும் சீராட்டி விளையாடும் சேனாபதிக்கடவுள் முருகன். அவர்கள் தம் கண்மணிப் பாவையுள் முருகன் உருவைக் காட்டி அப்பாலரோடும் விளையாடுமாறு முருகனைப் பணிக்கின்றனர். [3] ஆறுமுகங்களுடன் பாவையுள் தெரிதலால், பாலரொடு விளையாடுக என்று பன்மையிற் குறிக்கும் சிறப்புச் சுட்டத்தகும். இவ்வாறு சிவனும் உமையும் முருகக் குழந்தையோடு விளையாடும் காட்சியை நினைவு கூர்ந்து சிறுதேர் உருட்டுமாறு வேண்டும் பாடல் இறுதிப்பாடலாக இலங்குகிறது.

இவ்வாறு ஆண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பருவங்களுக்கு ஏற்பச் சிறப்பாக இந்நூலை அடிகள் அமைத்திருப்பதோடு முருகன் சிறப்புக்களையும் வைத்தீசுவரன் கோயில் வளங்களையும் விரிவாக இடைமிடைந்து பாடியுள்ளார். இந்நூலிற்கு 'முத்தையன் பிள்ளைத் தமிழ்', 'புள்ளிருக்கு வேளூர்ச் சேனாபதிப்பெருமாள் பிள்ளைத் தமிழ்', 'புள்ளிருக்கு வேளூர்க் குமார தேவர் பிள்ளைக் கவி' என்னும் பெயர்களும் சில ஏட்டுப் பிரதிகளில் காணப்படுகின்றன. [4]

9. சிதம்பர மும்மணிக்கோவை

விநாயகர் காப்புடன் இதில் 31 பாடல்கள் உள்ளன. மும்மணிக்கோவை இலக்கணத்திற்கேற்ப [5] நேரிசை ஆசிரியப்பா, நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய பாக்களில் அந்தாதியாக முப்பது பாடல்கள் இந்நூலில் அமைந்துள்ளன. புருடராகம், வயிடூரியம், கோமேதகம் என்பன மும்மணி எனப்படுதலின் [6] அவை மிடைந்த கோவை என்னும் அணிகலன்போல் இந்நூலும் கருதப்படுகிறது. 'தில்லைச் சிற்றம்பலவன் மும்மணிக் கோவை' என்று [7] அடிகள் இந்நூலைக் குறிப்பிடுகின்றனர். தில்லை இறைவன் மீது எழுந்தது இந்நூல்.

---

1. 442
2. 443
3. 449
4. கு.பி.தி. (உ.வே.சா) பக். 257
5. வெண்பாப்பாட்டியல் 13; பன்னிருபாட்டியல் 263
6. திருவால. 26:22; கு.பி.தி. (உ.வே.சா) பக். 339
7. 450

தில்லையில் தரிசிக்க முத்தி

சிதம்பரத்தை அடிகள் புலியூர், தில்லை, புண்டரீகபுரம், பெரும்பற்றப்புலியூர் என்ற பெயர்களால் இந்நூலில் குறிப்பிடுகின்றனர். [1] மூன்று முத்தித்தலங்களுள் இது சிறப்புடையதும் எளிதில் வாய்ப்பதுமாக இருப்பதை அடிகள் முதற்பாடலிலேயே விளக்குகிறார். உலகியல் வழக்கிலும், புலனெறி வழக்கிலும் அறிஞர் உறுதியாகக் கூறும் முத்தித்தலங்கள் திருவாரூர், தில்லை, காசி என்பன. திருவாரூரில் பிறக்க முத்தி என்பதால் பிறத்தல் என்பது செயற்கையின் எய்தும் இயற்கைத்தன்று. காசியில் இறக்க முத்தி என்பதால் இடம்விட்டுப் பெயர்ந்து பொருள் சுமந்து வழியிடைப்பட்ட காடு முதலியன கடந்து தீப்பசிக்கு இரங்கியும், நோய்ப்பனிக்கு ஒதுங்கியும், பல்பிணிக்கு உடைந்தும் செல்ல வேண்டும்; செல்லும் காலத்தில் இடைச்சுரத்து இறவாமல் இன்னுயிர்தாங்கி ஒருவன் அணுகினனாயின், நல்லொழுக்கத்தோடு உயிர்போகும் காலம் வரை அந்நகரில் தங்கி இறத்தல் வேண்டும்; அவ்வாறு கடைபோக முடிவது அரிது. அதனால் பெரும்பற்றப்புலியூரில் இறைவன் திருக்கூத்து ஒருமுறை நோக்கிப் பரகதி பெறுவதற்கு வந்ததாக அடிகள் குறிப்பிடுகின்றனர். [2] எனவே சிதம்பரம் முத்தித்தலங்களுள் யாவரும் எளிதில் சென்று தரிசித்து முத்தி பெறத்தக்கதாக இருப்பது நன்கு வலியுறுத்தப்படுகிறது. இங்கு தவப்பெரும் தொண்டரும் செம்பொருள் இதுவெனத் தேறி அகனமர்ந்து இறைஞ்சிப் பேராவியற்கை பெற்றனர்; சரியை கிரியை யோக நெறியிற் செல்லாமல், ஒண்பொருள் நூல்களை ஆராய்ந்தறியாது வறிதே திருமன்றம் நோக்குவதால் பிறவாத நன்னெறி தாம் பெற்றதாக அடிகள் உரைக்கின்றனர்; இருவர் பெறும் பேறும் ஒருபேறே ஆதலின் இவர்கட்கிடையே இங்கு வேற்றுமை இல்லை என்பதையும் உணர்த்துகின்றனர். [3] சிற்றம்பலத்து இறைவனைக் கண்டதால் அடித்தொண்டு செய்யாத தமக்கும் வீடுபேறாகிய சீருண்டு [4] என்றும், தவவேடம் உடம்பில் தாங்கித் தீயஒழுக்கம் பொதித்திருந்தும் கடவுள் மன்றில் திருநடம் கும்பிட்டு உய்தி கிடைக்கப்பெற்றேன் [5] என்றும்,

---

1. 454,457,452,451
2. 451
3. 454
4. 456
5. 460

இறைவன் செய்யும் நடம் ஒருகால் கும்பிட்டால்போதும், கதிகூடும் [1] என்றும் சிறப்பு இவ்வாறு தெளிவுறுத்தப்படுகிறது.

நடனமாடும் இறைவன்

என்றும் சலியாது ஆடிக் கொண்டிருக்கும் இறைவனை அடிகள் இத்தல நிகழ்ச்சிகட்கேற்பக் கூறுகிறார். பதஞ்சலி முனிவர் வேண்டிக் கொண்டதற்கேற்ப ஒரு மலர்த்தாள் மட்டும் ஊன்றி இறைவன்ஆடுகின்றான். பதஞ்சலி ஆதிசேடனாதலின், இரண்டுதாளும் ஊன்றினால் சுமை பூமியில் தாக்கிப் பூமியைச் சுமக்கும் தமக்குத் துன்பம்தரும் என்று கருதிப்போலும் ஒரு காலூன்றிய நடனக் காட்சியை விரும்பினர் என்று அடிகள் காரணம் காட்டுகின்றார். [2] இடதுகாலைத் தூக்கி இறைவன் ஆடுதலுக்கும் அடிகள் ஒரு காரணம் கருதுகின்றார். இடது கால் அம்மைக்குரியது ஆதலின், திருமால் அதைக் கண்டால் குறைவில்லை என்று கருதிப்போலும் இடதுகாலைத் தூக்கி இறைவன் ஆடுகின்றான் என்கிறார். [3] தனது திருவடி காணாமல் மயங்கிய திருமாலுக்கு வலது தாளைக் காட்டக்கூடாது என்ற குறிப்பால் இவ்வாறு ஆடுவதாகக் கற்பிக்கும் சிறப்புக் குறிக்கத்தகும். ஐம்பொறிகளாகிய அரவுகளை ஆட்டுவிக்கும் சித்தரான இறைவன் தில்லையில் மாசுணத்தால் (பதஞ்சலியால்) ஆட்டுவிக்கப்படுகிறான் என்று நயமுறக் கூறுகிறார். [4] தன்கண் வருவாரைத் தாமாக்கும் இறைவனைப் பதஞ்சலியார் தம்மைப்போல் பதஞ்சலியாராக்கியதை உணர்த்துகிறார் அடிகள். [5]

ஆடும் இறைவனுடைய கால்கள் சிவந்திருப்பதற்குக் காரணம் ஆராய்ந்து காட்டுகிறார் அடிகள். நடிப்பதால் சிவந்ததெனில் இருகால்களும் சிவக்க முடியாது; ஊன்றிய பாதமே சிவந்திருக்க வேண்டும். அம்மை நறுந்தளிர்க்கை பிடிப்பதால் சிவந்ததெனில் அம்மையின் தளிர்க்கைகள் அவ்வாறு சிவக்கும்படி செய்யா. தேவர்கள் திருவடிகளை வணங்குதலின் இறைவன் பாதங்கள் இரண்டும் சிவந்தனபோலும் என்கிறார். [6] மலையைத் தோளாகவும், விண்ணைத் திருமேனியாகவும், மூதண்டகூடமே திருமுடியாகவும், மாமேருமலையே

---

1. 479   4. 455
2. 453   5. 470
3. 461   6. 480

வில்லாகவும் கொண்டு விளங்கும் உமாபதியாருக்குத் தில்லைச் சிற்றம்பலம் நின்றாடுவதற்குப் பற்றுமோ? என்று வியப்போடு வினவுகிறார் அடிகள். [1]

மன்றுள் ஆடும் முக்கட்கரும்பை இறைவிகண்டு சுவைப்பதை நயமுற விளக்கக் காண்கிறோம். மால்யானையாகிய விநாயகரைப் பெற்ற கூந்தற் பிடியாகிய உமையம்மை முக்கட்கரும்பாகிய இறைவனை உண்ணுவதாகக் குறிப்பிடுகின்றனர். [2] நோயினைப் போக்கும் மருந்தினைப் பாலுண்ணும் பசுங்குழவி உண்டால் அதன் பசுங்குடர் பொறாது என்று தாய் அதனை உண்டு அதன் பயனைப் பாலின்வழியே குழந்தை பெறும்படி செய்வதுபோல, அம்மை இறைவனின் ஆட்டத்தைக் கண்டு அதன் பயனை உயிர்கள் அடையுமாறு செய்கிறாள் என்கிறார் அடிகள். [3] தென்முகமாக இறைவன் தாளைத்தூக்கி ஆடுதல் எமனை உதைத்து அடக்கும் குறிப்புடையது என்றும் கூறுகிறார். [4] இவ்வாறு நடமாடும் தோற்றத்தைப் பல்வகைக் கற்பனைகளாலும் காரணங்களாலும் விளங்கும் சிறப்புக் குறிக்கத்தக்கதாகும்.

அருளும் இறைவன்

ஓய்வில்லாமல் இறைவன் ஐந்தொழில் நடிப்பது உயிர்கள் மாட்டுக் கொண்ட அருளினாலேயே என்று அடிகள் உணர்த்துகிறார். [4] பழிப்பது போலப் புகழும் முறையில் இறைவனை அடிகள் பாடியுள்ளார். புலிக்கால் முனிவருக்குக் கட்டிலை நீக்கியும் திருமாலின் படுக்கையாகிய ஆதிசேடனாகிய பதஞ்சலியை எடுத்துப் பாழ் வீட்டில் வைத்தும் விளங்குகின்ற கள்வன் என்கிறார். கட்டில் என்பது உடம்பு, பிறவிப்பிணி என்ற பொருளையும்; பாழ்வீடு என்பது சூனியமாகிய சிதாகாசத்தையும் குறிக்கும். வியாக்கிர பாதருக்கும் பதஞ்சலிக்கும் அருளிய திறம் இவ்வாறு கூறப்படுகிறது. [5] திருமாலும், கண்ணப்பரும் ஒரு பிழையும் செய்யாதிருப்பவும் அவர்களின் கண்பறித்த தருமமூர்த்தி என்று கூறுவதும் பழிப்பது போல் புகழும் முறையில் அருட்டிறத்தை உணர்த்தி நிற்கிறது. [6]

---

1. 458
2. 464
3. 451
4. 465
5. 460,451
6. 463

வேண்டுதல்

அடிகள் இறைவனைப்பாடும் தமது நிலையைப் பணிவோடு எண்ணிப் பார்க்கிறார். இறைவன் தன்மையை இறைவனே இரங்கி உள்நின்று உணர்த்தினால்தான் உணரமுடியும் என்றும், [1] தாம் குழந்தைஅன்போடு இறைவன் பெரும் புகழைக் கூறுதல் இறைவன் ஆணையால் நிகழ்வதே என்றும் [2] தெளிவுபடுத்துகிறார். சிவனோடு கலந்தாடப் பெற்றதால் தமக்குக் காமக்சுழியில் சுழலும் துன்பம் இல்லை என்கிறார். [3] சிவனடிக்கமலம் சூட்டினதால் இந்திர பதவியும், திருமால் பதவியும் வேண்டாம் என்கிறார். [4] உலகோர் நிலையைத் தம்மேல் ஏற்றித் தம்மை இழிவாகக் கூறிக் கொள்ளும் அடிகள் இறைவனிடம் வேண்டும் வரம் அவர்தம் ஒழுக்கச்சிறப்பையும் மேம்பாட்டையும் உணர்த்துகிறது. எளிய உடை, தங்கிடம், எளிய உணவு இவற்றையே வேண்டும் அடிகள், அடியவர் தொடர்பினை அருள வேண்டுகிறார்; [5] அவாவின்மையை வேண்டுகிறார். [6] மருந்து உண்பவன் மகிழ்ந்து உண்டாலும், வருந்தி உண்டாலும் அம்மருந்து வாய்ப்புகுமாயின் இருவருக்கும் நோய்த் துன்பம் போக்குதல் உறுதி. அவ்வாறு இறைவன், நாடிவந்த தமக்குத் தகுதியின்றெனினும் அருளுதல் கடன் என்று வேண்டுகிறார் அடிகள். [7] ஞானவல்லியை மணக்கச் செய்து இறவாவீட்டில் இருத்திக் குறையாச்செல்வரோடு கூட்டுவிக்குமாறும் வேண்டுகிறார். [8]

பிறகுறிப்புக்கள்

இக்கோவை நூலில் இல்லற இலக்கணம், துறவற இலக்கணம் தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளன. [9] தில்லை வளம் இடையிடையே காட்டப்படுகிறது. ஒரே ஒரு பாடல் அகப்பொருள் மரபில் இடம் பெற்றுள்ளது. மாலைப்பொழுது கண்டிரங்கும் தலைவி, மாலைக் கொடும்பொழுது இறைவன் நெற்றிக்கண்ணால் உண்டாகியதோ என்று குறிப்பிடும்முறையில் இப்பாடல் அமைந்துள்ளது. [10]

---

1. 466
2. 472
3. 471
4. 467
5. 457
6. 475
7. 451
8. 478
9. 451
10. 474

சிதம்பரச் செய்யுட்கோவை

பல்வகை யாப்புக்களிலுமாக 84 செய்யுட்கள் கொண்ட கோவை நூல் இது; யாப்பிலக்கணத்துக்கு எடுத்துக் காட்டாகச் சைவத்தொடர்பாக இயற்றப்பெற்றுள்ளது. ஒவ்வொரு செய்யுளுக்கும் யாப்பிலக்கணக்குறிப்புகள் அடிகளாலேயே எழுதப்பெற்றுள்ளன.

எமபயம் போக்கும் தில்லைக்கூத்து

தில்லைத்தலத்தின் சிறப்பு, ஏத்தருந்தலம் எழிற்புலியூரே[1] என்றும் அம்மை ஈன்றளித்த ஏழு உலகத்திற்கும் பயனாக இருப்பது பொன்னம்பலம் [2] என்றும் காட்டப்படுகிறது. நடராச தரிசனம் கண்டார்க்கு எமபயம் இல்லை என்பதைப் பல்வேறு உத்திகளால் அடிகள் வற்புறுத்துகிறார். கூற்றுவன், வெல்லும் இயல்பினனாயினும் கண்ணுதல் காட்சி பெற்றவர்களிடத்தில் அவன் வெற்றிபெற வழியில்லை. [3] நடராசரை இறைஞ்சினரைக் கூற்றுவன் இறைஞ்சி நிற்பான். [4] கொடிய எமன் வேலோடு எதிரும்போது அஞ்சல் என்று நல்கக்கூடியவன் நஞ்சமயின்ற சிவனே. [5] சிவன் சேவடியை உளங்கொண்டால் எமன் விடுத்த பாசமும் உயிரை அடுத்த பாசமும் விலகிப்போகும். [6] தில்லையில் சேர்ந்தால் எமனிடம் வரமாட்டோம் என்று சொல்லும் வல்லமையும் உண்டாகும். [7] இவ்வாறு எமபயம் போக்கும் தில்லைச்சிறப்பு வலியுறுத்தப்படுகிறது.

வீடுபயக்கும்மேன்மை

வீடு கருதுவோர் பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன்று இறைஞ்சுதல் வேண்டும் என்கிறார் அடிகள். [8] இறைவன் பதமலர்கள் காமுற்றவர்க்கு உலகப்பிறப்பு இல்லை. [9] இறைவன் குரை கழற்கால் கும்பிட்டுத் தோற்றம் துடைத்தேம் என்று அடிகள் மகிழ்ந்துரைக்கின்றார். [10] தில்லைக்கண் சென்று காண்பார்க்கு உறுதியாகப் பிறவியில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறார். பிரமனிடம் உடம்பு வேண்டும் என்று வேண்டினாலும், தில்லைக்கண் சென்றவர்க்கு அவன் உடம்பை ஈயான் என்கிறார். [11] இறைவன் கரத்தில் கபாலத்தைக் கண்டு, அடியாருக்குப் பிறப்பைக் கொடுத்தால் இறைவன் தன்னைத்தண்டிப்பான் என்று,

---

1. 525
2. 532
3. 483
4. 495
5. 520
6. 535
7. 555
8. 481, 523
9. 491
10. 488
11. 487

பிரமன் அஞ்சுவான் என்பதை இவ்வாறு நயமுற உணர்த்தக்காண்கிறோம். தில்லை நடராசர் ஞானக்கண்ணால் தம்மை வழிபடும் மெய்ஞ்ஞானியர்க்கு மட்டுமன்றி ஊனக்கண்ணால் வறிதே தரிசித்தார்க்கும் அருள் நல்குதலால், ஊனக்கண்ணே ஞானக்கண் போல் உதவும் என்கிறார் அடிகள். [1]

புலமை நலத்துடன் புராணச்செய்திகள்

தில்லை இறைவன் இறைவி தொடர்பாகவும், சைவசமயத் தொடர்பாகவும் பல புராணச்செய்திகள் புலமை நலத்துடன் இந்நூலில் எடுத்துரைக்கப்படுகின்றன. அவற்றுட்சில குறிக்கத்தகும். திருமாலுக்கும் உமையம்மைக்கும் காந்தனாகச் சிவன் உள்ளான் எனப்படுகிறது. [2] சிவபெருமான் மன்மதனை விழியால் வென்றான்; முப்புரத்தையும் நகையால் தீயுண்ணச்செய்தான்; நான்முகன் தலையை நகத்தால் கொய்தான்; கூற்றுவனை அடியால் உதைத்து உயிரிழக்க வைத்தான். இவ்வாறு விழி, நகை, உகிர், அடி ஆகியவற்றையே படைக்கருவிகள்போல் பயன்படுத்தியுள்ள சிவன் மழுப்படை, வில், சூலம் ஆகியவற்றை வறிதே கைசிவக்கக் கொண்டிருப்பது ஏன் என்று அடிகள் நயம்பட வினவுகிறார். [3] தூக்கிய இடது திருவடியின் வளைவு ஆடுவதால் அமைந்தன்று; அரிஅயன் முதலானோர் தலைவணக்கால் ஏற்பட்ட குனிப்பெல்லாம் குடிகொண்டதால் அமைந்தது என்று கருதுகிறார். [4] இறைவனோடு நடனமாட இயலாத கௌமாரி, கண்களைத் தன் மார்பில் நோக்கி நாணமுற்று விளங்குவதாகக் கற்பிக்கிறார். [5] பதஞ்சலி முனிவர் தில்லையில் நடனம் கண்ட செய்தியை நயமுற விளக்கக் காண்கிறோம். அவர் ஆதிசேடன் ஆதலின், பாம்புக்குக் கண்களே காதுகளாகவும் பயன்படுதல் கருதி, அவர் கண்களே பஞ்சாட்சரத்தின் ஒலியுருவத்தையும் வடிவத்தையும் ஒருங்கு அறிந்தன என்று உணர்த்துகிறார். [6] நஞ்சுண்டு தேவரையும் அவர்தம் மாதரையும் காத்த செய்தியை உலகியற் சுவைபட விளக்குகிறார். சிவனுக்கு நஞ்சுண்டு கண்டம் கறுக்காமல் இருந்திருப்பின் அமரர் சேயிழை மாதர்க்குச் செங்கைகளும் கொங்கைகளும் சிவக்கும் போலும் என்று அவர்கள்

---

1. 552
2. 491
3. 501
4. 543
5. 545
6. 526

மார்பில் அடித்துக் கொண்டு வருந்தியழுதிருப்பர் என்பதை உணர்த்தக் காண்கிறோம். [1] சிவன் தலையில் மதியும் கங்கையும் இருப்பதை இனிது கற்பிக்கக் காண்கிறோம். விநாயகர் மதியைத் தமது கோடெனக் கருதித் தமது துதிக்கையால் எடுப்பதற்குநீட்ட, அத்துதிக்கையைப் பாம்பென்று கருதி, மதி, கங்கைநதியுட் புக அந்நிலையில் ஆற்றில் மிதக்கும் தோணிபோல் விளங்குகிறது. இவ்வாறு நயமுற விளக்கக் காண்கிறோம்.[2]

சிவன் மார்பை அம்மை மார்புறத் தழுவியதால் ஏற்பட்ட முலைச்சுவட்டைச் சிவனிடமுள்ள பாம்பு, முழை என்று கருதி நுழையும் என்றும், விநாயகர் தாம் விளையாடிய போது தந்தை மார்பில் தம் கோடுபட்ட சுவடுபோலும் என்று கலங்குவார் என்றும், முருகன் அச்சுவட்டைக் கண்டு கயாசுரனோடு இறைவன் போரிட்டகாலத்தில் ஏற்பட்டதுபோலும் என்று கயாசுரனை வியப்பான் என்றும் அடிகள் விளக்குகிறார். [3] ஆதிசேடனாகிய பதஞ்சலியை இறைவன் ஆட்கொண்டருளியதையும், புலிக்கால் முனிவர் புதல்வராகிய உபமன்யு முனிவருக்குப் பாற்கடலை அருளியதையும் திருமாலுக்காகப் பரிந்து கூறும் முறையில் புலப்படுத்துகிறார் அடிகள். திருமாலின் அமளியை (ஆதிசேடன்-பதஞ்சலி) எடுத்துக் கொண்டதோடு அவன் உறையும் ஆழிச் சேக்கையையும் அடியவர்க்கு அருளியதால், திருமால் அமளியும் பாயலும் இன்றித் தில்லை இறைவன் வாயிலில் நெடுநாள் வைகினன்; எனவே அவற்றைத் திருமாலுக்கு அளிப்பாயாக என்று அடிகள் பரிந்து கூறுகிறார். [4] தில்லைக்கோவில் முன்றிலில் கோவிந்தராசப்பெருமாள் இருப்பது ஈண்டு நினைக்கத்தக்கது. அம்மைக்கு உடம்பில் பாதியை அளித்த நிகழ்ச்சியை நிலவிலும் அடிகள் காண்கிறார். இறைவன் முடியில் பிறைநிலவு உள்ளது; அம்மை தலைமுடியில் பிறை என்னும் தலையணி உள்ளது. உடம்பைப் பகிர்ந்து அளித்த நாளில் இறைவன் மதியையும் பகுந்தளித்தாற்போல் இஃது உள்ளது என்று காட்டுகிறார். [5] இவ்வாறு பல்வேறு புராணச் செய்திகளும் சமயக்கருத்துகளும் புதுப்பொலிவுடனும் புலமைத்திறத்துடனும் எடுத்தாளப்படக் காண்கிறோம்.

---

1. 529
2. 533
3. 546
4. 556
5. 528

அகப்பாடல் நலம்

இந்நூலில் அகப்பொருள் மரபில் சிலபாடல்கள் இடம் பெற்றுள்ளன. இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகவும் கிளவித் தலைவனாகவும் குறிப்பிடும் முறையிலும் தில்லைத்தலத்தை இயலிடமாக அமைக்கும் முறையிலும் அகப்பொருட்பாடல்கள் அமைந்துள்ளன. தலைவன் தலைவியின் நலத்தைப் பாராட்டும் போது, தாமரையை நோக்கித் 'தாமரைகளே, பொருவிடையோன் தெய்வப்புலியூரை ஒத்த தலைவியின் திருமுகத்தைப்போல் விளங்க வேண்டும் என்று நீங்கள் நீருட்புகுந்து, உடைந்து, ஒருதாள் ஊன்றித் தவஞ் செய்வீர்களாயின் வாழியரோ' என்று கூறுகிறான். [1] இங்குப்பொருவிடையோன் தெய்வப்புலியூரின் மேன்மையை உணர்த்துவது அடிகளின் நோக்கம் எனலாம். சிவனுக்குத் திங்கள் ஒரு கண்ணாக இருப்பதை ஒரு தலைவி எண்ணுகிறாள். முக்கண்ணில் மற்ற இருகண்களும் (ஞாயிறும், நெருப்பும்) வேறாக இருப்பதால் உய்ந்ததாகவும் மூன்று கண்ணும் நிலவாகவே இருப்பின் மகளிர்க்கு உய்தியில்லை என்றும் கூறுகிறாள். [2] பிரிந்து வருந்தும் தலைவி ஒருத்தி விடைமணியோசை கேட்டுத் துன்புறும் நிலையில் சிவன் ஊர்தியாகிய காளையின் கண்டத்திற்கட்டும் கதிர்மணிக்குப் பைந்தொடியார் செய்தபகை என்ன என்று இரங்கி மொழிகிறாள். [3] இறைவன் மாலையை விரும்பிய ஒருத்தி கருமிடற்றன், செஞ்சடையன், வெண்ணீற்றன், மழுவலத்தன், மானிடத்தன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள். [4] கண்ணீர் வழிய மன்மதன் வருத்துதலை இறைவனிடம் யாரேனும் மொழிய மாட்டார்களோ என்று ஒருத்தி இரங்குகிறாள். [5] ஒரு தலைவி மேகலை சோரவும், தோள்வளை நெகிழவும், சாந்தம் கருகவும், தரளம் தீயவும் முறுவல் இழந்து இருக்கிறாள்; இறைவனிடம் கொண்ட காதலால் இந்நிலையுற்ற இவளை, 'இளையோள் சாலவும் அம்ம, முதியோள் போலும் காம நோய்க்கே' என்று செவிலி கூறுகிறாள்[6]. இறைவனிடம்

---

1. 492
2. 498
3. 499
4. 508
5. 536
6. 538

நோய்தரும் மதியும், மருந்தாகும் கொன்றையும் இருத்தலால் ஒருத்தி உயிர் தரித்திருக்கின்றாளாம். திங்கள் மட்டும் சிவன் சடையில் இருந்தால் கங்கைநல்லாளும் உயிர் வாழ முடியாது என்பது அவள் கருத்து. [1] கொன்றை மாலை காரணமாகச் சிவனுடைய சடையும் பொன்பூத்துள்ளது; தலைவியின் மார்பும் பொன் (பசலை) பூத்துள்ளது என்று காட்டுகிறார் அடிகள். [2] இவ்வாறு அகப்பொருட்செய்திகள் இறைவனைப்பற்றிய குறிப்புக்கள் விரவ அமைந்து விளங்குகின்றன.

பிறகுறிப்புக்கள்

அடிகளின் இறையனுபவங்களும், வழிகாட்டும் மொழிகளும் மிடையப்பெற்று விளங்குகிறது இந்நூல். அடிகள் அமைக்கும் மதி, மான் பற்றிய கற்பனை, உலகியல் உணர்த்துவதாக உள்ளது. சிவன் சடையிலுள்ள மதி, அடுத்துள்ள பாம்புக்கு அஞ்சாமல் இறைவியின் நறுநுதலை எண்ணி அஞ்சுகிறது என்றும், இறைவன் கையிலுள்ள மான், நடம்காணும் காற்புலிக்கு (வியாக்கிர பாதர்) அஞ்சாமல் அம்மையின் விழிமானுக்கு அஞ்சுகிறது என்றும் கூறக்காண்கிறோம். [3] பகைக்கு அஞ்சாவிடிலும் இனத்துக்கு அஞ்சுதல் உலகியல்பு என்பதை இங்கு அடிகள் காட்டியுள்ளனர். சைவசித்தாந்தக் கருத்துக்கள் இடையிடையே கூறப்பட்டுள்ளன. நடராசர் உலா வருங்காட்சியும் மகளிர் நிலையும் விரிவாகக் காட்டப்படுகின்றன. [4] அடிகள் உலாஇலக்கியம் தனியாகப் பாடவில்லை எனினும் இத்தகைய பாடல்கள் உலாப்பாடுதலில் அடிகளுக்குள்ள தகுதியைக் காட்டி நிற்கின்றன எனலாம். யாப்பிலக்கணக் குறிப்புக்கள் முழுமையாகக் குறிக்கப்பட்டுள்ளன. யாப்பருங்கலக்காரிகையைப் பின்பற்றிப் பெரும்பாலும் யாப்புச்செய்திகள் காட்டப்பட்டுள்ளன. அடிகளின் யாப்புக்கள் குறித்துப் பிறிதோர் இயற்பகுதியில் விரிவாக நோக்குவோம். [5] யாப்பிலக்கணத்துக்கும் இறைவாழ்த்துக்கும் உரிய வகையில் இந்நூல் இருவகை நற்பயன் விளைவித்தல் தனிச்சிறப்பாகக் குறிக்கத்தகும்; இலக்கணத்துக்கு இலக்கியமாக ஆக்கப்பட்டிருத்தலும் குறிக்கத்தகும்.

---

1. 524
2. 507
3. 485
4. 539, 542
5. இயல் 3 - பக். 245 - 256

11. தில்லைச் சிவகாமிஅம்மை இரட்டை மணிமாலை

நேரிசைவெண்பாவும் கட்டளைக்கலித்துறையுமாக அந்தாதித்தொடையில் இருபது பாடல்களில் அமைத்துப் பாடப்பட்டுள்ள இந்நூல், முன்னர்க்கூறியபடி அடிகளால் இயற்றப்பெற்றதென்பதே பெருவழக்கமாக உள்ளது; தில்லை இறைவியின் மீது பாடப்பெற்றுள்ளது. அடிகளின் சொற்பொருள் முறைகள் இந்நூலிலும் காணத்தக்கனவாக உள்ளன.

அடிகள் பாடல்களுடன் ஒப்புமை

'சீர்பூத்த' என்று இந்நூற்செய்யுள் தொடங்குகிறது. [1] 'பொன்பூத்த' [2] என்று அடிகளின் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் தொடங்குதலும், 'கார்பூத்த' [3] என்று மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை தொடங்குதலும், ஒப்புநோக்கத்தகும். இறைவன் அம்மையின் அடிகளைக் கைகளால் தைவந்து அதனால் ஊடல் தணியாமைகண்டு, ஆரழல் ஆற முடிக்கங்கை கொண்டு ஆட்டுதல் கூறப்படுகிறது. [4] ஊடல் தீர்க்கச் சிவன் இவ்வாறு அம்மையைப் பணிந்து வணங்கியமை இந்நூலில் பல இடங்களில் குறிப்பாக உணர்த்தப்படுகிறது;

'நின் மென்பதம்தாக்க அவ்வெண்மதியும், தேய்ந்தது' (சிவ.இ.12)
'நின் பங்காளர் நினைப்பணியுமப் போது' (சிவ.இ.14)
'தாளிற்பதித்த மதித்தழும்புக்கு' (சிவ.இ.16)
'பிள்ளைப், பிறைநாறும் சீறடியெம் பேதாய்' (சிவ.இ.19)

இவ்வாறு இந்நூலில் கூறப்படும் இச்செய்தி அடிகளால் பிறஇடங்களில் [5] பயிலக் கூறப்பட்டுள்ள செய்தியே என்பது தெளிவு. கண்ணுதலார் கனகவெற்பைச் செங்கை கொண்டே குழைத்தார்; சிவகாமி இறைவன் புயக்குன்று எட்டையும் தன் சித்திரமென் கொங்கை கொண்டே குழைத்தாள் என்று இந்நூலில் [6] கூறும் கருத்து,

---

1. சிவ.இ. மாலை 1
2. 349
3. மீ.இ.மாலை 1
4. சிவ.இ. மாலை 6
5. 46,54,58,67,70; மீ.கு. 45;மீ.இ.8
6. சிவ.இ. 6

'கண்ணுதல்பொற் புயவரைசேர் தனவரைகள்
இரண்டவற்றுள் கனக மேரு
அண்ணல்புய வரைக்குடைந்து குழைந்துதலை
வணங்கிடும்நம் அன்னை பார
வண்ணமுலைத் தடவரையவ் வரைகுழையப்
பொருவதல்லால் வணங்கி டாதே' [1]

என்னும் அடிகள் கருத்தாகவே விளங்குதல் உணரத்தகும்.

'அங்கம் பகுந்தளித்த அம்பலத்தார்க்கு'[2] என்று வரும் தொடரின் பொருளும், பகுந்தளித்த என்னும் சொல்லாட்சியும் அடிகளின் வாக்காக எண்ணத்தக்கவையே. 'ஆகம் பகுந்தளித்த அந்நாளில்'[3] என்றும் 'இறைவளைக்கு ஆகம் பகுந்தளித்தார்'[4] என்றும் அடிகள் கூறுதல் இவ்வுண்மையை உணர்த்தும். இறைவியாகிய மயில் இருக்க இறைவன் நச்சரவக்கச்சணிந்தான் என்று கூறல் வம்பே[5] என்னும் கருத்து மயிலிருப்பதால் பாம்புக்கு அஞ்ச வேண்டுவதில்லை என்ற நயம் தோன்ற அமைந்துள்ளது. திருவாரூர் நான்மணிமாலையில், இறைவன் புற்றினிற்குடி கொண்டும் பாம்பு அணிந்தும் விடமுண்டும் விளங்குதல், தோகை (அம்மை) பங்கான துணிவு கொண்டே என்று கூறும் செய்தி இங்கு ஒப்புநோக்கத்தகும்.[6] அம்மை ஞாலமெல்லாம் ஈன்றளித்தும் குமரியாய் இருந்தாள் [7] என்று இந்நூலிற் கூறும் கருத்து அடிகளால் பல இடங்களில் கூறப்பட்டிருக்கக் காண்கிறோம்;

'எழுபெரும்புவனம் முழுதொருங் குதவும்
இறைவிஎன்று மறை கையெடுத்தார்க்கவும்
இடைநுடங்கு மடநடை இளங்குமரி' (352)
முன்புலகீன்ற முகிழ்முலைக்கன்னி (511)
தெண்கடல் வைப்பும்
அகிலாண்டமும் பன்முறை ஈன்றும்
அழகு முதிர முதிரா என், அம்மை' (393)

ஆகிய பகுதிகள் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கவை.

---

1. 347 4. 602 7. சிவ. இ. 15
2. சிவ. இ. 3 5. சிவ. இ. 9
3. 528 6. 342

'நறைநாறும்
நாட்கமலஞ் சூடேம் நறுந்துழாய் தேடேம்நின்
தாட்கமலஞ் சூடத் தரின் (சிவ.இ.19)'

என்று, இறைவி தாள் சூடப்பெற்றால் பிரம்மபதவி, திருமால் பதவி வேண்டாம் என்பது கூறப்படுகிறது. இறைவன் அடிக்கமலம் சூடியதால் இந்திரபதவி, திருமால்பதவி ஆகியவை புனையேம் என்று [1] அடிகள் தில்லை இறைவனைக் குறித்துக் கூறியிருத்தல் போல் இக்கருத்தும் அம்மையைப்பற்றியதாக அமைக்கப்பட்டுள்ளது எனலாம். கற்பகதருநாண அறச்சாலை சமைத்து அம்மை நல்லறம்பூண்டும் சிவன் கடைப்பலி தேர்ந்து தெருவில் ஓடித்திரிகின்றமை இந்நூலில் காட்டப்படுகிறது. [2] இச்செய்தியும் அடிகளால் கூறப்படும் வழக்கமான செய்தியாகவே [3] உள்ளது. இத்தகைய வொப்புமைச் சான்றுகள், அடிகளால் இயற்றப்பட்டதே இந்தநூல் என்பதை வலியுறுத்தி நிற்கின்றன.

சிவகாமி அம்மை சிறப்பு

அம்மை, திருத்தில்லை மன்றகம், அடிகளின் கார்பூத்த நெஞ்சமாகக் கொண்டுள்ளமை காட்டப்படுகிறது. [4] அடியவர் உள்ளத்தில் இறைவி வீற்றிருக்கும் இயல்பு இங்ஙனம் உணர்த்தப்படுகிறது. அம்மை பூத்தலினால் இப்பூமியைப்பூ என்கிறோம் [5] என்பது தெளிவாக்கப்படுகிறது. அம்மை கோயிலும் பொன்மன்றும் பணிந்தால் எமனுக்கு நெய்தல் முரசே (சாப்பறை) முரசாகும் எனக்காண்கிறோம். [6] நடராசதரிசனத்தால் எமபயமில்லை என்று பல இடங்களில் கூறியிருத்தல் [7] போல் இங்கு அச்செய்தி அம்மைக்கும் கூறப்படுகிறது எனலாம். அம்மை அடியவர்க்குத் தரும் வரம், சிவனுக்குத் தருவதைவிட மிகுந்திருப்பதாக நயந்தோன்ற உரைக்கக் காண்கிறோம். உடம்பில் பாதி அளித்த அம்பலத்தார்க்கு இறைவி தந்தவை வளைத் தழும்பும் கொங்கைத் தழும்பும் ஆகிய இரண்டே. ஆயின் வந்திக்கும் அடியார்க்கு, அம்மை ஈன்றளித்த ஏழுலகும் ஒருங்கு கிடைக்கின்றன [8] என்று விளக்கக் காண்கிறோம்.

---

1. 467
2. சிவ.இ.20
3. 486, 617
4. சிவ.இ.1
5. சிவ.இ. 4
6. சிவ.இ.7
7. 483, 495, 555
8. சிவ. இ. 3

பிஞ்ஞுகர்க்குப் பொன்மார்பில் அம்மையின் பெருந்தடங்கொங்கை குறியிட்டமைகண்டு, கருந்தடங்கண்கள் கழுத்தில் குறியிட்டாற் போலக் கழுத்திலுள்ள கறை விளங்குதல் நயமுறக் காட்டப்படுகிறது. [1] அம்மைக்கும் இறைவனுக்கும் உள்ள தழும்புகளைச் சரிபார்க்கிறது ஒரு பாடல். இறைவன் அம்மையின் தாளில் பதித்த மதித்தழும்புக்கு அவன் தோளில் பதித்த வளைத்தழும்பு சரியாகும். ஆனால் இறைவன் மார்பில் முலைத்தழும்பு செய்திருத்தல், அவன் அம்மையின் மார்பில் ஒன்றும் செய்யாதிருக்கவும் மிகையாகச் செய்யப்பட்டிருக்கிறது. இஃது அம்மையின் நடுவின்மையைக் (நடுவுநிலை இன்மை, இடை இன்மை) காட்டும் [2] என்று கூறும் கருத்துரை சுவையுடையதாகும். அம்மையைச் சிவபெருமானோடு உள்ளத்தில் இருத்தி இன்பம் பெற நினைத்தலே நல்லது என்று அறிவுறுத்தக் காண்கிறோம். [3]

பண்டார மும்மணிக்கோவை

மும்மணிக்கோவை இலக்கணத்திற்கேற்ப [4] நேரிசை ஆசிரியப்பா, நேரிசை வெண்பா, கட்டளைக்கலித்துறை என்ற முறையில் அந்தாதியாகப் பூமலி எனத் தொடங்கும் பாடல் [5] முதலாகப் பூண்டவரே என்று முடியும் பாடல் [6] வரையில் 30 பாடல்கள் அமைந்திருப்பதோடு, இந்நூலில், முதற்கண் விநாயகர் காப்புப்பாடல் ஒன்றும், இறுதியில் நூற்சிறப்பும் அடிகளின் அடக்கமும் கூறும் முறையில் அமைந்த பாடல்கள் மூன்றும் இடம் பெற்றுள்ளன. சில பழைய பதிப்புக்களில் மேலும் இருபாடல்கள் மாசிலாமணி தேசிகரின் சிறப்பினைக் கூறும் முறையில் அமைந்து இறுதியில் காணப்படுகின்றன. அவற்றை உ.வே.சா அவர்கள் தம் பதிப்பில் இந்நூலின் இறுதியில் சேர்த்துப் பதிப்பித்துள்ளார்கள். [7] திருமயிலைச் சுப்பராய ஞானியாரால் பதிப்பிக்கப்பெற்ற பண்டார மும்மணிக் கோவையில் மேலும் ஒருபாடல், குருவிடம் வேண்டும் முறையில் அமைந்திருப்பது, காணப்படுகிறது; இதனை உ.வே.சா அவர்கள் தனிச் செய்யுட்களில் சேர்த்துள்ளார்கள். [8] இவையனைத்தையும் சேர்க்க

---

1. சிவ.இ.8
2. சிவ.இ.16
3. சிவ.இ.13
4. வெண்பாப்பாட்டியல் 13
   பன்னிரு பாட்டியல் 263
5. 566
6. 595
7. கு.பி.தி. (உ.வே.சா) பக்.458
8. மேற்படி பக்.16

இந்நூலில் 37 பாடல்கள் உள்ளன. அந்தாதி முறையில் முற்குறித்தவாறு 30 பாடல்களும், நூற்கருத்தோடு பெரிதும் தொடர்புடைய வகையில் மற்ற ஏழுபாடல்களும் அமைந்துள்ளன. இவையனைத்தும் அடிகளால் பாடப்பட்டவை என்றே கொள்ளத்தகும்.

தருமபுர ஆதீனத்தில் நான்காம்பட்டத்தில் வீற்றிருந்த மாசிலாமணி தேசிகர்பால் அடிகள் ஞானோபதேசம் பெற்று, அவர் மீது இந்நூலைப் பாடியுள்ளனர். இந்நூல் சிறந்த குருவணக்கப் பாமாலையாகத் திகழ்கின்றது. அடிகள் தமக்கு உபதேசித்த குருவின் சிறப்பையும் சிவனே குருவாக வந்துள்ளமையையும் தெளிவாக உணர்த்துகிறார். பல்வகை ஏதுக்களால் தமக்கு அருளவேண்டியும், அருளியதைக் கூறியும், சித்தாந்தக் கருத்துக்கள் விளங்க அமைத்தும் குருவிற்குரிய தருமை, கமலை, மதுரை ஆகிய தலங்களின் வளத்தை இடையிடையே காட்டியும் அடிகள் இந்நூலைப் பாடியுள்ளனர். இந்நூலின் பாட்டுடைத் தலைவரான ஸ்ரீலஸ்ரீமாசிலாமணி தேசிக மூர்த்திகள் ஆதீன மகாசந்திதான குருமூர்த்திகளாதலால், அவர்கட்குப் பொதுவாக வழங்கும் பெயரால் இந்நூல் பண்டார மும்மணிக்கோவையெனப் பெயர் பெறுவதாயிற்று என்று ஔவை சு.துரைசாமிப்பிள்ளையவர்கள் குறிப்பிடுகின்றனர்.[1]

குருவின் சிறப்பு

குருவின் பெயரை நினைக்கும்பொழுது அப்பெயருக்குரிய பொருட்சிறப்பும், தொடர்பும், அடிகளால பொருத்தமுறச் சிறப்பித்து உரைக்கப்படுகின்றன. மாசிலாமணி தேசிகர் என்பது ஞானாசிரியர் தம் பெயராகும். ஞானசம்பந்தர் என்ற பெயரையும் இணைத்துப்பல இடங்களில் அடிகள் குறிப்பிடக் காண்கிறோம்:

> 'மாசிலா மணியென வண்பெயர் நிறீஇ
> மேன்மையோ டமர்ந்த ஞானசம்பந்தர்' (569)
> 'மாசிலாமணிச் சம்பந்தா' (570)
> 'மாசிலாமணித் தேசிகராய

---

1. தருமபுர ஆதீனம், பத்தாண்டு ஆட்சி மலர், பக். 160

சம்பந்தப் பெயர் தரித்தமையால்' (572)
'மாநிலம் புரக்கும் மாசிலாமணி
ஞானசம் பந்த ஞானதேசிக' (575)
'மாசிலாமணிச் சம்பந்தனே' (577)
'தமிழ்ப் பெருங்கடல்
வண்பதி புரக்கும் மாசிலாமணி
....
ஆரூரமர்ந்த ஞானசம்பந்த' (578)
'ஞானசம்பந்த
பாசமாம் இருட்கோர் படர்மணி விளக்கெனும்
மாசிலா மணித் தேசிகராய' (581)
'மாசிலா மணி ஞானசம்பந்த' (584,587,593)
'மாசிலாமணி ஞானசம் பந்தனென்று
அருந்தவர் துதிப்பவோர் பெரும்பெயர் நிறீ இ' (590)
'அருள்ஞானசம்பந்தன் தண்கமலைக்
குருமணிக்கோவைநிகர் மாசிலாமணி' (595)

என்று வழங்கும் இச்சான்றுகள் இவ்வுண்மையை உணர்த்தும். கமலை ஞானப்பிரகாசராகவும் மாசிலாமணிதேசிகர் அடிகளால் அழைக்கப்படக் காண்கிறோம்.[1] குருபரம்பரையினர் யாவரையும் ஒருவராகவே கொள்ளும் மரபில் அடிகள் தம் ஆசிரியரைக் கமலை ஞானப்பிரகாசராகவும் தருமை ஞானசம்பந்தராகவும் பாராட்டியிருப்பதாகக் கூறுகின்றனர்.[2] குரு பரம்பரை மரபில், கமலை ஞானப்பிரகாசருடைய மாணாக்கர் குருஞானசம்பந்தரால் தருமபுர ஆதீனம் தோற்றுவிக்கப்பட்டது; குருஞானசம்பந்தருக்குப்பின் முறையே ஆனந்தபரவசதேசிகர், சச்சிதானந்ததேசிகர் தலைவர்களாய் வீற்றிருந்தனர்; அவர்கட்குப்பின் நான்காம் பட்டத்தில் மாசிலாமணிதேசிகர் எழுந்தருளியிருந்தனர் என்று அறிகிறோம்.[3] இத்தொடர்பை வைத்து எண்ணும்போது அடிகள் 4-ஆம்பட்டத்தில் வீற்றிருந்த மாசிலாமணிதேசிகரை அவருக்கு முற்பட்ட நால்வராகவும்

1. 567
2. கு.பி.தி (உ.வே.சா) பக்.431-432; கலைக்களஞ்சியம் தொகுதி 4, பக்.40 (கே.எம்.வேங்கடராமையா)
3. தருமபுர ஆதீனம், பத்தாண்டு ஆட்சி மலர், பக்.33-47

குறிப்பிட்டுப் பாடாமல், ஞானப்பிரகாசராகவும் குருஞான சம்பந்தராகவும் மட்டும் குறிப்பிட்டுப் பாடியுள்ளதாகக் கூற வேண்டியுள்ளது. மாசிலாமணி ஞானசம்பந்தன் என்றே மிகுதியும் இணைத்து வழங்குதல் காணப்படுவதால் மாசிலாமணி என்பது இயற்பெயர் எனவும், ஞானசம்பந்தன் என்பது சிறப்புப்பெயர் எனவும் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்கள் கருதுகின்றனர்.[1] இவ்விருபெயர்களாலும் அடிகள் தம் ஆசிரியர் சிறப்பியல்புகளை விரித்துரைக்கின்றனர்.

ஞானசம்பந்தர் என்னும் பெயர்ச்சிறப்பு

ஞானசம்பந்தர் என்ற பெயர்த் தொடர்பால், அடிகள் தம் ஆசிரியரை அமண் மாசறுத்த கவுணியர் பெருந்தகையாகிய திருஞானசம்பந்தராகக் கருதுகின்றனர். ஆயின் முதுமைத்தோற்றம் ஆசிரியர்க்கிருத்தல் பற்றித் திருஞானசம்பந்தர் குழந்தைப்பருவம் விடுத்து முதுமைப்பருவத்தில் காட்சியளித்தல் போல் இருப்பதாகப் பாராட்டுகின்றனர். [2] அமண் மாசறுத்த திருஞானசம்பந்தர் போல் கூறியதற்கேற்பச் சமயவாதம் புரிந்து வென்ற ஆசிரியர் சிறப்பைப்

பின்னம் படைத்த சமய விரோதப் பிணக்கறுத்தோர்
சின்னம் படைத்த முனிமா சிலாமணி '(589)

என்று அடிகள் கூறுதல் ஈண்டு ஒப்புநோக்கத்தகும். மெய்ஞ்ஞான சம்பந்தன் என்பதால் வெம்பந்தமாகிய பாசத்தளையை நீக்கும் விமலனாக ஆசிரியரைக் குறிக்கக் காண்கிறோம். [3] ஞானசம்பந்தனை வணங்கில் ஈனசம்பந்தமில்லை வீடெளிது என்கிறார். [4] இவ்வாறு சம்பந்தன் என்னும் சிறப்புப் பெயரால் ஆசிரியர் சிறப்பைப் பொருத்தமுற விளக்கியிருக்கக்காண்கிறோம்.

பிறமணிகளோடு ஒப்புமையும் வேறுபாடும்

மாசிலாமணி என்ற பெயரின் பொருளையும் அடிகள் பலவாறு சிறப்பிக்கின்றார். மாசிலாமணி என்பது குற்றமில்லாத, நன்கு

---

1. தருமபுர ஆதீனம் பத்தாண்டு ஆண்டு ஆட்சி மலர் பக்.169, 163-164
2. 566
3. 567
4. கு.பி.தி. (உ.வே.சா) பக்.458, இறுதியில் உள்ள முதற்பாடல்

கழுவப்பெற்ற மணி என்னும் பொருளது. இத்தகைய மணி அனைவராலும் விரும்பி முடியிலணியத்தக்கதாகும். அவ்வாறு அணிவது சூளாமணி ஆதலின், எண்டிசைக்கும் சூளாமணி மாசிலாமணி [1] என்று புலப்படுத்தக் காண்கிறோம். மணிமந்திர மருந்துகளால் பிறவி நோய் தீராது; ஆயின் இம்மணி ஒன்றினால் நீங்கும் என்றும், ஐம்பொறிகளை அடக்கியவர்க்குச் சூளாமணி மெய்ச்சுடர் மாசிலாமணி என்றும் காட்டுகிறார். [2] ஞானமாகிய பெண்ணுக்குச் சைவமாகிய அரிய அணிகலனில் நடுநாயக மணியாக விளங்கும் மாசிலாமணி என்று சிறப்பிக்கக் காண்கிறோம். [3] கடவுள் மாமணியாகிய சிவபெருமானுக்குக் கழுத்தில் ஒருகளங்கமுண்டு. நஞ்சுண்டகறையாகிய அக்களங்கத்தை மறைத்துக் குற்றமின்றி விளங்கும் குருவாகத் தோன்றிய காரணத்தால் மாசிலாமணி என்னும் பெயர் அமைந்தது என்கிறார் அடிகள். [4] களங்கம் நீங்கிய இறைவனே ஆசிரியராக வந்துள்ளான் என்றுணர்த்தும் சிறப்பும் நயமும் குறிக்கத்தகும். மணி இருளை நீக்கி ஒளிதருவதாதலின், மாசிலாமணியாகிய ஞானாசிரியர் பாசமாகிய இருளைப்போக்கும் படர்மணி விளக்கம் எனப்படுகிறார். [5] மணியை நூலில் கோத்து உலகோர் அணிந்து இன்புறுவர்; இம்மாசிலாமணி பஞ்சுநூலில் கோக்கப்படுவதன்று; அடிகளின் செய்யுள் நூலில் கோக்கப்படும் சிறப்பினது. [6] மாசிலாமணி என்னும் ஒரு மணியைக் கண்டோர் பலருள், நீங்கிநின்று ஒவ்வொருபக்கத்தில் இருந்து பார்த்தோர் தத்தமக்குத் தோன்றியபடி அதனை வெவ்வேறாகக் கூறுவர்; அதனை நெருங்கிச் சென்று கண்டவர்கள் அது செம்மணியே என்பர். அவ்வாறே ஞானாசிரியராகிய மாசிலாமணி தேசிகரைக் கண்டோர் தத்தம் அறிவு நிலைகளுக்கேற்பப் பல்வேறு கடவுளருள் வைத்துக் கூறினும், அணுகிச் சென்றவர்கள் அவரைச் சிவபெருமானாகிய செம்மணியே என்று உணர்வர்.[7]

உலகிலுள்ள பிறமணிகள் தம் ஒளிச்சிறப்பால் பிறவற்றை அடக்கி நிற்கும்; பிறவற்றுள் தாம் அடங்கா. ஆயின் குருவாகிய

---

1. 565
2. 586
3. 566
4. 569
5. 581, கு.பி.தி. (உ.வே.சா) பக்.458 இறுதியில் உள்ள 2-ஆம் பாடல்
6. 579
7. 592

மாசிலாமணி சிவபோதத்தில் நிலைபெறநின்று அடிகளைத் தன்பால் அடக்கியும், அடிகள் ஆன்ம போதத்தால் தலையெடுத்து நிற்குங்கால் அவருக்குள் மறைந்தும் நிற்றலால் இதற்கு ஒத்த நன்மணியை எங்கும்; காணேன் என்கிறார் அடிகள்.[1] மேலும் உலகிலுள்ள மணிகளைப் பெறுதற்கு முயற்சியும் வருத்தமும் மேற்கொள்ளவேண்டும்; வருந்தாது பெறமுடியாது. ஆயின் குருமாசிலாமணியைக் கருவி கரணங்களை அடக்கிச் சும்மா இருந்தவர்கள் எளிதில் பெறலாம் என்கிறார்.[2] உலகில் மணிகளைப் பெறுவோர்க்கு அம்மணிகள் அவர்களுக்கு உரிய உடைமைப் பொருள்களாக விளங்கும். அவை பெற்றவர்களை ஆள்வதில்லை. ஆயின் குருமாசிலாமணி தன்னைக் கண்டவர்களைக் கண்டவுடன் பணி கொண்டு ஆளும் பெருமையுடையது.[3] உலகில் மணியைக் கொள்வோர் பொன்னைக் கொடுத்துப் பெறுவர்.[4] குருமாசிலாமணியை உடல் பொருள் உயிர் என்ற மூன்றையும் கொடுத்துப் பெறுவர். ஞானாசிரியர்க்கு இம்மூன்றையும் காணிக்கை ஆக்கும் மரபினை அடிகள் இவ்வாறு கூறுகிறார். மாசிலாமணியைக் காந்தமாகிய மணி என்றும் காட்டுகிறார். அடிகளின் இரும்பு மனதைக் குழைத்துத் தன்வசமாக இழுத்துத் தன்னோடு நிலைபெறச் செய்தலால் இவ்வாறு ஒப்புமைப்படுத்துகிறார்.[5]

கடலில் பெற்ற சிந்தாமணியாகவும் அடிகள் தம் ஆசிரியரை எண்ணுகின்றார். விண்புரக்கும் சிந்தாமணி என்பேனா; சுடரால் மண் புரக்கும் சூளாமணி என்பேனா; முனிவர் சிகாமணி என்பேனா என்று தம் ஆசிரியரை எப்படிச் சொல்வேன் என்கிறார்.[6] பிறர் கொண்டு ஆளா மணி எமை ஆட்கொள் சிந்தாமணி[7] என்றும் காட்டுகிறார். ஆயினும் குரு மாசிலாமணி சிந்தாமணியிலிருந்து வேறுபட்டுச் சிறந்து விளங்குவதை உணர்த்துகிறார். கடல் பெற்ற சிந்தாமணி நினைத்தவற்றை நல்கும். ஆயின், நினைப்புக்கு எட்டாத சிவஞானப் பேரின்பத்தைக் குருமாசிலாமணி நல்கும் சிறப்பினது என்கிறார்.[8]

---

1. 568
2. 573
3. 574
4. 594
5. 580
6. 576
7. 586
8. 571

மும்மணிக்கோவை என்று யாப்பு அமைப்பு முறையால் இந்நூல் பெயர் பெறுமாயினும் குருமாசிலாமணியே இதில் கோக்கப்பட்டிருத்தலால் இஃது ஒருமணிக்கோவை என்று நயம்பட மொழிகிறார் அடிகள்; இக்கோவை நூலைக்கற்போர் சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, காமதேனு ஆகியவற்றைப் பொருளாகக் கொள்ளமாட்டார்கள் என்றும் தெளிவாக்குகிறார்.[1]

இவ்வாறு மாசிலாமணி என்னும் பெயர்ப்பொருளையும் பொருத்தத்தையம் பிறமணிகளோடு ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டும் முறையில் ஞானாசிரியர்தம் சிறப்பையும், பெருமையையும் அடிகள் இனிதின் புலப்படுத்தியுள்ளனர்.

சிவனே குருவாய் வந்தமைகூறல்

அடிகள் தம் ஞானாசிரியரைச் சிவனாகவே கண்டு காட்டியுள்ளார். சிவன் மானிட உருவம் தாங்கிக் குருவாகத் தோன்றி வீடளிப்பதை,

'எம்மனோர் போல இனிதெழுந் தருளிக்
கைம்மா றற்ற கணக்கில் பேரின்ப
மோன வாழ்வளிக்கும் ஞான தேசிகன்' (566)

என்று அடிகள் காட்டுகிறார். ஊர் பேர் இல்லாற்கு ஆரூரே ஊர் என்றும், அருள் மாசிலாமணியென்பது பேர் என்றும் உரைத்தேன் என்கிறார் அடிகள்.[2] 'ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம், திருநாமம் பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ'[3] என்னும் மாணிக்கவாசகர் கருத்துக்கிணங்க இவ்வாறு உரைத்துக் குருவை இறைவனின் தோற்றம் என்று தெளிவுபடுத்துகிறார் எனலாம். ஒரு மலம் மட்டும் உடைய விஞ்ஞானகலராகிய உயிர்கட்குச் சேய்நிலை நின்று திருக்கண் சாத்தியும், மும்மலமுடைய சகலராகிய உயிர்கட்கு அவர்களுடைய உருவத்தில் வந்து அவர்களோடு பழகி மும்மலத்தைப் போக்கி அருளியும் விளங்கும் குரு என்று கூறி, இறைவனே குருவாக வருவதை உணர்த்துகின்றார்.[4] பாம்பை முடியில் கொண்டிருந்த மாசிலாமணி

---

1. 595
2. 585
3. திருவாசகம், திருத்தெள்ளேணம், 1
4. 584

என்றும்,[1] நிலவையும் பாம்பையும் பெறாது தோன்றியுள்ள மாசிலாமணி என்றும் [2] தெளிவாக்குகிறார்.

சிவனே குருவாக வந்திருப்பதை அணிநலம்பட நிலைநிறுத்துகிறார் அடிகள். தலையில் விளங்கும் கலைகளையுடைய மதியைத் தாங்காமல் சிறந்த சாத்திர அறிவைத் தாங்கியும், மானை (உமையை) இடப்பக்கத்தில் உடைய கோலம் கொள்ளாமல், மானிடனாகிய (மனிதப் பிறப்பாகிய) வடிவு கொண்டும், என்பாகிய அணியைப் பூணாமல் எற்பணி (அடிகளைப்பணி கொள்தல்) பூண்டும், பாரிடம் (பூதம்) சூழப்பெறாமல், பாரிடம் (பூமி) தன்னில் தோன்றியும் விளங்கும் ஆசிரியர் என்று உணர்த்தக் காண்கிறோம். [3] சிவனுக்குரிய கோலங்களைக்கூறி அவையில்லாமல் வருவதாகக் கூறினாலும், குருவாக விளங்கும் நிலையில் அவை மற்றொரு வகையில் இருப்பதாகப் புலப்படுத்தும் திறத்தால், குருவாக வந்திருப்பவன் இறைவனே என்று நன்கு வலியுறுத்தப்படுகிறது எனலாம்.

குரு மாசிலாமணி தேசிகர் அங்கயற்கண்ணி பங்குறை சொக்கநாதரைப் பூசனை புரிவது, இறைவனின் வேறானவர் குரு என்பதை உணர்த்தாது என்பதற்கு ஏற்ற விளக்கமும் அமைதியும் அடிகளால் தரப்படுகின்றன. திருவிடைமருதூர் இறைவன் உமையம்மைக்கு வழிபாட்டு முறைகளை அறிவித்தற் பொருட்டுத் தன்னைத்தானே பூசனை புரிந்தது போல, அன்புகொண்டு உருத்திர கணங்கள் அருச்சனை புரியும் முறைகளைத் தெரிந்து கொள்தற்காகக் குருமாசிலாமணியும் மீனாட்சி சொக்கநாதரைப் பூசனை புரிந்து தன்னைத்தானே பூசனை புரிந்து வழிகாட்டுகிறார் என்பதை அடிகள் தெளிவாக்குகிறார். [4]

குருவைப்பற்றிய பிறகுறிப்புக்கள்

நான்மறைக்கிழவன்; நற்றவமுதல்வன்; நூன்முறை பயின்ற நுண்மைசாலறிஞன்; சொற்சுவை பழுத்த தொகைத்தமிழ்க் கவிஞன்; கற்றவர் வியக்கும் காவியப் புலவன்; செவிதொறும் செவிதொறும் தெள்ளமுது ஊட்டிக் கவிஞர் வயிறு நிரப்பும் கல்விப் பிரசங்கன் [1] என்று

---

1. 591
2. 577
3. 578
4. 587

அடிகள் தம் ஆசிரியரை விளக்குகின்றனர். மாசிலாமனமுடைய அடியவர்க்கு ஆருயிராய்க் குருமூர்த்தி, அவர்கள் உள்ளத்தில் விளங்குகிறார் என்று உணர்த்தப்படுகிறது. [2] குருவாகிய பரமானந்தப் பரவையுள் தோன்றிய இன்ப ஆரமுதம் அன்பர்களுக்குக் கிடைத்தல் எளிது எளிது என்றும், விண்ணவர்க்குக் கிடைத்தல் அரிது என்றும் உணர்த்துகிறார் அடிகள். [3] தேசிகர் தாளை அடைந்தவர்களுக்கு, முன்னர் இருளாயிருந்தவை வெளியாகத் (ஞானமாக) தோன்றும் எனக் காண்கிறோம். [4] தருமை, கமலை, கூடல் ஆகிய மூன்று இடங்களிலும் மாசிலாமணி தேசிகர் எழுந்தருளி இருப்பதாகக் கூறப்படுகிறது.[5] எனினும் கமலை மிகுதியும் குறிக்கப்பட்டுள்ளது. [6] தருமபுரத்தில் இருந்து அருள்பாலிக்கும் மாசிலமணிதேசிகருக்குத் திருவாரூரும், கூடலும் எழுந்தருளும் திருநகரங்களாக இருப்பத் தருமையும் கூடலும் போலாது திருவாரூரை மட்டில் அடிகள் பன்முறை இந்நூற்கண் சிறப்பித்தோதியது, அத்திருவாரூரில் இவ்வாதீனத்தின் ஆதி குருமகாசந்நிதானமாகிய குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகட்கு ஞானோபதேசம் செய்தருளிய கமலை ஞானப்பிரகாச சுவாமிகள் வீற்றிருந்த திருப்பதியாதலானும், அத்திருப்பதியே ஆதீன மகாசந்நிதானம் ஞானோபதேசம் பெற்ற இடமாதலானும் ஆம் என்பர்[7]

அடிகள் வேண்டுதல்

தம்குருவிடம் ஞானோபதேசம் வேண்டும் அடிகள் முத்திபெறும் குறிப்பையும் உணர்த்தி அருளுமாறு இறைஞ்சுகிறார். ஐம்புலக்களிறும் தம்புலத்திழுப்பப் பிறவிக் கானகத்தில் உழலாமல் முத்திநாடு அடைவதற்கு ஞானவாரணம் நல்குமாறு இறைஞ்சக் காண்கிறோம்.[8] தம்போல் மானிட வடிவம் கொண்டுவிளங்கும் குரு, அடிகளுக்கு அவர்தம் ஞானவடிவத்தை நல்குதல் தகும் என்று வேண்டுகிறார்; பாசத்தளை போக்கவும் வேண்டுகிறார். [9] பிறசமயத்தவர் சொல்வழிப்படாமல் திவ்வியம்பழுத்த சைவசித்தாந்த வழியில் நின்று இறவா நிலைமை பெற்று இன்பம் ஆர்ந்திருக்கும் பிறவாநன்னெறி அருளுமாறு கேட்கிறார். [1] தமக்குக் கதியருளுதல் கடன் என்கிறார். [2]

---

1. 584 4. 582
2. 570,573 5. 572
3. 590 6. 566,581,584,585,587,590,593
7. தருமபுர ஆதீனம், பத்தாண்டு ஆட்சி மலர், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, பக் 180
8. 566 9. 567

சம்பந்தப்பெயர் தரித்தமையால் தம்மைச் சம்பந்தம் செய்யத்தகும்தகும் என்று தம்மை மணந்து ஆட்கொள்ள வேண்டுகிறார். அகப்பொருள் மரபில் தம்மை ஆட்கொள்ள வேண்டுதல் காணப்படுகிறது. உயிர்கள் யாவும் புருடன் என்று அழைக்கப்பட்டாலும் சத்திகளே என்றும், இறைவனாகிய தலைவன் உயர்ந்தவன் ஆதலின் ஒத்தோட் புணரினும் இழிந்தோட்புணரினும் அவனுக்கு இழிவாகாது என்றும் கூறிக் காதலித்த தம்மைக் கைப்பிடித்தருளி ஒருவரும் உணராப் பரமவீட்டில் பரமானந்தப் பரவையுட்படிந்து வீடுபேறு பெற்றினிதிருப்ப ஆராஇன்பம் அளிக்குமாறு வேண்டக் காண்கிறோம்.[3] 'மிக்கோனாயினும் கடிவரையின்றே'[4] என்ற அகப்பொருள் இலக்கண மரபை ஒட்டிக் குறைபாடுடைய தமக்கும் அருள வேண்டும் என்று இறைஞ்சும் திறம் குறிக்கத்தகும்.

உழுவல் அன்புடன் சத்திநிபாதத் தன்மைவந்தடைந் தவர்களுக்குக் குரு மெய்ப்பொருள் உணர்த்துதலில் வியப்பில்லை என்றும், ஊமையை மணிவாசகர் பேசவைத்த வியப்புப் போலத் தகுதி குறைந்துள்ள தமக்கும் அருள வேண்டும் என்கிறார். வாழைத்தண்டில் நெருப்புப் பற்றாதிருப்பினும் சிறிதுசிறிதாக மூட்டி மற்றொரு சூழ்ச்சியால் பற்றுவித்தல்போல், சிறிதும் பருவமில்லாவிடிலும் தமக்குப் பவஇருள் போக்கி அருள வேண்டுகிறார். இவ்வாறு குருவின் சந்நிதியடைந்து இன்னருள் பெறாதவர் யாவரும் இலரெனும் வியப்பு உளதாகுமாறு நயக்கக் காண்கிறோம்.[5] 'பிறப்புத்தோறும் வினைப்பயன் நுகரச்செய்ய என் உருவில் வந்துள்ளாய்; எனக்குப் பக்குவம் இல்லை என்று அருளாவிடில் உனக்கே அவமானம்; ஏனெனில் குழந்தையைப் பார்க்காமல் தாய் சினந்து சென்றாலும், மீண்டும் அவளே அக்குழந்தையை எடுத்து ஆற்றுவாள். ஆகவே என்னைப்போல் அடிக்கடி நீயும் தோன்றாமல் அருளை இப்பொழுதே ஈவாயாக. ஈதற்குரிய சமயமில்லை என்றாலும் நீ அருளுவாய் ஆயின், அஃது அடாது என்று உன்னை யாரும் கேட்கமாட்டார்கள்'[6] என்கிறார் அடிகள். தமக்கு அருளாவிடில் தம்பொருட்டு மீண்டும்மீண்டும் இறைவன்

---

1. 569
2. 570
3. 572
4. தொல்.களவு. 2
5. 581
6. 584

குருவாகத் தோன்ற வேண்டியுள்ளதைச் சுட்டிக்காட்டி, அதற்கிடம் கொடாமல் அருள்க என்று கூறும் சாதுரியப்பேச்சுக் குறிக்கத்தக்கதாகும்.

காலந்தாழ்த்தாது அருள வேண்டும் அடிகள், 'வறிஞராய் வந்தடைந்தோர் எத்தன்மையராயினும் அவர்வேண்டும் பொருள்களை அளித்தல் வள்ளியோர் கடனாகும். அதுபோல நன்னெறிப் படராத நலமில்லாதவனாயினும் நின் சீர் புனைந்து ஏத்தலின், சத்திநிபாதம் எய்தியது எனக்கு. எனவே சரியையில் தாழ்க்காமல், கிரியையில் பணிக்காமல், யோகத்தில் செலுத்தாமல், பரிபக்குவம் உள்ளதா என்று நோக்காமல், நாளை இன்று என்று நாட்கெடு குறிக்காமல் அருளுக' என்கிறார். [1] குருவின் பெருமையும் அருளும் இங்ஙனம் உடன் உணர்த்தப்படுகின்றன.

அடிகள் குருவருளால் தாம் பெற்ற பேற்றையும் இன்பத்தையும் விளக்கிக் காட்டியுள்ளார். மனம், வாக்கு, யாக்கை ஆகிய திரிகரணங்களும் குருவின் புகழை நினைத்தும், சொல்லியும், இறைஞ்சியும் இன்புற்றனவாதலால் அவை அவகரணங்களாக இல்லாமல் சிவ கரணங்களாகத் திரிந்தன என்கிறார். [2] தமது குருவின் ஊரைச் சேர்ந்ததால், சீவன் என்னும் பெயராக இருந்த நிலை ஒருமாத்திரை குறைந்து சிவன் என்று ஆனதாகக் காட்டுகிறார். [3] குருவருளால் உண்முகமாக நுகரும் ஐம்புலநுகர்ச்சி பெற்ற நிலையையும் உணர்த்தியுள்ளார். [4]

பிறவாதிருக்க வேண்டும் அடிகள், அஃதியலாதெனின் தாம் விரும்பும் பிறப்பு இன்னதென வேண்டுகிறார். இந்திரனாகவோ பிரமனாகவோ திருமாலாகவோ பிறத்தலை அடிகள் விரும்பவில்லை. அவை ஆரா இன்பம் உடையன என்றாலும் வாரா வல்வினை வருவிக்கும் என்று கூறுகிறார். குருவின் அடித்தொண்டர் அமுது உண்டு தெருவில் எறிந்த எச்சில் இலையை உண்டு உழக்கும் நாயாகப் பிறந்து

---

1. 593
2. 587
3. 588
4. 590

குருவின் அருளை மறவாது அவதரிப்பதையே அடிகள் வேண்டக் காண்கிறோம்.[1]

பிறகுறிப்புகள்

சைவசித்தாந்தத்தை இந்நூலிற் சிறப்பித்துக் கூறக் காண்கிறோம்.[2] சித்தாந்தக் கருத்துக்கள் இடையிடையே இடம் பெற்றுள்ளன. குருவாகிய இறைவனை உழவனாக உருவகித்துக் கூறும் முறையில் சித்தாந்தக் கருத்துக்கள் விளக்கப்படுகின்றன.[3] அடிகளின் சமயக் கருத்துக்கள் பற்றிய இயலில் இவை விரிவாகக் கருதப்படும். கலம்பகத்தில் 'சித்து' என்று பாடுதல்போல் இந்நூலில் அடிகள் தம்மை மாசிலாமணியின் சித்தர் என்று கூறி, இயல்பான செயலை அரியதெனக் காட்டும் முறையில் பாடக் காண்கிறோம். எமக்கு அன்னம் படைத்தவர் புவனம் அனைத்தும் பெற்றார் என்பதில், அன்னத்தை ஊர்தியாக உடைய பிரமன் படைப்புத்தொழிலை உடையவன் என்ற இயல்புப் பொருளும், உணவு படைத்தவர்களுக்குப் புவனம் முழுதும் கிடைக்கும் என்ற அரிய பொருளும் அமைந்து விளங்குதல் காண்கிறோம்.[4] இந்நூலில் அகப்பொருள் மரபில் பாடல் பாடப்படவில்லை என்று சுட்டிக் காட்டுவர்.[5] தனியாக அகத்துறையில் அமைந்த செய்யுட்கள் இல்லை எனினும் கமலை முதலிய நகர் வளம் கூறும் பகுதிகளில் அகப்பொருட்சுவைபடப் பாடியுள்ளமை அறிகிறோம்.[6] பேரின்ப உணர்ச்சியைச் சிற்றின்பம்போல் தோற்றும் வண்ணம் சொற்றொடரமைத்துப் பாடியுள்ளமையும் அறிகிறோம்.[7] இக்கோவை நூலை நித்தம் துதிப்பவர்க்கு இப்பிறப்பிலேயே பேரின்பம் கிடைக்கும் என்று கூறுகிறார் அடிகள்.[8] இந்நூல் தமது கள்ளப்புலன் கொண்டு சொல்லப்பட்டதன்று எனவும், கலைமகள், மாசிலாமணிதேசிகர் புகழில் எள்ளளவு எடுத்துத் தம்நாவால் இசைத்துள்ளாள் என்றும் அடிகள் குருவின் பெருமை புலப்பட உரைக்கக் காண்கிறோம்.[9] எனினும் இந்நூல் இயற்றியதைச் சரியையாகவும், குருவுக்குச் சாற்றியதைக் கிரியை என்றும், குரு இந்நூலைத் தெரித்தபோது அருளியது யோகம் என்றும், குரு வழங்கியது ஞானம் என்றும் புலப்படுத்தக் காண்கிறோம்.[10]

---

1. 569
2. 575,569
3. 575
4. 589
5. 581,584,569
6. 572
7. 596
8. 597
9. 598

5. கு.பி.தி. (உ.வே.சா) பக் 84; கலைக் களஞ்சியம், தொகுதி 4, பக்.40

'இந்தநூல் மொழிநயமும், காவியப்பண்பும், சாத்திர நுட்பமும், தோத்திர மாண்பும் ஒருங்கமைந்து விளங்குவது' என வித்துவான் சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் குறிப்பிட்டுள்ளமை தகும்.[1]

13. காசிக்கலம்பகம்

விநாயகர் காப்புடன் 101 பாடல்கள் இடம்பெற்றுள்ள காசிக்கலம்பகம், கலம்பக இலக்கண முறையை ஒட்டிக் காசி இறைவனைப் பாடியுள்ள நூலாகும். மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா 1ம், நேரிசை வெண்பா 14ம், கலித்துறை 27ம், மருட்பா 1ம், ஆசிரியப்பா 3ம், கலிப்பா 13ம், ஆசிரிய விருத்தம் 35ம், கலிவிருத்தம் 3ம், கலித்தாழிசை 2ம், வஞ்சிவிருத்தம் 1ம், வஞ்சித்துறை 1ம் அமைந்துள்ளன; இருபது கலம்பக உறுப்புக்களில் 26 பாடல்களும், பொதுவான அகப்பொருள் மரபில் 39பாடல்களும், பொதுவாக இறைவனைப் பற்றிய செய்திகளைக் கூறும் புறப்பொருள் மரபில் 36பாடல்களும் இடம் பெற்றுள்ளன.[2] அடிகளின் மதுரைக்கலம்பகத்தோடு ஒப்புநோக்கும்போது தவம், காலம், இரங்கல், மடல், வலைச்சியார், இடைச்சியார், கிள்ளைவிடுதூது, கார் ஆகிய உறுப்புக்கள் காசிக்கலம்பகத்தில் பாடப்படவில்லை என்பது தெரியவருகிறது. பாங்கிவிடுதூது என்னும் உறுப்பு மதுரைக் கலம்பகத்தில் அமைக்கப்படாத ஒன்று; இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

கலம்பக உறுப்புக்கள் இடம் பெறும் முறை

புயவகுப்பில் சிவனுடைய தோள் சிறப்புப் பேசப்படுகிறது.[3] இறைவன் மார்பில் புரளும் கொன்றை மாலையின் மது விருந்துண்டு வண்டுகள் தலைவியின் குறையினை விரித்துரைக்குமாறு தூதுவிடுக்கப்படுகின்றன.[4] அம்மானைப் பாடலில் காசி அகிலேசர், மன்மதனைக் கண்ணழலால் செற்றனர் என்று ஒருத்தி கூற, அவ்வாறாயின் மலைமகளுக்கு ஒரு பாகம் வழங்குவது ஏன் என்று மற்றொருத்தி வினவ, மாலானால் அப்பாலும் வழங்காரோ என்று மூன்றாமவள் விடையிறுக்கின்றாள்.[5] மயங்குவதால் இடங் கொடுத்தார்

---

1. தருமபுர ஆதீனம், பத்தாண்டு ஆட்சி மலர், பக்.122
2. விரிவு, பிற்சேர்க்கை 3-இல் தரப்பட்டுள்ளது
3. 603
4. 657
5. 632

என்ற பொருளும், அப்பக்கம் திருமால் இருப்பதனால் இடம் வழங்கினார் என்ற பொருளும் அமைந்து நிற்றல் குறிக்கத்தகும். வாளெடுத்து வீசியாடும் மதங்கியார் கண்கள் இரண்டும் உடலையும் உயிரையும் உண்ணவும், கையில் வாளிரண்டும் வீசிட வேண்டுமோ என்று வினவும் முறையில் காசி மறுகில் ஆடும் மதங்கியார் பாடப்படுகிறாள். [1] தலைவியின் கண்கள் அருளும் மருளும் ஒருங்கு பெற்றிருத்தலின் கடலொடு பிறந்தன போலும் என்று வினவும் தலைவன், தலைவியின் அருட்பார்வையாகிய அமுதம், தேவாமுதத்தை நஞ்சாக எண்ணச்செய்தது என்றும், மருட் பார்வையாகிய நஞ்சு, விடத்தை அமுதமாகக் கருதச் செய்தது என்றும் கூறுகிறான். காசி நகரத் தலைவிபால் கைக்கிளைக் காதலுற்று மொழியும் கூற்றாக இஃது அமைந்துள்ளது.[2] இரசவாதம் புரியும் சித்தர் கூறும் முறையில், காசியிறைவன் அடியவர்க்கு இரும்பை ஆடகமாக (பொன்னாக) ஆக்கிக் கொடுத்ததாகவும், விண்ணோர்க்கு இரும்புமலையைப் பொன்னாக்கிக் கொடுத்ததாகவும், அண்டஓட்டினைப் பொன்னாக்கியதாகவும் கூறப்படுகிறது. [3] இரும்பைப் பொன்னாக்குதல் என்னும் இரசவாதச்செய்தி அமைந்திருப்பதோடு திருமாலுக்குக் காளிங்கன் என்னும் பாம்பின் பெரிய படத்தை ஆடுதற்குரிய இடமாக்கிக் கொடுத்த கருத்தும், விண்ணோர் இருப்பிடத்தை மேருமலையாக்கிக் கொடுத்த செய்தியும், அண்டத்தின்ஓடு பொன்னிறமாக உள்ள செய்தியும் இயல்பு நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளமை உணரத்தகும். தொண்டு புரியாமல், பூசனை புரியாமல் சாரூபம் கிடைக்கப்பெறும் காசியின் வளத்தைப் பாடிப் பெண்கள் ஊசல் ஆடும்படி கூறக் காண்கிறோம். [4] களி ஒருவன் தான் இறைச்சியுண்பதும், மது அருந்துவதும் நன்றெனக் கூறும் அமைதி தோன்ற இறைவனோடு தொடர்பு படுத்திப் பேசுவதாக அமைக்கக் காண்கிறோம். [5] இப்பாடலில் 'மறுத்தவிர வில்லையே' என்ற தொடர் இருபொருள் பட அமைக்கப்பட்டிருத்தல் குறிக்கத்தகும்.

மடக்கு என்னும் உறுப்பமைந்துள்ள பாடல்களில் சிலேடை நயம் இனிதின் காட்டப்படுகிறது. இறைவன் விழைவது அன்பரகஞ்சுகமே

---

1. 649
2. 668
3. 635
4. 650
5. 638

(அன்பர் அகம் சுகமாக விழைதல்); யானையின் உரி கஞ்சுகமே (உடை); இறைவன் பணி என்பணியே (எலும்பாகிய அணி); ஆட்கொள்ள மேற்கொள்வது என்பணியே (எனது பணி). [1] இறைவன் மீது விருப்புற்ற தலைவி சொரிவது அடங்காக் கண்ணீர்; துளிக்கும் தடங்காக் கள்நீர்; தலைவிக்குக் கருகிப் புலர்ந்தன நாவாயே (நாவும் வாயும்); கங்கைக்கரையில் வந்து செல்லும் நாவாயே (ஓடம்). [2] என்றவாறு அடிகளின் சொற்றிறம் இப்பகுதிகளில் மேலோங்கி இருக்கிறது. இறைவன் ஊர் காசி, அவிமுத்தம் என்று சிறப்பித்துக்கூறப்படுகிறது.[3] அவிமுத்தம் என்பது விடவேண்டிய காலத்தும் விடாமை என்னும் பொருளினதென்பர்; முன்னொருகால் விசுவநாதர் திவோதானன் என்பவன் பொருட்டுக் காசியை அகலும்படி நேர்ந்த காலத்தும் சூக்கும வடிவமாக விடாது வீற்றிருந்தனராதலின் இத்தலம் இப்பெயர் பெற்றது.[4] ஆனந்தவனம் என்னும் பெயரும் அடிகளால் இத்தலத்துக்கு உரியதாக வழங்கப்பட்டுள்ளது.[5] சிவனது ஆனந்த வனத்து மறவர், தம் மகளை மணம்வேட்டு மன்னர் விடுத்த தூதுவனிடம் மகள் மறுத்துரைக்கும் முறையில் கூறும் செய்திகள் அவர்தம் வீரத்தைப் புலப்படுத்துவனவாக அமைக்கப்பட்டுள்ளன. தூதுவன் இருகண்களையும் தோண்டி, எலும்புகளைக் கதையில் தாக்கிக் கொடிறுடைத்து, வாய் கிழித்து, நாசியும் செவியும் அரிவோம் என்று மறவர் மறம் புலப்படுத்தப்படுகிறது.[6] தழையேற்றல் பற்றிய செய்தி ஒருபாடலில் இடம் பெறுகிறது. தலைவன் கையுறையாகத் தந்த தழையைத் தலைவி ஏற்று மார்பில் அணைத்தாள் என்று தோழி தலைவனிடம் தலைவியின் அன்பை எடுத்துரைக்கக்காண்கிறோம்.[7] இப்பாடல் தழை என்னும் உறுப்பில் அமைந்தது எனலாம்.

சம்பிரதம் என்பது இந்திரசால வித்தையில் வல்லவன் தன் சிறப்பைத் தானே கூறுதல் என்றும், செய்தற்கெளிய செயல்களையே செய்தற்கரிய செயல்களெனப் பொருள்படுவதற்கேற்ற சொல்லமைதியால் இதனைக் கூறுவர் என்றும் விளக்குவர்.[8] இவ்விளக்கத்திற்கேற்ப மதுரைக்கலம்பகப் பாடல் ஒன்று

---

1. 627
2. 696
3. 630,676,631,669
4. கு.பி.தி. (உ.வே.சா) பக்.466
5. 606,629,643
6. 643
7. 645
8. கு.பி.தி.(உ.வே.சா) பக்.161

அமைந்துள்ளது. [1] ஆயின் இந்நூலில் சம்பிரதம் என்பது இவ்விளக்கத்திற்கேற்ப அமைக்கப்படவில்லை. பொய் கூறுவதாகவே அமைத்திருப்பதாக உ.வே.சா. கருதுகின்றனர். [2] அகில கோடியும் உண்டு உமிழ்ந்திடுவேன்; ஏழுமுகிலையும் பிழிந்து கடல் ஏழுடன் வாய் மடுத்திடுவேன்; மேருமலையை மூலத்தோடு பிடுங்கிச் சுழற்றி அண்ட பகிரண்டமும் அடித்து உடைப்பேன்; புவனம் பிலம் இவற்றின் அடுக்கைக் குலைப்பேன்; இவற்றையெல்லாம் விட, உயிர்கள் காசிப்பதியிலடையாமல் பரமபதம் அடைவிப்பேன் என்று கூறும் சம்பிரதப்பாடல் [3] பொய்யாக உரைப்பதாகவே உள்ளதெனலாம். எளிய செயலை அரிய செயலாகக் கூறும் முறையில் இருபொருள் தன்மை இப்பாடலில் அமைக்கப்படவில்லை என்பது தெளிவு. காசிக் கண்ணுதலிடத்தில் ஒரு தலைவி மேகத்தைத் தூதாக அனுப்பித் தன்திறம் கழறுமாறு வேண்டும் பாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. [4] வைணவ வேடம் புனைந்த கொற்றியார் கோலம் கண்டு காமுகன் தானும் மாலாயினதாகக்கூறி முயங்க வேண்டுகிறான்.[5] மாலாயினேன் என்பது மயக்கமுற்றேன், திருமால்போல் ஆயினேன் என்ற இருபொருள் பட அமைந்து விளங்குகிறது. இவ்வாறே சிவனைப்போல் தோன்றும் பிச்சியாரிடம், முறுவலால் புரத்தை (உடம்பை, திரிபுரத்தை) எரித்த நீர் கண்ணினாலும் இக்காமனைக் காய்ந்தால் உம்மைக் கடவுள் என்று இறைஞ்சுவேன் [6] என்று காமுகன் கூறுவதாக அமைக்கிறார் அடிகள். முப்புரம் எரித்தமை காமனை அழித்தமை ஆகிய சிவன் செயல்களைப் பிச்சியார் பெண்ணியல்புக்கேற்பப் பொருள்படுமாறு அமைத்துக் கூறும் திறம் குறிக்கத்தக்கதாகும்.

சிவனிடம் சென்று தலைவிக்கு உருகீர் என்று கூறுமாறு குருகுகளைத் தூதனுப்புவது காணப்படுகிறது.[7] இருபொருள் நயம்தோன்றப் பறவைகளை இறைவனிடம் ஒரு தலைவி தூதனுப்பும் குறிப்பு நன்கு காட்டப்படுகிறது. தலைவி குருகை (வளையலை) விடுத்தாள் என்று குருகே கூறுவாயாக; சுகத்தை (இன்பத்தை) விடுத்தாள்

---

1. 185
2. கு.பி.தி.(உ.வே.சா) பக்.501
3. 671
4. 672
5. 620
6. 614
7. 602

என்று சுகமே கூறுவாயாக; அன்னத்தை (உணவை) விடுத்தாள் என்று அன்னமே உரைப்பாயாக என்னும் தூதுமொழிகள் உள்ளத்தை ஈர்த்து நிற்பனவாகும். [1] குறமகள், தலைவி ஒருத்தியின் கைக்குறியும் முகக்குறியும் கண்டு, பயனாக அவள் இறைவன் தோளினைப் பெறுவாள் என்று குறிகூறக்காண்கிறோம். [2] இறந்தபின் அளிக்கும் கொன்றை மாலையைக் காசி இறைவன் முன்னதாக வழங்கினால் என்ன? அவ்வாறு வழங்காவிடிலும் ஊமத்தை மலரையேனும் வழங்குமாறு சொல்வீர் என்று பாங்கியரைத் தூதனுப்பும் முறையில் ஒரு பாடல் இடம் பெற்றுள்ளது. [3]

பாணாற்றுப்படை என்னும் உறுப்பு இந்நூலில் புறப்பொருள் மரபில் காசி இறைவனிடம் ஆற்றுப்படுத்துவதாகப் பாடப்பட்டிருத்தல் குறிக்கத்தகும். மதுரைக் கலம்பகத்தில் அகப்பொருள் மரபில் தலைவனிடமிருந்து வந்த பாணனிடம் தலைவி உரைக்கும் மொழியாகப் பாடப்பட்டுள்ளது. [4] சிறுபாணன் ஒருவனை ஆற்றுப்படுத்தும் இந்நூற்பாடல் பாணனது முன்னைய வறுமை நிலையை நன்கு காட்டுகிறது. இன்பம் என்பதை அறியாத வறுமை வருத்தச், சிதலையும் சிலம்பியும் பொருந்திச் சிலவிடங்களில் மட்டும் கூரை உள்ள குடிசையில் மசகம், உலங்கு, குடவன் ஆகியன பசையில்லாத உடம்பின் தசையைக் கறித்து உண்ண, அரும்பசிக்கு வணங்கியும், பெரும் பிணிக்கு உடைந்தும், எரித்தறியாத ஆம்பிபூத்த எலிதுயிலும் அடுப்பில் தலைமடுத்து ஒதுங்கியும், சிறு பிள்ளைகள் அலறுதலைக்கண்டு மனைக்கிழத்தி கன்னத்தில் கை வைத்திருப்பவும், கண்களில் கண்ணீர் வழிய அழுகுரல் செவிசுட விழும நோய் மிக்கு அலமரும் நிலையாக அடிகள் வருணிக்கின்றார். காசி இறைவன் பொன்னடி வணங்கிப் பாடியதும் காமதேனுவும், கற்பகதருவும் பெருவளம் சுரப்ப இருமையும் பெற்று விளங்கியமை கூறி ஆற்றுப்படுத்திக் குபேரனும் ஏக்கறுமாறு செல்வம் பெற்றுப் பொலிய வழிப்படுத்தக் காண்கிறோம். [5] இறைவனிடம் சிறுபாணனை ஆற்றுப்படுத்தும் முறையில் இப்பாடல் அமைந்து தனிச் சிறப்புற்று விளங்குகிறது. பாணாற்றுப்படை இலக்கண மரபுக்கேற்ப அமைந்திருப்பதும் குறிக்கத்தகும்.

---

1. 691
2. 641
3. 655
4. 178
5. 656

அகப்பொருள் மரபில் அமைந்த பாடல்கள்

காசி இறைவனைத் தலைவனாகக் குறிப்பிடும் முறையில் தலைவியின் நிலைகளைக் கூறும் பாடல்கள் அகப் பொருள் மரபில் அமைந்துள்ளன. இறைவனைக் காமுற்ற தலைவி அழுதலால் கண்மையைக் கரைத்தோடும் கண்ணீர் கடலைச் செய்தது [1] என்றும், அவள் அழுத விழிநீர் முந்நீரை உவர் நீராக்கிற்று [2] என்றும் காட்டுகிறார் அடிகள். அவள் உணவு உட்கொள்ளாத நிலையை அன்னத்துக்கு அஞ்சவைத்தார் இறைவன் என்று புலப்படுத்துகிறார். [3] பிறைநிலவு தலைவியை வருத்துவதை விளக்கமாக எடுத்துரைக்கிறார். இறைவன் கண்டத்தில் கறையாக இருந்தவிடம் இப்போது பிறைநிலவு வடிவம் கொண்டு தோன்றுவதாகப் படுகிறது தலைவிக்கு. [4] காமனுடைய படைகளாகப் பெண்களைக் கூறுதலால், இறைவன் நெற்றிக்கண்ணால் காமனை அழித்தாற் போல, இடக்கண்ணாகிய நிலவால் தலைவியைக் காய்கின்றானோ என்று கவல்கிறாள் ஒருத்தி. [5] புகுமே மதிக்கொழுந்தும் புன்மாலைப் போதும் [6] என்று ஒருத்தி மதியையும் மாலைப் பொழுதையும் கருதி அஞ்சுகிறாள். இறைவன் பிறையோடு கொன்றையையும் கூட வைத்திருத்தலால்தான் கங்கையாள் வாழ்கின்றாள் என்று பிறை செய்யும் துன்பத்தைக் குறிப்பாக உணர வைக்கிறார் அடிகள். [7] காசியில் இறைவன் சாரூபர்க்கு நிலவுக்கலைகளைக் கொய்து கொடுக்கக் கொடுக்க அது வளர்கின்றதே என்று வியந்து, மதிக்கொழுந்து குறையுயிர் மாதரை வருத்துவதை ஒருத்தி நயம்பட உரைக்கிறாள். [8] இருளாகிய எருமையை ஊர்ந்து, மதியாகிய எமன் நிலவாகிய பாசத்தை வீசினான் என்கிறாள் ஒருத்தி. [9]

மன்மதன் வருத்தும் நிலையினையும் அடிகள் புலப்படுத்துகின்றார். மன்மதன் முதலில் விடுத்த அம்பே தலைவியை வருத்த, மீளவும் அவன் அம்பு தொடுப்பதால் அவன் வீணன் என்று குறிப்பிடப்படக் காண்கிறோம். [10] மன்மதன் தலைவியோடு போரிட்டு உயிர் முடிப்பதற்காகத் தும்பை முடித்தான் என்றும் வாகை முடித்திடவும் வல்லன் என்றும் புறத்திணை மரபில் மன்மதன் செயல்

---

1. 674	6. 653
2. 611	7. 663
3. 674	8. 610
4. 605	9. 675
5. 626	10. 606

உணர்த்தப்படுகிறது. [1] அவன் கழைக் கரும்பைக் குழைத்ததும் குழைக் கரும்பாகிய தலைவியும் குழைந்திட்ட நிலை கூறப்படுகிறது. [2] அவன் ஐந்து கணைக்கும் இலக்கு, என் உயிர் ஒன்று தான் போலும் என்று ஒருத்தி இரங்குகிறாள். [3] அவனுக்குப் பூவல்லது வேறு வில் இல்லை பூவல்லது அம்பும் வேறில்லை; எனினும் மகளிரை அலைக்கின்றான் [4] என்று ஒருத்தி, குறைபாடுடைய மன்மதனால் துயருறுவதை மொழிகின்றாள். பத்துத்திசையும் அவன் அம்பு நிரைத்தான்; இனித்தொடுக்கத் திசையில்லை என்று கூறுவதன் மூலம் தலைவிக்கு உய்தி இல்லை என்பது உணர்த்தப்படுகிறது. [5] அவன் ஐந்து அம்பையும் எய்து விட்ட நிலையில், இறைவன் இன்னருள் கிடைத்ததால் இறுதி அம்பாகிய கழுநீர் மலர் அம்பு தலைவியை ஒன்றும் செய்யமுடியவில்லை என்று இறைவனருள் கிடைத்த தன்மையும் காட்டப்படுகிறது.[6] மன்மதன் எய்கணைகள் வல்லொன்று பூண்முலை மார்பகம் போழ்வன மற்றென் செய்கேன் என்று ஒருத்தி பட்டாங்கு கூறுகிறாள்.[7] காசி, அனற்கண் இறைவனுடைய படைவீடென்பதை அறியாமல் பாவி மன்மதன் அவனுடைய தீவினையால் தலைவியை வளைத்துள்ளான் என்றும் அவன் உய்தல் அரிது என்றும் ஒருத்தி பேசுகிறாள்.[8] இறைவன் அருள் கிடைக்கும் என்ற உறுதியும், மன்மதன் படுத்தும் துயரமும் தலைவியை இவ்வாறு பேச வைக்கின்றன எனலாம்.

இறைவனுடைய மாலையை வேட்ட தலைவியின் நிலை பலவாறு காட்டப்படுகிறது. தலைவிக்கு இறைவனுடைய கொன்றைமாலை கிடைத்தற்கு அரிதாக உள்ளது; ஆயின் வண்டுகள் இறைவன் மாலையின் விரைத்தாது ஆடிப் பொன்னிறம் பெற்று விளங்குகின்றன. அவ்வண்டுகள் செய்த தவம் என்ன? என்று இரங்கி மொழிகிறாள் ஒருத்தி.[9] வண்டு செய்த தவத்தை அறிந்து அத்தவத்தைச் செய்தேனும் மாலையைப் பெற நினைக்கும் நிலை இவ்வாறு உணர்த்தப்படுகிறது. தந்தை தாளினை மழுவால் எறிந்து கொன்றவராகிய சண்டீசர் ஒருவருக்கல்லாது வேறு எவர்க்கும் கொன்றைமாலை கொள்வதற்கரிது என்று தோழி குறிப்பிடுகின்றாள்.[10] கொன்றைச் செழுந்தாமம் தராத

---

1. 609
2. 673
3. 677
4. 681
5. 686
6. 625
7. 667
8. 648
9. 652
10. 639

இறைவன் பரந்தாமம் (முத்தி) தருவது எங்ஙனம் உண்மையாகும் என்று ஒரு தலைவி கேட்கிறாள்.[1] சாரூபம் பெறும்போது தரும் கொன்றையை முன்னரே தந்தாலென்ன என்றும், அதனைத் தராவிடில் ஊமத்தை மலரையேனும் தரட்டும் என்றும் தலைவி வேண்டி மொழிகின்றாள்.[2] தண்ணொன்று நறை இதழித்தார் என்று கூறிய அளவிலேயே ஒருத்தி நெட்டுயிர்த்துத் தரைமேல் வீழ்ந்து உணர்வின்றிக் கிடக்கின்றாள்; இதைக் கண்டால் பிரணவம் உபதேசிக்கக் காசிநாதர் துண்ணென்று வருவர் என்று துணிந்தனளோ என்று தோழி கருதுகிறாள்.[3] எவ்வாறேனும் கொன்றைமாலை பெறுதல் வேண்டும் என்று உறுதியாய் நிற்கிறாள் தலைவி; செம்பொன் இதழித் தெரியலையே சிந்தித்திருப்பத் திரண்முலையும் மேனியும் பசலை பூத்து விளங்குகிறாள்.[4] ஆவி துறந்தாலும், சாரூபம் பெற்று, அதனால் இதழிப் பரந்தாமம் விடுத்துவிடுவாளலள், பெற்றே தீருவாள் என்று தலைவியின் கொன்றைமாலை வேட்கை புலப்படுத்தப்படுகிறது.[5] காசித்தலத்தின் வழக்கத்திற்கேற்ப அங்கு இறந்தார்க்கு இறைவன் பிரணவம் மொழிந்து சாரூபம் தருதலால் அந்நிலையில் கொன்றைமாலை பெறும் தகுதி அமைவதை அடிகள் தலைவியின் கூற்றில் காட்டியுள்ளார் எனலாம். எனவே தலைவியை அணைய இறைவன் இப்பொழுது வராவிடினும் செவியில் பிரணவமொழி சொல்லும் அச்சமயமாகிய அவள் இறக்கும் காலத்தில் உடனே வருவான் என்ற நம்பிக்கை புலப்படுத்தப்படுகிறது.[6]

இறைவேட்கையால் ஏற்பட்ட தலைவியின் துயரத்தை அடிகள் மேலும் தெளிவாக்குகிறார். மழை பொழியும் நாளில், ஆனந்தவனத்திருக்கும் இறைவன், மழையருவி தேக்கும் தலைவிக்கு உள்ளம் திருந்தார் கொல்லோ எனத் தோழி இரங்கி உரைக்கிறாள்.[7] மறையே சொல்லாகவும், நல்லறமே உபதேசமாகவும், முத்திதரும் காசியே இருப்பிடமாகவும் கொண்டுள்ள காசிப் பிரானார்க்கு மனம் மட்டும் வயிரக் கல்லாய் உள்ளதே என்று தலைவிக்கு அருளாமையை நினைந்து குறிப்பிடுகிறாள்.[8] தலைவியின் விரகத்தீயினை வாளா வளர விடுதல் அறனன்று என்று இறைவனிடம் வேண்டக் காண்கிறோம்.[9]

---

1. 654
2. 655
3. 608
4. 662
5. 692
6. 698
7. 644
8. 618
9. 660

தலைவியின் கண்கள் பொழியும் மழைப்புனலின்கண் மூழ்கி அவளது கொங்கைகள் தவம் புரிவதை அவிமுத்தவாணர் உணர்ந்து அருள் செய்யவில்லையே என்பது ஒருத்தியின் குறை. [1] நஞ்சைக் கொடுத்து அமுதத்தை உண்ட தேவருக்கு ஒளித்துத் திரியும் இறைவன், தலைவியின் பவள வாயமிர்துண்டால் பழுதுண்டோ என்று பரிந்து வேண்டக் காண்கிறோம். [2] அமுது பெறாக்குறையைப்போக்கிக் கொள்வீர் என்பதுபோல் நயம்பட வேண்டப்படுகிறது எனலாம். உமையவள், கங்கை, திருமால் ஆகிய மூவரை மணந்த இறைவன் தலைவியை மருவினால் பிறர்பழி கூற இடமுண்டாகுமா என்று, பலரை மணந்தவன் தலைவியை மருவுதல் தக்கதே என்று உணர்த்தக் காண்கிறோம். [3] இரு குங்குமக் குன்றும் பீர்பூப்பக் காமஎரியில் நின்று உருகும் பசும் பொன்னாகிய தலைவிக்கு வேறு மாற்று உண்டேல் உரையாய் என்று இறைவனிடம் தோழி கேட்கிறாள். [4] உயிர்களைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் வைத்துப் பாடும் மரபில் இத்தகைய அகப்பொருட்பாடல்கள் அமைந்து அடிகளின் உளப்பாங்கை உணர்த்தி நிற்கின்றன எனலாம்.

புறப்பொருள் மரபில் அமைந்த பாடல்கள்

காசியில் இறப்பவர்க்குச் சாரூபம் கிடைக்கும் என்ற கருத்தினைப் பல்வேறு உத்திகளால் அடிகள் புலப்படுத்திப் பாடியுள்ளனர். காசியில், நிலையில்லாத உடலினை நீத்தவர்க்கு இறைவன் ஓரெழுத்தாகிய பிரணவம் நவின்று சாரூபம் வழங்குகின்றான். பலகாலம் நோற்று அருந்தவரும் பெறற்கரிய சாரூபத்தை, வெறும் எலும்புடல் விற்று எளியவர்களும் பெறும் நிலையில் காசி இறைவன் அருள் இருத்தல் போற்றப்படுகிறது. [5] முயலாமலே தவமுத்தித்திருவை முயங்க நல்கும் காசி இறைவன் என்று சிறப்பிக்கும் அடிகள், நெடுந்துயில் செய்வோர்க்கு வேலை செய்யும் பயலாகவே இறைவன் பணி செய்வான் என்று புலப்படுத்துகிறார். [6] பூவும், பச்சிலையும் கொண்டு பூசை செய்யாதவர்க்கும் புண்டரிகப்பதமாகிய சாரூபம் இத்தலத்தில் இறந்தவுடன் கிடைப்பதைக் காணும் அயனுக்கும் அரிக்கும் மனம்

---

1. 664
2. 683
3. 695
4. 624
5. 600
6. 621

என்ன பாடுபடும் என்று நயம்பட வினவக் காண்கிறோம்.[1] சிறு செந்துக்களும் காசியில் சில்லாண்டிருந்து சாரூபம் பெற்றுச் சிவமாய்ச் செல்லும் என்றும் அப்போது பல்லாண்டுதம்மைப் படைத்தளித்த தேவர்களைப் பார்த்துத் தோள் கொட்டிச் செல்லும் என்றும் அடிகள் உணர்த்துகிறார்.[2] தேவர்கள் பழைய நிலையிலேயே இருப்பவும், அவை மேல் நிலை அடைந்த தன்மையை இவ்வாறு புலப்படுத்தக் காண்கிறோம். எனவே காசியில் இறத்தல் விரும்பத்தக்கதாகக் கூறப்படுகிறது. படுத்த பாயுடனே பிணியில் மூழ்கினாலும், பல்விழுந்து நரைத்து, மிகவும் மூப்படைந்தாலும், காசிப்பதியில் அத்தகையோர்க்கு அடுத்தது பெருவாழ்வு என்று கூறும் நிலை உண்டு.[3] நரை முதிர்ந்தன. கண்கள் பஞ்சார்ந்தன நமன்தமர் வழிக்கொண்டார்; திரை முதிர்ந்து உடல் திரங்கின என்றாலும் இரங்க வேண்டுவதில்லை பெரியோர் குழாத்தோடும் காசியை அடைக என்று அடிகள் நெஞ்சுக்கு அறிவுறுத்தும் முறையில் மேலும் வற்புறுத்தக் காண்கிறோம்.[4] இறைவன் கண்மூடாமல் ஓடித்திரிந்து அருள்வதும் உணர்த்தப்படுகிறது.[5]

காசியில் இறந்து சாரூபம் பெறுவார் பலராகலின் இறைவனது உருவத்தைப் பெற்று விளங்கும் அவர்களுக்கிடையில் இறைவனை எங்ஙனம் காண்பது என்று அடிகள் நயம்பட விளக்குகிறார். நுதலில் கண், திருக்கரத்தில் கனல், இடப்பாகத்தில் பெண், மவுலியில் பிறை என்று இறைவன் தோற்றத்திலிருந்து பிரித்தறிய முடியாதவாறு எண்ணற்ற சாரூபம் பெற்றார் கணத்தோடு இருக்கும் இறைவனை மறைகளும், எண்கண்ணனும், கண்ணனும், அமரரும் எப்படிக் காண்பர் என்கிறார்.[6] பிரமன் எட்டுக்கண் பெற்றிருந்தும், திருமால் கண்ணன் என்று பெயர் பெற்றிருந்தும் சாரூபம் பெற்றார்க்கிடையில் இறைவனைக் காணார்கள் என்று உரைக்கும் நயம் உணரத்தகும். முத்தித் திருவை மணம் புணர்வார்க்கு (சாரூபம் பெறுவார்க்கு) இறைவன் அருளும் மணவாளக் கோலம் நிணம்புணர் வெண்டலைக் கலன் கொல்? என்று சுவைபடப் பழிப்பது போல் புகழ்ந்து கூறுகிறார் அடிகள்.[7]

---

1. 634
2. 647
3. 622
4. 665
5. 607
6. 646
7. 600

பிரம கபாலத்தைச் சாரூபம் பெறுவார்க்கெல்லாம் வழங்குதலால் முன்னைய பிரமர்கள் தலைமாலை செலவாய்விடின் அடுத்துத் தன் தலைக்குத் துன்பம் வருங்கொல் என்று பிரமன் கவல்கின்றான் என்றும் அவ்வாறு பிரமன் வருந்துதல் கண்டும் சமீரகுமாரனாகிய அனுமான் பிரமபதவி வேண்டித் தவஞ் செய்தல் என்ன அறியாமை என்றும் அடிகள் தல நிகழ்ச்சிகளைச் சுவைபட இணைத்துப் பேசுகிறார்.[1] முத்திவேட்டவர் முடைத்தலையோடு எலும்பும் சாம்பலும் பெறுதற்கு உடலை ஓம்பினரோ? என்றும் சாரூபம் பெறுதலைப் பழிப்பது போலப் புகழக் காண்கிறோம்.[2]

இறைவனை அடைந்தவர்க்கு உண்ணக்கிடைப்பது தீவிடமே என்றும், சாரூபம் பெறுவோர் கறைக்கண்டம் பெற்று விளங்குதல் காட்டப்படுகிறது.[3] இறைவனைப் புகலடைந்தவர்களை அவன் தன்னைப்போல் ஆக்குகின்றான்; எனவே கண்ணப்பர் செருப்படிக்கும் பாண்டியன் பிரம்படிக்கும் அருச்சுனன் வில்லடிக்கும் தப்ப வேறு வழியில்லை என்றும் சாரூபம் பெறும் நிலை குறிக்கப்படுகிறது.[3அ] சாரூபர்கள் சிவனைப் போல் பெற்றம் ஊர்வதும், வெண்டலை ஓட்டினில் பிச்சை ஏற்றுத் திரிவதும், பேய்கள் சுற்றமாகச் சுடலையில் வாழ்வதும், தோலுடுப்பதும் மேற் கொள்கின்றனர். இவையெல்லாம் அவர்கட்கு அரியன அல்லவாம். கற்பங்கள் தோறும் உலகை அழித்துப்படைத்தல் துன்பம் தரும் அரிய செயலாதலின் அப்பதவியைச் சிந்திப்பதில்லை என்று உரைக்கிறார் அடிகள்.[4] இவ்வாறு பழிப்பது போலப் புகழ்ந்து சிவன் செயல்களையும், உருவத்தோற்றத்தையும் சாரூபம் பெற்றோர்க்குரியனவாகக் காட்டும் திறம் குறிப்பிடத்தகும். சாரூபர்களுக்கிடையில் இறைவனைக் காணும் முறையையும் நயம்படக் கூறுகிறார். உமையவள் தன் மார்பால் அடையாளமிட்டு வையாளானால், செவ்வண்ணம் பெற்றார் திரளொடு நிற்கின்றாரைக் காணல் அரிது என்கிறார்.[5] முருகன் சேவடிச் சுவடும், உடையாள் முலைச்சுவடும் காசியிறைவனை அறிவதற்குரிய அடையாளங்களாகும் என்றும் உரைக்கிறார்.[6] சாரூபம் பெற்றார்க்கு இவை இன்மையின் இவற்றை வைத்து அறியலாம் என்ற குறிப்பு இவ்வாறு கூறப்படுகிறது.

---

1. 661
2. 680
3. 682
3அ. 687
4. 616
5. 601
6. 611

நதிகள் எல்லாம் கங்கையாகுமா? அங்குள்ள தெய்வம் யாவையும் அகிலேசராகுமா? மற்றைத்தலங்கள் யாவும் தடமதில் காசியாகுமா? என்று கங்கை, அகிலேசர், காசியின் சிறப்பு உணர்த்தப்படுகிறது.[1] காசி இறைவன் செயலைத் தம் ஆவி உய்யுமாறு துதிக்காதவர்கள் மீண்டும் உதிப்பர்; துதிப்பார்களாயின் மீண்டும் வையத்தில் உதியார் என்கிறார் அடிகள்.[2] அவிமுத்தம் சென்று இறைஞ்சாதவர்களை 'இவரார்' என்று கேட்கிறார்.[3] இறைஞ்சாதவர்கள் அருள் பெறார் என்ற குறிப்பால் இவ்வாறு கூறுகிறார். பிரான் என்று அழைத்ததும் உமையவளோடும் ஓடிவந்து பெருங்கருணை தருகின்றவர் காசித்தடம்பதியார்; ஐம்புலக் கள்வர் உள்ளமா நிதியைக் கொள்ளையிட்டேக வரும்போது காத்து வழங்குதற்காகத் தம் உள்ளத்தே இருப்பதாக அடிகள் உணர்த்துகிறார்.[4] இந்திரதிருவும், உலகை வெண்குடைக்கீழ் ஆளும் அரசாட்சியும் விடுத்துவிட்டு யாவரும் காசியில் இறைவனைத் தேடிக் காதலித்து வருவர் என்று காசிப் பெருமை காட்டப்படுகிறது.[5] தானென்றவர் முன் ஒளித்தோடித் தன்னை இழந்தவர் முன்யான் என்று சென்றிடும் காசிப்பிரான் என்கிறார் அடிகள்.[6] காசியில் வயிரவர் தண்டனை மட்டுமே பாவம் செய்தவர்க்குரியது என்பதும் உணர்த்தப்படுகிறது.[7]

அடிகளின் வேண்டுதல்

அடிகள் தமக்கு இறக்கும் காலத்தில் இறைவனும் இறைவியும் பிரணவம் நவின்று குஞ்சித அடிக்கீழ் குடியிருத்த வேண்டுகிறார்.[8] தமது ஆசை கங்கைக் கரையில் உள்ள மணி கர்ணிகைத் துறையில் உடல் விடுமாறு அருள வேண்டும் என்கிறார்.[9] சுந்தரர் தண்டமிழ்ச் சொற்கொண்ட இறைவன், குண்டலங்களாகவுள்ள கம்பளாசுவதரரது இசையைக் கேட்கும் காதினையுடைய இறைவன் எங்கவிதையையும் கொண்டு ஆட்கொண்ட காசிநாதர் என்று அடிகள் அடக்கமாகக் குறிப்பிடுகின்றார்.[10] எனினும் அடிகளின் கவிதைச்சிறப்பும் இறைவன் அருட்டிறமும் உணரத்தகும். இறைவன் முருகனுக்குத் தீயூரும் வேலை ஈந்தார்; எமக்கு அடித்தொழும்பு செய்தொழுகும் வேலை ஈந்தார் என்று அடிகள் தமது பணியைப் புலப்படுத்துகிறார்.[11]

---

1. 615
2. 604
3. 612
4. 619
5. 622
6. 682
7. 654
8. 636
9. 615
10. 634
11. 690

சித்தாந்தக் கருத்துகளும், வழிகாட்டும் மொழிகளும் ஏற்ற பெற்றி உணர்த்தப்பட்டுள்ளன. சாரூப முத்தி பற்றிய குறிப்புக்கள் தலச்சிறப்புக்கு ஏற்ப மிக விரிவாக அடிகளால் கூறப்பட்டிருத்தல் நினைக்கத்தகும்.

14. சகலகலாவல்லிமாலை

கலைமகள் மீது பாடப்பட்டுள்ள இந்நூல் 'சகலகலாவல்லி மாலையென்றும் சரசுவதி தோத்திரம்' என்றும்,[1] 'வெள்ளைக் கிழத்தி மாலை' என்றும் [2] வழங்கப்படுதல் உண்டு. பத்துக் கட்டளைக் கலித்துறைப் பாடல்களால் இயன்றுள்ளது. கலைமகள் சிறப்பினை விளங்க உரைத்துத் தமக்கு அருளுமாறு வேண்டும் முறையில் அடிகள் இந்நூலை அமைத்துள்ளார். இதைப்போல் இனிய எளிய நடையிலுள்ள சரசுவதி தோத்திரம் வேறு இன்மையின் இந்நூல் மிகவும் சிறப்பாகப் போற்றப்பெற்று வருகின்றது.

கலைமகள் சிறப்பு

வெண்டாமரையில் வீற்றிருக்கும் கலைமகள் உலகைப்படைக்கும் பிரமன் சுவைகொள் கரும்பாவாள்.[3] பங்கயாசனத்திற்கூடும் பசும்பொற் கொடி என்று மலரில் உள்ள கொடி என்ற நயம் தோன்றச் சிறப்பிக்கிறார் அடிகள்.[4] உளங்கொண்டு தெள்ளித்தெளிக்கும் பனுவற் புலவர்கள் கவிமழை சிந்தக் கண்டு களிக்கும் கலாபமயில்,[5] தொண்டர்தம் செந்நாவில் வீற்றிருந்து, வடநூற்கடலையும், தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வத்தையும் காப்பவள்;[6] செம்பஞ்சுக் குழம்பு அப்பிய இதந்தரும் செய்ய பொற்பாத கமலமுடையவள்; பிரமன் நாவிலும் மனத்திலும் வெண்டாமரையிலிருப்பதுபோல் வீற்றிருப்பவள்;[7] வேதம், விண், புவி, புனல், கனல், காற்று ஆகியவற்றிலும் அன்பர் கண்ணிலும் கருத்திலும் நிறைந்திருப்பவள்;[8] அன்னம் பாலையும் நீரையும் தெளிவாகப் பிரித்தறிவது போல் புலவர்கள் தீட்டும் கலைத் தமிழ்ப்பாடல்களைத் தேர்ந்தறியும் திறம் உடையவள்;[9] திருமகள் செல்வம் சிதையும் தன்மையது, ஆயின் கலைமகள் ஒரு காலமும் சிதையாத

---

1. கு.பி.தி.(உ.வே.சா) பக்.517
2. கு.பி.தி. (உ.வே.சா) சிறப்புப்பாயிரம் பக்.18; கு.பி.தி. (இராம) பக். 305

3. 700 6. 703 9. 706
4. 701 7. 704
5. 702 8. 705

கல்விப்பெருஞ் செல்வம் வழங்கும் சிறப்புடையவள்; [1] சொல்லுக்கும் பொருளுக்கும் உயிராக இருக்கும் உண்மை அறிவின் உருவமாக இருப்பவள்; யாராலும் நினைத்தற்கு அரியவள்; பிடியும் அன்னமும் நாண நடைகற்கும் பாதகமலம் உடையவள்; [2] படைக்கும் பிரமன் முதலாகிய விண்கண்ட தெய்வம் பலகோடி இருப்பினும் கலைமகள் போல் கண்கண்ட பலனைத் தரும் தெய்வம் வேறு இல்லை [3] என்று அடிகள் சிறப்பித்துக் கூறுகின்றனர். அடிகட்கு அவடன் அருள் நன்கு வாய்த்திருந்தது என்பது உணரத்தகும்.

அருளவேண்டுதல்

கலைமகள் பாதங்களைத் தாங்க வெண்டாமரைக்கன்றி அடிகளின் வெள்ளை உள்ளத்தண்டாமரைக்குத் தகாது கொல்லோ? என்று பணிந்து வேண்டக் காண்கிறோம். [4] அடிகள் தம் நெஞ்சமாகிய குளத்தில் கலைமகள் பாதமாகிய தாமரை மலர வேண்டும் என்று இரக்கின்றார். [5] பொருட்சுவையும் சொற்சுவையும் தோய்ந்து விளங்க வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் நாற்கவியும் – ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நாற்கவியும் - பாடும் பணியில் ஈடுபடுத்தியருள வேண்டுகிறார். [6] அவள் அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுதத்தை ஆர்ந்து அவள் அருட்கடலில் குளிக்கும் வேட்கையினைப் புலப்படுத்துகிறார். [7] ஆராயும் தமிழ் நூல்களில் தோய்ந்த கல்வியறிவாகிய செயற்கையறிவும், சொற்சுவைதோய் வாக்காகிய எளிதிற் கவியியற்றும் இயற்கையறிவும் பெருகப் பணித்தருள வேண்டுகிறார். [8] பண்ணும், பரதமும், கல்வியும், தீஞ்சொற்பனுவலும் நினைத்தபொழுது எளிதில் எய்த நல்க வேண்டுகிறார். [9] பண் என்பது இசைத்தமிழையும், பரதம் என்பது நாடகத் தமிழையும், கல்வி என்பது இயற்றமிழையும் குறித்து நிற்றலும், தீஞ்சொற்பனுவல் என்பது கவிவன்மையைக் குறித்து நிற்றலும் உணரத்தகும். பாட்டும், பொருளும், பொருட்பயனாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கும் தம்மிடத்தில் கூட்டும்படி கடைக்கண் நல்க வேண்டுகிறார்.[10] சொல்விற்பனமாகிய நாவன்மையும், ஒரே சமயத்தில்

---

1. 707
2. 708
3. 709
4. 700
5. 704
6. 701
7. 702
8. 703
9. 705
10. 706

பலவற்றைக் கவனித்தறியும் அவதானமும், கவி சொல்ல வல்ல நல்வித்தையும் தந்து அடிமையாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறார்.[1] உலகம் முழுவதையும் வெண்கொற்றக் குடைக்கீழ் ஆளும் நிலையில் மேற்பட்ட மன்னராயினும் தம் பாடலைக் கண்ட அளவில் பணிந்து விளங்கச் செய்ய வேண்டும் என்று வேண்டுகிறார்.[2] இதில் பாதுஷாவின் அன்பு தமக்குக் கிடைக்க வேண்டுமென்னும் விருப்பத்தைக் குறிப்பித்தனர்[3] என்பது தகும். அடிகளின் வரலாற்றால் இவ்வுண்மை உணரத்தகும்.

கலைமகளின் சிறப்பினை இனிதின் எடுத்துரைத்து, அவளருளால் கல்வித்தகுதிகள் பெருமைகள் பலவும் வாய்க்க வேண்டும் இச்சிறுநூல் சுருக்கமும் எளிமையும் இனிமையும் செறிவும் ஒருங்கு பெற்றுச் சிறந்து விளங்குதல் குறிக்கத்தக்கதாகும்.

15. கைலைக் கலம்பகம்

இவ்வியலின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அடிகள் பாடிய கைலைக் கலம்பகச் செய்யுட்கள் எட்டு மட்டும் அறியப்பட்டுள்ளன.[4] அடிகளின் பிறந்த ஊராகிய கயிலாசபுரத்தில் எழுந்தருளியுள்ள கைலாசநாதர் மீது இந்நூல் இயற்றப்பெற்ற தாகும். கலம்பக மரபிற்கேற்ப அந்தாதியாகப் பல்வகை யாப்புக்களிலும் உறுப்புக்களிலுமாக நூறு பாடல்களைக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்று கருதலாம். கிடைத்துள்ள பாடல்களில் வண்டுவிடுதூது 1-ம், அம்மானை 2-ம், அகப்பொருள் மரபில் 3-ம், புறப்பொருள் மரபில் 2-ம் இடம் பெற்றுள்ளன. நேரிசை வெண்பா 2-ம், ஆசிரியவிருத்தம் 3-ம், கட்டளைக்கலித்துறை 1-ம், கலித்தாழிசை 2-ம் என்ற யாப்பு முறையில் இவை காணப்படுகின்றன.

வண்டுவிடுதூது

கைலாசநாதரிடம் வண்டைத் தூதனுப்பும் பாடலில் தலைவியின் நிலை குறிக்கப்படுகிறது. உயிரை உண்ணும் நோக்கத்தோடு தன் உயிரிருக்கும் இடம்தேடி வருந்தித் தென்றற்காற்றிருக்கும் தமிழ் நாட்டில்

---

1. 707
2. 709
3. கு.பி.தி. (உ.வே.சா) பக்.521
4. பிற்சேர்க்கை 4-இல் இப்பாடல்கள் தரப்பட்டுள்ளன

குடியிருக்க முடியாது என்று இறைவனிடம் சொல்லும்படி வண்டுகளைத் தூதனுப்புகிறாள் தலைவி; கூற்றிருக்கும் கொலைமழுவுடைய பெருமானிடம் கூறுமாறு சொல்வதால், தலைவியின் உயிரைத்தேடும் தென்றலிடமிருந்து இறைவன் அவளைக் காத்தல் வேண்டும் என்பது குறிப்பாக உணர்த்தப்படுகிறது எனலாம். [1]

அம்மானை

இரண்டு அம்மானைப் பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றிருத்தல் குறிக்கத்தகும். அடிகள் பாடிய ஏனைய கலம்பகங்களில் அம்மானைப் பாடல் ஒவ்வொன்றே இருத்தல் ஈண்டுக் கருதத்தகும். பாம்புகளைப் பூணாகக் கொண்டுள்ள கயிலேசர் வைகுந்தத்தில் ஒரு வாணுதற்கு மாலானார் என்கிறாள் ஒருத்தி. அவ்வாறு வாணுதற்கு மாலானார் ஆகில் காணும்படியாகத் தன் கார் மேனி காட்டாரோ என்று வினவுகிறாள் மற்றொருத்தி. கழுத்தளவில் மெத்தக் கறுத்திருப்பார் என்று பதிலிறுக்கிறாள் மூன்றாமவள். [2] மால் என்பது கார் மேனியுடைய திருமாலையும், மயக்கம் என்பதையும் உணர்த்துகிறது. கழுத்தில் நஞ்சுண்டு கறுத்த தோற்றத்தை அடையாளமாகப் பொருத்திக் கூறியிருத்தல் உணரத்தகும். ஒருத்தி தென் கயிலைப்பெம்மான் ஒருபாதிப் பெண்ணர்காண் என்கிறாள். பெம்மான் ஒருபாதிப் பெண்ணரேயாமாகில் அம்மான் அருந்தனம் உண்டாகாதோ என்று வினவுகிறாள் மற்றொருத்தி. ஐயம் புகுவார்க்கு அருந்தனம் ஏது என்று விடையிறுக்கிறாள் மூன்றாமவள். [3] தனம் என்பது மார்பு, செல்வம் என்ற இரு பொருள்களையும் தருதலும், இறைவன் பிச்சையேற்பவனாதலின் அவனிடம் அரிய செல்வம் இல்லை என்ற பொருத்தமும் இங்கு உணரத்தகும். இவ்வாறு சிலேடை நயத்துடன் அம்மானைப் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அகப்பொருள் மரபுப் பாடல்கள்

மதியாகிய தழல் தனித்து நிற்கும் தலைவியை எரிக்கிறது; இறைவன் மேல் கொண்ட காதலால் நஞ்சை அமுதமாகக் கருதுகிறாள் அவள்; இதனைக் கயிலையிடத்தவரான இறைவன் அறிவாரோ என்று செவிலி கூறுகிறாள். [4] இறைவேட்கையால் உணவு உட்கொள்ளாமல், மதியால் வருந்தி நிற்கும் தலைவியின் நிலை இவ்வாறு காட்டப்படுகிறது. உப்பங்கழி, கழிக்கரை, தாழை, தெண்டிரைக்கடல், கடற்சுழி,

---

1. கைலைக்கலம் 4
2. கைலைக்கலம் 7
3. மேற்படி 8
4. கைலைக்கலம் 3

சுழிபடுதண்டுறை ஆகியவற்றைப் பார்த்து ஒருத்தி இரங்கி மொழிகிறாள்.[1] தனக்கு அருளாமையால் வைகுந்தைக் கயிலேசர் பெண்பழி கொளக்கடவார் என்று பகருமாறு மொழிகிறாள். கயிலைநாதர் கடுக்கைமாலை கொடுக்காததால் தலைவிக்கு மிகுந்த துன்பம்தரும் கூற்று எது என்பதை ஒருத்தி புலப்படுத்துகிறாள். மாலையில் தோன்றும் மதியம், அசைந்து வீசும் தென்றல், ஆகுலம் புரியும் கோகிலங்கள், மன்மதன் விடுக்கும் கங்குல், இளவாடை, பெண்கள் கூறும் வம்பு மொழிகள், மன்மதன் மலரம்புகள் ஆகியனவெல்லாம் காமுற்ற பெண்களைப் பொதுவாக வருத்தும் கூற்றுக்கள் என்றல் மரபு. ஆயின் இவையெல்லாம் கூட இத்தலைவிக்குக் கூற்றுக்களாகப் படவில்லை. இறைவன் வளையல்விற்கும் மாற்றமே அவளுக்குக் கொடுங் கூற்றமாகப் படுகிறது. [2] இவ்வாறு இறைவன்பால் காமுற்ற தலைவியின் நிலை இனிதின் காட்டப்படுகிறது.

புறப்பொருள் மரபுப்பாடல்கள்

இறைவனைக் கண்டு உள்ளத்தில் சிந்தித்தால் பெறும் பயனை அடிகள் உணர்த்துகிறார். கங்கை தரித்த சடையும், உமையம்மைக்கு அமுதாத விளங்கும் கயிலைப்பிரானுடைய வடிவழகும், சங்கத்திருத்தோடும்கண்டு உள்ளத்தில் சிந்தித்தால் காலமிருத்து ஓடும் (இறப்பு-இல்லை); வினையும் விடுத்து ஓடும் என்கிறார். [3] கயிலைக் கோமானைக், கொழுங்கனியைக், காமருபூந்தாமச்சடையானைத் தாள் தொழுதால், இழிந்த புழுக்கூடாகிய உடம்பில் பிரமன் மறுபடி அடைக்க மாட்டான் என்கிறார் அடிகள். [4] இவ்வாறு இறைவனைத் தொழுவதன் பயன்களை நன்கு வலியுறுத்தக்காண்கிறோம்.

கயிலாசபுரம் ஸ்ரீவைகுண்டத்தின் வடபால் உள்ளது ஆதலின், 'தென்வைகுந்தைக் கயிலை' என்றும் [5] 'கயிலைநாதர் வைகுந்த வாணர்' என்றும் [6] அடிகள் குறிப்பிடக் காண்கிறோம். கயிலாசபுரத்தின் இயற்கை வளம் 'தண்டேன் ஊற்றிருக்கும் பொழிற்கயிலே' [7] 'தேமாம் பொழில் உடுத்த கயிலை' [8] என்றவாறு சிறப்பிக்கப்படுகிறது.

16. காசித் துண்டிவிநாயகர் பதிகம்

இவ்வியலின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறு இந்நூல் பத்துப் பெரிய விருத்தங்களை உடையது என்றும், வடமொழிக் கலப்பு மிகுந்தது என்றும் கா.சு.பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[9]

---

1. மேற்படி 5
2. கைலைக்கலம் 6
3. மேற்படி 1
4. மேற்படி 2
5. மேற்படி 2
6. கைலைக்கலம் 6
7. மேற்படி 4
8. மேற்படி 2
9. குமரகுருபரஅடிகள் வரலாறு பக். 21

அவர்களால் அறியப்பட்டிருந்த இப்பதிகம் இப்பொழுது கிடைக்கப் பெறவில்லை.

'வெருவரும் அருள்சால் துண்டி விநாயகப் பெருமான்மீது
பொருவரும் விருத்தம் பத்துப் புகழ்ச்சியிற் பாடிப்போற்றி' [1]

என்று மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அடிகள் காசித் துண்டி விநாயகரைப் பாடியுள்ள தொடர்பை உணர்த்தும் முறையில், பின்னர்த் திருப்பனந்தாளில் மடம் அமைத்தபோது அங்கு நீராழி மண்டபத்தில் நடுவே வடநாட்டுப் பாணியில் கட்டப்பெற்ற காசிவிநாயகர் கோயிலும், ஆண்டு விளங்கும் வெண்பளிங்கு விநாயகரும் இருத்தல் நினைக்கத்தகும். பெரும்பாலும் விநாயகர் காப்புப்பாடி நூல்களை இயற்றியுள்ள அடிகள் விநாயகர் பற்றிய சிறப்புக்களையும், அருட்பெருமைகளையும் இந்நூலில் விளக்கிப் பாடியிருத்தல் கூடும் என்று கருதலாம்.

அடிகள் பாடிய தனிப்பாடல்

"ஒவ்வோர் காலத்தில் ஒவ்வோர்கவி செய்துரைப்பார். அப்பாக்களெல்லாம் எவ்வாறுள்ளனவென்று தெரிந்திலேம் பூதங்கடந்த என்னும் முதற்குறிப்புடையவோர் கவியைப் பலரும் எடுத்துரைக்கின்றார்கள்" [2] என்று ரா.சுப்பிரமணியக்கவிராயர் குறிப்பிடுகின்றார். அடிகளுடைய ஞானாசிரியரைப் பற்றிப் பாடியதாக அப்பாடல் காணப்படுகிறது. பூதங்கடந்த புகழ்க்கூடற் சம்பந்தன் போதித்த சொல், வாதங்கடந்து, மனோலயமாய், இந்து மண்டலம் போய், நாதம் கடந்து, நடுவெளி தாண்டி, நலஞ்சிறந்த போதங்கடந்து, இன்ப பூரணமாகிப் பொலிந்தது என்று உரைக்கிறது இப்பாடல். [3] இவ்வாறு அடிகள் பாடிய வேறு தனிச்செய்யுட்கள், நூல்கள் அறியப்படாமல் இழக்கப் பட்டிருத்தல் கூடும். அறியப்பட்டுள்ள அளவில் 'பதினாறு கலைகளையுடைய முழுமதிபோல் அவர் நூற்கோவை விளங்குகின்றது'[4] என்பது சாலும்.

அடிகள் முயன்றிருந்தால் ஒப்பற்ற பெரிய காப்பியங்களையும் இயற்றியிருக்க முடியும் என்று டாக்டர் உ.வே.சா. அவர்களும், டாக்டர். மு.வ. அவர்களும் குறிப்பிட்டிருத்தல் [5] தக்க மதிப்பீடாகும்.

---

1. குமரகுருபரஸ்வாமிகள் சரித்திரம் பா.265
2. குமரகுருபரசுவாமிகள் புராணம். பக் 199-200
3. கு.பி.தி. (உ.வே.சா) பக்.16 தனிச்செய்யுட்கள்: முதற்பாடல்
4. குமரகுருபரஅடிகள் வரலாறு பக். 21
5. கு.பி.தி. (உ.வே.சா) பக். 79; தமிழ் இலக்கிய வரலாறு (மு.வ) பக். 179

இயல் – 3
அடிகளின் பாடற்பண்புகள்

குமரகுருபரஅடிகள் இறைவன் புகழையும் அருளையும் எடுத்து மொழிவதில் இன்பம் கண்டவர்; தம் இறை அனுபவத்தை இனிய பாடல்களில் பொதிந்து வைத்தவர். ஐந்திலக்கணமும் தோய்ந்து பழுத்த தமிழ்ப்புலமை பாலிக்க வேண்டும் என்று முருகனிடம் விண்ணப்பிக்கும் அடிகள்,[1] அப்புலமை சான்ற செந்தமிழ்ப் பாடல்களால் இறைவனைப் பாடும் பணியினைத் தாம் மேற்கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தினாலேயே விண்ணப்பித்துள்ளமை தெளிவு. 'எங்கவிதை கொண்டாட் கொண்ட காசிநாதர்' என்றும் [2] 'விரிக்கும் சரியை இப்பாமாலை சேர்த்தது' என்றும்,[3] கவிதையால் இறைஅருள் பெற்ற தன்மையை அடிகள் உணர்த்தக் காண்கிறோம். செந்தாப் புலவர்களையும், பரஞ்சுடரை நாத்தழும்பிருக்க ஏத்துமாறு அடிகள் வழிப்படுத்துகின்றனர்.[4] இவ்வகையில் அடிகள் பாடியுள்ள இலக்கியங்கள் அனைத்திலும் இறையுணர்வே உயிரோட்டமாக இலங்குதல் கண்கூடு. எனவே சமய வளர்ச்சியை முதன்மை நோக்கமாகக் கொண்டு பாடியவர் அடிகள் என்பதில் ஐயமில்லை. எனினும் இறையருளையும், தம் இறை அனுபவங்களையும் பாடும் அடிகள் இலக்கியச்சுவைகள் பலவும் இனிது விளங்குமாறு பாடியுள்ளனர். 'கலைச்சுவைக்காக இலக்கியம் படைக்காவிட்டாலும், சமய வளர்ச்சிக்காக அவர்கள் படைத்த நூல்களில் இலக்கியச் சுவையும் கலந்துள்ளது' என்று டாக்டர் மு. வரதராசனார் குறிப்பிடுகின்றனர்.[5] அடிகளின் பாடல்களில் காணலாகும் இலக்கியச் சுவை இறையுணர்வையும், இறை அனுபவத்தையும் உணர்த்துவதற்குத் துணைபுரியும் நிலையில் இடம் பெற்றுள்ளது எனலாம். தமிழ் இலக்கிய மரபுகளைப் பின்பற்றியும், புதிய உத்திகளைக் கையாண்டும் இறைமணம் கமழும் பாமாலை புனைந்துள்ள அடிகளின் பாடற் பண்புகளை, இலக்கியச்சுவை தேரும் முறையில் விளக்குவது இவ்வியலின் நோக்கமாகும்.

பல்வேறு இலக்கிய நலங்களால் அடிகள் பாடல்களில் இறைமணம் கவினுற்றுத் திகழ்கிறது எனலாம். அடிகளுக்கு

---

1. 1:119
2. 634
3. 598
4. 699
5. தமிழ் இலக்கிய வரலாறு (மு.வ) பக்.179

வாய்த்திருந்த ஐந்திலக்கணம் தோய்ந்த தமிழ்ப்புலமை இலக்கிய நலங்களை இனிதின் திகழச் செய்துள்ளது. கற்பனையாற்றல் புலப்பட உவமை, உருவகம், சிலேடை, மடக்கு, தற்குறிப்பேற்றம் முதலாகிய அணிநலங்களைக் கையாண்டும், அனைத்து யாப்பு வகைகளையும் அமைத்துக் கவிநலம், இசைநலம், தொடைநலம் தோன்றப் பாடியும், பொருளிலக்கண மரபுகளை ஏற்றபெற்றி இயைபு படுத்தியும், அரிய சொல்லாட்சிகளைப் பயன்படுத்தியும், எழுத்து சொல் தொடர்பான இலக்கணச் செய்திகளைத் தம் கருத்துக்களை விளக்கும் முறையில் புலப்படுத்தியும் அடிகள் தம் பாடல்களை இயற்றியுள்ளனர். இறைவனையே பாடுபொருளாக அடிகள் கொண்டுள்ளதற்கேற்ப, இப்பாடற் பண்புகள் யாவும் அவ்விறைவனை விளக்கவும் உணர்த்தவும் துணைபுரிவனவாகக் கையாளப்பட்டுள்ளன. பாடுபொருளாகிய இறைவன் அடிகளின் அனுபவமாக நிலவுதல் உணரத்தகும்; அவ்வனுபவம் பிறிதோரியலில் விரிவாக நோக்கப்பெறும்.[1] ஈண்டு அடிகள் பாடல்களில் காணத்தகும் பாடற் பண்புகளை முறையாக நோக்குவோம்.

1 அணிகள் (அ) உவமை

'உவமை என்பது கவிஞனின் அனுபவப் பொருளாகும்; பொருள் என்பது அவன் காணும் புதிய பொருளாகும். அவன் ஏற்கனவே கண்டு வைத்த பொருளைப் புதிதாகக் காணும் பொருளோடு பொருத்திவைத்து அப்பொருளின் உயர்வு தாழ்வுகளை அளந்து அறிவிக்கின்றான் எனக் கூறலாம். பொதுவாகப் பொருளின் சிறப்பை வலியுறுத்தவே உவமை அமைக்கப்படுகிறது'[2] என்றும், 'உணர்வுமிக்க பாடல்களுக்கு உவமைகள் ஒளிவிளக்காக நின்று செய்யுட் செய்திகளை விளக்கப் படுத்துகின்றன எனக் கூறலாம்'[3] என்றும் டாக்டர் ரா.சீனிவாசன் குறிப்பிடுகின்றனர். வினை, பயன், மெய், உரு என்ற நான்கனடிப்படையில் உவமைகள் தோன்றும் என்றும், உவமையும் பொருளும் ஒத்து விளங்க வேண்டும் என்றும், உவமையாகக் கூறப்படுவது உயர்ந்த பொருளாக இருக்க வேண்டும் என்றும் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளமை[4] அறிகின்றோம். மெய், உரு என்ற இரண்டையும் பண்பு என்று அடக்கிப் பண்பு, தொழில், பயன் என்ற மூன்றன் அடிப்படையில் ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை என்று தண்டியலங்காரம் குறிப்பிடுகிறது.[1] அடிகள் கையாளும்

---

1. இயல் 5 அடிகளின் இறையனுபவம் பக்.333-362
2. சங்க இலக்கியத்தில் உவமைகள், பக்.2
3. மேற்படி பக். 4
4. தொல்.உவமவியல், 1,8,3

உவமைகள் இவ்விலக்கண இயல்புகளுக்கேற்பச் சிறந்து விளங்குவனவாகும். பல்வகைப் பொருள்களையும் உவமைகளாக ஆளும் அடிகள் விளக்கவந்த பொருளை இனிதின் விளக்குவதோடு தம் பரந்துபட்ட அனுபவ உணர்வையும் ஒருங்கு புலப்படுத்தியுள்ளனர் எனலாம்.

சமயத்தொடர்பான உவமைகள்

இறைவனைப் பாடுபொருளாகக் கொண்ட அடிகள் சமயத் தொடர்பாகக் கடவுளர், அடியவர், துறவியர் முதலியோரையும் புராணச் செய்திகளையும் உவமையாகக் கையாண்டுள்ளமை முதற்கண் கருதத்தகும். கமலைப்பிரானாகிய இறைவனுக்கு உவமை கூறவரும் அடிகள் தன்னொக்கும் செல்வக்கமலைப் பிரான்[2] என்று குறிப்பிடுகிறார். இறைவனுக்கு வேறு உவமை கூறின் அஃது இறைவனை விடத் தாழ்ந்ததாகவே அமையுமாதலாலும், 'தனக்குவமையில்லா தான்' என்று[3] இறைவனைத் திருவள்ளுவர் குறிப்பிடுதலாலும் அம்முறையில் அடிகள் இறைவனையே இறைவனுக்கு ஒப்புமையாகக் கூறியுள்ளனர் எனலாம். இறைவன் முழுமுதற் பரம்பொருளாக, வேறு ஒப்பின்றி விளங்கும் தன்மையை அடிகள் இங்ஙனம் தெளிவாக்குகிறார். 'தம்முடையான் எப்பாலும் நிற்பதென' ஞானாசிரியர் தம்மாணாக்கர் நிலைகளுக்கேற்ப நின்று அவரவர்க்காவன கூறி மேற்பட்டு விளங்குவர் என்கிறார் அடிகள்.[4] இறைவன் எல்லாவற்றிற்கும் அப்பாலானாயினும் எவ்விடத்தும் கலந்து நிற்றல் போல ஞானாசிரியனாக வருகிறான் என்ற கருத்தையும் இங்கு இவ்வுவமைப் பொருத்தம் புலப்படுத்தல் நினைக்கத்தகும். வலைச்சியார், கடல் வலைவாணராகிய இறைவன் பெருவாழ்வு போன்றிருப்பதாகக் காமுற்ற இளைஞன் கூறுவதாக அடிகள் அமைக்கிறார்.[5] இறைவன் பெருவாழ்வு, காமுறத்தக்க சிறப்புடையதென்ற நுட்பம் இவ்வுவமையால் உணர்த்தப்படுகிறது எனலாம். மகளிர் நலச்சிறப்பைக் கூறும்போது கயிலை வெற்பாகிய இறைவனது கயிலாய வெற்பினை ஒத்த மகளிர் என்று விளக்கக் காண்கிறோம்.[6] நிலைபேறும் சிறப்பும் உடைய கயிலைவெற்பு உவமையாக ஆளப்படுதலால் மகளிர் தம் கற்புத் திண்மையையும் சிறப்பையும் உணர்த்தும் தன்மை விளக்கப்படுகிறது எனலாம்.

---

1. தண்டி. சூ. 314. 303
2. 346
3. குறள்.7
5. 170
6. 193

மீனாட்சி அம்மை வெள்வளை கலிப்பவும் இதழ் வெளிறவும் கருங்குவளைக் கண் சிவக்கவும் குழல் சரியவும் நீராடுதல் சிவனாகிய ஆனந்தமாக் கடலில் திளைத்தாடுவது போல் இருக்கிறது என்கிறார்[1]. அம்மை நீராடுங்கால் தோன்றும் உருவ மாறுபாட்டுக்கு, இறைவனோடு அளவளாவும் போது காணும் தோற்றத்தை உவமிக்கும் இதில் அம்மையே அம்மைக்கு உவமையாதல் உணரத்தகும். அம்மை நீராடும் போது சேடியர் மேல் பசும் பொன் சுண்ணம் எறிய எங்கும் சிவந்து காணப்படுகிறது; அப்போது அம்மையின் குழலிலிருந்து வண்டுகள் எழுந்து ஆர்க்கின்றன. இக்காட்சி (சிவந்த மேனியுடைய) இறைவன் திருமேனியில் அம்மையின் அருட்கண் சுரும்பு ஆர்த்தல் போல் உள்ளது[2]. சிவப்புக்கு இறைவன் மேனியும் வண்டுக்கு அம்மை கண்ணும் ஒப்பிடப்பட்டுள்ளமை அறியத்தகும். அம்மை தோழியர் மீது வீசும் குங்கும நீர் எங்கும் ஓடிச் சிவனது விண்ணாகிய உருவத்தை நனைத்து அவனது திசையாகிய ஆடையைச் செவ்வண்ணமாகச் செய்தல், அம்மை அச்செவ்வண்ணரொடு மஞ்சள் விளையாடல் போல் உள்ளது[3]. இறைவனும் இறைவியும் இணைந்து விளங்கும் நிலையை இவ்வுமைகள் சுட்டி நிற்கின்றன. பாணபத்திரனுக்குப் பொற்பலகை நீட்டும் கடவுள் செங்கைக்குப் படியெடுத்தது போல மதுரைப் பொய்கையில் பொற்பொகுட்டு அம்புயம் சேயிதழ் விரிக்கும்[4] என்று இறைவனுடைய அருள் வழங்கும் கை உவமிக்கப்படுகிறது. நிலவொளி விரிந்த இறைவன் சடையில் வெஞ்சுடர்க்கடவுளும் (ஞாயிறும்) விளங்குதல் போல இறைவன் பாண்டியனாகத் தோன்றிய போது சுடர்மகுடம் தரித்திருந்ததாகக் கூறப்படுகிறது[5]. கங்கை இறைவன் தலையில் விளங்குவதால் சினம் கொண்ட சிவகாமி அம்மையின் கண்கள் இறைவன் நெற்றிக்கண் போல் சிவப்பதாக அடிகள் கருதுகின்றார்[6]. திருமால் மோகினியாக நின்ற தோற்றம் கவுமாரியைப் போல் இருப்பதாகக் காட்டுகிறார்[7]. தலைவன் வரும் தேர் இறைவனுடைய வளைக்காத மேருமலை போன்றது எனப்படுகிறது[8].

அம்மை தனது கனத்த தனவட்டத்தை ஒத்திட்ட தாளவட்டம் கொண்டு சப்பாணி கொட்டியருளுமாறு வேண்டப்படுகிறாள்[9]. அம்மை

---

1. 85
2. 89
3. 87
4. 151
5. 205
6. சிவ.இ.14
7. 351
8. 201
9. 34

அம்மானை ஆடும்போது எறியப்படும் காய்கள் ககனமேல் நிற்கின்ற தன்மை, அவள் பெற்ற அகிலாண்டமும் நிரைத்து வைத்ததுபோல் உள்ளதாம்[1]. அருட்சத்தியாகிய அம்மை அகிலாண்டமும் உண்டாக்கும் செய்தி இவ்வுவமையால் உணர்த்தப்படுகிறது[2]. இறைவன் இறைவியுடன் நடம்பயிலும் அம்பலம், இன்ப வீட்டுக்குச் செல்ல நல்ல கதவைத் திறந்தாற் போல் உள்ளதென்று உணர்த்தப்படுகிறது. கவுமாரியின் அருள் மாரிபோல் கொங்கையில் கொட்டும் பாலருவியாடும் குமார நாயகன் என்று முருகன் கூறப்படும்போது[3] இறைவியின் அருள்மாரி அவடன் கொங்கைப் பாலருவிக்கு உவமிக்கப்பட்டுள்ளது. முருகன் இளம் பெண்களின் கண்தொறும் விளங்குதல்போல், அவுணர் மனைவியர் கண்தொறும் நிற்பதாகக் கூறப்படுகிறது[4]. போரறத்தால், உயிருடன் வந்த அவுணர்களைப் பாதுகாத்த அருள்பற்றி, முருகன் திருவுருவை அவுணர் மனைவியர் நினைந்தமையை அடிகள் இவ்வாறு உணர்த்தியுள்ளார். அரமகளிடருனாடும் கலவி விளையாட்டென முருகன் சரவணத்தில் வீரர்களோடு புனலாடுவதாகக் கூறப்படுகிறான்[5].

முருகனுடைய படைவீரர்கள் செலுத்திய கொலை நேமி அவுணர் உயிரை உண்டேகுவது, ஓலிட்டயானைக்கு உதவத் திருமால் அனுப்பிய திகிரி போன்றுள்ளதாம்[6]. சங்கு ஈன்ற நித்திலத்தின் ஒளி விளங்கும் தீம்புனல் பாற்கடலாகவும், விரிதிரைச் சுருட்டு அரவணையாகவும், பசியதாமரை இலைத்தொகுதி திருமாலின் நிறமாகவும், பொன்தாதுடைய தாமரைமலர் கண் முதலிய பல உறுப்புக்களாகவும், தாமரையில் இருக்கும் அன்னம் திருமகளாகவும் விளங்குவதால், பைந்துழாய் முகுந்தன் பள்ளிகொண்டன்ன, அந்தண் பூந்தடம்[7] என்று திருமால் பள்ளி கொண்ட தோற்றத்தைத் தடத்துக்கு உவமையாகக் கூறக் காண்கிறோம். திருமாலைப் போல மழை முகில்கள் விளங்குவதாகவும் கூறப்படுகிறது[8]. குரங்கு பொன்னிறமான பலாப்பழத்தை வகிர்ந்து வள்ளுகிரால் பலாச்சுளைகளை எடுத்து வாய்மடுப்பது, திருமால் நரசிங்க அவதாரத்தில் ஆடகப்பெயரினனாகிய இரணியனுடைய மார்பைப்

1. 78
2. 548
3. 404
4. 440
5. 402
6. 442
7. 478
8. 672

பிளந்து குடரை உருவி நிணத்தை உண்டதுபோல இருப்பதாகக் கூறப்படுகிறது[1]. கமலையில் உள்ள தடாகம் திருப்பாற்கடல் போல் விளங்குவதை அடிகள் விளக்கமாக ஒப்பிடுகிறார். தடாகம் பாற்கடல் போல்வது; புனல் குடைந்து உழக்கும் யானை பாற்கடல் கடைந்த மந்தரமலை போல்வது; யானையின் வாலையும் துதிக்கையையும் தடவும் பாகர்கள் வாசுகியாகிய பாம்பின் வாலையும் தலைப்பகுதியையும் பற்றும் வானவர்கள் போல்வர்; வெண்தரளம் பாற்கடலில் தோன்றிய அமுதம் போல்வது; கொடியொடு கூடிய பாசடைத் தொகுதி பாற்கடலிற் தோன்றிய கற்பகாடவி போல்வது; மலர்ந்த செந்தாமரை அதன் வடிவமாய்த் தோன்றிய பதுமநிதி போல்வது; சங்கு அப்பெயரில் அமைந்த சங்கநிதி போல்வது; சிவந்த நெட்டி கிடத்தல் சிந்தாமணி போல்வது; பொன்தாது ஆடிய அன்னம் திருமகள் போல்வது[2] என்று உவமை கூறப்படுகிறது. நீர்ச்சுழியிலகப்பட்டுப் பாம்பால் சுற்றப்பட்டு விளங்கும் யானை பாற்கடலில் மலையைக் கொண்டு கடைதல் மானும் என்றும் கூறப்படுகிறது[3]. கேசவன் கால்வீசக் கோள்முகடுகீண்டு கங்கை பொழிவது போல், மரக்கோடு பாய நிலவு கிழிந்து அமுது பொழிகிறது எனப்படுகிறது[4].

திருமால் மார்பில் திருமகள் இருத்தல் போலவும், நான்முகன் நாவில் கலைமகள் விளங்குதல் போலவும், இறைவனும் இறைவியும் தொண்டர் உள்ளத்தடத்திலும் வேத முடிவிலும் விளங்குதல் போலவும், முருகன் வேளூரில் இருக்கிறான் என்று அடிகள் முருகன் விளங்கும் இடத்தை உவமை நயம் பட வலியுறுத்தக் காண்கிறோம்[5]. திருமகளைப் போல் பெண்கள் கூறப்படுகின்றனர்[6]. நாமகள் போல் அன்னம் தாமரையில் வீற்றிருப்பதாகக் கூறப்படுகிறது[7]. முத்தின் ஒளி நிலவொளி போல விளங்கத் தாமரை தன்பால் உள்ள அன்னம் அகத்தடங்குமாறு மூடிக் கொண்டது. இது நீர்மட்டத்தை வெண்துகில் விரித்துப் போர்த்துக் கமல மலர்க்கையால் வளைத்து அன்னத்தைப் பிடிப்பது போன்றுள்ளது[8]. ஆகாய கங்கையில் தெய்வமகளிர் விளையாடுதல் போல் காவிரியில் அன்னங்கள் திளைத்தாடுகின்றன[9]. யானையில்

---

1. 312
2. 593
3. 87
4. 100
5. 363
6. 405
7. 324
8. 590
9. 419

அரசிளங்குமரர் உலாப்போக, மாடங்களின் ஒளியால் யானை வெண்ணிறம் பெற்றுத் தோன்றின; மகளிர் கண்களால் பார்த்தனர்; இந்நிலை உடலில் கண்பெற்ற ஐராவதத்தில் வருகின்ற இந்திரன் பலர் என்பது போல இருந்தது[1]. நடராசரைப் புகழுமாறு புலவர்களை அழைக்கும் அடிகள் இந்திரன் முதலிய தேவர்கள் போலப் புகழ வேண்டுகிறார்[2]. இறைவனைப் புகழும் மரபு இவ்வகையில் காட்டப்படுகிறது. இவ்வாறு கடவுளர் தொடர்பான செய்திகள் உவமையாக ஆளப்பட்டு இறைநலத்தை விளக்கி நிற்கின்றன.

தலைவி ஒருத்தி, உள்ளத்தில் தலைவன்பால் வேட்கையும் புறத்தே சினக்குறிப்பும் கொண்டு ஊடிநிற்பது, சாக்கிய நாயனார் காதலுட்கிடப்பக் கல்லெறிந்தற்றே என்று காட்டப்படுகிறது[3]. நாயனார் பெருமை இவ்வகையில் உணர்த்தப்படுவதோடு அடிகளின் இறையுணர்வு நீக்கமற நிறைந்திருத்தலும் தெளிவாக்கப்படுகிறது. மாணிக்கவாசகர் ஊமையைப் பேசவைத்த வியப்புப்போல, மாசிலா மணிதேசிகர் சந்நிதி விசேடத்து இன்னருள் பெறாதவர் யாவரும் இலரென வியப்பு அமையுமாறு அருள வேண்டுகிறார் அடிகள்[4]. இவ்வாறு அடியவர் பெருமைகளை உவமைகளாக அமைத்து விளக்கும் அடிகள் அவற்றை எடுத்துரைப்பதில் மிக்க வேட்கை கொண்டிருந்தனர் என்று கருதலாம்.

காசியில் பொன்மதில் உருகுவதை விளக்கும் அடிகள் படிவர் உள்ளம்போல் உருகுவதாகக் கூறுகிறார்[5]. இறைவன்பால் மனம் செலுத்திய தவத்தோர் உள்ளம் உருகி நிற்பதை உவமையாகக் காட்டுவதன் மூலம் அத்தகைய உள்ள நிலையை அடிகள் எப்பொழுதும் நினைவு கூர்ந்துள்ளார் என்று கருதலாம். சிவனது சடையில் பாம்புக்கஞ்சி நிலவு எப்பொழுதும் வளராமல் தேய்ந்தே இருப்பதை நினைக்கிறார் அடிகள்; தவம் செய்யும் முனிவர்கள் காமத் தீப்பிணிக்கு அஞ்சித் தமது பொய்யுடலை வாட்டுதல் அடிகட்கு நினைவுக்கு வருகிறது. அதனையே உவமையாக்கிக் காட்டுகிறார்[6]. இவற்றில் விளக்கப்படும் பொருளினும் உவமைப் பொருளைக் கூறவே அடிகள் பெரிதும் கருதினர் என்று கொள்ளுதல் தகும்.

---

1. 472
2. 549
3. 344
4. 581
5. 691
6. 473
7. 54
8. 355

புராணமரபில் கூறப்படும் செய்திகளையும் உவமையாக ஆளக் காண்கிறோம். அம்மை கற்பகச் சோலையில் இருப்பதுபோல் மதுரையில் பொலிகின்றாள்[1]. கற்பகச் சோலை போல் இந்திரனுடைய கொற்றக்குடை நிழல் தருகிறது[2]. புள்ளூரில் உள்ள சித்தாமிர்தத் தீர்த்தம் கங்கையாறுபோல் பெருகி நிற்கிறது; சிவனுடைய சீர்த்திப்பிரதாபம் போல் விளங்குகிறது[3]. நீர்நிலைகளில் சங்குகள் தாமரையில் காணப்படுதலை அடிகள் திருவிளையாடற் புராணச் செய்தி ஒன்றை உவமையாக்கி விளக்குகிறார். தாமரையில் இரை வரவு பார்த்து உறங்கும் நாரைக்குச் சிவபதம் கிடைத்தது போல் சங்குகள் தமக்கும் கிடைக்கும் என்று தாமரையில் இருந்து நோற்பது போல இருப்பதாகக் குறிப்பிடுகிறார்[4]. மன்மதன் மனைவி அழகுமிக்க ரதி என்று புராணமரபில் கூறப்படுவதால் தலைவியைச் சித்திரரதி போல்வாள் என்கிறார் அடிகள்[5]. பொன்னம்பலத்தில் நிலவு மேலே தவழவும் மேகங்கள் தாழப் படியவும் விளங்கும் காட்சி, நான்முகனாகிய அன்னமும் திருமாலாகிய ஏனமும் தேட இறைவன் அழற்பிழம்பாக நின்றதைப் போல் உள்ளது[6]. மாடங்களில் மேகம் சூழ்தல் சிவன் மேல் யானைத்தோல் போர்த்தது போல் உள்ளது[7]. காவிரியில் மீன் பாய்வது காமன் நாற்றிசையும் வெற்றிக் கயற்கொடி எடுத்தல் போல் உள்ளது[8]. யானையின் மதநீரும் தேனருவியும் பால் ஆறும் கலந்து விளங்குதல் திரிவேணி சங்கமம் போல் விளங்குகிறது[9]. அமுதுண்ட யாவரும் அமரர் ஆதல் உறுதி என்பது போல் சிதம்பர தரிசனம் பெற்ற யாவரும் வீடு பெறுவர்[10]. மந்தி கமுகின் குலை பறித்துச் செல்வது சுக்கிரீவன் இராவணனது பத்து முடிகளைப் பறித்துச் செல்வது போல்வது[11].

இவ்வாறு அடிகள் அமைத்துள்ள சமயத் தொடர்பான உவமைகள் பொருள் விளக்கம் தரும் சிறப்போடு தம்மளவிலும் சமய விளக்கங்களைத் தந்து அடிகளின் இறைவனைப் பாடும் நோக்கத்துக்குத் துணையாக நிற்கின்றன. உயர்ந்த பொருள்களையே உவமையாகக் கூற வேண்டும் என்ற வரையறை இவ்வுவமைகளில் சாலப் பொருந்தியிருக்கிறது. அறிந்த பொருளைக் கொண்டு புதிய

---

1. 54
2. 355
3. 355
4. 191
5. 198
6. 539
7. மீ.குறம் 34
8. 446
9. 446
10. 456
11. 699

பொருளை விளக்குவது உவமை என்று கருதும் முறையில், சமயத் தொடர்பான இவ்வுவமைக் கருத்துக்கள் உலகோரால் நன்கு அறியப் பெற்றவை என்பதை, மரபு வழியாக அடிகளும் பின்பற்றியுள்ளனர் எனலாம்.

சமயவாதியர் இயல்பையும் உவமை வாயிலாக அடிகள் அமைத்துத் தம் கருத்தைப் புலனாக்கக் காண்கிறோம். கள்ளுண்ட கடைசியர் நெல்லைக் கரும்பெனவும் கரும்பைக் கமுகெனவும் மயங்கிக் கூறுகின்றனர்; இது சமயவாதிகள் கடைக்கூடாத் தத்தம் கருத்துக்கமைந்தபடி சாற்றிச் சாற்றி முழுமாயச் சலதி மூழ்கித் தடுமாறுதல்போல் உள்ளது[1]. பிறசமயவாதியர் கருத்துக்களின் மயக்க நிலையை அடிகள் இங்குப் புலப்படுத்துகின்றார். பிறிதொரு தெய்வத்தை உண்மைப் பொருளென்று கொண்டு அன்பு செய்வார்க்கும் இறைவன் நல்லருள் செய்ய வீடுபேறு கிடைத்தமைபோல வாளைமீன் அகல்வானத்தைக் கடலென்று கருதி மயங்கி அதனிடத்தே தாவ, அது, தான் நினையாமலே ஆகாய கங்கையில் வீழ்ந்து மகிழ்ந்தது எனப்படுகிறது[2]. யாதொரு தெய்வம் கொண்டாலும் அத்தெய்வமாகி மாதொரு பாகனார் தாம் வருவர் என்ற உண்மையை[3] அடிகள் இவ்வுமையில் அமைத்துச் சைவத்தின் தலைமைத் தன்மையைத் தெளிவாக்கியுள்ளமை அறியத்தகும். இவ்வாறு பிறசமயத்தவர் பற்றிய கருத்து விளக்கம் தருவனவாக இவ்வுவமைகள் இலங்கக் காண்கிறோம்.

மக்கள் உவமையாதல்

உயர்திணை மக்களும் அடிகளால் உவமைப் பொருள்களாகக் கையாளப்படுகின்றனர். இறைவனது உண்மையை, மக்கள் இயல்புகளை உணர்த்துவதன் மூலம் அடிகள் உறுதிப்படுத்தும் திறம் விளங்குகிறது. கண்ணாடியின்கண் விளங்கும் நிழல் அதன் முன்னர் நிற்பவனால் உண்டாக்கப்படுதல் போல முருகன் புவனத்தை ஆக்கி அசைத்தருளும் ஆணையுடையவன் என்கிறார்[4]. இறைவனே அனைத்துச் செயலுக்கும் காரணம் என்பது இங்ஙனம் ஆடிநிழலசைப்பான் மூலம் தெளிவாகக் காண்கிறோம். கும்பம்

---

1. 405
2. 406
3. சிவஞானசித்தியார் சூ.2.அதி.2.பா.25
4. 1:73

முதலியன குயவனை நிமித்த காரணனாகக் கொண்டாற் போல, அகிலாண்டங்கள் சிவசத்தியை நிமித்த காரணமாகக் கொண்டு தோன்றியவை எனப்படுகின்றன[1]. கும்பத்துக்கு மண்முதற் காரணம், சக்கரம் துணைக் காரணம் ஆதல் போல் அகிலாண்டங்களின் தோற்றத்துக்கு ஐம்பூதங்கள் முதற்காரணமாகவும் மாயை துணைக் காரணமாகவும் விளங்குதல் இங்கு உடன் உணர்த்தப்படுகின்றது. இவ்வாறு மக்கள் நிலையில் வைத்து இறைவனது உண்மை உணர்த்தப்படுதல் அடிகளின் உவமையாளும் திறத்தை உணர்த்துகிறது. குயவன் திகிரி சுழலுதல் போலவும் பம்பரம் சுழலுதல் போலவும் முருகனுடைய தேர்த்திகிரி சுழலுவதாக விளக்குகிறார் அடிகள்[2].

திருவாரூரில் மகளிர்தம் நகைநிலவெறிக்கும் முகமதிகண்டு சந்திரகாந்தச் செய்குன்றம் உருகுகிறது; இது மைந்தர்கள் அம்மகளிர் முகம் கண்டு உருகுதல் போல் உள்ளது எனப்படுகிறது[3]. பெண்மை நலம் இங்ஙனம் போற்றப்படுகிறது. மகளிர்போல் சிறைமயில் அகவி ஆடுகின்றதாம்[4]. கங்கைக்குச் சடையும் உமையம்மைக்கு இடப்பாகமும் வழங்கிய இறைவன் தலைவிக்குப் பொற்புயம் வழங்காதிருத்தலைக் கூறும் போது. மகளிர்க்கு இடையின்மைபோல் பொதுவின் நின்ற இறைவனிடம் நடுவின்மை புகுந்தது என்று சொன்னயம் தோன்ற விளக்கக் காண்கிறோம்[5]. காலம் பார்த்து அச்சுறுத்தி வஞ்சித்து எளியார் உடைமை கைக் கொண்டு ஏமாப்பவர் செல்வம் மகளிர் பொம்மல் முலைபோற் பருத்திடினும் அவர் நுண்ணிடைபோல் தேய்ந்து விடும்[6]. மகளிர் உருவநலனை இங்ஙனம் உயர்ந்த நீதியை உணர்த்த உவமையாக்குகிறார் அடிகள். யாவருக்கும் பயன்படுதல் கருதித் தலையாயார் செல்வம் பொதுமகள் போல்வதென்றும், யாருக்கும் பயன்படாமையால் கடையாயார்செல்வம் கைம்பெண் நலம் போல்வது என்றும் உவமிக்கிறார் அடிகள்[7]. உலகியலில் மகளிர் நிலைகளை அறியும் அடிகள், செல்வத்தின் பயனாகிய ஈகையை வற்புறுத்த அவற்றைப் பயன்படுத்திக் கொண்டுள்ள நுட்பம் குறிக்கத்தகும்.

---

1. 361
2. 387
3. 581
4. 150
5. 155
6. 268
7. 271

மனையவள் மாண்பிலளாயின் கணவன் பூண்ட நல்லறம் புலப்படாமை போல் வறுமைப்பட்டார் கல்வி தினைத்துணையும் சீர்ப்பாடிலவாம் எனப்படுகிறது[1]. உவமையும் பொருளும் இங்கு நீதியுணர்த்தி நிற்கக் காண்கிறோம். முற்றத் துறந்தார்க்கு மெய்யுணர்வில் தோன்றும் இன்பம், அறிவுடைய தலைவனுக்கும் கற்பு நலம் சான்ற தலைவிக்கும் பிறந்த தலைமகன் போல்வது என்கிறார்[2]. இங்கு அடிகள் கருதும் குறிக்கோட் குடும்ப வாழ்வின் பயன் - இல்லறப்பயன் - துறவறப் பயனுக்கு உவமையாக்கப்பட்டிருத்தல் குறிக்கத்தக்கதாகும்.

கற்றோரும் செல்வரும், அவை இல்லார் தமக்கு முன்னர்க் குறையிரந்து நிற்பதுபோல், தாமும் தலைவணங்கித் தாழ்ந்து விளங்குதல் வேண்டும்; அப்பொழுதே கல்வியும் செல்வமும் செல்வமெனப்படும் என்கிறார்[3]. தெய்வமும் ஆண்வடிவம் பெறவிரும்பும் அளவுக்குப் பெண்மைத் தோற்றச் சிறப்புடையதாகப் பேடு இருப்பினும் பெண்ணலம் கொள்ளப்படுவதில்லை; அதுபோலக் குற்றமற்ற கல்வி, அறிவுமிக்கார்க்கன்றி மீக்கொள் நகையாளர்க்கு அமையாது[4]. கற்றலிற் கருத்துச் செலுத்தாமல் வறிதே உள்ளீடின்றி நகைத்து வீண்பொழுது போக்குபவர்களைப் பெண்ணலம் வழங்காத பேடு என்று காட்டுதல் சிறந்த உவமையாகத் திகழ்கிறது. மதயானையை வழிப்படுத்தும் பாகர்கள் போல் வெகுண்ட மன்னனை அமைச்சர்கள் நல்வழிப்படுத்த வேண்டும் என்கிறார்[5]. பகை எதுவும் இல்லாமலேயே பலருடைய பழியினை எடுத்துச் சொல்லி நகைத்தலையே பயனாகக் கொள்பவனை, வேறுபயன் எதுவுமின்றி உடல் துடித்தலைக் காண்பதற்காக அடித்துக் கொல்லும் கொடியவன் போல் கருதி அஞ்ச வேண்டும்[6]. பிறர்பழிகூறி நகைப்பவனைக் கொலைபாதகனாய் உணர்த்தும் நீதியுவமையாக இஃது இலங்குகிறது. ஆறலை கள்வர்கள் இரவில் செல்வோரை வழிமாற்றி உய்ப்பது போல், தீயூழ் நல்லன செய்வதையும் தீயவழியில் செலுத்தும் என்று விளக்கப்படுகிறது[7]. குரங்கு பலாப் பழத்தைத் தோண்டி எடுத்தல், கள்வர் பொற்குடம் கண்டெடுத்தல் போல்வது எனப்படுகிறது[8]. வேங்கை மரம் வண்டுகள் மொய்க்காத மலர்களைப் பெற்றிருத்தல், கொள்வதற்குரியவர்களுக்கும்

1. 215
2. 305
3. 221
4. 229
5. 250
6. 278
7. 297
8. 587

கொடுக்காமல் அரிய செல்வத்தை அறிவில்லாதவர்கள் சுமந்திருத்தல் போல்வது எனப்படுகிறது[1]. இங்கு உவமை வாயிலாக வைத்திழக்கும் செல்வத்தின் நிலை உணர்த்தப்படுவதோடு அறிவுறுத்தப்படுதலும் காண்கிறோம்.

உலோபிகளைப்போல நண்டுகள் மழைநாளில் தம்வளைகளின் வாய்களை அடைக்கின்றமை கூறப்படுகிறது[2]. இவ்வாறு மக்கள் தொடர்பான உவமைகள் பல அரிய கருத்துக்களை விளக்கக் கையாளப்பட்டுள்ளன.

இயற்கைப் பொருள்கள் உவமையாதல்

முதற்பொருள், கருப்பொருள் என்று தொல்காப்பியர் குறிப்பிடுவனவற்றுள்[3] அடங்கும் பிற இயற்கைப் பொருள்கள் பலவும் புலவர்கள் உவமை கொள்வதற்குப் பரந்துபட்ட நிலைக்களங்களாகத் திகழ்வனவாகும். அடிகள் இவ்வகையில் விரிவாக உவமைகளை எடுத்தாண்டு கருத்துக்களை விளக்கியிருப்பதுடன் தமது புலமை நலத்தையும் உணர வைத்துள்ளார்.

நாடும் ஊரும்

மகளிர் நலம் பற்றிக் கூறும் கூற்றில் தகையோர் மதுரேசர் தண்டமிழ் நாடென்னீர்[4] என்று தமிழ்நாடு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. பிறிதோரிடத்தில் தலைவி பொருவிடையோன் தெய்வப்புலியூரை ஒப்பாள் என்று சிறப்பிக்கப் படுகிறாள்[5]. இறைநலம் சான்ற நாடும் ஊரும் மகளிர் நலத்துக்கு உவமையாகக் கூறப்படும் உயர்வு நினைக்கத் தக்கதாகும். வளம் பொருந்திய ஊர்களை மகளிர்க்கு உவமை கூறுதல் சங்க இலக்கிய மரபாகும்[6]. சமய அடிப்படையில் அம்மரபு அடிகளால் பின்பற்றப்பட்டுள்ளது.

நீர், தீ, காற்று

இளமை நீரில் தோன்றும் குமிழிபோல்வது; நிறைசெல்வம் நீரில் சுருட்டும் நெடுந்திரைகள் போல்வது ; யாக்கை நீரில் எழுதும் எழுத்துப்

---

1. 578
2. 644
3. தொல். அகத். 4, 18
4. 144
5. 492
6. சங்க இலக்கியத்தில் உவமைகள் பக். 193 – 195

போல்வது என்று நிலையாமை உணர்த்துதற்கு நீரின் இயல்புகள் உவமை கூறப்படுகின்றன[1]. எளிதில் யாவரும் அறியும் பொருட்டு நீரில் தோன்றுவனவாகிய குமிழி முதலிய ஓரினப் பொருள்களையே உவமை கூறியிருத்தல் அறியத்தகும். பிறர் புகழ்வதற்காகத் தன்னைத் தானே ஒருவன் புகழ்ந்து கொள்ளுதல் தீச்சுடரை நன்னீர் சொரிந்து வளர்த்தல் போல்வது என்று கூறப்படுகிறது[2]. நெருப்பில் நீர் சொரிந்தால் நெருப்பு அணைந்து போதல் போல் தன்னைத்தான் புகழ்தல்', உள்ள புகழையும் அழித்து விடும் என்று நயம்பட நீதி உணர்த்தும் திறம் அறியத்தகும். மீனாட்சியம்மையின் சீறடிகள் ஆரழற்சிகையெனக் கொப்புளித்து விளங்குகின்றன; தோழியர்கள் செம்பஞ்சுக்குழம்பு தடவியதைப் பொறுக்க முடியாமல் இவ்வாறு நெருப்பெனக் கொப்புளித்ததாக அம்மையின் மென்மை விளைவு உணர்த்தப்படுகிறது[3]. மூண்டெழும் காமநெருப்பின் கொழுந்தெனச் சிவன் சடை விளங்குகிறது என்கிறார்[4]. அம்மை திக்குவிசயம் செய்து கைலையில் சிவன் முன் நின்றபோது, இறைவன் அம்மைபாற் காதல் கொண்ட குறிப்பை அடிகள் இவ்வுவமையால் உணர்த்துகிறார். உயிர்கள் செய்யும் வினைகளுக்கு ஏற்பக் கறங்கும் சகடமும் போல் மீண்டும் மீண்டும் பிறந்து உழல்வது காட்டப்படுகிறது[5]. இறைவன் கறங்கெனச் சுழன்றாடுவதாகக் கூறப்படுகிறான்[6].

ஞாயிறு, திங்கள், விண்மீன்

பருதி பலவும் எழுந்து சுடர் பாலித்தாற்போல முருகனது மகரக்குழை விளங்குகிறது[7]. மீனாட்சியாகிய குழந்தைக்கு அணிந்துள்ள பொற்பட்டமும் சிறுசுட்டியும் ஆகிய அணிகலன்கள் வெயிலும் நிலவும் போல் ஒளிதந்து ஆடுகின்றன[8]. திருமாலுடைய கவுத்துவமணி பருதியைப்போல் உள்ளது[9]. பவளக்காலும் வயிரவிட்டமும் நிலாக்கால் அனைய தரளவடமும் அமைந்து மாணிக்கப் பலகை விளங்கும் ஊசலில் அம்மை ஆடுதல், பருதிமண்டலத்தில் வளரும் அரும்பெருஞ்சுடரைப் போல் உள்ளது;[10]

1. 489
2. 224
3. 70
4. 99
5. 1:16
6. 699
7. 1:40
8. 21
9. 47
10. 94

மதுரையில் மாணிக்கம் பதித்த வாயில் மாடத்தில் மழைமுகில் தவழ்வது ஞாயிறோன் மடியில் அவன் மகளாகிய யமுனை நதி விளையாடல் போன்றுள்ளது[1]. இருளற இமைக்கும் முருகனுடைய திருவுருவச் சோதியினை இளஞாயிறு என்று கருதித் தாமரை இதழ் விரியும் ; அவனுடைய முகிழ் நகை நிலவெறிப்பக் குமுதம் மலரும்[2]. இவ்வாறு தாமரையும் குமுதமும் ஒரே நேரத்தில் மலரும் காட்சியை நயமுற அமைக்கிறார் அடிகள். முருகன் ஒளியும் நகையும் முறையே ஞாயிறும் நிலவும் போறலின் இவ்விளைவு அடிகளால் கற்பிக்கப்படுகிறது. வேளூரில் மணிமாட நிரையும் தரளமாட நிரையும் வெயிலினொடு பொழி நிலாப்போர்ப்ப விளங்குகின்றன ; அக்காட்சி இருசுடரும் ஒருவழித் தொக்கென இருப்பதாகப்படுகிறது அடிகளுக்கு[3]. இல்பொருள் உவமையாக இருசுடரையும் இணைத்துப் பார்க்கும் திறம் நோக்கத்தகும்.

முருகன் நிலவொளிபோல் உமிழும் புன்முறுவல் உடையவன்[4]. மீனாட்சியின் முறுவலும், 'நிலவு விரிந்திடுகுறுநகை' என்று காட்டப்படுகிறது[5]. வேளூரில் சித்தாமிர்தத் தீர்த்தத்தில் திளைத்தாடும் ஞாயிறோன் நிலவைப்போல் தெள்ளமுத மயமாகின்றான்[6]. தீர்த்தப் பெருமை இவ்வகையில் காட்டப்படுகிறது. அம்மை ஆடும் முத்திழைத்த அம்மானை முன் செல்ல மணியிழைத்த அம்மானை பின் செல்கிறது ; இது தாமரையாகிய மனைவியைச் சந்திரன் தோய்ந்து செல்லப் பார்த்துப் புழுங்கும் கதிரவன் பின் தொடர்ந்து போவது போல் உள்ளது[7]. உமையம்மையின் தலையில் விளங்கும் பிறையென்னும் தலைக்கலன் நாள்மதிபோல் உள்ளது[8]. பிறை நிலவு இறைவியின் நுதலுக்கும் வள்ளியம்மையின் நுதலுக்கும் உவமிக்கப்படுகிறது[9]. முருகனுடைய ஆறு நெற்றியும் பிறைத்துண்டம் ஆறு நிரை தோன்றப் பதித்தாற்போல் விளங்குகின்றன என்கிறார்[10]. யானையின் கோடு பிறைபோல் இருப்பதாகவும் காட்டப்படுகிறது[11]. ஒத்து வரிசையாக விளங்கும் விண்மீன்கள் போலப் பூங்கொத்துக்கள் விளங்குவது காட்டப்படுகிறது[12].

---

1. 95
2. 402
3. 434
4. 1:40-41
5. 41
6. 357
7. 77
8. 528
9. 369, 364, 382
10. 1:37-38
11. 90, 11
12. 686

மின்னல், வானவில், இடி, மேகம்

இறைவன் புயத்திலும் மார்பிலும் விளங்கும் கொன்றைமாலை மின்னல் திரண்டதெனப் புரள்கிறது[1]. தலைவியின் இடை மின்வண்ணம் எனப்படுகிறது[2]. தேவயானை மின்பூத்த சிற்றிடையுடையவளாகக் கூறப்படுகிறாள்[3]. பன்னிற மணியாலான அம்மானை மேலே செல்வது வானவில்லைப்போல் காட்சியளிக்கிறது[4]. இறைவன் நடனம் புரியும்போது அவன் அணிந்துள்ள பாம்பினிடத்திலிருந்து தெறித்த மணிகள் இடியைப் போல் திசையானைகளின் முதுகில் தாக்குகின்றன[5]. முகில் முழக்கம்போல் இரு மடங்கு முரசங்கள் முழங்குகின்றன[6]. அம்மையின் கூந்தலும், தேவயானையின் கொந்தளமும், வள்ளியின் கூந்தலும், தலைவியின் மொய்குழலும் புயல் வண்ணமாகும்[7]. வேளூர்மாடத்து நீல ஒளியில் மூழ்கிய ஐராவதம் முகிலைப் போன்றுள்ளது[8]. முருகன் பருவமழைபோல் உதவும் கைத்தலம் உடையவன்[9]. மேகம் கடலில் நீரை உண்டல் போல் வண்டுகள் பொழில் மலரில் தேன்முகக்கின்றன[10]. திருமால் மேகத்தினைப் போல் நிறம் உடைய கடவுள்[11]. மலையில் மேகம் தவழ்வதெனச் சிவனது தோளில் யானைத் தோல் விளங்கும்[12]. இவ்வாறு மேகத்தில் வினை, பயன், மெய், உரு என்ற நான்கு தன்மைகளும் உவமைகளாக ஆளப்பட்டுள்ளமை அறியத்தகும்.

மலை, அருவி, கடல்

திருவாரூரில் திகழும் பூங்கோயில் தென்பால் விளங்கும் மேரு மலைபோல் காணப்படுகிறது[13]. வரை செய்தன்ன களிறு விளக்கப்படுகிறது[14]. தில்லைப்பொன் மன்றம் இமயம் போன்றிருப்பதாகக் கூறப்படுகிறது[15]. கமலை மகளிர் நலம் பற்றிக் கூறும்போது, மகளிர் கரும்புவில் எழுதப்பட்டிருக்கும் மார்பு, சேரர் விற்பொறித்த இமயமலை போன்றுள்ளதாகவும், மார்பில் கச்சினை இறுக்கிக் கட்டியிருத்தல் மந்தர மலையில் வாசுகியாகிய பாம்பைக் கட்டியிருப்பதைப் போன்றுள்ளதாகவும் அடிகள் உவமிக்கின்றார்[16]. காசியில் வீடுகள் மலைகளை ஒத்து விளங்குதல் குறிக்கப்படுகிறது[17].

---

1. 652
2. 116
3. 349
4. 81
5. 699
6. 52
7. 528, 381, 394, 116, 540
8. 371
9. 398
10. 548
11. 356
12. 603
13. 324
14. 472
15. 503
16. 581
17. 655

யானையின் நிலவு பொழி கிம்புரி மருப்பு, கடைவாய் வழியும் வெள்ளருவி போல் இருப்பது காட்டப்படுகிறது[1].

சங்கு ஒலிக்கும் கடல், சங்கு முழங்கும் தானைக்கு உவமையாகக் கூறப்படுகிறது[2]. மதுரைத்தடம், கரைஎறி புணரியைப் போல் இருமடி பெருகுதடமாக விளக்கப்படுகிறது[3]. தலைவியின் கண் கடல் போல்வது எனப்படுகிறது[4]. கடலில் அமுதும் நஞ்சும் தோன்றினாற்போலத் தலைவி கண்ணிலும் அருளும் மருளும் விளங்குதலால் இவ்வாறு ஒப்பிடக் காண்கிறோம். உடம்பின் நிலையாமையைக் கூறும்போது முதுமையில் சுருக்கங்கள் தோன்றுவதைக் கடலில் திரை என உடலில் திரை விளங்கும் எனக் கூறுகிறார்[5]. கடல் அலை வரிசைவரிசையாக வருதல் போல உடம்பில் சுருக்கம் எங்கும் விளங்குதல் உணர்த்தப்படுகிறது. உடல்திரை என்னும் வழக்கம் கடல் திரையைக் கருதியே என்னும் உண்மை இங்கு தெளிவாக்கப்பட்டுள்ளது. பேய்பிடித்தவர்கட்கு அருள் கிடைக்கும் செய்தி வைத்தீசுவரன் கோயில் சிறப்பாகக் கூறப்படும். முருகன் தன் கணநாதரை ஏவ, அவர்கள் கடுக முடுகி வருதல் கண்டு, பேய்கள் கடல்வாய் திறந்தெனப் பிலவாய் திறந்து அலறுகின்றன எனப்படும்[6].

மரம், செடிகொடி, மலர், கனி

பெண்களைக் 'கற்பக மலர்க்கொம்பு', 'மலர்க்கொம்பு' அன்னவர்கள் என்று கூறக் காண்கிறோம்[7]. திருவாரூர் வளம் கூறும்போது செந்நெல் கரும்புபோல் வளர்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது[8]. காடுபடுசெந்நெல் பைங்கன்னல் நிகர் புள்ளூர் என்று புள்ளூரும் சிறப்பிக்கப்படும்[9]. காட்டில் விளங்கும் பைங்கூழின் கவளம் உண்டல் போலச் சிவனுடைய ஊர்தியாகிய திருமால் பகிரண்டம் வாய் மடுத்தமை குறிக்கப்படுகிறது[10]. மீனாட்சி அம்மையைச் செம்பவளக்கொடி போல் நீராட வேண்டுகிறார்[11]. பெண்களின் இடை கொடிபோல்வதெனக் கூறப்படுகிறது[12]. வல்லிக் கொடி போல் நுடங்கும் மகளிர் என்கிறார்[13]. வஞ்சிக்கொடி போல்பவராகவும் மகளிர் விளிக்கப்படுகின்றனர்[14]. பொற்கொடி போல்பவராகவும்

1. 57
2. 51
3. 52
4. 148,562,668
5. 530
6. 416
7. 650, 28
8. 342
9. 395
10. 545
11. 93
12. 395, 11
13. 469
14. 474

கூறப்படுகின்றனர்[1]. அம்மையின் விரல் பவளத்தளிர் போல்வது[2]. முருகனுடைய வேல் செறிந்த இலைபோல்வது[3]. யானையின் செவி தாமரை இலை போல்வது எனும் பொருளில் 'குழைச்செவி' எனப்படுகிறது[4].

மலர் பெரிதும் உவமையாக ஆளப்படுவதாகும். மலர்முகம், கமலமுகம், வாசமலர் வதனமண்டலம் என்று முருகனுடைய திருமுகத்துக்குப் பொதுவாக மலரையும், சிறப்பாகத் தாமரையையும் உவமிக்கக் காண்கிறோம்[5]. அம்மை மகளிரொடு கண்பொத்தி விளையாடிய இளம் பருவத்து நிகழ்ச்சியைப் பாடும்போது, காந்தள் செங்கமலத்த கழுநீர் மணந்தெனக் கண்பொத்தி விளையாடியதாகக் கூறுகிறார்[6]. இதில் காந்தள் கைக்கும், செங்கமலம் முகத்துக்கும், கழுநீர் கண்ணுக்கும் உவமையாக விளங்குதல் உணரத்தகும். காந்தள் மலர்ந்தாற்போல் பாம்பு நிரை கூறப்படுகிறது[7]. மகளிரை மலர்க்கொம்பு என்பதன் காரணம், கொம்பு போல் இடைநுடங்கும் தன்மையாலும், மலர்கள் போன்ற உறுப்புக்கள் பெற்றிருத்தலாலும் என்பது ஈண்டு உணரத்தகும். பெண்கள் முல்லை வரிசை போல் முகிழ்நகை பெற்றுள்ள தன்மை பேசப்படுகிறது[8]. கல்வியோடு சொல்வன்மை அமைந்திருப்பின் பொன்மலர் நாற்றம் பெற்றாற்போலும் என்பதில்[9] இல்பொருள் உவமையாகப் பொன்மலர் நாற்றம் பெறுதல் கருதப்படுகிறது. பொன்மலர் வாடாதிருக்கும் ஒரு தன்மைத்தான நிலையில் மணமும் சேர்ந்தால் அதன் சிறப்பு நிலையாக இருப்பதைக் கற்பனையில் காணும் அடிகள் சொல்வன்மையின் உயர்வை உணர்த்தப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். முருகனுடைய கைத்தலம் தடமலர் போல்வது[10]. அம்மை கிஞ்சுக இதழ்ப் பெண்பிள்ளை எனப்படுகிறாள்[11]. கிஞ்சுகம் என்பது முள்முருங்கைப் பூ. அதன் நிறத்தைப் போல் இதழ் விளங்குகிறது என்பது கருத்தாகும். அன்னத்தின் உச்சி கிஞ்சுகம்போல் உள்ளது எனப்படுகிறது[12]. அம்மையின் கை பங்கயச் செங்கை என்றும், கஞ்சக்கரம் என்றும் கூறப்படுகிறது[13]. அம்மையின் அங்கை ஆம்பற்பூப் போல்வது என்று

---

1. 176
2. 80
3. 448
4. 2
5. 1: 43, 44, 45
6. 36
7. 636
8. 187
9. 210
10. 383
11. 663
12. 636
13. மீ.கு. 4 : 76

உவமிக்கப்படுகிறது[1]. 'தேனொழுகு கஞ்சப் பொலன் சீறடி' என்று அம்மையின் பாதமும், 'மலர்த்தாள்' என்று இறைவன் பாதமும் உவமிக்கப்படுகின்றன[2]. முருகனின் காலும் பூங்கமலக்கால் என்று கூறப்படுகிறது[3]. முருகனின் பன்னிரு கண்களும் பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரெண்டு பூத்தாங்கு விளங்குகின்றன[4]. மன்றம் பொகுட்டுப் போலவும், மதில் இதழ் போலவும், மாடத்து விளங்கும் மேகங்கள் பூவில் சூழும் வண்டுகள் போலவும் விளங்குதலால் பொற்புண்டரீக புரமாகிய சிதம்பரம், பொன்னாகிய திருமகள் தங்கும் புண்டரீகத்தையே ஒக்கும் என்று கூறுகிறார்[5]. தாமரையின் தோற்றம் முழுவதையும் இங்கு பொருத்தமுறச் சிதம்பரத்துக்கு உவமித்திருத்தல் குறிக்கத்தகும். பொன்மன்றம் பொற்றாமரை போலவும், அங்குள்ள இறைவன் திருமேனி தேன் போலவும், அம்மையின் விழி உண்டுகளிக்கும் வண்டு போலவும் கூறப்படுதலும் காண்கிறோம்[6]. தாமரை முகிழ்போல் மார்பினை உடையவள் அம்மை என்று விளக்கப்படுகிறது[7]. இவ்வாறு பல்வகை உறுப்புநலங்களையும் பொருள்களையும் உணர்த்த மலரை உவமையாகக் கையாளும் மரபு அடிகளின் பாடல்களில் இனிது திகழ்கிறது எனலாம்.

அம்மையின் திருவாய் 'செங்கனிவாய்' எனப்படுகிறது[8]. முருகனுடைய திருவாயும், கனிவாய், செங்கனிவாய் எனப்படுகிறது[9]. இடைச்சியார் வாய் 'தொண்டைவாய்' எனப்படுகிறது[10]. தொண்டைக்கனி இங்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. கொவ்வைக் கனியும் மகளிர் வாய்க்கு உவமையாக வழங்கப்பட்டுள்ளது[11]. இறைவன் கழுத்தில் விளங்கும் கறையினை அம்மையின் கையில் உள்ள கிளி நறுங் களங்கனி என்று பார்க்கும் எனப்படுகிறது[12]. இவ்வாறு கனி பற்றிய உவமைகள் பெரும்பாலும் நிறமும் சுவையும் பற்றியனவாகத் திகழ்கின்றன.

விலங்குகள், பறவைகள் முதலியன

பல்வகை விலங்குகள், பறவைகள் முதலிய உயிரினங்கள் தக்கவாறு அடிகளால் உவமைகளாக ஆளப்பட்டுள்ளன. ஈராயிரங் கொம்புடைய சிவனுக்குரிய வெள்ளையானை என்று கூறப்படும் அயிராவணத்தைப் போல் விநாயகர் திருநீற்றில் அளைந்து விளங்கும்

1. சிவ. இ. 3
2. 58, 453
3. 1:122
4. 1:39
5. 452
6. 494
7. 511
8. 61
9. 390-397, 401
10. 166
11. 193, 581
12. 660

காட்சி கூறப்படுகிறது[1]. களிற்றின் பிளிறல் போல் இரண்டு பங்கு ஒலியெழுப்பி மதுரையில் மும்முரசுகள் அதிர்கின்றன என்கிறார்[2]. அம்மையின் மடநடை பிடிநடை போல்வதாகப் பேசப்படுகிறது[3]. கொள்ளை வெள்ளருவி படிந்திடும் இமயக்கூந்தல் மடப்பிடிபோல் அம்மையை நீராட வேண்டுகிறார் அடிகள்[4]. திசையானைகளின் வால்கள் அவற்றின் வன்தடக்கைக்கு நேராக உள்ளனவாம் ; 'வன்தடக்கைக்கு நேர், பொருவாலவாய் எட்டுப்போர்க்களிறு' என்று கூறப்படுகிறது[5]. வன்தடக்கை, பொருவால் என்பதால் இங்கு வினை உவமமாக அமைக்கப்பட்டுள்ளது எனலாம். 'செங்கண்ணையுடைய இளைய சிங்கஏற்றை ஒத்த இளைஞர்கள்' என்று சிங்கம் உவமையாக்கப்பட்டுள்ளது[6]. புலியின் இயல்பினால் அரிய நீதி உணர்த்தப்படுகிறது. செங்கட்புலியேறு அறப்பசித்தாலும் பைங்கூழாகிய புல்லைத் தின்னாது; நல்லொழுக்கத்தில் தலைநின்றவர்கள் நல்கூர்ந்தபோதும் அல்லனவாகிய பாவச் செயல்களைச் செய்தற்கு ஒருப்பட மாட்டார்கள்[7]. இவ்வாறு எடுத்துக்காட்டுவமையாக உணர்த்தப்படுகிறது. தீயன செய்பவர்களுக்குச் செல்வம் பெருகினாலும் அவர்கள் செய்யும் தீய செயல்கள் நல்லனவாகா, தீயனவே; நாவினால் நக்கப்படுவார்க்கு இன்பமுண்டாகும்படி நக்கிக் கொல்லும் காட்டுப்பசு போல்வதாகும் இஃது என்கிறார்[8]. இவ்வாறு காட்டுப்பசுவும் எடுத்துக் காட்டாகிறது. திருமகளை விடச் சிறந்த அழகு நலம் வாய்ந்த மனைவி இருப்பவும் பிறன்மனை நயப்பவர்கள், இனிய உணவு வாயில் இருப்ப அதை உமிழ்ந்துவிட்டுக் கடு முதலிய கசப்பு உணவு உண்ணும் தீய விலங்கு போல்வர் என்கிறார்[9]. இங்கு உவமையாகக் கூறப்படும் விலங்கு, வேப்பிலை போன்ற கசப்புடைய பொருள்களை விரும்பும் ஒட்டகம் என்பர்[10]. மகளிர் இளமானை அனையவர் என்று கூறப்படுகின்றனர்[11].

அம்மைக்குக் கிளி போலும் குதலை மென்மொழியுடைமை கூறப்படுகிறது[12]. அம்மையைப் புனல் குடையும் அன்னப்பெடைபோல் புது நீராட வேண்டுகிறார் அடிகள்[13]. ஏலக்கருங் கொந்தள அளகத்து இளமாதராகிய அரம்பையர் தோகை மயில்போல் நடங்குயிற்றுகின்றனர்[14]. மழைக் கொந்தளக் கலப மயிலிளஞ்சாயல் உடையவளாய்த் தேவயானை திகழ்கிறாள்[15]. வள்ளியும் மகளிரும் மயிலிளஞ்சாயல் உடையவர்களாய்க் கூறப்படுகின்றனர்[16]. வேளூர் மகளிர், தேமரு

1. 2
2. 52
3. 11
4. 93
5. மீ.இ.12
6. 27
7. 266
8. 280
9. 285
10. நீதிநெறி விளக்கம், தி.சு.பாலசுந்தரம் பிள்ளை உரை, பக்.75
11. 175
12. 46
13. 93
14. 374
15. 381
16. 383, 394, 469

குழற்கோதை மயிலன்னவராக விளங்குகின்றனர்[1]. இவ்வாறு மயிலின் ஆட்டமும் இயலும் பெண்களுக்கு ஒப்பிடப்பட்டுள்ளன. முருந்து முறுவலுக்கு உவமையாகிறது[2]. வள்ளி பூங்குயில்போல் ஏனற்புனங்காக்கின்றாள்[3]. குயிலின் குரல்ஒலி இங்கு பறவைகளைக் குரல் எழுப்பி ஓட்டிப் புனங்காக்கும் வள்ளிக்கு உவமையாகியுள்ளமை அறியத்தரும். மீனாட்சி அம்மைபாடும் இசை குயிலின் மிழற்றிய இசை எனப்படுகிறது[4]. மகளிர் குயிலென மிழற்றுதலும் கூறப்படுகிறது[5]. இவ்வாறு குயிலின் இனிய இசைத்தன்மை உவமையாக ஆளப்படுகிறது. மேகங்கள் வானில் உலாவிப்படர்தரும் தோற்றம் காகங்களின் வரிசை போல் விளங்குகிறது[6]. அம்மையின் கண் களி வண்டை ஒத்துள்ளது[7]. இது நிறத்தாலும் செயலாலும் பொருந்திய உவமை. கங்கைத்துறையில் விளங்கும் வலம்புரிச் சங்கு போல் இறைவன் திருமுடியில் உள்ள கங்கையில் விளங்கும் திங்கள் தோன்றுகிறது[8]. பாம்பு நெருப்பைக் கண்டு அஞ்சுவது; குடதிசையில் புகைஎழ அழல் உமிழ்கின்ற நிலவு தோன்றியதைக் கண்டு, பாம்பு அஞ்சுதல் போல், தலைவி ஒருத்தியும் வெருவருதல் கூறப்படுகிறது[9]. இங்கு பாம்பு நிலவை நெருப்பென அஞ்சுதல் போல் தலைவியும் அஞ்சுகிறாள் என்பதில் தலைவிக்கு நிலவு நெருப்பாக உள்ள தன்மை குறிக்கப்படுகிறது. ஆயின் பெரிய பாம்புகள் மிகுந்த தீப்பற்றினாலும் பெருமூச்செறிந்து பேராமல் துயின்று கொண்டிருக்கும். அதுபோலக் கீழ் மக்கள் கேடு கண்கூடாகத் தெரிந்தாலும் அறிய மாட்டார்கள் என்று[10] கீழ் மக்கள் இயல்பு தெளிவாக்கப்படுகிறது. புலால் நாற்றமும் ஒரு நீதிக்கருத்தை விளக்க எடுத்துக்காட்டு உவமையாகிறது. மறைவில் நடந்த செயலால் வரும் பழிச்சொல் எங்கும் ஓடிப் பரக்கும்; கழிமுடைப் புன்புலால் நாற்றத்தைப் புறம் பொதிந்து மூடினாலும் தூரத்தில் உள்ளோர் முகத்திலும் சென்று தாக்கும் என்கிறார்[11]. மீன் கண்ணுக்கு உவமையாகிறது[12]. காமனுடைய மீன் கொடி போல் அம்மையின் மீன்கொடி விளங்குகிறது[13]. மதுரையில் மீன்கள் திக்கெட்டும் பாய்ந்து விளங்குதல் அம்மை திக்குவிசயம் கொண்ட நாளில் எட்டுத்திக்கிலும் மீன்கொடி எடுத்தாற்போல் உள்ளது[14].

---

1. 397
2. 61, சிவ. இ. 8
3. 1:107
4. 80
5. 581
6. 340
7. 494
8. 699
9. 182
10. 239
11. 300
12. 29, 61, 116, 381, 540
13. 23
14. 56

கலைப்பொருள்கள், நிகழ்ச்சிகள்

யானையின் அடி துடிபோல்வது எனப்படுகிறது.[1] துர்க்கையின் நுசுப்புக்குத் துடி உவமையாகக் கூறப்படுகிறது.[2] அம்மையின் இசை குழலிசை போன்றதாகும்.[3] காசியில் இறப்போர் அங்குச் சாரூபம் பெற்று முத்திமகளை மணக்கும் நாளில் கங்கையில் விளங்கும் அலைகள் முரசு, குடமுழவு போல் ஒலிக்கும் எனப்படுகிறது.[4] சிவனிடம் இருக்கும் துடி முழவுபோல் ஓசை முதிரும்துடி எனப்படுகிறது.[5] பறையறைந்தாற்போல் மறைவழிப்பட்ட பழிமொழி பரவும் என்கிறார்.[6] இந்திரசால வித்தை புரிபவன் காண்பவர் அனைவரையும் மயக்கும் தந்திரத்தில் தான் சாராது சார்வதுபோல் முருகன் கருவின்றி நின்ற கருவாகவும் உருவின்றிநின்ற அருள் உருவாகவும் இலங்குதல் விளக்கப்படுகிறது.[7] இறைவனியல்பு இவ்வாறு கலைநிகழ்ச்சிபுரிவோன் இயல்பால் தெளிவாக்கப்படுகிறது. கழைக்கூத்து நிகழ்ச்சியை அடிகள் இரண்டு இடங்களில் விரிவான உவமையாக்கியுள்ளார். வடம் கட்டப்பெற்ற நெடுங்கம்பத்தில் பெண் ஒருத்தி ஆட, அருகில் உள்ளோர் முரசினைத் தாங்கி முழக்க, கூன்கழைக்கூத்தன் குடத்தைத் தலையில் வைத்துக் கொண்டு வடத்தில் நடக்கின்றான். இந்தநிகழ்ச்சிபோலக் கமலைச்சோலையில் குலைக்கமுகில் மயில் ஒன்று ஆட, மந்திகள் கையில் பலாப்பழம் தூக்கி நிற்க, ஒரு குரங்கு பலாப்பழத்தை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு, கமுகையும் வாழையையும் இணைத்துப் படர்ந்திருந்த முல்லைக் கொடியில் நடக்கிறது என்று விளக்குகிறார் அடிகள்.[8] இதேபோன்று காசிவளம் கூறும் முறையில் கழைக்கூத்து நிகழ்ச்சி உவமையாக்கப்படுகிறது.[9] சோலை வளத்தை விளக்க இத்தகைய உவமையை அடிகள் கையாண்டுள்மை குறிக்கத்தகும். கழைக்கூத்து நிகழ்ச்சி காண்பார்க்கு வியப்பும், மகிழ்ச்சியும் தருதல்போல் வளக்காட்சியும் வியப்பும் மகிழ்ச்சியும் தரும் என்ற பொருத்தமும் உணரத்தகும். தேவர்களுக்குச் சித்திரத்தை உவமையாக்கும் திறம் காண்கிறோம். தேவர்கள் தம்மைச் சரணடைந்தவர்களுக்கு உதவி செய்திலர்; ஆயின் தம்மிடம்

---

1. 2
2. 11
3. 80
4. 698
5. 401
6. 300
7. 1: 8-9
8. 348
9. 656

சரணடைந்தோரைப் பாதுகாக்கும் அபயவரதங்களை உடைய கையராகக் காட்சி தருகின்றனர்; எனவே சித்திரத்துக்குச் செயலில்லை ஆதல் போல அவர்களுடைய அபயவரதத் தோற்றத்துக்கும் பயனில்லை என்பது தோன்றச் சித்திரம் போன்றவர்கள் என்கிறார் அடிகள்.[1] சிவபெருமானே துன்பம் போக்கி அருளும் அபயவரதத்தர் என்பதை இவ்வகையில் அடிகள் நன்கு உணரச் செய்கிறார். இவ்வாறு கலைப் பொருள்களும் நிகழ்ச்சிகளும் உவமையாகின்றன.

அணிமணிகள் முதலியன

அணிகலன்களாக விளங்கும் பொன், வெள்ளி, முத்து, மணி, பவளம், மரகதம் முதலியனவும் ஆடை, உணவுப்பொருள் முதலியனவும் உவமைகளாக ஆளப்படுகின்றன. பலாச்சுளை பொன்போல் விளங்குகிறது என்கிறார்.[2] ஒரு தலைவியின் வண்ணம் பொன்வண்ணம் எனப்படுகிறது.[3] கொன்றைத்தாதாடிய வண்டு பொன்திரண்டதென விளங்குகிறது.[4] சிவனுடைய சடை பொன்வீழன்னதாக உள்ளது; விரிநிலாப்பரப்பு வெள்ளி வீழன்னதாக உள்ளது.[5] அம்மையின் நகையை விளக்கும் போது 'தரளநகை 'என்று முத்து உவமையாக்கப்படுகிறது.[6] அம்மை ஆடும் அம்மானை முத்துக்களால் இழைத்த எறிபந்தின் வரிசைபோல் தோன்றும்.[7] மகளிர் நகைக்கு ஒப்பாகக் கங்கைக் கரையில் முத்துக்கள் குவிந்து கிடக்கின்றன.[8] முத்துநிரைத்த குறுநகை மகளிர் எனப்படுகின்றனர்.[9] முற்றிலும் மணிகளால் அமைந்த அணிகலனுக்கு வேறு அணி வேண்டுவதில்லை; அது போல் கற்றார்க்குக் கல்வி நலனே கலனல்லால் மற்றோர் அணிகலம் வேண்டுவதில்லை என்கிறார்.[10] மதுரை வயல் வளம் கூறும்போது நெற்குலை மணிக்கொத்துத் தொங்குதல் போல் விளங்குவதாகக் கூறப்படுகிறது.[11] சிவன், பவளவனம்போல் அடர்ந்த பல்சடைக் காட்டினன் என்கிறார்.[12] பவளம் போல் சிவந்த வாய் என்று மகளிர்க்குத் கூறப்படுகிறது.[13] கமலை வளம் கூறுகையில், மலரோடைகளில் தாமரை இலைகளுக்கிடையே தாமரை மலர்கள் பூத்துள்ள காட்சி விரிகதிர் பரப்பும் மரகதத் தகட்டில் சுடர்விடும் செம்மணி இடையிடையே பதித்தாற்போல உள்ளது எனப்படுகிறது.[14] கையிலுள்ள செல்வத்தை மதியாமல் போக விட்டு எய்த்துப் பொருள் ஈட்டமுயலுதல் போல்வது கற்றவற்றை ஓம்பாமல் மேலும் சில கற்கப்புகுதல் என்று உரைக்கப்படுகிறது.[15]

---

1. 541
2. 97
3. 116
4. 652
5. 699
6. 4, சிவ.இ.
7. 74
8. 612
9. 686
10. 218
11. 60
12. 4
13. 662
14. 566
15. 214

மீனாட்சிக்குரிய தென்பொதியமலை வெண் மேகமும் பனியும் மூடி விளங்குதல் அழகிய துகில் மூடியது போல் உள்ளது.[1] முனிவர் வேள்வியிற் பிறந்த யானை முருகன் மெய்க்கு இட்ட சட்டையைப் போல் மேகங்கள் விளங்குகின்றன.[2] அம்மையின் குதலைமொழி கற்கண்டு போல்வதாகக் கூறப்படுகிறது.[3] அம்மையின் தடமுலைப்பால் ஒழுகி வழிவது போல முருகனுக்கு மணிமுறுவல் நிலவு காலுகிறது.[4] அன்னத்தின் சிறகு பால்போல் உள்ளது.[4அ] நறுநெய்க்குள் முழுகி எழுவதை ஒத்து மதச்சுவடு உடைய யானையாகிய விநாயகர் விளங்குதல் கூறப்படுகிறது.[5] மதுக்குடம் உடைந்தாங்கு திருமாலின் தண்துழாய் மாலையில் பிரசம் வழிதல் கூறப்படுகிறது.[6] அம்மை அமுதம் போன்ற மொழியுடையவள் என்று உணர்த்துகிறார்.[7] ஒரு தலைவிக்குப் பிறைமதி நஞ்சுபோல் உள்ளது.[8]

படைக்கருவிகள் முதலியன

பிறைமதி அங்குசப்படை போல் இருப்பதாகக் கூறப்படுகிறது.[9] மகளிர்க்கு வாள் போலும் கண் எனப்படுகிறது.[10] அம்மையின் கண், 'வாட்டடங்கண்' என்றும் 'அரம் தந்த வாள்விழி' என்றும் கூறப்படுகிறது.[11] கண்ணின் அகற்சியும், கூர்மையும், ஒளியும் உவமையால் தெளிவாக்கப்படுகின்றன. தலைவி ஒருத்தியின் புருவம் மன்மதனுடைய வில்போல் உள்ளதெனப்படுகிறது.[12] சுடிகை நுதலும் வில் போல்வது; வேல்போல்வது கண்.[13] கண்ணுக்கு அம்பும் உவமையாக ஆளப்படுகிறது.[14] 'அரசாட்சி ஒருவனுக்குப் புண்ணிய வசத்தால் வந்தாலும், தண்ணளியோடு மக்களை ஓம்பாதார்க்கு வாய்ப்பின் அதனால் ஒரு பயனும் இல்லை; ஆணல்லாத பேடியின் கையில் படைக்கலங்கள் இருப்பதால் ஒரு பயனும் இல்லை.' என்று எடுத்துக்காட்டு உவமையாக அரசாட்சி நிலை விளக்கப்படுகிறது.[15] ஒரு பொருளைப் பெற்றும் அது பயன்படாமையை விளக்குவதற்கு இவ்வுவமையைத் திருவள்ளுவரும் ஆண்டிருத்தல் கருதத்தகும்.[16] அம்மை அம்மானை ஆடும்போது வண்டுகள் எழப் பொழில் பூந்தாது எங்கும் நிறைந்து இருள் செய்தமை, அம்மை படையெடுத்துச் செல்லும்போது எழும் சேனாபராகம் என்று கருதி அஞ்சப்படுகிறது.[16அ] 'கருந்தாது கடுத்த படர்மருப்பு எருமை' என்று இரும்பு எருமையின்

1. மீ.கு. 31
2. 362
3. 64
4. 449 அ. 636
5. 198
6. 566
7. 663
8. 309
9. 57
10. 514
11. 420, 322
12. 177
13. 540
14. 514
15. 233
16. குறள் 614, 727 16 அ. 78

கொம்புக்கு உவமிக்கப்படுகிறது.[1] ஒற்றர் பலர் கூறிய மாறாத வாய்ச்சொல் உறுதியாகக் கொள்ளப்படுதல் போல, வீரர்கள் விரிச்சிகேட்கும் சொல்லையும் உறுதியாகக் கொண்டு வினை மேற் செல்லுதல் சுட்டப்படுகிறது.[2]

அம்மானை விளையாடலும் உவமையாகக் கருதப்படுகிறது. இறைவன் முடிதுளக்க, முடியில் உள்ள கங்கை நுரை பொங்குதல், கங்கை மகள் அம்மானை ஆடுதல் போல் உள்ளதெனப்படுகிறது.[3] கட்குடம் உடைந்தாற்போல் பலாக்கனி உடைந்து தேன் ஒழுகுகிறது.[4] கொங்கை, பலாக்கனி இவை குடம்போல் இருப்பவையாகக் கூறப்படுகின்றன.[5] குடம் என்பது கும்பம் என்றும் வழங்கும். 'கும்பப்புணர்முலை'[6] என்றும் 'கும்பப்படாமுலை'[7] என்றும் 'கும்பமுலை'[8] என்றும் மார்புக்கு உவமையாகக் கூறுதலை அறிகின்றோம். இவ்வாறு முதல், கரு ஆகிய இயற்கைப் பொருள்களுள் அடங்கும் பல பொருள்களும் அடிகளால் உவமைகளாகக் கையாளப்பட்டு உரிய பொருள்கள் சிறப்பாக விளக்கப்படுகின்றன.

நுண்பொருள் உவமைகள்

நுட்பமான பொருள்களையும் அடிகள் நயஞ்சான்ற இனிய உவமைகளாக ஆள்கிறேனர். அம்மைக்குப் பொய்வந்த நுண்ணிடை நுடங்குவதாக அறிவிக்கிறார்.[9] பொய்யின் தன்மையைப் பெற்றுள்ள இடை என்று நுட்பமாக உவமித்தலின் விளைவாகப் பிறிதோரிடத்திலும் 'ஈயா மாக்கள் தீமொழி கவர்ந்த சிற்றிடை' எனக் காண்கிறோம்.[10] தலைவியின் நலம் கூறும் தலைவன் 'என்வண்ணம் மின்வண்ணமே இடை' என்று தலைவியின் இடைக்கு உவமை கூறுகிறான்.[11] அவன் தலைவிபாற் கொண்ட காதலால் மெலிந்துள்ள நிலையில் அவனைப் போலவும் மின்னலைப் போலவும் விளங்கும் இடை என்னும் நுட்பம் அறியத்தகும். உயிர்களிடம் விளங்கும் வெகுளி, சோர்வு, இயல்பு என்றும் முக்குணங்களையும் மூன்று நிறங்களாகக் கூறும் மரபையொட்டி உவமைகளாக ஆளக் காண்கிறோம். அம்மை

---

1. 324
2. 472
3. 79
4. 52
5. 86, 349, 97, 381, 383
6. 350
7. 400
8. 420
9. 35
10. 569
11. 116

அம்மானை ஆடுங்கால் அவளது கைச் சிவப்பால் அம்மானை சிவந்து விளங்குதல் உயிரின் வெகுளிக் குணத்தைப் போல் உள்ளது; அவளது கருணைக்கண் படுதலால் அம்மானை கறுப்பூறி விளங்குதல் உயிரைப்பற்றும் சோர்வுக் குணம் போலுள்ளது; அவளது வெண்ணகையால் அம்மானை வெண்மையுற்றுத் திகழ்தல் உயிரைப் பற்றும் இயல்புக் குணம் போல் உள்ளது.[1] கீழ்நிலையிலுள்ளவர்கள் தவறினால் உய்யலாம்; மேல் நிலையில் உள்ளவர்கள் தவறினால் உய்ய முடியாது என்பதை, நொய்ய பொருள் வீழ்ந்தால் உய்யும், கனத்த பொருள் வீழ்ந்தால் அழியும் என்பதால் உணர்த்துகிறார்.[2] மீனாட்சி அம்மை திருவருள் சுரந்து பொழிவதெனப் பொதியமலையில் பொங்கருவி பொழிவதாகக் காட்டப்படுகிறது.[3] நுட்பமாக அருட்டன்மை இங்கு அருவியாகிய பருப்பொருளின் பொழிவுக்கு உவமையாக்கப்பட்டு அருளின் இயல்பும் புலனாக்கப்படுகிறது. நெருப்பில் புகை போலவும், பொருள்களில் நிழல் போலவும் கூற்றுவன் நம்மை எப்பொழுதும் தொடர்ந்து நிற்பதை விளக்குகிறார்.[4] சோலை இருள் சூழ்ந்திருப்பதை மனத்தின் இயல்பால் விளக்குகிறார். பற்றினைத் தவிராத மனம் நிகர்ப்ப, மாயிரும் பொழில் பாயிருள் பரந்துள்ள தென்கிறார்.[5] மனத்தைப் பற்றியுள்ள நுண்ணிய மலவிருள் இங்கு உவமையாக விளங்குகிறது. முருகனுடைய முக மண்டலம் பாசவிருள் துரந்து பல்கதிர்போல் சோதிவிடும் இயல்பினது எனப்படகிறது.[6] சோதி இளம்பருதி நூறாயிரங்கோடி போல வளந்தரு தெய்வீக வடிவுடையவன் முருகன் என்றும் கூறுகிறார் அடிகள்.[7] மகளிர் கூந்தல் மைபோல்வது என்று நிறம்பற்றிய உவமை கூறப்படுகிறது.[8] கங்குலும் பகலும் கலந்தினிதிருந்தாங்கு இடமும் வலமும் இறைவியும் இறைவனும் விளங்குவதாகக் கூறக் காண்கிறோம்.[9] இரவும் பகலும் ஒருபுடைக்கிடத்தல் போல் களிற்றுரியும், சிங்க உரியும் சிவன் தோளில் உடன் கிடக்கின்றன.[10] இவ்வாறு ஒளியும் இருளும் உவமைகளாகின்றன.

---

1. 76
2. 301
3. மீ.குறம். 13
4. 530
5. 578; 1-2
6. 1 : 45
7. 1 : 56-57
8. 175
9. 312
10. 328

அடிகள் பயன்படுத்தும் சிறப்பு உவமைகள்

சிவனுடைய தோற்றத்தை விளக்கும்போது பொருத்தம் வாய்ந்த தொடர்புடைய பொருள்களை உவமைகளாக அடிகள் ஆள்கின்றனர். மேகத்தை ஒத்த கண்டத்தை உடைய கண்ணுதலார்க்குச் சடைக்காடு கஞ்சவனம் ஒக்கும்; கங்கை அவ்வனத்தில் குடி கொண்டு வாழும் வெள்ளை அன்னம் ஒக்கும்; அருகிலுள்ள அம்புலி வெண்சங்கு ஒக்கும்.[1] தாமரை, அன்னம், சங்கு ஆகியவை தொடர்புடைய பொருள்களாக அமைந்து முறையே சடை, கங்கை, அம்புலி ஆகிய தொடர்புடைய பொருள்களை விளக்குதல் குறிக்கத்தகும். பொன் உருக்கன்ன பூந்துணர்க் கொன்றையும், வெள்ளி முளை அன்ன விரிநிலாக் கொழுந்தும், காந்தள் மலர்ந்தன்ன பாம்பு நிரையும், கங்கையில் வெள்ளிதழ்க் கமலம் வாய்விரித்தென முகிழ் நகை முகிழ்க்கும் கழிமுடை வெண்டலையும் உடைய சிவனை விளக்கும் அடிகள் ஒளிகாலும் தொடர்புடைய பொருள்களை உவமைகளாக அமைத்துள்ளார்.[2] தனக்குத்தானே ஒப்பாக விளங்கும் சிவனுடைய சடை எரிஒக்கும்; கொன்றை எரியிலிட்ட பொன்னொக்கும்; வண்டு கரியொக்கும்; கங்கை அணிகலம் செய்விப்பவளை ஒக்கும்; வெண்பிறை பொன் செய்யும் கிழக்கொல்லனை ஒக்கும்.[3] இவ்வாறு சிவனது தலைத்தோற்றம் பொருத்தமாகவும் தொடர்ச்சியாகவும் விளக்கப்படுகிறது. சிரமாலை வைத்த கமலேசர் வேணி, முகிழ்நகை வெண்டலைவைத்த தினைப்புனம் ஒக்கும்; கங்கை அத்தண்புனத்தில் காவலுக்கு வைத்த குறமகளை ஒக்கும்; நீள்பிறை அவள் வைத்துள்ள கவண் ஒக்கும்.[4] இவ்வாறு சிவனுடைய தோற்றத்தை முழுமையாக விளக்கும் முறையில் பல உவமைகளைத் தொடர்புடைய பொருள்களால் அமைத்துள்ளமை அடிகளின் சிறப்பாகக் குறிக்கத்தகும்.

நீதிகளை வலியுறுத்த அடிகள் பல சிறப்பான உவமைகளை ஆண்டுள்ளனர். இனியவர் என்சொலினும் இன்சொல்லே; இன்னார் கனி மொழியும் கடுவே; அனல்வீசும் வெங்காரம் வெப்பமுடையதாயினும் நோய்தீர்க்கும்; சிங்கி (நஞ்சு) மெய்யில் புளகம் தோன்றும்படி குளிர்ந்ததாயிலும் கொன்றுவிடும்.[5] இனியவர் கூறும்

---

1. 462
2. 636
3. 346
4. 334
5. 264

கடுமொழிக்கு வெங்காரத்தையும் இன்னார் கூறும் கனிமொழிக்குச் சிங்கியையும் உவமைகளாகக் கூறியுள்ளமை உணரத்தகும். பயன் உவமைகளாக இவை விளங்குகின்றன. புண்ணைப்பொதிந்து மூடிவைக்காமல் கருவியினால் அறுத்து வெளிப்படுத்தி ஆற்றுதல் போல், புறம் நட்டு அகம் வேர்க்கும் உட்பகைவர்களை அவர்தம் பகைமையை வெளிப்படுத்தி விலகிவிட வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.[1] விறகுவரவர வாய்மடுத்து எரியும் தழலும் மாயாமல் இருப்பதில்லை; அதுபோலப் பேராசையுடையவர்க்கு ஆக்கம் அரிதாகும்.[2] தன்னால் முடியாததைச் செய்து முடிப்பதாகக் கூறும் இயல்பு, செயிர்த்துரைப்பின் நெஞ்சு நோகும் என்று தலையை வெட்டுகின்ற செயல் போல்வதாகும் என்கிறார்.[3] முடியாதென்றால் மனம் நோகும் என்று முடிப்பதாகக் கூறுதல், பிறரிடம் சென்றும் பயன் பெற முயலாமல் தடுத்துக் கேடுவிளைப்பதால் தலையை வெட்டுதற்கு ஒப்பாகும் என்பது நகைச்சுவையும் அறிவு நுட்பமும் வாய்ந்து விளங்குகிறது.

அம்மையின் அருளையும் தனது நிலையையும் அடிகள் உருக்கமாக ஏற்ற உவமைகள் மூலம் புலப்படுத்துகிறார். குழந்தையின் பசுங்குடர் பொறாது என்று நோய்தீர்க்கும் மருந்தைத் தான் உண்டு அதன் பயனைப் பாலின் வழியாகக் குழந்தை பெறும்படிச் செய்யும் தாயைப் போல, அம்மை இறைவன் திருநடனத்தைக் கண்டு அதன் பயனை உயிர்கள் பெறுமாறு செய்கிறாள் என்கிறார்.[4] மருந்தை விருப்பத்தோடு உண்டாலும் அருவருப்போடு உண்டாலும் அவ்விருதிறத்தார்க்கும் நோயினைப் போக்குதல் போல மெய்யன் பில்லாத தனக்கும், திருநடனம் கண்டதால் இறைவன் திருவடிப்பேறு வழங்குதலே முறையாகும் என்கிறார்.[5] வாழைத் தண்டில் தீயினைப் பற்றச் செய்தாற்போலச் சிறிதும் தகுதியில்லாத தமக்கும் இறைவன் அருள வேண்டுகிறார்.[6] இறைவன் பேரருட்பிழம்பாதலின் தம்மை எப்படியும் பற்றிக் கொள்ளுதல் வேண்டும் என்பதை இவ்வாறு உணர்த்துகிறார். இவற்றை அடிகள் காட்டும் சிறப்புவமைகளாகக் குறிப்பிடலாம்.

---

1. 261
2. 269
3. 276
4. 451 : 14 - 21
5. 451 : 69-83
6. 501:30 -44

அடிகள் உவமைகளில் அரிய உத்திகள்

உவமைப் பொருத்தத்தைக் கூறும் உத்திகள் பல வகைப் படலாம். புலவர்களுடைய கற்பனை ஆற்றலையும் அறிவு நுட்பத்தையும் பொறுத்துப் புதுப்புது உத்திகள் அமைய வாய்ப்புண்டு. அடிகள் அமைத்துள்ள உவமைகளில் காணலாகும் சிறப்பு உத்திகள் சில குறிக்கத்தகும்.

சில கருத்துக்களைக்கூறி அவற்றுக்கு உவமை கூறும் முறையில் அக்கருத்துக்கள் உணர்த்தும் உண்மைகளைத் தெளிவாக்குதல் அடிகளின் உத்தியாகும். அறிவிற்பெரியவர்கள் சிறியவர்களிடம் மீதூர்ந்த ஒழுக்கத்தைக்காணின், தாங்கள் மிகவும் பணிவாக நடந்து கொள்வர்; தராசில் கனமில்லாத மெலிய தட்டு மேலே எழும், கனமுள்ள வலியதட்டுத் தாழும்.[1] சிறியோர் மேலிருப்பவராகவும் பெரியோர் தாழ்ந்து இருப்பவராகவும் காணப்பட்டாலும் உண்மை மறுதலையானது என்பதை உவமை விளக்கி நிற்கிறது. மீதூர்ந்த செலவினராகிய சிறியோர் கனமில்லாத மெலிய தட்டுப்போலவும், தாழும் பெரியோர் கனமுடைய வலிய தட்டுப் போலவும் உணர்த்தப்படுவதால் பெரியோரின் தாழ்வே உயர்வினையும் தகுதியையும் உடையதென்றும், சிறியோரின் உயர்வே தாழ்ந்த தகுதியற்ற நிலையை உடையதென்றும் தெளிவாகும். உவமைப் பொருளின் தகுதியை விளக்கிக் கூறுவதன் மூலம் இங்குக்கூறவந்த கருத்தின் உண்மைநிலை விளக்கப்பட்டிருத்தல் குறிக்கத்தகும். தகுதியற்றோர் மேலிருந்தும் மேலானவராகார்; தகுதியுடையோர் கீழிருப்பினும் கீழானவராகார் என்ற திருக்குறள் கருத்து இங்கு உண்மை விளக்கத்துக்கு ஒப்பு நோக்கத்தகும்.[2]

பொருந்திய உவமைத் தன்மையிலிருந்து பொருளின் உண்மைத் தன்மை மேலும் தெளிவாக்கப்படும் முறையிலும் அடிகள் உவமை அமைக்கக் காண்கிறோம். மா. பறவை முதலியவை பொம்மை உருவத்தைக் கண்டு அஞ்சும். அதுபோல் அறிவற்ற

---

1. 220
2. குறள் 973

சிலருடைய வலிய உருவம் கண்டு மக்கள் அஞ்சுவர், அறிவற்ற அவர்கள் கற்றோர் கழகத்தில் நாவடக்கம் இன்றி ஊத்தை வாய் திறந்து பேசுதல், புல்லுருவை மாபறவை அஞ்சுதல் போல் தம் வல்லுருக் கண்டு அஞ்சாதீர்கள் என்று அறிவிப்பதாகும் என்கிறார்.[1] இதில் புல்லுருவம் உயிரற்றதாய் அஞ்சவேண்டாததாய் இருப்பவும் பகுத்தறிவற்ற மாபறவை அஞ்சுதலும், வல்லுருவம் உடைய அவர் நாவடக்கமின்றிப் பேசுவதால் தம் அறியாமையைத் தாமே வெளிப்படுத்தித் தம்மைக் கண்டு அஞ்சியோரை அவ்வாறு அஞ்சத் தேவையில்லை என்று உணர்த்துதலும் தெளிவாகும். புல்லுருவைப் போல்வதே அறியாமை தோன்றச் சொல்லாடுவோர் வல்லுரு என்பது இவ்வகையில் நன்கு வலியுறுத்தப்படுகிறது.

பொருளின் இயல்பை, உவமைப் பொருளின் இயல்பாகவே கருதி உவமைப்பொருளோடு தொடர்புடைய விளைவுகள் தோன்றுவதாகக் கூறும் உத்தியும் அடிகளிடம் காணப்படுகிறது. இதனை 'உவமைவிளைவு கூறும் உத்தி' எனலாம். முருகன் சிறுபறை முழக்கும் ஒலி-மழைமுகில் முழக்கமென மயிலினங்கள் அகவவும், பெரிய கடலோசை எனப் பிரிந்து துன்புறும் மடந்தையர் மனம் நெகிழவும், பழமறை ஆர்ப்புஎனத் தேவர்கள் உள்ளம் மகிழவும், பரநாதத்து ஒலியென அனுபூதி பலித்தவர்கள் நெக்குருகவும், சிவன் நடம் செய்ய ஆயிரம் கையுடைய வாணாசுரன் துவைத்திடும் குடமுழவொலியென்றும் திருமால் கொட்டும் முழவெனவும் அமரரும் முனிவரும் ஆர்ப்பவும் சிறுபறை முழக்குமாறு வேண்டுகிறார்.[2] இம்முறையில் பிறிதொருபாடலும் அமைந்துள்ளது.[3] இவற்றில் உவமைகளாகக் கூறப்படும் ஒலிகளினால் தொடரும் விளைவுகள் இடம் பெற்றிருத்தல் உணரத்தகும். மழகளிறாகிய விநாயகர் மேகக்குழாத்தைக் கண்டு வேழக் குழாம் என்று கருதி அவற்றோடு முட்டி விளையாடுவதாகக் கூறுதலும் காணப்படுகிறது.[4] இதில் மேகம் வேழத்தின் வடிவில் விளங்குவதால் வேழமென்றே கருதுவதன் விளைவாக முட்டி விளையாடுதல் கூறப்பட்டுள்ளது. பன்றிக்கொம்பு பிறை போன்றிருத்தலின் அதைக் கண்டு கொன்றை மலர்ந்தது[5] என்பதும், ஒளிமிக்க முத்துக்களை அன்னங்களும் சில பறவைகளும்

---

1. 228
2. 435
3. 437
4. 75
5. 328

முட்டை என்று கருதிச் சினையொடு அணைத்துத் துயில்கின்றன.[1] என்பதும் இந்த உத்தி முறையில் அமைந்துள்ள உவமைகளாகும். இவ்வகையில் வேறு சில பாடல்களும் நோக்கத்தகும்.[2]

உவமையாகக் கூறப்படும் பொருள்கள் விளக்கப்படும் பொருள்களுக்குத் தோல்வியுற்றன என்று கூறும் உத்தியிலும் அடிகள் விளக்குகிறார். இவற்றைத் 'தோல்வி உவமை உத்தி' எனலாம். மீனாட்சி அம்மையின் குழற்கோதைக்கு உடைந்த கொண்டல், குதலைக்கிளி மொழிக் குடைந்த கரும்பு, சீறடிக்கு உடைந்த செந்தாமரை, பசுங்கழுத்துக்குடைந்த சங்கும் கமுகும், தடந்தோளுக்குடைந்த மூங்கில், பணைமென் முலைக்குடைந்த யானைத்தந்தம் என்பன இவ்வகையில் அமைக்கப்பட்டுளளன.[3]அன்னம் அம்மையின் அசையும் மடநடை கற்கும் பொருட்டுப் பின் செல்வதாக உணர்த்துவது இவ்வுத்தியின் பாற்படுவதேயாகும்.[4] இறைவனால் மேருமலை வளைக்கப்பட்ட நிலையில் அது, இறைவன் தோளழகிற்குத் தோற்று முடிவணக்கினாற் போல வளைந்திருப்பதாகக் கூறக் காண்கிறோம்.[5] நிலையாமையில் நீர்க்குமிழியும் உவமையாகாமல் தோல்வியுறும்படி நிலைஎய்தாப் புலையுடம்பு என்பதும் இம்முறையில் அமைந்ததாகும்.[6]

சூழலுக்கேற்பச் சில பொருள்களை வேறு பொருள்களாக அழைத்து உவமையாக ஆளுதலும் ஓர் உத்தியாகும். மீனாட்சி அம்மை போர்புரிந்து எண்திசையும் தனக்குரியதாகக் கொண்டபோது குலாசலங்கள் எட்டையும் தன் ஆட்சிக்குரிய நிலத்திற்கு எல்லைக்கல்லாக நிறுத்தினாள்; வடநாட்டில் உள்ள கடற்றுறையைத் தென்குமரித் துறையெனக் கொண்டு நீராடினாள்.[7] இங்குக் குலாசலம் எட்டும் வெற்றிச்சூழலுக்கேற்ப எல்லைக்கல்லென உவமிக்கப்படுகின்றன. பகை இடத்தைத் தனதாக்கிக் கொண்டமையின் தனது பழகிய தென்குமரித்துறை போல வடக்கே உள்ள கடற்றுறையையும் கருதி நீராடியதாகக் கூறப்படுகிறது.

பொருளை விளக்குவதற்காக உவமை கையாளப்படுகிறது என்பது மரபு என்றாலும், உவமையாக அமைக்கும் கருத்தை

1. 603, 697
2. 546, 613, 673
3. 46
4. 54
5. 672
6. 548
7. 40

முதன்மையாக உணர்த்தும் நோக்கில் கையாளுதலும் உண்டு. அம்மையில் முத்து அம்மானை அவடன் நகை ஒளியால் இயல்பான வெண்மையாகவும், கைச்சிவப்பால் செம்மணியில் செய்ததெனவும், கட்கறுப்பால் கருமணியில் செய்ததெனவும் சிலர் கூறுகின்றனர். இவ்வாறு அவரவர் தத்தம் கருத்துக்கேற்பக் கூறுதல், புறச்சமயத்தவர் தத்தம் கருத்தே சிறந்ததென்று கூறுவதுபோல் உள்ளது என்கிறார்.[1] இதில் புறச் சமயத்தவர் இயல்பை உணர்த்தும் உவமையின் கருத்தே அடிகளால் முதன்மையாகக் கருதப்பட்டது எனலாம். இவ்வாறு புறச்சமயத்தவர் இயல்பை உணர்த்தும் உவமைகள் இரண்டு காணப்படுகின்றன.[2]

உவமைப்பொருள்கள் பொருள்களோடு உறவுகொண்டு விளங்குவதாக அமைக்கும் உத்தியும் காணப்படுகிறது. அம்மை நீராடும்போது அவளது கைச்சங்கு வளையலோடு நீர் அலைச்சங்கு ஒலிடுகிறது; அவளது மதராரிக்கட்கயல் வரிக்கயல் மீனொடும் புரள்கிறது; அவளது கேசபாரத்தினோடு சைவலக்கொத்துக் கலந்து எழுகிறது; இந்நிலை புதிய விருந்தினர்களைக் கேளிர் தழுவிக் கொள்தல் போல் உள்ளது என்கிறார்.[3] இதில் உவமையும் பொருளும் கேளிர்போல் உறவுகொண்டு தழுவி விளங்கும் நிலை காட்டப்படுகிறது. இங்கு 'வளைச்சங்கோடு திரைச்சங்கு' என்றும் 'கேசபாரத்தினொடு சைவலக்கொத்து' என்றும் கூறியிருத்தற்கேற்பக் 'கட்கயலொடு வரிக்கயல்' என்று வாராமல் 'வரிக்கயலொடு கட்கயல்' என்று மாறி வந்துள்ளமை காண்கிறோம். இதில் விருந்திடுவன நீர்ப்பொருள்கள்; விருந்து ஏற்பன அம்மையின் உறுப்புக்கள். எனவே அம்மையின் சிறப்புத் தோன்ற 'ஒடு' உருபு அம்மையின் உறுப்புக்களுக்கு அமைத்தல் தக்கதாகும். ஆயின் கண்ணுக்கு மட்டும் 'ஒடு' உருபு சேர்க்கப்படாமல் கயலுக்குச் சேர்க்கப்பட்டுள்ளது. கண்ணைப்பொறுத்தவரை விருந்து கொடுப்பதாகவும், நீர்க்கயல் விருந்தேற்பதாகவும் அடிகள் கருதினர் என்று கருதலாம். அன்றியும் கைச்சங்கும் கேசபாரமும் பார்க்கும் ஆற்றலற்றனவாதலால் பார்க்கும் ஆற்றல் உடைய உறுப்பாகிய கண்

---

1. 82
2. 405, 406,
3. 84

நீர்நிலையில் விளங்கும் பிறகயல்களைக் கண்டு அவற்றோடு புரள்கிறது என்று கூறியுள்ளார் என்றும் கருத இடமுண்டு.

உவமைப்பொருளே தான் தோற்றதாகக் கூறும் உத்தியில் அடிகள் ஓர் உவமைக் கற்பனையை அமைத்துள்ளார். கள்ளுண்ட மயக்கத்தால் மகளிர் மதியைத் தேனிறால் என்று கருதி விரும்ப, ஆடவர் அதைப்பிடித்துப் பிழியத் தொடங்கவும் அந்தமதி, மகளிர் முகத்துக்கு நான் ஒப்பென்று கூறவில்லை, என்னை விட்டுவிடுங்கள் என்று உயிர் பிழைத்ததாகக் கூறுகிறார்.[1] இஃது அரிய உவமைக் காட்சியாக விளங்குகிறது. ஒரு பொருளுக்கு அப்பொருளையே உவமையாகக் கூறுதலும் ஓர் உத்தியாகும். 'தன்னொக்கும் கமலைப்பிரான்'[2] என்றும் 'தன்போல் காமன்'[3] என்றும் ஆளுதல் காண்கிறோம். ஒருபொருளுக்கு அப்பொருளுக்குள்ளேயே உவமை அமைத்தலும் உண்டு. இவ்வகையில் தலைவியின் மனத்துக்கு அவள் இடையே உவமையாகிறது. இறைவனால் அருளப்பெறாத நிலையில் தலைவி மனம் உடைந்து விளங்குகிறாள்; இஃது அவளது இடை தினம் இடைந்து நொந்தது போல் உள்ளது எனப்படுகிறது.[4] தொடர்புடைய பொருள்களை அவ்வாறே தொடர்புடைய உவமைகளால் விளக்குதல் பிறிதோர் உத்தியாகும். திருப்பாற் கடலில் திருமகள் விளங்குதல் போல் மதுரைப்பொய்கையில் அன்னம் விளங்குகிறது;[5] விண்மீன் பொருந்திய வானம் போல் முத்துப்பதித்த முகபடாம் விளங்குகிறது;[6] மணவாளனாகிய இறைவன் மீது அம்மை மணப்பந்தரில் எடுத்தெறியும் அமுதவெண்திரளை போல் அம்மானை வீசுகிறாள், அமுதவெண்திரளை மீது புரளும் வண்டுகள் போல் அவள் திருவிழிகள் அம்மானைகளின் மீது தொடர்ந்து செல்கின்றன; நிலவில்தாவும் மீனைப் போலவும் அம்மானை மீது அவள் கண் செல்கிறது.[7] இவ்வாறு தொடர்புவமைகளை ஆளுதல் முன்னர்க் காட்டியவற்றுள்ளும் உணரத்தகும்.[8]

ஒரு பொருளுக்குப் பல பொருள்களை உவமையாக ஆளுதல் பொருளின் சிறப்பை உணர்த்தக் கையாளும் உத்தி எனலாம்.

1. 396
2. 346
3. 190
4. 203
5. 24
6. 57
7. 75
8. 462, 636, 346. 334. 452, 494, 539

அம்மையின் சொல்லினிமைக்குக் குழல், தேன், கனி, அமுது ஆகிய பல பொருள்கள் உவமையாக்கப்பட்டுள்ளன.[1] பிடிபோலவும், அன்னப்பெடை போலவும், திருமகள் போலவும், பவளக்கொடி போலவும் அம்மை நீராட வேண்டப்படுகிறாள்.[2] மகரக்குழை, கொலைக்கணை, பிணைமான் ஆகியவை கண்ணுக்கு ஒரு சேர உவமிக்கப்படுகின்றன.[3] உவமைத்தொடர்பாகத் தற்குறிப்பை அமைத்துக் கூறுதலும் காணப்படுகிறது. அம்மை நீராடியபோது தோழியாகிய கலைமகள் நீரில் ஒளிந்து கொண்டாள்; அப்போது அம்மை, அன்னத்தைக் கலைமகள் எனக் கருதி அதனைப் பிடிக்கப் போகிறாள்; இஃது அன்னம் அம்மையில் சிலம்பினொலியையும் நடையையும் கவர்ந்ததற்காகப் பின் தொடர்வது போலுள்ளது எனப்படுகிறது.[4] மகளிர் கமுக மரத்தில் ஊசல் ஆடுகின்றனர்; அவர்கள் கழுத்தின் அழகைக் கவர்ந்து உண்டது என்று கமுகமரத்தின் கழுத்து இறயாத்து ஊசல் ஆடுகின்றனர் என்கிறார் அடிகள்.[5] இவ்வாறு ஒப்புத்தன்மையைக் கவர்ந்ததற்குத் தண்டனை கொடுப்பதாகத் தற்குறிப்பை அமைத்து விளக்குதல் குறிக்கத்தகும்.

உவமை ஆகுபெயராக வழங்கும் மரபு அடிகள் பாடல்களில் மிகுதியும் கையாளப்படுவதாகும். மின்,[6] அமுது,[7] கிள்ளை,[8] பிடி[9] நவ்வி,[10] அன்னம்,[11] மயில்,[12] பசுங்கொடி,[13] பூங்கொம்பு,[14] மரகதம்,[15] கரும்பு,[16] பொன்[17] ஆகியவை பெண்ணைக் குறிக்க உவமை ஆகுபெயர்களாக ஆளப்பட்டுள்ளன. இவற்றுள் பசுங்கொடி, பூங்கொம்பு போன்று தொடர்களாக வருபவற்றை அடையடுத்த ஆகுபெயர் என்றோ அன்மொழித் தொகை என்றோ கொண்டு பெண்ணை உவமையாக உணர்த்தி நிற்கின்றன என்று குறிப்பிடலாம். காளை என்பது ஆணை உணர்த்தி வழங்குகின்றது.[18] பொழியாத புயல் என்று திருமால் கூறப்படுகிறான்.[19] ஒரு கராசலம் என்று விநாயகரை அடிகள் வழங்குகிறார்.[20] இளங்களிறு, கவுத்துவம் ஆகியவை முருகனைக் குறித்து ஆளப்படுகின்றன.[21] பவளமும் குமுதமும் வாயை

---

1. 43
2. 93
3. 42
4. 88
5. 636
6. 4, 165
7. 4, 438
8. 4, 43, 44, 352, 438, 662, 381
9. 4, 43, 45, 11, 375, 62, 63, மீ.கு.14
10. 352, 381, 61
11. 438, 9, 706
12. 31, 42, 55, 702
13. 9, 521
14. 45, 28
15. 351
16. 22, 673, 700
17. 206 : 25
18. 351
19. 415
20. 353
21. 375
22. 149, 382; 14, 352
23. 42, 205, 352

உணர்த்தி நிற்கின்றன.[22] குமிழ் மூக்கை உணர்த்துகிறது.[23] வள்ளை காதுக்கு ஆகி வருகிறது.[1] கயல், வேல், நீலவனம் கண்ணுக்கு ஆகி வருகின்றன.[2] முத்து பல்லை உணர்த்தி நிற்கிறது.[3] சிவன் களிறு எனப்படுகிறான்.[4] குன்றும் யானையும் மார்புக்கும்,[5] பொருப்பு யானைக்கும்,[6] தீ தளிருக்கும்[7] ஆகுபெயர்களாக வழங்குகின்றன. பொல்லாமணி என்று இறைவனை வழங்கக் காண்கிறோம்.[8] இவையனைத்தும் உவமை ஆகுபெயர்களாகவே அமைந்துள்ளன. உவமைகளை மட்டுமே கூறிப் பொருளை உணர்த்தும் முறையில் இவ்வழக்குப் பெரிதும் செல்வாக்குப் பெற்றுள்ளது. இவ்வாறு அமைப்பதைச் 'சொற்பொருள்மாறல்' என்றும் உத்தியாகக் குறிப்பர் டாக்டர் ரா. சீனிவாசன்.[9]

குறிக்கத்தக்க உவமஉருபுகள்

பரவலாகப் பயின்று வழங்கும் உவம உருபுகள் அடிகளால் ஆளப்பட்டிருப்பதோடு, 'பழுத்த,'[10] 'படு,'[11] 'பட்ட,'[12] 'புனை,'[13] 'உற்ற,'[14] 'கணக்கு,'[15] ஆகியனவும் உவம உருபுகளாக ஆளப்பட்டிருத்தல் குறிக்கத்தகும். இவற்றுள் 'கணக்கு' என்பது தற்காலப் பேச்சு வழக்கிலும் உவம உருபாகக் கேட்கப்படுகிறது.

(ஆ) உருவகம்

உவமையும் பொருளும் வேறுபாடு ஒழிவித்து ஒன்று என்று குறிப்பிடுவது உருவகஅணி என்பர்.[16] உவமையையே பொருளாக ஆளும் நிலையினை இது குறிக்கும். 'உவமையின் பயில்வு மிகுதியால் ஒரு சில, உருவகங்கள் ஆகிவிடுகின்றன எனக் கூறலாம். உவமை முதல்நிலை; அதன் முற்றியநிலை உருவகமாகும்[17]' 'உவமைகளைவிட உருவகங்களை ஆற்றல் மிக்கவை எனலாம்.[18]' முற்குறித்த உவம ஆகுபெயர்கள் இவ்வகையில் உருவகங்களாக ஆற்றல் பெற்று விளங்குவன என்று கருதுவதும் தகும். அடிகளின் பாடல்களில் காணலாகும் உருவகங்கள் ஈண்டுக் காணத்தகும்.

---

1. 205
2. 22, 119, 115,
3. 382, 149
4. 205
5. 127, 28; 11
6. 47, 131,
7. 24
8. 549
9. சங்க இலக்கியத்தில் உவமைகள். பக்.103
10. 36
11. 349, 64,
12. 11
13. 503
14. 342
15. 417
16. தண்டி. 36
17. சங்க இலக்கியத்தில் உவமைகள் பக்.5
18. மேற்படி பக். 82

சமய தத்துவ விளக்க உருவகங்கள்

உவமை கூறக் கையாளப்பட்ட பலவகைப் பொருள்களும் உருவகங்களாகவும் ஆளப்படுகின்றன. சமய, தத்துவங்களை விளக்கும் வகையில் பல உருவகங்கள் ஆளப்படுகின்றன. ஆணவமலத்தைக் கட் படலமாக உருவகிக்கிறார்[1] முருகன் ஆணவ மலத்தை அழித்து ஞானஒளி தருபவன் ஆதலின் கண்ணை மறைக்கும் படலத்தைக் கிழித்துக் கண்ணொளியைத் தருவதாகக் காட்டப்படுகிறது. மறைத்துத் தடையாக இருக்கும் படலம் கிழிக்கப்பட வேண்டுவதே; அவ்வாறே உயிர் அறிவு விளக்கத்தைத் தடுக்கும் ஆணவமலம் கிழிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. அத்துவாக்களை இறைவனுக்குத் திருமேனியாக உருவகிக்கிறார். மந்திராத்துவா குருதியாகவும், பதாத்துவா முடியாகவும், வர்ணாத்துவா தோலாகவும், புவனாத்துவா உரோமமாகவும், தத்துவாத்துவா ஏழுவகைத் தாதுக்களாகவும், கலாத்துவா அவயவமாகவும் உருவகிக்கப்படுகின்றன.[2] அத்துவாக்களை இறைவன் திருமேனியாகக் கூறும் சைவ சித்தாந்த மரபினை ஒட்டி இவ்வாறு உருவகித்துத் தெளிவாக்குகிறார் எனலாம். முருகன் திருச்செந்தூரில் கருணை வெள்ளமென வீற்றிருப்பதாக விளக்குகிறார்.[3] இறைவனது கருணை, வெள்ளமாக இங்கு உணர்த்தப்படுகிறது. இவ்வாறே மீனாட்சி அம்மை, ஆனந்த வெள்ளப்பெருக்காக உணர்த்தப்படுகிறாள்.[4] ஐம்புலங்களையும் களிறுகளாக உருவகித்துப் புலக்களிறு என்று கூறுகிறார்.[5] ஐம்பொறிகளும் பாம்புகளாகவும் கூறப்படும்.[6] அம்மை உயிர்களின் தகுதியை மதித்து அருளும் நிலையை உருவகமாக விளக்கக் காண்கிறோம். உயிராகிய பாத்தியில் உணர்வாகிய நீரைப்பாய்ச்சி வளர்க்கின்றவர்களுக்கு அம்மை ஒளியாகிய பூப்பூத்து, அளியாகிய பழம் பழுத்து விளங்கும் மலர்க் கற்பகமாவாள் எனப்படுகிறது. எழுதாச் சொல்லாகிய வேதம் அம்மையின் மழலையாக உருவகிக்கப்படுகிறது.[7] இறைவனுடைய அருளாகிய பெருங்கடலுள் ஆருயிராகிய மீன் பாய்ந்து ஆனந்தப் பெருமிதம் எய்தல் வேண்டும் என்கிறார்.[8]

---

1. 1:26
2. 1: 60-62
3. 1:95
4. 45
5. 104
6. 455
7. 44
8. 320

எமனை மீன் வலைஞனாக உருவகிக்கும் முறையில் வாழ்வியல் நிலையும் தத்துவமும் உணர்த்தப்படுகின்றன. கூற்றெனும் பெயருடைய கொடுந்தொழில் நுளையன், உடம்பு என்னும் உவர் நீர்க் கேணியில் புலம் என்னும் தலையை உடைய உயிராகிய மீனை அலைத்துப்பிடிப்பவன்; அதற்காகச் சிலேத்துமம், வாயு, பித்தம் என்ற மூன்றும் உயிர் மீனைப்பிடிக்க உதவும் தூண்டிலில் உள்ள மூன்று முட்களாக அமைந்துள்ள முத்தலைத் தூண்டிலைத் தூண்டுகிறான்; வாழ்நாள் என்னும் மிதப்பு நோக்கி ஆயத்தமாக உள்ளான்.[1] இவ்வாறு எமனை உயிர் பிடிக்கும் வலைஞனாக முற்றும் உருவகப்படுத்தி வாழ்வியல் தத்துவம் உணர்த்தப்பட்டுள்ள வேதம் மனனம் செய்யப்படுதலின் 'மனவட்டமிடும் சுருதி வயப்பரி' என்று குதிரையாக உருவகிக்கப்படுகிறது.[2] இறைவன் ஊன் வலையில் அகப்பட்டார்க்கு உட்படாதவன் என்னும் போது உடம்பு அல்லது பிறவி என்பது வலையாக உருவகிக்கப்படுகிறது.[3] இறைவன், கலையும் மறையுமாகிய வண்டு மொய்த்து விளங்கும் மலர்க் காவாகக் காட்டப்படுகிறான்.[4] முருகன் கொடியாகிய சேவல், கள்ளம் நிறைந்த மனமும் உடம்பும் இருண்டிருக்கும் அரக்கர்களாகிய கரும் இருட்டு விடியுமாறு கூவுகிறது.[5]

உமையும் சிவனும் விளங்கும் நிலையைப் பச்சிளங் கொடிபடரும் கற்பக தருவாக உருவகிக்கக் காண்கிறோம்.[6] தேவயானை விளையாடும் முருகன் என்பதைக் 'கும்பப் புணர்முலைக் களியானை விளையாடு பன்னிரு பொருப்பன்'[7] என்கிறார். மார்பு யானையாக உருவகிக்கப்பட்டதற்குப் பொருந்த, முருகன் தோள்கள் பொருப்புக் களாக உருவகிக்கப்பட்டுள்ளன. இவ்வாறே திருமாலைக் கொண்டலென்றும், திருமகள் மார்பைக் குவடென்றும் பொருத்தமுற உருவகிக்கிறார்.[8] முருகன் தனது திண்தோளாகிய தடங்குன்றில் மென் கொடியாகிய வள்ளியம்மை படர நின்றவன் என்றும் காட்டப்படுகிறது.[9] முருகன், குறமான் வளர்குன்று எனப்படுகிறான்.[10] இவ்வாறு இறைவனும் இறைவியும் இணைந்து விளங்கும் தோற்றம், பொருந்திய தொடர்போடு உருவகிக்கப்படக் காண்கிறோம்.

---

1. 320
2. 105 : தாழிசை 4; 206:1-4
3. 105 : தாழிசை 4
4. 388
5. 356
6. 521
7. 350
8. 350
9. 445
10. 369

அம்மையை அன்னமாக உருவகிக்கும் நிலையில் சமய தத்துவம் இடம் பெறுகிறது. சிவகாமி அம்மை தனது வளையாகிய சிறகால் சராசரமாகிய ஈர்ங்குஞ்சினை வயிற்றுள் வைத்து அணைத்து இரை தேர்ந்து அருத்திப் பொன்னம்பலத்துள் விளங்கும் சிவனாகிய ஆனந்தமாக் கடலில் புகுந்து ஆடும் பச்சை அன்னம் என்றும், அவள் பயந்தன பல்லாயிர அண்டமாகிய முட்டைகள் என்றும் விளக்கக் காண்கிறோம்.[1] அம்மை அடியவர் மனமாகிய தாமரையில் வேதமாகிய வண்டு ஒலிக்க மனப்பலகையாகிய ஊஞ்சலில் இருப்பவள்.[2] திருமால் அன்பெனும் மந்தரமலையை ஆசை என்னும் நாணால் பிணைத்துக் கடையச் சிவனாகிய அமுதம் விளைந்தமை உணர்த்தப்படுகிறது.[3] அம்மையின் கண்களாகிய வண்டுகள் சிவனாகிய தேறலை உண்டு களித்தலும் கூறப்படுகிறது.[4] சிவபெருமானைப் பொன்மலையாகக் காட்டி அதற்கேற்பப் பிற நிகழ்ச்சிகளும் விரிவாக உருவகிக்கப்படுகின்றன. சிவன், கருமுகிலாகிய திருமாலுக்கு அரியதான அடிவாரமாகிய திருவடியை உடைய பொன்மலை; அவ்வடிவாரத்தைச் சம்பாதி, சடாயு ஆகிய இருபறவைகள் அறிந்து மகிழ்ந்தன; அன்னப் பறவையாகிய நான்முகனால் காண முடியாத முடியை உடையது அம்மலை; ஒருபுனலருவியும், மதியும் சிகரமாகிய தலையில் உள்ளன; அக்குவடுகள் ஒரு பிடியானையாகிய உமையால் இருகோடு கொண்டு குத்தப்படுவன; அம்மலையைக் குத்தும் பிடியானைக்குப் பிறந்த யானைக்கு (விநாயகர்) இளையவன் முருகன் என்று விளக்கும் உருவகப்பகுதிசுவைமிக்கதாகவும் கற்பனைச் சிறப்பை உணர்த்துவதாகவும் உள்ளது.[5] சிவனது குடும்பத்தை யானைக்குடும்பமாகக் காட்டும் நயமும் உருவகநிலையில் அமைந்து இன்பம் பயப்பதாகும். முக்கட்களிறு நறுங்கூந்தல் பிடியைத் தழுவி யானைக்கன்றை (விநாயகரை) ஈன்றமை கூறப்படும்.[6] இவ்வாறு இறைக்குடும்பத்தை யானைக்குடும்பமாக உருவகித்தல் அடிகட்கு விருப்பமான ஒன்றாக உள்ளது. அம்மையின் கட்கயலுக்குச் சிவன் மேனி புதுவெள்ளப்புணரி; அம்மையில் கண் மான் மறிக்குச் சிவன்

1. சிவ.இ. 10
2. 94
3. 348
4. 477
5. 376
6. 512

மேனி மலர்ப்புறவம்; அம்மையின் கண் வண்டுக்குச் சிவன் மேனி தேனளிக்கும் பொதும்பர் என்று கூறக்காண்கிறோம்.[1] இணையிணையான தொடர்பு பொருந்திய உருவகங்களாக இவை உள்ளன.

அம்மை அருளும் திறத்தை ஓர் உருவகம் காட்டுகிறது. புன்மலக் கிழங்கைக் கல்லி எடுத்துப் புலக்களைகட்டு அருள் பூத்து உட்கனிந்த மலைவல்லி என்று காட்டப்படுகிறது.[2] மலத்தைக் கிழங்காகக் கூறும் உருவகமுறை பிறிதோரிடத்தும் சுட்டப்படுகிறது.[3] மெய்யுணர்ந்தவர்கள் திகழும் நிலையை இயையுபட விளக்கக் காண்கிறோம்; ஐம்புலக்காப்பே நிலையாகவும், பழிநாணுதல் நீள்கதவாகவும், மனத்தை ஒரு வழியில் நிறுத்தும் நிறையே தாழ்ப்பாளாகவும் செறித்து விளங்குவர் என்று உணர்த்தக் காண்கிறோம்.[4] நிலை, கதவு, தாழ்ப்பாள் ஆகிய மூன்றும் இங்கு இயைபுடையனவாய் அமைந்து மெய்யுணர்ந்தோர் தம் கட்டுப்பாட்டு நிலையினை இனிதின் விளக்குகின்றன.

உறுப்பு நல உருவகங்கள்

சூழலுக்கு ஏற்பப் பல உறுப்புக்களும் அவற்றின் நலனும் இயல்பும் நிலையும் தோன்ற உருவகிக்கப்படுகின்றன. 'முகமதி'[5] என்றும் 'முகத்தாமரை'[6] என்றும் முருகன், அம்மை, பெண்கள் ஆகியோரின் முகம் உருவகிக்கப்படும். அம்மைக்கு மறுவகற்றிய முகமதி என்று குறைபாட்டை நீக்கிய மதியாக முகத்தை விளக்கும் திறமும் உள்ளது.[7] மதியாகச் சொல்தற்கேற்ப முகத்தில் விளங்கும் முறுவலை நிலவொளியாக உருவகிக்கிறார். அம்மையைக் கூறும்போது, 'முகமதியூடெழு நகை நிலவு ஆட'[6] என்று இதனை அமைத்துள்ளார்.[8] ஓரிடத்தில் மதிமுகம் என்று உவமைகூறிய நிலையில் அமையாது, அதை மாற்றி முகமதி என்று கூறி, அதற்கேற்ப நிலவு அரும்பு நகை என்கிறார்.[9] இதில் உவமையினும் உருவகமாக்கிக் கூறுதலே ஏற்கும் என்பது அடிகளின் கருத்தாக உள்ளது எனலாம். கண்கள் பலவாறு உருவகிக்கப்படுகின்றன. வள்ளியம்மையின் கண் 'போர்த்தடங்கட்கயல்' எனக் கூறப்படும்.[10]

---

1. 537
2. சிவ.இ.18
3. 62
4. 304
5. 1: 46;19,396
6. 1:47, 22
7. 76
8. 19
9. 103
10. 394

'கட்கயல்'[1] என்றும் 'விழிக்கயல்'[2] என்றும் 'விழிமகரம்'[3] என்றும் கயலாக மகளிர் கண் அழைக்கப்படுகிறது. 'விழிவேல்'[4] என்றும் 'விழிவலை'[5] என்றும் கூறுதல் உண்டு. மகளிர் புருவம் 'புருவச்சிலை' எனப்படும்.[6] அந்நிலையில் கண்ணை அம்பாக உருவகித்தல் உண்டு. அம்மை கைலைமலை சென்று இறைவனை வயப்படுத்திய தன்மையை,

'முரிபுருவச்சிலை கடைகுவியச்சில
முளரிக் கணை தொட்டுக்
குன்றவி லாளியை வென்றதடாதகை[7]'

என்று கூறக் காண்கிறோம். புருவவில்லிலிருந்து தாமரை மலர் போலும் கண்ணாகிய கணை தொடுத்து ஈர்த்தமை இவ்வாறு சுட்டப்படுகிறது. 'மலர்க், கண்கணை துரக்கும் கரும்புருவவில்'[8] என்றும் ஆளப்பட்டுள்ளது. ஆடவரை வெல்லும் சிறப்புத் தோன்ற வில்லும் அம்புமாகக் காட்டப்படுதல் உணரத்தகும். சிவனுடைய கண், மலராக உருவகிக்கப்பட்டுக் 'கண்மலர்' என்று ஆளப்படுகிறது.[9]

'வாய்க்குமுதம்'[10] என்று வள்ளியின் வாய் குமுதமலராகக் காட்டப்படும். போர்க்கள வீரர்தலை 'தலைக்கமலவனம்'[11] எனப்படுகிறது. செந்நிறம் பெற்றிருத்தலின் கமலவனமாகக் காட்டப்படுகிறது. 'கரத்தாமரை'[12] என்று முருகன் கை தாமரையாகக் காட்டப்படும். மகளிர் கையும், 'வளைக்கை நெட்டிதழ்க் கமலங்கள்'[13] என்று காட்டப்படும். அம்மையின் கூந்தல் 'குழற்காடு'[14] என்றும், கலைமகள் கூந்தல் 'ஐம்பாற்காடு'[15] என்றும் விளக்கப்படும். செறிவுத்தன்மையால் இவ்வாறு உருவகிக்கப்படுகிறது எனலாம். இறைவன் திருவடி 'அடிக்கமலம்'[16] எனப்படுகிறது. முருகன் தோள் 'புயசயிலம்'[17] என்று மலையாக உருவகிக்கப்படுகிறது. 'களபக் கொங்கை வல்லானை'[18] என்றும், 'கொங்கைக்குடம்'[19] என்றும், 'துங்கமுலைப் பொற்குடம்'[20] என்றும், 'கனதனக்குன்று'[21] என்றும் மகளிர் மார்பு உருவகிக்கப்படும். வடிவச் சிறப்பால் குடம் என்றும்,

1. 84, 22
2. 170
3. 19
4. 127
5. 105
6. 394
7. 41
8. 99
9. 2
10. 410
11. 442
12. 410
13. 155
14. 62, 445
15. 701
16. 463
17. 1:48
18. 124
19. 57, 404
20. 89
21. 701

குன்று என்றும், ஆடவரை ஈர்த்து வெல்லுதலின் யானை என்றும் கூறியுள்ளமை உணரத்தரும். நிலமகளுக்கு மேரு மலையும் பொதிய மலையும் மார்புகளாம் என்பதைப் 'பார் மடந்தை, குடமலைக்கும் தடமுலையாம் குலமலைகள் இரண்டு'[1] என்று கூறக் காண்கிறோம். பெண்கள் மன்மதனுடைய படைகளாகக் கூறப்படுதற்கேற்ப மகளிர் தம் பலவகை உறுப்பும் படை உறுப்பாக உருவகம் செய்யப்படும். கமலைவளம் கூறும்போது மன்மதன் அரசியல் நடாத்துவதற்குக் கொங்கையாகிய மால்களிறும், கொலைக் கண்ணாகிய வாட்படையும், சில்காழ் அல்குலாகிய வெல் கொடித்தேரும், பல்வகை உறுப்பும் படை உறுப்பாகக் கொண்டு மகளிர் கைவகுத்திருப்பதாகக் கூறப்படும்.[2] வேளூர் மகளிரை விளக்கும் போது நஞ்சில் நனைத்துக் கொலை பூசிய நயனவேலும், கரிய புருவமாகிய அச்சந்தரும் வில்லும், அகல் அல்குலாகிய நகு பொன் தேரும், பகைவென்று இடையைச் சாய்த்து மதர்த்துக் கவிந்து விளங்கும் மார்பாகிய மால்களிறும், மற்றும் படைகள் பற்பலவும் வகுத்துக் கொண்டு விளங்குதலால் வேளூர் காமன் படை வீடாகும் எனப்படும்.[3] இவை மகளிர் தம் உறுப்பு நலன்களைச் சிறப்பாக வலியுறுத்தும் நோக்கில் அமைந்துள்ள உருவகங்கள் எனலாம்.

பண்புவிளக்க உருவகங்கள்

போர்க்களிறாகிய விநாயகருக்கு மதமும் சினத்தீயும் விளங்குதலைக், 'கவுண்மதக் கடைவெள்ளமும், கட்கடைக் கடைக்கனலும்'[4] என்று கூறுகிறார் அடிகள். மதநீர் மிகுதிபற்றி ஊழி வெள்ளமாகவும், சினத்தீ மிகுதிபற்றி ஊழிக்கனலாகவும் காட்டியுள்ளமை அறியத்தகும். போர்க்களம் கடலாகக் கூறப்படுதலும் மிகுதிப்பண்பு குறித்தற்கே ஆகும். அம்மையின் திக்குவிசயப் போர்க்களத்தில் கணை மழை பொழியவும், குருதிக்கடல் விளங்கவும், வலிய அணி வகுப்பாகிய அலை மோதவும் சேனைக்கடல் எழுந்ததாகக் கூறப்படுகிறது.[5] தலைவியின் கண் மழை சிந்துவதாகக் கூறுதல் கண்ணீர் மிகுதிபற்றிய உருவக விளக்கமாகும்.[6] அம்மை மதுரையை ஆண்டமையைக்

---

1. மீ.கு. 12; கொங்கைப் பொருப்பு - 445
2. 332 : 23 -29
3. 407
4. 2
5. 30
6. 165

கூறும்போது, உயிர்கள் பாவச்செயலாகிய பெருங்கடலில் படியாமல் விளங்குமாறு ஆண்டதாகக் கூறுவதில்,[1] பாவச் செயல்கள் பெருங்கடலாக மிகுதிபற்றி உருவகிக்கப்பட்டுள்ளன. திருமாலை மரகதக் குன்று என்றும், நான்முகனைத் தமனியக் குன்று என்றும், சிவனைப் பவளக்குன்று என்றும் நிறப்பண்பு கருதி உருவகிக்கக் காண்கிறோம்.[2] திருமால் மார்பில் உள்ள கவுத்துவ மணியாகிய மென்பரல் திருமகளை உறுத்துவதாகக் கூறப்படும்.[3] திருமகளின் மென்மையை உணர்த்தும் முறையில் இவ்வாறு கூறப்படுகிறது. புலவர்கள் 'கவி மழை'[4] பொழிவதாகக் கூறுவதில் மழையின் தண்மை, வாழ்விக்கும் தன்மை முதலிய பண்புகள் எல்லாம் கவிதைக்குரியனவாகக் கூறப்படுகின்றன எனலாம். சோலையாகிய மணப்பந்தருக்கு மேகம் மேற்கட்டியாக விளங்குகிறது என்பதில்[5] நாட்டுவளம் உணர்த்தப்படுகிறது. பிறை நிலவு, பிரிந்து வருந்தும் தலைவிக்குக் கூற்றுவனாகத் தெண்ணிலா ஒலியாகிய நெடும்பாசக் கயிறுடன் தோன்றித் துன்பம் தருகிறான்.[6] இதில் தலைவியின் துயர நிலையும் பிறையின் கொடுமைப்பண்பும் புலப்படுத்தப்பட்டுள்ளன. கருங்கங்குலாகிய கரும் பகட்டை ஊர்ந்து மதியாகிய கூற்றம் உயிர் கவர்ந்து பருகுவதற்குக் கதிர்களாகிய கையால் விரிநிலா ஒளியாகிய பாசக் கயிற்றை வீசுவதாகத் தலைவி குறிப்பிடுகிறாள்.[7] இதுவும் அவ்வாறே கருதத்தகும். அடியவர் உள்ளம்'அகத் தாமரை'[8] என்று உருவகிக்கப்படுவதில் அவர்களின் உள்ளம் மென்மையும் மலர்ச்சியும் இறை மணமும் பொருந்தியுள்ள இயல்பு உணர்த்தப்படுகிறது.

தொடர் உருவகங்கள்

தொடர்புடைய பல பொருள்கள் தொடர்ச்சியாக உருவகிக்கப்படுதலும் உண்டு. நலங்கனிந்த ஈகைப்பண்புடையவர்களைக் கற்பக தருவாக உருவகிக்கும் அடிகள் தருவின் வளர்ச்சி நிலைக்கேற்பத் தொடர் உருவகமாக அமைக்கிறார். ஈகையாளர் கண்ணோக்கு அரும்பாகவும், நகைமுகமே நாண்மலராகவும், இன்மொழியாகிய வாய்மையே தீங்காயாகவும், வள்ளன்மை பழமாகவும

1. 32
2. 7
3. 9
4. 702
5. 60
6. 192
7. 675
8. 1:58

கொண்டு விளங்குதலின் அவர்களே சலியாத கற்பக தருக்களாவர்.[1] இவ்வகையில் ஈகையாளர் முற்றிலும் கற்பக தருக்களே என்பது விளக்கப்படுகிறது. மனைவி கற்பாகிய ஆடை உடுத்து, அன்பாகிய மலர் முடித்து, நாணாகிய சந்தனத்தை மெய்யிற் பூசி, நற்குண நற்செய்கைகளாகிய அணிகள் பூண்டு, மக்கட் பேறாகிய செல்வமும் கிடைக்கப் பெறுதல் சிறப்பு என்கிறார்.[2] கல்வியே கற்புடைப் பெண்டிர்; அப்பெண்டிர்க்குச் செல்வப் புதல்வனே இனிய கவி வன்மை; பாடங்கூறும் வன்மையாகிய சொல் வளமே மல்லல் வெறுக்கை; சொல்வன்மையாகிய செல்வமும் சிலர்க்கு உண்டு.[3] இவை தொடர் உருவகங்களாகச் சிறந்துள்ளன.

வையை அலை வானளாவச் செல்வதால் வானத்துக் காட்சியை நீர்நிலைக் காட்சியாக உருவகிக்கிறார். ஞாயிறு பொற் பரிசிலாகவும், பிறை தோணியாகவும், மீன் பரப்புச் சிறு மிதப்பாகவும் காட்டப்படும்.[4] மதுரை வளத்தால் கரும்பும் நெல்லும் வானளாவ உயர்ந்து வானத்தை விளை புலம் போலச் செய்வதாகக் கற்பனை செய்யும் அடிகள் அதற்கேற்பச் சில உருவகங்களை அமைக்கிறார். கருநிறமும் வளைந்துவிளங்கும் மதியும் கொண்டு விளங்கும் மேகம், காருடலையும் வளைந்த குயத்தையும் கொண்டு விளங்கும் மன்னர்களாகவும்; புடைபெயர்ந்து அசையும் மின்னல், அசையும் இடைக் கடைசியராகவும், விண்மீன் கணம், துள்ளி விளங்கும் மீன்களாகவும் உள்ளன என்று உணர்த்துகிறார்.[5] கமலைவளம் கூறும் முறையில் பிறிதொரு தொடர் உருவகம் அமைக்கப்பட்டுளளது. மகளிர் விளையாடும் பளிங்கு மாடம் நீர்நிலையாகவும், மகளிர்தம் கொங்குவார் குழல் சைவலக்கொத்தாகவும், குவளைவாள் விழிகள் தடங்கயல் களாகவும், பங்கயமுகம் செய்ய பூங்கமலங்களாகவும் இளைஞர்களால் கருதப்படுகின்றன.[6] எனவே பளிங்கு மாடத்து மகளிர் தோற்றம் முற்றிலும் நீர்நிலைக் காட்சியாகக் காட்டப்படும் சிறப்பு அறியத்தகும்.

---

1. 242
2. 286
3. 209
4. 59
5. 50
6. 584 : 13-19

(இ) சிலேடை

சொற்றொடர் ஒருவகையாக நிற்கும் இயல்பிலேயே பல பொருள் படுவதாக அமைக்கும் செம்மொழிச் சிலேடை முறையிலும், தொடரைப் பிரித்துத் தொகை வேறுபடுத்திப் பல பொருள் படுவதாகக் கொள்ளும் பிரிமொழிச் சிவேடை முறையிலும்[1] பாடுவதில் அடிகள் மிக்க ஈடுபாடு காட்டியுள்ளார்.

செம்மொழிச் சிலேடை

அம்புலியை முருகனோடு விளையாட அழைக்கும் பொழுது அம்புலியின் செய்கைகள், முருகன் செய்கைகள் போல் ஒத்துள்ள தன்மை சிலேடை முறையால் உணர்த்தப்படுகிறது;

'சொற்றரு பெரும்புலவர் கலையமுது கொளவிருந்
 தோகைமேல் கொண்டருளினாய்
தோற்றிமுன் பொங்கிமலை போலவலை மோது மச்
 சோதிவே லையுமுகந்தாய்
குற்றமில் குணத்தைக் குறித்தவிர வலர்முகம்
 கோடா தளித்தல் செய்தாய்
கோகனக நாயகன் வரக்கூ விடுங்குக்
 குடங்கொடிய தாகவைத்தாய்
உற்றிடு மிதழ்க்குமுதம் விண்டுதண் டேனொழுக
 ஒளிநிலா நகைமுகிழ்த்தாய்
உன்செய்கை யெம்பிரான் றன்செய்கை போலுமால்'[2]

இப்பாடலில் ஐந்து செய்கைகள் கூறப்படுகின்றன. புகழைப் பெற்ற பெரிய தேவர்கள் கிரணமாகிய அமுதத்தை விருந்தாகக் கொள்ள மகிழ்ச்சியைக் கொண்டிருப்பது நிலவு, சொல்லைத் தருகின்ற பெரிய புலவர்கள் சாத்திரங்களாகிய அமுதத்தைக் கொள்ளக் கரிய மயிலின் மேல் எழுந்தருளியிருப்பவன் முருகன்; மலையைப்போல் பெரிய அலைகள் மோதுகின்ற அந்த ஒளியையுடைய கடலையும் விரும்பியிருப்பது நிலவு, கிரவுஞ்சமலை போலக் கடலையும் மோதிக்

1. தண்டி. 76, 77
2. 411

கெடுக்கின்ற ஒளியுடைய வேற்படையினை விரும்பிக் கொண்டிருப்பவன் முருகன்; குற்றமில்லாத குணமுடைய இரவில் அலரும் பூக்களுக்கு முகம் கோடாது காப்பது நிலவு, குற்றமில்லாத குணமுடைய இரவலர்க்கு முகம் கோடாது அணி செய்பவன் முருகன்; தாமரை நாயகனாகிய ஞாயிறோன் வரக் கூவும் கோழியைக் கொடிய பகையாகக் கொண்டது நிலவு, ஞாயிறோன் வரக்கூவும் கோழியைக் கொடியாக வைத்தவன் முருகன்; இதழ் போன்ற குமுதம் மலர்ந்து தேன்ஒழுக ஒளிநிலவாகிய நகை முகிழ்ப்பது நிலவு, இதழாகிய குமுதம் மலர்ந்து தண்தேன் ஒழுக ஒளிநிலா முறுவல் செய்பவன் முருகன், இவ்வாறு நிலவுக்கும் முருகனுக்கும் ஏற்பப் பொருள்தரும் முறையில் ஒருவகைச் சொற்றொடர் பல்பொருட்பெற்றி தெரிதர உரைக்கப்பட்டுள்ளமை விளக்கத்தகும். சொற்றரு பெரும்புலவர், கலையமுது, மலை, வேலை, கொடியதாக- முதலியவை செம்மொழிச் சிலேடை சிறக்க விளங்குகின்றன; 'கொளவிருந்தோகை', 'இரவலர்', ஆகிய இரு தொடரும் பிரிமொழிச் சிலேடையாகப் பொருள் தருதலும் புலனாகும். இவ்வாறு முருகனுக்கும் நிலவுக்கும் ஒப்புமை தோன்றப்பாடும் சிலேடைப் பாடல் விளங்குதல்[1] முன்னரும் சுட்டப்பட்டுள்ளது.

மதுரையில் விளங்கும் துகிற்கொடி அம்மையின் வயக்கொடி போல் இருத்தல் சிலேடையாக உணர்த்தப்படுகிறது;

துகிற்கொடி
முனைக்கணை வடிம்பு நக்கா
மைவைத்த செஞ்சிலையும் அம்புலியும் ஓடநெடு
வான்மீன் மணந்துகந்த
வடவரை முகந்த நின் வயக்கொடி யெனப்பொலியும்[2]

அம்மையின் வயக்கொடி, சேரரது விற்கொடியும் சோழரது புலிக்கொடியும் ஓட மீன் எழுதப்பெற்று விளங்குவது; துகிற்கொடி அம்புபடாத வில்லாகிய இந்திர வில்லும் வானிலுள்ள நிலவும் ஓடுமாறு மீனராசியை மணந்து விளங்குவது. சிலை, புலிஓடுதல், மீன் மணத்தல் ஆகியவை இங்குச் செம்செம்மொழிச்சிலேடையாகத் துகிலுக்கும்

1. 410; பார்க்க இந்நூல் பக். 137
2. 49

கொடிக்கும் பொருந்தி விளங்குதல் குறிக்கத்தகும். 'பட்டிருக்கத் தோலசைஇ'[1] விளங்குபவன் மதுரை இறைவன் என்று கூறுவதில், பட்டாடை இருப்பவும் தோலுடை உடுத்தவன் என்றும், தாருகாவன முனிவர்கள் சிவனைக் கொல்ல ஏவிய யானை புலி ஆகியன இறந்து பட்டுக் கிடக்க அவற்றில் தோலை உடுத்தவன் என்றும், பொருள் படுதல் உணரத்தகும். களியன் பனையைக் குருவுக்கு ஒப்புமையாகக் கூறுவதும்,[2] இடைச்சியாரிடம் காமுகன் இடையர் குலத் தொழிற்கேற்ற பொருளும் அகப்பொருட் குறிப்பும் தோன்ற உரைப்பதும்[3] செம்மொழிச்சிலேடை நயம் மிக்கவையாகும்.

பிரிமொழிச் சிலேடை

அம்மை 'புதுக்கூழ்'[4] சமைப்பதாகக் கூறும் போது புதுக்கு + ஊழ் என்று பிரிக்கப் பெற்றுப் புதுக்கிய ஊழினை அமைத்தல் என்ற பொருளும், புது + கூழ் என்று பிரிக்கப்பெற்றுப் புதிய கூழினைச் சமைத்தல் என்ற பொருளும் உணர்த்தப்படுகின்றன. இறைவனுடைய தோள்களைக் கூறும்போது,

'உறுதியொடு அவண்மனை புகும்வகை கடிது
சுமந்தொரு கூடை மணுந்திச் சொரிந்தன'[5]

என்கிறார் அடிகள். 'அவண் மனை' என்பது இரு வகையில் பிரிக்கப்பெற்றுப் பொருள் தருவதாகும். அவண் + மனை என்று கொண்டு, அந்த வரையறுத்த இடம் நிறையுமாறு இறைவன் தோள்கள் மண்கூடை சுமந்து சொரிந்தன என்ற பொருள் உணரப்படும். அவள் + மனை என்று கொண்டு, செம்மனச் செல்வியாகிய கிழவி கூலியாளாகிய இறைவன் தன் பங்குக்கு மண்ணைக் கொட்டி வெள்ளத்தை அடைப்பான் என்று உறுதி கொண்டு தன்னுடைய வீட்டுக்குச் செல்லும் வகையிலும் இறைவன் தோள்கள் மண்சுமந்து சொரிந்தன என்ற பொருள் உணரப்படும்.

கலம்பகத்தில் சம்பிரதம், சித்து ஆகிய உறுப்புக்கள் சிலேடை நயமுற அமைக்கப்பட்டுள்ளன. 'எட்டுவரையைக் கடலை முட்டியுள்

---

1. 112
2. 128
3. 166
4. 16
5. 115

அடக்கிடுவேன்' என்பது எட்டு மலைகளையும் கடலையும் மூடிய கைக்குள் அடக்கும் பொருளையும், எள், துவரை, கடலை ஆகிய தானியங்களைக் கைக்குள் அடக்கும் பொருளையும் உணர்த்துகிறது.[1] 'எருத்துக் கொட்டிலும் பொன்னேய்ந்திடச் செய்தேம்' என்பது எருத்துக் கொட்டிலையும் பொன்னாலமையும் படியாம் செய்தேம் என்ற பொருள் தருவதோடு திருமாலுக்குப் பொருந்திய இல்லாளாகிய திருமகளைப் பொன்விறம் பொருந்தச் செய்தேம் என்ற பொருளும் பயந்து நிற்கிறது.[2] இக்கூற்றுக்களில் பிரிமொழிச் சிலேடை சிறந்து நிற்றல் குறிக்கத்தகும். மகளிர்பால் மயங்கினோர் நெஞ்சும், மயங்காது தப்பி நீங்கியோர் நன்நெஞ்சும் 'போதம் படரும்' எனப்படுகிறது.[3] மயங்கியோர் நெஞ்சில் போது அம்பு அடரும்; அதாவது மன்மதனுடைய மலரம்பு துன்புறுத்தும். மயங்காது தப்பியோர் நெஞ்சில் போதமாகிய சிவஞானம் பரவும். இவ்வாறு ஒரேதொடர் இருவகைப் பொருளையும் தந்து நிற்கிறது. அடிகள் இருவகைச் சிலேடை முறையிலும் அமைத்துப்பாடுவதில் ஆர்வம் காட்டியுள்ளமை இவற்றால் உணரத்தகும். அடிகளின் சொல்லாளும் திறன், புலமை நலம் இவ்வகையில் சிறந்திருத்தல் குறிக்கத்தகும்.

(ஈ) மடக்கு

வந்த சொல்லே பாடலில் பல இடத்தும் வந்து வெவ்வேறு பொருளை உணர்த்தி நிற்கும் மடக்கு (யமகம்)[3அ] என்னும் சொல்லணி முறையிலும் அடிகட்கு ஈடுபாடு மிகுந்துள்ளது எனலாம். சிலேடைத் தொடர் ஒரேயிடத்தில் நின்று பலவகைப் பொருளையும் உணர்த்துவது; மடக்குத் தொடர் ஒன்றுபோல்வதாயிலும் பல இடத்து நின்று வெவ்வேறு பொருள் தருவது. எனவே சிலேடையும் மடக்கும் பெரும்பாலும் ஒன்றாக மதிக்கத் தக்கன எனலாம். கலம்பகத்தில் மடக்கு என்னும் உறுப்பில் அடிகள் பாடியிருத்தல் நினைவு கூரத்தகும்.[4] மேலும் சில ஈண்டுக் குறிக்கத்தகும்.

---

1. 185
2. 161
3. 496

3 1 அ. தண்டி 92

4. பார்க்க. இந்நூல் பக். 95,96, 166,167

சிவனுக்கு அரங்கம் வெள்ளியரங்கம் (வெள்ளியம்பலம்); ஆலயம் பிறவெள்ளியரங்கம் (பிற எள்ளியர் அங்கம் *சிவனையன்றிப் பிற பொருள்களை வெறுத்தவர்களது மனம்). சிவன் கொள்ளும் அணிகள் என்பரவாமையே (என்பு அரவு ஆமை); அவனை உணராமைக்குக் காரணம் என்பரவாமையே (எனது துதிக்காமையே). இறைவன் விரும்புவது மாகவிமானம் (மாகவி மானம் *கவிதைப் பெருமை*); இறைவன் மேவும் விமானம் மாகவிமானம் (மாக விமானம் *இந்திரவிமானம்*) இறைவனது இயற்கை இடம் தடமதிற்கூடல் (வெள்ளித் தடம் அதில் கூடல்*வெள்ளிமலையாகிய கைலாயத்தில் இருத்தல்*).[1] இறைவன் கொல்லுவது எழுதருங்கூற்றம் (எழுகின்ற கூற்றுவன்); இறைவன் சொல்லும் மாற்றம் எழுதருங்கூற்றம் (எழுதற்கரிய வேதம்).[2] இறைவன் தோற்றத்தைக் கூறும் பிறிதொரு பாடற்பகுதி பின்வருமாறு

'நவ்வி யங்கண் மானு மானு மினிது கந்தி டங்கொள்வார்
நஞ்ச மார்ந்தென் னெஞ்ச மார்ந்துநனிகளங்க றுத்துளார்
கைவி ளங்கு குன்று மன்றுங் கோவி லாக்கு வித்துளார்.' (193)

இறைவன் மான் போன்ற உமையை இடப்பக்கம் கொண்டுள்ளார்; மானை இடக்கையில் கொண்டுள்ளார். நஞ்சினை உண்டு களம் (கழுத்து) மிகவும் கருத்து விளங்குகிறார்; தலைவியின் நெஞ்சில் நிறைந்து களங்கு (அறியாமை) அறுத்துள்ளார். கையில் மேருவாகிய குன்றைச் சிறந்த வில்லாக வளைத்துள்ளார். பொன், வெள்ளி ஆகிய மன்றங்களைக் கோவிலாகக் கொண்டு நடனம் புரிகின்றார். இங்கு இரண்டு எழுவாய்க்கு ஒரு வினைமுற்றே இரு பொருள் தந்து பொருந்தியிருத்தல் உணரத்தகும். அடிகள் தமது குருவாகிய மாசிலாமணிதேசிகரை இறைவனாகவே குறிப்பிடுகின்றநிலையில் மடக்கு அணி மூலம் இனிதின் புலப்படுத்தியுள்ளார்.[3] இறைவனை நம்

---

1. 142
2. 688
3. 578 : 18-25 பார்க்க இந்நூல் பக். 160-162, 229-231

உள்ளத் திருக்கோவிலுள், வெம்மைவினைக் கள்ளத் திருக்கோயில் (திருக்கு ஓயில்) காணலாம் என்பதிலும் மடக்கு அணி நலம் புலப்படுத்தப்படுகிறது.[1] இறைவன் தலைவிக்குக் கூட்டம்புயம் (கூட்டம் புயம்) கொடாவிடில் மன்மதன் நாட்டம்புயம் (நாட்டு அம்புயம்) நமனாகும் எனப்படுகிறது.[2] அம்போருகம் என்றும் சொல் தனித்தும், முன்னும் பின்னும் தொடர்பு கொண்டும் பொருள் தரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. 'வாவி அம்போருகம்' என்பது தாமரை சூழ்ந்த குளத்தைச் சுட்டும்; தூவி அம்போருகந்தோறும் நின்றோர்' என்பது திருமாலாகிய இறகுடைய அம்பை உடையவராய் உகந்தோறும் நின்ற சிவனைச் சுட்டும்; 'அம்போருகந்து ஆயிரம் கூற்றுடன்றாலும்' என்பது அழகிய போரினை உகந்து ஆயிரம் எமன் உடன்றாலும் என்று உணர்த்தும்; 'நாவியம்போருக நன்னெஞ்சமே அவர் நாமங்களே' என்பது நா இயம்பு ஓருக (சிவன் பெயர்களை நாவே இயம்பு, நெஞ்சே ஓர்க) என்ற பொருளை உணர்த்தும்.[3] இவ்வாறு சிலேடை, மடக்கு அமைத்துப் பாடுதல் அடிகளின் புலமை நலம் உணர்த்தும் சொல் விளையாட்டாகச் சிறந்து விளங்குகிறது.

(உ) தற்குறிப்பேற்றம்

பெயரும் பொருள்கள், பெயராப் பொருள்கள் ஆகிய இருவகைப் பொருட்கண்ணும் இயல்பாக நிகழும் தன்மை அல்லாமல், புலவர்கள் தாம் கருதும் வேறொரு தன்மையை ஏற்றிச் சொல்லுதல் தற்குறிப்பேற்ற மாகும்.[4] புலவர்களின் கற்பனையாற்றலை இது காட்டுவதாகும். இவ்வகையில் அடிகள் தனிச்சிறப்புற்று விளங்குதல் அறியத்தகும்.

மேகலை ஒலிக்க அம்மையைச் செங்கீரையாட வேண்டும் போது 'இசைந்திடு தேவை நினைந்தன வென்ன இரங்கிடு மேகலை' எனப்படுகிறது.[5] மேகலை ஒலிப்பது இறைவனை நினைந்தாற் போல் உள்ளதாகக் குறிக்கப்பட்டுள்ளமை உணரத்தகும். சிவனை எதிர்ப்பட்டதும் அம்மையின் மூன்று நகில்களில் ஒன்று மறைந்தது;

1. 140
2. 131
3. 318
4. 56 (தண்டி)
5. 20

இதனை இறைவனோடு உள்ளப்புணர்ச்சிக் கருத்தாக ஒடுங்கியது என்று தற்குறிப்பு ஏற்றிக் கூறுகிறார் அடிகள்.[1] அம்மையின் அடிச்சுவடு பட்டு அசோகு பூத்து உதிர்கிறது; அம்மையின் முன் இறைவன் அவள் ஊசலாடுதலைக் காண உருவம் கரந்து நிற்பதைத் தெரிந்து மன்மதன் அசோக மலரம்புகளை எய்வது போல் இஃது இருக்கிறது என்கிறார் அடிகள்.[2] மாணிக்க ஒளிக்குன்றில் செஞ்சோதியிடையே இளமதி இமைப்பது, நெருப்பில் மீனாட்சியின் முகச் செவ்வி பெறும் பொருட்டு நிலவோன் தவம் செய்வது போல உள்ளது எனப்படுகிறது.[3] மகளிர் கூந்தலுக்கு ஊட்டும் நறும்புகை விண்மிசைக் கைபரந்து எழுகிறது; இஃது இருட்படலம் உருமாறி ஞாயிற்று மண்டிலத்தைக் கைக் கொள்ள வானத்தைப் போர்ப்பது போல் உள்ளது எனப்படுகிறது.[4] மேகலை ஒலித்தல், இடை இறும்இறும் என்று இரங்குவது போல் உள்ளதாகக் குறிக்கப்படும்.[5] பாண்டியனாக வந்த நிலையில் சிவன் மீன்கொடியுடையவனாக விளங்குகிறான்; இது தனக்குத் தோற்ற மன்மதனுடைய கொடியைக் கவர்ந்து கொண்டாற் போல் உள்ள தெனக் கூறப்படுகிறது.[6] பாண்டியனாக வந்த சிவன் வேப்பிலை மிலைந்திருத்தல், தாக்கணங்கனையார் கண்ணேறு காத்தற்காக அமைத்த காப்பெனக் குறிக்கப்படுகிறது.[7] இந்திர விமானம் நிலமகளுக்கு முடி சூட்டியது போல் உள்ளது.[8] ஆரூரர் சடைமீது திங்கள் நிலவு பொழிவது, அன்னத்தின் உருவில் சென்று இறைவனைக் காணாத நான்முகனை நகைப்பதாகும் என்கிறார் அடிகள்.[9] முருகன் அரக்கர்தம் குருதிக் கடலும், பிணமலையும் விளங்கச் செய்திருத்தல், உக்கிர குமாரனாய் வற்றச் செய்த கடலையும், தூளாக்கிய கிரவுஞ்ச மலையையும் வேறுபட விரைவில் புதிதாக வகுத்தமைப்பது போலுள்ளது.[10] இவை அடிகளின் தற்குறிப்பேற்றச் சிறப்பை நன்கு உணர்த்தி நிற்கின்றன.

பவளத்திற் செய்த அம்மானையை அம்மை விளையாடும் போது அது மேலே போவதும் வருவதுமாக உள்ளது; அம்மை

---

1. 35
2. 96
3. 96
4. 98
5. 103, 119
6. 154
7. 205
8. 206
9. 337
10. 385

கைவிரலாகிய பவளத்தளிரின் ஒளியைத் திருடுதற்குப் போவதும் வருவதுமாய் இருப்பதாக இதனைக் குறிக்கக் காண்கிறோம்.[1] அம்மையின் கட்கயல்களும், விரும்பும் மகளிர் கட்கயல்களும் சிவனை அடைதல் பொருத்தமே; ஏனெனில் மாமி காஞ்சனமாலைக்கு ஏழுகடலையும் வழங்கியும், ஒருவேலை மகனுக்குக் கொடுத்துப் பூமிக்குள் கடலை வறிதாக்கியும், அடியவர்கள் பவக் கடலைப் போக்கியும் சிவன் விளங்குதலால் கயல்கள் தாம் வாழுதற்குரிய இடங்களைப் பெறாவாகி அவனை அடைந்தன என்று கற்பிக்கிறார் அடிகள்.[2] வேளூர் மாடங்களின் ஒள்ளொளி வெள்ளச்சிறப்பை விளக்கும் முறையில் வானத்துக் காட்சிகளை விளக்குகிறார். ஒளி வெள்ளத்தில் இளம் பிறை முயற் குழந்தைக்கு ஏறவிடும் ஓடமெனவும், வான் மீன்கள் தடந்திரை எடுத்தெறியும் நெடுமீன்கள் எனவும், தேவர்தம் பொன் விமானமும் ஞாயிறோனுடைய தேரும் பொன்தெப்பங்கள் எனவும் விளங்குகின்றன என்கிறார்.[3] இவ்வாறு அடிகளின் கற்பனைக் குறிப்பு வெளிப்படுகிறது. தாழையில், வளைந்த சங்கும், தரளமும் ஏந்தப்பட்டு விளங்கும் தில்லை வளக்காட்சியை விளக்கும் போது இனிய தற்குறிப்புக் கற்பனை கூறப்படுகிறது. கருங்கழிக்கரையில் வெண் பொடி பூசித் தவம் புரிந்தும் தாழைக்குச் சிவனுடைய செஞ்சடையைப் பெறுவது அரிதாயிற்று; எனவே அந்தச் சடையில் கிடந்த வெண்மதிக் கடவுளை வருக என்று அழைத்துப் பெருநயப்பு எய்திக் கண்ணீர் வழியக் கலந்துடன் தழுவி உண்க என்று வெண்சோறு ஏந்தி, விண்மீன் கூட்டத்தோடு அவற்றின் பதியாகிய கடவுளை மடலின்கண் தாங்கி இருப்பதாகக் கூறுகிறார்.[4] இதில் சங்கு நிலவாகவும், முத்து விண்மீன்களாகவும், வெண்பொடி திருநீறாகவும், தாழைவெண்சோறு உண்ணும் சோறாகவும், கள்நீர் கண்ணீராகவும் உவமை நலமுற விளங்கி அடிகளின் தற்குறிப்புக் கருத்தை வற்புறுத்துதல் குறிக்கத்தகும். தில்லை மூவாயிரவர் ஆகுதி வழங்கும் யாகசாலையில் எழும் நறும் புகையானது வானுற எழுவது, அவியமுது உண்ணவரும் தேவரையும் அவர் தலைவனாகிய இந்திரனையும்

1. 80
2. 194
3. 432
4. 454

தீக் கடவுள் விருந்து எதிர் கொள்ள விடுத்தது கடுக்கும் எனப்படுகிறது.[1] இவ்வாறு தற்குறிப்பு நயந்தோன்றக் கற்பனைகள் பல அடிகளால் கூறப்படுகின்றன.

தெய்வக் கற்பனைகள்

தெய்வங்கள் தொடர்பாக அடிகள் வருணிக்கும் பகுதிகள் கற்பனை நலமும் தற்குறிப்பும் உடையனவாக உள்ளன. விநாயகர் தனது கோடு என்று கருதிச் சிவன் சடைமேல் இருக்கும் மதியை எடுப்பதற்காகத் தனது துதிக்கையை நீட்ட, அதைப் பாம்பு என்று கருதிய மதி கங்கை நதியுட்புக, அந்நிலையில் அதனை ஒரு தோணி என்று கருதி விநாயகர் பிடிக்காமல் விடுத்ததாகக் கூறுகிறார்.[2] இவ்வாறு விநாயகர் பற்றிய கற்பனை இடம் பெற்றுள்ளது. முருகன் சிவனோடு விளையாடிய காட்சியையும் அடிகள் கற்பனைக் கண்ணில் கண்டு குறிக்கின்றார். முருகன் கனிவாய்ப் பசுந்தேறல் அம்மையின் மடித்தலத்தை நனைக்கவும், அவள் வயிறு குளிரும்படி தவழ்ந்து ஏறிச் சிவனது மார்பில் குரவையாடித் துடியினிற் சிறுபறை முழக்கி, அக்கினியைக் கங்கை நீரால் அவித்து, முளைமதியை அரவின்வாயில் மடுத்து, இளமானின் முதுபசிக்கு அறுகம்புல்லை அருத்தி, அழகிய செம்மேனியில் வெண்ணீறு தூளெழ மிதித்துப் புழுதி விளையாட்டயர்ந்து சிறுகுறும்பு செய்ததாகக் குறிக்கிறார்.[3] சிவனுடைய தோற்றக் காட்சிகளை இவ்வாறு இணைத்துக் கற்பனை செய்து முருகன் விளையாட்டை விளக்கப் பயன்படுத்தியுள்ளமை சுவை பயப்பதாகும். இவ்வாறு பல கற்பனைகள் முருகன் தொடர்பாக வெளிப்படுகின்றன. சிவனது தலைப் பிறையையும், உமைமுடியில் உள்ள பிறை என்னும் தலையணியையும் ஒன்று சேர்க்கிறான் முருகன்; எனவே முழுமதியென விளங்குவதால் பக்கத்தில் உள்ள பாம்பு அதைக்கவரப் படமெடுத்து ஆடுகிறது; ஆடும் பாம்பைத்தனது தலைக்கணியும் காந்தள் என்று கருதி முருகன் அதனருகணைய அது வெகுண்டோடுகிறது; அதைக் கண்டு சிவன் தலையிலுள்ள பிரமனுடைய வெண்தலை சிரித்தாற் போல் விளங்க,

1. 475; 25 - 32
2. 533
3.401

'முன்பு குட்டுண்டது அறியாய் கொல்.' என்று முருகன் இதழுதுக்குகிறான்.[1] குழந்தை விளையாட்டுக் கேற்பப் புராணச் செய்திகளை ஒருங்கிணைத்துப் பார்க்கும் சுவைக் கற்பனையாக இஃது இலங்குகிறது. முருகன் செல்லும் மயிலின் சிறகுகளால் எழுப்பப்படும் காற்று ஊழிக் காற்றை உண்டாக்க அம்மயிலோடு அதன் வேகத்தில் மலைகளும் சிறகு பெற்றாற்போல் பறந்தன; அவுணர் உடற்குறை தலைக்குறைகள் தம் உயிரைத் தொடர்ந்து மேலே செல்லும் கரிய மேகங்கள் போல் பறந்தன; பூமழை விண்ணை நிறைத்தாற்போல் விண்மீன்கள் விழுந்தன; கடலாகிய பள்ளம் அட்டதிக்கிலும் தம்முள் போரிட்டன; பார் கவிழ்ந்தது.[2] இவ்வாறு முருகனுடைய மயிலைப் பற்றிக் கற்பிக்கப்படுகிறது. முருகன் திருவிளையாடல்கள் அவன் ஆற்றல் தோன்ற அடிகளால் கற்பனை செய்யப்படுகின்றமை பிறிதொரு பாடலிலும் அறியத்தகும்.[3]

காஞ்சனமாலை மீனட்சியாகிய குழந்தையைச் சீராட்டி வளர்த்த காட்சியை உலகியலுக்கேற்பக் கற்பிக்கிறார். அம்மையை நீராட்டிப்பொற் சுண்ணம் திமிர்ந்து, நெற்றியில் இட்ட வெண்ணீற்றுப் புண்டரத்துக்கும் வெண்ணீற்றுத் திலகத்துக்கும் பொருத்தமாக நித்திலச் சுட்டிசாத்தி, மாலை விளங்கும் உச்சிக் கொண்டை முடித்துத் தலை அணி திருத்திக் காதில் குதம்பையும் தமனியக் கொப்பும் இட்டுப் பாராட்டித் திருமுலைப்பாலமுத மூட்டுவதாகவும், அம்மையின் வாயூறு தேறல் பட்டாடை மடி நனைப்பச் சீராட்டி முத்தமிடுவதாகவும் வருணிக்கிறார்.[4]

சிவனது தலைக் காட்சி அடிகளுக்குச் சுவைமிக்க கற்பனையைத் தூண்டுகிறது. சிவன் விரிசடைக் காட்டில் பாம்பு சிறு மூச்சுவிட அதிற் பிறந்த பெருங்காற்றால் கங்கையாற்றில் விரிதிரை சுருண்டு எழுந்தது; அப்பாம்பின் கண் அழல் கொளுந்த நீர் சுழித்து உள்வாங்கிக் கங்கை வற்றியது; இறைவன் நெற்றிக் கண்ணில் எழுந்த தீக் கொழுந்தால் நிலவு அமுதம் ஒழுகிப் பெருகிக் கங்கையின் வறுமையை ஒழித்தது[5] என்று விளக்குகிறார் அடிகள். சிவன் தலையிலுள்ள பிறை, பதஞ்சலியாகிய பாம்பு சிவனது நடனத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதால் அதற்கஞ்சி வளர்ந்து முழுமையுறாதிருக்கிறது என்கிறார்.[6] இத்தகைய கற்பனைகள் சுவை தந்து மகிழ்விப்பனவாகும்.

---

1. 403
2. 443
3. 362
4. 14
5. 466 : 1-10
6. 546

மிகைக் கற்பனைகள்

உள்ளதை மிகுதிப்படுத்திக் கூறும் உயர்வு நவிற்சி புலவர்தம் கற்பனை ஆற்றலைக் காட்டுவதற்கு ஒரு வாய்ப்பாகக் கையாளப்படுவதெனலாம். சங்க இலக்கியங்களிலும் மிகை படக் கூறும் உயர்வு நவிற்சி இருத்தல் சுட்டிக் காட்டப்படுகிறது.[1] பிற்கால இலக்கியங்களில் மிகை படப்புனைந்து கூறும் நிலை பெருகியது எனலாம். அடிகளின் பாடல்களில் அளவுகடந்த கற்பனை வருணனைகளாகிய மிகைக் கற்பனைகள் பேரிடம் பெற்றுள்ளன. இவை கூறக்கருதும் கருத்தை மிக அழுத்தமாக வலியுறுத்தும் பயனை விளைவிப்பதோடு பயில்வார்க்கு வியப்புணர்வு தோன்றச் செய்து இன்சுவை பயப்பனவாகவும் இலங்குகின்றன.

மண்ணுலகத்தை விண்ணுலகத்தோடும் அதற்கு அப்பாலும் இணைத்துக் காணும் கற்பனை வேட்கை அடிகளைப் பலவாறு புனையச் செய்கிறது. மீனாட்சி ஆளும் மதுரையின் வளத்தைக் கமுகின் உயர்ச்சியால் காட்ட நினைப்பவர் விண்ணுலகில் ஐராவதத்தில் வீற்றிருக்கும் இந்திராணிக்கு மதுரைப் பசுங்கமுகு வெண்கவரி வீசும் என்கிறார்.[2] கமலைக் கமுகு விழுக்குலை தெறிப்ப விட்புலத்தவர்க்குப் பழுக்காய் தருகிறது.[3] பெண்கள் கமுகில் ஊசல்கட்டி ஆடுகின்றனர்; கமுகில் படர்ந்த கொடிகள் தேவலோகக் கற்பக மரத்திலும் படர்ந்துள்ளன; ஊசலாடும்போது கமுக மரத்தோடு கற்பக மரமும் அசைவதால் கற்பக மலர்கள் மாரி போல் பொழிகின்றன.[4] குரங்குகள் இரிந்தோடும் விசையில் விசைத்தெழும் மரக்கோடு பாயக் கலைத்திங்கள் வயிறு கிழிந்து அமுதருவி பொழிகிறது.[5] கந்தபுரிக் கமுகு அரம்பையர்க்குப் பழுக்காயாகிய பவளமும் பாளை முத்தும் தந்து கவரி வீசுகிறது; முடத்தெங்கு இந்திரன் நாளவையில் நடனமாடும் அரம்பையர்க்கு இளைப்பாறுதற்குத் தாற்றோடு இளநீர் கொடுக்கிறது.[6] முடத்தெங்கே இந்திரலோகம் வரை உயர்ந்ததென்பதால் நேராக வளர்ந்த தெங்கு இன்னும் உயர்ந்துள்ளதென்ற நுட்பம் இங்கு

1. சங்க இலக்கியத்தில் உவமைகள் பக்.104,106
2. 58
3. 348
4. 448
5. 100
6. 374

உணர்த்தப்படுகிறது. இக்கருத்தை அடிகளே பிறிதோரிடத்தில் புலனாக்குகிறார். சோணாட்டு வாளைமீன் பிறழத் தென்னப்பழம் வீழப் பூங்கொம்புகளையுடைய கற்பகத்தின் கழுத்து ஒடிகிறது.[1] கற்பகமரத்தினும் தென்னை உயர்ந்துள்ள குறிப்பு இங்கு உணர்த்தப்படுகிறது. தென்னையின் காய்மாண்குலைச் செவ்விளநீரைக் கடவுட்சாதி மட நல்லார் கதிர்ப்பூண்முலை என்று ஏக்கற்று நிற்கின்றனர்; அதுகண்டு கமுகு நகைப்பது போல் ஒளிமுத்து அரும்புகிறது.[2] வண்டுகள் சோலை மலர்களை உழக்க, மலர்த்தாது பொழிந்து வானதியைத் தூர்க்கிறது.[3] கரும்பு வானளாவ வளர்ந்து கற்பகக் காட்டில் வளர் ஐராவதம் கவளம் கொள்ளுமாறு உள்ளது; காமதேனு நின்று கடைவாய் குதட்டுமாறு செந்நெற் கதிர்க்குலை முதிர்ந்து உயர்ந்து விளைந்துள்ளது.[4] ஐராவதம் கதிர்க்குலைச் செந்நெல்லைப் பாகு அமைந்த கரும்பு என்று கருதிக் கைவைக்கிறது.[5] கரும்பு, நெல்லினும் வளம்மிக்கு விளங்குவதை இவ்வகையில் உணரவைக்கிறார் எனலாம். செந்நெற்குலை குதிரை முகம் போல் வளைந்து நின்று ஞாயிறோனுடைய கடும்பரியை நட்புக் கொள்ளும் என்பதால் ஞாயிற்று மண்டலம் வரை நெல் வளர்ந்துள்ளதாகக் குறிக்கக் காண்கிறோம்.[6] கமுகு கட்டிய மணப்பந்தருக்கு மேகமாகிய மேற்கட்டியில் தொங்கவிட்டுள்ள மணிக்கொத்து என்று கூறும்படி நெற்குலை வானளாவி விளங்குகிறது.[7] மன்மதனுடைய வில் என்னும்படி கரும்புகள் ககனமுகடு முட்டிப் பூந்துணர்த்தலை வணங்கி நிற்கின்றன.[8] கமுகும் கரும்பும் ஞாயிறோன் தேருக்கு அழகு செய்கின்றன.[9] தேருக்கு இவற்றைக்கட்டி அலங்கரிக்கும் மரபுக்கேற்ப இவை ஞாயிறு வரை வளர்ந்துள்ள குறிப்பு உணர்த்தப்படுகிறது. இவ்வாறு மரங்கள் முதலியவற்றின் வளச்சிறப்பை உணர்த்தும் முறையில் மிகைக் கற்பனைகள் அமைக்கப்பட்டுள்ளன.

நீர்வளத்தையும், மிகுதியையும் உணர்த்தும் நோக்கிலும் மிகைக் கற்பனைகள் பிறந்து உள்ளன. ஐராவதத்தின் மதநீரும், விண்ணாறாகிய கங்கையும் எதிர்கொள்ள, வானவெளியையும் கற்பகக்

---

1. 424
2. 428
3. 28
4. 50
5. 444
6. 444
7. 60
8. 55
9. 423

காட்டையும் கடந்து, கடல் சுருங்க, வையை அலை பெருகி விளங்குகிறது.[1] வையைப் புனல் கற்பகக் காட்டை அலைத்தோடுகிறது.[2] மலைபடுமுத்தும் வயிரமும் பிறமணிகளும் வையையின் மறிதிரைக் கையால் வாரி எறியப்பட, ஐராவதம் பிளிறி ஓடுகிறது.[3] அம்மட்டிலன்றி வையை, தன்னிடம் படியும் தடங்களிற்றை எடுத்து ஐராவதத்தோடு முட்டவிடுகிறது; எட்டுத்திசையிலும் உள்ள மதயானைகளையும் பந்தடித்து விளையாடுகிறது.[4] கங்கையாற்றோடு பந்தயமிட்டு வையையாறு நித்திலப்பந்தாடவும், மணிக்கழங்காடவும் தனது அலைக்கையெடுத்து விளிக்கிறது.[5] கற்பகத் துகளில் மூழ்கிய ஐராவதம் பிடியோடு ஆடுமாறு மதுரையில் தேனருவி பொழிகிறது.[6] காவிரியாறு யானை மருப்பையும், மணியையும், நித்திலத்தையும், மகளிர் மார்பில் விளங்கும் களபம், குங்குமம் இவற்றின் சேற்றையும் கரைத்துச் செல்வதால் பள்ளமான கடலும் மேடாகின்றது.[7] புவனம் முழுவதையும் கரைக்கும் கடையூழி வெள்ளமும் சுருங்கும்படி எழுந்து, எட்டுமலைகள், அண்டகூடங்களில் எல்லாம் விளையாடி, உலகை வளைக்கும் கருங்கடல், பெரும்புறக்கடல் ஆகியவற்றை வாய்மடுத்து வரும் புனலை உடையது காவிரி.[8] காவிரியில் பாயும் செங்கயல்கள் கற்பகத்தில் படர்ந்துள்ள காமர் வல்லிக் கொடியில் ஏறி இருக்கின்றன; இக்காட்சி காமன் விழாவுக்கு மீன் கொடி ஏற்றுவது போல் உள்ளது.[9] மதுரைவாளைமீன் நிலவைச் சென்று மோத மதிமுயற்கலை கிழிந்து அமுத வெள்ளருவி பாய்கிறது; மோதி மீண்ட அவ்வாளையால் தாக்கப்பட்டுத் தாமரை மலர்களில் தேனருவி பாய்கிறது.[10] மற்றொரு மதுரைப் பழனவாளை மேகத்தைக் கிழித்துக் கற்பகக்காடு, ஆகாயகங்கை இவற்றைக் கடந்து நிலவின் கறை தடவி விண்மீன்களைச் சிதைத்துக்ககன முகடு பிளந்து பெரும்புறக் கடலை உழக்கிச் சினங்கொண்டு சுறவினோடும் விளையாடும்.[11] பிறிதொரு மதுரைக் கயல்மீன் பலாக்கனி, தெங்கின்கனி சிந்த மோதி மேகம் சூழ்ந்த மருதச் சோலைகள் மட்டுமின்றி ஏழு உலகங்களையும் ஒருங்கு அலைத்து அண்டப் புறச் கவரை இடித்துக் கொண்டு பெரும்புறக் கடலில் நீரையுண்டு உழக்கித் திக்கெட்டும் முட்ட வெடி போய்ப்

1. 59
2. 65
3. 77
4. 84
5. 88
6. 90
7. 427
8. 431
9. 426
10. 18
11. 26

பாய்கிறது.[1] புள்ளூரில் மேகம் சுருளுமாறு தாவிய குழவுப்பகட்டு வாளைமீன் காமேதேனு வயிற்றில் முட்ட, அது சேங்கன்று என்று கருதி மடியில் பால்மடை திறப்பக் கற்பக மலர்த் தேனருவியோடு பாலும் கலந்து சொரிந்து, ஏரிகள், வாய்க்கால்கள் எல்லாம் நிரம்பி விளங்குகின்றன.[2] மடுவில் வெடிபோம் வரிவாளை, இருண்டகடல் நீர்ப்பரப்பு என்று கருதி அகல் வான்மிசைத் தாவப் பாகீரதித் தீம்புனலில் வீழ்ந்து மகிழ்கிறது.[3] வானத்து மேகங்களும் உடுக்கூட்டமும் கெட்டு ஓட்டம் எடுக்குமாறு தாவும் வெடிவாளை, மதியினை அகடு உடையதாக்கித் தெள்ளமுத அருவி பொழியச் செய்து காவிரியை ஆயிரமுகக் கங்கையாகச் செய்கிறது; மீண்டும் ஐராவதம் பிளிறுமாறு தாவிக் கற்பகக்காட்டை உழக்கிப் பொன்தாது எழுப்பி அப்பூந்துகட் படலத்தால் தெய்வ நதியைப் பொன்னி நதியாகச் செய்கிறது.[4]

மாடங்களின் உயரத்தையும் சிறப்பையும் உணர்த்தவும் மிகைக்கற்பனைகள் எழுந்துள்ளன. மதுரை மாடங்கள் கற்பக தருவின் நுனியை அளாவி உயர்ந்த செய்தியைத் 'தருமுகத்து நிமிர்குடுமி மாடமலிகூடல்' என்று காட்டுகிறார்.[5] மதுரை மாடங்களில் மகளிர்போல் மயில்கள் ஆடத் தேவர்கள் தம் தோள்களை மடித்துத் தலை நிமிர்ந்து பிடரியைக் கையில் தாங்கிக் கொண்டு பார்க்கின்றனர்.[6] தேவ உலகினும் மாடம் உயர்ந்துள்ள தென்பதை இவ்வாறு உணர்த்தக் காண்கிறோம். கந்தபுரி மாடங்களில் பூக்கொடிகள் நுடங்கி அசையும் சாயலையும், பளிங்கு நிலாமுற்றத்தின் உச்சியில் மரகதத்தின் ஒளிகாலும் தோற்றத்தையும் கண்டு, விண்ணில் ஆகாய கங்கைக் கரையில் கிளைத்த பசும்புல் என்று கருதிக் காமதேனு செந்தா வளைக்கிறது.[7] திரிபதிசய அணிநலம் தோன்ற இந்த மிகைக்கற்பனை விளங்குகிறது. மாடத்து நீலஒளியில் மூழ்கும் ஐராவதம் கருநிறம் பெற்று விளங்கியதால் பூமியிலிருந்து வந்த யானையோ என்று தேவ மகளிர் ஐயுறுகின்றனர்; எனவே அது தன் வெள்ளையுடம்பு சேறு படிந்தது என்று கருதிக் கங்கைப் புனலில் மடுக்கிறது.[8] மாடங்களில் வெயில் விரிக்கும் நிறம் பொருந்திய மணிகளால் ஆகாய கங்கையில் உள்ள

---

1. 56 5. 180
2. 395 6. 150
3. 406 7. 370
4. 447 8. 371

கொழுந்தாமரைகள் முறுக்குடைந்து தேன் வழியுமாறு மலர்கின்றன.[1] வேளூர்ப் பளிக்கறை நாடோறும் மதிக் கடவுள் ஏறிஏறி இளைக்கும்படி உயர்ந்துள்ளது; நிலவின் முயற்கறை நீங்கும்படி ஒளி காலுகிறது.[2] கமலையில் உள்ள மாளிகை தேவர்க்கும் கண்பார்க்க முடியாதபடி உயர்ந்துள்ளது; பிடரியைக் கையால் தாங்கி மதியானது அண்ணாந்து பார்க்கும்படி விண்ணைக் கடந்து ஓங்கிய செய்குன்றம் அம்மாளிகையில் உள்ளது.[3] கமலைப் புரிசை, கற்பகக் காட்டுக்கிட்ட வேலி போன்றுள்ளது[4] துகிற்கொடி, ஞாயிறோனுடைய தேர்ப்புரவியை வாவிச் செல்லுமாறு துரக்கும் முட்கோல் போல் உயர்ந்து விளங்குகிறது.[5] துகிற் கொடிகள் மேகத்தைச் சுருட்டி, விண்ணில் தேவமாதர்கள் தாழ்குழலை நீவி, நுதல் வியர்வு துடைக்கின்றன; மீனாட்சியைத் தரிசிக்கும் சமயமிது என்று கூவியழைக்கின்றன.[6] வான் நிமிர்ந்திட ஆடும் துகிற்கொடி நிலவோனின் கூன் நிமிர்ந்திடுமாறு நிமிர்ந்து விளங்குகிறது.[7] கமலையில் விண்தொட நிவந்த துகிற்கொடிகள் மண்டலம் போழ்ந்து மதி அகடு உடைக்கின்றன; துகிற்கொடிகள் வேனிலிற் பயின்ற வெப்பம் தீர்க்குமாறு நிலவு அமுதம் வழங்குகிறது.[8] கொடியோர் தீங்கு செய்யினும் மதியோர் அதைப் பொருட்படுத்தாது நன்மை செய்வர் என்ற கருத்தும் இக்காட்சியால் புலனாகிறது என்று உணர்த்துகிறார் அடிகள். மதிற் கொடிகள், முயற்கறையோடு தேய்வுற்று இளைத்து முழுமதி குறைமதி ஆகுமாறு, முகிலைத் தொடுகின்றன.[9] வளைந்த பிறையின் முனையை உரிஞ்சுகின்றன சில கொடிகள்.[10] சில துகிற்கொடிகள் முகிற் கொடி போல் மேகத்தை அளாவி நிற்கின்றன; பளிக்கறை வெள்ளொளி வெள்ளத்தில் அவை மூழ்கிக் காணுதல் பாகீரதிப் புனலில் குடைந்தாடும் மகளிர் போல் உள்ளது.[11]

மக்களும் பிற உயிரினங்களும் கூட விண்ணுலகோடு நேரிடையான தொடர்புகொண்டு விளங்குவதாக வருணிக்கக் காண்கிறோம். மதுரை மகளிர் கண்ணிமைக்காமல் பால் நிலா முற்றத்தில் அமர மகளிரோடு அம்மானை ஆடுகின்றனர்; எனவே ஐயம்

---

1. 425
2. 431
3. 581
4. 566
5. 49, 371
6. 72
7. 147
8. 316
9. 358
10. 425
11. 431

நுண்இடையளவில் அல்லாது முழு உடலளவிலும் தோன்றத் தேவரும் மண்ணவரோடு தேவமகளிரோ மண்ணுலகத் தவரோ என்று மருளுகின்றனர்.[1] இவ்வாறு தேவமாதரும் மண்ணுலக மகளிரும் மேனிலை மாடத்தில் அம்மானை ஆடும் போது கற்பகமரம் நிழல் தருகிறது; மண்மகளிர் எழுதிக் கொண்டுள்ள தொய்யில் அடையாளக் குறிபோல் உள்ளது.[2] சோலைக் குரங்குகள் மதியில் உள்ள முயற்கலைமேல் துள்ளி உகளும்; அந்த ஆரவாரத்துக்குப் பதுங்கி மேகம் வைக்கோற்படப்பையில் ஏறும்; பிணையலிடும் போது எருமைகளோடு மேகத்தையும் பூட்டி அடிக்க அவை இடிக்குரல்விட்டு ஆர்க்கும்.[3] முசுக்கலை மேகத்து நிலவில் பாய அமுதம் நெக்கு உகும்.[4] சில மதுரை வண்டுகள் கற்பகச் சோலைத் தேன் குடித்துக் குமட்டி ஐராவதத்தின் மதநீரை உண்கின்றன.[5] பொன்தருவில் களிநறவுண்ட பெடைவண்டோடு ஆண்வண்டு கலந்து முயங்குகிறது.[6] மாடங்களில் தவழும் கலைமதியைத் தேனிறால் என்று கள்ளுண்ட மகளிர் பிடித்துத்தர வேண்ட, ஆடவர் நிலவைப் பிழியத் தலைப்படுகின்றனர்.[7] சிறுவர்கள் காவிரித்துறை தோறும் நித்திலம் குவிந்துள்ள மணற்குன்றுகளில் ஏறிக் கலைமதிக் கலச அமுதத்தை அள்ளுகின்றனர்.[8] முருகனுடன் விளையாட வருமாறு அம்புலியை அழைக்கும்போது இவ்வாறு கூறுவதால், நிலவு வரமறுப்பின், பிடித்துக் கொண்டு வரப்படும் என்ற குறிப்பு இதில் உணர்த்தப்படுவதாக நினைக்க இடமுண்டு.

வேறுபிற முறைகளிலும் மிகைக் கற்பனைகள் இடம் பெறுகின்றன. எருமைகள் பால் பொழிய அது பொய்கையாக விளங்குதல் கூறப்படுகிறது.[9] காவிரிப்பெண் காமதேனு பொழிந்த பாலையும் மடை அடைத்த சோற்றையும் கடலுக்குத் தம் அலைக் கையால் ஊட்டுகிறாள்.[10] பலாப்பழம் விண்டு தேன் உவட்டெடுழும்; சுறாமீனால் தாக்குண்ட கமுகின் குலை நெக்குத் தேன் ஒழுகும்; அவை தேன்குளமாகப் பெருக, யானை குடித்துப் பிளிறும்.[11] மகளிர் நகைநிலவுக்குச் சந்திரகாந்தக்கல் பதித்த மாடங்கள் உருகிப் பெருகும் வெள்ளம் கடலின் உவர்ப்பையும் புலால் நாற்றத்தையும் மாற்றுகிறது.[12]

---

1. 196	5. 8	9. 24, 324
2. 469	6. 93	10. 422
3. 28	7. 396	11.52
4. 42	8. 418	12.372

கந்தபுரி அகழி கடல் போன்றுள்ளது; எனவே மேகம் வந்து நீர் உண்கிறது; மேகத்தை யானை என்று கருதிக் களிறு பிளிறுகிறது; சக்கரவாள கிரி என்று கருதுமாறு உயர்ந்த மதில் உள்ளது; அம்மதில் ஆகாயத்துக்கு ஏறும் ஏணியாகவும் கற்பகமரத்துக்கு இடும் வேலியாகவும் ஏழுலகையும் வளைத்து விளங்குகிறது.[1] வேளூர் மதில் ஏழுலகையும் கடந்து அண்டகூடத்தை அளாவுகிறது; எனவே பாரம் தாங்காமால் புவனம் முழுவதும் சுமக்கும் ஆமை முதுகு அசைக்கிறது; ஆயிரம் தலை ஆதிசேடன் முடவுப்படம் கிழிந்து மூளை கொதிக்கிறது; திசையானைகளின் பிடர்த்தலை கழுத்தொடு முறிந்து கவிழ்கின்றன; அட்டமா நாகங்களும் வடவைக் கடுங்கனற்கண் பிதுங்கி நிற்கின்றன; ஏழுலகோரும் சென்று வருவதற்கு வாயில் எனக் கோபுரத்தின் ஏழு அடுக்கும் ஏழுநிலையும் முறையே காணப்படுகின்றன.[2] பருதியும் மதியும் உட்புக முடியாத உயர்ந்த மதிலைஉடையது வேளூர்.[3] தில்லையில் பலாமரங்கள் நாகலோகத்தளவும் வேர்விட்டுப் பழங்களைத் தாங்கியுள்ளன; நடராசர் தாண்டவத்துக்குக் காரணராகிய பதஞ்சலி முனிவரை இவ்வுலகுக்குத் தந்தமை கருதி நாகலோகத்துக்கு அவற்றை அப்பலாமரம் வழங்குவது போன்றுள்ளது.[4]

இவ்வாறு அடிகளின் கற்பனை விண்ணுலகத்தையும், பாதாள உலகத்தையும் கடந்து செல்லுமளவு விரிகின்றது. தற்குறிப்பேற்றத்துள் இத்தகைய கற்பனைகளை அடக்குதல் தகும். அடிகளின் பாடல்கள் கற்பனைக்கு உறைவிடமாகத் திகழ்கின்றன என்பது பொருந்தும். அடிகளில் கற்பனைகள் குறித்து டாக்டர் மு. வரதராசனார் குறிப்பிடும் போது,

> ‘குமரகுருபரர் அக்காலத்துப் புலவர்களுள் ஒரு தனிச் சிறப்பு உடையவராக இருந்த போதிலும் உண்மையான படைப்புத்திறன் வாய்ந்த பெருங்கவிஞராக விளங்கிய போதிலும், அந்தக் காலத்தின் வேகம் அவரையும் விடவில்லை. அளவு கடந்த கற்பனை வருணனைகள் அமைப்பதில் அவருடைய புலமை நெஞ்சமும் ஈடுபட்டது........ அவை சுவையாக உள்ளன என்றாலும், பொழுது போக்குக்கு உரிய வேடிக்கையாகவே உள்ளன’

---

1. 373
2. 433
3. 434
4. 457 : 17-22

என்கிறார்.[1] எனினும் அடிகள் இத்தகைய கற்பனைகளைப் பாடுதலையே முதன்மை நோக்கமாகக் கொண்டவரல்வர் ஆதலாலும், இனிப்புச் சுவையோடு மருந்து புகட்டுதல்போல விழுமிய இறையுணர்வுக் கருத்துக்களை இத்தகைய சுவைக்கற்பனைகளோடு அமைத்து, உலகியல்கூறிப் பொருள் இது என்றவர் ஆதலாலும் இவற்றை மதிப்புயர்ந்த இலக்கியப் பண்புகளாகவே கருதுதல் தகும். அடிகளின் பாடல்களில் உவமை, உருவகம் முதலியவற்றை விடத் தற்குறிப்பேற்றம் சான்ற கற்பனைகள் செம்மாந்து தழைத்திருக்கின்றன எனலாம். பெரும்பாலும் வானளாவிய கற்பனைகளைப் படைத்திருப்பதன் மூலம் அடிகள் தமது விரிந்து பரந்த அறிவாற்றலையும், உள்ளத்தையும், மேலான பரம்பொருள் வேட்கையையும் புலப்படுத்திப் பயில்வாரையும் அவ்வகையில் அழைத்துச் செல்கிறார் எனலாம்.

(ஊ) பிற அணிகள்

முற்குறித்த அணிகள் அடிகளின் பாடல்களில் பயின்று வழங்குவதோடு பிற அணிகளும் அமைய அடிகள் பாடல்கள் பொலிகின்றன. தெய்வம் உண்டென்பவர்கள் தீயவை செய்யப் புகுந்தால் தெய்வமே அவர்களை ஒறுக்கும். ஆயின் தெய்வம் இல்லை என்பார்க்கு இத்துன்பம் இல்லை, இதனை விளக்கும் அடிகள் 'தம் இன்புதல்வர்க்கன்றே பலகாலும் சொல்வார் பயன்' என்று வேற்றுப் பொருள் வைப்பணியாகக் கருத்தைக் கூறி உணர்த்தக் காண்கிறோம்.[2] மாசிலாமணி தேசிகரைச் சிறப்பிக்கும் முறையில் வேற்றுமையணி கையாளப்படுகிறது. சிந்தாமணி சிந்தித்தவற்றைத் தருவது; கடலிற் பெறப்பட்டது. ஆயின் மாசிலாமணி கருத்துக் கெட்டாப் பேரின்பம் தருவது; அருட்கடலைத் தருவது.[2அ] இவ்வாறு கூற்றிலும் குறிப்பிலும் ஒப்புடைய மாசிலாமணியும் பிறமணிகளும் பெற்றுள்ள வேற்றுமை தெளிவாக்கப்படும். கருதிய பொருளைத் தொகுத்து அதனைப் புலப்படுத்துவதற்கு ஒத்த ஒன்றை உரைக்கும் ஒட்டணியும் கையாளப்படுகிறது. கொல்லனுடைய பெரிய சம்மட்டியால் தகராத கல்லும் சிற்றுளியால் தகர்ந்து விடும் என்பது[3] பெரிய கல்வியுடையாரும் சிறிய கல்வியுடையாரால் தோல்வியுறுவர் என்னும் கருத்தை உணர்த்தி நிற்கிறது. யானை உண்ணும் கவளத்தில் ஒரு சிறிது வாய்தப்பின் யானை அதனால் துயரமுற்று விடாது; அதைக் கொண்டு எறும்பு ஒருகோடி கிளையோடு அயின்று உய்யும் என்று கூறுவதில்,[4] அரசன் வருவாய் சிறிது குறைந்தாலும் அதனால் அவனுக்குத் துன்பம் வராது, ஆனால் அதைக் கொண்டு வேறு பலரும்

1. தமிழ் இலக்கிய வரலாறு, (மு.வ) பக். 200 - 201
2. 279
2அ. 571
3. 219
4. 243

பிழைப்பர் என்ற கருத்து ஒட்டணி முறையில் உணர்த்தப்படுகிறது.முரண் விளைந்தழிவணியாக ஒரு பாடல் அமைக்கப்பட்டுள்ளது. மன்மதன் எய்யாது (பிறரறியாமல், அம்பை எய்யாமல்) நின்று அம்புகளை எய்கிறான்; இளையாள் (இளைத்தலில்லாதவள்) அதனால் இளைத்து விளங்குகிறாள்; இதனைப் புத்தியில் வையாதார் (அறியாததாயர், வையாதவர்கள்) வைகின்றார்கள்; எனவே மதியார் (நிலவணிந்த சிவன், மதிக்காதவர்) தாம் மதித்திடுதல் வேண்டும். மெய்யாத மெய் கடிந்து வீடாத வீடெய்தி வீழார் வீழச் செய்யாள் செய் சரக்கறையாம் மதுரைச் செல்வனாகிய இறைவன் தலைவிக்கு அருளவேண்டும் என்பதை இவ்வாறு விரோதா பாசமாகப் பொருள்படுமாறு அமைத்து விளக்குதல் குறிக்கத்தகும்.[1] ஒன்றுக்கொன்று முரணான சொற்களால் இருபொருள் நயம் தோன்ற இப்பாடல் அமைக்கப்பட்டுள்ளது. வண்மை இல்லாதவன் செல்வத்தைவிட வண்மைக்குணம் உடைய வறியவனுடைய நல்குரவு நனிநல்லது; ஏனெனில் வறியவன் அருளிலன், அன்பிலன், கண்ணறையன் என்று இகழப்படான்[2] என்பதில் வண்மையில்லாச் செல்வன் இகழப்படுவான் என்பது உணரத்தகும். ஒரு பொருளைப் பழிப்பதற்கு வேறு ஒன்றினைப் புகழும் மாறுபடு புகழ்நிலைஅணி இதில் அமைந்துள்ளது. பழிப்பதுபோல் புகழும், புகழாப்புகழ்ச்சியணி முறையிலும் சில கருத்துக்கள் கூறப்படுகின்றன. இறைவன் வியாக்கிரபாதருக்குத் தன் பொற்கழல் காட்டி அவருடைய கட்டிலை வாங்கினான்; பதஞ்சலியின் படுக்கையையும் எடுத்தான் என்பதில்[3] இறைவனை நித்திப்பதுபோல் புகழும் குறிப்பு உள்ளது.

கற்புடைய கைம்பெண்டிரும், ஐம்புலனும் ஒருவழிப்படுமாறு பொய் கடிந்த துறவியரும், மொய்ப்புடைய வீரரும் எமனுக்கு அஞ்சமாட்டார்கள் என்று கூறும் பாடல்[4] புகழ்ஒப்புமைக்கூட்டஅணி நலம் சான்று விளங்குகிறது. குங்குமச் சேறாடும் கொடிமாட வீதியில் வெண்சங்கு மொய்க்கும் சங்கத் தமிழ்க்கூடல் என்று[5] மதுரையின் செல்வச்செழிப்புக் குறிக்கப்படுதலின் வீறுகோளணியாகக் கொள்ளத்தகும். இவ்வகையில் மதுரை, கமலை, வேளூர் காசி முதலிய நகர வளங்களைக் குறிக்கும் பகுதிகள் இவ்வணி நலம் உடையனவாக எண்ணத்தகும்.[6] இறைவன் அணிந்துள்ள கொன்றையின் தாது உதிர்வதால் அவன் அணிந்துள்ள பூந்துகில் மீது பரந்து விளங்கி

---

1. 122; கு.பி.தி. (உ.வே.சா) பக். 131
2. 272
3. 463
4. 247
5. 174
6. 18, 27, 52, 55, 59, 97, 150, 206, 320, 324, 340, 372, 427, 656

அத்துகிலைத் திருமாலுடைய பொன்துகில் போல் செய்தது என்பதில் திரிபதிசயஅணி அமைக்கப்பட்டுள்ளது.[1] பொன் துளிக்கின்ற விமான கலசத்தின் ஒளியை ஞாயிற்றின் ஒளி என்று கருதித் தாமரை மலரும் காசி நகரம் என்பதும் இவ்வணி அமைந்த கூற்றாகும்.[2] வாக்கு, மனம், யாக்கை ஆகிய மூன்றுகரணங்களும் மாசிலாமணிதேசிகர் புகழை நவிற்றியும், நினைத்தும், துணைத்தாள் இறைஞ்சியும் இன்ப முற்றன என்பதில்[3] நிரனிரைஅணி அமைந்திருத்தல் குறிக்கத்தகும். குருவினுடைய திருவாரூரிற் குறுகியதால், ஒரு மாத்திரை அளவு பேரிற் குறுகியதாகக் கூறுதல்[4] மாத்திரைச் சுருக்கம் என்றும் சொல்லணி முறையில் சீவன் சிவனானதைக் குறிப்பதாகும். மன்மதன் தலைவியின் உயிரை முடித்திட வல்லனாய் உள்ளான்; இதைக் காமனை எரித்த காசிக் கண்ணுதவார்க்கு ஓதீர் என்பதில்[5] கருத்துடை அடைகொளிஅணி விளங்குகிறது. இவ்வாறு பல்வகை அணிநலமும் அமையப் பாடியுள்ளார் அடிகள்.

உ. யாப்பு

ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி; வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய கவிவன்மையை விரும்பி வேண்டும் அடிகள்[6] அவ்விருப்பத்தை நன்கு நிறைவேற்றிக் கொண்டுள்ளார் எனலாம். அனைத்து யாப்பு வகைகளையும் பேராற்றலுடன் அமைத்துக் கவிநலங்கள் பலவும் விளங்கப் பாடியுள்ள திறம் குறிக்கத்தகும். யாப்பிலக்கணத்துக்குரிய இலக்கியமாகவே அடிகளின் சிதம்பரச் செய்யுட்கோவை செய்யப்பெற்றுள்ளமை ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும். இராமலிங்கர் தம் செய்யுட்டிறம் பற்றி விளக்கும் போது, யாப்பருங்கலக் காரிகையில் காட்டப்பட்டுள்ள அனைத்து யாப்பு வகைகளிலும் சிறப்பாகச் செய்யுட்கள் இயற்றியுள்ள

---

1. 326
2. 679
3. 587 : 25-28
4. 588
5. 609
6. 1 : 118; 701; 707

அடிகளின் திறம் முன்னோடியாக விளங்குதல் டாக்டர் சுப. அண்ணாமலை அவர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.[1]

அடிகள் பாடியுள்ள யாப்பு வகைகள்

பாவும் பாவினமுமாக 43 யாப்பு வகைகளில் அடிகளின் 813 பாடல்கள் காணப் பெறுகின்றன; 9 வகையான ஆசிரிய விருத்தங்களில் அடிகள் 321 பாடல்கள் பாடியுள்ளனர்; அவற்றுள் பன்னிருசீர் விருத்தம் 181; நேரிசை வெண்பா யாப்பில் 185 பாடல்களும், கலித்துறையாப்பில் 117 பாடல்களும் உள்ளன; எஞ்சிய பாடல்கள் பிறயாப்பு வகைகளில் பாடப்பட்டுள்ளன.[2] எனவே ஆசிரிய விருத்தம், நேரிசைவெண்பா, கலித்துறை ஆகிய யாப்பு வகைகள் அடிகளால் பெரிதும் விரும்பிக் கையாளப்பட்டுள்ளமை அறியத்தகும்.

ஆசு கவி

எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு ஆகிய இவை இன்னஇன்னவாறு இருக்கும்படி பாடவேண்டும் என்று கேட்கும்போது அப்பொழுதே அவை அமையப்பாடுவது ஆசுகவி எனப்படும்.[3] இதனைக் கடுங்கவி என்றும் கூறுவர். உடனே பாடுதல் என்பது அரிய செயலாகும், திருச்செந்தூரில் முருகன் மீது பாடிய கலிவெண்பா உடனே பாடப் பெற்றதாகும். மாசிலாமணிதேசிகர் மீது பாடிய பண்டாரமும்மணிக்கோவையும், கலைமகள் மீது பாடிய சகலகலாவல்லி மாலையும் ஆசுகவிகளாக உடனே பாடப்பட்டவை என்று கருதலாம். யாப்பருங்கலக் காரிகையில் கூறப்பட்டுள்ளவாறு, சிவனைப் பொருளாகக் கொண்டு பாடுமாறு வேண்டியாங்குச் சிதம்பரச் செய்யுட்கோவை பாடப்பட்டதாதலின் அதனையும், மன்னன்

---

1. "Next to kumarakuruparar of the 17th century who brought out an outatanding work of Poetry versifying in accordance with all the forms stipulated by the prosodical grammar, 'Yapparunkalakkarikai' our saint demonstrates a variety of poetical forms" - A critical study of saint Ramalinkar's works, Dr. S.P. Annamalais thesis, Madras University, 1968, Pp.183-184
2. விரிவு பிற்சேர்க்கை 5(அ), 5(ஆ) இல் தரப்பெற்றுள்ளது.
3. வச்சணந்திமாலை, செய்யுளியல் 2 ; இல. விள. பாட். 4

வேண்டியாங்குப் பாடிய நீதிநெறிவிளக்கத்தையும் ஆசுகவிகளாகக் கொள்ளுதல்தகும்.

மதுர கவி

ஓசையும் பொருளும் இனிதாய்ச் செஞ்சொற்களை அமைத்து அணிநலமும் தொடை நலமும் விளங்க அவையோர் துதிக்க அமுதெனப் பாடுதல் மதுர கவி எனப்படும்.[1] இஃது இன்பகவி என்றும் கூறப்படும். இவ்வியல்பு அடிகளின் பாடல்களில் பரவலாக காணப்படுவதே எனலாம். ஓசையினிமை இவ்வகைக் கவியில் சிறப்பாகக் குறிக்கப்படுகிறது என்று கொள்ளலாம். யாப்பிலக்கணத்தின் படி அமைந்த சந்தப் பாடல்கள் அடிகள் பாடல்களில் 49 அமைந்துள்ளன. 39 வகையான சந்தக் குழிப்புக்களில் அவற்றை அமைந்திருக்கக் காண்கிறோம்.[2] அருமையாக வழங்கும் 'தய்ய' என்னும் வாய்பாட்டுச் சந்தத்தை அடிகள் பயன்படுத்தியிருப்பதை உ.வே.சா காட்டுகின்றனர்.[3]

'சிறிய வெனதுபுன் மொழியும் வடிதமிழ்.
தெரியு மலர்முது சொல்லெனச் சூட்டினர்'[4]

என்ற வரியமைந்த பாடலில் 'தனன தனதன தனன தனதன தனன தனதன தய்யனத் தாத்தன' என்னும் சந்தம் இனிமையாக ஒலிக்கக் காண்கிறோம்.

'மலரி லஞ்சிதொறு முலவு கந்தபுரி
மருவு கந்தனையெ மையனைக் காக்கவே'[5]

என்ற வரியமைந்த பாடலில் 'தனன தந்ததன தனை தந்ததன தனை தந்ததன தய்யனத் தாத்தன' என்னும் சந்தம் ஒலிக்க காண்கிறோம்.

'மருவிய கடமப வனமது புகுந்தெ
மதுரைய ரன்முன்பு சொல்லீரே'[6]

என்ற வரியமைந்த பாடலில் 'தனன தனந்த தனதன தனந்த தனதன தனந்த தய்யனத் தாத்தன' என்ற சந்தம் இனிது ஒலிக்கின்றது.

---

1. வச்சணந்திமாலை, செய்யுளியல் 3; இல. விள.பாட். 59
2. விரிவு, பிற்சேர்க்கை 6-இல் தரப்பட்டுள்ளது.
3. கு.பி.தி. (உ.வே.சா) பக். 52
4. 4
5. 352
6. 134

'தமிழ் மது ரையிலொரு குமரியை மருவு
சவுந்தர மாறர் தடம்பொற் புயங்களே'[1]

என்ற வரியமைந்த புயவகுப்புப் பாடல் 'தனதன தனதன தனதன தனன தனந்தன தான தனந்தத் தனந்தன' என்றும் சந்தத்தில் இலங்குகிறது.

'ஏமவெற் பென்றுகயி வாயவெற் பென்றுமல
யாசலத் தென்று முறைவார்
கோமகட் கன்பர்மது ரேசர்முச் சங்கம்வளர்
கூடலிற் சென்று புகலீர்
தாமரைக் கண்டுயிலு மாலெனச் சந்தமலி
சாரலிற் நுஞ்சு முகில்காண்
மாமதிப் பிஞ்சுமிரை தேர்குயிற் குஞ்சுமுயிர்
வாய்மடுத் துண்டொ ழிவதே'

என்ற பாடல்[2] 'தானனத் தந்ததன தானனத் தந்ததன தானனத் தந்த தனனா' என்னும் சந்தத்தில் செவியார ஒலித்தல் சொல்லியும் கேட்டும் இன்புறத் தகும். இவ்வாறு அடிகளின் சந்தப் பாடல்கள் அனைத்தும் குறிப்பிட்ட சந்தங்களில் அமுதமென விளங்கக்காண்கிறோம். மீனாட்சியம்மை குறத்தில் 'சிந்து' என்னும் இசையினிமை சான்ற பாடல்கள் 29 இடம் பெற்றுள்ளமையும் நினைக்கத்தகும்.

"ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளுடைய செய்யுட்களில் தனிச்சிறப்புப் பெற்று விளங்குவது அவற்றின் இன்னோசையேயாகும். ஏனைப் பாட்டுக்களிலிருந்து இவருடைய செய்யுட்களைச் செவிப் புலன் கொண்டே வேறுபடுத்தி விடலாம். இவற்றைக் கேட்கும் போது நமக்குத் தென்பாண்டி நாட்டுப் பொருநை நதியின் ஓட்டம் ஞாபகத்திற்கு வருகிறது. சொற்களும் சொற்றொடர்களும் ஒன்றனோடு ஒன்று செவிக்கினிமை தரும் வண்ணம் பொருந்தி அமைந்துள்ளன. பொருளிலே கருத்துச் செல்வதற்கு முன் செய்யுட்களின் ஓசை நம் கருத்தை இழுக்கின்றது."

1. 115
2. 184

என்று[1] உ.வே.சா பாராட்டுகின்றனர்.

"பொருநையாற்றில் பொன்திணிந்த புனலோட்டத்தைக் குமரகுருபரருடைய பொருள் பொதிந்த கவியோட்டத்திற் காணலாம். செந்தமிழ் கேட்டுப்பழகிய செவிக்குக் குமரகுருபரர் வாக்கு இஃது என்று எளிதிற் புலப்படுதற்குரிய தனித்ததோர் இனித்த நடையை உடையது அடிகளின் செய்யுள்."

என்று மற்றொருவர் மதிப்புரைக்கின்றார்.[2]

'பாடாள் அம்மனையும் நாடாள் எம்மனையும்
பயிலாள் தண்டலையும் முயலாள் வண்டலையும்
ஆடாள் மஞ்சனமும் தேடாள் அஞ்சனமும்
அயிலாள் அன்னமுமே துயிலாள் இன்னமுமே'[3]

என்பது போன்ற எதுகை நலம் சிறந்த பகுதிகளும்,

'வீற்றிருக்கும் சேயிழைக்கும் பசுங்கமுகு வெண்கவரி வீசும்'[4]

என்பது போன்ற முரண் நலம் சிறந்த பகுதிகளும்,

'வானே நிலனே கனலே மறிபுனலே
ஊனேயவ் வூனி லுயிரே யுயிர்த்துணையே
ஆனேறு மேறே யரசே யருட்கடவே
தேனே யமுதே யளியோங்கள் செல்வமே'[5]

என்பது போன்ற இயைபுத்தொடை சிறந்த பகுதிகளும், இவ்வாறே பல்வகைத் தொடைநலம் சான்ற பகுதிகளும் அடிகளின் நூல் முழுவதும் விரவி நின்று செய்யுட்களின் ஓசையைப் பொலிவுறுத்துதல் உணரத்தகும். அணிநலம் சிறந்திருத்தல் முன்னர் உணர்த்தப்பட்டது. எனவே அடிகள் மதுரகவி வல்லவர் என்று குறிப்பிடுதல் சாலப் பொருந்துவதாகும்.

சித்திரகவி

மாலை மாற்று, மாத்திரைச் சுருக்கம் முதலிய பலவகை அமைப்புக்களில் ஏற்ற சொற்களால் மரபு வழுவாமல் பாடுவது சித்திரகவி எனப்படும்.[6] இதனை மிறைக்கவி என்றும் அருங்கவி

1. கு.பி.தி. (உ.வே.சா) பக். 24
2. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள். 2–ஆம் மாநாடு வித்துவான் அ.இராசகோட்டியப்பன் பக்.37
3. 163
4. 58
5. 502
6. வச்சணந்தியாலை, செய்யுளியல், 4: இல.வி.71

என்றும் கூறுவர். அந்தாதியாக அடிகள் பாடியுள்ள திருவாரூர் நான் மணிமாலை, சிதம்பர மும்மணிக்கோவை, பண்டாரமும் மணிக்கோவை, மதுரைக் கலம்பகம், காசிக்கலம்பகம் ஆகியவை அரிய பாமாலைகளாகவும், கோவைகளாகவும் அழகிய சித்திரங்களாகத் திகழ்தல் உணரத்தகும். செய்யுள் அமைப்பில் பலவகை அழகு நலமும் புலப்படப்பாடுதல் சித்திரகவியின் பொது இயல்பாகக் கருதலாம். அடிகளின் பாடல்கள் பலவும் ஓவியக் காட்சிகளாக, அருங்கவிகளாகப் பயில்வோரைப் பலவகையிலும் ஈர்த்து விளங்குகின்றமை தெளிவு. மதுரைத் தமிழ்ச் சங்கத்தையும் நீரில் விளங்கும் சங்கையும் சிலேடையாகக் கூறும்போது.

'குண்டுநீர்ப் பட்டத்து ஒண்துறைச் சங்கமும்
வண்டமிழ்க் கூடலின் தண்துறைச் சங்கமும்
முத்தகம் பயின்று காவியங் கற்றுச்
சித்திரப் பாட்டியல் தேர்ந்தன செல்லும்
தடம்பணை யுடுத்த தண்டமிழ்க் கூடல்'

என்கிறார் அடிகள்.[1] நீர்ச்சங்கு அகத்தே முத்துப்பெற்றுக் காவில் இயங்குதல் அற்றுச் சித்திரமாகிய பாட்டின் இயல்பைத் தேர்ந்து முழங்குவனவாய்ச் செல்லும். மதுரைத் தமிழ்ச்சங்கம் தமிழாகிய கடலில் குளிர்ந்த துறைகளைப் பெற்று முத்தகம் என்றும் வினை முற்றிய தனிச் செய்யுளைப் பயின்று காவியங்களைக் கற்றுச் சித்திர கவிகளின் இலக்கணத்தை ஆராய்வனவாகி நடைபெறும். இங்குச் 'சித்திரப் பாட்டியல்' பற்றி அடிகள் குறிப்பிடக் காண்கிறோம். யாப்பு அமைப்பிலும், பொருள் அமைப்பிலும் ஓவியக் காட்சியாய்க் காட்டுதல் சித்திரகவியின் பொது இயல்பு என்று கொள்ளும் முறையில் அடிகளின் பாடல்கள் பலவும் சிறந்து விளங்குகின்றன எனலாம்.

வித்தாரகவி

பல செய்யுட்கள் கூடிவந்த தொடர்நிலைச் செய்யுளும், அடிபலவாய் நடக்கும் தனிப்பாச் செய்யுளும், என்று இருவகையாக வருவது வித்தாரகவி; தொடர்நிலைச் செய்யுள் வரையறை

1. 191; 7-11

இன்றிவரும்.[1]வித்தாரகவியை அகலக்கவி அல்லது பெருங்கவி என்றும் கூறுவர். அடிகளின் கலிவெண்பா அடி பலவாய் நடக்கும் வித்தாரகவியாகவும் விளங்குவதெனலாம். நீண்ட அடிகளையுடைய ஆசிரியப்பாக்கள் சிலவும் இவ்வகையில் அடிகள் பாடியுள்ளவற்றுள் குறிப்பிடலாம்.[2] நல்வழி, நன்னெறி, மூதுரை முதலியவை வித்தாரகவிகளாகக் காட்டப்படுகின்றன.[3] இவ்வகையில் அடிகள் பாடியுள்ள நீதிநெறி விளக்கம் வித்தாரகவியாக அமைகிறது எனலாம். கருத்துக்களை விரிவாகப் பாடுவது இக்கவியின் பொதுவியல்பு என்று கொள்ளலாம். சிற்றிலக்கியங்களாக நூல்வடிவம் பெற்றுள்ள வகையில் அடிகளின் பிரபந்தங்கள் பெருங்கவியாகக் கருதும் தகுதியுடையன என்பது தெளிவு.

யாப்பிலக்கண வரையறை

சிதம்பரச் செய்யுட்கோவை யாப்பிலக்கண வரையறைகளை நன்கு எடுத்துக் காட்டி அடிகளை யாப்பறி புலவராக நிறுவி நிற்கிறது. இந்நூற் பாடல்கள் 84-ம் தில்லை இறைவனைப் பாடும் முறையில் அமைந்து யாப்புச் செய்திகளை விளக்கும் எடுத்துக் காட்டுக்களாய் அமைக்கப்பட்டுள்ளன. அடிகளே ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் யாப்புச் செய்திகளை எழுதியுள்ளனர். பாக்களும் பாவினங்களும் முறையாக எடுத்துக் காட்டப்படும் நிலையில், பாவிற்குரிய எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவற்றையும் குறித்துள்ளனர் அடிகள். யாப்பருங்கலக் காரிகையைப் பெரிதும் பின்பற்றிச் செய்திகள் கூறும் முறை காணப்படுகிறது.

> "இதனுள்ளே ஆ என நெட்டெழுத்தும், தி எனக் குற்றெழுத்தும், ஆ என உயிரெழுத்தும், ஓஒ என அளபெடையெழுத்தும், வெஃகேம் என ஆய்தவெழுத்தும், உணர்த்தியாம் எனக் குற்றியலிகரமும், அன்பு எனக் குற்றியலுகரமும், துறை என ஐகாரக்குறுக்கமும், வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்துக்களும், மெய்யும் உயிர்மெய்யுமாகிய அசைக்கு உறுப்பாமெழுத்துப் பதின்மூன்றுங்காண்க"

என்று[4] அசைக்குறுப்பாகிய எழுத்துக்கள் கூறப்படுதல் யாப்பருங்கலக்காரிகை வரையறையினை[5] ஒட்டியதாகும்.

---

1. வச்சணந்திமாலை - 5 : இல. வி. 7, 8
2. 206, 328, 332,451, 475, 478, 566, 569, 581, 584,593, 636, 656
3. வச்சணந்திமாலை, கொ. இராமலிங்கத்தம்பிரான் உரை, பக்.27
4. 493
5. காரிகை 4

"இதனுள்ளே போஎன நெட்டெழுத்துத் தனியே நின்றும், து எனக் குற்றெழுத்துத் தனியே நின்றும், பூந் என நெட்டெழுத்து ஒற்றடுத்து நின்றும், தன் எனக் குற்றெழுத்து ஒற்றடுத்து நின்றும் நேரசை நான்கும் வந்தன. விரி எனக் குறில் இணைந்தும், நறா எனக் குறிநெடில் இணைந்தும், பசுந் எனக் குறில் இணைந்து ஒற்றடுத்தும், துழாய் எனக் குறிவெடில் இணைந்து ஒற்றடுத்தும் நிரையசை நான்கும் வந்தன."

என்று[1] எட்டு அசைகளும் காரிகை வரையறைக்கேற்ப[1அ] விளக்கப்படுகின்றன. இவ்வாறே ஓரசைச்சீர் இரண்டும்,[2] ஆசிரியவுரிச்சீர் நான்கும்,[3] வெண்சீர் நான்கும்,[4] வஞ்சிச்சீர் நான்கும், பொதுச்சீர் பதினாறும்[5] எடுத்துக் காட்டப்படுகின்றன. வஞ்சித்தளை பயின்றிருப்பினும் சுட்டிக் காட்டப்படவில்லை. குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி ஆகிய அடிகள் சுட்டப்படுகின்றன.[6]

"இதனுள் இணையளபெடை முதலாகிய விகற்பம் ஏழும் முறையானே வந்தவாறு காண்க. ஏனைத்தொடை ஏழும் விகற்பம் இருபத்தெட்டும் முன்னர்க் காட்டப்பட்டன. "

என்றும்[7] நினைவுறுத்துதற்கேற்ப அடிகள் பல பாடல்களில் தொடைகளையும் விகற்பங்களையும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

யாப்பிலக்கணத்தில் உரை விளக்கத்தில் விதிவிலக்காகக் கூறப்பெறுவனவும், ஒழிபியலில் கூறப்பெறுவனவும் அடிகளால் நினைவுறுத்தப் பெறுகின்றன.

"முதலுணர்ந்தியாமெனக் கனிச்சீர் வெள்ளையின் விரவி வரலாகாமையிற் குற்றியலிகரம் அலகு பெறாதெனத் தள்ளிக் கருவிளங்காய் எனச்சீர் கொள்க. ஐகாரம் கை எனக் குறுகாதவழி நெட்டெழுத்தின் இயல்பிற்றாயும், துறை எனக் குறுகிய வழிக் குற்றெழுத்தின் இயல்பிற்றாயும் நின்றவாறு காண்க"

என்று[8] விளக்கப்படுகிறது.

"கண்ணுதல் காட்சி கிடைத்த விழிக்கில்லை
வெல்கூற்றின் தோற்றம் கொளல்"

இப்பாடல்[9] அனுவெழுத்தால் இணைமோனை பெற்றுள்ளதாகக் குறிக்கப்படுகிறது.

---

1. 491,
1அ. காரிகை 5
2. 491, 492
3. 495
4. 492
5. 556
6. 523, 552
7. 556
8. 493
9. 483

"அகரமோ டாகாரம் ஐகாரம் ஔவாம்
இகரமோ டீகாரம் எஏ - உகரமோ
ரூகாரம் ஒஓ ஞநமவ தச்சகரம்
ஆகாத அல்ல அநு"

என்ற[1] காரிகையின் உரை விளக்கத்துக்கு ஏற்ப இச்செய்தி காட்டப்படுகிறது. எனலாம். தலையாகு எதுகை,[2] இரண்டடி எதுகை[3], கடை இணைமுரண்[4], மூன்றாமெழுத் தொன்றெதுகை,[5] வருக்கவெதுகை,[6] இடையாகெதுகை,[7] பின்முரண்,[8] வழிஎதுகை,[9] நெடிலெதுகை, நெடில்மோனை, அனுமோனை,[10] இனவெதுகை,[11] கடைக் கூழைமுரண்,[12] வழிமுரண்,[13] விட்டிசைவல்லொற்று எதுகை[14] ஆகியனவும் குறிப்பிடப்படுகின்றன.

ஆசிரியப்பாவுள் இயற்றளை வெள்ளடியும் வஞ்சியடியும் மயங்கி வருதலும்,[15] வஞ்சிப்பாவுள் ஆசிரியவடி அருகி வருதலும்,[16] குறிக்கப்படுகின்றன. கலியுள் தரவு மூன்றடிச் சிறுமையுடைத்தெனவும், தாழிசை இரண்டடிச் சிறுமையுடைத்தெனவும்,[17] பேதைமீர் பேதைமீர் என அடி கூனாய் வந்தவாறு காண்க எனவும்,[18] அவன் என வஞ்சியீற்றின்கண் அசை கூனாய் வந்தது எனவும்[19] காட்டப்படுகின்றன. குற்றெழுத்து விட்டிசைத்தவழி முதற்கண் தனியே நின்று நேரசையாதலும்,[20] கண்ணியவர் என்னும் ஒரு மொழியைக் கண்ணியெனவும் அவரெனவும் வகையுளி செய்து சீர் கொள்ளப்படுதலும்[21] எடுத்துக் காட்டப்படுகின்றன. வெண்பாவின் இறுதிச்சீர் நாள், மலர் காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் அமைவதைச் சுட்டுவதோடு காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் முற்றுகர ஈற்றில் 'வாழ்வு' , 'இரவு ', என்று முடிவனவற்றையும் அமைத்துக் காட்டுகிறார் அடிகள்.[22] "ஒளிசேர் பிறப்பும் ஒண்காசும் என்று சிறப்பித்தது காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டான் முற்றியலுகரம் ஈறாகிய நேரீற்றியற்சீர் இறுதியாகிய முச்சீரடியாலும் இறுவனவுமுள ஒரு சார் வெண்பாவென்பது அறிவித்தற்கெனக் கொள்க" என்ற[23]காரிகை உரைப்பகுதிக் கருத்தை அடிகள் மேற்கொண்டுள்ளமை ஈண்டு அறியத்தரும்.

'இது பலவிகற்பத்து இன்னிசை வெண்பா. தமிழ் வழக்கால் இருவிகற்பமும் பல விகற்பமெனப்பட்டது'[24] என்ற விளக்கம்,

---

1. காரிகை. பக். 161
2. 481
3. 492
4. 493
5. 494
6. 496
7. 485
8. 537
9. 554
10. 555
11. 499
12. 524
13. 553
14. 541
15. 524
16. 556
17. 537
18. 538
19. 556
20. 541
21. 481
22. 491, 481,484 498; 502, 486,299
23. காரிகை. பக் 76
23. 492
24. காரிகை. பக். 69

ஒன்றல்லன வெல்லாம் பல என்பது தமிழ் நடை. என்னை, ஒன்றல்லவை பல தமிழ்நடை வடநூல், இரண்டல் லவைபல என்றிசினோரே என்றாராகலின்[1] என்ற காரிகை விளக்கத்தை ஒட்டி அவ்வாறே கூறப்பட்டதாகும். இவ்வாறு காரிகையில் கூறப்படும் அடிப்படை இலக்கணங்களும், உரைப்பகுதிகளும், ஒழிபியலில் அமைத்துக் கூறப்படும் இலக்கணங்களும் சிறப்பாக அடிகளின் யாப்பமைப்பு முறையில் தெளிவுறுத்தப் பெற்றுள்ளன. அடிகள் பன்னிருசீர், பதினான்குசீர், பதினாறுசீர், முப்பத்திரண்டுசீர் என்று ஆசிரிய விருத்தங்கள் பிற இடங்களில் பாடியிருப்பினும், சிதம்பரச் செய்யுட்கோவையில் பதின்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் வரையில் மட்டுமே பாடல் அமைத்துக் காட்டியிருப்பதும், மீனாட்சியம்மை குறத்தில் பாடியுள்ள 'சிந்து' என்னும் யாப்புவகைபற்றி இக்கோவையிற் குறிப்பிடாதிருப்பதும் கருதத்தகும். யாப்பருங்கலக் காரிகையை முற்றிலும் தழுவி அதற்கு இலக்கியமாக இக்கோவை நூல் இயற்றப்பெற்றதால் இந்நிலை உள்ளது எனலாம்.

யாப்புத்திறன்

அடிகள் பாடியுள்ள நீதிநெறிவிளக்கம் வெண்பாக்களால் இயன்றதென்பது தெளிவு. ஆயின் பொதுவாக அவ்வெண்பாக்கள் யாவும் நேரிசைவெண்பாக்கள் போல் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் 16 பாடல்கள் பொதுஎதுகை விதிப்படி பார்க்கும் போது இன்னிசை வெண்பாக்களாகவும், ஒழிபியல் விதிகளை நெகிழ்த்திப் பார்க்கும் போதும் நான்கு பாடல்கள் இன்னிசை வெண்பாக்களாகவும் காணப்படுதல் முன்னர் விளக்கப்பட்டது.[2]

கட்டளைக்கலித்துறை, யாப்பிலக்கண வரையறை மிக்கது என்பதில் ஐயமில்லை. அதில் அடிகள் 107 பாடல்கள் பாடியுள்ளனர். ஐஞ்சீரடி நான்காய், ஒவ்வொரு அடியிலும் முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாதிருக்க, இறுதிச்சீர் கூவிளங்காய், கருவிளங்காய் என்பனவற்றுள் ஒன்றாகப் பெற்று, முதலசை நேரசையாகத் தொடங்கியிருப்பின் ஓரடிக்கு எழுத்துப்பதினாறும், முதலசை நிரையசையாகத் தொடங்கிருப்பின் ஓரடிக்கு எழுத்துப் பதினேழும் உடைத்தாய், ஏகாரத்தால் முடிவது கட்டளைக் கலித்துறை என்பர்.[3]

1. காரிகை. பக். 69
2. பார்க்க இந்நூல் பக். (112-113)
3. காரிகை, பிற்சேர்க்கை.பக்.200

ஆயின் அடிகள் பாடியுள்ள கட்டளைக்கலித்துறைப் பாடல்களுள் 72 பாடல்களில், கடையொருசீர் விளங்காயாக வருதல் ஒரு சில வரிகளில் பொருந்திவரவில்லை; நாலசைச்சீர்களாகவோ, மூவசைக் கலிச்சீர்களாகவோ அவை அலகு பெறுமாறு நிற்கின்றன. 'டுடம்பொன்றுமே'[1] 'கன்னற்செந்நெல்'[2] 'கலாவல்லியே'[3] என்றாற்போல் வருகின்றன. மிகுதியான பாடல்களில் இந்நிலை காணப்படுதலின் விளங்காய்ச்சீராக இறுதிச்சீர்களை அமைத்தல் என்னும் விதி, அடிகள் காலத்தில் இத்தகைய நெகிழ்ச்சிக்குரியதாக நிலவியது என்று கொள்ளலாம். திருநாவுக்கரசர் பாடியுள்ள தேவாரத்தில் திருவிருத்தங்களாக அமைந்துள்ள கட்டளைக்கலித்துறைப் பாக்களில் சிலவற்றிலும் இவ்வாறு இவ்வரையறை நெகிழ்ந்துள்ளமை ஈண்டு நினைக்கத்தகும்.[4]

கட்டளைக்கலிப்பா என்பதும் வரையறை மிக்கதாகும். முதற்சீர் மாச்சீரும் பின் மூன்று சீரும் கூடியது அரையடியும், அவ்வாறே பின்வரும் நான்குசீர் கூடியது அரையடியும் ஆக அமைந்த எண்சீரடி நான்கு பெற்று, முதலசை நேரசையாயின் அரையடிக்கெழுத்துப் பதினொன்றும், நிரையசையாயின் பன்னிரெண்டும் பெற்று ஏகாரத்தில் முடிவது இதன் இலக்கணம் என்பர்.[5] இந்தயாப்பில் அடிகள் 17 பாடல்கள் பாடியுள்ளமை குறிக்கத்தகும்.

'தனியி ருப்பன ரென்படு வார்கெட்டேன்
சற்று நீதியொன் றற்றவிவ் வூரில்யாம்'[6]

என்ற வரியில் முதல் அரையடியில் ஒற்றுநீக்கிப் பனிரெண்டெழுத்தும், பின்அரையடியில் பதினோரெழுத்தும் உள்ளமை அறியத்தகும். இவ்வாறு எழுத்து வரையறைமிக்க யாப்பு வகைகளை அடிகள் எளிமையாகப் பாடியிருத்தல் சிறப்பாக நோக்கத்தகும். பிற யாப்பு வகைகளையும் மிகவும் எளிமையாக ஓசைநயத்தோடு அமைந்துள்ளமை அடிகளின் யாப்பு, வன்மையைத் தெற்றெனப் புலனாக்கும்.

---

1. 109
2. 116
3. 700 - 709
4. தேவாரம், திருமுறை 4, பதிகம் 92, பா. 6 (தொண்டர் தம்மை)
5. காரிகை, பிற்சேர்க்கை பக் 199
6. 113

தளையும் சந்தமும் பேணுதல்

பாக்களுக்குரிய தளை தவறாத வகையில் பிறமொழிச் சொற்கள் சிலவற்றைக் கையாண்டுள்ளமை எண்ணத்தகும்.

'பெந்த முறவே பிணிப்பித்து - மந்த்ரமுதல்
ஆறத்து வாவும்......'

என்ற[1] கலிவெண்பாப் பகுதியில் 'மந்த்ரமுதல்' என்று ஆளப்படுகிறது. 'ந்த்ர்' என்னும் மெய்க்கூட்டுத் தொடர்தல் தமிழில் இல்லையாயினும், 'மந்திரமுதல்' என்று ஆள்வது மரபெனலாமாயினும், வெண்டளை தவறாதிருத்தற் பொருட்டு 'மந்த்ரமுதல்' என்றே ஆண்டுள்ளார் எனலாம். இவ்வாறு கொள்ளும்போது கருவிளங்காய்ச் சீராகும். 'மந்த்ரமுதல்' என்றமைத்தால் கனிச்சீராகிவிடும். மந்திரம் என்று ஆளின் தளை தவறாதிருப்பின், அவ்வாறும் ஆளக் காண்கிறோம். 'மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்'[2] என்னும் கலிவெண்பா வரியில் 'மந்திரம்' என்று அமைத்துள்ளார்.

'இந்திரசா லம்புரிவோன் யாவரையும் தான்மயக்கும்
தந்திரத்தில் சாராது சார்வதுபோல்-'

என்ற[3] கலிவெண்பாப் பகுதியில் இந்திரசாலம், தந்திரம் என்று தமிழ் ஒலிமரபுக்கேற்பத்தளை தவறாத நிலையில் குறிக்கின்றார். இந்த்ரசாலம், தந்த்ரம் என்று ஈண்டு அமைத்திருப்பினும் தளை தவறாதெனினும், மாற்றியமைப்பதால் தளை தவறாதிருப்பதோடு தமிழ் ஒலிமரபும் அமைதலால் மாற்றி அமைந்துள்ளனர் எனலாம். ஆயின் ஆசிரிய விருத்தத்துள்,

'ஒல்லென் பறந்தலை மறந்தலைக் கொணடசூர்
உய்த்திட்ட விந்த்ரஞாலத், திண்தேரை'

என்று[4] அமைக்கும்போது 'இந்த்ரஞாலம்' என்று ஆள்கிறார். ஈண்டு 'இந்திரஞாலம்' என்றமைப்பின் நாற்சீராய் நிற்கும் என்பது குறித்து இவ்வாறு ஆளவில்லை எனலாம். இவ்வாறு தளை, ஓசை இவற்றைப் பேணும் வகையில் 'ரத்நச் சுடர்மணியால்'[5] என்றும், 'சித்ரமயில் வாகனமா'[6] என்றும், 'கோதண்ட மோடுசக்ர வாளவட் டஞ்சுழல'[7]

---

1. 1: 13-14
2. 1: 60
3. 1 : 8
4. 442
5. 1: 37
6. 1: 102
7. 34

என்றும், 'சுந்தரா சந்த்ரசே கரனே'[1] என்றும், 'பழனங்க ளோவத்ர சாலை'[2] என்றும், 'மூதண்ட கூடந்த்ரிகூடத் தொடுஞ்சாடி'[3] என்றும், 'சீர்த்திப்ர தாபநிகர் தினகர புரித்தேவ'[4] என்றும் கையாண்டுள்ளார். ரத்தம், சித்ரமயில், சக்ரவாளம், சந்த்ரசேகரன், அத்ரசாலை, த்ரிகடம், ப்ரதாபம் என்றாற்போல் ஆள்தல் தமிழ் ஒலிமரபில் பயிலாதவை எனினும் இவற்றுள் வேற்றுமொழிச் சிறப்பொலி எதுவும் இல்லாததால், தமிழில் அரிய புதிய மெய்யொலிக் கூட்டுக்களை மயக்கி ஒலித்தல் குற்றமாகாதென்று கருதி ஆண்டுள்ளனர் எனலாம்.

சந்தத்தைப் பேணுதற்காகவும் புதிய மெய்யொலிக் கூட்டுக்களை விலக்காமல் ஆண்டுள்ளார்.

'நடையுமெழு துவைநிற்கு நிலையுமெழு துவைசொற்குள்
நலமுமெழு துவைசித்ர ரதிபோல்வாள்' (198)

இதில் 'தனனத்த தனதானா' என்று முடியும் சந்தத்துக்காகச் 'சித்ரரதி' என அமைத்துள்ளார். 'ஓர்காளை கட்டுப்ர தாபணைக் கார்க்கடு'[5] என்பது 'தானான தத்தன தானனத் தாத்தன' என்ற சந்தப் பொருத்தத்துக்காகவும், 'பத்மப் பதத்தானை வேதபுரி யிற்சின'[6] என்பது 'தானான தத்தன தானனத் தாத்தன' என்ற சந்தப் பொருத்தத்துக்காகவும், அமைத்துள்ளார். இவ்வாறு தளையும் சந்தமும் பேணும் வகையில் சொற்களைத் தமிழ்ஒலி மரபுக்குப் புதியவைாயிலும் தமிழ் ஒலிகளாகவே இருத்தல் பற்றி, அடிகள் விலக்காமல் ஏற்றுக் கொண்டுள்ளமை குறிக்கத்தகும்.

பிள்ளைத் தமிழ்ப்பாடல்களில் முடிப்புவரி

அடிகள் பிள்ளைத்தமிழ்ப்பருவங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சில முடிப்பு வரிகளை மனத்துட்கொண்டு முன்வரிகளை அமைத்துள்ளமை உணரத்தகும். எடுத்துக்காட்டாகச் 'செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள செங்கீரை யாடியருளே' என்ற முடிப்புவரி அப்பருவத்தில் முதல் ஐந்து பாடல்களுக்கு வருகிறது; 'ஆதி வயித்திய நாத புரிக்குகன் ஆடுக செங்கீரை' என்பது அடுத்த மூன்று பாடல்களுக்கு வருகிறது; 'கந்தபுரிக்கருணாநிதி செங்கோ செங்கீரை' என்பது இறுதி இருபாடல்களுக்கு வருகிறது.[7] இவ்வாறு அடிகளின். இருபிள்ளைத் தமிழுள்ளும், ஒவ்வொருபருவத்தும் ஒரு சில முடிப்புவரிகள் வழங்கக் காணலாம். இது பொதுவாகப் பிள்ளைத்தமிழ் இலக்கிய மரபென்றே கொள்ளலாம். இவ்வாறு ஒரு சில

1. 150
2. 445 : (அத்திரம் எனவரல் 536)
3. 362
4. 355
5. 351
6. 359
7. 360 - 369

முடிப்பு வரிகளைத், தொடர்ந்து சிலபாடல்களுக்குக் கையாளுதல் ஓர் உத்தியாகக் கொள்ளப்பட்டுள்ளது எனலாம். அதற்கேற்ப எதுகை மோனைகளை வழுவாமல் அமைத்தல் குறிக்கத்தக்கதாகும். இறுதிவரியை அடிப்படையாகக் கொண்டு யாப்பு நிறைவு செய்யப்பட்டுள்ள நிலை இதனால் அறியப்படுகிறது.

சில சொற்றொடர்கள் பயில வழங்கப்படுதல் அவற்றில் புலவர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டையும் உணர்த்துகிறது எனலாம். 'நீரிற்குமிழி இளமை' என்று தொடங்கும் நீதிநெறிவிளக்கக் காப்புச்செய்யுள் சிதம்பரச்செய்யுட்கோவையுள்ளும்[1] அடிகளால் அமைக்கப்பட்டுள்ளது. 658-ஆம் பாடலிற் பயிலும் எதுகை முதலியன 687-ஆம் பாடலிலும் வருகின்றன. இவற்றைக் கூறியது கூறலாகக் கொள்ளாமல், அடிகள் அவற்றின் சுவையில் மகிழ்ந்து ஆர்வங்கொண்டு மறுபடியும் அமைந்துள்ளார் என்று கொள்ளலாம்.

3. பொருள் மரபுகள்

இறைவன் இறைவியைப் பாடுவதை நோக்கமாகக் கொண்ட அடிகள் அகப்பொருள், புறப்பொருள் மரபுகளில் சிறக்கப் பாடியுள்ளார். தெய்வங்களைப் பாட்டுடைத் தலைமக்களாகவும் கிளவித்தலை மக்களாகவும் அமைத்து அடிகள் கூற எடுத்துக் கொண்ட கருத்துக்களைத் தமிழ்ப் பொருளிலக்கண மரபுகளில் இயைத்துப் பாடியுள்ள திறம் குறிக்கத்தகும். அடிகளின் ஒவ்வொரு நூலிலும் கூறப்படும் பொருட்பாகுபாடும், கூறும் முறைகளும், இலக்கிய நலமும் முன் இயலில் விரிவாக விளக்கப்பட்டன. அடிகளின் நூல் முழுமையையும் தொகுத்து நோக்கும் வகையில் பொருள் மரபுகள், சில ஈண்டு எண்ணத்தகும்.

(அ). அகப்பொருள் மரபுகள் (தெய்வக் காட்சிகளில்)

இறைவன் இறைவியைத் தலைவன் தலைவியாக அகப்பொருள் மரபில் கண்டுபாடுதல் அடிகள் பாடல்களில் காணப்படுகிறது. சிவன் அம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டுள்ள நிலையில் ஒருவரை ஒருவர் பார்த்து மகிழ்வதை அடிகள்

---

1. 489

எண்ணிப்பார்க்கிறார். அம்மையின் கருவிழி இறைவன் பாகத்தில் தோய்ந்தும், இறைவன் திருநோக்கம் அம்மையின் பாகத்தில் தோய்ந்தும் இருவர் பாகமும் நிறம் வேறுபட்டுத் தோன்றுவதாகக் கூறுகிறார்; எனவே இறைவி பாகம் எது, இறைவன் பாகம் எஃது என்று கூற முடியவில்லை என்கிறார்.[1] மாதொரு பாகனாகிய தோற்றத்தை இவ்வாறு அன்பு தோய்ந்த அகக் காட்சியாகக் காண வைத்தல் குறிக்கத்தகும்.

'கும்ப மிரண்டு சுமந்துஒசியும் கொடிநுண்
மருங்குல் இறுமிறும் என்று
அம்பொன் பசுங்கொம்பு அன்னாளை ஆகத்து
அணைத்த அகிலேசர்'

என்பதில்,[2] மார்பாகிய கும்பம் சுமப்பதால் இடை ஒடியும் என்று இரங்கி இறைவியை இறைவன் ஆகத்தில் அணைத்துக் கொண்டார் என்கிறார். குறிஞ்சி ஒழுக்கம் இங்ஙனம் நயம் படக் கூறப்படுகிறது. வள்ளி மானோடு மற்பொரு தோளன் என்றும், தேவயானையாகிய நகில் மருப்புடைய கடவுள்மால் யானையைப் புணர் காளை என்றும் முருகனின் கூடற்காட்சி குறிக்கப்படுகிறது.[3] தெய்வக்குறப்பாவையின் மயிலிளஞ்சாயலும், வடம் அறுமாறு புடைத்து இறுமாந்த கனதன வனப்பும் குறித்துநோக்கி, இடுகு இடைப் பாவிக்கு இனிப் பிழைப்பில்லை கொல் என்று இரங்கி, ஏந்திளங் கொங்கையை இணைப்புயத்து முருகன் ஏந்தி நின்றமை கூறப்படுகிறது; தையனாயகி மருவு தெய்வநாயகன் மதலையாகிய முருகன் வள்ளியின் அவயவங்கட்குள்ள குணாகுணங்களைத் தனி தெரிக்கும் தடமலர்க் கைத்தலம் உடையவன் என்றும் கூறப்படுகிறது; அவடன் குடமுலைக்குள் குறவர் குடிப்பிறப்புக்கியைந்த கொல்லும் குணம் அமைந்ததெனக் கூறிக் கோதை நெடுநாண் எய்த அவன் விளங்கிய திறம் உணர்த்தப்படுகின்றது.[4] முருகன் வள்ளிக்குப் பற்பல குற்றேவல்களும் ஆற்றித் தடங்குங்குமப்புயம் கொட்டி நடமிட்டதாகக் கூறுகிறார் அடிகள்.[5] குங்குமம் விளங்கும் புயம் என்று அணைந்த குறிப்புச் சுட்டப்படுகிறது எனலாம்.

---

1. 311
2. 662
3. 351
4. 383
5. 380

முருகன் தெய்வயானையை மணந்தபோது மணப்பந்தரில் அவள் அவனைப் பிறர் அறியாதவாறு கடைக்கண்ணால் நோக்கியதாகவும், அவளோடு முருகன் பெருங்காதல் வெள்ளம் திளைத்தவன் என்றும் விளக்குகிறார்.[1] வள்ளியின் முறுவல் நிலவுக்குச் சகோரமென நின்றான்.[2] என்றும், அவளுக்குச் சலாமிடற்கு ஏக்கறுபவன்[3] என்றும் முருகனின் காதல் வேட்கை காட்டப்படுகிறது. தெய்வயானை வெம்முலைக்கோடு கொண்டு உழுதுஉழுது உழக்க முகை விண்டு தண் தேன் துளிக்கும் கடப்பமாலையணிந்த குருசில் என்று முருகனைக் கூறும்போதும் கூடல் ஒழுக்கம் உணர்த்தப்படுகிறது; பைங்கூந்தற் பிடியாகிய அம்மை போர்க்களிறாகிய சிவனைப்புணர்ந்து குஞ்சரக் கன்றாகிய விநாயகரைப் பயந்தளித்தமை சுட்டப்படுகிறது.[4] அம்மை தன் மென் கொங்கை கொண்டு இறைவன் புயக் குன்று எட்டையும் குழைத்தாள்.[5] நான்முகன் சுவைகொள்ளும் கரும்பு நாமகள்.[6] இவ்வாறு தெய்வ வருணனைகளில் கூடற்குறிப்பும் காதல் உணர்வும் அகப்பொருள் மரபில் சுவைபட விளங்குதல் அறியத்தகும்.

அம்மை சிவனை எதிர்ப்பட்டஞான்று அவளது மூன்று மார்புகளில் ஒன்று மறைந்தது என்பதை அகப்பொருள் நலம்பட விளக்கும் அடிகள், கொழுநரோடு உள்ளப்புணர்ச்சிக் கருத்தாக ஒரு மார்பு அகத்து ஒடுங்கியது என்கிறார்.[7] 'அன்னை மன்னுயிர்க்கு ஒக்கும் கமலைப்பிரான்' என்று அம்மையின் உயிராக இறைவன் விளங்குதலும், 'பொன்உயிர்க் கொண்கன்' என்று திருமகளின் உயிராகத் திருமால் விளங்குதலும் உணர்த்தப்படுகின்றன.[8] மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்[9] என்னும் சங்க அகப்பொருள் மரபு இங்ஙனம் சுட்டப்படுகிறது எனலாம். அம்மையும் அய்யனும் முருகனைச் சீராட்டி மகிழும் இல்லறக்காட்சியும் அகவாழ்வின் நலம் காட்டும் முறையில் கூறப்படுகிறது.[10]

முருகன் தனது பன்னிரு கண்களால் வள்ளியின் பன்னிரு நலங்களை முகந்துண்டதாகக் கூறுகிறார் அடிகள். கூந்தல், பொற்குழைகள் இரண்டு, இனியமுறுவல், இளமுலைகள் இரண்டு, புருவம் இரண்டு, போர்த்தடங்கண் இரண்டு, மயிலின் சாயல், காமர்

1. 381
2. 382
3. 6
4. 349
5. சிவ.இ.6
6. 700
7. 35
8. 326
9. குறுந். 135
10. 449, 390, 420, 670

நலன் என்று இவற்றைப் பன்னிரு கண்ணால் முகந்துண்டதை விளக்குகிறார்; அமுதையும், அவியையும் நீத்து வள்ளியின் இதழ்த்தேன் சுவைகண்டு இன்புற ஏக்கற்றிருப்பவன் என்கிறார்.[1]

ஊடற்காட்சிகளையும் புலப்படுத்தக் காண்கிறோம். சிவன் கங்கைக்கு அருட்பார்வை நல்க, அதனால் கருங்குவளை செங்குவளையாமாறு கண்சிவத்து அம்மை ஊடல்கொள்கின்றனள்; 'எங்கோமான் பங்குற்றும் தீரா பசப்பு' என்கிறார் அடிகள்,[2] கண், நெற்றி முதலிய இடங்களில் பசலை உண்டாதலின் அவ்வகை பற்றித் தீராவெனப் பன்மையாற்கூறி அம்மையின் ஊடல் மிகுதி புலப்படுத்தப்படக் காண்கிறோம். ஊடல் தீர்க்கச் சிவன் அம்மையின் அடிகளில் வணங்கும் குறிப்புப் பல இடங்களில் உணர்த்தப்பட்டுள்ளது.[3] முருகன் குறமகள் அடி முடிவைத்தவன் என்றும்[4] ஊடல் நீக்கிய குறிப்பு உணர்த்தப்படுகிறது. அம்மை இறைவனோடு ஊடலும் கூடலும் ஒருடம்பில் நிகழும் வியப்பையும் அடிகள் நினைவுறுத்துகிறார்.[5]

குருவாகிய இறைவன் தமக்கு அருள வேண்டும் என்பதை அகப்பொருள் மரபில் வற்புறுத்தக் காண்கிறோம்; உயர்ந்த தலைவன் இழிந்தவளைச் சேர்ந்தாலும் அவனுக்கு இழிவாகாது என்று கூறித் தமக்கு அருள வேண்டுகிறார் அடிகள்.[6] தொல்காப்பிய நுற்பாவை[7] ஒட்டி இவ்வாறு வேண்டுகின்றமை உணரத்தகும்.

தலைவன் தலைவி உறவு முறையில் இறைவனைப்பாடுதல்

இறைவனைத் தலைவனாகவும் உயிர்களைத் தலைவியாகவும் கருதிப்பாடும் அகப் பொருள் மரபில் அடிகள் பல பாடல்களை அமைத்துள்ளனர். இறைவன்பால் விருப்புற்ற தலைவியின் நிலைகளை விரிவாக விளக்குகின்ற பாடல்கள் இவ்வகையில் அமைந்திருத்தல் கொள்ளத்தகும். நிலவால் வரும் துன்பம் பல உத்திகளில் புலனாக்கப்பட்டிருத்தலும், மன்மதனால் வரும் துன்பம் வலியுறுத்தப்பட்டிருத்தலும், இசை, மாலைப்பொழுது, தென்றல்,

---

1. 394
2. 504
3. 46, 54, 58,
4. 389
5. 126,
6. 572
7. தொல், களவு, 2

அன்றில், குயில், ஆன்ஏற்றுமணிஒசை முதலியவை வருத்துதலும் பாடப்பெறும்; இறைவனுடைய மாலையை வேட்டுநிற்கும் நிலை உணர்த்தப்படும்; வண்டு, மேகம், குயில், கிளி, அன்னம், குருகு முதலியவற்றைத் தூதாக அனுப்பும் முறையில் தலைவியின் நிலை உணர்த்தப்படும். இவ்வாறு நாயக நாயகி பாவமாக இறைவனைப் பாடும் அகப்பொருள் மரபு அடிகளின் அகப்பாடல்களில் விளங்குதல் முன்னர் விரிவாகச் சுட்டப்பெற்றமை ஈண்டு நினைக்கத்தகும்.

'அகவாழ்க்கைக் காதலுக்கும், கடவுட்காதலுக்கும், புணர்விலும் பிரிவிலும் மிகுந்த ஒற்றுமை அமைந்துள்ளது. புணர்தல் இன்பமும், பிரிதல் துன்பமும் இரண்டிலும் ஒன்று போலவே உணரப்படுகின்றன. இவ்வகையில் இணைத்து முதற்கண் பாடியவர் ஞானசம்பந்தர். அவரைப் பின்பற்றி இவ்வாறு பாடுதல் மரபாக வளர்ந்துள்ளது.' என்று[1] டாக்டர் சுப அண்ணமலை அவர்கள் குறிப்பிடுகின்றனர். அடிகள் இறைவனைப்பாடியுள்ள அகப்பொருள் மரபுப் பாடல்கள் இவ்வகையில் வளர்ந்து விளங்குவனவே ஆகும். அடிகளின் இறை உணர்வு வேட்கையே இவ்வகைப் பாடல்களின் உள்ளீடாக இலங்குகிறது எனலாம்.

இங்ஙனம் தெய்வக்காட்சிகளைப் புலப்படுத்தும் முறையிலும், இறைவனோடு உயிராகிய தலைவி காதல் கொண்டுள்ளதாகக் கூறும் முறையிலும் பாடியிருப்பதோடு கிளவித்தலைவனாக இறைவனைக்கூறி உலகியல் அகப்பொருட் காட்சிகளை அமைக்கும் முறையிலும், நகர்வளங்களைக் கூறும்போது இன்பக் காட்சிகளாக இடைமிடைந்தும் அகப்பொருள் கருத்துக்கள் அடிகள் பாடல்களில் ஆளப்பட்டுள்ள முறை உணரத்தகும். எனவே இறைவனைப் பாடுவதற்கு அகப்பொருள் மரபை அடிகள் ஓர் உத்தியாகக்கொண்டமை உணரத்தகும்.

---

1. 'For there is much similarity between sexual love and the love for the divine, both in the states of union and of separation. The happiness of union and the pangs of separation are simillarly felt in both.... Employing this symbol in poetry was first done by saint Nana Campantar, his successors developed it into a tradition'-A critical study of Saint Ramalinkar's works, Dr. S.P. Annamalai, Thesis, P.141

(ஆ) புறப்பொருள் மரபுகள்

அகமல்லாத அனைத்தும் புறமாயினும் போர்பற்றிய திணைகளே புறத்திணைகளில் மிகுத்துக் கூறப்பெறுவனவாகும். அம்மை திக்குவிசயம் செய்து வென்ற போர்க் காட்சிகளும், முருகன் அவுணரை வென்ற போர்க் காட்சிகளும் அடிகளால் பாடப் பெறுகின்றன. போர்க்கள வருணனைகள் இவ்வகையில் இடம்பெறக் காண்கிறோம்.

போர்த்திணை மரபு

அம்மையின் வீரர்கள் ஒரு சிலர் தேவர்தம் வாளால் மடிந்தனர்; ஆயின் தேவமகளிர் கண்ணாகிய கணையும் முலையாகிய குவடும் பொருகின்ற படையிற் பட்டனர் என்கிறார் அடிகள்.[1] போர்க்களத்தில் வீரம் காட்டி இறந்த வீரர்கள் அமரஉலகம் புகுந்து இன்பம் நுகர்வர் என்னும் செய்தி இவ்வாறு குறிக்கப்படுகிறது. முருகனது வேலால் கொல்லப்பட்ட அவுணர்குழு ஞாயிற்றின் உடலைக் கிழித்துக் கொண்டு வீர சொர்க்கம் பெற்றுத் தேவமகளிரோடு இன்புறுகின்றமை கூறப்படுகிறது.[2] அம்மை எட்டுத்திசையிலும் உள்ள நாடுகளைவென்று குலமலைகள் எட்டையும் எல்லைக் கல்லாக நிறுத்தியதாகக் கூறுதல்,[3] பகைவர் மண் கொள்ளும் பொருட்டுச் செல்லும் வஞ்சித்திணையின் பயனாகக் காட்டப்பட்டுள்ளது எனலாம். அம்மையின் தானைக்குத் தோற்ற அரசர்கள் திறை செலுத்துவதும்[4] சேரரும் சோழரும் புறமுதுகு காட்டிக் காட்டுக்குள் ஓடுதலும்[5] காட்டப்படுகின்றன. போர்க்களத்தில் பேய்கள் பசுந்தடியின் சுவைகண்டு குரவை ஆடுதலும்,[6] முருகன் தெம் முனை சாயச் சமர் விளையாடிச் செங்கள வேள்வி செய்தலும்[7] விரிவாகக் கூறப்படுகின்றன. முருகனை இன்றைக் குழந்தையென்று, இந்திரனும், எட்டுத்திசைப் பாலகர்களும் பிறரும் எதிர்த்து நின்று பட்டபாடு மிகுதி என்று கூறப்படுகிறது.[8] பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை, இளையன் இவன் என உளையக் கூறிப் போருடற்ற வந்த பகைவரை அவன் ஒருங்கு அகப்படுத்துவதாக வஞ்சினம் உரைத்தவாறு வென்ற நிகழ்ச்சி ஈண்டு நினைக்கத்தகும்.[9] முருகன் போர் அறம் மேற்கொண்டமை அடிகளால் காட்டப்படுகிறது. போரையும் படைக்கலத்தையும் துறந்து, ஓடும் குருதியோடு புறமுதுகிட்டு

1. 39
2. 382, 386
3. 40
4. 51
5. 13
6. 39, 441, 351
7. 437
8. 417
9. புறம். 72,76,77

ஓடி நிமிர்ந்த அசுரப்படைத்தலைவர்கள், பூதகணங்களுக்கு முன்னால் மாலையோடு அவிழ்ந்திட்ட குஞ்சியுடையவர்கள், இமைத்திட்ட விழியுடையவர்கள், பின்வாங்கும் கால்களையுடையவர்கள், வாள் இழந்த கையுடையவர்கள் இவர்களுக்கு முருகன் அஞ்சுபவன் எனப்படுகிறான். இவ்வச்சம் அவர்தம் மனைவியர்தாலிக்கு வேலியாயிற்று என்று உரைக்கிறார்.[1] இத்தகையவர்களைக் கொல்லக் கூடாதென்ற போரறம் இவ்வாறு காட்டப்படுகிறது. இத்தகைய போரறம் சிறந்த புறத்திணை மரபாகவும், சங்ககால மரபாகவும் விளங்கியிருத்தல்[2] நினைக்கத்தகும்.

கற்புடைய பெண்டிரும், துறவியரும், சிறந்த வீரரும், எமன் தும்பை முடிச்சூடி வந்தாலும் அஞ்சமாட்டார்கள் என்பதில்[3] தும்பைத்திணைக்குரிய செய்தி சுட்டப்படுகிறது. காமன் தும்பைமாலை சூடிப் போரிட்டு இறைவன் பால் காமுற்ற தலைவியின் உயிர் முடிக்க வந்துவிட்டான் என்றும், அவன் வெற்றிவாகை சூடவும் கூடும் என்னும் புறத்திணை மரபில் அகப்பொருட் செய்தி கூறுதல்[4] அறிகின்றோம்.

அரசியல் மரபு

காசி, சிவனுடைய படைவீடாகக் கூறப்படுகிறது,[5] இறைவனுடைய அரசிருப்பு என்றும் கூறப்படுகிறது.[6] இறைவன் உயிர்களை ஆளும் அரசியல் இவ்வகையில் புறப்பொருள் மரபில் பேசப்படுகிறது. அம்மை தனது குடை நிழலில் புவிமகளை வளர்த்தவள்[7] என்பதும், மதுரையும் குமரியும் மணந்தவள்[8] என்பதும், வாடாத செங்கோல் வளர்ப்பீர், என்று பாண்டியநாடாளுமாறு இறைவனை ஆட்சி ஏற்கச் செய்தாள் என்பதும்[9] அம்மையும் ஐயனும் அரசியல் நடத்திய நலத்தை உணர்த்தி நிற்கின்றன. இவை பாடாண்திணை மரபில் கருதத்தக்கவை. மலையத்துவசன் தோளினைச் சிறப்பிக்கும் அடிகள், பண்ணுலாம் வடிதமிழ்ப் பைந்தாமம் விரியும் பணைத்தோள்[10] என்கிறார். தமிழ்ப்பாமாலை விரிந்து செல்லுதற்குரிய தோள் என்பதால் அவனது வீரம் சிறப்பாக உணர்த்தப்படுவதும், அது பாடாண் சிறப்புகளில் ஒன்று என்பதும் உணரத்தகும். இவ்வாறு புறப்பொருள் மரபுச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

---

1. 440
2. தொல். புறத். 10. நச். உரை புறம் 9:
3. 247
4. 609
5. 694, 648
6. 613
7. 39,40,41
8. 118
9. 143
10. 15

(இ) அரிய பொருள் மரபுச் செய்திகள்

அகம், புறம் ஆகிய மரபுகளை ஒட்டி அரியதும், புதியதுமான வழக்கு முறைகளில் கருத்துக்களை எடுத்துச் சொல்லுதல் தனியாகக் குறிக்கத்தகும். இறைவன், நஞ்சினை உண்டு தேவர்களைக் காத்து, அவர்தம் மாதர்களுக்குக் காதோலை பாலித்த தயவாளர் என்கிறார் அடிகள்.[1] இங்கு மங்கல அணியாகிய தாலியைக் குறிக்காமல் காதோலையைக் குறிப்பிட்டுள்ளார். அடிகள் பிறிதோரிடத்தில் தாலிக்கு வேலி[2] என்று ஆண்டிருப்பினும், ஈண்டுக் காதோலையைத் தாலிக்கு இணையான முறையில் கூறியிருத்தல் அரிய செய்தியாக உள்ளது. முருகனைக் குறிக்க, அழகு கனிந்த முதிர்ந்த இளங்கனி[3] என்று பயன்படுத்தியுள்ளார். அருட்கனியாகவும், என்றும் இளையனாகவும் இருத்தல் பற்றி இவ்வரிய தொடர் வழக்கு இடம் பெற்றுள்ளது எனலாம். வைகையாறு கடலில் சேர்வதில்லை என்ற அரிய குறிப்பு அடிகளால் கூறப்படுகிறது.[4] அம்மையிடம் முத்தம் வேண்டிப் பாடும்போது, வேயீன்ற முத்தம் உகந்த அம்மை முத்தம் தர வேண்டும் எனப்படுகிறது[5]. வேயீன்ற முத்தம் என்பது சிவனைக் குறிப்பதாகும். திருநெல்வேலியில் இறைவன் மூங்கிலின் கீழ் விளங்குதலின் வேயீன்ற முத்தம் எனப்படுகிறது. அடிகள் பிறந்த ஊரை ஒட்டிய தலத்தைப் பற்றிய குறிப்பு இவ்வாறு வந்துள்ளமை அரிய செய்தியாக நோக்கத்தகும்.

முருகனது பூதகணங்களால் பட்டுச் சொர்க்கம் புகுந்த அவுணர்கள் தேவமகளிரை அலைத்துப்பற்றி இன்புற்றுத் தம்மை அவுணர் என்று உணராமல், கணவர்கள் ஆர்ப்பில் வெடித்த நிலப்பிளவில் குருதி நிறையக்கண்டு, அவுணர்களை விரைவில் அழிக்குமாறு முருகனை வேண்டுகின்றனர்.[6] இதில் கணவர்கள் என்பது பூதகணங்களைக் குறிக்கும் என்பர் உ.வே.சா.[7] தேவமகளிர்க்குக் கணவராக, ஆரவாரித்து நிற்கும், சொர்க்க உலகில் விளங்கும் அவுணர்களைக் குறிக்கும் என்கிறார் புன்னைவனநாத முதலியார்.[8] கணவர்கள் என்பது கொழுநர்கள் என்ற பொருளில் வழங்குவதே பெரும்பான்மை ஆதலாலும், பூதகணங்களைக் குறிக்கக் 'கணத்தவர்' என்று சாரியை பெற்று வருதலே தகும் ஆதலாலும், இப்பாடல் தொடக்கத்தில் பூதகணவர்கள் என்று ஆளாமல் பூதத்தலைவர்கள்

---

1. 132　　5. 47
2. 440　　6. 386
3. 367　　7. கு.பி.தி.(உ.வே.சா). பக். 289
4. மீ.கு. 32　　8. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ். பு.சி.பு. உரை.பக்.59

என்று ஆண்டுள்ளதாலும் அடிகள் இங்குக் கொழுநர்கள் என்ற பொருளில் அவுணர்களையே குறித்தனர் என்று கொள்ளலாம். தேவ மகளிரை அவுணர்கள் பற்றி அவர்தம் கணவர்களாய் ஆரவாரித்த ஓசையால் நிலம் வெடித்ததாகக் கொள்ளல் இவ்வகையில் தக்கதாகும்.

(ஈ) உலகியல் வழக்கச் செய்திகள்

அடிகள் உலகியல் அறிவு நன்கு கைவரப் பெற்றவர் என்பதை உணர்த்தும் வகையில் அரிய உலகியல் வழக்கங்கள் பலவற்றைத் தம் பாடல்களில் காட்டியுள்ளார். குழந்தையியல்புகளையும், வளர்ப்பு முறைகளையும் உலகியலுக்கு ஏற்பவிளக்கக் காண்கிறோம். அம்மையாகிய குழந்தை பெருவிரல் சுவைத்து விளங்குதல் கூறப்படுகிறது[1]. முருகக் குழந்தை விரல்களை உண்டு விளங்குதலும் காட்டப்படுகிறது[2]. குழந்தைக்குப் பல்வகை அணிகலன்கள் புனைந்து ஒப்பனை செய்தலும், பெற்றோர் பாராட்டிச் சீராட்டி வளர்த்தலும் உலகியற்கேற்பச் சுவையுறக் கூறப்படுகின்றன.[3] இன்னியம் துவைப்பச் சங்கம் ஏங்கிடத் திருமணவிழா நிகழ்தலும்[4], திருமணத்தில் மணமகன் மேல் மணப்பந்தரில் சோற்றுருண்டையை எடுத்தெறியும் செயலும்,[5] மஞ்சள் நீராடலும்[6] சொல்லப்படுகின்றன. கணவன் இறந்துபட்டால் மகளிர் மார்பில் அடித்துக் கொள்ளுதலும்[7], கவலையில் ஆழ்ந்த மகளிர் கன்னத்தை உள்ளங்கையில் தாங்கியிருத்தலும்[8], காட்டப்படுகின்றன. புண்ணுக்குக் காரம் வைத்து ஆற்றுதல்,[9] காக்கை இடப்புறம் போனால் தீயசகுனமாய்க் கொள்ளுதல்,[10] பெற்றோர் இடும் ஒருபெயரோடு உலகோர் இடும் ஒரு பெயரும் பெற்று விளங்குதல்,[11] கண்ணேறு காக்கும் காப்பாக வேம்பு மிலைச்சுதல்,[12] சிறுகுழந்தையின் உடல் நலம் கருதித் தாய் மருந்து உண்ணுதல்,[13] தோளை மடித்துப் பிடரியைப் பிடித்துக் கொண்டு அண்ணாந்து பார்த்தல்,[14] பொழில் முதலியவற்றைக் குத்தகைக்கு விடுதல்,[15] புகையூட்டி வாழைக்காய்களைப் பழுக்க வைத்தல்,[16] கள்வர் மை போட்டுப் புதையல் எடுத்தல்,[17] கழைக் கூத்தர் கூத்தாடுதல்,[18] முதலிய உலகியல் வழக்கங்கள் இடையிடையே குறிக்கப்பட்டிருக்கக் காண்கிறோம்.

---

1. 37 6. 87 7. 529 8. 656
2. 367 9. 145 10. 158 11. 139
3. 38,400,420,449, 600,312,390,391 12. 205 13. 451:14-15 14. 150 15. 335 16. 89
4. 164 5. 75 17. 587:20-21 18. 348,656

வேள்விபுரிந்து மழை பொழியச் செய்தலும் அறியப்படுகிறது.[1] இந்திர சாலம் புரிவோர் யாவரையும் அதில் மயங்கச் செய்தல்,[2] சிறிய பயல்கள் ஓடியாடி விரைவாகச் செயல்புரிதல்,[3] சிறந்த யானை ஏழுமுழம் உயர்ந்திருத்தல்,[4] அதன் துதிக்கை நிலத்தைத் தொடுவதாக இலக்கணம் பெற்றிருத்தல்,[5] எடுத்துரைக்கப்படுகின்றன. அம்மைக்கு நெற்றியில் வெண்ணீற்றுத் திலகம் இட்டு, வெண்ணீற்றுப் புண்டரம் பொலியச் செய்து அவற்றுக்குப் பொருந்துமாறு வெண்மையான நித்திலச் சுட்டியும் அணியப்பட்டதாகக் கூறும் முறையில் நிறப் பொருத்தம் பார்த்தலும் காட்டப்படுகிறது.[6]

4 சொல்லாட்சிகள்

அடிகள் தமிழ் மொழிச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் சொன்னலம் பொருணலம் தோன்ற எடுத்தாண்டுள்ளனர். புலமை நலம் விளங்கக் கையாண்டு, அரிய அமைப்புடையனவாய்த் திகழும் சொற்களும் சொற்றொடர்களும் அடிகளின் சொற்றிறத்தைப் பறைசாற்றி நிற்பனவாகும்.

பொருட்பொருத்தம் மிக்கவை

வழக்கில் பயிலும் சொற்களாயினும் தொடர்களாயினும் இடத்துக்கேற்பத் தேர்ந்தெடுத்து அமைக்கும்போது புதுப்பொலிவு பெறும்படி செய்தல் அடிகளின் திறமாகச் சுட்டத்தகும். முருகன் தெய்வயானையை மணந்த நிகழ்ச்சியைத் 'தெய்வக் களிற்றை மணஞ் செய்தோனே' என்கிறார்.[7] தெய்வதப் பிடியொடும் விளையாடும் மழகளிறு[8] என்றும் 'முலை வேழங்களுடன் உலாவும் தெய்வப் பிடிக்குக் கிடைத்ததொரு மழகளிறு'[9] என்றும் பிற இடங்களில் ஆளக் காண்கிறோம். பெண்ணாதலாலும், முருகனைக் களிறு என்பதற்கேற்பவும் தெய்வயானையைத் தெய்வப்பிடி எனல் தகும். ஆயின் தெய்வக்களிறு என்று அடிகள் மேற்குறித்த ஒரே ஒரு இடத்தில் குறிப்பிட்டிருத்தல் அறிகிறோம். களிறு என்பது இங்கு யானை என்னும் பொருட்டாய் நின்றது என்றும் கந்தபுராணத்திலும் தெய்வக்களிறு என ஆளப்பட்டுள்ளது என்றும் உ.வே.சா. குறிப்பர்[10]. ஆயின் தெய்வப்பிடி

---

1. 302
2. 1:8
3. 621
4. 593
5. 708
6. 14
7. 1:105
8. 363
9. 444
10. கு.பி.தி. (உ.வே.சா.) பக். 17

என்றும் ஆண்டுள்ள அடிகள் ஈண்டுக் களிறெனக் கூறுதல் பொருள் நுட்பம் வாய்ந்ததெனக் கருத இடமுண்டு. 'மகடூஉ மருங்கில் பால்திரி கிளவி' என்று தொல்காப்பியர் கூறும் 'பெண்மகன்' என்றும் பெயர், வினை கொள்ளும் போது பெண்பாலுக்குரிய வினை கொள்ளும் என்பது[1] ஈண்டுக்கருதத்தகும். முருகன் மணந்து கொள்ளும் நிலையில் தெய்வயானையைக் குறிக்கப் 'பெண்மகன்' என்னும் வழக்கையொட்டித் 'தெய்வக்களிறு' என்று அடிகள் ஆண்டுள்ளார் என்று கருதலாம். பெண்ணின் இளமை மிடுக்குத் தோன்ற 'மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி' யாகத் 'தெய்வக்களிறு' என்பது ஆளப்பட்டுள்ளது என்பது பொருந்தும்.

மீனாட்சியம்மையைப் 'பெண்ணரசு'[2] என்றும் 'மதுரைக்கரசு'[3] என்றும் குறிக்கின்றார். அரசு என்பது உயர்திணைக்குரிய சொல்லாகவும், அஃறிணை வினைமுடிவு கொள்ளும் என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.[4] எனவே 'அரசு' என்னும் சொல் உயர்திணையில் ஆண்பால் பெண்பால் இரண்டுக்கும் வழங்கும் என்பது பெறப்படுகிறது. பாலுணர்த்தும் முறையில் அரசன் அரசி என்று வழங்குதல் பின் வழக்கெனலாம். 'அரசிளங்குமரி' என்று பால் உணர்த்தியும் அடிகள் ஆண்டுள்ளனர்; மலையத்துவசனை 'முடியரசு' என்றும் குறிக்கின்றார்.[5] எனவே தொல்காப்பிய மரபை ஒட்டி அரசு என்னும் சொல்லால் அம்மையையும் குறித்துள்ளமை அறியத்தகும். தம்கால வழக்குச் சொல்லை ஆண்டு அம்மையைத் 'துரை மகள்' என்றும்[6] 'துரைப்பெண்' என்றும்[7] கூறுதல் குறிக்கத்தக்கதாகும்.

இறைவனுக்கும் இறைவிக்கும் உருவம் ஒன்றாக விளங்குதலால், அவ்வுருவத்தை ஒருத்தன் என்று கூறுவதா, ஒருத்தி என்று கூறுவதா என்று மயக்கம் தோன்ற, இருவருக்கும் உரியதாக 'ஒருவர்' என்னும் சொல் பொருந்தும் என்று கையாள்கிறார் அடிகள்.[8] ஒருவர் என்னும் சொல் உயர்திணை ஆண்பாலையும் பெண்பாலையும் உணர்த்தும் எனினும் இலக்கணச் செய்திக் கேற்ப ஆணும் பெண்ணுமாகக் காணும் இறையுருவத்தை 'ஒருவர்' என்று அழைக்கும்

1. தொல்.சொல்.194, சேனாவரையர் உரை
2. 5
3. 24-28
4. தொல்.சொல்.56
5. 66
6. 29,72
7. 534
8. தொல்.சொல்.191; நன்.289

பொருத்தத்தை அறிகிறோம். ஆணும் பெண்ணுமாக ஒருங்கிருத்தலும், உருவம் ஒன்று மட்டுமே இருத்தலும் விளங்குமாறு இச்சொல்லை அடிகள் ஈண்டு மிக்க பொருட்பொருத்தம் உடையதாக அமைத்துள்ளார் எனலாம். இவ்வாறே இருவரையும் ஒரே நேரத்தில் ஒரே சொல்லால் விளிக்கும் முறையில் 'எந்தாய்' [1] என்ற சொல்லைச் சிலேடை நயம்பட, எம்தாய் என்றும் எம் தந்தை என்றும் பொருள் படுமாறு அமைத்துள்ளார். 'திரிகரணம்' என்பது மனம், சொல், செயல் ஆகிய மூன்று கரணங்களைக் குறிப்பது. ஆயின் அடிகளின் இக்கரணங்கள் மூன்றும் ஞானாசிரியரை நினைத்தும், வாழ்த்தியும், இறைஞ்சியும் சிவகரணங்களாகத் திரிந்தன என்றும் அதனால் திரிகரணம் என்பது மற்றவர்களுக்கு ஒருபொருட் கிளவியாய் இருத்தல் போலன்றி, அடிகளுக்கு, இருபொருட் கிளவியாய் ஆயிற்று என்றும் கூறப்படுகிறது. [2] இலக்கண நுட்பங்களைக் கொண்டு இவ்வாறு ஆண்டுள்ளமை உணரத்தகும்.

'விருப்பு வெறுப்பற்றிருப்பர்' என்பதை விருப்பும் வெறுப்பும் அற்றிருப்பர் என்றும், இகபரம் இரண்டோடும் எதிர் நிரனிரையாகக் கூட்டி இகத்தில் வெறுப்பற்றும் பரத்தில் விருப்பற்றும் இருப்பர் என்றும், வேற்றுமைத் தொகையாகக் கொண்டு விருப்பினிடத்தில் வெறுப்பற்றிருப்பர் என்றும் அடிகள் பல்வகைப் பொருள் விளக்கம் தருதலும் [3] செறிவு பொருந்திய ஆட்சியாக அமைந்துள்ளது. மன்மதனுக்கு இறைவன் 'உலவாத்தூணி' கொடுத்தான் போலும் என்று ஒரு தலைவி கூறுகிறாள்; ஒரு வேளாளருக்கு உலவாத நெற்கோட்டை அளித்த தொடர்பு இங்குக் கூறப்படுகிறது. [4] தலைவி நிலையில், எடுக்க எடுக்கக் குறையாத அம்பராத்தூணியை இவ்வாறு உலவாத்தூணி என்று குறிப்பிட்டுள்ள பொருத்தம் அறியத்தகும். 'சிற்றாய்பாடிப் பெருங்குடி' என்பதில் கண்ணனுடைய ஆய்பாடியில் ஐந்துலட்சம் பேர் உள்ளனர் என்ற குறிப்பை உணர்த்தும் முறையில் பெருங்குடி என்ற சொல் ஆளப்பட்டுள்ளது எனப்படுகிறது. [5] ஒருமை பன்மை விகுதி முறையால் இடத்துக்கேற்ற பொருட்குறிப்போடு ஆளும் சொற்களும் உண்டு. 'காமர் உயிர் செகுக்கும் கண் ஒன்றே' [6] என்பதில் காமர் என்று

1. 553
2. 587
3. 578
4. 497
5. 354; கு.பி.தி.(உ.வே.சா) பக்.264
6. 497

பன்மையில் குறிப்பிடுதல் இகழ்ச்சிக் குறிப்பை உணர்த்தி நிற்பதாகும். இறைவன் அடியவர்களைக் காக்கும் முறையில் எமனை அழிக்கும் குறிப்போடு தென்முகமாக ஆடுகிறான், 'நமனார் இது நாடுமினே' என்று ஆளும்போதும் நமனார் என்ற பன்மை இகழ்ச்சிக் குறிப்புடையதாக இருத்தல் அறிகிறோம்.[1] எமன் இறைவன் பாதங்களால் அழிந்தான் எனினும் திருவடித் தொடர்புடைமையால் 'நமனார் செய்த நற்றவம் பெரிது' எனப்படுகிறது.[2] முதலில் எமனை ஒருமையில் கூறும் அடிகள் அவனது தவத்தை வியக்கும் போது 'நமனார்' என்று பன்மையில் கூறுகின்றனர். இவ்வாறு சொற்களை ஆளும் முறையால் பொருள் உணர்வையும் நுட்பத்தையும் உணரச்செய்தல் அடிகளின் திறம் எனலாம்.

ஆரிய சொல்லாட்சிகள் சில

'மருகு' (13) என்னும் சொல் மருமகனைக் குறித்து வருகிறது. 'மாமடிகள்' (69,355) என்பது மாமனைக் குறித்து நிற்கிறது. 'சமன்' (133) என்ற சொல் எமனைக் குறிக்க ஆளப்படுகிறது. 'நமரங்காள்' (486,506) என்பது நமர்+அம்+காள் என்று அமைந்து, நம்மவர்களே என்ற விளிப் பொருள் தருகிறது. 'விராய்' (269) என்பது விறகைக் குறித்து நிற்கிறது; பேச்சு வழக்கில் சிராய் என்பது இதனோடு தொடர்புடையதாகலாம். 'திருவம்' (320,472) என்பது செல்வத்தைக் குறித்து வழங்கப் பட்டுள்ளது. இதில் திரு என்பதோடு 'அம்' ஈறு சேர்ந்திருத்தல் குறிக்கத்தகும். 'யோகு' (332) என்பது யோகத்தைக் குறிக்கிறது. இதில் 'அம்' ஈறு இல்லாமலிருத்தல் குறிக்கத்தகும். 'அகம்படிமைக்குடி' (428) என்பது குற்றேவல் செய்யும் குடியைக் குறிக்கிறது. ததியர் (570) என்பது அடியவர்களைக் குறிக்கிறது. இது வைணவ மரபை ஒட்டி ஆளப்பட்டுள்ளது. 'அம்மானை' (3,75) என்பது தாய் என்ற பொருளிலும் இடம் பெற்றுள்ளது. 'கைத்தீட்டு' (4) என்பது கையெழுத்து இடுதலைக் குறித்துள்ளது. 'கலாம்' (6) என்பது கலாபத்தை உணர்த்தும். 'தசை திரண்டுள்ள கொங்கை' என்ற பொருளில் 'தசைந்திடு' கொங்கை (20) என்பது ஆளப்படுகிறது. தசை என்ற பெயர்ச் சொல்லிலிருந்து 'தசைந்திடு' என்னும் வினைச் சொல் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

---

1. 465
2. 340

ஐராவதமாகிய யானை 'பகடு' (6,40) என்ற சொல்லால் கூறப்படுகிறது. புறமுதுகு காட்டுதலைப் 'பிறகிடல்' (40) என்று ஆளுகிறார். 'அம்மகோ' (118) என விளித்து அழுதல் கூறப்படுகிறது. தேவமகளிர் 'அமர நாடியர்' (196) எனப்படுகின்றனர். புகழை உடையவன் என்ற பொருளில் ஆளி என்னும் ஈறு சேர்ந்த 'புகழாளி' (351) என்னும் சொல் காணப்படுகிறது. மார்பு என்ற பொருளில் 'மார்' (538) என்பது இடம் பெற்றுள்ளது. வரம் என்பது 'வரதம்' என்று வழங்கப்படுகிறது. குழந்தை விரைந்து தவழுவதை 'ஓடித்தவழ்ந்து' (15) என்று உரைக்கக் காண்கிறாம். பெண்யானை 'கூந்தல் மடப்பிடி' (90,93) எனப்படுகிறது. கூந்தல் என்பது இங்கு யானையின் கழுத்தடி மயிரைக் குறித்து நிற்கிறது. 'மேக்கு' (689) என்பது மேலானது என்னும் பொருளில் வந்துள்ளது.

பேச்சு வழக்குச் சொற்கள் சில

அளவும் (13), இந்தா (114), இன்றைக்குழந்தை (417), ஏக்கழுத்தம் (244), குப்புற்று (34), கொம்மென (64), சருவி (4), சற்று (1:80), செட்டு (11), சரக்கு (696), செய்யுமுங்கள் (621), தட்டுமாறுதல் (13), திடுக்கம் (197), தாவடிபோதல் (406), துழனி (28), துளையமாடுதல் (401), தெட்டுண்டபோல் (403), நாவளைத்தல் (695), பயல் (621), மட்டித்து (34), பெண்பிள்ளை (33) வரத்து (181), அன்றைக்கணக்கு (417) முதலிய சொற்கள் பேச்சு வழக்குச் சொற்களாக ஆளப்பட்டுள்ளன.

வட்டார வழக்குச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. 'தளை' 'தள்ளை' (195) என்னும் தாயைக் குறிக்கும் சொல் [1] காணப்படுகிறது. இது குட்ட நாட்டார் சொல். 'சோதித்தல்' (1:97) என்பது வினாவுதல் என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது; இது மலையாள வழக்கு. 'நங்களுக்கு' (107) என்ற மலையாள வழக்குச் சொல்லும் காணப்படுகிறது. 'முயலாது வைத்து' (255), 'அறிந்து வைத்திருந்தும்' (324) ஆகியவற்றில் 'வைத்து' என்னும் தென்பாண்டி நாட்டு வழக்குச் சொல் காணப்படுகிறது. 'சலாம்' (6), 'கபாய்' (12,505) ஆகிய இந்துத்தானிச் சொற்களும், சலாபம் (48), துரை (29,72,83,93) ஆகிய பிற மொழிச் சொற்களும் காணப்படுகின்றன.

---

1. நன்.273 ஆறுமுகநாவலர் உரை

இலக்கணமரபுச் சொற்கள்

இலக்கண மரபுக்கேற்பச் சில சொற்கள் விளங்குதல் குறிக்கத்தகும். 'கடல் வாழ்சுறவும் ஏறெனப்படுமே' [1] என்ற நூற்பாவிற்கேற்ப 'மீனேறு' (105) என்று ஆளக் காண்கிறோம். பன்றியை அடிகள் 'களிறு' (138) என்று குறிக்கின்றனர்; இதுவும் தொல்காப்பிய மரபை [2] ஒட்டியதாகும். 'தென்றல்கன்று' (159) என்பதும் இலக்கண மரபை ஒட்டி உரையாசிரியர் கருத்துக்கேற்பக் [3] கூறப்பட்டுள்ளதாகும். முதலையை விலங்கு என்று கூறும் முறையில் 'இடங்கர்மா' (373) என்று குறிக்கக் காண்கிறோம். இறையனார் களவியல் உரையில், நெய்தல் கருப்பொருள்களைக் கூறும்போது 'மா-சுறாவும் முதலையும்' என்று குறிக்கப்பட்டுள்ளது. [4] இம்மரபை ஒட்டி அடிகளும் 'இடங்கர்மா' என்று வழங்கியுள்ளனர்.

'அகந்தைக்கு இடமுண்டிலை' (107) என்பதில் 'இடமுண்டிலை' என்னும் எதிர்மறை வினைவடிவம் காணப்படுகிறது. உடன்பாட்டு முற்றாகிற 'இடமுண்டு' என்பதன் பின் எதிர்மறை தரும் 'இல்லை' என்னும் சொல்லைச் சேர்த்து ஆண்டுள்ள முறை குறிக்கத்தக்கதாகும். உண்டு என்னும் உடன்பாட்டு வினைக்குப்பின் இல்லை என்று எதிர்மறை சேர்த்து வழங்குதல் அரிய வழக்காக உள்ளது. இறைவனுக்கு 'அடிமுடிஇன்றே' என்று கூறப்படுவதில், 'இன்றென்பதைத் தனித்தனியே அடியோடும் முடியோடும் கூட்டிப் பொருள் செய்க, ஒருமையாதலின்' என்கிறார் உ.வே.சா. [5] வேறு, இல்லை, உண்டு என்னும் வினைகள் ஐம்பால் மூவிடத்துக்கும் வழங்குதல் போல, [6] அடிகள் 'இன்று' என்பதை ஆண்டுள்ளனர் என்று கருதவும் இடமுண்டு.

யாப்புக்காகத் திரியும் சொற்கள்

யாப்பில் தொடை, சந்தம் ஆகிய நலங்கருதிச் சில சொற்கள் ஒலித்திரிபு பெற்று விளங்குதலும் அறியப்படுகிறது.

'மன்பெருங் குரவற் பிழைத்த பாவமும் மற்றை
மாமடிகள்இடு சாவமும்' (69)

---

1. தொல். மரபியல். 40 2. மேற்படி 34
3. மேற்படி 24, பேராசிரியர் உரை
4. இறையனார் களவியல் சூ.1 உரை, பக்.20
5. 509; கு.பி.தி. (உ.வே.சா) பக். 389 6. நன்னூல் 339

என்பதில் 'பாவம்' என்ற சொல்லுக்கேற்ப வழி எதுகை அமையுமாறு சாவம் என்ற சொல் ஆளப்பட்டுள்ளது. சாபம் என வர வேண்டிய சொல் ஈண்டுத் தொடைநலங்கருதிச் சாவம் என வந்தமை உணரத்தகும். பத்தர்தந் சித்தமும் (675) என்பதில் பக்தர் என்னும் வடசொல், சித்தமும் என்ற சொல்லுக்கேற்ற எதுகைப் பொருத்தத்துக்காகத் தமிழியல்பையும் தழுவிப் பத்தர் என வழங்கியுள்ளமை சுட்டத்தகும். சினத்தீர் கடம்ப வனத்தீரே (197) என்று எதுகை நலங்கருதிச் சினந்தீர் என்பது சினத்தீர் என வழங்கப்பட்டுள்ளது.

> 'மதம்பரவு முக்கண் மழகளிற்றைப் பெற்றுக்
> கதம்பவனத் தேயிருந்த கள்வி' (மீ.இ.3)

என்பதில் கடம்பவனம் என்ற சொல் எதுகைக்காகக் கதம்பவனம் என ஆளப்பட்டுள்ளது.

> 'குமரி பொன்னிவயை பொருநை நன்னதிகள்
> குதிகொள் விண்ணதியின் மிக்குக்கு லாவவும்' (13)

என்பது 'தனன தன்னதன தனன தன்னதன தனன தன்னதன தத்தத்த தானன' என்றும் சந்தத்தில் பொருந்தும் வகையில் வையை என்பது 'வயை' என்று இங்குச் சந்தம் நோக்கித் திரிந்துள்ளமை அறியத்தகும்.

'கங்குன்ம தங்கய மங்குல டங்கவி டுங்கா மன்சேமக்' (23) என்பதில் மதகயம்' என்று வரவேண்டிய சொல் மதங்கயம்' என்று வந்தது. இது 'தந்தன தந்தன தந்தன தந்தன தந்தா தந்தான' என்ற சந்த ஒழுங்குக்காக ஏற்பட்ட திரிபாகும். எதுகைக்காகப் பன்மை ஒருமைத்திரிபும் அமைத்துள்ளமை அறியப்படுகிறது. திருமகளும், நிலமகளும்,

> 'மனைக்கிழவன் திருமார்பும் மணிக்குறங்கும் வறிதெய்தத்
> தனக்குரிமைப் பணிபூண்டு முதற்கற்பின் தலைநிற்ப' (105)

என வருகிறது. இங்கு அவ்விருவரும் திருமாலின் மார்பும் துடையும் வறிதெய்துமாறு தமக்குரிமைப் பணியாகச் சிவனை வணங்கியமை சுட்டப்படுகிறது.இங்குத் 'தமக்கு' என வரற்பாலது 'தனக்கு' என்று

ஒருமையாக வந்துள்ளது. 'மனைக்கிழவன்' என்றதற்கு எதுகை பொருந்துதற்காக இவ்வாறு எண் வழுவாகத் திரித்து வழங்கியுள்ளமை நினைக்கத்தகும்.

இலக்கணப் பொருள் மாறுதல்

தன்' என்னும் படர்க்கை இடப்பெயர், முன்னிலை இடப்பொருள் உணர்த்தும் முறையில் கையாளப்பட்டுள்ளது. 'முத்தொழிலின் முதல் தொழிலோன் முடியிழந்தான் தனையிகழ்ந்த அத்தொழிலிற்கு' (547); முத்தொழிலின் முதல் தொழிலாகிய படைத்தலைச் செய்யும் பிரமன் (சிவனாகிய) உன்னை இகழ்ந்ததால் முடியிழந்தான் என்பது இதன் கருத்து. இங்குத் 'தனை' என்பது நின்னை என்ற பொருளில் நிற்றல் உணரத்தகும். 'இவள் நின்னை வம்மெனக் கொம்மெனக் கூவிடப்பெற்றாய்' (64), 'வம்மென்ற அளவில் நீ வந்திலை' (72) என்ற தொடர்களில் 'வம்' என்பது 'வாருங்கள்' என்ற பொருள் தரும் பன்மை வினைவடிவமாகும். அம்மை நிலவை விளையாட அழைக்கும்போது 'வம்' என்று அழைப்பதாக வருகிறது. ஒருமை வினையைப் பன்மை வினையாக இங்கு அமைத்துள்ளமை மரியாதைப் பன்மை என்னும் முறையை ஒட்டியது எனலாம். ஆயின் 'நின்னை', 'கூவிடப்பெற்றாய்', 'நீவந்திலை' என்று உடன்கூறப்படும் ஒருமை வடிவங்கள்,அடிகளின் கருத்தில் ஒருமையாக ஆளப்பட்டு வருபவை என்றும், 'வம்' என்பது அம்மையின் கூற்றாய் மரியாதை குறித்த சொல் வழக்கு என்றும் கொள்ளலாம்.

பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துதல்

பிறமொழிச் சொற்களைத் தமிழில் மொழி பெயர்த்தாற் போல் அமைத்துள்ளமையும் நோக்கத்தகும். நரசிங்கம் என்பது 'நரகரி' (603) என்றும், 'மானிடமடங்கல்' (312) என்றும் அடிகளால் வழங்கப்படுகிறது. இரணியனை 'ஆடகப் பெயரின் அவுணன்' (312) என்கிறார். பானுகோபனை இரவிபகை (418) என்று கூறுகிறார். கிரவுஞ்சமலை, குருகுபெயர்க் குன்றம் (422) எனப்படுகிறது. மீனாட்சியை

'அங்கயற்கண்ணி' (587,140,174) என்றும் விசாலாட்சியைப் 'பெருந்தடங்கண்ணி' (600,621) என்றும் கூறுகிறார். வியாகிர பாதரைப் 'புலிக்கால் முனிவர்' (463) என்று அமைக்கின்றார். கிரியாசக்தியை 'இயற்றல்' (1:10) என்றும், ஞானசக்தியை 'அறிவு' (1:10) என்றும், சரம் என்பதை 'நிலையில் பொருள்' (460) என்றும், அசரம் என்பதை 'நிலையியற் பொருள்' (460) என்றும் தமிழில் பெயர்த்து ஆண்டுள்ளமை அறியப்படுகிறது. 'மாதவன்' (482) என்னும் வடமொழிச் சொல்லுக்குத் திருமகள் கணவன் என்பது பொருள் என்பர். ஆயின் அடிகள் சிவன் தாளைக் காணாத திருமாலை மாதவன் (பெரிய தவமுடையவன்) என்பது அறனன்று என்று குறிப்பிடக் காண்கிறோம். இங்கு வடசொல்லைத் தமிழ்ச் சொல்லாகப் பொருள் ஆய்வு செய்தல் குறிக்கத்தகும்.

அடிகள் பாடல்களில் வடசொற்கள்

அடிகள் பாடல்களில் சமய அடிப்படையிலும், காலச்சூழலாலும் வடமொழிச் சொற்கள் பயின்று வழங்கக் காண்கிறோம். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகியவற்றைச் செய்யுள் ஈட்டச் சொற்களாக இலக்கண நூலார் கூறியுள்ளதற்கேற்ப, [1] வடசொல் ஆட்சியும் பரவலாக இடம் பெற்றாலும், அடிக ளின் செய்யுள் நடையும் ஓசையும் உயர்ந்த நிலையில் யாவரையும் ஈர்க்கும் திறலுடையனவாக இருத்தல் குறிக்கத்தகும். வடசொற்களை ஆளும்போது வடமொழிச் சிறப்பு ஒலிகளை நீக்கித் தமிழ் ஒலிகளை ஏற்றனவாக அமைத்து ஆளுதல் வேண்டும் என்பர் தொல்காப்பியர். [2] அவ்வகையில் அடிகள் ஆளும் வட சொற்கள் வடமொழிச் சிறப்பொலிகள் இன்றித் தமிழ் ஒலிகளிலேயே உள்ளன என்பது உணரத்தகும். ஆயின் மொழி முதல், மொழியிடை, மொழியிறுதி ஆகிய இடங்களில் தமிழில் வழங்கும் ஒலி முறைகளை இலக்கண நூலார் வரையறுத்துக் காட்டியிருப்பதை, அடிகள் பிற மொழிச் சொல்லாட்சிகளில் சிறிது நெகிழ்த்திக் கொண்டிருக்கக் காண்கிறோம். தமிழ் ஒலி மரபுக்கு மாறான – ஆயின் தமிழ் ஒலிகளாலேயே அமைந்த – வடசொற்களை யாப்பு, சந்தம்

---

1. தொல். எச்சவியல். 1
2. தொல். எச்சவியல். 5

முதலிய காரணங்களால் அடிகள் அமைத்திருக்கின்றனர். மந்த்ரம் (1:13), இந்த்ரஞாலம் (442), ரத்நம் (1:37), சித்ரம் (1:102), சக்ரவாளவட்டம் (34), சந்த்ரசேகரன் (150), அத்ரம் (445), த்ரிகூடம் (362), ப்ரதாபம் (355), ப்ரதாபன் (351), பத்மம் (359), பக்தசகாய (172), த்ரிசூலம் (172), வ்ருத்தகுமாரன் (172), லோகம் (115), கல்யாணசுந்தரர் (147), கல்யாண சவுந்தரி (80) முதலிய வடசொற்கள் இவ்வகையில் குறிக்கத்தக்கவையாகும்.

தமிழ் ஒலிமரபுக்கேற்ப ஆண்டுள்ள பிற வடசொற்களாவன:

அபயம் (23), அமுதாசனர் (412), அங்கி (202), அத்திரம் (536), அம்பை (505), அட்டதிக்கு (416), அட்டாவதானம் (1:118), அபிடேகச் (சொக்கர்)(148), அரசிவசங்கரநாமம் (139), அனுபூதி (435), ஆலோகம் (1:20), ஆலவாலம் (44), இரத அசலம் (539), இகபரம் (46), இந்திரசாலம் (1:8), உபயசரணன் (409), உபயம் (23), உபசாரம் (587:11), உருத்திரர் (359), கராசலம் (353), கமல லோசனன் (556), கப்புரம் (86), காமானலம் (99,169), கிரியா சத்தி (572), கிரீவம் (6), குஞ்சிதகமலம் (530), குஞ்சிதபதம் (451), குடிலகலராசி (202), சடானனன் (353), சராசரம் (19), சங்கரித்தல் (1:98), சது (முகன்) (434), சதுர் (மறை) (86), சத (தளம்) (53), சன்னிதி (414, 446), சாரூப்பியம் (552), சிட்டி (1:92), சிட்டர்கள் (185), சுத்தநித்தவட்டம் (34), செந்துக்கள் (647), சென்மித்து (1:16), சேனாபராகம் (78), சொம் (633), சொர்க்காதிபோகம் (1:17), தண்டதரன் (40), தசமுகநிசிசரன் (539), தயவாளர் (132), தயித்தியர் (443), தர்க்கம் (1:17), திரோதித்து (1:16), துவசம் (704), துவாதசாந்தம் (44), தெய்வீக (வடிவு) (1:57); நவரசம் (439), நயனாரவிந்தர் (202), நிகிலம் (19), நிமித்தம் (361), பரிபாகம் (1:12), பராபவம் (6), பலம் (11), பதயுகம் (4), பற்பலோசனன் (172), பற்பம் (13), பரிபவம் (584), பஞ்சரூபம் (1:6), பாலலோசனன், பாநுவிலோசனன் (172), (172), பார்ப்பதி (351), பிரமம் (1:93), பமரம் (6), பெந்தம் (1:13), புருடநாமம், புருடோத்தமன்

(572), போகசாகரம் (17), மதுரித்து (5), மனோலயம் (353), மயிடம் (11), முட்டி (185), வதனமண்டலம் (1:45), வாச்சியம் (553), வாலசந்திரன் (147), விக்கினம் (1:111), விரகம் (134), விசயம் (56).

தமிழ்ச்சிறப்புணர்த்தும் சொல்லாட்சிகள்

வடசொற்கள் ஆளப்பெற்றாலும் சுவைசிறிதும் குறையாத வகையில், இனிய தமிழ் நலங்கனிந்த சொற்களையும் சொற்றொடர்களையும் குறைவின்றி வழங்கி நிறைவு செய்யக் காண்கிறோம். பழுத்த தமிழ்ப்புலமை சான்ற அடிகள் தமிழ் மொழியின் சிறப்புக்களைப் பலவகை அடைமொழிகளால் வாயாரச் சொல்லி மகிழக் காண்கிறோம்; தமிழ் நலத்தைப் புலப்படுத்தக் காண்கிறோம். தமிழின் சிறப்புத் தோன்ற அடைமொழி புணர்த்துச் சொல்லியுள்ள இயல்பு, பயில்வார் யாவரையும் ஈர்த்துள்ளது. [1] அவ்வகையில் காணப்பெறுவன பின்வருமாறு தொகுத்துச் சுட்டத்தகும்;

அம்சொற்றமிழ் (407), அருந்தமிழ் (344), இசைமுத்தமிழ் (163), இழுமென்மொழித் தெளிதமிழ் (439), ஈர்ந்தண்டமிழ் (மீ.இ.10), ஒண்டமிழ் (320,328), கலைத்தமிழ்த் தீம்பாலமுதம் (706), கொத்து முத்தமிழ் (350), கொழித்தெடுத்துத் தெள்ளித் தெளிக்கும் தமிழ் (10), கொழிதமிழ் (196,349,385-387), கொழுத்த தமிழ் (620), சங்கத்தமிழ் (157,174,375-377), செந்தமிழ் (மீ.கு.காப்பு), செழுந்தமிழ்ச் செல்வம் (703), செழுந்தமிழ்த் தெள்ளமுது (702), சொற்சுவை பழுத்த தொகைத்தமிழ் (584), சொற்றமிழ் (2, மீ.கு.18,581), தண்டமிழ் (144,191,196,598,634), தருசுவையமுதெழு மதுரம தொழுகு பசுந்தமிழ் (115), தலைச்சங்கம் பொங்கும் பண்முத்தமிழ் (149), துறைத்தமிழ் (88), தெள்ளுதமிழ் (448), தெளிதமிழ் (22,196,388), தென்னந் தமிழ் (24,மீ.கு.14), தெய்வத்தமிழ் (49,152), தேக்கமழ் மதுர மொழுகிய தமிழ் (4), நற்றமிழ் (மீ.இ.16), பண்ணுலாம் வடிதமிழ் (15), பரசிருக்கும் தமிழ் (மீ.கு.50,515), நறை பழுத்த துறைத் தீந்தமிழ் (62), புத்தமுதம் வழிந்தொழுகும் தீந்தமிழ் (105), பைந்தமிழ் (3,158,472),

1. தொல். எச்சவியல். 1

மதுரமொழுகும் கொழிதமிழ் (55), மதுரித்துவட்டெழு முத்தமிழ் (5), முத்தமிழ் (176,378,435-437), முதற்சங்கத் தலைப்பாவலர் தீஞ்சுவைக் கனியும், தண்டேன் நறையும் வடித்தெடுத்த சாரங் கனிந்தூற்றிருந்த பசுந்தமிழ் (393), முதுசொற்புலவர் தெளித்த பசுந்தமிழ் (32), முதுதமிழ்உததி (53), மும்மைத்தமிழ் (69,127,140,390-394), வடிதமிழ் (4), வடிபசுந்தமிழ் (352), வண்டமிழ் (212, 566), வண்டமிழ்க்கடல் (191), விரிதமிழ் (206), விரைத்தேன் பில்குந்தேத்தமிழ் (699)

தமிழின் சிறப்பை இவ்வளவு விரிவாகப் பாராட்டிக் கூறினார் எவருமிலர் என்னும் அளவுக்கு அடிகள் குறிப்பிட்டிருத்தல் தனியியல்பாக எண்ணத்தகும். கடவுளரைத் தமிழ் வேட்கையுடையவர்களாகக் காண்கிறார் அடிகள். இறைவன் சவுந்தர மாறனாகவும், அம்மை தடாதகா தேவியாகவும், குமரவேள் உக்கிரவழுதியாகவும் மதுரையில் தோன்றியமைக்குக் காரணம் தமிழ் வேட்கையே என்கிறார். [1] முருகனைச் சங்கத் தமிழின் தலைமைப்புலவன் என்கிறார். [2] இவ்வாறு தெய்வங்களையெல்லாம் தமிழோடு தொடர்பும் வேட்கையும் உடையவர்களாய்க் காண்கிறார்.[3] எனவே தமிழ் மொழியைத் தெய்வத்தமிழாகக் கண்டு [4] வணங்கும் வேட்கையால், அடிகள், இறைவனை நாத்தழும்பிருக்கப் பாடியிருத்தல்போல், தமிழையும் மிக உயர்வாகப் பாடியுள்ளனர் எனலாம். தமிழ்நாடு, அம்மை இருக்கும் கோயிலாகக் கூறப்படுகிறது.[5] முதுசொற்புலவர் தெளித்த பசுந்தமிழ் நூல் பாழ்போகாமலும், நிலவுலகம் கீழ் மேலாகாமலும், பகை நாட்டவர்கள் பாண்டி நாட்டை ஆளாமலும், உயிர்கள் பாவக் கடலில் தோயாமலும், அரசியல் சிதைவுற்றுத் தருமம் மாயாமலும், பாண்டியர்க்குச் சோழர் ஒப்பென்று உணராதார் ஓதாமலும், மதுரைப்பதி தழைய மீனாட்சி ஆட்சிபுரிதல் அடிகளால் கூறப்படுகிறது. [6] எனவே தமிழையும் தமிழ்நாட்டையும் வேற்றுநாட்டவர்கள் அழிக்கவும் ஆளவும் முயன்ற குறிப்பு இங்கு

---

1. 196
2. 375-377
3. 149,53,62,378,439,55,3
4. 49,152
5. 37,57
6. 32

உணர்த்தப்படுகிறது எனலாம். இந்நிலையில் தெய்வத்தன்மை மிக்க காரணத்தினாலேயே தமிழும் தமிழ்நாடும் பிறரால் அழிக்கவும் ஆளவும் பட முடியவில்லை என்று தெளிவுறுத்தும் அடிகள், தமிழின் சிறப்பை நன்கு புலப்படுத்துவதைத் தமது கடமையாகக் கொண்டு இவ்வளவு அடைமொழிகளோடு காட்டியுள்ளனர் என்று கருதுதல் தகும்.

5. ஒலியியல்

அடிகள் எழுத்தாகிய ஒலியியல் பற்றியும் தம் பாடல்கள் வாயிலாகச் சில கருத்துக்களை உணருமாறு அமைத்துள்ளனர். வடமொழிச் சொற்களை ஆளும்போது, தமிழில் மொழி முதலாக வாராத ல், த்ர், ப்ர், வ்ர் ஆகிய ஒலிகள் மொழி முதலாக அவ்வாறே ஆளப்பட்டிருத்தல் முற்காட்டிய எடுத்துக் காட்டுக்களால் அறியத்தகும். அவ்வாறே மொழியிடையில் மயங்கி வாராத ந்த்ர், ந்த், த்ர், க்ர், த்ம், க்த், ல்ய் ஆகிய மெய்க்கூட்டுக்கள் மயங்கி வந்திருந்தலும் அறியத்தகும். இவை தமிழ் இலக்கண ஒலி மரபுக்கு மாறானவை என்பதில் ஐயமில்லை. என்றாலும் இவற்றில் உள்ள ஒலிகள் தமிழ் ஒலிகளே என்ற காரணத்தாலும், யாப்பு, சந்தம் கருதியும் இவ்வாறு ஏற்றுக்கொண்டனர் எனலாம். பல பிறமொழிச் சொற்களை அடிகள் தம் பாடல்களில் அமைத்திருப்பினும், பிறமொழிச் சிறப்பொலிகள் எவையும் அடிகளால் அப்படியே தமிழில் கலந்து எழுதப்படவில்லை என்பது முதன்மையாகக் குறிக்கத்தகும்.

'தத்துவத்தைக் கூறும் போதும் ஏன் கவிதை தோன்றக் கூடாது? கவிதைப் பண்புகளையும், நலங்களையும் சிறிதும் இழக்காமல், தத்துவ உண்மையை உணர்த்தும் கருவியாக ஏன் கவிதை இருக்க முடியாது?' [1]என்று டபுள்யூ.எச்.அட்சன் கூறுகிறார். அடிகளின் பாடல்கள் இவ்வகையில் கவிதைப் பண்புகளும் நலங்களும் முற்றும் அமைந்து சமயக் கருத்துக்களை மிகுந்த மதிப்புடனும் ஆற்றலுடனும் விளக்கி நிற்கின்றன என்பது தகும்.

---

1. 'But there is no reason poetry should not be the outcome of philosophy and the vehicle of philosophic truth without sacrificing anything of its essential poetic qualities and graces'-An introduction to the study of Literature,W.H. Hudson, p.94

இயல் 4

அடிகளின் சமயக் கொள்கை

"அரிய பிறவியாகிய மனிதப்பிறவி வாய்க்கப் பெற்றுள்ள நிலையில், வீணான பெருமைகளையெல்லாம் விடுத்துவிட்டு, இறப்பு வருவதற்கு முன்னர், இறைவனை அறிதற்கு முயல வேண்டுவதே அறிவுடையோர் மேற் கொள்ளத்தக்கது" என்று பாகவதம் அறிவுறுத்துவதை 'நிலைத்த தத்துவம்' என்னும் நூலாசிரியர் ஆல்டசு அக்சிலி எடுத்துரைக்கின்றார். [1]

சைவ சமய மரபில் தோன்றி, சைவ மடங்களுள் ஒன்றாகச் சிறந்து விளங்கும் தருமபுர ஆதீனத்தில் விளங்கிய மாசிலாமணி தேசிகரைக் குருவாக அடைந்து, துறவு பூண்டு விளங்கிய குமரகுருபர அடிகள் இவ்வகையில் சைவ சமயத்தைச் சார்ந்தவராய், இறைவனை அறிந்து அடி அடைந்த திருத் தொண்டராய்த் திகழ்கின்றார். தாம் சார்ந்தொழுகிய சைவ சமயக் கொள்கை புலனாகும் வகையிலும், இறைவனை அறிந்து அருள் பெற்று இன்புற்றமை விளங்கும் வகையிலும் அடிகள் தம் பாடல்களை மக்களினத்துக்கு அளித்துள்ளனர். மனித வாழ்வின் குறிக்கோளை அடைந்த அடிகள், உயிர்கள்மாட்டுப் பெருங்கருணை கொண்டு சைவ சித்தாந்தக் கருத்துக்களையும், அருள் வழங்கும் முறைகளையும், அடியவர்களின் பெருமையையும் வழிபாட்டு முறைகளையும், சமய வாழ்வை மலர்விக்கும் பிற ஒழுக்கங்களையும் இனிதின் புலப்படுத்தியுள்ளார். அவற்றை விளக்குதல் இவ்வியலின் நோக்கமாகும்.

சைவசித்தாந்தச் சிறப்பு

முழுமையான நிலைத்த இன்பத்தைச் சமயத்தின் வழியாக அல்லாமல் வேறெங்கும் காண இயலாது என்று வில்லியம் சேம்சு என்பார் வலியுறுத்திக் கூறுகின்றார். [2] உலகில் வழங்கும் பலவகைச் சமயங்களும் இந்தக் குறிகோளை அடைவிக்கத் தத்தம் முறைகளில்

---

1. "Having achieved human birth, a rare and blessed incarnation, the wise man, leaving all vanity to those who are vain, should strive to know God, and Him only, before life passes into death" - Srimad - Bhagavatam - The Perennial Philosophy, Aldous Huxley, p.220

2. The sort of happiness in the absolute and everlasting is what we find no where but in religion" - varieties of Religious Experiences William James p.48

முயலுகின்றன எனலாம். சைவசித்தாந்தம் அவ்வகையில் தனிச்சிறப்புடைய சமயக்கொள்கையாகும். "விழுமிய சைவ சித்தாந்தம், முழுவதும் ஒப்புக்கொள்ளத் தக்க விளக்கங்களால் சிறந்து, தமிழ் அறிஞர்களின் முழுமைபெற்ற அறிவுக் கூர்மையைத் தெளிவுறுத்தி நிற்கிறது" என்று கிறித்துவ சமயத்தவரும், சிறந்த தமிழறிஞருமான டாக்டர் ஜி.யு.போப் பாராட்டி மொழிகின்றார். [1] மேலும் அதன் சிறப்புக்களை விளக்கும் முறையில்,

"சைவசித்தாந்தக் கொள்கை மிகவும் வளர்ந்தமைந்திருப்பது; செல்வாக்கு மிக்கது; இந்தியச் சமயங்கள் அனைத்துள்ளும், ஐயமின்றி, இயற்கையிலேயே மதிப்புயர்ந்து விளங்குவது; அது, சிறப்பாகத் தென்னிந்தியச் சமயமாகவும் தமிழ்ச் சமயமாகவும் திகழ்கிறது. வரலாற்றுக்கு முற்பட்ட பழமைச் சமயமாகிய சைவம், ஆரியர் வருவதற்கு முன்பிருந்தே தென்னிந்தியாவில் நிலவி வருவதோடு, தமிழ் மக்கள் உள்ளங்களிளெல்லாம் நிலையான ஆட்சி புரிந்து விளங்குகிறது." [2] என்றும்,

"வேறு எச்சமயக் கொள்கையையும் விடக் சைவ சித்தாந்தக் கொள்கை மிகப் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருக்கிறது; அதற்கேற்ற தகுதியும் நிறைந்திருக்கிறது." [3] என்றும் டாக்டர் ஜி.யு.போப் சைவ சித்தாந்தத்தை மதிப்பிட்டுரைத்திருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

"வாழ்வின் நிலையான பண்பு நிலைகளை உறுதிப்படுத்தவும், 'இறைவன்-சமுதாயம்-நன்மை-தீமை' இவை தொடர்பான சிக்கல்களைத் தீர்க்கவும், சைவ சித்தாந்தம் மதிப்பிடற்கரிய உயர்ந்த கொள்கையாகத் திகழ்வதை ஆழ்ந்து கற்போர் உணர்தல் திண்ணம்." [4] என்று கா.சு.பிள்ளை கருத்துரைக்கின்றனர்.

---

1. "The more we examine the detailes of the system the more thoroughly convinced do we become that the Siddhanta is indeed an eclectic system thought out by Tamil Sages.... and ows its completeness to the ingenuity of the Tamil mind" - Tiruvacagam. Translation. Dr.G.U.Pope, p.xciii
2. "The Caiva Siddhanta system is the most elaborate, influential,and undoubtedly the most intriniscally valuable of all religions of India. It is peculiarly the South-Indian, and Tamil religion... Caivam is the old prehistoric religion of South India, essentially existing from Pre-Aryan times, and holds sway over the hearts of the Tamil People" - Ibid, Notes XI, P.1xxiv
3. "the caiva siddhanta philosophy has and deserves to have, far more influence than any other" - Ibid.Preface.p.IX
4. "On a deep study of the system, the Saiva Siddhanta will be found to be invaluable for ascertaining the eternal verities of life and for solving the problems of God, Humanity, Evil and Good". - K.Subramania Pillai, M.A., M.L., in his essay on 'Saiva Siddhantham', in தருமபுர ஆதீனம் பத்தாண்டு ஆட்சிமலர் (1933-1943), பக்.287

பன்னிரு திருமுறைகளும், பதினான்கு சாத்திரங்களும் சைவ சமயக் கொள்கையையும் ஒழுக்கங்களையும் விரித்தும், வரையறுத்தும் தெளிவுறுத்திய காலப்பகுதிக்குப் பின்னர்த் தோன்றிய அடிகள், தாம் பாடிய பாடல்களிலும் சைவசித்தாந்தக் கருத்துக்களை மரபுவழி இனிதின் புலப்படுத்தும் வாய்ப்பினை அமைத்துக் கொண்டுள்ளனர். சித்தாந்த நூற் பயிற்சியும், சைவ சமய ஒழுக்க மரபில் வேட்கையும் அடிகளுக்கு மிக்கிருந்தமை புலனாகும் வகையில் அடிகளின் சைவசமயப்பற்று அவர்தம் பாடல்களின் வாயிலாகத் தெளிவாகிறது.

சைவசித்தாந்தத்தின் சிறப்பினையும் உயர்வையும் அடிகள் நன்கு வலியுறுத்தியுள்ளனர். 'திவ்வியம் பழுத்த சைவசித்தாந்தத்து இறவா நிலைமை' என்று குறிக்கும் அடிகள், பேதம் என்றும் அபேதம் என்றும் பேதாபேதம் என்றும் பல்வேறு வகையாகக் கூறுவோர் சொல் வழிப்படாமல் தெய்வத்தன்மை மிகுந்த சைவசித்தாந்த நெறியில் நீங்காத நிலைமை பெற்றுப் பிறவா நிலையடைய விரும்புகிறார். [1] பிற சமயத்தவர் கூறும் கொள்கைகளைவிடச் சைவ சித்தாந்தம் மேம்பட்டு விளங்கும் குறிப்பை அடிகள் இங்ஙனம் குறித்திருப்பதோடு, அந்த நெறியே தமக்குப் பின்பற்றுதற்கு விருப்பமானது என்பதையும் நன்கு தெளிவுறுத்தியுள்ளார். 'ஞானத் திருந்திழைக்கு அணியாம் அருட்பெருஞ் சைவம்' [2] என்றும், 'மறைமுடிவாம் சைவம்' [3] என்றும் சிறப்பிக்கின்றார். தம் குருவாகிய மாசிலாமணி தேசிகரை, இன்னருள் பழுத்த செந்நெறிச் செல்வன் [4] என்னும் முறையில் சைவசித்தாந்தத்தைச் செந்நெறி என்ற பெயரால் குறிப்பிட்டிருப்பதும் உணரத்தகும். 'முன்பு திருநெறி, பெருநெறி, செந்நெறி என்று சைவசித்தாந்தம் வழங்கியது'[5] என்னும் செய்தி ஈண்டு நினைக்கத்தகும். சைவ சித்தாந்தத்தின் தனிச்சிறப்பினைப் பிறிதொரு பாடலிலும் அடிகள் புலப்படுத்தியுள்ளனர்:

'பல்லுயிர்த் தொகுதியும் பயங்கொண்டு உய்கெனக்
குடிலை என்னும் தடவயல் நாப்பண்
அருள்வித்து இட்டுக் கருணைநீர் பாய்ச்சி

---

1. 569 : 19-25 2. 566 : 32-33 3. 1 : 104-105
4. 566 : 31
5. 'In times past, the system was known as Thiruneri, Peruneri, Senneri and so forth'
தருமபுர ஆதீனம் பத்தாண்டு ஆட்சிமலர் (1933-1943)
கா.சு.பிள்ளை பக்.266

வேதம் என்னும் பாதவம் வளர்த்தனை
பாதவம் அதனில் படுபயன் பலவே அவற்றுள்
இலைகொண்டு உவந்தனர் பலரே இலைஒரீஇத்
தளிர்கொண்டு உவந்தனர் பலரே தளிர்ஒரீஇ
அரும்பொடு மலர்பிஞ்சு அருங்காய் என்றிவை
விரும்பினர் கொண்டுகொண்டு உவந்தனர் பலரே
அவ்வாறு உறுப்பும் இவ்வாறு பயப்ப
ஒரும் வேதாந்தம் என்று உச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவ சித்தாந்தத்
தேனமுது அருந்தினர் சிலரே' (575:22-35)

இதில் வேதவழக்கில் அமைந்த சமயங்கள் பலவும் ஒன்றின்ஒன்று உயர்ந்து சிறந்து விளங்குவதும், சைவசித்தாந்தம் அம்முறையில் மிகச்சிறந்து மணிமுடியாக ஒளிர்வதும் உருவக முறையில் தெளிவாக்கப்பட்டுள்ளன. இறைவன், உயிர்கள் நலம்பெறும் பொருட்டுச் சுத்தமாயையாகிய வயலில் அருள் என்னும் விதையை விதைத்துக் கருணையாகிய தண்ணீரைப் பாய்ச்சி வேதம் என்னும் மரத்தை வளர்த்தனன்; அம்மரத்தில் பலர் இலைகொண்டு மகிழ்ந்தனர்; பலர் தளிர் கொண்டு மகிழ்ந்தனர்; பலர் அரும்பும், மலரும், பிஞ்சும், காயும் கொண்டு மகிழ்ந்தனர். ஆயின் வேதாந்தமாகிய உச்சியிற் பழுத்த அரிய கனியைப் பிழிந்து அதன் சாற்றைக் கொண்டுள்ள சைவசித்தாந்தமாகிய தேனமுதை அருந்தி இன்புற்றவர்கள் சிலரே என்று ஈண்டு விளக்கப்பட்டுள்ளது. அடிகள் அச்சிலருள் ஒருவர் என்பது தேற்றம். வேதமாகிய மரத்தின் இலை, தளிர், அரும்பு, மலர், பிஞ்சு, காய், கனி, கனிச்சாறு என்ற படிமுறையில் முறையே தார்க்கிக மதம், மீமாஞ்சக மதம், சாங்கிய மதம், யோக மதம், பாஞ்சராத்திர மதம், ஏகான்மவாத மதம், சிவாத்துவித வேதாந்தம், சைவசித்தாந்தம் ஆகியவை உணர்த்தப்பட்டுள்ளன என்று சிவஞானபோத வசனாலங்கார தீபம் என்னும் நூல் விளக்குதல் அறியப்படுகிறது.[1]

---

1. தருமபுர ஆதீனம் பத்தாண்டு ஆட்சி மலர், ஔவை சு. துரைச்சாமிப் பிள்ளை, பக். 194-195

'மொழிக்கு அயலாகி விளங்கும் இறைவன் வேத முடிபினில் முடிந்து நின்ற வழிக்கு (சித்தாந்தத்திற்கு) அயலாகான்'[1] என்றும், இறைவன் சித்தாந்தத்தில் விளங்கும் சிறப்பு உணர்த்தப்படக் காண்கிறோம்.

1. சைவசித்தாந்தக் கருத்துக்கள்

விழுமிய சித்தாந்த நெறியை விரும்பி மேற்கொண்ட அடிகள், அந்நெறிக்குரிய கருத்துக்களை நன்கு உணர்த்தியுள்ளார். இறைவன், உயிர்கள், உலகம் என்றும் பதி, பசு, பாசம் என்றும் வழங்கும் முப்பொருள் உண்மைகளையும், இயல்புகளையும், தொடர்புகளையும் ஆங்காங்கு தெளிவாக்கியுள்ளார்.

'நான்மறை நவின்ற நற்பொருள் இவையென
மோனவா சகத்தான் முப்பொருள் நவிற்றுபு
நன்னலம் புரியும் ஞானப் பிரகாசன்' (566 : 28-30)

என்று கமலை ஞானப்பிரகாசர் முப்பொருள் உணர்த்திய திறத்தை அடிகள் குறிப்பிட்டுள்ளார்.

(அ) இறைவன்

அவன், அவள், அது எனும் அவையாகிய உலகம் தோற்றம், நிலை, இறுதி என்ற மூவினைகளைப் பெற்றிருப்பதால் தோற்றுவிக்கப்பெற்ற திதியாம் என்று சிவஞானபோதம் இறைவன் உண்மையை உணர்த்தும். [2] இவ்வாறு காணப்பட்ட உலகால் காணப்படாத கடவுளுக்கு உண்மை கூறப்படுதற்கேற்ப அடிகளும் ஏற்ற உவமைகளால் இறைவன் உண்மையை உணர்த்துகின்றனர். கண்ணாடியில் நிழலை அசையச் செய்பவன் போல, இறைவன் புவனத்தை ஆக்கி அசைத்தருளும் ஆணை உடையவன் என்கிறார் அடிகள். [3] ஒருவன் அசையச் செய்யாமல் கண்ணாடியில் நிழல் தானே அசையாது. அவ்வாறே இறைவன் தோற்றுவிக்க உலகம் விளங்குகிறது என்பது தெளிவாக்கப்படுகிறது. பிறிதோரிடத்தில்

---

1. 170
2. சிவஞானபோதம். சூத்திரம். 1
3. 1:73

'கும்பாதி காரியமெனத் தமை நிமித்தமாக்
கொண்ட அகிலாண்டங்களின், குழு' (361)

என்று குறிப்பிடுகிறார் அடிகள். கும்பம் முதலியவை குயவன் முதலியோரை நிமித்த காரணமாகக் கொண்டாற் போல அகிலாண்டங்களின் குழு இறைவனைக் காரணமாகக் கொண்டிருத்தல் இங்கு உணர்த்தப்படுகிறது.

'காரிய கார ணங்கள் முதறுணை நிமித்தங் கண்டாம்
பாரின்மண் திரிகை பண்ணு மவன் முதல்துணை நிமித்தம்
தேரின் மண்மாயையாகத் திரிகைதன் சத்தியாக
ஆரியன் குலாலனாய் நின்று ஆக்குவன் அகிலமெல்லாம்'
(சித்தியார்.37)

என்னும் சிவஞான சித்தியார் விளக்கம் அடிகளால் அவ்வாறே பின்பற்றப்பட்டிருத்தல் ஈண்டு உணரத்தகும். மட்கலங்களுக்கு மண் முதற்காரணம்; திரிகை முதலாயின துணைக்காரணம்; குயவன் நிமித்த காரணம். அவ்வாறே உலகப்படைப்புக்கு மாயை முதற் காரணம்; இறைவனது ஆற்றல் (சத்தி) துணைக்காரணம்; இறைவன் நிமித்த காரணம். இங்ஙனம் அடிகள் இறைவன் உண்மையைத் தக்க ஏதுக்களால் வலியுறுத்தியுள்ளமை அறியத்தகும்.

தன்னியல்பு (சொரூப இலக்கணம்)

சைவ சித்தாந்தத்தில் இறைவனுக்கு இருவகை நிலைகள் கூறப்படும். அவை 1. தன்னியல்பு (சொரூப இலக்கணம்) 2. பொது இயல்பு (தடத்த இலக்கணம்) என்பன. தன்னியல்பு நிலையில் பெயர், குணம், குறி இல்லை; ரூபம், அரூபம், ரூபாரூபம் இல்லை; மனம், சொல், மெய் ஆகிய மூன்றாலும் அறியப்படாத அனாதிமுத்தசித்தாய் இருக்கும் இந்த நிலையிலுள்ள கடவுளைச் சித்தாந்திகள் பரமசிவம் என்பர்.[1] சிவஞானபோதம் 6-ஆம் சூத்திரத்தில் இறைவன் இலக்கணம் கூறும் போது 'இருதிறனல்லது சிவசத்தாம்' என்பது, சொரூப

1. கலைக்களஞ்சியம். தொகுதி.5 பக்.239

இலக்கணம் எனப்படும் சிறப்பிலக்கணம் என்று கருதப்படுகிறது.[1] உலகியலறிவும் உயிரறிவும் (பாசஞானம்,பசுஞானம்) கொண்டு உணருமிடத்துப் பரம்பொருள் உணரப் படுவதில்லை என்பதும், அப்பரம்பொருளின் திருவருள் அறிவு (பதிஞானம்) கொண்டு நோக்கின் அப்பரம்பொருள் உணரப்படும் என்பதும் மெய்யுணர்ந்த சான்றோர் கூற்றாகலின் இவ்விருவகையில் இறைவன் முறையே சிவம் என்றும் சத்தென்றும் பெறப்படுதலின் சிவ சத்து எனப்படுகிறான். அசத்தாகவும் இன்றிச் சூனியமாகவும் இன்றி இறைவன் சிவசத்தாக விளங்கும் நுட்பம் இவ்வகையில் இறைவனுடைய தன்னியல்பாகக் கருதப்படுகிறது எனலாம். 'இன்னும் முதல்வனுக்கு உளவாகிய சிறப்பியல்புக் குணங்களெல்லாம் இவ்விரண்டனுள் அடங்கும். அஃது அறிந்து அடக்கிக் கொள்க '[2] என்று சிவஞான சுவாமிகள் குறிக்கின்றனர். 36 தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டு நிற்கும் பெயரில்லாக் கடவுளுக்குப் பரமசிவம் என்று பெயர் தந்து வழங்குதல் மரபாக உள்ளது. ‘பெரும்பெயர்க்கடவுள்’ என்றும் பரம்பொருளைச் சிவஞானபோதப் பாயிரம் குறிக்கிறது. அப்பரம்பொருளின் திருவருளாலேயே சொரூப இலக்கணம் அனுபூதியில் கண்டு உணரத்தக்கது என்பதும் அறியப்படுகிறது. [3]

அடிகள் இறைவனின் சொரூப இலக்கணத்தைக் கந்தர் கலி வெண்பாவில் முதற்கண் விளக்கியுள்ளனர். இறைவன் நாதமும், நாதாந்தமுடிவும், நவைதீர்ந்த போதமும் காணாத போதமாய் விளங்குகிறான்; ஆதி, நடு, அந்தம் கடந்து நித்தியானந்த போதமாய் உள்ளான்; பந்தந்தணந்த பரஞ்சுடர் அவன்; குறியும் குணமும் ஒரு கோலமும் அற்று எங்கும் செறியும் பரமசிவம்; அறிவுக்கு அநாதியாகவும் ஐந்தொழிற்கு அப்பாற்பட்டும் மனம் முதலியவற்றுக்கு எட்டாதவனாகவும் இருப்பவன் என்று முருகனைப் பரமசிவமாகவே

---

1. சிவஞானபோத மூலமும் சிற்றுரையும், சிவஞான சுவாமிகள், சூ.6 உரை பக்.165
2. மேற்படி பக்.166
3. மேற்படி சிறப்புப்பாயிரம் பக். ii - iii

அடிகள் குறிக்கின்றார். [1] பிற இடங்களிலும் முருகனைப் பரமசிவமாக முழுமுதற்றன்மை உடைய நிலையில் குறிப்பிடக் காண்கிறோம். அடியும் முடியும் இன்றி வெறுவெளி கடந்து, மறைமுடிவில் நின்று நிறை செல்வன், [2] மறை ஓலிடும் முழு முதல், தனிமுத்திக்கு ஒரு வித்து; [3] அறிவுள் அறிவை அறியும் அவரும் அறியவரிய பிரமம், [4] அழியாத வீடு தருபவன்; [5] மும்மூர்த்திகளும் பணிந்து நிற்கும் ஆதிப்பிரான், [6] தனிமுதல் [7] என்றெல்லாம் முருகனைக் குறிக்கும் அடிகள் இறைவனுடைய சொரூப இலக்கணத்தை எடுத்துக்காட்டியுள்ளமை அறியத்தகும்.

அம்மையைக் குறிக்கும்போது, துவாத சாந்தப் பெருவெளியில், துரியங்கடந்த பரநாத மூலத்தலத்து முளைத்த முழுமுதல் என்று கூறப்படுகிறது. [8] துரியம் கடந்த துவாத சாந்தப் பெருவெளி வளாகத்து ஒருபெருங் கோயிலுள், முளையின்றி முளைத்த மூலலிங்கத்து அளவையின் அளவா ஆனந்த மாக்கடல் என்று இறைவனைக் குறிப்பிடக் காண்கிறோம்; வேத புருடனும், விராட்புருடனும் இறைவன் தன்மையை நிகழ்த்த முடியாத நிலையில் பெருமைமிக்க இறைவனை, அடிகள் இறைவன் அளித்த தகவினால் பாடியிருப்பதாகவும் கூறுகிறார்.[9] இறைவனின் திருவருட்தகவினாலேயே இங்கு அடிகள் இறைவனுடைய சொரூப இலக்கணத்தைக் கண்டு உணர்ந்தமை தெளிவாக்கப்பட்டுள்ளது எனலாம்.

'குறியிலன் அலதொரு குணமிலன் எனநினை
அறிபவர் அறிவினும் அறிவரு நெறியினை' (105)

என்றும் இறைவன் குறிக்கப்படுகிறான். இறைவனுக்கு அடிமுடி இல்லை என்பதும், [10] இறைவன் பிறவாதவன் என்ற குறிப்பமையக் கூறுதலும் [11] காண்கிறோம். இவ்வாறு இறைவனுடைய தன்னியல்பு நுட்பமாக உணர்த்தப்பட்டுள்ளது.

1. 1 : 2-5
2. 352
3. 375
4. 408
5. 415
6. 364,389,409,430
7. 388
8. 44
9. 206 26-36
10. 509
11. 324 : 22-25

நுட்பமாய், அறிதற்கரிதாய் இருப்பது தன்னியல்பு (சொரூப இலக்கணம், சிறப்பியல்பு) என்றும் அளவையாலும் இயக்கத்தாலும் அறியத்தக்கதாய் இருப்பது பொதுஇயல்பு (தடத்த இலக்கணம்) என்றும் கருதுவது தகும். உயிர் அஞ்சவத்தைப்படுதல் உயிர்க்குத் தடத்த இலக்கணம் என்னும் பொதுவியல்பு என்று உணர்த்துவதும், [1] இருதிறனறிவுளது இரண்டலா ஆன்மா என்பது உயிரின் சொரூப இலக்கணம் என்று கூறுவதும், [2] அறியாமையைச் செய்தலாகிய கேவலத்தின் நிகழும் இயல்பே மலத்துக்குத் தன்னியல்பு, கருவிகளோடு கூடி அவத்தை உறுவதாகிய விபரீத உணர்வைச் செய்யும் சகலத்தினிகழும் இயல்பே பொதுவியல்பு என்று உணர்த்துவதும் [3] சித்தாந்த மரபில் அறியப்படுகின்றன. எனவே உயிர்கள் முதலியவற்றுக்கும் இவ்விருவகை இலக்கண நிலைகள் பேசப்படுதல் அறியத்தகும்.

பொதுவியல்பு (தடத்த இலக்கணம்)

தன்னியல்பில் உள்ள பரமசிவன் உயிர்களுடைய துன்பங்களைப் போக்கி அவைகட்கு அருள் செய்தற்காக இரக்கம் கொண்டு தானாகவே பல படிகள் இறங்கி வந்து பல நிலைகளிலுள்ள கடவுளரை அதிட்டித்துநின்று அவர்கள் மூலமாக ஆணை செலுத்திப் பஞ்சகிருத்தியங்கள் எனப்படுகின்ற ஐந்தொழில்களைச் செய்கின்றான்; இந்த நிலையே இறைவனுடைய பொதுவியல்பு என்பர்; ஒன்றிலும் தோய்வின்றித் தன்னுண்மையில் நிற்கும் நிலையில் சிவம் என்றும், உலகெலாம் ஆகி, வேறாய், உடனாய் உயிர்களின் வழிநிற்கும் தன்மையில் சத்தி என்றும், நீங்காமை எனும் தாதான்மியத்தால் இருதிறப்பட்டு, ஐந்தொழில் செய்யும் தன்மையில் பதி என்றும் இறைவன் பெயர் பெறுகிறான் என்றும் சித்தாந்த மரபில் குறிப்பர். [4] இறைவன் பொதுவியல்புகளை அடிகள் நன்கு விளக்கியுள்ளார்.

---

1. சிவஞானபோதமூலமும் சிற்றுரையும். பக். 114
2. மேற்படி பக்.210
3. மேற்படி பக். 128
4. கலைக்களஞ்சியம். தொகுதி 5 பக். 239

ஐந்தொழில் நிலை

கந்தர் கலி வெண்பாவிலும் பிற இடங்களிலும் முருகனைப் பரமசிவமாக முழுமுதல் தன்மை விளங்கப் பாடியிருத்தல் போலப் பதி நிலையில் ஐந்தொழில் முதலியன நிகழ்த்துபவனாகவும் எடுத்துக் காட்டப்படுகிறது. பரமசிவமாய்த் தன்னியல்பில் உள்ள முருகன் தனது அருளினால் ஐந்துவகை உருவங்களுடன் பரசுகமாய் விளங்குகிறான் என்பதை அடிகள், தனாதருளின், பஞ்சவிதரூப பரசுகமாய் [1] என்று குறிப்பிடக் காண்கிறோம்.பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் எந்த ஐவருருவிலும் விளங்குதல் ஈண்டுப் பெறப்படும் கருத்தாகும். இவ்வகையில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிற்கும் நீங்காத பேருருவாய் நிற்றலும் உணர்த்தப்படுகிறது.[2] எஞ்சாத பூரணமாய், நித்தமாய் இருப்பவன்; போக்குவரவும் புணர்வும் காரணமுமில்லாக் கதியாவான்; இந்திரசாலம் புரிவோன் எல்லோரையும் தான் மயக்கினும் அம் மயக்கத்தில் தான் சாராது நிற்பது போல் இறைவன் ஓட்டற நிற்கும் இயல்பினன்; விழைவு, அறிவு, செயல் (இச்சாஞானக்கிரியா - சத்திகள்) என்னும் மூன்றையும் திரிகரணங்களாகக் கொண்டு இலய போக அதிகார அவத்தையில் நின்று (படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில் செய்து) விளங்குபவன் என்கிறார். [3] இவை சித்தாந்த மரபில் கூறப்படுபவை யாகும்.

நவந்தருபேதம்

உருவமும், அருவமும், உருவருவமும் ஆக விளங்குதலும் குறிக்கப்படுகிறது. [4] உருவத்திருமேனி மகேசுவரன், உருத்திரன், மால், அயன் ஆகிய நான்கும் என்றும், அருவத்திருமேனி சிவம், சத்தி, நாதம், விந்து ஆகிய நான்கும் என்றும், அருவுருவத்திருமேனி சதாசிவமாகிய ஒன்று என்றும் இவ்வொன்பதையும் நவந்தருபேதம் என்றும், இறைவன் ஒருவனே இவ்வொன்பது வகையாகவும் விளங்குகிறான் என்றும் சித்தாந்த முறையில் [5] விளக்கப்படுதல் ஈண்டு நினைக்கத்தகும். இவை உயிர்களின் பொருட்டு இறைவன் மேற்கொள்ளும் நிலைகளாகும். இவ்வுண்மைகளை உள்ளடக்கிப் பல இடங்களிலும் அடிகள் குறித்துள்ளார்.

---

1. 1 : 5 - 6
2. 1 : 59
3. 1 : 6 - 10
4. 1 : 11
5. சித்தியார்.சு. 2 : 74

'அருவென்ன உருவென்ன அன்றென்ன நின்றவன்' (414) என்று முருகனையும்,

'அருவமும் உருவமும் ஆகி நின்றும் அவ்
அருவமும் உருவமும் அகன்று நின்றனை' (539)
'அருவெனில் உருவமும் உளைஉரு வெனில்அரு
உருவமும் உளையவை உபயமுமலை' (548)

என்று சிவனையும் குறிப்பிடக் காண்கிறோம்.

பல்வேறுரு

அடியவர் பொருட்டு இன்னும் பற்பலவடியாய் இறைவன் தோன்றுவதையும் அடிகள் உணர்த்துகிறார். 'பருவ வடிவம் பலவாய்' [1] என்று முருகனைக் குறிக்கும்போதும், 'பல்வேறு உருவாய் நின்றருள் காசிப்பதியுள்ளீர்' [2] என்று சிவனைக் குறிக்கும்போதும் உணர்த்துகிறார். இறைவன் நவந்தரு பேதமாகவும், இருபத்தைந்து மூர்த்தமாகவும், அறுபத்துநான்கு வடிவமாகவும் எழுந்தருளி இருத்தலை இவ்வாறு அடிகள் உணர்த்துகின்றனர். [3]

அட்டமூர்த்தம்

ஐம்பூதங்களும், ஞாயிறும், நிலவும், இயமானனும் ஆகிய எட்டும் இறைவனுடைய அட்டமூர்த்தங்கள் என்று குறிக்கும் வகையில், முருகனை, 'மேவரும் அட்டமூர்த்தமாம் வாழ்வே' [4] என்றும், காசி இறைவனை, 'எண்வகை உறுப்பினோர் உருவெடுத்தனை' [5] என்றும் அடிகள் குறிப்பிட்டுள்ளனர். மேலும் இதனை,

'இருபெருஞ் சுடரும் ஒருபெரும் புருடனும்
ஐவகைப் பூதமோடு எண்வகை உறுப்பின்
மாபெருங் காயம் தாங்கி' (460 : 17-19)

'அருக்கன் மதிவளிவான் யமானன் தீநீர்
மண்ணெனும்எண் வகையுறுப்பின் வடிவுகொண்ட
ஒருவனுக்கும் ஒருத்திக்கும்' (534)

என்று விளக்கியும் புலப்படுத்தியுள்ளனர்.

---

1. 1 : 11
2. 681
3. கு.பி.தி. (உ.வே.சா) பக். 505
4. 1 : 65
5. 600

குருவாய் அருளல்

முருகன் கருணைத் திருவுருவாய்க் காசினியில் தோன்றிக் குருபரனாகி உயிர்களுக்கு அருளும் குறிப்பும் சுட்டப்படுகிறது.[1] சிவபெருமானே மாசிலாமணி தேசிகராகிய குருவாக வந்து அடிகளுக்கு அருள்புரிந்தமை தெளிவாகவும் விரிவாகவும் கூறப்பட்டுள்ளது.

'மீகெழு பரஞ்சுடர் வெளிப்பட் டம்ம
எம்மனோர் போல இனிதெழுந் தருளிக்
கைம்மா றற்ற கணக்கில்பே ரின்ப
மோனவாழ் வளிக்கும் ஞான தேசிகன்' (566 : 13 - 16)

என்றாற்போலத் தம் ஞானாசிரியரை இறைவனாகவே அடிகள் பல இடங்களில் [2] குறிப்பிட்டுள்ளமை முன்னரும் விளக்கப்பட்டுள்ளது. பக்குவம் பெற்ற உயிர்கட்கு இறைவன் குருவாய் எழுந்தருளி அவனை உணரச்செய்தல், சிவஞானபோதம் 8-ஆம் சூத்திரத்தில் கூறப்படும் உண்மையாதல் உணரத்தகும். 'அருபரத் தொருவன் அவனியில் வந்து, குருபரனாகி யருளிய பெருமையை' [3] என்று மாணிக்கவாசகர் கூறும் கூற்றும் ஈண்டு ஒப்பு நோக்கத்தகும். இக்கூற்றை விளக்கும்பொழுது, கடவுள் ஒன்று உண்டெனக் கொண்டார்க்கு அக்கொள்கை நிலை பெறுவது அஃது அவர்க்கு ஒரோவழித் தோன்றி அருள்புரியும் வழியேயாகலான் இறைவன் குருபரனாகி யருளியதாகக் கூறியதாக மறைமலையடிகள் கூறுவர். [4]

முருகனும் சிவனும்

முருகன் உயிர்களுக்கு அருளும் முறைகளை அடிகள் சிவனைக் கூறும் முறையிலேயே குறிப்பிட்டுள்ளனர். [5] முருகனைச் சைவக் கொழுந்து [6] என்றும், சிதாகாச வெளியில் விளங்கும் தேன் [7] என்றும் குறிக்கின்றனர். சிவன் சூக்குமவெளியினில் பரமநடம் நவிற்றுதலும் அடிகளால் உணர்த்தப்படுகிறது. [8] இவ்வாறு முருகனைச் சிவனாகவே கருதுதலும் சிவனுக்குக் கூறப்படும் இயல்புகளை

---

1. 1:24 2. 578; 19 -25; 569; 14-18; 572; 1-10; 584; 7-12; 591;592
3. திருவாசகம், போற்றித்திருவகவல். 75-76
4. திருவாசக விரிவுரை, மறைமலையடிகள் பக்.369-370
5. 1 : 12 - 36,424 6. 1 : 105 7. 388 8. 351

முருகனுக்கும் ஏற்றிப்பாடுதலும் 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க அடிகளிடம் காணப்படுதல் அறிஞரால் சுட்டிக்காட்டப்படுதல்[1] ஈண்டு ஒப்பு நோக்கத்தகும்.

ஆறுமுகச்சிவன்

பதியாகிய இறைவன் இயல்புகள் மேலும் பலவகையாக அடிகளால் உணர்த்தப் பெற்றுள்ளன. இறைவன் ஐந்துமுகத்தோடு அதோமுகமும் உடையவன் எனப்படுகிறான். [2] ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் ஆகிய ஐந்துமுகமும் கீழ்நோக்கியதாகிய அதோமுகமும் இங்ஙனம் சுட்டப்படுகின்றன. அம்மைக்கும் இறைவனுக்கும் முருகன் தனது ஆறுமுகங்களாலும் முத்தம் கொடுத்ததாகக் கூறும்போதும், இறைவன் முகம் ஐந்தும் அம்மையின் முகம் ஒன்றும் என்பது குறிப்பாகப் பெறவைக்கப்படுகிறது.[3]

ஐந்தொழில் நடனம்

இறைவன் கபடமாம் நாடகத்து ஐந்தொழில் நடத்துபவன். [4] அருள் முந்துறுத்த ஐந்தொழிலை ஓய்வின்றி நிகழ்த்துபவன். [5] அவன் ஐந்து மெய்த்தொழில் செய்வது விளையாட்டு நிமித்தமே. [6] 'ஐந்தொழில் செய்தல் விளையாட்டென்றது ஐங்கலப்பாரம் பொறுத்தல் சாத்தனுக்கு விளையாட்டென்பது போல அத்துணை எளிதிற் செய்யும் ஆற்றலுடைமை பற்றியே பிறிதில்லையாகலின், அஃதறியாது விளையாட்டென்றதே பற்றி வீண்டொழிலென்றல் சிறிதும் ஏலாமையறிக'[7] என்று சிவஞான சுவாமிகள் விளையாட்டென்பதை விளக்குதல் ஈண்டுக் கொள்ளத்தகும். நடராசர் நடனக்கோலம் ஐந்தொழில் நடத்தும் குறிப்புடையதென்பது அடிகளால் இனிது

---

1. (a) " He felt no difference between Lord Muruga, his first favourite deity, and Lord Siva. Both were one for him, ...Singing in praise of Lord Muruga he gave him the attributes usually given to Lord Siva" - The Life and Teachings of Saint Ramalingar, Dr.SP. Annamalai, p.16.

   (b) "When he saw Lord Muruga in his vision for the firsttime, even then he saw no difference between Him and Lord Siva. He Praised Him giving the attributes usually given to Lord Siva" - Ibid p.144

2. 1:76 3. 404 4. 73 5. 460:19-21 6. 548

7. சிவஞானபாடியம் பக்.112

விளக்கப்படுகிறது. 'தேவஉலகமும், மண்ணுலகமும், ஏனைப்புவனங்களும், எண்ணற்ற உடம்புகளும் நடராசருடைய உடுக்கைக் கரத்தால் ஆக்கப்பெற்றவை. அவ்வாறு ஆக்கிய சராசரப் பகுதி அனைத்தையும் காப்பது அவர்தம் அபயத்திருக்கரம்; தோற்றுவித்த தொல்லுலகு அனைத்தையும் அழிப்பது ஆரழல் ஏந்திய திருக்கரம்; உயிர்கள் ஈட்டிய வினைப்பயன் அனைத்தையும் மறைத்து நின்று நுகரச்செய்வது ஊன்றிய பாதம், அடைந்த இன்னுயிர்களுக்கு அளவில்லாத பேரின்பம் கொடுப்பது தூக்கிய பாதம்' [1] என்று ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருள்தல் ஆகிய ஐந்தொழில் புரிமுறை விளக்கப்படுகிறது. சித்தாந்த மரபை ஒட்டி இவ்விளக்கம் கூறப்பட்டுள்ளமை அறியத்தகும்.

'தோற்றம் துடியதனில் தோன்றும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தேநாடு' (உண்மை விளக்கம் 35)

என்பதன் விளக்கமாக அடிகள் காட்டியுள்ளமை தெளிவாகிறது. இவ்வகையில் சிவனே மும்மூர்த்திகளாகவும் உள்ளமை அடிகளால் பிற இடத்தும் உணர்த்தப்படுகிறது. [2]

தத்துவஉறவு

சிவதத்துவங்களின் தொடர்பைக் குறிக்கும் வகையில் அம்மை இறைவனுக்கு மனைவியாகவும், தாயாகவும், தங்கையாகவும், மகளாகவும் விளங்குகிறாள் என்கிறார் அடிகள். [3] இறைவனுக்கு அம்மை தாயாகவும், மனைவியாகவும் இருத்தல் பிறிதோரிடத்தும் குறிக்கப்படுகிறது. [4] பிற, சைவ நூல்களிலும் இவ்வாறு கூறும் முறை காணப்படுகிறது. 'இமவான் மகட்குத், தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன், தமையன் எம்ஐயன்' [5] என்று திருவாசகத்தில் கூறப்படுகிறது.

---

1. 451 : 1-13
2. 519/ 539 : முச்சீர் ஓரடி அம்போதரங்கம்
3. 513
4. 82
5. திருவாசகம். திருப்பொற்சுண்ணம். 13

அம்மை அரனுக்குத் தாயும், மகளும், தாரமும் ஆதலைத் திருமந்திரமும் கூறுகிறது. [1] 'அவளத்தனாம் மகனாம் தில்லையான்' [2] என்பது திருக்கோவையார். சிவஞான சித்தியாரும், 'சிவம் சத்திதன்னை ஈன்றும், சத்திதான் சிவத்தை ஈன்றும்' [3] என்று குறிப்பிடுகிறது. மணிவாசகர், இறைவிக்கு இறைவன் இன்ன உறவுடையவன் என்று கூறியதை அப்படியே அடிகள் இறைவனுக்கு இறைவி இன்ன உறவுடையவள் என்று கூறும் முறையில் மாற்றிக் குறிப்பிட்டுள்ளார். 36 தத்துவங்களில் சுத்தமாயையில் தோன்றும் நாதம், விந்து, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தை ஆகிய சிவதத்துவங்கள் ஐந்துக்கும் அமைந்துள்ள தொடர்பினையே இறைவன் இறைவி உறவு முறைகளில் கூறியுள்ளமை அறியத்தகும். சிவதத்துவத்தில் இருந்து சத்திதத்துவம் தோன்றலின் சிவனுக்கு அம்மை மகளாகின்றாள்; சத்தி தத்துவத்திலிருந்து சதாசிவதத்துவம் தோன்றுதலின் இறைவனுக்கு அம்மை தாயாகின்றாள்; ஒரே நிலைக்களத்தில் முன்னும் பின்னுமாக அமைந்து விளங்குதலால் இறைவனுக்கு அம்மை தங்கையாகின்றாள் என்று அறிஞர் விளக்குகின்றனர். [4]

இறைநிலை

சகலமும் அம்மையின் திருச்சொரூபம் எனப்படுகிறது.[5] இறைவனே எவ்வுருவுமாக இருத்தலும் கூறப்படுகிறது. [6] இறைவனுக்கு வானமே வடிவம்; அண்டகோளமே மவுலி; பாதலம் ஏழும் தாள்; மலை எட்டும் புயம்; முச்சுடருமே கண் எனப்படும். [7] அகிலாண்டமாய் அகண்டமானவன் [8] என்றும் இறைவன் கூறப்படுகிறான். சைவமரபில் விசுவரூபன் என்று கூறுதல் இங்கு நினைக்கத்தகும். அம்மை மறைக்கு வரம்பாகவும், மறைப்பயனாகவும், மறை பண்ணியவளாகவும் குறிக்கப்படுகிறாள். [9] முழுஞானப் பெருக்காக விளங்குபவள் எனப்படுகிறாள். [10]

'அவன் அவள் அது எனும் அவைகளில் ஒருபொருள், இவனென உணர்வுகொடு எழுதரும் உருவினை'[11] 'அவன் அவள் அது

---

1. திருமந்திரம். 1178 2. திருக்கோவையார்.112 3. சித்தியார். சூ.2:77
4. திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை, க.சு. நவநீத கிருஷ்ண பாரதியார், திருப்பொற்சுண்ணம் 13ஆவது பாடல் உரை 5. 86,361 : 2
6. 102 7. 677, 458 8. 678 9. 22,62, மீ.கு.4
10. 63 11. 105

எனும் அவைகளின் உளனலன்' [1] என்று இறைவன், உயிர்களையும், உலகத்தையும் விடுத்து வேறாய் நிற்கும் நிலை கூறப்படுகிறது. சிவஞான போதம் முதல் நூற்பாவின் தொடராகிய 'அவன் அவள் அது எனும் அவை' என்பது அம்மரபுவழி அடிகளால் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளமை சுட்டத்தகும்.

'பல்லார் உயிர்க்கு உயிராம் மதுரேசர்' [2] என்று கூறும் முறையில் இறைவன் உயிர்களோடு உடனாய் நின்று உணர்த்தும் இயல்பு, சிவஞானபோதம் 2-ஆம் சூத்திரக்கருத்துக்கிணங்க உணர்த்தப்பட்டுள்ளது. இறைவன் உயிர்களோடு உடனாகவும், உடம்பில் கலந்து ஒன்றாகவும் விளங்குவதை 'ஊனாய் உயிர்க்கு உயிரானாய்' என்றும் குறிக்கக் காண்கிறோம். [3]

இறைவனுக்குக் குணம் எட்டு என்று கூறப்படுகிறது. [4] 'தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை' [5] என்று கூறும் மரபு தழுவி அடிகளும் இறைவனுக்கு எண்குணம் உண்டு என்கின்றமை அறியத்தகும். இக்குணங்களைத் தம் பாடல்களில் ஆங்காங்குக் குறிப்பாக அடிகள் உணர வைத்திருத்தலும் காண்கின்றோம். 'ஆட்டுவோரின்றி மன்றுள் ஆடும்' என்று இறைவனைக் கூறுவதில், 'நட்டுவராய் நின்று நடிப்பிப்பவர் இன்றெனவே தன்வயத்தனாதலும், மன்றுளாடுமெனவே பேரருள் உடைமையும் குறிப்பித்தவாறு' [6] உணரத்தகும்.

இறைவனும் உயிரும்

இறைவன் கற்பனை கடந்த கடவுள் எனப்படுகிறான். [7] 'என்று நீயுளை மற்றன்றே யானுளேன்' [8] என்பதால் இறைவனும் உயிரும் அனாதி என்ற சித்தாந்த உண்மை தெளிவாக்கப்படுகிறது. இவ்வாறே இறைவன் அழிவற்றவன், உயிரும் அழிவற்றது; வியாபகத்தன்மை

1. 600
2. 124
3. 379
4. 185
5. குறள்.9 பரி.உரை
6. 464; கு.பி.தி. (இராம) குறிப்புரை பக்.37
7. 328; 33; 332:36; 539 சுரிதகம்
8. 469:14

இறைவனுக்கு இருத்தல்போல் உயிர்க்கும் உண்டு; அறிவு இறைவனுக்கும் உயிர்க்கும் பொது இயல்பு; இச்சை, அறிவு, செயல் இருதிறத்திலும் உண்டு என்று இறைவனுக்கும் உயிர்க்கும் பேதமில்லை என்ற கருத்துக் கூறப்படுகிறது. [1] இவ்வொப்புமை ஒருபுடை ஒப்புமையே என்பதை 'உன்னுடன் எம்மையும் ஒப்பெனப்படுத்து, முன்னர்க் கூறிய முறைமையிற் சிற்சில, முழுவதும் ஒவ்வாதொழியினும் ஒழிக' என்று கூறுவதன் மூலம் அடிகள் தெளிவுறுத்துகிறார். இவ்வொவ்வாமையினை அருணந்தி சிவாச்சாரியார், 'சிவன் சீவன் என்றிரண்டும் சித்து, ஒன்றாம் என்னில், சிவன் அருட்சித்து, இவன் அருளைச் சேரும் சித்து, அவன்தான் பவம், கேடு, புத்தி, முத்தி பண்ணும் சித்து, அவற்றிற் படியும் சித்து, அறிவிக்கப்படும் சித்தும் இவன்தான், அவன்தானே அறியும் சித்து' என்று கூறுவதால் [2] ஓரளவு உணர்ந்து கொள்ளலாம்.

ஐந்துருவாகி ஆலமரத்தினிடத்தே நின்ற பரம்பொருளாகிய சிவனைத் தமக்கு வழங்குமாறு மீனாட்சியம்மையிடம் அடிகள் வேண்டுகின்றனர். [3] 'அருளது சத்தியாகும் அரன் தனக்கு' [4] என்ற சித்தாந்த மரபுக்கேற்பவும், 'அவனருளாலே அவன் தாள் வணங்கி'[5] என்ற நூல் மரபுக்கேற்பவும் அடிகள் அருளாகிய சத்தியின் மூலம் இறைவனை அடைதலை உணர்த்தியுள்ளனர் எனலாம். இறைவன் பெருமையை அவனே உள்நின்று உணர்த்தினாலல்லாமல் வேறு வகையில் உணர முடியாது. [6] தன்னேரில்லாதவன் என்றும் இறைவன் சுட்டப்படுகிறான். [7]

பிறர்பொருளும் சிவமே

பிறசமயத்தவர் இதுவே பொருள் என்று கூறினாலும் அவற்றை ஏற்றுக்கொள்ளும் பொருளே பொருள்; அப்பொருள் எவர்க்கும் பொதுவே என்றாலும் பொன்னம்பலத்தும் ஆரூரிலும் (திருவாரூரிலும், எவருடைய ஊரிலும்) வைகும் [8] என்று சிவனுடைய முதன்மை உணர்த்தப்படுகிறது. 'தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' [9] என்ற கருத்து ஈண்டு

1. 572 : 1 – 12 2. சித்தியார். சூ. 11 : 11
3. மீ.இ.12 4. சித்தியார் சூ. 5 : 9
5. திருவாசகம், சிவபுராணம். 18 6. 466 : 13-17
7. 582 : 1, 346:1 8. 330
9. திருவாசகம், போற்றித்திருவகவல், 164-165

அமைக்கப்பட்டுள்ளது எனலாம். அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய், வேறாம் குறியது உடைத்தாய்ச் சிவன் விளங்குபவன் என்றும், யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருகுவர் என்றும் சிவஞான சித்தியார் விளக்கும் உண்மை [1] இவ்வகையில் அடிகளால் வலியுறுத்தப் பட்டுள்ளது எனலாம்.

மந்திர வடிவம்

ஐந்தெழுத்து மந்திரத்தின் ஒலியாகவும் பொருளாகவும் நடராசர் உருவம் விளங்குதல் கூறப்படுகிறது. [2] 'அஞ்சக்கரத்தான்' என்று இறைவனை அழைக்கவும் காண்கிறோம். [3] உண்மைவிளக்கத்தில் கூறப்படும் சித்தாந்த மரபுக்கேற்ப அடிகள் நடராசர் உருவம் ஐந்தெழுத்து உருவம் என்கிறார் என்பது தெளிவு.

'ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்' (உண்மைவிளக்கம். 32)

'சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்' (உண்மைவிளக்கம். 33)

என்று இவ்விரு பாடல்களும் நமசிவாய, சிவாயநம என்னும் ஐந்தெழுத்து உருவத்தை விளக்கி நிற்பனவாகும். இக்கருத்துக்கள் யாவும் உள்ளடக்கிக் கூறும் முறையில் 'உத்தமன் ஐந்தெழுத்து உருவம்' [4] என்று அடிகள் கூறியுள்ள நுட்பம் உணரத்தகும். முருகனைக் கூறும் போது 'ஓங்காரத்துள் ஒளிக்கும் உள்ளொளியாய்' விளங்குதல் கூறப்படுகிறது. [5] ஓங்காரமே திருவாசி என்றும், அதனில் நீங்காத எழுத்தாகிய அஞ்செழுத்து நிறைசுடர் என்றும் கூறும்

---

1. சித்தியார். பாயிரம்; சூ. 2 : 25
2. 526 3. 630
4. 526 5. 1 : 59

உண்மைவிளக்கக் கருத்துக்கேற்ப [1] இங்கு முருகன் ஓங்காரத்துள் விளங்கும் மந்திரத் தோற்றம் உடையவனாய்ச் சுட்டப்படுகிறான் என்று கருத இடமுண்டு. முருகனுக்குரியதாக ஆறெழுத்து மந்திரமும் சொல்லப்படுகிறது. [2] நடராசர் ஓம் என்னும் எழுத்தின் வடிவாய் நடம் நவிற்றுவதாகவும் அடிகள் கூறியிருத்தல் உடன் வைத்து எண்ணத்தகும். [3]

அத்துவாவடிவம்

அத்துவாக்களை இறைவன் திருமேனியாகக் கூறுகிறார் அடிகள். மந்திராத்துவா குருதியாகவும், பதாத்துவா மாமுடியாகவும், வர்ணாத்துவா தோலாகவும், புவனாத்துவா உரோமமாகவும், தத்துவாத்துவா பிற தாதுக்களாகவும், கலாத்துவா அவயவமாகவும் கொண்டு அத்துவாவின் நிலையே வடிவமாக இறைவன் நிற்பதை விளக்கக் காண்கிறோம். [4] இறைவன் அத்துவாக்களுள் நிறைந்து கலந்து அவையாய் நிற்றலாலும், சித்து அசித்து ஆகிய உலகனைத்தையும் உடன் நின்று செலுத்துதலாலும், அவையல்லனாய் விளங்குதலாலும் இறைவனை அத்துவா மூர்த்தியாகக் கூறுதல் வழக்கம் என்று சித்தியார் குறிப்பிடுகிறது. [5] சித்தியார் விருத்தத்துக்கு விளக்கமாக அடிகள் ஆறு அத்துவாக்களும் இறைவனுடைய மேனியாக எங்ஙனம் பொருந்தியுள்ளன என்பதை விளக்கிக்காட்டியிருத்தல் குறிக்கத்தகும். அத்துவாக்களுள் மந்திராத்துவாவைச் சிறப்புக்குரிய வடிவமாகச் சித்தியாருட் குறித்தற்கேற்ப [6] அதனை அடிகள் உடம்பில் ஓடும் குருதியாகக் காட்டியிருத்தல் நோக்கத்தகும்.

கற்பனை கடந்தவன்

> 'எந்தைதான் இன்னன் என்றும் இன்னதாம் இன்ன தாகி
> வந்திடான் என்றும் சொல்ல வழக்கொடு மாற்றம் இன்றே' [7]

---

1. உண்மைவிளக்கம். 34
2. 1 : 109
3. 533
4. 1 : 60-62
5. சித்தியார். சூ. 1 : 56
6. சித்தியார். சூ. 1 : 57
7. சித்தியார். சூ. 1 : 44

என்று இறைவன் இன்னவடிவமுடையவன், இன்னதாகான் என்று அறுதியிட்டுக் கூற முடியாதிருப்பவன் என்பதைச் சித்தியார் கூறும். இக்கருத்தினை அடிகள் விளக்கிக் கூறுகின்றார். இறைவன் ஒருகால் ஆமை ஓடணிந்து, தலையோடேந்தி, பெண்கள் நிற்கும் கடைவாயில் தோறும் பலி தேர்ந்து உண்ணும்; பிறிதொருகால் மால், அயன், இந்திரன் முதலியோர்க்குப் பதவிகள் மாற்றியும், வழங்கியும், பகைவரை ஒறுத்தும், உற்றவர்களைத் தாங்கியும் அரசியற்றும்; மற்றொருகால் செஞ்சடைவிரித்து வெண்ணீறு பூசி எருக்கம் கண்ணிசூடி இடப்பால் மடந்தையோடு போகமார்ந்து இருக்கும்; அன்றேல் ஞான முத்திரை காட்டி மோனமொடு யோகம் செய்திருப்பினும் இருக்கும்; அது கற்பனை கடந்ததாகலின் அது நிற்பது இந்நிலைதான் என்னும் நியமமோ இல்லை [1] என்று குறிக்கின்றார். சித்தியார் கூறும் குறிப்பை இங்ஙனம் அடிகள் விரித்து வலியுறுத்தியுள்ளனர் என்பது தெளிவு. இவ்வாறு இறைவன் இயல்புகள் சித்தாந்த மரபை விளக்கும் முறையில் காட்டப்பட்டுள்ளன.

(ஆ) உயிர்கள்

உயிர்கள் அனாதி; அழிவற்றவை; சித்துப்பொருள்கள்; இச்சை, அறிவு, செயல் உடையவை என்று அடிகள் கூறியிருத்தல் முன்னர்க்குறிக்கப் பெற்றது. உயிர்கள் எண்ணிறந்தவை என்பதைக் 'கண்ணகல் ஞாலத்து எண்ணில் பல்கோடி பிள்ளைகள் பெற்ற பெருமனைக் கிழத்தி' [2] என்பதாலும் 'பல்லுயிர்த் தொகுதி' [3] என்பதாலும் உணர்த்துகிறார். உயிர்களின் பிற இயல்புகளையும் நிலைகளையும் சைவசித்தாந்த மரபில் குறிப்பிடக் காண்கிறோம்.

ஆணவக்கட்டு

பசுக்களாகிய உயிர்கள் அனாதிசம்பந்தமாக மலத்தால் கட்டுண்டிருப்பவை. ஆணவம் என்னும் மூலமலமாக அம்மலம் சித்தாந்த மரபில் கூறப்படும். செம்பிற்களிம்பு போல் உயிரிடம் இயற்கையாக இருத்தல் பற்றிச் 'சகசமலம்' [4] என்று இதனைக் குறிப்பர்.

---

1. 332
2. 463 : 18-19
3. 475 : 35, 1 : 12
4. சிவஞானபோதம். சூ. 4

இஃது உயிரின் அறிவை மறைத்து நிற்பதாகும். இவை விளங்குமாறு அடிகள்; 'இருள் மலத்துள், மோகமுறும் பல்லுயிர்'[1] என்கின்றனர். அறியாமைக்குக் காரணமாக இருத்தல் பற்றி 'இருள் மலம்' என்று சுட்டியுள்ளனர். கண்ணொளியைப் படலம் மறைத்தல் போல் ஆணவம் உயிரினறிவை மறைப்பதாக விளக்குகிறார். [2] மலத்தைப் பாசம் என்றும் அடிகள் சித்தாந்த மரபிற்கேற்ப வழங்குதலும் அறியப்படுகிறது. [3]

மும்மலம்

இவ்வாறே மூலவினையும் உயிர்களைப் பற்றி நிற்கும் பிறிதொரு மலமாகும். இது காமியமலம் எனப்படும். இதுவே நல்வினை தீவினை ஆகிய இரண்டுக்கும் ஏதுவாய் நிற்பது என்று கூறுவர் சாத்திரநூலார். [4] மூலவினை ஆணவத்தோடு கலப்புற்று, வினைக்கீடாக, இறைவனால் அளிக்கப்படும் மாயையாகிய மலத்தோடு பொருந்தி உயிர்களைக் கட்டுப்படுத்திப் பல்வேறு பிறவிகளைப் பெறச் செய்யும் என்பர். [5] அடிகளும் இம்மூன்று மலங்களோடு உயிர்கள் தொடர்பு கொண்டிருப்பதை, மும்மலம் பொதிந்த முழுமலக் குரம்பை [6] என்று தெளிவாக்கக் காண்கிறோம். இம்மும்மலங்களோடு மாயைப்படைப்புக்களாகிய மாயேயம், மறைக்கும் சிவசத்தியாகிய திரோதாயி ஆகியவற்றையும் சேர்த்து ஐந்து மலங்கள் என்னும் வழக்கும் உண்மையால், [7] துதிக்கும் அடியவர்க்கு இறைவன் பஞ்சமலம் காய்ந்து அருள்வான் என்றும் அடிகள் கூறுகிறார். [8]

மூவகை உயிர்கள்

மலத் தொடர்பைக் கருதி உயிர்களை மூவகைப்படுத்தல் உண்டு. ஆணவமாகிய ஒரு மலம் மட்டும் உள்ளவர்கள் விஞ்ஞானகலர்; ஆணவமும் கன்மமுமாகிய இருமலம் உடையவர்கள் பிரளயாகலர்; ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலம் உடையவர்கள் சகலர். [9] அடிகளும் இப்பாகுபாட்டைச் சுட்டிக் காட்டுகின்றனர். 'ஒரு மலத்தார்' [10] என்று விஞ்ஞான கலரையும், 'கன்மமலத்தார்' [1] என்று

---

1. 1 : 11-12
2. 1 : 26 (ஆணவமான படலம்)
3. 22, 535 (அடுத்த பாசம்)
4. சித்தியார்.சூ. 2 : 39
5. சித்தியார்.சூ. 2 : 40-41
6. 548 : சுரிதகம்; 1 : 120 (மும்மைப்பெருமலங்கள்)
7. சித்தியார்.சூ.2 ; 86-87
8. 1 : 70
9. சித்தியார்.சூ. 8 : 2
10. 1 : 32

பிரளயாகலரையும் 'சாயா மும்மலச்சகலர்' [2] என்று சகலரையும் குறிப்பிடுகிறார்.

பிறப்பு முறை

உயிர்கள் கன்மத்துக்கு ஈடாய், மாயாதத்துவங்களோடு பிணைப்புண்டு, நால்வகைத் தோற்றமும், எழுவகைப் பிறப்பும், எண்பத்துநான்கு நூறாயிர வகை உடலமைப்பும் ஆகப் பிறந்து வருவன என்று அடிகள் தெளிவுறுத்துகின்றனர். [3] நால்வகைத்தோற்றம் எழுவகைப் பிறப்பு ஆகியவற்றை அடிகளே பிறிதோரிடத்தில் விளக்குகின்றனர்.

'முட்டையில் கருவில் வித்தினில் வெயர்ப்பில்
நிற்பன நெளிவ தத்துவ தவழ்வ
நடப்பன கிடப்பன பறப்பன வாக' (463 : 15 -17)

என்று விளக்கக் காண்கிறோம். முட்டையிற் பிறப்பவை அண்டசம் என்றும், கருவில் பிறப்பவை சராயுசமென்றும், வித்திற் பிறப்பவை உற்பீசம் என்றும், வெயர்வையிற் பிறப்பவை சுவேதசம் என்றும் கூறப்படுவனவாகும். எழுவகைப் பிறப்பின் வகையையும் தொகையையும் ஒரு பழம் பாடல் உணர்த்தி நிற்கிறது. [4] திருமால் ஒருபதுவகைத்தாம் யோனி தோறுழன்றமை அடிகளால் சுட்டிக் காட்டப்படுகிறது. [5] வினைத்தொடர்பால் பிறப்புத் தொடர்பும், பிறப்புத் தொடர்பால் வினைத் தொடர்பும் தொடர்ந்து நிகழ்தலையும் அடிகள் தம்மைக் கூறும் முகத்தான் உணர்த்துகின்றனர். [6] உயிர்கள் மாறிமாறி வினைக்கீடாகப் பிறவி எடுக்கும்போது நுண்ணுடம்பு திரிபெய்தப்பெறுதலும், அச்சுமாறிப் பிறத்தலும் உண்டு; புராண மரபில் அகலிகை கல்லானதும், திருமால் பிறவி எடுத்ததும், சிலந்திப்பூச்சி செங்கட் சோழனானதும், எலி மாபலிப் பெருமன்னன் ஆனதும் அச்சுமாறிப் பிறத்தலை உணர்த்தும்; அவ்வாறே வினைக்கேற்ப வடிவமாற்றம் இறைவனால் உயிர்களுக்கு அமையும் என்று சித்தியார் குறிப்பிடுகிறது. [1] இக்கருத்தை வலியுறுத்தும் முறையில் அடிகள்,

---

1. 1 : 30
2. 584 : 9
3. 1 : 12-16; 575 : 3 - 5
4. கு.பி.தி.(உ.வே.சா) பக். 3
5. 463 : 28-30
6. 516

'எழுவகைச் சனனத்து எம்மனோரும்' [2] என்று அச்சுமாறிப் பிறத்தலைக் குறிப்பாகப் பெறவைத்துள்ளனர். பிறவாமையை வேண்டும் அடிகள், பிறப்பு உண்டாயின் இந்திரன், பிரமன் திருமாலாகப் பிறத்தலை அருளாமல், அடியோர் அமுதுண்டு தெருவில் எறிந்த எச்சில் இலை உண்டு பவக்கடல் உழக்கும் நாயாகப் பிறத்தலை அருள வேண்டும் என்று வேண்டுகிறார். [3] இவ்வகையில் உயிர்கள் அச்சுமாறிப் பிறத்தல் தெளிவாக்கப்பட்டுள்ளது.

தத்துவத்தொடர்பு

உயிர்கள் ஆணவ மலத்தைப் போக்கி அறிவுவிளக்கம் பெறும் பொருட்டுத் தநு கரண புவன போகங்களோடு இணைக்கப்படுகின்றன. 'மலபாகமுறவே தந்த அருவுருவும் சார்ந்த விந்து மோகினி மான் பெந்தமுறவே பிணிப்பித்து' [4] என்று இதனைக் குறிக்கிறார் அடிகள். இதில் விந்து என்பது சுத்தமாயை; மோகினி என்பது அசுத்தமாயை; மான் என்பது பிரகிருதிமாயை. இம்மூன்றிலும் அமைந்த 36 தத்துவங்களோடும் உயிர்கள் பிணிக்கப்பட்டு விளங்குதல் இங்கு உணர்த்தப்படுகிறது. உயிர்கள் உய்திபெறும் பொருட்டு இந்தத் தத்துவங்களோடு தொடர்பு கொள்தலையும், இவற்றிலிருந்து விடுபட்டு அவ்வுயிர்கள் வீடுபேற்றை நாடி நிற்றற்குரியன என்பதையும் அடிகள் தம்மைக் கூறும் முறையில் உருவகமாகக் கூறுகின்றனர்; 'நீங்காது தொடர்ந்த ஆணவம் என்னும் சேரிப்பரத்தையைத்தழுவி அவளைப் பிரியாமல் அவளோடு பிணிப்புற்ற என்னையும் (உயிர்) உணராமல் மோகமொடு அழுந்தி முயங்கினேன்; அப்போது அவளது தங்கை இருவருள் ஒருத்தியாகிய குடிலை என்பவள் ஐந்து புதல்வியரைப் பெற்றாள்; மற்றொரு தங்கையாகிய மோகினி என்பவள் மூவரைப் பெற்றாள்;அம்மூவருள் கலை என்பவள் வேறு மூவரைத் தந்தாள்; அம்மூவருள் மான் என்பவள் இருபத்து நால்வரை ஈன்றாள்; இங்ஙனம் தோன்றிய முப்பத்தைந்து பேரையும் காமக்கிழத்தியராகக் கொண்டு அளவில்லாத காலம் அவர்களோடு கலந்திருந்தேன். இங்ஙனம் முறைபிறழ்ந்து இவர்களோடு சேர்தலை ஒழிக என்று அறிஞர்

---

1. சித்தியார். சூ.2 : 41-46
2. 463 : 24
3. 569 : 24-43
4. 1 : 12-13

உணர்த்த, அஞ்சி, நின்பால் வந்தடைந்தேன்; ஞானமகளை மணம் புரிவித்து அன்பெனும் பொருள் வழங்கி இறவாதவீட்டில் இருத்தி அடியவரோடு இனிது கூட்டியருள்க' [1] என்று வேண்டுகின்றனர். புருடதத்துவம் உயிரேயாதலின் அதனை ஒழித்த தத்துவங்கள் முப்பத்தைந்தாயின என்றும், உயிர்களுக்குச் சகல நிலையில் இத்தத்துவங்களின் தொடர்புண்மையால் இவர்கள் காமக் கிழத்தியர் எனப்பட்டனர் என்றும் கா.சு.பிள்ளை விளக்குகின்றனர். [2] இதில் குறிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் விளக்கம் வருமாறு : குடிலை என்னும் சுத்தமாயையில் சிவதத்துவம், சத்தி தத்துவம், சதாசிவதத்துவம், ஈசுவர தத்துவம், சுத்தவித்தை என்னும் ஐந்து தத்துவங்கள் அமைந்தவை; மோகினி என்னும் அசுத்தமாயையில் காலம், நியதி, கலை என்ற மூன்று தத்துவங்கள் தோன்றின; கலையில் இருந்து வித்தை, அராகம், மான் ஆகிய மூன்று தத்துவங்கள் பிறந்தன. மான் என்னும் மூலப்பிரகிருதி மாயையிலிருந்து குணம், புத்தி, அகங்காரம், மனம் ஆகிய நான்கும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் அறிவுப்பொறி ஐந்தும், கை, கால், வாய், எருவாய், கருவாய் என்னும் வினைப்பொறி ஐந்தும், சுவை,ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் நுட்ப பூதங்களாகிய தன் மாத்திரை ஐந்தும், நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்னும் ஐம்பெரும் பூதங்களும் ஆகிய இருபத்து நான்கு தத்துவங்கள் தோன்றின. இவ்வகையில் முப்பத்தைந்து தத்துவங்கள் அமைந்துள்ளன. உயிராகிய புருடதத்துவமும் சேர்த்து 36 தத்துவங்கள் என்று சித்தாந்த மரபில் கூறுதல் அறியப்படுகிறது. இறைவனே நாதம் முதலிய தத்துவங்களுக்குக் காரணன் என்பதும் அடிகளால் கூறப்படும். [3] சைவ சித்தாந்தத்தில் இவ்வாறு 36 தத்துவங்கள் கூறப்படுதல் தனிச்சிறப்புக்குரியதென்றும், சாங்கியம், யோகம் முதலியவற்றில் 25 தத்துவங்களே கூறப்படுகின்றன என்றும், பாஞ்சராத்திரத்திலும் 24 தத்துவங்களே கூறப்படுகின்றன என்றும் அறிஞர் சைவசித்தாந்தத்தைப்

---

1. 478 : 23-45
2. குமரகுருபரஅடிகள் வரலாறு. பக்.50
3. 379 (நாதாதிகட்கு அனுபூதர்)

பாராட்டி உரைத்தல் ஈண்டுக் குறிக்கத்தக்கதாகும்.[1]

மாயையால் பயன்பெறல்

இறைவன் மாயையினால் உலகனைத்தும் மயக்குபவன் என்றும், உயிர்கள் உடலோடு பிறந்து உடல்துயரம் பெறுதல் உயிர்கள் உய்தற்பொருட்டே என்றும் அடிகள் கூறுகிறார்.[2] மூலமலத்தைப் போக்க இறைவன் மாயா மலத்தைப் பயன்படுத்துதல் இங்கு உணர்த்தப்படுகிறது. ஆடை அழுக்கைச் சாணி, உவர்மண்ணால் நீக்குதல் போல மூலமலமாகிய ஆணவத்தை மற்றொரு மலமான மாயையால் இறைவன் நீக்குவான் என்னும் சித்தாந்தக் கருத்தை[3] அடிகள் இங்ஙனம் உணர வைத்துள்ளார. மாயை வாயிலாக இறைவன் உயிர்கட்கு அருள்வதைப் பிறிதோரிடத்தில், ஞானாசிரியரை உழவனாக உருவகிக்கும் முறையிலும் புலப்படுத்தியுள்ளனர்; சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை ஆகிய மூன்று மாயைகளாகிய நிலப்பரப்புடைய பெரிய நாட்டில், பற்பல புவனங்களாகிய பகுதிகளில், நால்வகைத் தோற்றமாகிய வாயில்களும் ஏழுவகைப் பிறப்பாகிய தரங்களும் உடைய எண்பத்து நான்கு நூறாயிரம் உடம்புபேதமாகிய வயல்களில், உயிர்களாகிய பயிரை நட்டு, ஊழ் எனப்படும் ஆழமான நீர்நிலையில், தெய்வத்தால் வருவன தன்னால் வருவன பிறரால் வருவன என்னும் மூன்று மதகுகளை அவ்வப்போது திறந்து, ஆசை என்னும் கால்வாய் வழியாகப் போகம் என்னும் புதுப்புனல் கொணர்ந்து, ஐம்பொறியென்னும் மடையைத் திறந்து பருவம் பார்த்து வயல்களிற் பாய்ச்சி, இன்பம்துன்பம் என்னும் இரண்டு ஊற்றில் புதுப்புனல் புறம்போந்து ஓட, அப்புனலை மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்னும் ஆறு வகை ஏரிகளில் நிரப்பி, ஆகாமியமாகிய விளைகின்ற பயிரை விளைய விடுத்து, பிராரத்தமாகிய விளைந்த பயிரை அறுத்து உரிய இடமாகிய களத்தில் சேர்க்கும் உழவன் தமது ஞானாசிரியர் என்கிறார் அடிகள்.[4] உயிர்களின் இயல்பும் நிலையும் இவ்வகையில் நன்கு புலப்படுத்தப் பட்டுள்ளமையும் உணரத்தகும்.

---

1. 'The Saiva system recognizes thirty six principles as against the twentyfive of the Sankhya and yoga. No other system recognizes as many principles; even the Pancaratra, says the saiva, admits only twenty four. The recognition of more principles is treated as a discovery which other systems failed to make, and is thus considered a feature of merit in itself' - The Cultural Heritage of India vol.III, 'The Philosophy of Saivism' by S.S.Suryanarayana Sastri. p.387

2. 548 : தாழிசை 4, தாழிசை 3   3. சித்தியார். சூ. 2 : 52

4. 575 : 1 - 20

அத்துவா சுத்தி

உயிர்கள் ஆறு அத்துவாக்களோடு தொடர்புடையன என்பதும் உணர்த்தப்படுகிறது. அத்துவாக்கள் மந்திரம் பதம் வன்னம் ஆகிய சொல் உலகமும், புவனம் தத்துவம் கலை என்ற பொருளுலகமும் ஆக ஆறு ஆகும். இவை வினைகளுக்கு அடிப்படையானவை. அத்துவா என்பது வழி என்று பொருள் தருதற்கேற்ப உயிர்கள் அறிவு பெறும் வகையில் வினை ஏறுவதற்கு உரிய வழியாகும். இந்த ஆறு வழிகளில் உயிர்களுக்கு வினைகளை நுகர்வித்து, அவை பக்குவ நிலையடையும் போது இறைவன் ஆசிரியனாய்த் தோன்றி, ஆறுவழிக் கட்டுக்களில் உள்ள எஞ்சிய வினைகளைத் தீர்த்துப் பிராரத்தத்தை எடுத்த உடம்பால் நுகர்வித்து, ஞானத்தால் அறியாமையையும் ஆகாமிய மலத்தையும் போக்குவான். இவ்வாறு அத்துவாக்களைச் சுத்தி செய்தலால் பிறவி நீங்கும் என்பர் சித்தாந்த நூலோர். அடிகள் மந்திரமுதலாகிய ஆறத்துவாக்களும், அண்டத்து ஆர்ந்த அத்துவாக்களும் முற்கூறத்தகும் சிமிழ்ப்பில் உயிர்களிடம் இறைவன் கூட்டுவித்தலையும், உயிர்கள் இருவினைஒத்து, மலபரிபாகம் உற்றுச் சத்திநிபாதம் பெறும் பக்குவ நிலையில் ஊழ்வினையைப் போக்கி, உடல் அறுபத்தெட்டு, நிலம் ஏழு, அத்துவாக்கள் ஆறும் பாழாகச் செய்து அருள்தலையும் உணர்த்தியிருக்கின்றனர். [1] உடல் அறுபத்தெட்டென்பன தாத்து விகங்கள் அறுபதும், பூதநுட்பம் ஐந்து, மனம், புத்தி, அகங்காரம் ஆகியவை கூடிவிளங்கும் நுண்ணுடம்பாகிய புரியட்டகம் எட்டும் என்றும், நிலம் ஏழு என்பன மூலாதாரம், உந்தித்தானம், நெஞ்சு, கழுத்து, நாக்கினடி, புருவநடு, உச்சி ஆகியவை என்றும் கா.சு.பிள்ளை விளக்குவர். [2]

அவத்தையும் நெறியும்

உயிர்கள் கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை ஆகிய மூன்று அவத்தைப்படுவன என்றும் காட்டப்படுகிறது. [3] சரியை, கிரியை,

---

1. 1 : 13-14; 1 : 20-26
2. குமரகுருபரஅடிகள் வரலாறு.பக்.51-52
3. 1 : 33

யோகம் ஞானம் என்னும் நால்வகை வழிகளில் உயிர்கள் இறைவனை வழிபடலும் அடிகளால் கூறப்படுகிறது.[1] இந்த நான்கு வழிகளும் முறையே தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன் மார்க்கம் என்பவற்றோடு இணைத்துக் கூறப்படுதலும், இவை சாலோகம், சாமீபம், சாரூபம் சாயுச்சியம் ஆகிய முத்தி நிலைகளைத் தருவன என்பதும் சித்தாந்த மரபாகும். [2] இதனை விளக்கும் முறையில்,

> 'சரியை கிரியா யோகஞ் சார்வித்து-அருள்பெருகு
> சாலோக சாமீப சாரூப மும்பு சிப்பித்து' (1 : 19-20)

என்று முத்தி நிலைகளோடு சரியை, கிரியை, யோகத்தை நிரல்நிரையாக அடிகள் தொடர்பு படுத்திக் காட்டியுள்ளமை அறியத்தகும். 'யோகப்பயன் துய்ப்ப' [3] என்பதிலும் யோகப்பயனாகிய சாரூபம் உணர்த்தப்படுகிறது எனலாம்.

மூன்று நற்குணம்

பிரகிருதி மாயையில் தோன்றும் குணதத்துவம் உயிரோடு தொடர்பு கொள்ள, உயிரும் குணவடிவாய் நிற்கும் என்பர் சித்தாந்த நூலோர். [4] சத்துவம், இராசதம், தாமதம் ஆகிய முக்குணங்கள் இவ்வகையில் கூறப்படுவனவாகும். சத்துவ குணத்தில் விளக்கமும் மென்மையும் அடங்கும்; இராசத குணத்தில் விரைவும் தாக்கும் அடங்கும்; தாமத குணத்தில் செருக்கும் தகாதன விழைதலும் அடங்கும் என்று கா.சு.பிள்ளை விளக்குவர். [5] இம்மூன்று குணங்களில் சத்துவ குணமே உயர்ந்ததாகக் கூறுதல் உலக வழக்கமாகும். சுந்தரமூர்த்தி நாயனார் தில்லையில் இறைவனை வழிபட்டபோது 'குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்துவிகமேயாக' வழிபட்டதைச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். [6] எனவே முக்குணத்துள்ளும் சத்துவ குணமே சிறந்தது என்பது அறியப்படும். ஆயின் அடிகள், மீனாட்சி அம்மானை ஆடும்போது அவளது கைச் சிவப்பும் கண்ணின் கறுப்பும் நகை வெண்மையும் அம்மானையில் பட்டு நிறம் வேறுபட்டதை 'நற்றரள அம்மானை ஓர்

---

1. 1 : 19, 454 : 7-8, 593 : 41-42, 598
2. சித்தியார். சு.8 : 19-22 3. 552 : 1
4. சித்தியார். சு. 2 : 57
5. சிவஞானசித்தியார் உரை.கா.சு.பிள்ளை.பக்.64
6. பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம் 106

சிற்குணத்தினை மூன்று நற்குணம் கதுவல் காட்ட' [1] என்று குறிப்பிடக் காண்கிறோம். உயிரை மூன்று நற்குணம் பொருந்துவதை அம்மானை நிறவேறுபாடு உணர்த்துகிறது என்கிறார். இராசதம் சிவப்பு நிறமாகவும், தாமதம் கறுப்பு நிறமாகவும், சத்துவம் வெள்ளை நிறமாகவும் கூறப்படுதல் மரபாகும். ஆயின் மூன்று குணங்களையும் நற்குணங்கள் என்று அடிகள்கூறியிருத்தல் அரிய செய்தியாக உள்ளது. உயிர்களின் அறிவு விளக்கத்துக்குப் பொதுவாக மாயா தத்துவங்கள் துணைபுரிவன என்று கூறப்படுதலின் மூன்று குணங்களும் அடிகளால் நற்குணங்கள் எனப்படுகின்றன என்று கொள்ளலாம். பிறிதோரிடத்தில் சிவனுடைய வெண்ணிறம் சத்துவ குணத்துக்கும், அம்மையின் நீலநிறம் தாமத குணத்துக்கும், முருகனது செந்நிறம் இராசத குணத்துக்கும் உரியனவாகக் கூறப்படுகின்றன. இம்மூவரும் 'குணங்கள் மூன்றின் நல்லுரு வாதலினன்றோ இவர் அகில காரணராய் நவில்கின்றாரே' என்கிறார் அடிகள். [2] முக்குணமுடைய மூர்த்திகளால் உலகத்தின் படைப்பு முதலியன நடைபெறுதலின் அம்முக்குணத்துக்கும் உருவம் போன்ற சிவனும் அம்மையும் முருகனும் அவற்றை நடத்துகின்றவர்களைப் போன்று கூறப்படுகின்றனர் என்பது அறியத்தகும். இக்கருத்தாலும் மூன்று குணங்களையும் நற்குணங்கள் என்று அடிகள் கூறினர் என்று கருதலாம்.

உயிர்த் தலைவிக்கு இறைவன் தலைவன்

உயிர்களுக்குப் புருடன் என்னும் பெயர் உண்மையும், இறைவனை நோக்க அவை சத்திகளே என்பதும், புருடனைச் சத்தியாகக் கொண்டு இறைவன் தொடர்பு கொள்தற்குப் புருடோத்தமனாகிய திருமாலே எடுத்துக் காட்டு என்பதும் அடிகளால் கூறப்படுகின்றன. [3] இவ்வகையில் தலைவன் தலைவி உறவு முறையில் இறைவனும் உயிர்களும் கொள்ளும் தொடர்பு புலனாக்கப்படுகிறது. அகப்பொருள் மரபில் இறைவனைப் பாடும் பாடல்கள் பலவும் இவ்வுறவு முறையினை உணர்த்துவனவே என்பதும் நினைக்கத்தகும்.

---

1. 76
2. 339
3. 572 : 19-22

குருவருள் உதவி

உயிர்கள் உடம்போடு கூடிய நிலையில் ஐம்புலங்களாகிய களிறுகள் தம்புலத்தின் வழியே இழுக்க, உயிர்கள் பிறவியாகிய கானகத்தில் உழல்வன என்றும், அவ்வாறு உழலாமல் முத்திநாடு எய்துவதற்கு ஞானமாகிய வாரணம் நல்க வேண்டும் என்றும் அடிகள் தம் குருவிடம் வேண்டுகிறார். [1] உயிர்கள் குருவருளால் ஞானம் பெற்றுப் பிறவிப்பிணி தீர்ந்து முத்தியடைதல் இங்ஙனம் சுட்டப்படுகிறது.

பிற சித்தாந்த மரபுகள்

உயிரோடு தொடர்பு கொண்டுள்ள ஆணவ மலத்தைச் சித்தாந்த மரபில் மகரமாகக் கூறுதற்கேற்ப, இறைவன் ஆணவத்தை மாய்த்தலை, 'மகரமாயினான்' [2] என்று அடிகள் கூறுகின்றனர். அவாவே பிறப்பிற்குக் காரணம் என்பதைப், 'பல்லுயிர்த் தொகுதியும் பவக்கடல் அழுந்த, அல்லல் செய்யும் அவா' [3] என்று உணர்த்துகிறார். அவாவினால் வினை ஏற்பட்டு உயிர்கள் வினைப்பயனை நுகர்தற்குப் பிறவி தொடரும் நிலையை இங்ஙனம் அடிகள் தெளிவுறுத்துகின்றார். வினைகளை இறைவன் செயலாகக் கருதிச் செய்யாமல், உயிர்கள் தம் செயலாகக் கருதிச் செய்வதால் வினைப் போகத்தை அவை நுகர்கின்றன என்பதும் அடிகளால் தம்மியல்பு கூறும் முறையில் தெளிவுறுத்தப்படுகிறது. [4] சிவபோதம் நிலைபெறும் போது ஆன்ம போதத்தை அதனுள் அடக்கி நிற்கும்; ஆன்மபோதம் ஆணவத்தால் தலையெடுக்கும்போது சிவபோதம் தோன்றாது மறையும் என்று உயிரும் இறையும் கொள்ளும் தொடர்பும் உணர்த்தப்படுகிறது. [5]

உயிர்களுக்கு அருளும் முறை

இறைவன் உயிர்களுக்கு அருளும் முறைகளையும் சித்தாந்த மரபுக்கேற்ப அடிகள் புலப்படுத்தியுள்ளனர். உயிர்கள் பக்குவப்பட்டு இருவினை ஒப்பும், மலபரிபாகமும் அமையப் பெற்றுச் சத்திநிபாதம் பெறும் நிலையில் இறைவனால் அருளப் பெறும் என்பதை அடிகள்

---

1. 566 : 39-44
2. 666
3. 475 : 35-36
4. 583
5. 568

உணர வைத்துள்ளனர். நல்வினை தீவினை ஆகிய இரண்டையும் ஒப்ப நோக்கி இருவினைப் பயனையும் ஒருங்கு வெறுக்கும் இயல்பு இருவினைஒப்பு; இந்நிலை அமையும் போது உயிரைப் பற்றியுள்ள ஆணவமலம் நீங்கத் தலைப்படுதல் மலபரிபாகம்; மலம் நீங்கும்பொழுது திருவருட்சத்தி உயிரிடம் பதிதல் சத்திநிபாதம் என்று சித்தாந்த மரபில் கூறுவர்.[1] இவற்றை விளக்கும் முறையில்

'நால்வகையாம்
சத்திநி பாதம் தருதற்கு இருவினையும்
ஒத்துவரும் காலம் உளவாகிப்-பெத்த
மலபரி பாகம் வருமளவில் பன்னாள்
அலமருதல் கண்ணுற்று அருளி' (1:20-22)

என்று அடிகள் இறைவன் அருளும் நிலையைக் கூறுகின்றனர். மந்ததரம், மந்தம், தீவிரம் தீவிரதரம் என்ற நான்குவகைச் சத்திநிபாதங்களை அடிகள் சுட்டியுள்ளமையும் அறியத்தகும். சத்திநிபாதம் உடையவர்களுக்கு இறைவன் அருளுவதை, 'மிக்கார் முகத்தருள் கூடற்பிரான்'[2] என்று குறிப்பதனாலும் அறிகிறோம். இதில் மிக்கார் என்பவர் அருட்சத்திநிபாதம் உடையவர் என்பது உணரத்தகும். 'சத்திநிபாதத் தன்மை வந்தடைந்தோர்க்கு உண்மைப் பொருளை அருளுதல் வியப்பன்று'[3] என்று கூறும் முறையிலும் இவ்வுண்மை புலனாக்கப்படுகிறது.

மூவகை உயிர்கட்கு அருளல்

மூவகை உயிர்களுக்கும் இறைவன் அருளும் முறைகளும் அடிகளால் விளக்கப்படுகின்றன. ஆணவம் மட்டும் உடைய விஞ்ஞான கலர்க்கு உள்நின்று இன்பம் உதவுவான் இறைவன்; ஆணவம் கன்மம் உடைய பிரளயாகலர்க்கு இறைவன் மூன்று கண்ணும், தாழ் சடையும், வன்மழுவும், மானும் உடையனாய் விடைமேல் உமையம்மையோடு கைலையில் விளங்கும் தெய்வ வடிவோடு காட்சி தந்து அருள் செய்வான்; மும்மலம் உடைய சகலர்க்கு மானிட வடிவில் குருவாய்த்

---

1. விரிவு. சித்தியார்.சூ. 8 : 2-4
2. 201
3. 581 : 28-30

தோன்றி மும்மலக் கிழங்கை முதலொடும் அகழ்ந்து அருளுவான். [1] இறைவன் சகலர்க்குக் குருவாய் வந்து அருள் வழங்குதலை அடிகள் பண்டார மும்மணிக்கோவையில் தெளிவாக வலியுறுத்தியுள்ளமை ஈண்டு நினைக்கத்தகும்.

வினைகளுக்கேற்ப உயிர்களைப் பிறப்பித்து, நரகம், சொர்க்கம் முதலியவற்றை அவ்வவற்றிற்கேற்பத் துய்ப்பித்துப் பக்குவம் முதிர்ந்த நிலையில் திருநோக்கால் ஊழ்வினையைப் போக்கி, உடலறுபத்தெட்டு, நிலம் ஏழு, அத்துவாக்கள் ஆறும் பாழாகச் செய்து ஆணவம் போக்கி ஞானக்கண் காட்டி உலவா இன்பம் மருவும்படி செய்தலையும், மூன்றவத்தையும் போக்கி, (ஸ்ரீகண்டர், அனந்தர், அணுசதாசிவர் முதலிய) முத்தருடன் இருக்கச் செய்து ஆன்ற பரமுத்தி அடைவித்தலையும் அடிகள் விரிவாகக் கூறியுள்ளனர். [2]

அருளும் பொருள்கள்

அம்மை தன் அருட்பார்வையால் அடியவர் பவக்கடலை வற்றச் செய்தலும், பிறவிப் பிணிக்கு மருந்தாக இருத்தலும் கூறப்படுகின்றன. [3] அம்மை, தன்னைப் புவனங்கள் தொழுந்தொறும் அஞ்சேல் என்று ஓதும் அபயமும் வரதமும் உடையவளாய் உள்ளாள். [4] அவள் கடைக்கண் நோக்கால் உயிர்கள் போகம் நுகர்தலும், தளிர்த்தலும் பெறுகின்றன. [5] அவள் உயிர்கட்கு இகபரம் முழுதும் தருகின்றாள். [6] இறைவன், 'அர' என்னும் ஒலியைச் சொல்லவல்லார்க்குத் திருவும், கற்பகதருவும் நல்குகின்றான். [7] அடியவர் பொருட்டு அம்மை திருமகளையும் கலைமகளையும் உதவுகின்றாள். [8] அன்பர் என்புருகக் கசிந்திடு தேனாக உள்ளாள். [9] அரசிவசங்கர நாமம்பகர்வோர்க்கு இறைவன் அரி, அயன், இந்திரன் முதலிய பதவிகளைக் கொடுத்து அவர்களுடைய கருநாமம் (பிறவியச்சம்) துடைக்கின்றான். [10] முருகன் தன்னைத் துதிப்பவர்க்கு இப்பதவிகளைக் கொடுப்பவன் என்றும், விருப்புவெறுப்பு அறுத்தவர் உள்ளத்தில் தன் தாமரைத்தாள்களை

1. 1 : 30-33, 584 : 7 : 12, 1 : 24-29, மீ.இ. 1 : 4
2. 1 : 16-33
3. 42 : 1, 63 : 3,194 : 4, 547 : தரவு 3 - 4
4. 23 : 2
5. 17
6. 46 : 3-4, 105 : அராகம்.4
7. 4 : 1
8. 53 : 1-2
9. 69 : 4
10. 139 : 1-2

வழங்குபவன் என்று கூறப்படுகிறான். [1] அவன் அடியவர்களுக்கு வேண்டிய வரம் கொடுப்பான்; திருமால், நான்முகன் உலகமும், பொன்னுலகும் மண்ணுலகும் எவ்வுலகு வேண்டினும் கொடுப்பான்; அழியாத வீடும் கொடுப்பான். [2] இறைவன் அன்போடு இன்பும் அளித்தருள்பவன். [3] அம்மை கருணைக் கடலாகக் காட்சி தருகின்றாள். [4] கமலையில் தியாகேசர், மன்னுயிர்க்கு இன்னருள் வழங்குதும் யாமென மேவர வழங்குகின்றார். [5] அம்மை தொண்டர்கள் சொர்க்க பதவி பெறுமாறு அருள்கின்றாள். [6] அருவருக்கும் உலகவாழ்வு அடங்க நீத்தோர்க்கு ஆனந்தப் பெருவாழ்வாம் ஆடல் காட்டுகிறான் இறைவன். [7] கயற்கண்ணி, காலில் விழுபவர்க்கு வினையைக் கெடுக்கின்றாள். [8] அம்மை, தாள் துணை குறுகும் தொண்டர் பிழைகளை அறமறந்து, தொண்டரல்லாத பிறர் குணத்தை இகழ்பவள். [9] இறைவன் சேவடியை உளங்கொள்பவர்க்கு எமன் விடுத்த பாசமும், அடுத்த பாசமும் அச்சேவடியால் விலக்கப்படும். [10] அடியவர்களுக்கு இறைவன் எண்ணப்படும் அழகிய பரமுத்தி அளிக்கின்றான். [11] அவன் அருள் மேவினால் ஒரு துரும்பும் அகிலாண்டத் தொகுதியைப் படைத்து அழிக்கும். [12] துன்பமுறும் உயிர்கள் துயர்க்கடலை நீத்துப் பரங்கருணை வழங்கும் பரமானந்த மாக்கடலில் திளைத்தாட இறைவன் பிரணவ மந்திரத்தை வழங்குகிறான். [13] தான் என்ற செருக்கு உடையவர்முன் ஒளித்தோடித் தன்னை இழந்தவர் முன் யான் என்று இறைவன் செல்பவன். [14] மெய்ஞ்ஞானத்தில் நின்றவர்கள் உள் முக விழியாகிய மெய்ஞ்ஞானக் கண் பாவையில் சிவானந்தத்தை நுகர்ந்து விளையாடுமாறு முருகன் வீடு அளிப்பவன். [15] இறைவன் எளியவர்களுக்கு எளியனாய் அருள்கின்றவன். [16] இறைவன் உயிர்கள் மேல் வைத்த கருணையால் உறக்கமின்றி எப்பொழுதும் ஓடித்திரிகின்றான் என்றும் சுவைபட அவன் அருளும் இயல்பு கூறப்படுகிறது. [17] அடியவர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்காக இறைவி கூறப்படுதலின் ஞானம் அருளும் குறிப்பு உணர்த்தப்படுகிறது. [18]

---

1. 359 2. 415 3. 190
4. 204 5. 348 : 34-35
6. மீ.இ.19 : 2-3 7. 534 8. மீ.கு.18:4 9. 352:1
10. 535:4 11. 631:3 12. 554 13. 600: தரவு 2
14. 682:1-2 15. 424:2 16. 191:19
17. 607 18. 62.மீ.இ.9

ஒறுப்பதும் அருளே

இறைவன் ஒறுப்பதும் அருள் வழங்குவதாகும் என்று கூறப்பெறும் மரபு உண்டு. 'நிக்கிரகங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது ' என்றும், தம் சொல் வழி நில்லாத புதல்வரைப் பெற்றோர் வளாரினால் அடித்து விலங்கிடுதல் பரிவினால் நிகழ்வது போல இறைவன் ஒறுப்பதும் கொள்ளத்தகும் என்றும் சித்தியார் கூறுகிறது.[1] இறைவனுடைய இவ்வருள் நிலையினை நீதிநெறிவிளக்கத்துள் அடிகள் இதே மேற்கோள் அமையப் புலப்படுத்துகிறார்.

'தெய்வம் உளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்இன்று நின்றொறுக்கும்-தெய்வம்
இலதென்பார்க்கு இல்லைத்தம் இன்புதல்வர்க்(கு) அன்றே
பலகாலும் சொல்வார் பயன்' (279)

என்று பாடியிருத்தல் குறிக்கத்தகும். இனிய புதல்வர்க்குப் பலகாலும் நீதி சொல்வது போல் இறைவன், தெய்வம் உளதென்பவர்கள் தீமை செய்ய முற்பட்டால் கண்ணோட்டமின்றித் தானே ஒறுப்பான் என்று, அடிகள், இறைவனருளும் நீதியாகவே இதில் அமைத்துள்ளார்.

அருளும் பெருமை

இறைவன், 'உணர்வுறாமையும் என் பரவாமையே' [2] என்று குறிக்கும் தொடரில் அடிகள், தாம் இறைவனைத் துதிக்காத தன்மையையே இறைவன் உணரவில்லை என்று உணர்த்தக் காண்கிறோம். பரவாவிடிலும் இறைவன் அருள் வழங்குகின்றான் என்ற கருத்து இங்குப் பெறப்படுகிறது. மென்மலர்த்தாளை வணங்க இறைவன் தன்னைத் தானே தருவான் என்றும் கூறப்படுகிறது. [3] இவ்வாறு உயிர்களுக்கு அருள் வழங்கும் முறை அடிகளால் இனிதின் புலப்படுத்தப்படுகிறது.

---

1. சித்தியார். சூ. 2 : 15-16
2. 142
3. 112

'உயிர்கள் மனத்தை இறைவன்பால் ஈடுபடுத்தினால் இறைவன் விரைந்து வருகின்றவன்; உயிர் இறைவன்பால் வேட்கைகொண்டால் இறைவனும் உயிரின்பால் வேட்கை கொள்கின்றான்; உயிரின் வேட்கையைவிட இறைவன் வேட்கை பெரியது; இறைவனை உள்ளத்தின் ஒரு மூலையில் சிறிது நினைத்தாலும் போதும், அவன் விரைந்து வந்து உள்ளம் முழுவதையும் ஆட்கொள்கின்றான்' [1]

என்று டாக்டர் மொ.அ.துரையரங்கனார் அவர்கள், சுந்தரர் தொடர்பாகக் கூறியிருத்தல் இச்சூழலில் இனிய பொருத்தமுடையதாகக் குறிக்கத்தகும்.

அடியவர் பெருமை

'மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசினால் எத் திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினர்' [2]

என்று சேக்கிழார், அடியவர்தம் அளப்பரும் பெருமையைக் கூறுகிறார்.

இறையடியவர்களையும் அவர்தம் திருவேடங்களையும் இறைவன் என்றே தொழுது இறைஞ்சுதல் சைவசித்தாந்த மரபாகும். 'திங்கள் முடியார் அடியார் அடியோமென்று திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடையோரே' [3] என்றும், 'ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார், எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்' [4] என்றும் சித்தியார் அடியவர் சிறப்பை வலியுறுத்துகிறது. அடிகளும் அடியவர் பெருமைகளை உணர்ந்து உரைக்கக் காண்கிறோம்.

உள்ளமே கோயில்

அடியவர் உள்ளமே இறைவன் விரும்பி உறையும் இடம் என்பதை அடிகள் உணர்ந்து உரைக்கின்றனர். இறைவன் உறைதற்கேற்ற தகுதிப்பாடுடையவர்களாக அடியவர் விளங்குதல் உடன்

1. 'If the mind is oriented towards Him, He rushes into it. If soul is hungering for God, God is also hungering for soul' 'Gods hunger is greater than the hunger of the soul' 'If you just think of Him in the corner of your heart, He rushes and fills up the whole heart' (7; 57:2) - The religion and Philosophy of Tevaram with special reference to Nambi Arurar (Sundarar) by Dr. M.A.Dorai Rangaswamy Book II. p.1206
2. பெரியபுராணம், திருக்கூட்டச்சிறப்பு.6
3. சித்தியார்.சூ. 12 : 1 4. மேற்படி சூ. 12 : 2

உணர்த்தப்படும். உருகி உருகி நெக்கு நெக்குள் உடைந்து கசிந்திட்டு அசும்பூறும் உழுவலன்பிற் பழவடியார் உள்ளத் தடத்தில் ஊற்றெடுத்துப் பெருகும் பரமானந்த வெள்ளப் பெருக்காக அம்மை விளங்குகிறாள். [1] சிவமணம் கமழ விண்ட தொண்டர் மானதத் தடமலர்ப் பொற்கோயில் குடிகொண்ட மாணிக்கவல்லி' [2] என்கிறார் அடிகள். 'பூண்டடியர், உள்ளத்திருப்பீர்' [3] என்றும், 'முத்தர்வாழ் அவிமுத்தமும் நெக்குடைந்து உருகு பத்தர்தம் சித்தமும் கோயிலாவுடைய நாதன்' [4] என்றும், 'உரைத்த நான்மறைச் சிரத்தும், ஐந்தவித்தவர் உளத்தும்..... பூங்குழல் நிரைவளையவளொடு நின்றவர்' [5] என்றும் இறைவன் அடியவர் உள்ளத்தில் வீற்றிருப்பதை அடிகள் குறிப்பிடுகின்றனர். திருமகளுக்குத் திருமாலின் மார்பும், கலைவாணிக்கு நான்முகன் நாவும் இடமாக இருத்தல் போல அம்மையொடு பொலியும் இறைவனுக்கு, மெய்விரிக்கும் தொண்டர் உள்ளத்தடம் இடமாக விளங்குவதாகவும் விளக்கக் காண்கிறோம். [6]

மறமும் அறமாதல்

தம்முள் தகுதியால் இனம்ஒத்து விளங்கும் தொண்டர் சிறப்பைக் கூறும் அடிகள் 'இனம் ஒக்கும் தொண்டர்' [7] என்று குறிப்பிடுகின்றார். அடியவர்கள் வேறு ஒருவருக்கும் அடிமை செய்யாது அம்மைக்கே சிறப்பாக அடிமைத்திறம் பூண்டு விளங்குவதையும், வழிவழியாக அவ்வடிமைத் திறம் உள்ளமையையும் அடிகள்,

> 'புதையிருள் கிழிதர எழுதரு பருதிவ ளைத்த கடற்புவியில்
> பொதுவற அடிமை செய்திடு வழியடியர்' (53)

என்று குறிக்கின்றார். எனவே அம்மையும் இவ்வாறு தன்னைக் குறுகும் தொண்டர்கள் பிழைகளை அறவே மறந்து அருள்கின்றனள்; தொண்டரல்லாத பிறர் குணம் உடையவரேனும் அம்மையால் இகழப்படுகின்றனர். [8] தொண்டர்கள் பிழை செய்யினும் இறையருளுக்கு ஆளாகும் தன்மை இங்குச் சிறப்பாகக் குறிக்கத்தகும்.

---

1. 45
2. 55
3. 200
4. 675
5. 676
6. 363
7. 462
8. 352 : 1

இறையடியவர்கள் மறம் உடையராயினும் அறம் உடையராக மதிக்கப்படுவர் என்றும், அடியரல்லாதார் அன்புடையரேனும் மறம் உடையராகவே மதிக்கப் பெறுவர் என்றும் இவ்விருநிலைக்கும் முறையே சண்டீசர், தக்கன் எடுத்துக் காட்டாவர் என்றும் சித்தியார் இறையருள்திறத்தையும் அடியவர் பெருமையையும் குறிப்பிடுதல் [1] ஈண்டு நினைக்கத்தகும். இவ்வாறே இறைவன்பால் கொண்ட பத்தி மேலீட்டால் தன் தந்தையின் தாளை எறிந்த சண்டீசர்தம் மறச்செயலும் அடிகளால் அறமாகக் கூறப்படக் காண்கிறோம். 'தவப்பயன் பெரிதெனும் தந்தைதாள் எறிந்தார்க்கே' [2] என்றும் 'எங்கோன் விரைத்தொங்கல், தன்தந்தை தாளெறிந்தார்க்கன்றித் தரான்'[3] என்றும், 'நறும்பூங்கடுக்கை.... தந்தைதாள் மழுவாலெறிந்து கொல்வார் ஒருவருக்கல்லாது எவர்க்கும் கொளற்கரிதே'[4] என்றும் சண்டீசர் பெருமை அடிகளால் வலியுறுத்தப்படுகிறது. தந்தையை எறிந்த மறம் உடையவரேனும் இறைவன்பால் கொண்ட அன்பால் இந்நிகழ்ச்சி நிகழ்ந்ததாகலின் அறமாகவே போற்றப்பட்டு, இறைவன் மாலை பெறும் பேறு சண்டீசர்க்கு உள்ளது என்று வலியுறுத்தக் காண்கிறோம். காதலுட்கிடப்பச் சாக்கிய நாயனார் கல்லெறிந்த தன்மையை அடிகள் குறிப்பதும் இவ்வகையில் எண்ணத்தகும். [5] இறைவனை மதிக்காது தக்கன் செய்த வேள்வியாகிய அறம் தகர்க்கப்பட்டுத் தீமையாய் முடிந்தமை அடிகளால் குறிக்கப்படுகிறது. [6] தக்கன் வேள்விக்களம் கொலைக்களமென்ன இறைவனால் செய்யப்பட்டமை கூறப்படுகிறது. [7] இவ்வாறு அடியவர் பெருமையும் அடியரல்லாதார் பெறும் கேடும் அடிகளால் ஒருங்கு உணர்த்தப்படுகின்றன.

செல்வச் செருக்கர்கள்

அடியவர்களைச் செருக்குடைவர்களாகவும் கூறிச் சிறப்பிக்கக் காண்கிறோம். 'தெள்ளுசுவை அமுதம் கனிந்த ஆனந்தத் திரைக்கடல் மடுத்து உழக்கும் செல்வச் செருக்கர்கள்' என்கிறார் அடிகள்; இவர்தம் மனக்கமலமாகிய பூஞ்சேக்கையில் வேதமாகிய வண்டு ஒலிக்க அம்மை

---

1. சித்தியார்.சூ. 2 : 29
2. 118
3. 542 : 18-19
4. 639
5. 344 : 18-19
6. 461
7. 417

விளங்குவதாகச் சிறப்பிக்கிறார். [1] சிவஞானச் செல்வம் உடைய அடியவர்கள் செருக்குற்று இருக்கும் தன்மை இங்ஙனம் காட்டப்படுகிறது. இறைவனது அருட் செல்வம் வாய்த்தலால் இவ்வாறு அடியவர்கள் செருக்கி இறுமாப்புறும் தன்மை பிற அடியவர்களாலும் விரும்பி உரைக்கப்படக் காண்கிறோம்.

'இருங்களி யாயின்றுயான் இறுமாப்ப
இன்பம் பணிவோர்
மருங்களி யாவனலாட வல்லோன்' [2]

என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு அடியவர்கள் சிவஞானச் செல்வச் செருக்குடையவர்களாய் விளங்கும் தன்மை பாராட்டி உரைக்கப்படக் காண்கிறோம்.

உருகும் அடியவர்க்கு அருளும் பயன்கள்

தெய்வ முனிவர்களாகிய அடியவர்கள் இறைவனை வணங்கும்போது, தாம் நந்தியினால் பிரம்படி பட்டதற்கு வருந்தாமல், இறைவன் மண்சுமந்தமைக்கு உருகி நிற்கின்றனர். [3] இவ்வாறு அடியவர்தம் அன்புப் பெருக்கம் உணர்த்தப்படுகிறது. இறைவன் சேவடிக்கு ஆளான அடியவரே எமனுடைய தண்டனைக்கு ஆளாகாதவர்கள் [4] என்று அடியவர்க்கு எமதண்டனை இன்மை சுட்டப்படுகிறது. உள்நெகிழ் தொண்டர் உளத்து இருள் சிந்திட இறைவன் அவர்தம் உள்ளத்தில் ஒளிவிடுகின்றான் என்கிறார் அடிகள்.[5] அடியவர்தம் அறியாமை இறைவனால் போக்கப்படும் நிலை இவ்வாறு உணர்த்தப்படுகிறது. தொண்டர்தம் தொழும்புக்கு இறைவன் அளிக்கும் பயன்கள் பலவாகக் கூறப்படும். நாக உலகமும், நிலவுலகமும், விஞ்சையர் இருப்பும், திருமால் பதவியும், பிரமபதவியும், இந்திர பதவியும் தொண்டர் தம் அடித்தொழும்புக்குக் காணியாக முருகன் வழங்குவதாக அடிகள் உணர்த்துகின்றனர். [6] மெய்ஞானியர்க்கு அவன் வீடும் கொடுத்தல் கூறப்படுகிறது. [7] தவப்பெருந் தொண்டர்கள் பேரா

---

1. 94
2. திருச்சிற்றம்பலக் கோவையார் 52
3. 321
4. 333
5. 377
6. 384
7. 424

இயற்கையாகிய முத்தி பெறுதற்குரிய முயற்சியும் தகுதியும் இயல்பும் கொண்டு விளங்குதலை அடிகள்,

'சலியாது முயன்ற தவப்பெருந் தொண்டர்
பலநாள் ஓதிக் கலைமுற்றும் நிரம்பி
அளவையின் அளந்துகொண்டு உத்தியில் தெளிந்து
செம்பொருள் இதுவெனத் தேறி அம்பலத்து
ஆரா அன்பினோடு அகனமர்ந்து இறைஞ்சிப்
பேரா இயற்கை பெற்றனர் (454 : 1-6)

என்பதால் உணர்த்தக் காண்கிறோம்.

சார்ந்தவர்பேறு

அடியவரோடு தொடர்பு கொள்வோர்க்கும் இறைவன் திருவருள் கிடைக்கும் என்பதை அடிகள் தம் நிலையைக் கூறும் முறையில் புலப்படுத்துகின்றனர். தொண்டரொடு பயில்வதால் அவர்கள் பன்னாள் நோக்கிய நிலையில் அவர்தம் பாவனை முற்றி அப்பாவனைப் பயனைத்தந்து நிற்கும் என்றும்,

'நற்றவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க் குண்டோ பெறத்தகா தனவே'

என்றும் தெளிவுறுத்துகிறார்; எவ்விடத்தில் அத்தொண்டர்கள் இறைவனை எண்ணுகின்றனரோ அவ்விடத்தில் இறைவனும் உள்ளான் என்றும் சிறப்பிக்கக் காண்கிறோம்; தம்மைச் சார்வோரிடத்தும் அவர்கள் இறைவன் இருப்பதாகப் பாவித்தலின், அவர்களைச் சார்ந்தோர்க்கும் இறைவன் திருவருள் கிடைக்கும் என்பது இவ்வாறு உணர்த்தப்படுகிறது; நற்றவத்தொண்டர்கள் திருவுருக் கொண்ட நோக்கத்தையும் அடிகள் விளக்குகின்றனர்; கருணையொடு, நிலையில் பொருளும் நிலையியற் பொருளும் உளம் கொள்ளுமாறு விளக்கிப் புல்லறிவைப் (பாசஞானம்,பசுஞானம்) போக்கி நல்லறிவைக் (பதிஞானம்) கொளுத்திச்

சார்ந்தோரை இடித்து வரைநிறுத்திச் செம்மை செய்தருள்வதற்காக அடியவர்கள் விளங்குகின்றனர் என்கிறார். [1] இவ்வாறு இறைவன் அடித்தொழும்பர் சார்பு பெற்றோர் உய்வர் என்றும் உணர்த்தக் காண்கிறோம். [2]

இறைவன் அடியவர்க்கு எளியன்

திங்களங் கண்ணித் தில்லை வாணன் அன்பருக்கு எளியன் [3] என்றும் அன்பர் பெருமை சொல்லப்படும். சுந்தரர் வரலாற்றை எடுத்துரைக்கும் முறையிலும் இறைவன் அடியவர்க்கு எளியன் என்பதை அடிகள் வலியுறுத்துயுள்ளனர். சுந்தரரோடு ஊடல் தீருமாறு பரவையாரிடம் இரவில் இரண்டு முறை இறைவன் தூது சென்றதை அடிகள் நினைவுறுத்துகின்றனர். [4] எனவே இறைவன் அரியவன் என்று சொல்வோர் சொல்க; பரவைதன் மனைவயின் பாவலன் ஏவலின் இருமுறை திரிதலின் எளியன் என்று எளியனும் பரவுவன் [5] என்கிறார். கமலைப்பெம்மான் அருமைப் பெருமானாயினும், கண்ணப்பர் உமிழ்நீர் உவந்தனர் ஆடியும், விருப்புடன் அளித்த மிச்சிலூன் மிசைந்தும், செருப்படிக்குச் செம்மாந்திருந்தும், விசயன் வில்லடி பொறுத்தும், தமிழ்ப் பாண்டியனுடைய பிரம்படிக்கு உவந்தும், சுந்தரர்க்காகப் பரவையிடம் இருமுறை தூதாக நடந்தும் எளியரின் எளியராய் ஆயினர் என்றும் விவரிக்கிறார் அடிகள். [6] 'செருப்படிக்கும் மாற்றடிக்கும் தொண்டர் வில்லடிக்கும் புகல் மற்றில்லையே' [7] என்று இறைவனைப் பழிப்பது போல் புகழும் முறையிலும், அடியவர்க்கு இறைவன் எளியனாய் உள்ள தன்மை புலப்படுத்தப்பட்டு அடியவர்தம் அளப்பரும் தகுதியும் பெருமையும் உணர்த்தப்படக் காண்கிறோம்.

அவாவின்மையும் இறைவன்பால் விருப்பும்

அடியவர்களுக்கு அம்மை வழங்கும் வரத்தை அடிகள் பாராட்டி உரைக்கின்றார். அம்மை, தனக்கு அங்கம் பகுந்தளித்த இறைவனுக்கு அளித்தவை வளைத் தழும்பும், கொங்கைத் தழும்புமே; ஆயின்

---

1. 460
2. 324 : 14
3. 466 : 11-12
4. 478 : 18-21, 538: தாழிசை 2
5. 518
6. 344:22-36
7. 687

வந்திக்கும் அடியவர்க்குப் பார் ஏழும் ஒருங்கு வரமாகத் தருகிறாள் என்று கூறுகிறார்.[1] இறைவன் தமர்களாகிய அடியவர்களை நான்முகனும், திருமாலும் பணிந்து நிற்பர் என்றும், அடியவர்களுக்கு இறைவன் பிரணவம் மொழிந்து ஆனந்தப் பெருவாழ்வு அளித்துச் சாரூபமுத்தி அளிக்கின்றான் என்றும்[2] கூறும் முறையில் அடியவர் பெறும் பேறு குறிக்கப்படுகிறது. ஆயின் இறைவனைக் கும்பிட வேண்டும் அடியவர்கள் விண்மிசை உலகும் வேண்டாதவர்களாக இருத்தலும் அடிகளால் குறிக்கப்படும்.[3] அடிகள் தாம் வேண்டும் முறையிலும் பிற பதவிகளை வேண்டாமல், தொண்டர் எச்சில் இலை உண்ணும் நாயாகப் பிறக்குமாறு அருள வேண்டுதல் நினைக்கத்தகும்.[4] அடியவர்க்கு அவாவற்ற தன்மை இருத்தல் இங்ஙனம் உணர்த்தப்படுகிறது. இயல்பாக விருப்பு வெறுப்பற்றிருக்கும் அடியவர்கள், குருவாகிய இறைவன்பால் கொண்ட அன்பினால் இம்மை விருப்பும் மறுமை வெறுப்பும் உடையவராய் இருப்பர் என்று நயம்பட உணர்த்தும் இடத்தில்[5] அடிகள், அடியவர் இறைவன்பால் முழுவிருப்புடன் திகழும் மேன்மையை உணர்த்துகிறார் எனலாம்.

அடியவர் இயல்பு நலம்

உத்தம யோகியராகிய அடியவர் இலக்கணத்தை அடிகள் இனிதின் புலப்படுத்துகின்றனர். இந்திரன் வாழ்க்கையும், குபேரன் வெறுக்கையும், மன்மதன் அழகும் ஒருங்கு கிடைப்பினும் வெருவந்து கலங்கிக் கையிற்பெற்ற உணவை உண்டுவாழும் வாழ்க்கை உடையவர்கள் என்கிறார் அடிகள்.[6] அவாவற்ற தன்மை இங்ஙனம் நன்கு வலியுறுத்தப்படுகிறது. இவ்வாறு பற்றறுத்து, இறைவனைப் பற்றும் அடியவர்கள் உயிராகிய பாத்தியில் உணர்வாகிய நீர் பாய்ச்சி வளர்க்கும்போது இறையருள் இனிதின் வாய்க்கும்.[7] மனம் நெக்குருகப் பரமானந்தம் மடுத்த இத்தகைய திருத்தொண்டர்க்கு அளிகனியத் திருவருள் கனியும்.[8] உழுவலன்பு என்புருக நெக்கு அள்ளூற விளங்கும் தொண்டர்களை விழித்துறங்கும் தொண்டர் என்று அடிகள்

1. சிவ.இ.3
2. 600; தாழிசை
3. 530
4. 569 : 25-43
5. 578 : 26-33
6. 457 : 1-6
7. 44
8. 81

குறிப்பிடுகிறார்.[1] சாக்கிரத்தே அதீதத்தைப் புரியும் மெய்யன்பர்களை இவ்வாறு அடிகள் கூறியுள்ளனர் என்பர்.[2] அடியவர் மனத்து உள்ளும் புறம்பும் கசிந்து ஊற்றெழ நெக்குடைந்து விளங்கும்போது இறைவன் அவர்தம் உள்ளக் கமலத்துப் பத்திக் கொத்தரும்ப விளங்குவது உணர்த்தப்படுகிறது.[3] பத்திக் கொத்து என்று இங்கு குறித்திருத்தலால் அடியவர்களிடம் காணும் எண்வகைப் பத்தி நிலைகள் சுட்டப்பட்டுள்ளன எனலாம். விம்மிதம், புளகம் போர்த்தல், விழிப்புனல், மொழிதள்ளாடல், சரியை முதலிய திருத்தொண்டு, துதி, தியானம், திருப்பணிக்கென்று ஈட்டுவது அழித்துண்ணாமை ஆகியவை எண்வகைப் பத்திகள் எனப்படுதல்[4] ஈண்டுக் கொள்ளத்தகும். இவ்வாறு அடியவர் இயல்புகள் உணர்த்தப்படுகின்றன.

நாயன்மார்கள் சிறப்பு

சைவ நாயன்மார்களாகிய அடியவர்கள் பெருமைகளையும் ஆங்காங்கு அடிகள் போற்றியுள்ளனர். 'வடிதமிழ் தெரியுமவர் முதுசொல்'[5] என்று நாயன்மார் தம் தேவாரம் முதலியவற்றைச் சிறப்பித்து உரைக்கின்றார். ஞானசம்பந்தரைப் புகலியர் குரிசில் என்று பாராட்டி அவர்தம் பண்ணொடு தமிழருமை அறிந்து இறைவன் அவருக்குத் தாளம் வழங்கினான் என்று குறிப்பிடுகிறார்.[6] செடி கொள் பறிதலை அமணர்க்குமுன் சம்பந்தர் சொல்வையையிற் கூட்டிய பெருமை பேசப்படுகிறது.[7] செழுமறை தெளிய வடித்த தமிழ்ப் பதிகத்தோடு திருவருளமுது குழைத்து விடுத்த முலைப் பாலால் அம்மை கழுமல மதலை வயிற்றை நிரப்பிய அருட்செயல் கூறப்படுகிறது.[8] அமண் மாசறுத்த கவுணியர் பெருந்தகை பிள்ளைமைப் பருவம் விடுத்துத் தள்ளரும் பருவத்து விளங்குதல்போல் மாசிலாமணி தேசிகரை அடிகள் குறிக்கின்றனர்.[9] சுந்தரர் பொருட்டு எளியனாய் இறைவன் தூது சென்றமை முன்னர்க் குறிக்கப்பட்டது. அவர்தம் திருத்தொண்டத் தொகைக்கு இறைவன் முதற்பொருளானதோடு, 'தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துக்

---

1. 76 2. மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ். பு.சி.பு. உரை. பக்.145
3. 141
4. (திருக்குற்றாலப்புராணம்) கு.பி.தி. (உ.வே.சா) பக். 139-140
5. 4 : 1 6. 115 :1 7. 4 :1
8. 43 9. 566 : 35-38

கொடுத்தமையும் சுட்டப்படுகிறது. [1] சுந்தரர் பண்மலர் சாத்தி இறைவனைப் பணி கொண்டதைக்கூறி அடியவர் பாடற் பெருமையை உணர்த்தக் காண்கிறோம். [2] சுந்தரர்க்கு இறைவன் துணைவனாய் விளங்கின மேன்மை நினைக்கப்படுகிறது. [3] சுந்தரர் பொன்னை ஆற்றில் இட்டுத் திருவாரூர்க் குளத்தில் பெற்ற நிகழ்ச்சியும் பேசப்படுகிறது. [4] பைந்தமிழ் நவின்ற செந்நாப்புலவராகிய மாணிக்கவாசர் குதிரைகள் மூலம் பாண்டியனுக்கு இறைவனைக் காணச் செய்தனர் என்றும், அகனைந்திணை மரபில் நாற்பொருள் விளங்கக்காமஞ் சான்ற ஞானப்பனுவலாகிய திருக்கோவையாரை இயற்றி அதற்கு நடராசரே பொருள் என்று சுட்டினர் என்றும் அடிகள் விளக்குகின்றனர். [5] சொற்றமிழ் விரகன் என்று மாணிக்கவாசகரைப் பாராட்டுவதோடு அவர் ஊமைப் பெண்ணைப் பேச வைத்த நிகழ்ச்சியையும் வியப்புக்குரியதாகக் குறிப்பிடுகின்றனர். [6] இவ்வாறே கண்ணப்பர், சண்டீசர், சாக்கியர், தில்லை மூவாயிரவர் முதலியோரையும் குறிப்பிட்டுள்ளமை முற்கூறிய செய்திகளால் அறியத்தகும். இவற்றின் மூலம் தாமும் அவ்வடியவர்க்கு அடியவர் என்பதைத் தெளிவாக்கியுள்ளனர் அடிகள்.

4. வழிபாட்டு முறை

இறைவனை அவரவர் நிலைக்குத்தக வழிபடுதல் உண்டு. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நெறிகளில் இறைவனை வழிபடுதல் சித்தாந்த மரபில் கூறப்படும். புறத்தொழில் மாத்திரையானே இறைவனுடைய உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு சரியை எனப்படும்; புறத்தொழில் அகத்தொழில் என்னும் இரண்டானும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு கிரியை எனப்படும்; அகத்தொழில் மாத்திரையானே அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு யோகம் எனப்படும்; புறத்தொழில் அகத்தொழில் இரண்டும் இன்றி அறிவுத் தொழில் மாத்திரையானே அம்மூன்று திருமேனிக்கும் மேலாய் அகண்டாகார நித்த வியாபக

---

1. 472 : 11-14
2. 338
3. 538 : தாழிசை 2
4. 178
5. 472 : 5 - 10
6. 581 : 31-34

சச்சிதாநந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவபிரானிடத்தில் செய்யும் வழிபாடு ஞானம் எனப்படும். [1] இவ்வழிபாட்டு முறைகளை அடிகள் சுட்டியுள்ளமை முன்னர் உணர்த்தப்பட்டது. அடிகள் பாடல்களில் குறிக்கப்படும் பிற இறைவழிபாட்டு முறைகள் சில ஈண்டு அறியத்தகும்.

ஒண்மலரும் சொன்மலரும்

மலரால் அருச்சித்தல் வழிபாட்டு மரபாகக் கூறப்படுவதாகும். வந்தியாகிய அன்னை இறைவனை வழிபட்ட முறையை அடிகள், 'அரும்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட்செய்யும் அன்னையவள்' [2] என்று குறிக்கின்றார். மலராலும் இலையாலும் வழிபடல் இவ்வகையில் அறியப்படுகிறது. பச்சிலை இங்கு வில்வத்தைக் குறித்துநிற்றல் அறியத்தகும். மலர்சாத்தி வழிபடுவதைத் 'தண்மலரும் பொழில் தென்கமேலசர்க்குச் சாத்துகின்ற ஒண்மலர்' என்றும் அடிகள் குறிக்கின்றார்; ஆயினும் சுந்தரர் தனது பண்மலர் சாத்திப் பணி கொண்டதால், திருமால் தனது கண்மலர் சாத்தியும் காண்பரிய இறைவனது கழல்மலர், பாமலர்க்கு எளிதில் கிடைப்பது என்றும், ஒண்மலர் சொன்மலருக்கு ஒவ்வாது என்றும் குறிக்கின்றார். [3] இவ்வகையில் பண்ணையும் கண்ணையும் மலராக உருவகித்து உரைத்தல் நோக்கத்தகும். எனவே மலர் சாத்தி வழிபடல் பயின்ற வழிபாட்டு மரபு என்பதை அடிகள் உணர்த்துவதோடு பாமலர் சூடி வழிபாடு செய்தல் சிறந்தது என்பதையும் புலப்படுத்துகிறார் எனலாம். பாமாலை சேர்த்ததைச் சரியை என்றும், அதனை ஞானாசிரியருக்குத் தரிக்கும்படி சாற்றியதைக் கிரியை என்றும், அதனை அவர் ஏற்றுக் கொண்டு அருளியது யோகம் என்றும், அவர் வழங்கியது ஞானம் என்றும் அடிகள் குறிப்பிடுகின்றனர். [4] இவ்வகையில் பாமாலை சேர்த்தலே சரியை, கிரியை, யோகம், ஞானத்துக்கு அடிப்படையாக இருத்தல் உணர்த்தப்படுகிறது. கலம்பகம், நான்மணிமாலை, இரட்டைமணிமாலை என்றவாறு அடிகள் தாம் இயற்றிய

---

1. சித்தியார். சூ. 8:19-22 பொழிப்புரை
2. 105:தாழிசை 2
3. 338
4. 598

பிரபந்தங்களை அமைத்துள்ள பொருத்தமும் சிறப்பும் ஈண்டு நினைக்கத்தகும். ஒண்மலர்களால் மலர்மாலை புனைதல்போல் சொன்மலர்களால் பாமாலை புனையும் அடிகள், அதனை மேலான வழிபாடாக உணர்த்துகிறார் எனலாம். 'அற்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்ணில் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்' [1] என்று சேக்கிழார், சுந்தரரிடம் இறைவன், பாட்டையே அருச்சனையாக வேண்டியதைக் குறிப்பிடுகின்றார். அவ்வாறே அடிகளும் பாக்களால் அருச்சிக்கும் முறையே நிலையான வழிபாட்டுமுறையாக வழிவழி வருவோர்க்கும் உணர்த்தியுள்ளார் எனலாம். இறைவன் தமது கவிதை கொண்டு ஆட்கொண்டதை அடிகள் சுட்டியிருப்பதோடு, [2] பண்டாரமும்மணிக்கோவையை நித்தம் துதிக்க வல்லார் பிறவாத பேரின்பத்தை, எடுத்த பிறப்பிலேயே எய்துவர் என்றும் உணர்த்துகின்றனர். [3] இவ்வகையில் அடிகளின் கவிதைகளே நிலையான வழிபாட்டுக்குரியனவாக விளங்குதல் உணர்த்தப்படுகிறது எனலாம். நாத்தழும்பிருக்க இன்னிசைப் பாத்தொடுத்துப் பரஞ்சுடரை ஏத்துமாறு செந்நாப்புலவர்க்குச் செந்நெறி காட்டும் அடிகள், [4] புத்தேளிர்போலப் புகழ வேண்டும் அடிகள், [5] இறைவனைப் பாமாலை சூட்டி வழிபடுவதை மேலான வழிபாடாகப் புலப்படுத்தியுள்ளமை தெளிவு.

தலவழிபாட்டுமரபு (மூர்த்தி, தலம், தீர்த்தம்)

சமயமரபில் கூறப்படும் புராணச் செய்திகள் சமய உணர்வையும் ஈடுபாட்டையும் வளர்க்கத் துணைபுரிவனவாகும். அவ்வகையில் பல்வேறு தலங்களிலும் எழுந்தருளியுள்ள இறைவன் பெருமை, தலப்பெருமை, தீர்த்தப்பெருமை ஆகியவை சமய அடியவர்களால் எடுத்துரைக்கப்பெறும். சைவசமய குரவர் நால்வரும் தலப்பயணங்கள் மேற்கொண்டு ஆங்காங்குள்ள இறைவன் இறைவியைப் பாடிப் பத்தி உணர்வைப் பெருக்கியதோடு, பாடல் பெற்ற தலங்கள் என்று சிறப்பித்துக் கூறும் வழக்கத்தையும் உண்டாக்கியுள்ளனர். அம்மரபில் அடிகளும் திருச்செந்தூர்,

---

1. பெரியபுராணம் . தடுத்தாட்கொண்டபுராணம்.70
2. 634
3. 596
4. 699 : 24-30
5. 549 : 4

கைலாசபுரம், மதுரை, திருவாரூர், புள்ளிருக்குவேளூர், தில்லை, தருமபுரம், காசி, முதலிய தலங்களுக்குச் சென்று இறைவனைப் பாடியவராக விளங்குகிறார். ஆங்காங்கு விளங்கும் இறைவன் சிறப்புக்களை அவ்வத் தலச் சிறப்புக்களோடு புலப்படுத்திப் பாடியுள்ளனர். இவை இரண்டாம் இயலில் கூறப்பட்டுள்ள கருத்துக்களால் அறியத்தகும். இவ்வகையில் இறைவன் எழுந்தருளியுள்ள தலங்களுக்குச் சென்று தீர்த்தமாடி இறைவனை வழிபடும் மரபை அடிகள் காட்டியுள்ளனர்; இது சைவமரபாகும். 'உள்ளமுவந்து-ஆறுதிருப்பதி கண்டு ஆறெழுத்தும் அன்பினுடன், கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே' [1] என்று முருகனைக் குறிக்கும் போது அவன் எழுந்தருளியுள்ள தலங்களுக்கெல்லாம் சென்று ஆறெழுத்து மந்திரம் கூறி வழிபாடு செய்வதை அடிகள் வலியுறுத்தியுள்ளமை அறியத்தகும். குறமகள் கூற்றாகப் பாண்டி பதினாலு தலங்கள் இவ்வழிபாட்டு மரபுக் கேற்பக் கூறப்பட்டுள்ளன எனலாம். [2]

பூசனை மரபு

திருவிடைமருதூரில் இறைவன் அம்மைக்கு வழிபாட்டு முறைமையை விழுமிதின் உணர்த்தத் தானே தன்னைப் பூசனை புரிந்து விளங்குதல் அடிகளால் எடுத்துக்காட்டப்படுகிறது. அவ்வாறே குருவாகிய இறைவன், பிறர் தன்னை அருச்சனை புரியும் மரபை அறிந்து கொள்ளுமாறு, அங்கயற்கண்ணியோடுறையும் சொக்கநாதரைப் பூசனை புரிவதாகவும் அடிகள் விளக்குகின்றனர். ஈரெண்திறத்து உபசாரமும் வாய்ப்பப் பூசனை புரிவதாக எடுத்துரைக்கின்றனர். [3] ஆவாகனம் முதலிய பதினாறு வகை உபசாரங்களால் பூசனை புரிதல் இவ்வகையில் உணர்த்தப்படுகிறது.

---

1. 1 : 109
2. மீ.கு.21
3. 587 : 1-12

'வாக்கும் மனனும் யாக்கையும் ஒன்றாச்
சொற்றரு கரணம் மற்றிவை மூன்றும்
நின்புகழ் நவிற்றியும் நினைத்தும் நின்துணைத்தாள்
அன்புடன் இறைஞ்சியும் இன்பமுற்றனவால்
அவகரணங்களே அல்ல மற்று அம்ம
சிவகரணங்களாய்த் திரிந்தன அன்றே' [1]

என்று முக்கரணங்களாலும் வழிபடும் இயல்பையும் அதனால் அம்முக்கரணங்கள் சிவகரணங்களாகத் திரிந்து திகழ்வதையும் அறிவுறுத்துகிறார் அடிகள். இறைவன் தங்குதற்கு உயிர் முழுவதும் இடனாகும்பொழுது அவ்வுயிரைப் போர்த்தியிருக்கும் உடலும் கரணங்களும் சிவ கரணமாகின்றன. அந்நிலையில் சிவானுபூதி கிட்டும்; எனவே இவ்வகைவழிபாடு சிறப்பாக அடிகளால் உணர்த்தப்படுகிறது எனலாம். வேள்வி இயற்றி வழிபடுதலும் அடிகளால் குறிக்கப்படுகிறது.[2]

"சமயத் தொடர்பான சடங்குகள் உறுதியோடும், நம்பிக்கையோடும், ஈடுபாட்டோடும் தொடர்ந்து மேற்கொள்ளப் பெறும் போது, ஆன்மீக வழியில் நிலையான விளைவு உண்டாக்கப்படுகிறது; அதில் மனித மனங்கள் அழுக்கு நீங்கிப் பளிங்குபோல் தூய்மைப்படுத்தப்படுகின்றன; தாம் தொடர்பு கொண்டுள்ள வளர்ச்சி பெற்ற பொருள்களுக்கேற்ப முழுவளர்ச்சியுற்று விளங்குகின்றன" என்று ஆல்டசு அக்சிலி எடுத்துரைக்கின்றார். [3] அதற்கேற்ப அடிகள் காட்டும் வழிபாட்டு முறைகள் மரபு வழியாக விளங்கி வரும் நிலையில், வழிபடுவோர்க்கு மனமாசகற்றி, இறைநிலைக்கு அவர்களை உயர்த்தும் தகுதியுடையன என்பது உணரத்தகும்.

சிலம்போசை ஒலிவழிச் சென்று கும்பிடல்

விழித்துறங்கும் தொண்டர்களாகிய பற்றற்ற அடியவர்கள் இறைவனைத் திருச்சிலம்பின் ஒலிவழியாகச் சென்று கும்பிட்டு இறைவனடியில் நிற்பர் என்பதைத் திருவுந்தியார் குறிப்பிடும்.

---

1. 587 : 25-30; 564-ம் இவ்வகையில் நோக்கத்தகும்.
2. 475 : 25-27
3. 'If sacramental rites are constantly repeated in a spirit of faith and devotion, a more or less enduring effect is produced in the psychic medium, in which individual minds bathe and from which they have, so to speak, been crystallised out into personalities more or less fully developed, according to the more or less perfect development of the bodies with which they are associated" - The Perennial Philosophy p.271

திருச்சிலம் போசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென்று உந்தீபற
நேர்பட அங்கேநின்று உந்தீபற (திருவுந்தியார்.17)

இவ்வகையில் அம்மையைக் கூறும்போது அடிகள், 'தொடர்ந்து உன், செஞ்சிலம்படி பற்று தெய்வக்குழாம்' [1] என்கிறார். சிலம்போசை வழியாகத் தெய்வக்குழாம் வழிபட்டு அடியடையும் குறிப்பு இதில் உணர்த்தப்படுகிறது. மறையாகிய சிலம்புகள் அம்மையின் தாள்களிலிருந்து அடிகளின் ஆவிக்குள்ளே என்றும் புல்லிக்கிடந்தன போலும் [2] என்பதும் இக்கருத்துடையதாகும். முருகனைச் சிறுபறை முழக்க வேண்டும்போது, 'பரநாதத்து ஒலியென அனுபூதி பலித்தவர் நெக்குருக' [3] முழக்குமாறு கூறுகிறார் அடிகள். அனுபூதி பலித்த அடியவர்கள் சிறுபறை முழக்கத்தைப் பரநாத ஒலியெனக் கருதி உருகுவதும், திருச்சிலம்போசை ஒலி வழியே சென்று கும்பிட்டு அடியடையும் முறையை உணர்த்துவதாகும் என்பர். [4]

சமய ஒழுக்கங்கள்

சமயவாழ்வை மலர்விக்கும் பிற ஒழுக்கங்களையும் அடிகள் உணர்த்தியுள்ளனர். சமய ஒழுக்கங்களை வலியுறுத்துதற்கு அடிப்படையாக அடிகள் காசியில் ஒரு மடத்தை நிலையாக நிறுவியமை முதற்கண் நினைக்கத்தகும். அடிகளின் வரலாற்றில் கூறியவாறு அந்த மடத்தில் அடிகள் தங்கியிருந்து சமயத் தொடர்பான சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தமை அறியப்படுகிறது. தகுதியும் சொல்வன்மையும் உடைய சைவ அடியவர்கள் சொற்பொழிவுகள் வாயிலாகவும், நூல்கள் வாயிலாகவும் சமயக் கருத்துக்களைப் பரப்புதல் வேண்டும் என்பது அடிகளின் இயல்பு மூலம் கொள்ளத்தகும். சைவ சமய மரபில் மக்கள் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள் சிலவும் அடிகளால் ஆங்காங்கு உணர்த்தப்படுகின்றன.

---

1. 54
2. சிவ.இ.18
3. 435
4. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் 2ஆவது மாநாடு, வித்துவான் கு. சுந்தரமூர்த்தி, பக்.97

உயிரிரக்கம்

உலக வாழ்வில் உடன் விளங்கும் மக்களுயிர்களிடத்தும் பிற உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டு விளங்குதல் மேலான ஒழுக்கமாகும். அடிகள் பாடியிருத்தல் உயிர்கள் உய்திபெறவேண்டும் என்ற இரக்கஉணர்வின் பயனே ஆகும். மக்கள் இரவும்பகலும் பரபரப்போடு பலபல செய்து பாழுக்கிறைக்கின்றார்களே என்றும், ஒரு வகையால் நல்வழியில் செல்லும் ஊக்கத்தை உண்டாக்கினால் பதறிக் குலைகின்றார்களே என்றும், எவ்வாறு இவர்கள் உய்வர் என்றும் அடிகள் இரங்கி மொழியக் காண்கிறோம்.[1] மக்கள் யாவரும் உய்திபெற வேண்டும் விருப்பமாக உயிர் இரக்கம் வளர்ந்தமைதல் வேண்டும். 'தில்லை இறைவனைத் தொழாதவர்கள் என்செய்கிற்பர்' என்று[2] அடிகள் இரங்கக் காண்கிறோம். இவ்வாறு உயிர்கள் உய்திபெற வேண்டும் என்ற அன்புணர்வு அடிகள் உள்ளத்தில் நிலைபெற்றிருக்கிறது. தாம் உயிர்கள்மாட்டு அன்பும் இரக்கமும் கொண்டிருத்தல் மூலம் அடிகள் மக்களையும் அவ்வாறு விளங்க வேண்டுகிறார் எனலாம். உயிர்களிடம் 'அன்பு காட்டாதவன் இறைவனிடமும் முழுமையாக அன்பு காட்ட முடியாது என்கிறார் டாக்டர் எஸ். இராதாகிருட்டினன்[3]. அன்பு காட்டத் தெரியாதவன் இறைவனை அறியமுடியாது; ஏனெனில் இறைவன் அன்புமயமாக உள்ளான் என்று ஜான் என்பார் குறிக்கின்றனர்[4]. இவ்வகையில் சமய ஒழுக்கத்துள் பிற உயிர்களிடம் அன்பும் இரக்கமும் காட்டுதல் அடிப்படை ஒழுக்கமாக இடம் பெறுவதாகும். உயிர்களுக்குப் பல வகையிலும் அன்பு காட்டித் தொண்டாற்றுதலே இறைவனுக்குச் செய்யும் தொண்டாக மதிக்கப்படும். 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று கூறுதல் சைவ மரபாகும். இவ்வகையில் உயிர்கள் உய்திபெறுவதற்காக இரக்கம் கொண்டு மொழியும் அடிகள், உயிர்களுக்குச் செய்யும் தொண்டுகளாகவும் சிலவற்றை உணர்த்துகின்றனர்.

---

1. 295 2. 559
3. "No man can love God perfectly if he has not loved well a creature of God in this world" - Religion and society, by Dr. S. Radhakrishnan, P. 156
4. "He that loveth not knoweth not God, for God is love" - (i John iv) The Perennial Philosophy, P. 91

உணவு வழங்குதல்

பசியைப் பிணியாகக் கூறுதல் மரபாகும். அப்பசிப்பிணி தீர்க்க உணவு வழங்கி அடியவர்களையும் எளியவர்களையும் உயிர் வாழச் செய்தல் சிறந்த அறமாகும். உணவு வழங்குதலாகிய அன்னம்பாலிப்பு சமய ஒழுக்கப் பணிகளுள் குறிப்பிடத்தக்கதாகும். அடிகள் காசியில் அமைத்த மடத்தில் திருமலை நாயக்கமன்னன் பெயரால் அன்னம் பாலிப்புச் சத்திரம் அமைத்து உணவு வழங்கும் பணியைச் செய்து வந்தமை அடிகளின் வரலாற்றில் அறியப்படுகிறது. இப்பணியை அடிகள் சமய ஒழுக்கமாக வற்புறுத்தியுள்ளனர் எனலாம். அரசனுக்குக் குறிப்பாக நீதிகூறும் அடிகள், பசி போக்கும் பணியை ஒட்டணி முறையில் அரசனுக்குப் பொருந்துமாறு குறிப்பிடக் காண்கிறோம். யானை உண்ணும் கவளத்தில் ஒரு சிறிது வாயினின்றும் தவறி விழுமாயின் அதனால் யானைக்குத் துன்பம் ஏற்பட்டுவிடாது; ஆனால் அவ்வாறு விழுந்த கவளத்தை ஒருகோடி எறும்புகள் கிளையோடு உண்டு (பசியிலிருந்து) உய்யும் என்பது அடிகள் கூறும் செய்தியாகும்.[1] மன்னனுக்குச் சிறிது வருவாய் குறைந்தாலும் அதனால் அவனுக்குத் துன்பம் உண்டாகிவிடாது; ஆனால் அப்பொருளால் பலர் பிழைப்பர் என்ற நீதி இங்கு உணர்த்தப்பட்டுள்ளது. மன்னவன் வரியைச் சிறிது குறைத்துக் கொண்டால் அது பலருக்கு நன்மை அளிக்கும் என்பது குறிப்பாகும். எனவே பொருள்மிக்கோர் உதவுதலும் அதனால் எளியோர் பலர் வாழ்தலும் தெளிவாக்கப்படுகின்றன எனலாம். யானையின் ஒரு கவளம் ஒருகோடி உயிர்கள் உய்வதற்கு உதவுவதை இங்குச் சுட்டும் அடிகள் அவ்வாறு பசிப்பிணி தீர்க்கும் பணியில் ஈடுபடவேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளமை அறியத்தகும். ஒரு சிலர் முயன்றாலும் அவர்களுக்குத் துன்பம் இன்றி மிகப்பல எளியவர்களின் பசியைப் போக்கலாம் என்று அடிகள் அறிவுறுத்தியுள்ளனர் எனலாம்.

பாணாற்றுப்படை என்னும் உறுப்பில் காசியிறைவனிடம் ஆற்றுப்படுத்தும் முறையில் அடிகள் அமைத்துள்ள பாடலில் வறுமை,

---

1. 243

பசி, பிணி இவற்றின் கொடுமையை உணர்த்தி, இறைவனிடம் சென்று வணங்கியதால் பெருவளம் சுரப்ப இருமையும் பெற்றதை எடுத்துக்கூறி ஆற்றுப்படுத்தக் காண்கிறோம். நலம்பாடறியா இலம்பாடு அலைப்ப, அரும்பசிக்கு உணங்கியும், பெரும் பிணிக்கு உடைந்தும் வருந்தும் பாணனுடைய பழைய நிலையை அடிகள் புலப்படுத்துகின்றனர்.[1] இறைவன் இத்துன்பங்களைப் போக்கி வளம் தந்து அருளியதைக் குறிக்கும் முறையில் அடிகள் இவற்றிலிருந்து உயிர்களைக் காப்பாற்றும் பணியில் மக்களும் ஈடுபட வேண்டும் என்பதை உணர்த்துகின்றனர் எனலாம். இவ்வகையில் சமயப் பணியாக, இத்துன்பங்களைப் போக்குதல், உணர்த்தப்படுகிறது எனலாம்.

கொல்லாமை

உற்ற துன்பம் பொறுத்தலையும், உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தலையும் தவத்துக்கு வடிவமாகக் கூறுகிறார் திருவள்ளுவர்.[2] பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்காமல் இருப்பதைத் தவமாகக் குறித்துள்ளதற்கேற்ப அடிகளும் குறிப்பிடக் காண்கிறோம். ஒருவன் வறுமை நிலையடைந்தாலும் தகாத வழிகளில் பொருள் ஈட்டக் கருதக்கூடாது என்று கூறும்போது, தவம் விற்று ஊனோம்பும் வாழ்வு கொள்ளத்தகாதது என்கிறார்.[3] பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவித்துப் பெறும் வாழ்வு வேண்டத்தகாதது என்பதையே இங்கு அடிகள் உணர்த்தியுள்ளமை, திருக்குறட் கருத்தோடு ஒப்பிடும் முறையில் அறியத்தகும். உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்காமல் விளங்குதல் சமய ஒழுக்கம் என்பது இவ்வகையில் காட்டப்படுகிறது எனலாம். 'ஓரறிவுயிர்க்கும் உறுதுயர் ஓம்பி'[4], என்று குறித்தலும் ஈண்டுக் கருதத்தகும். உயிர்ப்பயிர் தழைப்பத் தண்ணளி கரத்தலைப் பாராட்டும் அடிகள்[5], கொல்லாமையை வற்புறுத்துகின்றமை அறியத்தகும். காமம் கதுவப்பட்டவர்கள் கொலையஞ்சார் என்று கூறும் அடிகள்[6] கொல்லுதலை இழிந்த பாவச் செயலாக உணர்த்தக் காண்கிறோம். இதுவும் கொல்லாமையை உணர்த்தும் குறிப்பாக விளங்குகிறது.

---

1. 656
2. குறள். 261
3. 267
4. 451:39
5. 410
6. 284

ஊன் உண்ணாமை கள்ளுண்ணாமை

ஊன் உண்ணாமை சிறந்த ஒழுக்கமாகத் திருக்குறளில் வலியுறுத்தப்படக் காண்கிறோம்.[1] இது சமய ஒழுக்கமாக அடிகளால் சுட்டப்படுகிறது எனலாம். அடிகளின் வரலாற்றில் முகமதியர்களிடம் சைவ உணவின் சிறப்பைப் புலப்படுத்திய நிகழ்ச்சி அறியப்பட்டது. கள்ளும் ஊனும் உண்ணும் களியன் கூற்றில் சிலேடைப் பொருளாக, ஊன் உண்ணுதல் குற்றமுடையது என்று அடிகள் புலப்படுத்தியிருத்தல்[2], அடிகள் ஊன் உண்ணாமையை வலியுறுத்தும் கூற்றாகும் என்று முன்னரும் விளக்கப்பட்டது. பிறிதொரு வகையிலும் இவ்வொழுக்கம் அடிகளால் கூறப்பட்டுள்ளது. மேன் மக்கள் ஒரோவழிப் பொருந்தாத செயல்களைச் செய்வதாய்த் தோன்றினும் அது வசையாகாது; அவர்கள் பசுவைக் கொன்று வேள்வி செய்வாரை ஒப்பர்; ஆயின் சிறுமைக் குணம் உடையோர் பொருந்தாத செயல்களைச் செய்தல் வசையாகும்; அவர்கள் ஊன்தின்பவரை ஒப்பர்[3] என்கிறார் அடிகள். இங்கு ஊன் ஓம்பி ஊன் தின்பவர்களைப் பழித்துக் கூறியிருத்தல் உணரத்தகும். அன்றியும் மேன்மக்கள் பொருந்தாத செயல்களைச் செய்தல், பசுவைக் கொன்று வேள்வி செய்தல் போல்வது என்று கூறியுள்ள முறையிலும், பசுவைக் கொன்று வேள்வி செய்தல் பொருந்தாத செயலே என்பதை அடிகள் உணர வைக்கின்றனர் எனலாம். 'உயிர்க் கொலை புரிந்து வேள்வி இயற்றி நன்மையை எதிர்பார்த்தலைவிட்டு, உயிர்க் கொலை புரியாது எவ்வுயிரிடத்தும் தண்ணருள் தாங்கி ஒழுகுவது மிகச் சிறந்ததாதல் போல, இசையாதன துறந்தார்மாட்டுத் தோன்றாத தன்மை சிறந்ததென்றும் குறிப்பித்தவாறாம்'[4] என்று கருதுவர். இவ்வகையில் கொல்லாமை, ஊனுண்ணாமை ஆகிய ஒழுக்கங்கள் நன்கு வலியுறுத்தப்பட்டுள்ளன எனலாம். கள்ளுண்டல் அறிவினை அழிக்கும் என்று அறிவுறுத்தும் அடிகள் 'அழிநறா'[5] என்று கூறியிருத்தலும் குறிக்கத்தகும்.

---

1. குறள். 251 – 260
2. 638 3. 302
4. குமரகுருபரர் காட்டிய வழி, பெ. பழனிவேல்பிள்ளை, பக். 84
5. 396:2

அவா வறுத்தல்

'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே
அல்கா நல்குரவு அவாவெனப் படுமே'

என்று தெளிவாக்கும் அடிகள், பல்லுயிர்த் தொகுதியும் பிறவிக்கடலுள் அழுந்துமாறு அல்லல் செய்யும் அவாவாகிய வறுமையைப் போக்க வேண்டுகிறார்.[1] அவாவே பிறப்புக்குக் காரணம் என்பதை அடிகள் தெளிவுறுத்துகின்றனர் எனலாம். அடிகள் துறவியர் இயல்பைக் கூறும் முறையில், பித்தர்கள் சுவையறியாமல் உணவு உட்கொள்தல் போல் துறவியரும் உண்பர் என்கிறார்.[2] பற்றற்ற தன்மை இங்ஙனம் புலப்படுத்தப்படுகிறது எனலாம். அடிகள் தமது வேண்டுகோளாகக் கேட்கும் பாடல் ஒன்றிலும், தமக்கு ஒரே ஒரு கிழிந்து தைத்த துணியும், படுக்கக் கடைப்புறத் திண்ணையும், கடும்பசிக்கு உப்பின்றி அட்ட புற்கை உணவும் அல்லது பிறிதொன்றும் வேண்டாதவராய்க் காணப்படுகிறார்.[3] இவ்வகையில் அவாவறுத்து விளங்க வேண்டும் என்பது வற்புறுத்தப்படுகிறது. இவ்வாறு சமய வாழ்வை மலர்விக்கும் ஒழுக்கங்கள் அடிகளால் உணர்த்தப்பட்டுள்ளன.

தாம் மேற்கொண்டொழுகிய சைவ சித்தாந்தத்தில் இறைவன், உயிர்கள், உலகம் என்ற முப்பொருள்கள் பற்றிய கருத்துக்களையும், உயிர்களுக்கு இறைவன் அருள் வழங்கும் முறைகளையும் நன்கு புலப்படுத்தி, அடியவர்களின் இயல்பையும் சிறப்பையும் உணர்த்தி, வழிபாட்டு முறைகளை உணரும்படி செய்து, சமய ஒழுக்கங்களையும் தெளிவுறுத்தியுள்ள அடிகள், தாம் பெற்ற இறையனுபவங்களுக்கு இவையனைத்தும் அடிப்படையாக அமைந்துள்ளவாற்றை வலியுறுத்தியுள்ளனர் எனலாம்.

---

1. 475 2. 291 3. 457:24-37

இயல் – 5
அடிகளின் இறையனுபவம்

இறைவனின் அடியார்கள் தரும் சான்றுகளை நாம் என்றும் ஒதுக்கித் தள்ளிவிட இயலாது. ஒருமையாளர்களின் உண்மையான அனுபவத்தினை நம்ப இயலாதென்றும், நமது புலனறிவை மட்டுமே நாம் நம்புவது சரி என்றும் கூறுவது தர்க்க நெறிக்கு ஒவ்வாததாகும். பொருள்களும் உயிர்களும் நமக்கு எவ்வளவு உண்மையாக இருக்கின்றனவோ, அவ்வளவு உண்மையாய் ஒருமையாளர்களுக்கு இறைவன் இருக்கின்றான். சுவாமி விவேகானந்தர் கல்லூரிப் படிப்பை முடித்த ஓர் இளைஞராய் இருந்த போது ஸ்ரீராமகிருஷ்ணரைப் பார்த்து (இவரே பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தருடைய குருவாய் விளங்கினார்) முதன் முதற் கேட்ட கேள்வி, நீங்கள் கடவுளைப் பார்த்ததுண்டா? என்பதாகும். அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர், நான் இறைவனைப் பார்த்திருக்கிறேன். உன்னை நான் பார்ப்பது எவ்வளவு உண்மையோ, அதைவிட உண்மையானது நான் இறைவனைப் பார்ப்பது. வேண்டுமானால் உனக்கு நான் இறைவனைக் காட்ட இயலும் என்று பதில் கூறினார். பத்தர்கள் கடவுளைப் பற்றிக் கூறும் சான்று இத்தகைய உறுதியுடையதாகும். விருப்பு வெறுப்பற்ற ஒருவனுக்குப் பச்சிலையோ, அல்லது கதிரவனோ எத்துணை மெய்யாயிருக்கிறதோ, அத்துணை மெய்யானது அடியார்களுக்கு இறையனுபவம்.[1] இவ்வாறு அடியவர்களின் இறையனுபவம் குறித்து டாக்டர் டி.எம்.பி. மகாதேவன் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

சமய அனுபவம் எல்லா உரிமைகளும் வாய்க்கப் பெற்ற ஓர் அரசு போன்றது; தனக்குத் தானே நற்சான்று பகரும் தன்மையுடையது என்று டாக்டர் எஸ். இராதாகிருட்டினன் கூறியுள்ளார்.[2]

நம்மவர்களே வாருங்கள்: மன்றுடையான் வார்கழல் கண்டு உய்தி பெறுங்கள்; இதைவிட உறுதி பிறிதில்லை; இது மெய்ம் மொழி; என் மொழி பிழையாதாகும்; பிற்காலத்தில் உங்கட்குப் பெரும் பயன்

---

1. இந்து சமயத் தத்துவம், டி.எம்.பி. மகாதேவன் – தமிழாக்கம் ஞா. இராஜாபகதூர் பக்.5
2. "It is sovereign in its own rights and carries its own credentials" An Idealist View of Life, by Dr. S. Radhakrishnan, P. 92.

தரும் என்று[1] உறுதியாகக் கூறும் தகுதி பெற்று விளங்கிய அடிகளின் இறையனுபவம் மேற்குறித்த விளக்கங்களுக்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்வதாகும். இறையருள் பெற்று அருளாளராய் விளங்கிய அடிகள், வாழியெம் மனனும் மணிநாவும்மே,[2] என்று தமக்குத்தாமே நற்சான்று பகரும் இறையனுபவம் வாய்க்கப்பெற்ற மேன்மையராவர். இறைவேட்கை கொண்டு அடிகள் இறையருள் பெற அலமரும் நிலைகளும், அருள் பெறுதற்கேற்பத் தம்மியல்பில் அடக்கமும், தகுதியும், நெருக்கமும் பெற்று விளங்குதலும், அருள் பெற்ற நிலையில் இன்ப அனுபவங்களும் அடிகளால் நன்கு தெளிவாக்கப்பட்டுள்ளன. இவை அடிகளின் இறையனுபவம் என்னும் இவ்வியலில் நோக்கத்தகும்.

(அ) இறையுணர்வும் வேட்கையும்

அடிகள் இறையுணர்வும் வேட்கையும் மிக்கவராய்ச் சைவ சமயத்தில் உறைத்து விளங்கியவர். பல்வேறு வகையாக உரைக்கும் பிற சமயத்தவர் சொல் வழிப்படாமல், சைவ சித்தாந்த நெறியைப் பின்பற்றி இறவா நிலைமை பெற்று இன்பம் ஆர்ந்திருக்கும் பிறவா நன்னெறியை அடிகள் வேண்டியவர்[3]. எனவே ஆதியங்கடவுளாகிய சிவனுடைய சீரடித் தொழும்புக்குத் தம்மை ஆளாக்கிக் கொண்டு அதில் நிலைத்து நிற்றலைக் காண்கிறோம். சிவனடித் தொழும்புக்கு ஒண்பொருள் கிடைக்காவிட்டாலும் அடிகள் கவலைப் படவில்லை ; சிவனைத் தவிரப் பிறிதொரு கடவுளுக்குப் பெரும்பயன் தரும் இறைமைத் தன்மை உண்டாயினும் ஆகட்டும் என்கிறார்; சிவனடியவர்க்குக் குற்றேவல் புரிந்து செம்மாப்புறுதலையே அடிகள் பெரும்பயனாகக் கருதுகிறார்.[4] ஆதிமுதல் சிவனே என்றுணர்ந்து அன்பு செயப்பெற்ற அடிகள், பேதுற்றும் பிற தெய்வங்களை வெஃகேம் என்று கூறுகிறார்.[5] அம்மையின் தாட்கமலம் சூடத்தரின் பிரமபதவி, திருமால் பதவி அடிகளால் விரும்பப்படவில்லை.[5] இந்திரனாகிக் கற்பக நிழற்கீழ் அரசு வீற்றிருக்கவோ, நான்முகனாகிப் படைப்புத் தொழில் புரிவதற்கோ, திருமாலாகி உலகம் காப்பதற்கோ அடிகள் விரும்பவில்லை; ஏனெனின் ஆரா இன்பம் என்று அவை அரும்பெயர் பெறினும் வாரா வல்வினை

---

1. 568
2. 206:37
3. 569:19-25
4. 105 : சுரிதகம்
5. 493
6. சிவ. இ. 19

வருவிப்பவையாகும் என்கிறார்.[1] கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு என்று பிற பதவிகளை வெறுத்துச் சிவனடியாரொடு கூடுதலையே விரும்பி, நரகம் புகிலும் இழிவாய்க் கருதாமல், சிவனைத் தவிரப் பிற தெய்வங்களை நினைக்காதவராய் விளங்கிய மாணிக்கவாசகர் போல்,[2] அடிகள் சிவனடித் தொழும்பில் உறைந்து நின்ற உணர்வினராகத் திகழ்கின்றார்.

பிறவித்துயரம்

வினைத் தொடர்பால் பிறவியும், பிறவித் தொடர்பால் விடலரும் வெவ்வினைத் தொடர்பும் காரணகாரியத் தொடர்ச்சியாய் ஒழிபின்றி வருதலின், இடர் பெரிதும் உடையேன் என் செய்கேன் என்செய்கேன், பாம்பினை அரைக்கசைத்த அடிகேளோ அடிகேளோ என்று உருக்கமாக அடிகள் சிவனிடம் முறையிடுகிறார்[3]. பிறவித்துயரம் போக்கி இறையருளில் திளைக்க விரும்பும் வேட்கை இவ்வகையில் மேலோங்கி நிற்றல் அறியத்தகும். இறைவன் பதமலர்களைக் காமுற்ற அடிகள் நிலவுலகில் பிறத்தலைக் காமுறவில்லை[4]. ஆயின் அடிகள் பல பிறப்புக்களில் உழன்று வருந்தியதைக் குறிப்பிடுகிறார். அன்று தொட்டு இன்றுகாறும் அலமரு பிறப்பிற்கு அஞ்சவில்லை என்றும், பெருங்கடலை நீந்திக் கடந்தவன் உப்பங்கழியைக் கடக்க அஞ்சானாதல் போல அடிகள் தாமும் எத்தனை பிறப்பு எய்தினும் அஞ்சவில்லை என்கிறார்[5]. தீரா வஞ்சத் தீப்பிறப்பு அலைப்பத் துயரால் சோர்ந்து விளங்குவதாகக் கூறுகிறார்; பிற கடவுளரைப் போல் பிறந்துழலாமையின், சிவனுக்குப் பிறவித்துயரம் அறிவரிது; எனவேதான்போலும் கருணைக் கடவுளாகிய சிவன் அருளவில்லை என்கிறார் அடிகள்[6]. பிறந்து பிறந்து பலமுறை பாலகனாகவும், குமரனாகவும், கிழவனாகவும் ஆகும் தமது நிலையை அடிகள், 'நயக்கும் என் நடனம்' என்று குறிப்பிடுகிறார்[7]. ஆசையால் பிறவியடைந்து துன்புற்று மிகவும் இளைப்புற்றதைக் கருவால் அவாய்

---

1. 569:27-35
2. திருவாசகம், திருச்சதகம், 2
3. 516
4. 491
5. 469:15-22
6. 324:17-25
7. 172

நொந்து அற மெலிந்தேற்கு[1], என்று கூறுகிறார். இங்ஙனம் பல பிறப்புக்களில் பிறந்து துன்புற்றமை புலப்படுத்தப்படுகிறது. பிறவிப் பிணியிலிருந்து விடுபட இறைவனைத் துதிப்பதே வழி என்று தேர்ந்த அடிகள்,[2] சைவ சித்தாந்த நெறியில் பிறவாமையை அருள இறைவனிடம் வேண்டுகிறார். மீண்டும் பிறப்பு அமைந்தால், அடியவர் திருவமுது உண்டு தெருவில் எறிந்த எச்சில் இலை உண்டு பவக்கடல் உழக்கும் நாயாகப் பிறந்து , இறைவனது அருளை மறவாதிருக்குமாறு பிறப்பிக்க வேண்டக் காண்கிறோம்.[3] பிறவித்துயரத்தை உணர்த்தியுள்ள அடிகள், இறைவனது அருளை மறவாது இருக்கும் பிறப்பினை அடைதலை விரும்பக் காண்கிறோம். மாசிலாமணி தேசிகரை இறைவனாகச் சிறப்பிக்கும் நிலையில் அடியவர்கள் அவர்பாற் கொண்ட பேரன்பால் இம்மை வாழ்வில் விருப்பும் மறுமை வாழ்வில் வெறுப்பும் கொள்வர் என்கிறார் அடிகள்.[4] இவ்வாறு அடியவர்கள், குருவின் வழியாக இறைவனை உணரும் பேறு வாய்த்தலைக் கருதி அத்தகைய பயன்தரும் பிறப்பினை அடிகள் வெறுக்காமல் வேண்டினர் எனலாம். புழுவாய்ப் பிறக்கினும், இறைவன் திருவடி மனத்தில் வழுவாதிருக்குமாறு வரம் தரவேண்டும் திருநாவுக்கரசரும்[5], 'பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும், மறவாமை வேண்டும்' என்று வேண்டும் காரைக்காலம்மையாரும்,[6] காட்டியுள்ள வழியில் அடிகளும் விளங்குதல் ஈண்டுக் குறிக்கத்தகும்.

இறைவனை மறவாத தன்மை

இறைவனைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்று நாவரசர் கூறுவது[7] போல், பிறவியடைந்துள்ள நிலையில் இறைவனை என்றும் மறவாமல் அவனது அருளை நினைந்திருத்தல் அடியவர் இயல்பாகும். அடிகளும் தமது நெஞ்சத்தில் இறைவனை எழுந்தருள வேண்டுகிறார். கருந்தாது குயின்ற தமது கல் நெஞ்சகத்தும் இறைவன் தமது கூத்தை வழங்க வேண்டும் என்கிறார்[8]. தமது நெஞ்சகம் அம்மையின் சிற்றிலகம் என்றால், அம்மை இறைவனோடு அங்கு இருள் மூடிக்கிடக்காமல் விளக்கிட்டிருக்க வேண்டும் என்கிறார்?[9] இறைவன் நாமங்களை நாவே இயம்புக; நெஞ்சமே ஓருக என்று

1. மீ.இ. 12
2. 604
3. 569:23-43
4. 578:26-33
5. திருநாவுக்கரசர் தேவாரம் பதிகம் 65 : 8
6. பெரிய. காரைக்காலம்மையார் . 60
7. திருநாவுக்கரசர் தேவாரம், பதிகம் 215
8. 151
9. மீ.இ. 9

அடிகள் தமக்குத் தாமே பணித்துக் கொள்கின்றனர்[1]. இறைவன் தன்மைகளை நினைக்கவும் பாடவும் செய்தலால் தமது மனத்தையும் நாவையும் வாழ்த்திக் கொள்ளவும் காண்கிறோம்[2]. இறைவனை மறவாத தன்மை இவ்வகையில் வெளிப்படுத்தப்படுகிறது. அடிகள் தமது நெஞ்சமாகிய மணவறையில், அம்மை இரு குவட்டால் சொக்கர் எண்தோள் குழையப் பொருதததையும் புலவிநலம் தருவதையும், இறைவனாகிய மணவாளன் தயவுக்குள்ளாகி வருவதையும் எப்பொழுதும் எண்ணி மகிழ்கின்றார்.[3] இவ்வாறு உள்ளத்தை இறைவனுக்கு ஆக்கிச் சொல்லும் செயலும் அதற்கேற்ப இறைவனைப் புகழவும், இறைவனை இறைஞ்சவும், முக்கரணங்களாலும் இறைவேட்கையுடையவராகத் திகழ்தலும் அறியப்படுகிறது[4]. இறைவனைக் கண்ட கண்களும், அவன் புகழ் கேட்ட செவிகளும், வணங்கும் தலைகளும், பாடும் வாய்களும் அடிகளால் வாழ்த்தப்பெறும்[5]. தம்மையும் உளப்படுத்தியே அடிகள் இங்ஙனம் வாழ்த்துகின்றமை அறியத்தகும். நாளும் இறைவனை மறவாத வேட்கையுடையராய் விளங்குதல் இவ்வகையில் தெளிவாகிறது. மனம் உருகாமலும், நெக்குடையாமலும், இறைவனைப் பருகாமலும், கண்ணரும்பாமலும், மெய்பொடிக்காமலும் இருப்பதாகத் தன் நெஞ்சை இழித்துரைக்கும் அடிகள் எதிர்மறையாக இறைவனை மறவாது வழிபடும் பத்தி நிலையைப் புலப்படுத்துதலும் ஈண்டுக் குறிக்கத்தகும்[6].

அருள் வேட்டல்

தமது உள்ளம் இறைவன் இருப்பதற்கு உரியதாகச் செம்மையுறுமாறு இறைவனே செய்து அருளவேண்டுகிறார் அடிகள். தமது உள்ளம் மிகவும் மாறுபட்டதாக இருப்பதாகவும், அதனை மெதுவாக இறைவன் தனக்குரியதாகும் வகையில் திருப்ப வேண்டும் என்றும் கூறும் அடிகள், எம் உள்ளத்தையும் உமதா, மெள்ளத் திருப்பீர் மிக,[7] என்கிறார்.

தாம் பாடும் பாமாலையைச் சுவையுடையதெனச் சூடும்படி வேண்டுகிறார். தமது சொற்றமிழ்க்குக் குற்றம் உண்டெனக் கருதின் அக்குற்றம் அம்மைக்கும் இறைவனுககும் உரிய குற்றமே என்கிறார்.[8]

---

1. 318
2. 206:35-37
3. மீ.இ. 2
4. 587:25-28
5. 490
6. 629
7. 200
8. மீ.இ.18

இருவரும் சொல்லும் பொருளுமாக இருத்தலின் இவ்வாறு கூறும் அடிகள், தமது பாமாலையைப் புனைந்து தமக்கு அருள் வழங்க வேண்டும் என்று புலப்படுத்துகின்றனர் எனலாம். விரிக்கும் சரியை இப்பாமாலை சேர்த்தது,[1] என்று தமது பாடலை அடிகள் இறையருள் பெறமுயலும் சரியை வழிபாடாகக் கூறியிருத்தலும் நினைக்கத்தகும்.

அடிகள் தம் பாநலத்தால், இறைவன் தமக்கு அருளவேண்டும் என்பதை நயமுற வேண்டுகின்றனர். பிறவி நீங்கிப் பரமானந்தம் எய்தி உயிர் பெருமிதமுறுமாறு இறைவன் கடைக்கண் அருளவேண்டும் என்கிறார்.[2] விண்மிசைப் போகிய வீடு பெறற் பொருட்டுப் பொதுவில் ஆடும் இறைவன் கழலை இறைஞ்சுவதாகக் கூறுகிறார்.[3] மும்மலம் பொதிந்த முழுமலக் குரம்பையில் செம்மாந்திருப்பது தீர்ந்து மெய்ம்மையிற் பொலிந்த வீடு பெறுதற்கு இறைவன் குஞ்சித சரணம் அஞ்சலித்து இறைஞ்சுகிறார்.[4] அன்பில்லாத கொடியவன் என்று அருளாதிருக்காமல் இறைவன் பதத்தை அருளவேண்டும் என்று கேட்கிறார் அடிகள்; அதற்கு ஓர் உவமை விளக்கமும் தருகிறார். மருந்து உண்பவன் ஒருவன் மகிழ்ந்து உண்டாலும், மற்றொருவன் அருவருப்போடு முகம் சுளித்துத் தலை நடுக்குற்றுக் கண்ணீர் சொரிய உண்டாலும் இருவருக்கும் அம்மருந்து தீப்பிணி மாற்றுதல் திண்ணம். அவ்வாறே தில்லை இறைவன், குறைபாடிருப்பினும், தமக்கும் அருளுதல் வேண்டும் என்கிறார் அடிகள்[5]. உடம்பு குலையும் காலத்தில் ஆனந்த அமுதம் மாந்தி முத்தித் திருவை முயங்கிடவும் கடவேன் கொல்லோ என்று காசி இறைவனை வேண்டக் காண்கிறோம்.[6] தமது பரிபக்குவம் இன்மையைக் கருதித் தில்லை இறைவன் அருளாவிடில், 'திருநடனம் கும்பிட்டும் ஒருவன் உய்ந்திலன்; எனவே வேதம் கூறுவது உண்மை இல்லையோ?' என்று தேவர்கள் அஞ்சுவர் என்றும், அந்நிலை ஏற்படாமல் தமக்குச் செல்கதிச் செலவு அருளவேண்டும் என்றும் அடிகள் வேண்டுகிறார்[7]. ஞானாசிரியர் சந்நிதிப்பட்ட தமக்கு அவர் கதி அருளுதல் கடன் என்று கூறக் காண்கிறோம்.[8] மாசிலாமணி தேசிகர் சம்பந்தப் பெயர் தரித்தமையால் தம்மைச் சம்பந்தம் செய்யத்தகும் என்றும், உயர்ந்த தலைவன் ஒத்தோட் புணரினும்,

1. 598
2. 320:20-24
3. 523
4. 548
5. 451:70-83
6. 637
7. 469:23:28
8. 570

இழிந்தோட் புணரினும் இழிபாகாமைபோல், தகுதி குறைந்திருப்பினும் காதலித்த தமக்கு அருளுதல் முறை என்றும் வீடருள வேண்டுகிறார் அடிகள்.[1] வாழைத் தண்டில் நெருப்புப் பற்றாதிருப்பினும், பைப்பைய மூட்டிச் சூழ்ச்சியினால் பற்றுவித்தல் போல் ஒரு சிறிதும் பருவம் இல்லாவிடிலும், பிறப்பாகிய இருளை ஓட்டி, அருள் பதியுமாறு, தவமில் பேதையாகிய தமக்கு அருள இறைஞ்சுகிறார்[2]. பக்குவம் இல்லாத நிலையில் அருளினாலும், அடாது என்று கூறுவார் யாரும் இலர் ஆதலில் அருளுதல் வேண்டும் என்கிறார்; பிறப்புத் தோறும் இருவினைப் போகமும் நுகர்வித்துப் பக்குவமில்லை என்று அருளாவிடில், அப்பணியைச் செய்தற் பொருட்டுக் குருவடிவாய் அடிக்கடி தோன்றாமல் இருப்பதற்காகவேனும் தமக்கு அருளவேண்டும் என்று நயம்பட வேண்டக் காண்கிறோம்.[3]

35 தத்துவங்களைக் கடந்த தமக்கு ஞானவல்லியை மணம் புரிவித்து முத்திச் செல்வரோடு இறவா வீட்டினில் இருத்தும்படி வேண்டக் காண்கிறோம்.[4] மானிடவடிவில் வந்துள்ள குருவாகிய இறைவன் அவனது ஞான வடிவத்தை அடிகளுக்குத் தருதல் தகும் என்று வேண்டுகிறார்[5]. இவ்வாறு முத்தி நாடடைவிக்கும் சிவஞானத்தை அடிகள் வேட்டலும் குறிக்கப்படுகிறது.[6] ஒழுக்கமுடன் இம்மைப் பிறப்பில் இருவாதனை அகற்றி, மும்மைப் பெருமலங்கள் மோசித்துப் பசு போதம் நீக்கிப் பழைய அடியாருடன் கூட்டிப் பேரின்பம் நுகரச் செய்து இறைவன் பூங்கமலக் கால் காட்டி ஆட்கொண்டு அருள வேண்டுகிறார்.[7] இவ்வாறு இறைவன் திருவடி அடைதலைக் குறிக்கோளாகக் கொண்டு அருள் வேட்டல் அறியத்தகும்.

இறைவனை அடைந்து இன்புறும் வேட்கையே இத்தகைய கூற்றுக்களில் உயிர்ப்பாக விளங்குகிறது எனலாம். பொதுவாக வேண்டுதல் என்பது, வேண்டப்படுபவரோடு நெருங்கிய தொடர்பு கொள்ளும் விழைவில் பிறப்பதாகும் என்று டபுள்யூ.பி. செல்பி என்பார் குறிக்கின்றனர்.[8] அடிகள் இவ்வகையில் இறைவனைக் கலந்து இன்புறும் விழைவுடையவராய் இறைவனருள் வேட்டுள்ளனர் என்பது தெளிவு.

1. 572:15-39
2. 581:37-44
3. 584:43-47
4. 478;23-45
5. 567
6. 566:39-44
7. 1:119-122
8. "Roughly speaking prayer like speech is born of the desire for intercourse with others" - The Psychology of Religion, W.B. Selbie, P. 207

இறைவா மன்னவர்கள் உன்னிடம் தமது தேவைகளைக் கேட்பர். நான் உன்னையே எனக்குத் தருமாறு கேட்கிறேன். என்று அன்சாரி ஆப் ஹார்ட் என்பார் கூறுவதை ஆல்டசு அக்சிலி எடுத்துரைக்கிறார்.[1] இக்கூற்றுக்கிணங்க, இறைவனையே பெறுதற்கு அடிகள் வேண்டியிருத்தல் சிறந்த வேண்டுகோளாக, மேலான இறையனுபவ நெறியை உணர்த்தி நிற்கிறது எனலாம். பிறந்து உழன்று மெலிந்த தமக்கு, இருகால் மலரையுடைய, ஐந்தருவாகி ஆலமரத்தினிடத்தே நின்ற ஒன்றாகிய சிவத்தை அருளி உதவுமாறு அம்மையிடம் வேண்டும்[2] அடிகளின் இறையருள் வேட்கை அடிப்படையாகத் திகழ்தல் குறிக்கத்தகும்.

பிரிவுத்துயரம்

இறைவனாகிய தலைவனை அடைவதற்கு விழையும் தலைவியின் நிலையில், அடிகள் பாடியுள்ள அகப்பொருள் மரபுப் பாடல்கள் விளங்குவனவாகும். இச்செய்தி முன் இயல் ஒன்றில் விளக்கப்பெற்றது.[3] தலைவியின் நிலையில் அடிகள் தமது இறையுணர்வு வேட்கையையே புலப்படுத்தியுள்ளனர் என்பது தகும். நிலவும், மன்மதனும், இசையும், மாலைப் பொழுதும், அன்றில் குரலும், தென்றல் கொழுந்தும், குயிலும், ஆன்ஏற்று மணிஓசையும் அடிகளாகிய தலைவியை வருத்துதலும், இறைவன் மாலை பெற வேட்டு நிற்றலும், தூதுவிடுத்தலும், காம வெப்பத்தால் துன்புறுதலும், பிற துயர நிலைகளும் விரிவாகப் பாடப்பட்டிருக்கக் காண்கிறோம். தலைவி தனது தலைவனைப் பிரிந்து வருந்தும் உணர்வு நிலையிலேயே இப்பாடல்கள், இறைவனை அடையும் வேட்கை மிகுதியைக் காட்டுவனவாய் அடிகளின் பிரிவுத் துயர அனுபவ விளக்கங்களாய் உள்ளன.

"அடியவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருப்பவர்களல்லர். அவர்கள் ஒவ்வொருவரும் பிரிந்து தனித்திருத்தலாகிய துயரத்தை அனுபவித்தவர்கள். ஏனெனில் இவ்வனுபவமே உயிரைத் தூய்மைப்படுத்தி இறைவனுக்குரியதாக மலரச் செய்கிறது. இத்தகைய தனித்த பிரிவு நிலைகளில் அடியவர்கள் அகப்பொருள் மரபில்

---

1. "O Lord, I, a beggar ask of Thee more than a thousand kings may ask of Thee. Each one has something he needs to ask of Thee; I have come to ask Thee to give me Thyself" - (Ansari of Heart), The Perennial Philosophy, P. 228
2. மீ.இ. 12.
3. இயல் 3. பக். 171-177 ; பார்க்க இந்நூல் பக். 185, 147-186, 266, 250

பேசுகின்றனர் என்று டாக்டர் மொ. அ. துரையரங்கனார் குறிப்பிடுகின்றனர்[1]. இந்நிலையில் அடிகள் பிரிவுத் துயரால் அடர்க்கப்பெற்றுப் பேசும் மொழிகள் உள்ளத்தை உருக்கவல்லனவாய் விளங்குகின்றன.

"குருகை விடுத்தாள் எனக்குருகே
கூறாய் சுகத்தை விடுத்தாளென்று
அருகு வளரும் சுகமேசென்று
அறையாய் நிறைநீர் தெரிந்துபால்
பருகும் அனமே அனம்விடுத்த
படிசென்று உரையாய் படிவர்உளத்து
உருகும் பசும்பொன் மதிற்காசி
உடையார் வரித்தோல் உடையார்க்கே" (691)

இவ்வாறு அடிகள் தாம் இறைவனைப் பிரிந்து துயருறும் நிலையினை உருக்கமாகக் கூறுகின்றனர். சிறந்த சாதனைகள் அனைத்தும் துயரத்தாலும் மலர்கின்றன[2]. என்னும் டாக்டர் எஸ். இராதாகிருட்டினன் கூற்றுக்கிணங்க அடிகளின் இத்தகைய பிரிவுத்துயர அனுபவங்கள் அனைத்தும் இறைவனை அடைந்து இன்புறுதலாகிய சாதனையை முடிவுப் பயனாகக் கொண்டிருப்பவை என்பது தெளிவு.

"அன்பு காரணமாகத் துன்பத்தை மேற் கொள்பவர்கள் உண்மையில் துன்புறுகிறவர்களல்லர். ஏனெனில் அனைத்துத் துன்பங்களும் அவர்களால் மறக்கப்படுகின்றன" என்கிறார் எக்கார்ட் என்பார்.[3] இவ்வகையில் இறைவன்பால் அடிகள் அனுபவிக்கும் பிரிவுத்துயர அனுபங்கள் இறைவனைப் பயனாகப் பெறும் நிலையுடையனவாதலின், அடிகள் அவற்றை விரும்பி மேற்கொண்டுள்ளனர் எனலாம்.

அவாவின்மை

"செல்வம் என்பது சிந்தையின் நிறைவே
அல்கா நல்குரவு அவாவெனப் படுமே"

---

1. "But saints are not always happy. Everyone of them has undergone the suffering of the dark chamber of separation and desolation. For it is this purgation which purifies the soul. so that it may blossom into God-head. It is in such moments of desolation that the mystics speak the language of sex" - The Religion and philosophy of Tevaram with special reference to Nampi Arurar (Sundarar). Book II, P. 1250.
2. "All great achievements are born of suffering and sacrifice" - Religion and society, Dr. S. Radhakrishnan, P. 76
3. "He who suffers for love does not suffer, for all suffering is forgot" - (Eckhart), The Perennial Philosophy, P. 237

என்று தெளிந்த அடிகள், உயிர்கள் பிறவிக்கடலில் அழுந்துமாறு ஆசையே அவற்றை அல்லலுறச் செய்கிறது என்கிறார்[1]. வறுமை என்பது ஆசையே என்பதைத் திருவள்ளுவரும் உணர்த்தியுள்ளனர்.[2] அவாவை நீக்கும்பொழுது தான் பிறவி நீங்கும் என்றும், வேண்டாமை அன்ன விழுச்செல்வம் வேறில்லை என்றும், அவா இல்லார்க்குத் துன்பம் இல்லை என்றும், அவா நீப்பின் அது பேராஇயற்கை தரும் என்றும் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.[3]

"முழுமை" பெற்ற சமயங்களில் துன்ப உணர்வுகள் மேலோங்கி விளங்கும் என்று வில்லியம் சேம்சு குறிப்பிடுகின்றார்.[4] அதற்கேற்ப அடிகளின் இறையனுபவத்தில் பிரிவுத் துன்ப உணர்வுகள் விளங்குதல் போல், அவாவும் அல்லல் தந்து விளங்குதல் உணர்த்தப்படுகிறது. அவாக்கடல் கடத்தற்கு அரும்புணை இல்லையே என்று அலமரும் அடிகள், அந்த அவாவென்னும் வறுமையிலிருந்து தம்மை நீக்கி அறிவாகிய செல்வத்தை அருளுமாறு இறைவனிடம் வேண்டுகிறார்[5] இவ்வகையில் அடிகள் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்கின்றனர் எனலாம். துயிற்சுவையும், காம விருப்பமும் உணவுச்சுவையால் வருவன என்று தெளியும் அடிகள், உணவில் பற்றின்றிப் பித்தன் உணவு உண்டல் போல் துறவோர் உண்டி சுருக்கி உண்பர் என்கிறார்.[6] இக்கருத்துக் கேற்ப அடிகளும் விளங்கியமை உணரத்தகும். அடிகள் கூறும் துறவோர் இலக்கணத்தில் சிறப்பாகப் பொருளும் இன்பமும் நீங்கியும், துன்புறத்துளங்காமல் சருகொடு காற்றையும் நீரையும் அருந்திக் கடும்பனிக் காலத்தில் குளிர் நீரில் படிந்து குளிரைப் பொறுத்தும், வேனிற்காலத்தில் நெருப்பில் நின்று வெப்பத்தைப் பொறுத்தும் விளங்குதல் வேண்டும் என்கிறார்[7]. இவ்வியல்புகள், துன்பம் பொறுத்தலும் அவாவின்மையும் தோன்ற விளங்குவனவாகும். கையில் கிடைக்கும் உணவை உண்டு வாழும் இயல்பினர் உத்தம யோகியர் என்று கூறும் அடிகள், தமக்கு அருள வேண்டும்போது தமது அவாவற்ற தன்மையை நன்கு புலப்படுத்தக் காண்கிறோம்.

---

1. 475
2. குறள். 1043 3. குறள். 361 – 370 (அவாவறுத்தல்)
4. "The completest religions would therefore seem to be those in which the pessimistic elements are best developed" - Varieties of Religious Experiences, William James, P. 162
5. 475
6. 291
7. 441:31 – 46

பெருங் குளிருக்கு உடைந்தகாலை, அழுக்கடைந்த கரிய துணிகள் பல தொடுத்து மூட்டிய ஒரு துணி தவிரப் பிறிதொன்று கிடைக்கக் கூடாது; படுப்பதற்குப் பாழடைந்த வீட்டின் வாயிற் புறத்திண்ணை தவிர வேறு இடம் இருக்கக்கூடாது; கடும்பசியைப் போக்க உப்பின்றிச் சமைத்த புல்லரிசிக் கூழைத் தவிர வாய்விட்டு அரற்றினாலும் வேறு உணவு யாரும் கொடுக்கக்கூடாது; ஒழுக்கம் மிக்க அடியர் குழாத்தோடு விளங்கச் செய்து, இவ்வகையில் உடல் நீங்குமளவு உதவ வேண்டும்; இறைவனின் பெரும்பாதம் தவிரப் பிறிதொன்று இரந்து வேண்டினாலும் ஈயக்கூடாது[1]. என்று அடிகள் வேண்டும்போது துன்ப நாட்டமும் அவாவின்மையும் வேண்டக் காண்கிறோம். இந்நிலை எய்துதல் அரிய நிலையாகும்.

> "எவ்வளவு நலமுடையதாயினும், ஏதேனும் ஒன்றன்மீது உயிர் பற்றுதல் கொள்ளுமாயின் இறைவனை அடைதல் அரிதாகும். வலிய கம்பியாயினும், மெல்லிய நூலாயினும் பறவையைச் சுற்றிப் பற்றிக் கொள்ளுமாயின், அத்தடை விடுபடும் வரையில் பறவை பறத்தல் இயலாது. அவ்வாறே உயிரும் ஆசையாகிய பற்றுள் அகப்படுமாயின், அவ்வாசை எவ்வளவு சிறியதாய் இருப்பினும், அஃது இருக்கும் வரையில் இறைவனை அடைய இயலாது."

என்கிறார், ஜான் ஆப்தி கிராஸ்[2].

அடிகள் இவ்வகையில் புலனடக்கிப் பற்றற்று நிற்கும் தகுதி நிலையே மேற்குறித்த வேண்டுகோளில் புலப்படுதல் அறியத்தகும். இறைவேட்கை உணர்வு அடிகளை இவ்வாறு பக்குவப்படுத்தியுள்ளது எனலாம்.

வேண்டும் நலங்கள்

அவாவறுத்து நிற்றல் இறையனுபவத்துக்கு அடிப்படை இயல்பாக, அடிகளிடம் காணப்பெறுமாயினும், அப்பயனைத் தரும் வகையில் அமையும் நலங்களைத் தமக்கு அருளுமாறு அடிகள் வேண்டியுள்ளனர்; உலகியல் துன்பங்களிலிருந்து காக்கவும் வேண்டுகின்றனர்.

---

1. 457 : 5, 25-37
2. "The soul that is attached to anything, however much good there may be in it, will not arrive at the liberty of divine union. For whether it be a strong wire rope or a slender and delicate thread that holds the bird,it matters not, if it really holds fast; for, until the cord be broken, the bird cannot fly. So the soul, held by the bonds of human affections, however slight they may be, cannot, while they last, makeits way to God" -St. John of the cross - as quoted in "The Perennial Philosophy;

ஆசு முதல் நாற்கவியும், அட்டாவதானமும், பல்காப்பியத் தொகையும் ஐந்திலக்கணமும் தோய்ந்து பழுத்த தமிழ்ப் புலமையும் பாலிக்க வேண்டுகிறார் அடிகள்.[1] இவ்வாறு சொற்சுவை, பொருட்சுவை மிக்க கவிவன்மையும், அளிக்கும் செந்தமிழ்த் தெள்ளமுது ஆரும் வேட்கையும், கல்வியறிவும், வாக்கு வன்மையும், இயலிசை நாடகத்திறனும், பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும், சொல் விற்பனமும், மன்னரையும் பணியச் செய்யும் கவியாற்றலும் அடிகளால் வேண்டப்படுகின்றன.[2] கடவுள் மறையும், பசுந்தமிழும் நாற முருகனிடம் முத்தம் வேண்டுகிறார்.[3] இறைநலம் கனியும் தமது இலக்கியங்கள் இனிது நிறைவுற விநாயகரை வேண்டுகிறார்.[4] இவ்வேண்டுகோள் யாவும் அடிகளின் தமிழ் வேட்கையை உணர்த்தி நிற்பன எனலாம். தமிழ் மொழியைத் தெய்வத் தன்மையுடையதாகக் கண்டதாலும், தாம் மேற்கொண்ட சமய வாழ்வில் இறைவனோடு தொடர்பு கொள்ளத் தமிழே கருவியாக அமைந்ததாலும் தமிழ் வேட்கை அடிகளுக்கு மிக்கிருந்தது எனலாம்.

துன்பங்களிலிருந்து காக்க வேண்டுதலும் இறை உணர்வில் உறைத்து நிற்றற்கேயாகும். பல்கோடி சன்மப் பகையும், அகால இறப்பும், பல்கோடி விக்கினமும், பல்பிணியும், பல்கோடி பாதகமும், செய்வினையும், பாம்பும், பசாசும், அடல் பூதமும், தீயும், நீரும், பொருபடையும், கொடிய நஞ்சும், கொடிய விலங்குகளும் எவ்விடத்தில் வந்து எதிர்த்தாலும் அவ்விடத்தில் முருகன் காட்சியளித்து இடுக்கண் எல்லாம் பொடிபடுத்தி அருளவேண்டும் என்கிறார் அடிகள்.[5]

அடிகள் பூண்டிருந்த பிறிதொரு விருப்பம், உடல் விடும்போது கங்கைத் துறையாகிய மணிகர்ணிகைத் துறையில் பேணுமாறு பெற வேண்டும் என்பது.[6] மெய்விட்டு உயிர் பிரியும்போது, முருகனும் விநாயகரும் அழுக்காறு கொள்ளுமாறு, அம்மை மடியில் இருத்தி முன்றானையால் வீசி மோகமும் தளர்ச்சியும் தாகமும் தணிப்ப,

---

1. 1:118-119
2. 701-703, 705-707, 709
3. 393
4. 2,104,308,349,450,565 மீ.கு.காப்பு

இறைவன் பிரணவ மந்திரத்தைச் செவியில் உரைத்தருளிக் குஞ்சித அடிக்கீழ்க் குடியிருக்கச் செய்ய வேண்டும் என்றும் விளக்கமாக உரைக்கின்றார்.[1] காசித் தலத்துக்குரிய சிறப்புக்கேற்ப இவ்விருப்பம் அடிகட்கு அமைந்ததெனலாம். இதைக் குறித்துக் கா.சு.பிள்ளை அவர்கள் எழுதுவது ஈண்டுக் குறிக்கத்தகும்.

"இறக்குங்காலை, சிறந்ததொன்றை நினைப்பின், அது வரும் பிறவிக்கு நன்மை பயக்குமாதலின், எல்லா மந்திரங்களிலுஞ் சிறந்த பிரணவத்தை இறக்குங்காற் கேட்டலும் ஓதலும் நன்றென்ற கருத்துப் பற்றியே, பிரணவ வடிவாயுள்ள சங்கினொலியை இறந்த நாட்கடனியற்றுங்காலை, முழக்குவது சைவருள் வழக்கமாயிற்றுப் போலும். காசியின் நகர வடிவே பிரணவ வடிவமென்பதையும் அப்பிரணவத்தின் உட்பொருளாகக் காசி நடுவில் விசுவேசர் வீற்றிருப்பதையும், காசியிலிறக்குமுயிர்கள் நினைப்பதியல்பாகலின் அங்ஙனம் நினைப்பாருடைய உள்ளக் கண்ணிற்குப் பிரணவ வடிவமும், அவர்கள் அகச் செவிக்குப் பிரணவ வொலியும், அவர்கட்குப் பிரணவப் பொருளாய் முதல்வன் தோற்றமும் நிகழ்தல் இயல்வதொன்றே. காசியிலிறப்பார் பிரணவத் தியானமுடையராதல் வேண்டுமென்பதே இந்த ஐதிகம் நமக்கு அறிவுறுத்துமென்று தெளிக[2].

குற்றேவலுக்கு ஆகின்ற அகம்படிமைக்குடியாக முருகன் தம்மைக் கொள்ள வேண்டும் என்று விழையும் மகளிர் விருப்பம்[3] அடிகட்கும் உரியதே எனலாம். இறையுணர்வு வேட்கையே இவ்விருப்பங்களுக்கெல்லாம் காரணமாயிருத்தல் உணரத்தகும். காலந்தாழ்த்தாது இறையருள் வழங்கவேண்டும் என்றும் அடிகள் தமது தண்டா வேட்கையைப் புலப்படுத்துகின்றனர்;

> 'சரியையின் தாழ்க்கலை கிரியையில் பணிக்கலை
> யோகத்து உய்க்கலை பாகமும் நோக்கலை
> நாளைஇன்று எனஒரு வேளையும் நவிற்றலை
> ஈண்டெனக்கு அருளுதி இறைவ' (593 : 41 - 44)

இவ்வாறு அடிகளின் இறையுணர்வும் வேட்கையும் அளப்பரிய தன்மையில் விளங்குதல் தெளிவாகிறது.

---

1. 636, 27 - 40
2. குமரகுருபரஅடிகள் வரலாறு பக். 65-66
3. 428

(அ) அடக்கமும் தகுதியும்

"உண்மையான அடக்கம் என்பது பேராற்றலுடைய இறைவனிடத்தில் அடங்கி இருப்பதாகுமேயன்றிப் பிறவற்றினிடத்தில் அடங்கி இருப்பதன்று. இறைவனுக்கு முன்னால் இயன்றவரை பயபத்தியோடும், குழந்தைபோலவும் கீழ்ப்படிந்து இருத்தல் வேண்டும். உலகியலில், மக்கட்கு முன்னால் வலிமையுடனும், உரத்துடனும், விரும்பியாங்குத் தன்னம்பிக்கையுடனும் இருக்கலாம்."[1]

"மிகவும் அடக்கமானவர்களே மிகவும் சிறந்தவர்கள். மிகவும் செருக்குடையவர்களே மிகவும் இழிந்தவர்கள். உண்மையான ஞானியர் எப்பொழுதும் அடக்கமாகவும், தம்மை மேலாக மதிக்காமலும் விளங்குதலோடு பிறரிடம் மிக எளிமையாகவும் பழகுவர். தம் மனத்திலும் இயல்பிலும் அமைதி நிலவச் செய்து குழந்தைகள் போல் ஆகி, உள்ளே விளங்கும் பரம்பொருளை ஒளிரும்படி செய்வதால் ஞானியர்க்கு இந்நிலை அமைகின்றது."[2]

இவ்வாறு பால் பிரண்டன் என்பார் விளக்குகின்றனர். 'பணியுமாம் என்றும் பெருமை, சிறுமை அணியுமாம் தன்னை வியந்து'[3] என்று திருவள்ளுவர் தெளிவாக்குகின்றனர்.

அடிகள் இவ்விளக்கங்கட்கு எடுத்துக் காட்டாக அடக்கமும் பண்பும் தகுதியும் உடையவராய் இறையருள் பெறுவதற்குரிய இயல்பினராய்த் திகழ்ந்துள்ளனர். சிங்கத்தில் ஏறிச் சென்றமை, பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கையில் ஏந்தினமை, சித்துக்கள் புரிந்தமை முதலிய பல அற்புத நிகழ்ச்சிகளால் மக்கட்கு முன்னால் தம் வலிமையும், உரமும், தகுதியும் புலப்படுமாறு விளங்கியுள்ள அடிகள்[4], தம்மை மிக அடக்கமாகவும் இழிவாகவும் கூறிக் கொள்ளும் பெருமையராய்ப் பிறங்குகின்றார்.

பணியுமாம் என்றும் பெருமை

அடிகள் பல நிலைகளிலும் தம்மைப் பணிவாகக் கூறிக் கொள்கின்றனர். தெய்வத் தமிழில் சொன்னலமும் பொருள் நலமும்

---

1. True humility means that you are humble towards the higher power of the Spirit, but towards nothing else. You have to be a submissive, as reverent, and as child-like as possible towards divinity, but towards the world at large, and towards humanity at large, you may be as strong and as bold and as self-reliant as you wish"- 'The Inner reality', Paul Brunton, P. 79

2. "The greatest men are the humblest. The smallest are the most arrogant. Real sages are always modest, claiming no superiority, and they always put you at your ease. This is because they have silenced the personal self and become as children, allowing That which is behind to manifest" - I bid. P. 250

3. குறள். 978 4. பார்க்க இந்நூல் பக். 49 - 56

சிறக்கப் பாடியுள்ள தமது பாடல்களைச் 'சிறியவெனது புன்மொழி' என்று அடக்கமாக் குறிப்பிடுகின்றனர். 'என் பொருளில் புன்மொழி'[2] என்றும், 'என்புன்மொழிக் கடு'[3] என்றும் தமது மொழிகளை இழிவாகக் கூறிக்கொள்கின்றனர். வேம்பும் கடுவும் தேம்பிழியாக இறைவனது செஞ்செவி கைப்பத் தாம் மொழிந்ததையும் இறைவன் அஞ்செவி மடுத்து அளித்ததையும் கூறித் தம் சிறுமையும் இறைவன் பெருமையும் தோன்ற உணர்த்துகின்றனர்[4]. ஒண்மலரைவிடச் சொன்மலர் சிறந்திருப்பதைச் சுந்தரர் வரலாற்றால் கூறும் அடிகள்,[5] ஈண்டுத் தமது மொழிகளை இழிவாகக் கூறிக் கொள்தல் அடிகளின் பணிவை நன்கு உணர்த்தி நிற்கிறது. 'சிலகலையும் உணராதவராகத் தம்மை அழைத்துக் கொள்ளுதலும் குறிக்கத்தகும்[6].

அம்மையை விளிக்கும் போது, சிறியேம் பெற்ற பெரும் பேறே[7], என்கிறார். தம்மைச் சிறியவராகக் கூறிக் கொள்வது அடிகளின் பெருமையைக் காட்டுவதாகும். இறையடித் தொழும்பர்கள் சார்பு பெற்றுய்ந்ததாகவும், சிறிய தமக்கு உண்மையில் அடித்தொழும்பின் நிலைமை இல்லை என்றும் அடியவர் பெருமை தோன்றத் தம்மைப் பணிவாகக் கூறிக் கொள்ளக் காண்கிறோம்.[8]

இழித்துரைத்துக் கொள்தல்

அடிகள் தாம் இறைவனைப் பரவாமையை இறைவன் உணராதவனாய் உள்ளான் என்கிறார்.[9] தம்மிடம் உள்ள குற்றம் பலவும் பொறுத்து இறைவன் ஆட்கொண்டதாகக் கூறுகிறார்[10]. இவ்வாறு தம்மிடம் குறைபாடு இருப்பதாகக் கூறிக் கொள்ளும் மேன்மை குறிக்கத் தக்கதாகும். தம் நெஞ்சைப் 'பேதை நெஞ்சே' என்றும் 'வன்னெச்சம்' என்றும் கூறக் காண்கிறோம்[11]. தம்மைத் 'தவமில் பேதையேன்' என்று கூறிக் கொள்கிறார்; மாணிக்கவாசகர் ஊமைப் பெண்ணைப் பேச வைத்த வியப்புப் போல, வாழைத் தண்டில் சூழ்ச்சியினால் நெருப்புப் பற்றவைத்தாலெனத் தகுதியில்லாத தவமில் பேதையாகிய தமக்கு அருள வேண்டுகிறார்.[12] ஊமைப் பெண் போலவும், வாழைத்தண்டு போலவும் இங்கு அடிகள் தமது நிலையையே, அறிவும் தகுதியும்

---

1. 4:1 2. 312:26-27 3. 600: கரிதகம் 4. 699:19-22
5. 338 6. 547: தாழிசை 6 7. 458. 8. 324:13-15 9. 142
10. 629, மீ.இ. 20 11. 581:31-43 12. 593:37

இல்லாதவர்போல் பணிவாகக் குறிப்பதில் விருப்பம் கொண்டுள்ளனர் என்று கருதுதல் தகும். நன்னெறிப் படரா நலமிலி[1] என்றும் இழித்துரைத்துக் கொள்கின்றனர். யானே புலனும் நலனும் இலன்[2] என்று, தமக்கு அறிவும் நற்குண நற்செய்கைகளும் இல்லை என்று தாழ்த்திக் கொள்கிறார். தவ வேடத்தை உடம்பில் தாங்கி, வஞ்சனைமிக்க தீய ஒழுக்கத்தை உள்ளே பொதிந்து வைத்திருப்பவராகவும், தவப்பெருந் தொண்டரொடு பயின்ற நிலையில் அவர்கள் இவருடைய வேடத்தை இறைவனாகவே நினைத்து நோக்கிய பாவனை முற்றியதால் அருட்பயன் பெற்றவராகவும் தமது நிலையை விளக்குகிறார்[3]. அடியவர் பெருமையும் இறையருளும் விளங்கும் முறையில் தம்மை இங்ஙனம் இழிவுறக் கூறிக் கொள்கின்றனர்.

வாத, பித்த, சிலேத்துமத் தொடர்புடைய புளிப்பு, கசப்பு, இனிப்பு முதலியவற்றை நாச்சுவை அறிய உண்டு, கழிபெருங் காமத்தில் மூழ்கிப் பாவமும் பழியும் மேவியிருப்பதாக உரைக்கிறார். செம்பொருளை உணர்ந்து, சிற்றறிவு நீங்கி, ஐம்புலன் அடக்கி, அற வழியில் நின்று, தீ நெறி விலக்கி, நன்னெறிப் படர்வதற்கு வன்மை இல்லாத இழுதையன் என்று கூறிக் கொள்கிறார்[4]. சிற்றறிவும், சில்வாழ்நாளும், குறையாத பல்பிணியும் உடையவராய்ப் பொய்யுடல் சுமக்கும் புன்மையாளராகிய தாம், தெளிவில்லாத கேள்வியாலும் சில நூல்களை ஓதியும் இறைவன் நிலையை எப்படி அளக்க முடியும் என்று தம் மாட்டாமையைப் புலப்படுத்துகின்றார்[5].

பொன்னிறப் புறாவும், கருநிறக் காக்கையும் இமயப் பொருப்பகஞ் சேர்ந்துழி வேறுபாடின்றி ஒரே பொன் நிறம் பெற்று விளங்குதல் போல் தவப்பெருந் தொண்டர்க்கும் தமக்கும் வேற்றுமை இல்லாத நிலையில் தமக்கும் இறையருள் கிடைத்ததாக விளக்குகிறார்[6]. தமது நிலைக்குக் கருநிறக் காக்கையை ஒப்பிட்டு உணர்த்தியிருத்தல் ஈண்டுக் கருதத்தகும். இனம் ஒக்கும் தொண்டரோடு தம்மையும் இறைவன் ஆட்கொண்டதைப் பணிவோடு கூறுகிறார்[7]. எல்லாம் குருவருட் செயலாயினும், தம் செயலாகக் கருதிச் செய்யும் 'நான்' என்னும்

---

1. 502
2. 460:1-14
3. 457: 6-16
4. 466:24-28
5. 454
6. 462
7. 563

செருக்குத் தம்மிடம் இருப்பதாகத் தம்மைக் குறை கூறிக்கொள்கிறார்.[1] சிவோகம்பாவனை இல்லாத தமக்குக் குருவருள் கிடைத்ததாகக் கூறுகிறார்[2]. இவ்வாறு கூறுவன யாவும் அடிகள் தம் இயல்பை இழித்துக் கூறிக் கொள்ளும் முறையிலும், இறையருளைத் தெளிவாக்கும் முறையிலும் விளங்குகின்றன.

குற்றமுடையோர் போலவும், தகுதியில்லாத இழிந்த இயல்புடையோர் போலவும் தாழ்த்திக் கூறிக் கொள்ளும் தன்மை அடியவர்களிடம் விளங்குதல், அவர்களுக்கு அமைந்துள்ள இறை வேட்கையைப் புலப்படுத்துவதாகும். இவ்வாறு அவர்கள் கூறிக்கொள்ளும் செய்திகள் அனைத்தும் அவர்களிடம் உண்மையில் விளங்கியவை என்று கருதுதல் தகாது. பொதுவாக உயிர்களிடத்துக் காணப்படும் குறைபாடுகளை அடியவர்கள் தம்மீது ஏற்றிக் கூறுகின்றனர் என்ற முறையிலேயே இவற்றை நோக்குதல் தகும்.

குற்றமுடையோம், தகுதியுடையரல்லோம் என்று கருதும் உணர்வு, இறைவன் இருப்பினைத் தெளிவாக மனத்தில் உணரும் நிலையினைப் புலப்படுத்துவதாகும். இது சிறப்பான சமய அனுபவ வெளிப்பாடெனலாம் என்று டபுள்யூ.பி.செல்பி என்பார் குறிப்பிடுகின்றனர்.[3] அடிகள் தம்மை இழிவாகக் கூறிக் கொள்ளும் நிலைகள் அனைத்தும், இவ்வகையில், இறைவனை அடையும் தகுதி நிலையினை அவர் பெற்றுள்ளமையை உணர்த்தி நிற்கின்றன என்பது தகும். மகளிர்மாட்டு அழிந்த நெஞ்சம், இறைவன் கழலிறைஞ்சாமல் வீணே இறந்துவிடுதல் என்கொல்? என்று அடிகள் தமது நெஞ்சை நோக்கிக் கூறுவதும்,[4] இறைவனுடைய கருணை பொழியும் திருநோக்கில் கனியாத தம் நெஞ்சம் மகளிர் காமஞ்சால் கடை நோக்கில் கரைந்துருகுகின்றது என்பதும்,[5] உடம்பின் மீது கொண்ட பற்றால் மறைப்புண்டு விளங்குவதாகக் கூறுவதும் [6] உயிர்களின் பொதுவியல்பைத் தம்மீது ஏற்றிக் கூறிக் கொள்வனவாகவே கருதத்தகும்.

---

1. 577
2. "Another important manifestation of individual religious experience is to be found in the sense of sin and unworthiness which generally accompanies a vivid conciousness of the presence of God" - The Psychology of Religion, W.B. Selbie. P. 144
3. 514 4. 540
5. 547 : தாழிசை 4

அடிகளின் தகுதி

தம்மை உயர்த்திப் பேசிக் கொள்ளுதல் இறையடியவர்களிடத்தில் காண்டல் அரிது. தோன்றா தோற்றித் துறை பல முடிப்பினும் தான் தற்புகழ்தல் தகுதியன்று.[1] இதற்கு மாறாகத் தம்மைத் தாழ்த்திக் கூறிக் கொள்ளுதல் உண்மையில் தகுதியை உணர்த்தும் நிலையாகக் கொள்ளத்தகும். தமக்குத் தகுதி இல்லை என்று நினைத்து ஏங்கும் உணர்வு அடிகளிடம் காணப்படுகிறது. நாவுண்டு; நெஞ்சுண்டு; நற்றமிழுண்டு; விருப்பமான பாக்களும் பாவினங்களும் உண்டு; இறைவனும் உண்டு; அம்மையின் தாள்கள் ஆகிய பூ உண்டு; ஆயின் தொடுத்துப் புனைவதற்கு அன்பாகிய நார் இல்லை[2] என்று வருந்துகிறார் அடிகள். அன்பாகிய தகுதி இல்லையே என்று கருதுவதே அன்பினை உணர்த்தும் வாயிலாகவும், தகுதியைத் தெளிவாக்கும் சான்றாகவும் விளங்குகிறது எனலாம்.

மணியே, பச்சை மாணிக்கமே, மருந்தே என்று அம்மையைப் பணியவில்லை என்றும், பணிந்தவர் பாலும் செல்லவில்லை என்றும், அவர்பால் செல்லத் துணியவுமில்லை என்றும், மாறாகத் தீச்செயல் செய்யத் துணிந்ததை என்னென்று உரைப்பேன் என்றும் இரங்குகிறார் அடிகள்,[3] அம்மையைப் பணியாமல் தீச்செயல் புரிந்து விளங்கியதாகத் தம்மையே நொந்து கொள்ளும் நிலையாக இது விளங்குகிறது. இந்நிலையே அடிகளின் தகுதியை உணர்த்தி நிற்கிறது என்பதில் ஐயமில்லை.

தம் புகழைத் தாமே புகழ்ந்து கூறாமல் இருப்பதுதான் உண்மையில் புகழாகும்; இன்பத்தை விரும்பாமல் இருப்பதே உண்மையில் இன்பமாகும்,[4] என்று அடிகள் கூறும் நீதிக்கு அடிகளே எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றனர், தம்மைப் புகழ்ந்துரைத்துக் கொள்ளாமல், குறைபாடுகளையும் தகுதியின்மையையும் கூறும் இயல்பால், தம் புகழுக்குரிய தகுதி நிலையை அடிகள் உணர வைத்துள்ளார்; இறை வேட்கையைத் தெளிவாக்கியுள்ளனர்.

---

1. நன்னூல் 52
2. மீ.இ. 16
3. மீ.இ. 14
4. 224

இறைநெருக்கம்

இறைவனை நெருங்கிய உறவு முறையில் கண்டு அனுபவித்த தகுதியுடையவராய் அடிகள் விளங்குகின்றனர். இறைவனை 'எம் ஐயன்'[1] என்றும், 'எந்தை'[2] என்றும் 'எம்கோன்'[3] என்றும் 'எங்கோமான்'[4] என்றும், 'எம்பிரான்'[5] என்றும் அழைக்கின்றார் அடிகள். தமக்குத் தந்தையாகவும், அரசனாகவும், தலைவனாகவும் இறைவனை இவ்வாறு புலப்படுத்தியுள்ளார். இறைவனையும் அம்மையையும் 'எந்தாய்'[6] என்றும், 'எம் அன்னையாய்த் தந்தையாய் இருந்தார்'[7] என்றும் குறிப்பிடுகிறார். 'எம் உயிராம் விமலன்'[8] என்று சிவனையும், 'என்னுயிர்க்கு ஒக்கும் இளஞ்சேய்'[9] என்று முருகனையும், 'எம் ஆருயிராம் எழில் மாசிலாமணி'[10] என்று தமது குருவையும் அடிகள் குறிப்பிடுகின்றனர். இறைவனே தமக்கு உயிராக இருப்பதாக இவ்வகையில் தெளிவுறுத்துகின்றனர். உயிரைத் தனியே கண்டறியாததால், 'எனது உயிர்' என்று வழங்கும் வழக்கு ஏற்பட்டது என்பர்; அன்றியும் 'எனது உயிர்' என்றபோது உயிர் என்ற சொல் உயிரைக் குறியாது; அதனோடியையுடைய பிறிதொன்றைக் குறித்தலுமுண்டு என்பர்[11]. ஈண்டு அடிகள் இறைவனை உயிராகக் கூறுதல் இறைவனைக் கண்ட குறிப்பினால் போலும் எனக் கருதலாம்.

அம்புலியை விளையாட அழைத்தபோது அவன் வரவில்லை என்று அம்மை சினங்கொள்ளவும், அடிகள் அந்நிலையில் அம்மையின் முகச்செவ்விக்குத் தோற்றோ, பாம்புகள் கோள் இழைக்கும் என்று அஞ்சியோ அவன் தாழ்த்திருந்தனன் போலும் எனத் தாம் ஒருவாறு அம்புலியைத் தப்புவித்ததாகக் கூறுகிறார். 'யாம் இத்துணையும் ஒருவாறு தப்புவித்தேம்'[12] என்று அடிகள் தம்மையும் இணைத்துக் கூறியுள்ளமை ஈண்டு நினைக்கத்தகும். அம்மையிடம் அடிகள் கொண்டுள்ள நெருக்கம் இவ்வகையில் உரைக்கப்பட்டுள்ளது எனலாம்.

இவ்வாறு அடிகளிடம் விளங்கும் பணிவும், தம்மைத் தாழ்த்திக் கூறிக் கொள்ளும் தகவும், அவ்வகையில் உணர்த்தப்படும் தகுதியும், நெருக்கமும் இறையருள் பெறுதற்குரிய பக்குவம் பெற்ற தன்மையாகிய

1. 3: 2, 4: 3, 352: 4, 416:4
2. 54: 2, 64:2, 79:2, 352:2, 482, 547: தாழிசை 3.
3. 2:1 4. 486, 504 5. 37 : 2 6. 553, 369 7. 633, 8. 530
9. 326 10. 573 11. சித்தியார், சூ. 4:27 க.சு. பிள்ளை உரை பக். 96
12. 72.

அடிகளின் இறையனுபவ நிலையினை உணர்த்தி நிற்றல் அறியத்தகும்.

(இ) அருள் அனுபவங்கள்

இறையருள் பெற்ற மேலான அனுபவங்கள் அடிகளால் உணர்த்தப்பட்டுள்ளன. அடிகளிடம் விளங்கிய இறையுணர்வும் வேட்கையும், அடக்கமும், தகுதியும், இறைவனை அடைந்து இன்புறும் உயரிய அருளனுபவங்களை அடிகளுக்கு நல்கின என்று கூறலாம். இறைவனை நேரிடையாக உணர்ந்து அனுபவிக்கும் அடியவர்களின் அனுபவங்கள் விளக்கிக் கூற முடியாதவை; அறிவுக்கும் மனத்துக்கும் உரிய நுட்பம் பொருந்தியவை; குறைவான கால அளவில் நிகழ்ந்து விளங்குபவை; எதிர்ப்புச் செயலற்றவை என்று விளக்கப் பெறுகின்றன.[1] இவ்வகையில் அடிகள் எய்திய இறையனுபவங்கள அடிகளின் சிறப்பினைப் புலப்படுத்துவனவாய்த் திகழ்கின்றன.

நெஞ்சக் கோவிலில் இறைக் காட்சி

"உள்ளம் பெருங் கோவில் ஊனுடம்பு ஆலயம், வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்" என்பர் திருமூலர்.[2] இறைவனை மறவாத நெஞ்சினராகிய அடிகளின் உள்ளத்தில் இறைவன் விரும்பி அதனையே கோயிலாகக் கொண்டு வீற்றிருந்தமையை நன்கு அனுபவித்தவர் அடிகள். அதனை மகிழ்வோடு எடுத்துரைக்கின்றார். திருக்கோயிலெனத் தம் நெஞ்சமாகிய தாமரையில் அம்மை விளங்குவதாகக் குறிப்பிடக் காண்கிறோம்.[3] அம்மைக்குக் கற்பகத்தால் நிரைக்கும் பொற்கோயில் மதுரையும், தன் நெஞ்சமுமே என்றும்,[4] அம்மைக்கு அடிகளின் நெஞ்சே திருக்கோயில் என்றும்,[5] 'பூத்த என் இதய புண்டரிக மலரில் எந்தையொடும் இனிதமர்ந்த செல்வி,[6] என்றும் 'சீர்பூத்த செல்வத் திருத்தில்லை மன்றகம் என் கார்பூத்த நெஞ்சகமாகக் கைக்கொண்டாள்[7] என்றும் அம்மை தம் உள்ளத்தில் விளங்குதலை அடிகள் அனுபவித்து மொழிகின்றனர். தமது வன்னெஞ்சக் கஞ்சத்தில் ஐயனொடும் அம்மை குடிபுகுந்தமை வியப்புக்குரியது என்று கூறுகிறார்[8].

---

1. Mystical group 1. Ineffability 2. Noetic quality 3. Transiency 4. Passivity - The varieties of Religious experience, William James, PP. 371 - 372
2. திருமந்திரம். 1823 3. 54 4. மீ.இ. 10
5. மீ.இ.11 6. 352:2 7. சிவ.இ. 1 8. மீ.இ. 20

முருகன் எமர் சித்தத்திருப்பவன் என்றும், வெறுப்போடு விருப்பினை அறுத்தவர் உளத்து மலர் பதுமப் பதத்தவன் என்றும் கூறும்[1] அடிகள் தமது தகுதியையும், இறைவன் தம் உள்ளத்தில் விளங்குதலையும் புலப்படுத்தக் காண்கிறோம். 'புள்ளூர் என எமது உள்ளத்தடத்தில் நிறைந்து விளங்கும் புத்தமுதக் கடல்'[2] என்று முருகனை உள்ளத்தில் கண்டதை உணர்த்துகின்றார். 'ஆனந்த வனத்தும் எம் இதயத்தும் இருந்தோன்'[3] என்றும், காசித் தடம்பதியார் வந்து என்றன் அகத்தே இராநின்றனர்[4] என்றும் இறைவன் தமது உள்ளத்தில் விளங்குவதைக் குறிக்கக் காண்கிறோம்.

அம்மை அடிகளின் கருத்தில் புகுந்த நிலையில், கலைமகள் அவருடைய நாவில் புகுந்ததாகக் கூறுகிறார்.[5] 'அம்மை எம்வாயும் மனமும் வனைந்தாள்' என்று உ.வே.சா விளக்குகின்றனர்.[6] இவ்வாறு அடிகளுக்கு அணுக்கமாக இறைவன் விளங்குதல் அடிகளின் இறையனுபவச் சிறப்பை உணர்த்தி நிற்பதாகும். 'பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே'[7] என்று ஞானசம்பந்தர் இறைவனை அண்மைச்சுட்டால் சுட்டிக் காட்டிய அனுபவ நிலை அடிகட்கும் வாய்த்துள்ளமை குறிக்கத்தகும்.

நெஞ்சத்தியல்பும் இறைஇருப்பும்

"இறைக் காட்சி நெஞ்சத்தில் வாய்க்கப்பெற்ற அடிகள் அதற்கேற்ப நெஞ்சம் எப்படி விளங்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறார். வெம்மை வினைக் கள்ளத் திருக்கு ஓய்ந்தால் நம் உள்ளத் திருக்கோயிலில் இறைவனைக் காணலாம் கண்டீர் என்று கூறுகிறார்.[8] தாம் அவ்வகையில் கண்டமையை இங்ஙனம் எடுத்துரைக்கின்றார் எனலாம். அடிகள் தமது அனுபவத்தைக் கூறும் முறையில் மக்கட்கு அறிவுறுத்தும் இயல்பினர் என்பதும் ஈண்டு உணரத் தகும். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்[9] என்ற திருமூலர் கருத்துக்கிணங்க அடிகள் இறைக் காட்சியினைத் தாம் பெறுவதற்குத் தம் உள்ளத்தை ஒழுங்குபடுத்திய முறையினைப் பிறரும் அறியுமாறு கூறித் தாம் இறைவனை நெஞ்சத்தில் கண்டமையை நன்கு வலியுறுத்துதல் அறியத்தகும்.

---

1. 359 2. 377 : 3 3. 606 4. 619
5. மீ.இ. 15 6. 470, கு.பி.தி. (உ.வே.சா) பக். 363
7. திருஞானசம்பந்தர் தேவாரம். பதிகம் 1 8. 140 9. திருமந்திரம் 85

இறைவன் அடிகளின் உள்ளத்தில் எங்ஙனம் வீற்றிருந்தான் என்பதையும் விளக்கக் காண்கிறோம். 'எங்கள் உள்ளத்தில் அமுதூறு கரும்பு' என்று[1] முருகன் தம் உள்ளத்தில் விளங்கிய முறையைக் கூறுகிறார். அமுதம் ஊறுகின்ற கரும்பாக, இன்ப அனுபவமாக விளங்கியதை இவ்வாறு உணர்த்துகிறார் எனலாம். அன்பாளராகிய அடிகட்கு இன்பமளிக்கும் மெய்ஞ்ஞான மருந்தாக முருகன் விளங்குவதையும் புலப்படுத்துகிறார்.[2]

தம் அனுபவத்தைப் பிறர்க்கும் ஏற்றிக்கூறுதல்

இறைவனைத் தம்மிடம் கண்ட அடிகள் அவ்வனுபவத்தைப் பிறர்க்கும் ஏற்றிக்கூறக் காண்கிறோம். வரும்புண்டரீகம் இரண்டால்ஓர் கல்லும் என்வன்னெஞ்சமாம் இரும்பும் குழைத்த மதுரைப் பிரான்[3] என்று ஒரு தலைவன் கூற்றாக அடிகள் குறிக்கின்றனர். இதில் இறைவன் தனது இரண்டு தாமரைக் கைகளால் மேரு மலையைக் குழைத்தமையும் இரண்டு தாமரைத்தாள்களால் தலைவன் வன்நெஞ்சமாம் இரும்பைக் குழைத்தமையும் கூறப்படுகின்றன. அடிகளின் நெஞ்சம் இறைவன் தாள்களால் குழைக்கப்பெற்ற அருளனுபவமே இங்குத்தலைவன் இயல்பில் ஏற்றிக் கூறப்பட்டுள்ளது என்பது தகும்.

தடாகத்தில் உள்ள தாமரைமலர் முள்ளுடைய தாளை உடையதென்று வெறுத்து, இறைவனுடைய தண்மலர்த் தாளாகிய நடமாடும் தாமரைத்தாளை உள்ளத்தில் கொண்டு உய்ந்தமையை வியப்புக்குரியதாக அடிகள் கூறுகின்றனர்.[4] தாளால் இவ்வாறு உய்தி பெற்ற அனுபவமே தலைவன் கூற்றிலும் அடிகளால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவு.

அடிகள் இறைவனைக் கண்ணால் கண்டுணர்ந்த முறை

விழியிலும் மனத்திலும் இறைவனை எழுதி எழுதி நித்தமும் அடிகள் என அடிகளைப் பணியும் அடியவர்களுக்கே இறைவன் உணர்வதற்குரியவன் என்று காட்டுகிறார். முருகனுடைய வடிவினழகும், எழுதவரிய புயமும், நறிய வெட்சி மலரும், மார்பில் விரவும் குரா மலரும், அரை மணியும், அழகிய கச்சையும், செலுத்தும் மயிலும்வேலும், கருணை பொழியும் முகத்தாமரையும், கமலவிழியும் இவ்வகையில்

1. 369 2. 369 3. 188
4. 107

விழியிலும் மனத்திலும் நித்தமும் எழுதி எழுதிப் பணிதல் வேண்டும் என்று அடிகள் விளக்குகின்றனர்[1]. அடிகள் தாம் முருகனை வழிபட்டு உணர்ந்த அனுபவத்தையே இங்ஙனம் பிறர்க்கும் அறிவுறுத்துகின்றனர் என்பது தெளிவு.

அம்புலியிடம் கூறும் முறையில் அடிகள் முருகனை மெய்கண்ட தெய்வம் என்று தெளிவாக்குகிறார். எவரெவர்கட்கும் ஊன் கண்ணே உளக் கண்ணதாம் விழியாக முன்னின்று தண்ணளி சுரந்து அவர்கள் வேண்டிய வரங்கொடுப்பான் முருகன்; மெய் கண்ட தெய்வம் இத்தெய்வமல்லால் புவியில் வேறில்லை என்கிறார்.[2] இங்ஙனம் அடிகள் தம் புறக்கண்ணால் முருகனைக் கண்டதைக் கூறுகிறார். 'விளம்பில் உன்போல், கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலா வல்லியே [3] என்று கலைமகளைக் கண்கண்ட தெய்வமாகக் கூறுகிறார். இவ்வாறு கண்ணால் கண்டுணர்ந்த இறையனுபவம் குறிப்பிடப்படுகிறது.

தலையில் திருவடி பதிக்கப் பெற்றமை

இதயத்திலும், நாட்டத்திலும், சிரத்திலும் பராபரன் பாதம் பதிவித்த அனுபவத்தைத் திருமூலர் குறிப்பிடுகின்றனர்.[4] இறைவன் திருவடிகளை, அடிகள் தம் முடியில் பதிக்கப்பெற்ற பேறுடையவர். முருகன் அவ்வாறு அடிகளின் முடியில் தாள் பதித்ததால் அவனுடைய தாள்களில் வடு ஆறாமல் உள்ளது என்றும் எனவே அவன் மெய்ப்புகழாளி என்றும் குறிக்கும் அடிகள், 'திருவடித்துணை என் முடிபதித்த வடு ஆறாத மெய்ப்புகழாளி'[5] என்கிறார்.

கங்கையைத் தரித்தவனும், உமையோடு விளங்குபவனுமாகிய இறைவனுடைய அடிக்கமலத்தைச் சூடியதாகவும், எனவே இந்திர பதவிக்குரிய பொன்னரி மாலையும், திருமால் பதவிக்குரிய பசுந்துழாய் மாலையும் புனையமாட்டேன் என்றும் அடிகள் தெளிவாகக் குறிக்கின்றனர். 'அடிக்கமலம் சூடினோமால்' என்று அப்பேற்றை அனுபவித்த மகிழ்ச்சி புலப்பட அடிகள் கூறுகின்றனர்[6].

சைவசித்தாந்த மரபில் ஸ்பரிச தீக்கை என்று கூறும் முறை அடிகளின் இவ்வனுபவத்தால் புலனாகின்றது. இறைவனுடைய திருவடி

---

1. 399 2. 415 3. 709
4. திருமந்திரம். 1596 5. 351:4 6. 467

அடியவர் தலையில் வைக்கப் பெறுதல் குறிப்பிடத்தக்க தீக்கை முறையாகும். சிறந்த அடியவர்கள் வாழ்வில் இது தெற்றெனப்புலனாதல் அறியத்தகும் என்று டாக்டர் சுப. அண்ணாமலை அவர்கள் குறிப்பிட்டுத் திருநாவுக்கரசர் சுந்தரர் ஆகியோர் வாழ்க்கை அனுபவங்களைச் சுட்டிக் காட்டுகின்றனர்[1]. அடிகள் இவ்வகையில் இறையருள் பெற்று விளங்கியமை அறியத்தகும்.

இறைத் தொடர்பால் எமனுக்கு அஞ்சாமை

யானைகளால் தாங்கப்படும் இந்திர விமானத்தில் இறைவனைக் கண்டு வணங்கினபேறு பெற்ற அடிகள் கூற்றுவனுக்கு அஞ்சாதவராய் அவனைப் போகும்படி கூறுகின்றார்[2]. அங்கயற்கண் அம்மை இடம் கொண்டாரை அஞ்சலித்தேம்; எனவே எமனுக்கு அஞ்சலம் என்கிறார்.[3] அம்மைக்கு எம் நெஞ்சமே திருக்கோயில் ஆதலால் எமனே உன் செயல்கள் தகா என்று கூறுகிறார்.[4] இறைவன் துணைத்தாளடைந்த உயிரைப் பார்த்து, ஆயிரங் கூற்று உடன்றாலும் அஞ்சேல் என்று அடிகள் தம் அஞ்சாமையைப் புலப்படுத்துகிறார்[5]. இறையருள் பெற்ற நிலையால் இவ்வாறு எமனுக்கு அஞ்சாது நிற்கும் இயல்பு அடிகளிடம் காணப்படுகிறது. தம்மை எமன் பிடிப்பது வேண்டின், இறைவன் கூற்று எனும்பேர் தனக்கு அமையுமாறு எமனை முடிப்பான் என்று எமனுக்கு எச்சரிக்கை செய்கின்றார் அடிகள்[6]. அம்மையைப் பணிந்து விளங்கும் தம்வழியில் மறலி வருவானாயின் அவனுக்குரிய முரசு நெய்தல்பறை (சாப்பறை) யாக நேரும் என்று கூறுகிறார்.[7]

தில்லை இறைவன் கூத்தை உணராவிடில், எமன் வரும்போது நெஞ்சமே புலம்பற்க என்று தம் நெஞ்சிடம் கூறுவார் போல் இறைத் தொடர்பால் எமனுக்கு அஞ்சாதிருக்கலாம் என்பதை உணர்த்துகிறார் அடிகள்.[8] கூற்றடிக்கு அஞ்சிக் குலையும் நெஞ்சே, காசிச் சிவக் கொழுந்தைப் போற்று, அஞ்சலிசெய், பற்று வேறு புகலில்லை என்று நெஞ்சுக்குக் கூறும் கூற்றிலும் இறையருளால் எமபயமின்மை அமையும் என்பது காட்டப்படுகிறது.[9] இவ்வாறு இறைவனைப் பற்றி நிற்கும் தமக்கு எமபயம் இல்லை என்பதை உணர்த்துவதோடு தம்

---

1. The Lord's placing His Holy Feet on the devotee's head is the specific act of initiation. It is crystal-clear in the lives of the evolved souls' F.N: Poet Cekkilar records such a kind of initiation in saint Tiruavumkkaracar's life and saint Cuntarar's life (Periyapuranam: 1483 and 231) - A Critical study of Saint Ramalinkar's works., (Ph.D. Thesis typed copy) P. 371

8. 152 3. 174 4. மீ.இ 11 5. 318 6. 465

7. சிவ.இ.7 8. 650 9. 658

அனுபவத்தால் உலகோரையும் இறைவனைப் பற்றிநின்று எமபயம் நீக்குமாறு அறிவுறுத்துகின்றார் எனலாம்.

சொக்கர் அருட்சேவடிக்கு அடிமை செய்யார் போல் நெஞ்சமே அஞ்சற்க என்று கூறும் தலைவன் கூற்றில் அடிகள் தாம் சொக்கர் சேவடிக்கு அடிமை செய்தமையால் அஞ்சவில்லை என்ற கருத்தைப் பெற வைத்துள்ளனர் எனலாம். இறைவனுக்கு ஆளாகி அவனால் அருளப்பெற்ற நிலையில் அடியவர்கள் எமனுக்கு அஞ்சுதல் இல்லை. நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்[1] என்று இறைவன் சேவடியைக் குறுகிநின்ற நாவரசர் கூறும் நிலையில் அடிகளும் விளங்கியுள்ளமை அறியத்தகும்.

பிறவாநெறியாகிய வீடு பெற்றமை

திருமாலுக்கு நிலமகளையும், குபேரனுக்கு நவநிதியையும் அளித்த இறைவன் அடிகளுக்குக் கதிவீடளித்ததைக் குறிப்பிடக் காண்கிறோம். இவ்வாறு அளி செய்தலால் தியாகர் என்றும் பெயர் இறைவனுக்குத் தக்கதே, முகமன் அன்று, இயல்பானதே என்றும் குறிப்பிடுகின்றார்.[2] தில்லைத் திருமன்றம் நோக்கியதால் அடிகள் பிறவா நன்னெறி பெற்றதாகக் கூறுகிறார்[3]. தில்லை இறைவனைக் கண்டு வணங்கியதால் இறைவனுடைய தாமரைத் தாள்நிழற்கீழ்ப்பொலியும் வீடுபேறாகிய சீர் தமக்கு உண்டு என்றும் தெளிவுறுத்துகிறார்.[4] தில்லைக்குச் சென்றதால் பரலோகமாகிய முத்தி நாட்டை அடைந்ததாகவும் கூறுகிறார்[5]. காசியிறைவன் எனக்களிப்பது எண்ணப்படும் அழகிய பரமுத்தியாகும் என்கிறார்.[6] உவட்டாத இன்பத்தேன் என்று இறைவனை அடைந்தவர் உண்பதற்குக் கொடிய விடம் கிடைக்கும் என்கிறார்[7]. சாரூபமுத்தி பெறும் நிலையில் இறைவனைப் போல் நஞ்சுண்பர் என்பதை இவ்வாறு கூறுகின்றனர். இஃது அடிகளின் அனுபவமே ஆகும்.

> "கூற்றம்குமைத்த குரைகழற்கால் கும்பிட்டுத்
> தோற்றம் துடைத்தேம் துடைத்தேமால்" (488)

---

1. திருநாவுக்கரசர் தேவாரம். பதிகம் 312 : 1
2. 331 3. 454 : 9 - 10 4. 456 5. 560 6. 631 7. 682

என்று தமக்குப் பிறப்பென்பது முற்றிலும் இல்லாமல் செய்தமையை உறுதியாகக் குறிப்பிடுகிறார் அடிகள். தள்ளும் பவக்கடலில் உழக்கும் தம்மை முத்தித் தடங்கரையில் சேருமாறு முருகன் அருளியதை எடுத்துரைக்கவும் காண்கிறோம்.[1] இவ்வாறு பிறவா நெறியுற்று வீடடைந்த நிலையினை விளக்கியுள்ளனர்.

உண்முக நுகர்ச்சி

குருவருளால் பெற்ற ஆரா இன்ப அருள் அனுபவத்தை அடிகள் விவரித்துள்ளார். புறத்தே விளங்கும் ஐம்புல நுகர்ச்சிகள் உண்டு. அவற்றை அடிகள் நுகர்ந்து அனுபவித்ததை விளக்குகிறார். செவிப்புலன் அறியாத அகத்தே கேட்கும் ஒலியும், மெய்ப்புலன் அறியாத குளிர்ச்சியும், கட்புலனறியாத கதிரொளியும், நாச்சுவையறியாத நறுஞ்சுவையும், மூக்கு உயிர்த்து அறியாத மணமும் என்று உண்முகமாக நுகரும் ஐம்புலன் நுகர்ச்சியை அடிகள் பெற்றுப் பேரா இன்பம் ஆகிய பெற்றியில் திளைக்கும் ஆரா இன்பம் ஆர்ந்ததாக விளக்குகிறார்.[2]

இவ்வாறு உண்முகமுறையில் அகத்தொழில் மாத்திரையால் இறைவனை அடைந்து இன்புறுவது யோக அனுபவமாகும் என்பர் சாத்திர நூலார்.

"அஃது அடிப்பட்டு வரவர நிகழும் பக்குவ விசேடத்தான் அதிநுட்பவுணர்வுடையராய், நிட்களமாகிய அதிசூக்கும வடிவமே பொருள், சகளமுஞ் சகள நிட்களமும் அதனை வழிபடுதற்கிடமாகிய திருமேனியென்று இவ்வாறுணர்ந்து அகத்தொழின் மாத்திரையாய் ஆண்டைக்கு விதித்தவாறே வழிபடுவது யோகம்" என்று சிவஞான முனிவர் யோக வழியை விளக்குகின்றனர்.[3] அடிகள் இந்த யோக அனுபவத்தின் பயனைப் பெற்றதையே மேற்கண்டவாறு தெளிவாக்கியுள்ளமை அறியத்தகும். கௌசிதகி உபநிடதத்தில் பிரமகந்தம் என்று கூறப்படுவது[4] இந்த அனுபவ நிலையையே என்று கருத இடமுண்டு.

---

1. 418 2. 590 3. சிவஞானப்பாடியம். பக். 407

1. "(a) The Kausitaki Upanisad portrays in the language of sense-symbolism the glory of the freed self when it enters the world of spaceless space, acquires the form and fragrance and flavour of Brahman (Brhma rupa, Brahma gandha and Brahma rasa) which is niravayava and nirguna, and is immersed for ever in the fecunditive bliss of divine communion" - The wisdom of the Upanisads, by P.N. Srinivasachari. P. 102 - 103.

(b) "He comes to the tree Ilya and the fragrance of Brahma enters into him. He comes to the city Salajya; the flavour of Brahma enters into him. He comes to the abode Aparajita; the radiance of Brahma enters into him" (Kausitaki Brahmana Upanishad, chapter I:5) - The Principle Upanisads by S. Radhakrishnan, P. 758

இறையருள் அனுபவத்தால் ஏற்பட்ட மாற்றங்கள், விளைவுகள்

இறைவனை நினைத்தும், அவன் புகழைநவிற்றியும், துணைத்தாளை அன்புடன் இறைஞ்சியும் அடிகளுடைய மனமும், வாக்கும், யாக்கையும் ஆகிய திரிகரணங்கள் இன்பமுற்றன. அந்நிலையில் அவை சிவகரணங்களாகத் திரிந்தன. எனவே திரிகரணங்கள் என்றும் பெயர் தமக்கு மூன்று கரணங்கள் என்ற பொருளிலும், சிவகரணங்களாகத் திரிந்த கரணங்கள் என்ற பொருளிலும் இரு பொருட்கிளவியாக இருந்தது என்கிறார் அடிகள் [1] இவ்வாறு சிவகரணங்களாக விளங்கும் அனுபவப் பயனை அடிகள் உணர்த்தியுள்ளனர்.

குருவாகிய மாசிலாமணி தேசிகர் வீற்றிருக்கும் கமலையாகிய ஊரிற் குறுகியதால் அடிகள் ஒரு மாத்திரை அளவு தமது பேரில் குறுகியதாகக் குறிப்பிடுகின்றார்.[2] சீவன் (உயிர்) குருவருளால் சிவனாகிய தன்மை இவ்வகையில் உணர்த்தப்படுகிறது. சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட, அத்தனெனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே,[3] என்று கூறும் மாணிக்கவாசகர்தம் அனுபவம் ஈண்டு அடிகட்கும் வாய்த்திருத்தல் உணரத்தகும். இவ்வாறு அடிகள் சிவமாக மாறிவிளங்குதல் தெளிவாக்கப்படுகிறது. குருவாகிய இறைவன் தாளடைந்த நிலையில், இருளாயிருந்தவெல்லாம் வெளியாயின என்கிறார்.[4] திருவருளால் அறியாமை நீங்கி அறிவு பெற்ற குறிப்பும், உலகத்தொடர்பு நீங்கி முத்தி பெற்ற குறிப்பும் இவ்வகையில் குறிக்கப்படுகின்றன. இறையருளால் இவை அடிகள் பெற்ற பயன்களாகும்.

சிவனாகிய ஆனந்த மாக்கடலில் கலந்தாடப்பெற்ற அடிகள், சற்றும் இனி மகளிர் காமக் கருங்சுழியில் சுழலேம் என்கிறார்.[5] இறைவனுடைய கருணைத் திருநோக்கில் கனியாத நெஞ்சம் மகளிர் காம நோக்கில் கரைகின்றதே என்று,[6] இறைவேட்கையால் தம்மைக்

---

1. 587:25-33 2. 588
3. திருவாசகம், அச்சோப்பதிகம். 1
4. 582
5. 471 6. 540

குறைகூறிக் கொள்ளும் அடிகள் இறையருளால் அக்குறைபாடு நீங்கி மாற்றம் பெறுதல் இவ்வகையில் புலனாகின்றது. உயிர்களைப் பற்றியுள்ள உலகியல் பற்றுக்களையெல்லாம் தம் மீதும் ஏற்றிக்கொண்டு இறையருளால் அவை நீங்குவதாக அடிகள் கூறியுள்ளார் என்பது ஈண்டு உணரப்பட வேண்டுவதாகும்.

தகுதியில்லாத தாம் அம்பலத்துள் மாநாடகம் காணும் வாழ்வு பெற்றமைபோல் வேறு யார் பெற்றார் என்று அடிகள் தமது பெரும் பேற்றைக் குறிப்பிடுகின்றனர்.[1] இறைவனுடைய திருக்கூத்தைக் கண்டு உயர்வு பெற்ற நிலை இங்ஙனம் வலியுறுத்தப்படக் காண்கிறோம். இந்த மேலான வாழ்வனுபவத்தைப் பெற்ற அடிகள், மெய்ப்பொருள் துணிவோர் இறைவன் குஞ்சிதகமலம் கும்பிடுதலையே வேண்டுவர் என்றும், விண்மிசை உலகாகிய வீடு பேறும் வேண்டார் என்றும் அறிவுறுத்துகின்றனர் எனலாம்[2]. கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார், என்று[3] சேக்கிழார் காட்டும் அடியவர் நிலை இங்கு அடிகள் அனுபவத்தில் வலியுறுத்தப்படுகிறது எனலாம்.

இறையருள் பெற்ற அனுபவ நிலையில் தம்நெஞ்சுக்கு அறிவுறுத்துபவராய் அடிகள் உலகோர்க்கு நம்பிக்கை யூட்டுகின்றனர். 'ஏழை நெஞ்சே ஏன் இரங்குகின்றாய்! இறைவன் கற்பகமாய் உள்ளான்; அக்கற்பகத்தில் விளங்கும் பச்சைப் பசுங்கொடியாகிய அம்மை ஐந்து கற்பக தருக்களையும், சிந்தாமணியையும், காமதேனுவையும் அருளுவாள்'[4] என்று கூறுகிறார். இறைவன் அருளில் நம்பிக்கையை உண்டாக்கும் முறையில், அருளில் திளைத்த அடிகள் தம் நெஞ்சுக்குக் கூறுவாராய் உலகோருக்கு அறிவுறுத்துகின்றமை ஈண்டுக்குறிக்கத்தகும்.

---

1. 502
2. 530
3. பெரியபுராணம் திருப்கூட்டச் சிறப்பு . 8
4. 153

இறைவன் அன்புபொருந்தக் கொள்வது தமது தொண்டினையே என்று விளக்குகிறார் அடிகள்.[1] 'அடித்தொழும்பு செய்தொழுகும் இவ்வேலை ஈந்தார் எமக்கு'[2] என்றும் இறைவன் அடிகளைப் பணிகொண்டமையை உணர்த்தக் காண்கிறோம். 'அகம்படிமைக் குடியாக்கொண்டால் குறையுண்டோ'? என்று[3] பெண்கள் முருகனிடம் வேண்டும் முறையில் தமது விருப்பத்தைப் புலப்படுத்தும் அடிகள் அதற்கேற்ப இறைவனுக்குப் பணி செய்யும் பேறு பெற்றதை இங்ஙனம் புலப்படுத்துகின்றனர் எனலாம்.

அடிகளைப் பாட்டுவிப்பதும் கேட்பதும் அம்மையின் செயலே என்று தெளிவாக்கக் காண்கிறோம்.[4] யாவர் கூற்றும் இறைவன் ஏவலினாலேயே நிகழ்கின்றன என்றும், இறைவன் ஆணைவழியே அடிகளும் அவன் பெரும்புகழைக் குழந்தையன்பு நிலையில் பாடியிருப்பதாகவும் கூறக் காண்கிறோம்[5]. இறைவன் அருள் புரிதலினாலேயே அவன் தன்மையை நினையவும், சில சொற்புனையவும் செய்த அடிகள், அவ்வகையில் இறைவனது தகவுப் பயனைப் பெற்ற தமது மனத்தையும், நாவையும் வாழ்த்திக் கொள்ளக் காண்கிறோம்.[6] கவிதையை ஏற்று இறைவன் அடிகளை ஆட்கொண்டதையும் உணர்த்தக் காண்கிறோம்.[7] இவ்வாறு எல்லாம் இறைவன் செயல் என்று உணரும் நிலை அடிகளின் அனுபவத்தில் உணர்த்தப்படுகிறது.

இறைவன் செம்மேனி திருநீற்றாலும் தண்ணளியாலும் (வெண்மை நிறத்தால்) கங்கை நதியாகும்; உமையம்மை யமுனை நதியாவாள் (நீலநிறத்தால்) ; முருகன் வாணி நதியாவான் சிவப்பு நிறத்தால்). எனவே திரிவேணி சங்கமம் போல் மூவரும் ஒருங்கு விளங்கும் காட்சியைக் கருதும் அடிகள் அதில் தனித்துக்

---

1. 162 2. 690 3. 428 4. மீ.இ. 7
5. 472:32-35 6. 206:34-37
7. 634, 598

குடைவதாக-ஆடி மகிழ்வதாக- உரைக்கின்றார்.[1] ஓதாது உணர்த்திடும் போதன்[2] என்று முருகனைக் கூறும் அடிகள், அவன் மௌன தேசிகனாய் உணர்த்தியதைக் குறிப்பிடுகின்றனர். அடிகள் நூல்களை ஓதாமல் ஊமையாக இருந்த நிலையில் முருகன் அறிவனைத்தும் உணர்த்தினான் என்ற அடிகளின் அனுபவமும் இவ்வகையில் கூறப்பட்டுள்ளது எனலாம். குருவின் செந்நெறிப் படர்ந்த சீர்புனைந்து ஏத்தியதால் தமக்குச் சத்திநிபாதம் எளிதினில் எய்தியது என்று புலப்படுத்துகிறார் அடிகள்[3]. தமது சின்மொழியை அஞ்செவி மடுத்து இறைவன் அளித்தனன் என்கிறார்.[4] இறைவன் பொன்னடி வணங்கி இன்னிசை பாடியதும் வானத்திலிருந்து நீங்கிக் காமதேனுவும், கற்பகதருவும் பெருவளம் சுரப்ப இம்மைப் பயனும் மறுமைப்பயனும் பெற்றதாகப் பாணன் கூற்றாக அடிகள் கூறுகின்றனர்? இவ்வாறு இறைவனை வணங்கி, வாழ்த்திப் பாடிய அனுபவப் பயன்கள் அடிகளால் உணர்த்தப்படுகின்றன.

> "ஆனந்த வல்லியுடன் ஆனந்தக் கானகத்தே
> ஆனந்தக் கூத்தா டருட்கடலை - ஆனந்தம்
> கொள்ளத் திளைத்தாடும்" (684)

என்று பிறர்க்குக் கூறும் அடிகள் தாம் அவ்வாறு திளைத்தாடிய இன்ப அனுபவத்தை வலியுறுத்தக் காண்கிறோம்.

இவ்வாறு அடிகளிடம் விளங்கிய இறையுணர்வும் வேட்கையும் இறையனுபவத்துக்கு அடிப்படையாய் அமைந்து, அடக்கமும் தகுதியும் நெருக்கமும் அவ்வுணர்வை மேலும் பெருக்கி அருளனுபவ நெறியில் விரைந்து செலுத்த, அடிகள் இறைவனை அடைந்து பேரா இயற்கை பெற்று விளங்கிய அனுபவங்கள் அறியப்படுகின்றன. இவை அடிகளின் மேலான அனுபவங்களாகத் திகழ்வதோடு, உலகோர்க்கு வழிகாட்டுவனவாகவும் விளங்குகின்றன என்பது தகும்.

---

1. 345
2. 379
3. 593:38-40 4. 699:2122 5. 656:36-41

இயல் – 6
அடிகள் காட்டும் வழி

"இறையடியவர்கள், ஒருவகையில், நமக்கு வழிகாட்டும் துணைவர்களாக உள்ளவர்கள்" என்று கூறுகின்றார் டாக்டர் மொ.அ. துரையரங்கனார் அவர்கள்[1]. தம் அனுபவத்தில் கண்ட நிலையான உண்மைகளைப் பிறரும் அறிந்து உய்யும் பொருட்டுக்கூறி வழிகாட்டும் ஒளிவிளக்குகளாக இறையடியவர்கள் திகழ்கின்றனர் எனலாம்.

"எரிந்தி லங்கு சடைமுடி முனிவர்
புரிந்து கண்ட பொருள்மொழிந் நன்று"[2]

என்று பொருள்மொழிக்காஞ்சித்துறை கூறப்படுவதற்கேற்ப, இறையடியவர்கள் தாம் விரும்பிக் கண்ட நிலையான உண்மைகளை உயிர்கள் உய்யும் பொருட்டு உணர்த்தி வழிப்படுத்துகின்றனர் என்பது தகும். உயிர்ப்பயணத்தை நெறிப்படுத்தும் வகையில் அடியவர் கூற்றுக்கள் அரிய பயன் தந்து நிற்கின்றன; இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் போல உதவுகின்றன. இறையடியவர்களுடைய பெருமையாலும், தலைமைச் சிறப்பாலும் அவர்கள் காட்டும் வழியில் உலகம் செல்லுதல் இயற்கை. எனவே அவர்கள் உலகை நல்வழியில் செல்லுமாறு வழிப்படுத்தும் தகுதிகருதியே, "அகில காரணர் தாள் பணிவார்கள் தாம், அகிலலோகமும் ஆளற்குரியர்[3] என்று சேக்கிழார் சிறப்பிக்கின்றனர் எனலாம்.

குமரகுருபர அடிகள் தம் துறவு நிலையாலும், இறையனுபவங்களையும் சமயக்கருத்துக்களையும் தமிழ்நலம் கனிய உணர்த்தியுள்ள பாடல்களாலும் மக்களை இறைநாட்டம் கொள்ளச் செய்து, நிலையான சிறந்த வழியில் செல்லுமாறு அறிவுறுத்துகின்றனர். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்[4], என்னும் திருமூலர் கருத்துக்கிணங்கத் தாம் அனுபவித்த இறை நலங்களையெல்லாம் உலகமும் பெற்று இன்புறுமாறு அதற்குரிய வழிகளில் செலுத்தும் மேன்மையராக அடிகள் விளங்குகின்றனர்.

---

1. "The Servants of the Lord are in a sense our guides showing us the way" - The Religion and Philosophy of Tevaram with special reference to Nampi Arurar (Sundarar). Book II. P. 1085
2. புறப்பொருள்வெண்பா மாலை, பொதுவியற் படலம், கொளு. 32
3. பெரியபுராணம், திருக்கூட்டச் சிறப்பு.4
4. திருமந்திரம். 85

துறவியர் இயல்பைக் கூறும்போது இவ்வாறு மக்களை நல்வழிப்படுத்துவதே துறவியர் கடமை என்பதை அடிகள் குறிப்பாக உணர்த்தக் காண்கிறோம்.

“பரபரப்பி னோடே பலபல செய்தாங்கு
இரவுபகல் பாழுக்கு இறைப்ப - ஒருவாற்றான்
நல்லாற்றின் ஊக்கின் பதறிக் குலைகுலைப
எவ்வாற்றான் உய்வார் இவர்” (295)

என்று துறவோர் இயல்பு கூறும்பொழுது, நல்லாற்றில் ஊக்குதல் துறவோர் இயல்பாக உணர்த்தப்படுதல் தெளிவு. இவ்வகையில் அடிகளும், நெறிதவறிப் பயனின்றிக் கழிக்கும் மக்களை நல்லாற்றின் ஊக்கியுள்ளமை - வழிகாட்டியுள்ளமை - இவ்வியலில் அறியத்தகும். சமய வாழ்விலும் சமுதாய வாழ்விலும் அடிகள் காட்டும் வழி அவர்தம் தகுதியையும் சிறப்பையும் புலப்படுத்துவதோடு, விரிந்த மனமாண்பினையும் தெரிவிப்பதாக நோக்கத்தகும்.

(அ) சமய வாழ்வுக்கு வழி: ஆற்றுப்படுத்தும் அருங்குணம்

ஆற்றுப்படை என்னும் துறை தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டுள்ளது. கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியும் ஆகிய கலைஞர்கள் வழிகளில் எதிர்ப்பட்டுத் தாம் வள்ளல்களிடம் பெற்ற பெரு வளத்தைப் பெறாதவர்களுக்கு அறிவுறுத்தி அவற்றை அவர்களும் பெறுமாறு வழிப்படுத்தும் முறையில் அமைக்கப்படும்.[1] பாடாண்திணைக்குரிய துறையாகிய ஆற்றுப்படை இவ்வகையில் வழிப்படுத்தும் சிறப்புடையதாகும். அடிகள் பாணாற்றுப்படையாகப் பாடியுள்ள ஒரு பாடல் ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கத்தகும். வறுமைப் பாணனிடம், சிவனருளால் நலம் பெற்ற பாணன் ஒருவன், தான் பெற்ற பெருவளத்தைக் கூறி இறைவனிடம் ஆற்றுப்படுத்தும் முறையில் அடிகள் அமைத்துள்ள அப்பாடலில்.

---

1. தொல். புறத்திணையியல். 36

"மழுவலன் உயர்த்த அழனிறக் கடவுள்
பொன்னடி வணங்கி இன்னிசை பாடலும்
அந்நிலைக் கண்ணே அகல்விகம்பு ஒரீஇச்
இருமையும் பெற்றனன் யானே நீயும்அத்
திருநகர் வளமை பாடி இருநிலத்து
இருநிதிக் கிழவன் ஏக்கறுப்பத்
திருவொடும் பொலிக பெருமகிழ் சிறந்தே" (656 : 37 - 44)

என்று குறிப்பிடுகின்றார். அடிகள் பெற்ற நலங்களை யாவரும் பெறுதல் வேண்டும் என்ற பரந்த நோக்கில் இவ்வாறு பாணாற்றுப்படை மூலம் அறிவிக்கின்றனர். இவ்வகையில் பாடாண் சிறப்பாக இறைவன் பெருமை பேசப்படுவதோடு, பிறரை வழிப்படுத்துவதும் அரிய குணமாக அடிகளிடம் விளங்குதல் குறிக்கத்தகும். இருமையும் பெற்றுப் பொலிய இறைவன் பொன்னடி வணங்கி அவன் வீற்றிருக்கும் திருநகர் வளமை பாடுதல் வேண்டும் என்று யாவர்க்கும் அடிகள் வழிகாட்டியிருத்தல் ஈண்டு உணரத்தகும். தமது பாமாலையைச் சரியையாகக் கூறியிருப்பதும்,[1] அடியவர்களை அவ்வகையில் ஆற்றுப்படுத்தும் குறிப்புடையதாக எண்ணத்தகும்.

இறைஞ்சிப் புகழுமாறு கூறுதல்

இறைவன் மன்னுயிர்க்கு இன்னருள் வழங்குதும் யாம் என்று வழங்குகிறான்; எனவே யாவரும் நமர்காள் இறைஞ்சுமின் நீரே என்கிறார் அடிகள்.[2] எமன் வருவதற்கு முன் இறைவனைப் போற்றுமின என்கிறார்.[3] இறைவனை இந்திரன் முதலாகிய புத்தேளிர் புகழ்தல் போல், புகழ்மினோ வம்மின் புலவீர்காள் என்று புலவர்களை அழைத்துக் கூறுகிறார்[4]. எனவே வேம்பும் கடுவும் போன்று செவி கைப்பச் சொன்ன மொழிகளைக் கேட்டும் இறைவன் அளி செய்தான் ஆதலால், செந்நாப்புலவர்களே, நீங்களும் இறைவனை இன்னிசைப் பாத்தொடுத்து நாத்தழும்பிருக்க ஏத்துமின்; இதுவே முழுநலம் கொடுக்கும் செந்நெறி என்றும் புலவர்களை வழிப்படுத்தக் காண்கிறோம்;

---

1. 598
2. 348 : 34 - 36
3. 506
4. 549

கண்ணுதற் செல்வன்
வேம்பும் கடுவும் தேம்பிழி யாகச்
செஞ்செவி கைப்பயான் தெரித்த சின்மொழி
அஞ்செவி மடுத்தாங்கு அளித்தனன் அதனால்
வேத்தவை வியப்ப விரைத்தேன் பில்கும்
தேத்தமிழ் தெளிக்கும் செந்நாப் புலவீர்
மண்மகள் கவிகைத் தண்ணிழல் துஞ்சப்
புரவுபூண்டு இந்திர திருவொடும் பொலிந்து
முடிவிலும் முடியா முழுநலம் கொடுக்கும்
செந்நெறி வினவுதி ராயின் இன்னிசைப்
பாத்தொடுத்து அடுத்த பரஞ்சுடரை
நாத்தழும்பு இருக்க ஏத்துமின் நீரே (699 : 19 - 30)

இவ்வாறு தாம் பயன்பெற்றதைக் கூறிப் பிறரும் இறைஞ்சிப் புகழ அறிவுறுத்தும் அடிகள், இறைஞ்சா விடில் வரும் கேட்டையும் உணர்த்துகிறார். இறைவன் கழல் இறைஞ்சாமல் வீணே இறத்தல் என்கொல்? என்கிறார்.[1] கழலிறைஞ்சாவிடில் எவ்விதப் பயனுமின்றி இறக்க நேரும் என்பதை ஈண்டு உணர்த்தியுள்ளனர். இறைவனை இறைஞ்சாதவர்களை இறைவனுக்கு இவர்கள் யார் என்று வேற்றவர்களாகக் கூறுகிறார் அடிகள்.[2] இறைஞ்சாதவர்கள் இறைவனுடைய திருவருளுக்கு உரியராகார் என்பதை இவ்வாறு உணர்த்தக் காண்கிறோம். இறைவனை இறைஞ்சியவர்களே இறைவன் அருள் பெறுவர் என்பது இவ்வகையில் தெளிவாக்கப்படுகிறது.

மாந்தர் கடமை

இறைவனை வாழ்த்துதலும், நினைத்தலும், வணங்குதலும், தீநெறியிற் செல்லாது அறநெறியில் நின்று ஒழுகுதலும் மக்கட்குக் கடமை என்று அறிவுறுத்தி வழிகாட்டுகின்றனர்:

"வாழ்த்துமின் தில்லை நினைமின் மணிமன்றம்
தாழ்த்துமின் சென்னி தலைவற்கு - வீழ்த்த
புறநெறி யாற்றாது அறநெறி போற்றி
நெறிநின்று ஒழுகுதிர் மன்ற
துறையறி மாந்தர்க்குச் சூழ்கடன் இதுவே" (564)

---

1. 514
2. 612

இவ்வாறு செவியறிவுறுத்தும் சீர்மை அறிகின்றோம். செவியறிவுறூஉ வினை விளக்கும் பேராசிரியர்,

"முன்னிலைக்கே உரித்தாயினும் செவியறிவுறூஉ வினை ஈற்றுக்கண் வைத்தான், பயம் பெறுவானையே நீ இன்ன குணத்தையாவாயென்று புகழ்பட வாழ்த்திச் சொல்லப்படுதல் வேறுபாடுடைமையினென்பது"

என்று குறிப்பிடுகிறார்.[1] இக்கருத்துக்கிணங்க அடிகள் மக்கள் பயன்பெறுதல் கருதியே முக்கரணத்தாலும் இறைவனை வழிபட்டு நிற்றலைக் கடமையாகச் செவியறிவுறுத்துகின்றார் என்பது தெளிவு. இறைவனை வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தரப்பட்டுள்ளன என்று உணர்த்தும் திருநாவுக்கரசர் கூற்றும்.[2] எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க, எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க, கங்குல் பகல் எங்கண் மற்றென்றும் காணற்க என்று மணிவாசகர் வேண்டுவதும்[3] ஈண்டு நினைக்கத்தகும். இச்செயல்களை மேற்கொண்ட அடிகள்,

வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி அவனை வணங்கு முடிச்சென்னி
வாழியவன் சீர்பாடும் வாய் (490)

என்று இறைவனைக் கண்ட கண்களையும், புகழ்கேட்ட செவிகளையும், வணங்கும் சென்னிகளையும், புகழ்பாடும் வாய்களையும் வாழ்த்துகின்றார். வாழ்த்தப் பெறுதற்குரிய செயல் இவையே என்று வழிகாட்டியுள்ளமை ஈண்டு உணரப்படவேண்டுவதாகும்.

பிறவி நீக்குவதற்கு வழி

இறைவனடியைச் சேர்வதே பிறவிப் பெருங்கடல் நீந்துதற்குரிய வழி என்று உணர்த்துவர் திருவள்ளுவர்.[4] உயிர்கள், பிறந்துழலும் துன்பம் நீங்கிப் பிறவாத பேரின்ப வீட்டை அடைதலைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டியவை என்பது சைவசமயக் கொள்கை. இறைவன் உரு, அரு, அருவுரு என்று மூவகைத் திருமேனி கொண்டு விளங்குதல்

---

1. தொல். பொருளதிகாரம், செய்யுளியல் 111, பேராசிரியர் உரை
2. திருநாவுக்கரசர் தேவாரம் பதிகம். 204
3. திருவாசகம், திருவெம்பாவை. 19
4. திருக்குறள். 10

உயிர்களின் கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவம் என்று சிவஞான சித்தியார் கூறுகிறது.[1] எனவே கருமேனி கழித்தற்கு - பிறவி நீக்குதற்கு - இறைவனது கருணைத் திருமேனியில் திளைத்தலே வழி என்பது காட்டப்படும். அடிகளும் இவ்வகையில் பிறவி நீக்குதற்கு இறைவனைப் பற்றிநிற்க அறிவுறுத்துகின்றனர்.

காசிப் பூங்கோயிலில் விளங்கும் அம்மையோடு கூடிய இறைவனது செயலை ஆவி உய்யுமாறு துதிக்காதவர்கள் உலகில் உதிப்பார்கள்; துதிப்பார்களாயின் உலகில் மீண்டும் உதிக்க மாட்டார்கள் என்கிறார் அடிகள்[2]. கோயில் வழிபாடும், இறைவன் செயலைத் துதிப்பதும் இங்கு பிறவாமைக்கு வழிகளாக உணர்த்தப் பெறுதல் அறியத்தகும். ஆலயந்தானும் அரனெனத் தொழுமே என்று மெய் கண்டார் வழிப்படுத்தியிருத்தற்கிணங்கப் பல்வேறு தலங்களில் விளங்கும் ஆலயங்களை வழிபடுதல் அடிகளாலும் உணர்த்தப்படுகிறது எனலாம். குறிகூறும் குறத்தி தான் சென்று வந்த தலங்களைக் கூறும் முறையில் கூடல், புனவாயில், கொடுங்குன்று, பரங்குன்று, குற்றாலம், ஆப்பனூர், திருப்பூவணம், திருநெல்வேலி, திருவேடகம், திருவாடானை, திருக்கானப்பேர், திருசுழியல், இராமேசுவரம், திருப்பத்தூர், இவை முதலாகிய பாண்டி நாட்டுத் தலங்களுக்குச் சென்று குறிசொல்லிக் காலங்கழித்ததாகக் கூறுகிறாள்[3]. பாண்டி பதினாலு தலங்கள் இங்ஙனம் அடிகளால் குறத்திகூற்றாகக் கூறப்பெற்றுள்ளன. அடிகள் இத்தகைய தலங்களுக்குச் சென்று வழிபட்ட குறிப்பே இவ்வாறு இடம் பெற்றுள்ளது என்று கருதுதல் பொருந்தும். பல்வேறு தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபடுதல் வேண்டும் என்னும் அறிவுரை அடிகளால் இம்முறையில் கூறப்படுகிறது எனலாம். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் சிறப்புக்களைத் தாம் சென்று பாடியுள்ள தலங்களைப் பற்றிய நூல்களில் அடிகள் விளக்கியிருப்பதும் ஈண்டுக் கருதத்தகும்.

"ஆனந்த வல்லியுடன் ஆனந்தக் கானகத்தே
ஆனந்தக் கூத்தா டருட்கடலை - ஆனந்தம்
கொள்ளத் திளைத்தாடும் கூடாதேல் இப்பிறவி
வெள்ளந் திளைத்தாடு வீர்". (684)

---

1. சித்தியார். சூ.1:55
2. 604
3. மீ.கு. 21

என்று காசி இறைவனாகிய அருட்கடலில் திளைத்தாடச் சொல்கிறார். இல்லாவிடில் பிறவியாகிய வெள்ளத்தில் திளைத்தாட வேண்டும் என்பதை அறிவுரையும் எச்சரிக்கையுமாக அடிகள் உணர்த்துகிறார். பிறவாத பேரின்பம் பெறுதற்கு இறைவனை அடைந்து திளைத்தாடுதலே வழி என்பதை இவ்வகையிலும் நன்கு உணர்த்தக் காண்கிறோம். தாம் அனுபவித்த அனுபவத்தைப் பிறரும் பெற்றுப் பிறவாத இன்பமுற அடிகள் இவ்வாறு வற்புறுத்துகின்றனர். தலங்களுக்குச் சென்று கோவில் வழிபாடு மேற் கொள்ளுதல் உடன் உணர்த்தப்படுதலும் உணரத்தகும்.

இந்திரன், பிரமன், திருமால், ஆகிய பதவிகள் ஆரா இன்பம் உடையன என்று கூறப்பெற்றாலும், அவையும் வல்வினைகளை வருவிக்கும் ஆதலின் அடிகள் அவ்வகைப் பிறப்பினை வேண்டாதவராய் விளங்குகின்றனர்.[1] எனவே இத்தகைய உயர்ந்த பதவிகளும் பிறவி தருவனவே என்பதை உணர்த்தியருள்கின்றனர் அடிகள். அவாநீக்குதல், பிறவிநீக்கி வீடுபெற வேண்டத்தக்கது என்பது இவ்வகையில் புலனாக்கப்படுகிறது

எமனுக்கு அஞ்சாதிருக்க வழி

சிவக்கொழுந்தைப் போற்றியும், அஞ்சலிசெய்தும், பற்றியும் நின்றால் கூற்றடிக்கு அஞ்சிக் குலைய வேண்டுவதில்லை என்கிறார் அடிகள்.[2] இறைவன் சேவடியைக் கண்டு வழிபடுபவர்கள் எமனுடைய தண்டனை பெறமாட்டார்கள்:

"நாதரிவர்
சேவடிக்கண் டாரே திறம்பிழைத்துத் தென்புலத்தார்
கோவடிக்கண் டாரே குலைந்து" (693)

என்கிறார் அடிகள். இறைவன் அடியைப்பற்றினால் எமதண்டம் இல்லை என்று இவ்வாறு வலியுறுத்தக் காண்கிறோம். எமன் வந்தகாலத்தில் அஞ்சிக் கூகாவென்று கதறுபவர்களைப் பார்த்து அடிகள், வாரேம் என்று

1. 569:26-35
2. 658

கூற வல்லமை இல்லாத அவர்கள், இறைவனிடம் சேர்ந்தால், எமனிடம் வாரேம் என்று கூறவும் வல்லமையுடையராகலாம் என்கிறார்.

"கூகா வென்று குரைப்பதல் லால்சமன்
வாவா வென்னின் வரேமென வல்லிரே
தேவே சன்பயில் தில்லையின் எல்லை
சேர்வீ ரேல்அது செய்யவும் வல்லிரே" (555)

இவ்வாறு எமனிடம் வாரேம் என்று கூறும் வகையில், இறைவனை அடைந்தால் தகுதியும் அஞ்சாமையும் பெறலாம் என்று வழிப்படுத்தக் காண்கிறோம். அடிகள் தமது இறையனுபவ நிலையில் எமனுக்கு அஞ்சாதவராய் விளங்கிய திறம் முன்னரும் குறிக்கப் பெற்றமை ஈண்டு நினைக்கத்தகும். நிலையாமையை உணர்ந்து மக்கள் இறைவாழ்வில் ஈடுபட வேண்டும் என்பதை வற்புறுத்துவதே அடிகளின் அறிவுரையாகும் எனலாம், இளமையும், செல்வமும், யாக்கையும் நீரில் குமிழிபோலவும், அலைகள் போலவும், எழுத்துப்போலவும் நிலையாமை உடையவை என்று புலப்படுத்தும் அடிகள் இறைவன் மன்றினை வழுத்தாதது ஏன்? என்று மக்களை வினவுகிறார்[1]. வாழ்நாள் வரம்பினை அறிய இயலாதிருப்பதால் காலந்தாழ்த்தாது தவம் மேற்கொள்ளப்பணிக்கும் அடிகள்[2], மக்கட்கு நிலையாமை உணர்வை வற்புறுத்தி, விரைந்து இறைவனடியைப் பற்றி நிற்கும் வகையில், எமனை அஞ்சாதிருக்கலாம் என்று கூறுகின்றனர் என்பது அறியத்தகும். திருகுசினக் கூற்றின் எயிற்றிடைக்கிடந்தும் நிலையாமைக்கு ஆட்பட்டும் - இறைவன் மாட்டு உருகாமலும், நெக்குடையாமலும், இறைவனாகிய தேனைப் பருகாமலும், கண்ணரும்பாமலும், மெய்பொடிக்காமலும் விளங்கும் நெஞ்சைப் பார்த்து, 'உனக்கென்ன பாவமோ' என்று அடிகள் கூறுகின்றனர்[3]. தம் நெஞ்சுக்குக் கூறுவாராய் மக்களை இறைவன்மாட்டு உருகியும், நெக்குடைந்தும், பருகியும், கண்ணரும்பியும், மெய்பொடித்தும் அருள்பெற்று எமனுக்கு அஞ்சாதிருக்க அறிவுறுத்துகின்றனர்என்பது உணரத்தகும்.

---

1. 489
2. 296
3. 629

எளிதினில் அரியது பெறுவதற்குரிய நெறி

எளிதாக அரிய வீடு பேற்றை அடைதற்கு உரிய வழியையும் அடிகள் சைவமரபில் காட்டுகின்றனர்.

'எளிதினில் தமியனேன் அரியது பெறுதற்கு
உளதோ நெறியொன்று உணர்த்துமின் நீரென
முத்தலம் தலங்களுள் முத்தித் தலமா
இத்தலம் உடைத்தென இசைத்தனர் சிலரே
அறிஞர்ஆங்கு உரைத்த உறுதிக் கட்டுரை
உலகியல் வழக்கும் புலனெறி வழக்குமென்று
இருவகை வழக்கிலும் நிலைபெற் றன்றே' (451 : 50 - 56)

என்கின்றனர். திருவாரூர், காசி, தில்லை, ஆகிய மூன்று தலங்களையும் முத்தித் தலங்களாகக் கூறும் மரபில் திருவாரூரில் பிறத்தலும், காசியில் இறத்தலும், தில்லையில் தரிசித்தலும் முத்திபெறும் வழிகளாகச் சுட்டப்படும். ஆயின் திருவாரூரிற் பிறத்தல் செயற்கையில் எய்தும் இயற்கைத்தன்று; காசியில் சென்று உடல் விடுகாறும் அங்கு வைகி முடிவதும் அரிது என்று கூறித் தில்லையில் இறைவன் திருக்கூத்துக் காண்டல் எளிதில் எய்தக்கூடியது என்கிறார் அடிகள். [1] அடிகள் திருவாரூர்த் தொடர்பாக ஒருநூலும், காசித் தொடர்பாக இரண்டு நூல்களும், தில்லைத் தொடர்பாக மூன்று நூல்களும் அமைத்திருத்தல் அறியப்படுதலின் இம்மூன்று முத்தித் தலத்துள்ளும் தில்லை அடிகளை மிகுதியும் ஈர்த்துள்ளது என்று கருதலாம். அடிகள் காசியில் இறைவன் திருவடி நீழலடைந்தனர் ஆயினும் தில்லைத் தலத்தைச் சிறப்பாக அடிகள் குறித்துள்ளனர் என்பது தகும். தில்லையில் சென்று தரிசிக்க முத்தி உறுதி என்பதை அடிகள் நன்கு வலியுறுத்தியுள்ளனர்.

தில்லை இறைவியையும் இறைவனையும் உள்ளத்தில் இருத்தி இன்பம் பெற நினைத்தலே நன்று என்று உணர்த்துகிறார்.[2] எளிய வழி என்பதை இவ்வாறு காட்டுதல் தெளிவு. நோய்க்கு இடமாகும் என்று

---

1. 451:57-72
2. சிவ.இ.13

அஞ்சி நீங்காமல் மலைப்பிளவுகளிலும், மலையிடங்களிலும் தவம் செய்கின்றவர்களை விளித்து, அடிகள், துயரின்றி எளிதில் பயன்பெறும் வழியாகத் தில்லைத்திருமன்றத்தைப் பணியுமாறு கூறுகிறார். [1]

காசியில் வைகி இறத்தலும், அடுத்து, அடிகளால் காட்டப்படும் முத்திக்குரிய வழியாக விளங்குகிறது. காசியில் வேறொன்றும் முயலாமலே நெடுந்துயில் செய்தால், இறைவன், சிறுவன் போலப் பணி செய்து முத்தித் திருவை நல்குவன் என்கிறார்;

"முயலாம லேதவ முத்தித் திருவை முயங்கநல்கும்
கயலார் பெருந்தடங் கண்ணிபங் காரருட் காசியிலே
செயலாவ தொன்றிலை வாளா நெடுந்துயில் செய்யுமுங்கள்
பயலாக வேபணி செய்வார் புவனம் படைப்பவரே" (621)

காசியில் இறத்தலால் எளிதில் முத்திகிட்டும் என்பதை அடிகள் காசிக்கலம்பத்தில் நன்கு வலியுறுத்தியுள்ளமை அறிகின்றோம். மூப்பால் நரைதோன்றியும், கண்கள் பஞ்சடைந்தும் உடல் திரைந்தும் விளங்குவதைக் கண்டு வருந்த வேண்டாம் என்று நெஞ்சுக்குக் கூறும் அடிகள், பெரியோர் குழாத்தோடு காசி நகரத்தை அடையுமாறு வழிப்படுத்துகிறார். [2] காசியில் இறந்தால் சாரூபம் கிடைக்கும் என்ற குறிப்பினை அடிகள் வற்புறுத்தும் முறையில், மூப்பினைக் கண்டு இரங்க வேண்டுவதில்லை என்று காசிக்குப் போகப் பணிக்கின்றமை அறிகின்றோம். சைவ சமய மரபில் விளங்கும் நம்பிக்கைகளை இங்ஙனம் அடிகள் வலியுறுத்தி, எளிதில் அரிய வீடுபேறடையும் நெறியை உணர்த்துகின்றனர்.

தொண்டரைச் சார்ந்தொழுகுமாறு கூறுதல்

இறையடிவர்களின் பெருமையும் சிறப்பும் அடிகளால் நன்கு உணர்த்தப் பெற்றுள்ளமை முன்னர் விளக்கப்பட்டது. [3] மக்கள் அவர்களைச் சார்ந்து ஒழுகுதற்குரியவர்கள் என்பதை அடிகள் நன்கு காட்டியுள்ளனர்.

---

1. 558
2. 665
3. பார்க்க இந்நூல் பக். 313 - 320

"நற்றவத் தொண்டர் கூட்டம்
பெற்றவர்க் குண்டோ பெறத்தகா தனவே" (460 : 27-28)

என்று கூறும் அடிகள் தமது அனுபவத்தின் வழியில் மக்களும் பயன்பெறுமாறு வழிப்படுத்துகின்றனர் என்பது தகும். உரைமுதிர்ந்தவர் குழாத்தொடும் கூடிவிளங்குதல் அடிகளால் வற்புறுத்தப்படுதலும் [1] இவ்வகையில் கொள்ளத்தகும்.

இறைவன் யாரிடம் வருவான் எனல்

இறைவனை அடைதற்கேற்ப உயிர்கள் தம்மிடம் கொள்ள வேண்டிய இயல்பினை அடிகள் உணர்த்தியுள்ளனர். தான் என்ற அகங்காரம் உடையவர்களுக்கு முன் இறைவன் ஒளித்தோடுபவன், தன்னை இழந்தவர்க்கு முன் யான் என்று சென்று அருள்பவன் என்கிறார்;

"தானென் றவர்முன் ஒளித்தோடித் தன்னை யிழந்தவர்முன்
யானென்று சென்றிடும் காசிப்பிரான்" (682)

இவ்வாறு அகங்காரமின்றித் தம்மை இழந்தவர்களிடம் இறைவன் வருவான் என்று உணர்த்துவதன் மூலம் அவ்வகையில் மக்கள் விளங்க வேண்டும் என்றும் வழிகாட்டக் காண்கிறோம். இருவினை ஒப்பும், மலபரிபாகமும், சத்திநிபாதமும் எய்தும் நிலை இங்குச் சுட்டப்படுகிறது எனலாம்.

இறைவன் எளியன் என உணர்த்தல்

இறைவன் எளியார்க்கு எளியவனாக அருள்கின்றவன் என்பதை அடிகள் புலப்படுத்துவதன் மூலம் யாவரும் அவனை அடைதற்குத் தடையில்லை என்று வழிப்படுத்தக் காண்கிறோம். மாபாதகந் தீர்த்தும், எளிய கரிக்குருவிக்கு அருளியும் இறைவன் விளங்குவதால் அவன் எளியார்க்கு எளியன் என்கிறார் அடிகள். [2] பிரமனும் திருமாலும் செருக்குக் கொண்டு விளங்கியதால் இறைவன் அவர்களுக்கு

---

1. 665
2. 191 : 14-19

அரியவன் என்று உணர்ந்து சொல்வோர் சொல்க; சுந்தரர் ஏவலுக்குப் பணிந்து பரவையார் வீட்டுக்கு இருமுறை தூதாக நடந்ததால் இறைவன் எளியனே என்று எளியனாகிய யானும் பணிகின்றேன் என்கிறார்;

"உருவலன் அருவலன் ஒருவன்மற்று இருவருக்கு
அரியவன் எனவுணர்ந்து அறைகுநர் அறைகமன்
பரவைதன் மனைவயின் பாவலன் ஏவலின்
இருமுறை திரிதலின் எளியனென்று எளியனும்
பரவுவன் மன்றம் பணிந்து" (518)

கண்ணப்பர்தம் எச்சில் பட்ட நீரை உவந்தாடியும், மிச்சில் ஊன் மிசைந்தும், செருப்படிக்குச் செம்மாந்தும், விசயன் வில்லடி பொறுத்தும், வழுதி பிரம்படிக்குவந்தும், சுந்தரர்க்காக இருமுறை பரவை மனைவயின் தூது நடந்தும் விளங்கியதால் இறைவனை,

"எளியரின் எளியர் ஆயினர்
அளியர் போலும் அன்பர்கள் தமக்கே" (344 : 24-37)

என்று புலப்படுத்தக் காண்கிறோம். இவ்வாறு அன்பர்களுக்கு இறைவன் எளியவன் என்பதை அடிகள் எடுத்துக்காட்டி, அவனை அடைய முயலுவோர் அன்பு காட்ட வேண்டும் என்பதைத் தெளிவாக்குகின்றனர் எனலாம்.

உறுதிகூறி உய்வழி காட்டல்

அடிகள் ஆணையிட்டு உறுதிகூறி மக்கள் உய்தற்கு உரிய வழியை உணர்த்துகின்றமையும் காண்கிறோம்:

"வம்மின் நமரங்காள் மன்றுடையான் வார்கழல்கண்டு
உய்ம்மின் உறுதி பிறிதில்லை - மெய்ம்மொழிமற்று
என்மொழி பிழையா தாகும்
பின்வழி நுமக்குப் பெரும்பயன் தருமே" (563)

என்கிறார். நம்மவர்களே வம்மின் என்று உலகோர்மாட்டுக்

கருணைகொண்டு விளித்து, இறைவன் வார்கழல் கண்டு உய்யுமாறும், இதைவிட உறுதி பிறிதில்லை இதுவே உண்மையான மொழி என்றும், இம்மொழி தவறாது என்றும், பின்னர்ப் பெரிய நன்மை உண்டாக்கும் என்றும் அழுத்தமாக வலியுறுத்திக் கூறுகிறார் அடிகள். இது வாயுறை வாழ்த்துக்குரியதாக அடிகளால் காட்டப்பட்டுள்ளது. வாயுறை வாழ்த்தினைப் பேராசிரியர் விளக்கும்போது,

> "வாய்-வாய்மொழி; உறை-மருந்து; வாயுறையென்பது, சொன் மருந்தெனப் - பண்புத் தொகையாம்; இனி, வாய்க்கட்டோன்றிய மருந்தென வேற்றுமைத் - தொகையுமாம்; மருந்து போறலின் மருந்தாயிற்று"

என்று குறிக்கின்றார். [1] வழிநனி பயக்கும் என்று, வேம்பும் கடுவும் போன்ற வெஞ் சொற்களையும் தடையின்றி வழங்கி அறிவுறுத்துவது வாயுறை வாழ்த்து என்று தொல்காப்பியம் விளக்கும். [2] எனவே பிற்பயன் பயத்தலைக் கருதி மருந்து போலக் கூறி அறிவுறுத்தும் வாயுறை வாழ்த்து முறையில் அடிகள் மக்கட்கு வழிகாட்டியிருத்தல் சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும். மெய்ம்மொழி மற்று என்மொழி பிழையாதாகும் என்று நம்பிக்கையோடு கூறியிருத்தல் அடிகளின் தகுதி நிலையை உணர்த்துவதாகவும் உள்ளது. திருஞானசம்பந்தர், தம் பாடல்களைப் பாடுவோர் இறையருள் பெறுவர் என்று பதிகங்களின் இறுதியில் கூறும் உறுதிமொழி அவர்தம் தேவாரத்தில் காணத்தகும்.

> "ஒருநெறியமனம் வைத்துணர் ஞானசம் பந்தன்னுரை செய்த
> திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தலெளிதாமே" [3]
>
> "பன்னுபாடல் பத்தும்வல்லார் மெய்த்தவத்தோர் விரும்பும்
> மன்னுசோதி யீசனோடே மன்னியிருப் பாரே" [4]

என்றாற்போல் திருஞானசம்பந்தர் உறுதிகூறி வழிப்படுத்துதல் போல் அடிகளும் கூறியுள்ளனர் என்று கருதலாம். இவ்வகையில் அடிகளைக் குட்டித் திருஞானசம்பந்தர் என்று வழங்கும் பொருத்தமும் தெளிவாகும்.

---

1. தொல் பொருள். செய்யுளியல். 111 உரை
2. தொல் பொருள். செய்யுளியல்.112
3. திருஞானசம்பந்தர் தேவாரம். பதிகம் 1 :11
4. மேற்படி பதிகம் ... 50 :11

அடிகள் பாடிய மும்மணிக்கோவையை நித்தம் துதிக்க வல்லார் எடுத்த பிறப்பிலேயே எய்தாத பேரின்பம் எய்துவர் என்று கூறியிருப்பதும் [1] இவ்வகையில் நோக்கத்தகும்.

இவ்வாறு நம்பிக்கையேடு உறுதிகூறி உய்யும் வழிகாட்டும் அடிகள், இறையருள் பெற்ற தகுதியினாலேயே கூறியுள்ளனர். பண்டார மும்மணிக்கோவை பாடியதை விளக்கும் போது இவ்வுண்மையை அடிகளே குறிக்கின்றனர். உள்ளத்தில் அருள் நின்று உணர்த்தத் தமது நாவில் உறைந்த கலைமகள் மாசிலாமணி தேசிகருடைய வண்புகழில் எள்ளளவுமட்டும் எடுத்து ஒரு தொடை யாக்கி இசைத்தனள் என்றும், தமது கள்ளம் பொருந்திய புலன் கொண்டு உரைக்கவில்லை என்றும் கூறக் காண்கிறோம். [2] எனவே அடிகள் கூறுவனயாவும் இறைவன் அருளால் கூறப்படுவனவாகவே விளங்குதலின் இவ்வாறு நம்பிக்கையோடு உறுதியாகக்கூறி உய்வழி காட்டுகின்றனர் எனலாம்.

"இறையருள் மேவிய நிலையில் வெளிப்படும் கூற்றுக்கள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவை. அவ்வாறு இறையருள் பெற்றவர்கள் கூறும் சொற்கள் இறைவன் கூறியவையாகவே வேறுபாடின்றிக் கொள்ளப்படுகின்றன. கிரேக்க நாட்டில் அபோலோ என்னும் தெய்வம் பின்னர் வருவதை முன்னதாக உரைக்கும் தெய்வமாகும். அத்தெய்வத்தின் அருள் பெற்ற அடியவர்கள் டெல்ஃபி என்னும் இடத்தில் கூறுவனயாவும் அத்தெய்வத்தின் உறுதியான கூற்றாகவே கருதப் பெற்றன" [3] என்று ஆங்கிலக் கலைக் களஞ்சியம் விளக்குதல் ஈண்டுக் குறிக்கத்தகும். அடிகளின் உறுதியான, நம்பிக்கையோடு கூடிய அனுபவ மொழிகள் யாவும் இவ்வகையில் உலகமக்கள் உய்தி பெறும் பொருட்டு இறையருளால் கூறப்பட்டுள்ளவை என்பது தகும்.

(ஆ) சமுதாய வாழ்வுக்கு வழி

நீதிகள்

அடிகள் இயற்றிய 'நீதிநெறிவிளக்கம்' உலக வாழ்வுக்குரிய நீதிகளை நன்கு எடுத்துக்காட்டும் சிறப்புடையதாக விளங்குவதாகும்.

---

1. 596 2. 597
3. "More especially is revelation thought to come through inspiration or 'possession' by a divine power. The words spoken by the individual thus 'possessed' are identified with the utterances of the God. The Greek Apollo was the God of prophecy, and the words spoken by his inspired priestess at Delphi were deemed to be the authentic voice of the God himself" - Encyclopaedia Britannica, vol.19,p.110.

கல்வி, செல்வம், காமத்தின் இழிவு, அரசன் இயல்புகள், நிலையாமை, உலகியல் ஒழுக்கம், துறவறம் முதலியவை பற்றி அடிகள் எளிமையும் இனிமையும் அமைய எடுத்துரைத்துள்ளமை முன்னர் விளக்கப் பெற்றது. [1] பிற இடங்களிலும் அடிகள் உலகவாழ்வுக்குரிய நீதிகளை உணர்த்தி வழிகாட்டியுள்ளமை ஈண்டுக் குறிக்கத்தகும்.

ஈகையும் இரவும்

ஈதலும் இரத்தலும் ஆகிய இருவேறியற்கையும் இவ்வுலகத்தில் என்றும் இருத்தலின் அவற்றை அடிகள் சுட்டிக் காட்டுகின்றனர். யானையும் செல்வமும் பிறவும் கொடுப்போர் கொடுக்கவும், நலம்பாடின்றி நாண்துறந்து அகல வறுமை அலைப்ப ஏற்போர் ஏற்கவும் இவ்விரு நிலைகளும் என்றும் உண்மையை எடுத்துக் காட்டுகிறார்.[2] கற்றனராயினும் கல்லாராயினும் இல்லை என்று அடைபவர்களுக்குக் காலம் கருதாமல், கருத்தினை நோக்காமல், சீலம் பார்க்காமல், தீக்குணம் கொள்ளாமல் அவர்கள் வேண்டிய பரிசு அனைத்தும் வரிசையோடளிப்பது வள்ளியோர் கடனாகும் என்று[3] இரவலர்க்கு ஈகைபுரியும் கடமையை வற்புறுத்துகின்றனர்.

செல்வமும் வறுமையும்

விறகு விற்றுக் கூலிகொண்டு வாழ்பவன் மகிழ்ந்திருத்தலையும், மன்னவன் ஆசையால் அழுக்குற்றுக் கவலையுற்றிருத்தலையும் காண்பதாகக் கூறி, ஆசையே கவலைக்குக் காரணம் என்பதைப் புலப்படுத்திச் செல்வம் என்பது சிந்தையின் நிறைவே என்றும், நல்குரவு என்பது அவாவே என்றும் உணர்த்துகின்றனர்.[4]

ஆன்றோர் பண்பு

முனிவதற்குக் காரணம் இருந்தும் ஆன்றோர்கள் முனிய மாட்டார்கள்; அதுவே ஆன்றோர் கடன் என்று உணர்த்துகிறார். [5] பிழை பொறுக்கும் பண்பு வேண்டும் என்பது இவ்வாறு வற்புறுத்தப்படுகிறது.

---

1. பார்க்க இந்நூல் பக். 143 - 152
2. 316 : 1-6
3. 593 : 31 -36
4. 475
5. 545 : சுரிதகம்

இல்லற இலக்கணம்

இல்லறம் எவ்வாறு சிறப்புடையதாகத் திகழ்வது என்பதை அடிகள் தெளிவுறுத்தியுள்ளனர். நூல்பல கற்றுத் துறைபோய் விளங்கும் மனைக் கிழவன், நற்குணம் நிறைந்த கற்புடைய மனைவியோடு வாழும் இல்லறத்தில் அன்பும் அருளும் தாங்கி, இனிய சொற்களோடு விருந்தினர்களைப் போற்றி, அருந்தவர்களைப் பேணி, ஐவகை வேள்வியும் ஆற்றி, நல்லறம் நிரப்பிப் பல்புகழ் நிறுவி வாழ வேண்டும்; பிறன்மனை நயவாமல், விலக்கப்படாத நாளில் மகப்பேறு குறித்து இருவரும் பெருநலம் துய்த்து விளங்குதல் வேண்டும்.[1] இவ்வாறு இல்லறமாண்பு எடுத்துரைக்கப்படுகிறது.

துறவற இலக்கணம்

இல்லறத்தில் நின்று துறவு கொள்வதைத் தமிழ்நூலோர் எடுத்துக் காட்டுகின்றனர். 'ஒழுக்கத்துநீத்தார்' [2] என்று திருவள்ளுவர் இதனைக் குறிப்பர்.

"காமஞ்சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொரு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" [3]

என்று தொல்காப்பியர் கூறுவர். 'இது, முன்னர் இல்லறம்நிகழ்த்திய தலைவனுந் தலைவியும் பின்னர்த் துறவறம் நிகழ்த்தி வீடுபெறுப என்கின்றது' [4]. என்று நச்சினார்க்கினியர் குறிக்கின்றனர்.

அடிகள் இல்லறம் மேற்கொள்ளாது இளமையிலேயே துறவு மேற்கொண்டவராயினும், தமிழ்மரபை வலியுறுத்தும் முறையில் இல்லறம் நிரப்பிய பின்னர்த் துறவறம் மேற் கொள்ள வேண்டும் என்று எடுத்துரைக்கக் காண்கிறோம். மனையறம் நிரப்பிக் கேள்வியினால் பேரறிவு எய்திப் பொருள், இன்பம் இவற்றில் பற்று நீங்கி அருள், பொறை, ஆற்றல், நிறை, பேரொழுக்கம், வாய்மை, தவம், தூய்மை

---

1. 451 : 24-33
2. குறள்.21
3. தொல்.பொருள்.கற்பியல்.51
4. மேற்படி நச்சினார்க்கினியர் உரை.பக்.275

இவற்றை மேற்கொண்டு ஓரறிவுயிர்க்கும் உறுதுயர் ஓம்பிக் காலால் நடந்து தோலினை உடுத்து என்பெழுந்த உடம்பினராய் ஊனினைச் சுருக்கித் துன்புறுதற்குத் துளங்காமல் மலையும் காடும் எய்திச் சருகும் காற்றும் நீரும் அருந்தி விளங்க வேண்டும் என்கிறார்; கடும் பனிக்காலத்தில் நீர்ப்பரப்பில் குளிரைப் பொறுத்தும், வேனிற் காலத்தில் ஐவகை அழலில் நின்று வெப்பத்தைப் பொறுத்தும் விளங்குதல் துறவற இலக்கணம் என்று விளக்கப்படுகிறது. [1] மனையறம் நிரப்பிய பின் துறவறம் இவ்வகையில் விளங்குதல் வேண்டும் என்று உணர்த்தியிருத்தல் சிறப்பாக நோக்கத்தகும். தவ முனிவர்கள் காமமாகிய தீப்பிணிக்கு அஞ்சித் தமது உடலை வாட்டுவர் என்றும் கூறக் காண்கிறோம். [2]

பிற அறங்கள்

கொல்லாமை, ஊனுண்ணாமை, கள்ளுண்ணாமை முதலிய அறங்களும் அடிகளால் ஆங்காங்கு உணர்த்தப் பெற்றன. [3] மக்கள் இவ்வறங்களை மேற் கொள்ளுதல் தக்கது என்பதே அடிகளின் கருத்தாகக் கொள்ளத்தகும்.

மன்னர்க்கு அறிவுரைத்து வழிகாட்டல்

மன்னவன் ஒற்றர் மூலம் கேட்டறிந்து, செய்ய வேண்டியற்றைக் கண்குறிப்பால் புலப்படுத்தல் வேண்டும் என்பதைச்,

“செவியிற் கண்டு கண்ணிற் கூறி
இருநிலம் புரக்கும் ஒருபெரு வேந்தன்” (475 : 4-5)

என்பதால் புலப்படுத்துகிறார் அடிகள். அரசியல் கோடாமல் சிவனடியவர்களைப் பேணும் மன்னவர்கள் சிவபெருமானுடைய திருவருட்காப்பால் வழிவழியாகச் சிறந்து வாழ்க என்று வாழ்த்தக் காண்கிறோம்:

---

1. 451 : 34-46
2. 473
3. பார்க்க. இந்நூல். பக். 332 - 334

"அரசியல் கோடாது அரனடியார்ப் பேணும்
முரசியல் தானைவேல் மன்னர் - பரசோன்
கழலிணை பொதுவில்காப் பாக
வழிவழி சிறந்து வாழியர் பெரிதே" (561)

என்று வாழ்த்தும் அடிகள், அரசியல் கோடக் கூடாதெனவும், சிவனடியார்களைப் பேண வேண்டும் என்றும் மன்னர்களுக்கு அறிவுறுத்தியிருத்தல் சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும். புறநிலை வாழ்த்துக்கு எடுத்துக்காட்டாக அடிகள் பாடியுள்ள இப்பாடல், மன்னவர்கள் சைவ மரபினைக் காப்பவர்களாக விளங்க வேண்டும் என்ற குறிப்புடையதாக இருத்தல் அறியத்தகும்.

இங்ஙனம் அடிகள் சமயவாழ்வுக்கும் சமுதாய வாழ்வுக்கும் மக்களை வழிப்படுத்தி மேன்மையுறுமாறு செய்துள்ளமை அவர்தம் அரும் பணியாகக் குறிக்கத்தகும். உயர்ந்த இறையனுபவம் வாய்க்கப் பெற்ற அடிகள் பிறரையும் தம்மைப்போல் பயனுறும் வகையில் வழிகாட்டியுள்ள கருணைத்திறம் அவர்தம் பாடல்கள் வாயிலாக என்றும் நிலவி நிற்றல் தெளிவு.

★★★★★

முடிவுரை

இம்மை வாழ்வுக்கு அப்பால் உள்ள வாழ்வுக்கு வழிகாட்டுவதாய், மேலான அனுபவம் வாய்ந்த சான்றோர் வாழ்வின் விலைமதிப்பரிய உயிரோட்டக் கருவூலமாய் என்றும் நின்று நிலவுவதே சிறந்த நூலாகும் என்று மில்டன் அழகுறக் கூறுவதை, டபுள்யூ.எச்.அட்சன் நன்கு எடுத்துக்காட்டுவதோடு அத்தகைய மேலோர்தம் தாக்கம் நம்மிடம் விரைந்து பதியுமாறு - அவர்தம் உணர்வோட்டம் நம்மிடம் விரைந்து பதியுமாறு - அவர்தம் உணர்வோட்டம் நம்மிடம் நன்கு நிலவுமாறு நூற்பயன் கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார்.[1] மேலும், எவற்றிலும் ஆன்மிகப்பொருளையும் அழகையும் கண்டு அனுபவித்து, அவ்வனுபவ நிலைகளை நாமும் எய்துமாறு சொல்லும் திறலுடையவரே மெய்ப்புலவர் என்றும் தெளிவாக்குகிறார்[2].

பிரௌனிங் என்பார், தத்துவமே முதன்மையுடையது என்றும், அதன் விழுமிய விளைவாக, அடுத்துத் தோன்றுவதே கவிதை என்றும் குறிப்பிடுகின்றார்[3].

தத்துவ உண்மையினை ஏதேனும் ஒரு வகையில் புலப்படுத்தாத கவிதையை இயற்றிய புலவரைத் தாம் மதிப்பதில்லை என்று லோவெல் என்பார் கூறுகின்றனர்.[4]

---

1. "A good book', as Milton finely says in words which, however hackneyed, can hardly be too often repeated, 'is the precious life-blood of a master-spirit, embalmed and treasured up on purpose to a life beyond life. "To throw open our whole nature to the quickening influence of such a master-spirit, to let his life blood flow freely into our veins, is the preliminary step in literary culture - the final secret of all profitable reading" - An introduction to the study of Literature, W.H.Hudson. p. 15-16

2. "The true poet, whatever his range and quality, is one in whom the power of seeing and feeling the sensuous beauty and spiritual meaning of things exists in a pre-eminent degree, and to whom, moreover, another special power has been granted - the power of so expressing and interpreting what he sees and feels as to quicken our own imaginations and sympathies, and to make us see and feel with him" - Ibid. pp. 90-91.

3. "Philosophy first, and poetry, which is its highest outcome, afterwards" (Browning), quoted by W.H. Hudson. Ibid. p.94

4. "No poem ever makes me respect its author which does not in some way convey a truth of philosophy" (Lowell), quoted by W.H.Hudson, Ibid. p.94

இக்கருத்துக்களுக்கு எடுத்துக்காட்டாகக் குமரகுருபர அடிகள் தாம் அனுபவித்த மேலான இறையனுபவங்களையும் சமயக் கருத்துக்களையும் மக்கள் யாவரும் பின்பற்றி உய்தி பெறும் வகையில் கலைநலஞ்சான்ற பாடல்களாக அமைத்து, நிலைபேறுடைய உண்மை இலக்கியம் படைத்த புலவராகத் திகழ்கின்றனர் ; வாழ்க்கை நெறியையும், இறையுணர்வையும் இறையருள் நிலைகளையும், சமய மரபுகளையும் நன்கு உணர்த்தும் வகையில் அடிகளின் பாடல்கள் அனைத்தும் பெரும்பயன் விளைவிப்பனவாக ஒளிர்கின்றன என்பது தகும்.

இதுகாறும் ஆறு இயல்களில் அடிகளின் பாடல்கள் ஆராயப் பெற்றன. கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கங்கைக் கரை வரை சென்று சைவமும் தமிழும் வளர்த்த வரலாற்றுச் சிறப்புடையவராக அடிகள் விளங்குதல் குறிக்கத்தக்கதாகும். அடிகள் பாடிய பாடல்கள் அனைத்தும் விழுமிய சைவ சமயக் கருத்துக்களை உணர்த்துவனவாய் அடிகளின் அனுபவ மொழிகளாய் – பல்வகை அணிநலங்களும், யாப்புச் சிறப்பும், பொருள் மரபுகளும், சொன்னலங்களும் பொதிந்து இன்புறுத்தும் இலக்கியப் பண்புகள் ஒருங்கு திகழ்வனவாய் – தமிழ் மணம் கமழ்வனவாய் – விளங்குதல் உணரத்தக்கதாகும். தமிழிலக்கிய வரலாற்றிலும் சைவ சமய வரலாற்றிலும் அடிகள் சிறப்பும் மேன்மையும் வாய்ந்த நல்லிடம் பெற்று விளங்குகின்றனர் என்பது தேற்றம். பல்வகை யாப்பிலும் கவினுறப் பாடும் வல்லமை பெற்றுக் கவிஞர் ஏறாக விளங்கியமை தனிச் சிறப்பாகும். மக்கட்கெல்லாம் வழிகாட்டும் ஒளிவிளக்காக அடிகள் திகழ்ந்துள்ளனர்; பாடல்களை அதற்குரிய கருவியாக மேற்கொண்டுள்ளனர். இறையுணர்வையும் அதற்குரிய ஒழுக்கங்களையும் புலப்படுத்துவனவாக அடிகளின் பாடல்கள் யாவும் விளங்குவன என்பது தகும். மனித வாழ்க்கை முழுமையடைவதற்கு இத்தகைய இறையுணர்வு நூல்கள் இன்றியமையாதவை.

"முழுமையான – தடுமாற்றமில்லாத – வாழ்க்கைக்குச் சமய உணர்வு இன்றியமையாதது என்றும், அஃதில்லாவிடில் மனிதன், நன்மைதரக்கூடிய நெருக்கமான ஒன்றை இழந்தவனாய்க் குறைபாடுடையவனாகிறான்" என்றும் உளநூலறிஞர்கள் வலியுறுத்துவதை டபுள்யூ.பி.செல்பி என்பார் எடுத்துரைக்கின்றனர்.[1]

"மனிதன் இறைவனுக்குரியவன்; இறைவனைக் கண்டறிந்தாலன்றி மனிதனுடைய உள்ளம் அமைதியடையாது" என்று அகஸ்டைன் என்பார் உணர்த்துகின்றனர்[2].

இத்தகைய அறிவையும் உணர்வையும் பெறுவதும், பிறரைப் பெறும்படி செய்வதும் சமய அடியவர்கள் கடமை எனலாம். அடிகள் இவ்வகையில் நற்றொண்டாற்றியுள்ளனர்.

"இடைக்காலத்தில் வாழ்ந்த அனுபூதியாளர் ஒருவர் கூறியதைப் போல, வெவ்வேறு விளக்குகளில் வெவ்வேறு வகையான எண்ணெய் ஊற்றப்பட்டிருந்தாலும், வெவ்வேறு வகைத் திரிகள் இடப்பட்டிருந்தாலும், விளக்குகள் எரியத் தொடங்கும்பொழுது நமக்கு ஒரே நெருப்புத்தான் கிடைக்கிறது ; ஒளியும் ஒன்றாகத்தான் இருக்கின்றது" என்று டாக்டர் எஸ். இராதாகிருட்டினன் எடுத்துக் காட்டுகின்றார்[3]. சமயங்களின் பயன் ஒன்றே என்பது இவ்வாறு குறிப்பிடப்படக் காண்கிறோம். குமரகுருபர அடிகள் தாம் மேற்கொண்ட சைவ சித்தாந்த மரபில் மக்களுக்கு வழிகாட்டியுள்ளனர். வறிதே அறிவுரையாகக் கூறாமல் பாடல்கள் வாயிலாக மனதில் பதியுமாறு தொண்டாற்றியுள்ளமை என்றும் நிலைத்த பயன் தருவதாகத் திகழ்கின்றது.

"சமயம், தத்துவம் ஆகிய இயல்கள் சாத்திரமாக அன்றிக் கவிதையாக வடிக்கப்பெறின், கற்பார்க்கு அறிவு நல்கி, இன்பமும் ஊட்ட வல்லவையாகும். கவிதைக்கு அடிப்படையானது உணர்வேயாதலின்,

1. They (Modern practical Psychologists) arque that religion is necessary to a wholesome and well-balanced life, and that, lacking it, men lack something which is intimately bound up with their well-being" - The Psychology of Religion, by W.B. Selbie. P. 24

2. "That man is made for God and that his heart is restless until it finds Him" (Augustine) - quoted in 'the Psychology of Religion' P. 24

3 இந்துசமயத் தத்துவம், டி.எம்.பி. மகாதேவன் – தமிழா. ஞா. இராஜா பகதூர் (மதிப்புரை. என். ராதாகிருஷ்ணன்) பக். IV

அறிவுக்கு மட்டும் புலனாகும் சமய, தத்துவ உண்மைகள் அருளாளரால் நுகரப்பட்டு, அவர்களின் உணர்வுகளாகிப் பின்பு அவர்களிடத்தே கவிதை வடிவில் வெளிப்படும்போது, அக்கலைவடிவம் பிறரும் சுவைப்பதாக அமைகின்றது. ஆதலின் கவிதைக் கலை தன்னை ஆள்பவருடைய உணர்வின் இயல்பான வெளிப்பாடாகவும், அவ்வுணர்வைப் பிறர் மனத்தே உருவாக்கும் கருவியாகவும் அமைகின்றது. இதுவே அதன் தனிச்சிறப்பாகும்" என்று டாக்டர் சுப. அண்ணாமலை அவர்கள் குறிக்கின்றனர். [1]

அடிகளின் தொண்டு இவ்விளக்கத்துக்கு முற்றிலும் பொருந்தி விளங்குவதாகும். பெருங்காப்பியம் பாடும் தகுதி உடைய அடிகள் பாடியுள்ள பாடல்கள் இறையுணர்வு என்னும் உயிரோட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை. கலை நலத்துக்காக மட்டும் கவிதை பாடியவரல்லர் அடிகள். கலை வாழ்க்கைக்காகவே என்று வலியுறுத்தும் முறையில், உயிர்கள் உய்தி பெற்றுப் பேரின்ப வாழ்வாகிய வீடு பேறடையும் நெறியில் செலுத்துவதே அடிகளின் தலையாய குறிக்கோள் என்பது தெளிவு.

படைக்கும் பிரமனும் புலவர்க்கு ஒப்பாகான் என்று கூறியிருத்தற்கேற்பவும்[2], பெரியவர்கள் தம் சொல் ஒன்றால் அனைத்துலகும் யாப்பர் என்று விளக்கியிருத்தற்கேற்பவும்[3] அடிகள் மக்களுக்கு இறையுணர்வை ஊட்டி இறவாத இலக்கியம் படைத்தருளியுள்ளனர்.

வாழ்க்கைப் பயணத்தில் முடிந்த நிலையினைப் பற்றிய எண்ணம் சிறிதும் இன்றி வறிதே காலங்கழிக்குமாயின், மக்களினம் எவ்வாறு உய்யும்? இறைவன் வார் கழலைப் பற்றிக் கொள்வதே வழி என்பதை உணரச் செய்வதை அடிகள் தம் பணியாகக் கொண்டு தொண்டாற்றியுள்ளனர். நமரங்காள் என்னே வழுத்தாதது எம்பிரான்மன்று[4] என்று மக்கள்பால் உரிமையுடன் உணர்த்துகின்ற உயிரிரக்கத்தை என்னென்பது!

---

1. உருவும் உணர்வும், டாக்டர் சுப. அண்ணாமலை, பக். 1
2. 212
3. 260
4. 489

"பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்" (481)

என்று வழிப்படுத்தும் ஆர்வத்தை என்னென்பது! மக்களினம் இறைவனை நினைந்தும், சொல்லியும், இறைஞ்சியும் உய்தி பெற வேண்டும் என்பதே அடிகளின் அனுபவ மொழியாக அவர்தம் பாடல்கள் அனைத்திலும் ஊடுருவி நிற்பதை உணர்தல் இன்றியமையாததாகும்.

வினையின் நீங்கிய விளங்கிய அறிவுடைய முனைவராய், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருளையும் ஒருங்கு பயக்கும் விழுமிய, நிலையான இலக்கியம் படைத்த பெரும்புலவராய்த் தமிழ் நலமெல்லாம் தகவுறக் காட்டி யாவரையும் ஈர்க்கும் சான்றோராய்ச், சித்தாந்த நெறியில் இறையடியடைந்த தவப்பெருந் தொண்டராய்த் திகழும் குமரகுருபர அடிகளின் புகழ் என்றும் நின்று நிலவும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

(கட்டளைக் கலித்துறை)


இறவா இலக்கியம் இன்றமிழ் தன்னில் இறைத்தொடர்பாய்ப்
பிறவா நலம்பெறப் பேசும் குமர குருபரனார்
உறவெனத் தந்த உயர்மலர் கொண்டே உளம்திருத்திச்
சிறப்பெனும் செம்பொருள் தேறி உயர்க உலகினரே.

தெய்வத் தமிழ்நலம் தேக்கியே சித்தாந்த உண்மைகளை
மெய்ம்மைக் கவிஞராய் மேதினி உய்வகை காட்டியவர்
வெய்ய வினைப்பயன் மேவாது வீடுபே றெய்தியவர்
செய்ய குமர குருபரர் சீரடி போற்றுவமே.


*****

பிற்சேர்க்கை - 1
குமரகுருபர அடிகள் வரலாற்றுப் படங்கள் (15)


ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் சரித்திர வரலாற்றுப் படங்களும் கந்தர் கலிவெண்பா விளக்கப்படங்களும் தமிழ், இந்தி, ஆங்கிலத்தில் குமரகுருபர சுவாமிகள் சரித்திரச் சுருக்கமும் என்ற திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் வெளியீட்டிலிருந்து (18.5.1965) அடிகளின் வரலாற்றுப் படங்கள் பின்வரும் பக்கங்களில் (VI - XX) தரப்படுகின்றன.




வித்தக விநாயக விரைகழல் சரணே ஓங்கார மாகிய உயர்குகன் அருளால் தீந்தமிழ் தரவரு தெய்வக் குழவி




செந்திலாண்டவன் திருவருள் பெற்றுக் கந்தர் கலிவெண்பாப் பாடியருளியது.




தெய்வக் கவிஞரைச் சிவிகையில் ஏற்றித்
திருமலை நாயகர் திருவிழாக் கண்டது.




நாயக மன்னன் மடியமர்ந்து உலக நாயகி நற்றமிழ்
நயந்து கேட்டது.




கிள்ளை மீனாட்சி பிள்ளைத்தமிழ் கேட்டு
ஒள்ளிய முத்தின் மாலை சூட்டியது.




கமலைத் தியாகரைக் கண்டு களித்தங்கு
அமல நான்மணி மாலை அருளியது.



கந்த புரிக்குகன் கவிஞரை அழைத்துப்
பிள்ளைத் தமிழ் கேட்டு உள்ளம் உவந்தது.




ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள ஆனந்தக் கூத்தன்
அரும்புகழ் உரைத்தது.




கண்டருள் பெற்று மாசிலா மணிக்கோர் பண்டார மும்மணிக் கோவை பகர்ந்தது.




கங்கையும் யமுனையும் கரந்த வாணியும் மங்கையர்க் கிறைவியாக் கண்டு மகிழ்ந்தது.



அந்தி வண்ணன் அழகமை காசியை முந்துறக் கண்டு முனிவரர் மகிழ்ந்தது.




வெண்டாமரை முதல் விழுமிய கவியால்
தண்டா மரையாள் கலையெலாம் தந்தது.



தவராஜ சிங்கம் தவப்பெருஞ் சிங்கத்து அமர்ந்து
அவைக்கேக அரசெதிர் கொண்டது.



காசியிற் கருடன் காட்டிய இடத்தைக் குமர குருபரர்க்கு
அருள்பெறக் கொடுத்தது.



கங்கைக் கரையிற் கேதாரம் நிறுவி ஆங்கோர் மந்திரம் அமைத்த நகரம்

பிற்சேர்க்கை - 2

மதுரைக் கலம்பகத்தில்

யாப்பு வகைகளும் கலம்பக உறுப்புகளும்

அ) யாப்பு வகைகள் :	பாடல் எண்ணிக்கை
1. மயங்கிசைக்கொச்சகக் கலிப்பா - 105	1
2. நேரிசை வெண்பா - 106, 112, 114, 131 140, 152, 158, 160, 171, 174, 179, 186, 200	13
3. கலித்துறை - 104, 107, 109, 116, 120, 124, 137, 141, 149, 153, 157, 167, 177, 183, 188, 201, 110, 143, 165, 169, 190, 182	22
4. மருட்பா - 148	1
5. ஆசிரியப்பா - 151, 191, 206	3
6. கலிப்பா - 133, 135, 144, 113, 130 136, 142, 156, 161, 172	10
7. ஆசிரிய விருத்தம் - 108, 111, 118, 121, 122, 147, 162, 164, 166, 170, 178, 181, 189, 194, 195, 197 199, 204, 119, 123, 134, 138, 146, 176, 184, 185, 187, 198, 202, 128, 132, 139, 159, 163, 175, 180, 192, 150, 154, 155, 193, 196, 203, 205, 115	45
8. கலிவிருத்தம் - 129, 145, 173	3
9. கலித்தாழிசை - 117, 127	2
10. வஞ்சிவிருத்தம் - 126, 168	2
11. வஞ்சித்துறை - 125	1
ஆகப்பாடல்கள்	103

ஆ) கலம்பக உறுப்புகள்

1.	புயவகுப்பு - 115	1
2.	தவம் - 187	1
3.	வண்டுவிடுதூது - 132	1
4.	அம்மானை - 117	1
5.	பாண் - 178	1
6.	மதங்கியார் - 119	1
7.	கைக்கிளை - 148	1
8.	சித்து - 161	1
9.	ஊசல் - 127	1
10.	களி - 128	1
11.	மடக்கு - 130, 142, 162	3
12.	ஊர் - 147, 204	2
13.	மறம் - 180	1
14.	காலம் - 159	1
15.	தழை - 124	1
16.	இரங்கல் - 113, 123, 138, 197, 202; 109, 114, 118, 203, 110, 133, 135	12
17.	சம்பிரதம் - 185	1
18.	கார்தூது (மேகவிடு தூது) - 184	1
19.	மடல் - 137, 175	2
20.	கொற்றியார் - 139	1
21.	பிச்சியார் - 136	1
22.	வலைச்சியார் - 170	1
23.	இடைச்சியார் - 166	1
24.	பறவை விடுதூது - 134	1
25.	கிள்ளைவிடுதூது - 157, 179	2

26. கார் - 165, 201 2

27. குறம் - 181 1

அகப்பொருள் மரபில் அமைந்த பாடல்கள்

111, 116, 120, 121, 122, 125, 126, 129, 131, 143, 144, 145, 146, 149, 150, 154, 155, 156, 158, 160, 163, 164, 167, 168, 169, 171, 173, 176, 177, 182, 183, 186, 188, 189, 190, 192 193, 194, 195, 198, 199 41

புறப்பொருள் மரபில் அமைந்த பாடல்கள்

104, 105, 106, 107, 108, 112, 140, 141, 151, 152, 153, 172, 174, 191, 196, 200, 205, 206 18

ஆகப்பாடல்கள் 103

பிற்சேர்க்கை - 3
காசிக் கலம்பகத்தில்
யாப்பு வகைகளும் கலம்பக உறுப்புகளும்

அ) யாப்பு வகைகள் : பாடல் எண்ணிக்கை

1. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா - 600 1
2. நேரிசை வெண்பா - 599, 601, 604, 609, 612 617, 630, 631, 635, 651, 678, 684, 690, 693 14
3. கலித்துறை - 602, 605, 607, 610, 619, 621, 623, 624, 626, 633, 642, 645, 647, 658, 660, 663, 667, 673, 674, 680, 682, 687, 694, 625, 655, 681 27
4. மருட்பா - 668 1
5. ஆசிரியப்பா - 636, 656, 699 3
6. கலிப்பா - 614, 615, 616, 622, 628, 634, 675,

	677, 683, 688, 618, 653, 654	13
7.	ஆசிரிய விருத்தம் - 606, 608, 611, 613, 620, 627, 629, 637, 640, 641, 643, 644, 646, 648, 649, 652, 657, 659, 662, 665, 670, 672, 676, 679, 686, 691, 692, 697, 698, 671, 696, 638, 661, 695, 603	35
8.	கலிவிருத்தம் - 664, 685, 689	3
9.	கலித்தாழிசை - 632, 650	2
10.	வஞ்சிவிருத்தம் - 669	1
11.	வஞ்சித்துறை - 666	1
	ஆகப்பாடல்கள்	101

ஆ) கலம்பக உறுப்புகள்

1.	புயவகுப்பு - 603	1
2.	வண்டுவிடுதூது - 657	1
3.	அம்மானை - 632	1
4.	பாண் - 656	1
5.	மதங்கியார் - 649	1
6.	கைக்கிளை - 668	1
7.	சித்து - 635	1
8.	ஊசல் - 650	1
9.	களி - 638	1
10.	மடக்கு - 627, 628, 696	3
11.	ஊர் - 630, 631, 669, 676	4
12.	மறம் - 643	1
13.	தழை - 645	1
14.	சம்பிரதம் - 671	1

15. கார்தூது (மேகவிடு தூது) - 672	1
16. கொற்றியார் - 620	1
17. பிச்சியார் - 614	1
18. பறவை விடுதூது - 602, 691	2
19. குறம் - 641	1
20 பாங்கி விடுதூது - 655	1
அகப்பொருள் மரபில் அமைந்த பாடல்கள்	
605, 606, 608, 609, 610, 611, 613, 618, 623, 624, 625, 626, 639, 642, 644, 648, 651, 652, 653, 654, 659, 660, 662, 663, 664, 667, 673, 674, 675, 677, 679, 681, 683, 685, 686, 692, 694, 695, 698	39
புறப்பொருள் மரபில் அமைந்த பாடல்கள்	
599, 600, 601, 604, 607, 612, 615, 616, 617, 619, 621, 622, 629, 633, 634, 636, 637, 640, 646, 647, 658, 661, 665, 666, 670, 678, 680, 682, 684, 687, 688, 689, 690, 693, 697, 699	36
ஆகப்பாடல்கள்	101

பிற்சேர்க்கை - 4

குமர குருபர அடிகள் அருளிய

கைலைக் கலம்பகத்தில் கிடைத்துள்ள எட்டுப் பாடல்கள்

நேரிசை வெண்பா

1. கங்கைச் சடையுங் கயிலைப் பிரானிமய
மங்கைக் கமுதாம் வடிவழகுஞ் - சங்கத்
திருத்தோடுங் கண்டுளத்திற் சிந்தித்தாற் கால
மிருத்தோடு மோடும் வினை.

நேரிசை வெண்பா

2. தேமாம் பொழிலுடுத்த தென்வைகுந் தைக்கயிலைக்
கோமானை முக்கட் கொழுங்கனியைக் - காமருபூந்
தாமச் சடையானைத் தாடொழுதாற் புன்புழுக்கூ
டாமச் சடையா னயன்.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

3. தன்னந் தனியே நின்றுமதித் தழனின் றெரியச் சமைந்திடுமென்
னன்னஞ் சுவையா ரமுதெனநஞ் சமுதாக் கியதா மறிவாரோ
பொன்னம் பலமும் வெள்ளிமன்றும் பொதுவென் றுரிமைத் திருத்தொண்டர்
நன்னெஞ் சகத்து நாடகஞ்செய் நடத்தார் கயிலை யிடத்தாரே.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

4. கூற்றிருக்குங் கொலைமழுவுங் கொடியிருக்கு
மிடமருங்குங் கொண்டு தண்டே
னூ ற்றிருக்கும் பொழிற்கயிலை வீற்றிருக்கும்
பெருமானார்க் குரையீ ரந்தோ
மாற்றிருக்கும் பசும்பொன்முலை யுயிரிருக்கு
மிடந்தேடி வருந்தித் தென்றற்
காற்றிருக்குந் தமிழ்நாட்டிற் குடியிருக்க
முடியாது களிவண் டீரே.

(கட்டளைக் கலித்துறை)

5. கழியே கழிக்கரை யேகண்ட லேதெண் டிரைக்கடலே
சுழியே சுழிபடு தண்டுறை யேயொண் டுறைத்தமிழின்
மொழியேர்வை குந்தைக் கயிலேசர் வெற்பின் முழுவதும்பெண்
பழியே கொளக்கட வாரொரு கூற்றம் பகருமினே.

(பதினான்குசீர் ஆசிரிய விருத்தம்)

6. நங்கள் புன்க ணறுத்து ளக்க ணளிக்க வைத்த வருட்கணார்
நடன குஞ்சித பதமெ டுத்தொரு நாத கீத முழங்கிடக்
கங்கை பொங்கநன் மங்கை யொடுநட மாடு வார்மதி சூடுவார்
கயிலை நாதர்வை குந்த வாணர் கடுக்கை மாலை கொடுக்கிலா
ரங்கண் மாலையில் மதிய மல்ல வசைந்த தென்றலு மல்லவெற்
காகு லம்புரி கோகி லங்களல வரசு வாவென வுருவிலான்
மங்கு லறவிடு கங்கு லலவிள வாடையலவளர் கொம்பனார்
வம்பு மலமல ரம்பு மலவளை மாற்றமே கொடுங் கூற்றமே

(கலித்தாழிசை)

7. பூணுதற்கு வைத்ததுத்திப் பூணர்கயி லேசரொரு
வாணுதற்கு மாலானார் வைகுந்தத் தம்மானை
வாணுதற்கு மாலானார் வைகுந்தத் தாமாகில்
காணுதற்குக் கார்மேனி காட்டாரோ வம்மானை
கண்டமட்டில் மெத்தக் கறுத்திருப்பா ரம்மானை

(கலித்தாழிசை)

8. கைம்மான் மறியேந்துங் கண்ணுதலார் தென்கயிலைப்
பெம்மா னொருபாதிப் பெண்ணர்கா ணம்மானை
பெம்மா னொருபாதிப் பெண்ணரே யாமாகில்
அம்மா னருந்தனமுண் டாகாதோ வம்மானை
ஐயம் புகுவார்க் கருந்தனமே தம்மானை

குறிப்பு : மேற்கண்ட பாடல்கள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பில் (1925, குரோதன, சித்திரை, பக்.349-350) காணப்படுகின்றன. இவ்வெட்டுச் செய்யுட்களையும் வருந்திச் சேர்த்து வைத்திருந்தவர்கள் சுவாமிகளின் பரம்பரையினரும் ஸ்ரீவைகுண்டம் சண்முகசிகாமணிக் கவிராயரென்ற சண்முகக் கவிராயரவர்கள் குமாரரும் சுவாமிகளின் பணிவிடை நடத்தி வருபவர்களுமாகிய ச.குமரகுருபரன் கவிராயரவர்களாவார் - என்று இப்பதிப்பின் முன்னுரையில் (பக்.8) திருநெல்வேலி இந்துகலாசாலைத் தமிழ்ப்போதகாசிரியராயிருந்த திரு.வி.சிதம்பர ராமலிங்க பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

பிற்சேர்க்கை - 5 (அ)

குமர குருபர அடிகள் பாடியுள்ள யாப்பு வகைகளும் பாடல் எண்ணிக்கையும்

1.	**அ)வெண்பா வகை :**		
	1. குறள் வெண்பா	3	
	2. நேரிசை வெண்பா	185	
	3. இன்னிசை வெண்பா	12	
	4. பஃறொடை வெண்பா	6	
	5. நேரிசைச் சிந்தியல் வெண்பா	2	
	6. இன்னிசைச் சிந்தியல் வெண்பா	3	211
	ஆ) வெண்பாவினம்		
	7. குறள்வெண்செந்துறை	1	
	8. குறள் வெண்டாழிசை	3	
	9. வெள்ளொத் தாழிசை	2	
	10. வெண்டுறை	4	
	11. வெளிவிருத்தம்	2	12
2.	**அ) ஆசிரியப்பா வகை**		
	12. நேரிசை ஆசிரியப்பா	38	
	13. இணைக்குறள் ஆசிரியப்பா	1	
	14. நிலைமண்டில ஆசிரியப்பா	3	
	15. அடிமறிமண்டில ஆசிரியப்பா	1	43
	ஆ) ஆசிரியப்பாவினம்		
	16. ஆசிரியத் தாழிசை	2	
	17. ஆசிரியத் துறை	4	

18. ஆசிரிய விருத்தம் :	சாதாவிருத்தம்	சந்தவிருத்தம்		
அ) 6. சீர்விருத்தம்	62	4	66	
ஆ)7. சீர்விருத்தம்	1	14	15	
இ 8. சீர்விருத்தம்	22	2	24	
ஈ) 9. சீர்விருத்தம்	1	...	1	
உ) 10.சீர்விருத்தம்	1	8	9	
ஊ)12. சீர்விருத்தம்	175	6	181	
எ) 14. சீர்விருத்தம்	11	4	15	
ஏ) 16. சீர்விருத்தம்	....	3	3	
ஐ) 32.சீர்விருத்தம்	....	7	7	327
	273	48	321	

3. அ) கலிப்பா வகை

19. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா	1	
20. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா	1	
21. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா	1	
22. வெண்கலிப்பா	2	
23. கலிவெண்பா	2	
24. கொச்சகக்கலிப்பா	9	
25. தரவு கொச்சகக் கலிப்பா	2	
26. தரவிணைக் கொச்சகக் கலிப்பா	1	
27. சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா	1	
28. பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா	1	
29. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா	3	
30. கட்டளைக் கலிப்பா	17	41

ஆ) கலிப்பாவினம்				
31. கலித்தாழிசை			9	
32. கலித்துறை :				
அ) கட்டளைக் கலித்துறை	107			
ஆ) கலித்துறை	1			
இ) கலி நிலைத்துறை	5			
ஈ) விருத்தக் கலித்துறை	3			
உ) சந்தக் கலித்துறை	1			
	117	117		
33. கலிவிருத்தம்		7		133
அ) வஞ்சிப்பாவகை				
34. குறளடி வஞ்சிப்பா		1		
35. சிந்தடி வஞ்சிப்பா		1	2	
ஆ) வஞ்சிப் பாவினம்				
36. வஞ்சித் தாழிசை		1		
37. வஞ்சித் துறை		4		
38. வஞ்சி விருத்தம்		4	9	
5. மருட்பாவகை				
39. புறநிலை வாழ்த்து மருட்பா		1		
40. கைக்கிளை மருட்பா		3		
41. வாயுறை வாழ்த்து மருட்பா		1		
42. செவியறிவுறூஉ மருட்பா		1	6	
6. 43. சிந்து		29	29	
		813	813	

பிற்சேர்க்கை - 5 (ஆ)

யாப்பு வகைகளும் அவற்றில் அடிகள் பாடல்களும்

1. **குறள் வெண்பா :** 481, 482, 483 ஆகிய 3 பாடல்கள்

2. **நேரிசை வெண்பா :**
106, 112, 114, 131, 140, 152, 158, 160, 171, 174, 179, 186, 200, 207 முதல் 237 வரை, 239 முதல் 251 வரை 253 முதல் 271 வரை, 273 முதல் 306 வரை, 308, 309, 313, 317, 321, 325, 329, 333, 337, 341, 345, 450, 452, 455, 458, 461, 464, 467, 470, 473, 476, 479, 484 முதல் 489 வரை, 565, 567, 570, 573, 576, 579, 582, 585, 588, 591, 594, 599, 601, 604, 609, 612, 617, 630,631, 635, 651, 678, 684, 690, 693, மீ.இ : 1, 3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19 ; சிவ.இ : 1, 3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19 ; கைலைக்கலம் : 1, 2, – ஆகிய 185 பாடல்கள்

3. **இன்னிசை வெண்பா :**
238, 252, 272, 307, 490 முதல் 497 வரை – ஆகிய 12 பாடல்கள்

4. **பஃறொடை வெண்பா :**
498 முதல் 503 வரை – ஆகிய 6 பாடல்கள்

5. **நேரிசைச் சிந்தியல் வெண்பா :**
504, 505 – ஆகிய 2 பாடல்கள்

6. **இன்னிசைச் சிந்தியல் வெண்பா :**
506, 507, 508 – ஆகிய 3 பாடல்கள்

7. **குறள்வெண்செந்துறை :** 509 1 பாடல்

8. **குறள்வெண்டாழிசை :** 510, 511, 512 – ஆகிய 3 பாடல்கள்

9. **வெள்ளொத்தாழிசை :** 513, 514 – ஆகிய 2 பாடல்கள்

10. **வெண்டுறை :** 515, 516, 517, 518 – ஆகிய 4 பாடல்கள்

11. **வெளிவிருத்தம் :** 519, 520 – ஆகிய 2 பாடல்கள்

12. **நேரிசை ஆசிரியப்பா :**
151, 191, 206, 312, 316, 320, 324, 328, 332, 336, 340, 344, 348, 451, 454, 457, 460, 463, 466, 469, 472, 475, 478, 521, 522, 566, 569, 578, 581, 584, 587, 590, 593, 636, 656, 699 ; ப.மு.கோ. இறுதியில் 1 ; த.செ.ப.மு.கோ. 1 - ஆகிய — 38 பாடல்கள்

13. **இணைக்குறள் ஆசிரியப்பா :** 523 — 1 பாடல்

14. **நிலைமண்டில ஆசிரியப்பா :**
524, 572, 575 - ஆகிய — 3 பாடல்கள்

15. **அடிமறி மண்டில ஆசிரியப்பா :** 525 — 1 பாடல்

16. **ஆசிரியத் தாழிசை :** 526, 527 - ஆகிய — 2 பாடல்கள்

17. **ஆசிரியத்துறை :**
528, 529, 530, 531 - ஆகிய — 4 பாடல்கள்

18. **ஆசிரிய விருத்தம் :**

அ) 6 சீர்விருத்தம் (சாதா) :
108, 111, 118, 121, 122, 162, 164, 166, 170, 178 181, 189, 194, 195, 197, 199, 311, 315, 319, 323, 331, 339, 347, 532, 606, 608, 611, 613, 620, 627, 629, 637, 640, 641, 643, 644, 646, 648, 649, 652, 657, 659, 662, 665, 670, 672, 676, 679, 686, 691, 692; மீ.குறம் : காப்பு 3, 11, 14, 17, 20, 24, 27, 30 ; கைலைக்கலம் : 3, 4 - ஆகிய — 62 பாடல்கள்

6 சீர், சந்தவிருத்தம் :
147, 204, 438, 439 - ஆகிய — 4 பாடல்கள்

ஆ) 7சீர் விருத்தம் (சாதா) : 533 — 1 பாடல்

7சீர், சந்தவிருத்தம் :
119, 123, 134, 138, 146, 176, 184, 185, 187, 198 202, 343, 697, 698 - ஆகிய — 14 பாடல்கள்

இ) 8சீர், விருத்தம் (சாதா) :
128, 132, 139, 159, 163, 175, 180, 192, 327, 335,

534, மீ.குறம் : 15, 16, 18, 19, 21, 22, 23, 25, 26, 28, 29 - ஆகிய 22 பாடல்கள்

8சீர், சந்தவிருத்தம் : 5, 353 - ஆகிய 2 பாடல்கள்

ஈ) 9சீர் விருத்தம் (சாதா) : 535 1 பாடல்

உ) 10சீர் விருத்தம் (சாதா) : 536 1 பாடல்

10சீர், சந்தவிருத்தம் :
42, 43, 368, 369, 378, 379, 388, 389-ஆகிய 8 பாடல்கள்

ஊ) 12சீர் விருத்தம் (சாதா) :
2, 3, 7 முதல் 11 வரை, 14 முதல் 21 வரை,
24 முதல் 31 வரை, 34 முதல் 41 வரை,
44 முதல் 51 வரை, 54 முதல் 103 வரை,
349, 350, 354 முதல் 357 வரை
360 முதல் 367 வரை, 370 முதல் 377 வரை,
380 முதல் 387 வரை, 390 முதல் 397 வரை,
400 முதல் 407 வரை, 410 முதல் 437 வரை,
440 முதல் 449 வரை, 671, 696 - ஆகிய 175 பாடல்கள்

12சீர், சந்தவிருத்தம் :
22, 23, 32, 33, 52, 53 - ஆகிய 6 பாடல்கள்

எ) 14சீர் விருத்தம் (சாதா) :
150, 154, 155, 193, 196, 203, 205, 638,
661, 695 ; கைலைக்கலம் : 6 - ஆகிய 11 பாடல்கள்

14சீர், சந்த விருத்தம் :
398, 399, 408, 409 - ஆகிய 4 பாடல்கள்

ஏ) 16சீர், சந்தவிருத்தம் :
12, 358, 359 - ஆகிய 3 பாடல்கள்

ஐ) 32சீர், சந்தவிருத்தம் :
4, 6, 13, 115, 351, 352, 603 - ஆகிய 7 பாடல்கள்

19. **நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா :** 537 1 பாடல்

20. **அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா :** 538 1 பாடல்

21. **வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா :** 539 1 பாடல்

22. **வெண்கலிப்பா :** 540, 541 - ஆகிய 2 பாடல்கள்

23. **கலிவெண்பா :** 1, 542 - ஆகிய 2 பாடல்கள்

24. **கொச்சகக் கலிப்பா :**
133, 135, 144, 618, 653, 654;
மீ.குறம் : 12, 13, 51 - ஆகிய 9 பாடல்கள்

25. **தரவு கொச்சகக் கலிப்பா :** 543, 544 - ஆகிய 2 பாடல்கள்

26. **தரவிணைக் கொச்சகக் கலிப்பா :** 545 1 பாடல்

27. **சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா :** 546 1 பாடல்

28. **பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா :** 547 1 பாடல்

29. **மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா :**
105, 548, 600 - ஆகிய 3 பாடல்கள்

30. **கட்டளைக் கலிப்பா :**
113, 130, 136, 142, 156, 161, 172, 614, 615, 616,
622, 628, 634, 675, 677, 683, 688 - ஆகிய 17 பாடல்கள்

31. **கலித்தாழிசை :**
117, 127, 549, 550, 551, 632, 650;
கைலைக்கலம் : 7, 8 - ஆகிய 9 பாடல்கள்

32. **கலித்துறை :**
அ) கட்டளைக் கலித்துறை :
104, 107, 109, 116, 120, 124, 137, 141, 149,
153, 157, 167, 177, 183, 188, 201, 310, 314,
318, 322, 326, 330, 334, 338, 342, 346,
453, 456, 459, 462, 465, 468, 471, 474,
477, 480, 553, 554, 568, 571, 574, 577,
580, 583, 586, 589, 592, 595, 596, 597,
598, 602, 605, 607, 610, 619, 621, 623,
624, 626, 633, 639, 642, 645, 647, 650,
660, 663, 667, 673, 674, 680, 682, 687,
694, 700 முதல் 709 வரை ; மீ.இ. : 2, 4, 6
8, 10, 12, 14, 16, 18, 20 ; சிவ.இ. : 2, 4, 6, 8,
10, 12, 14, 16, 18, 20 ; கைலைக்கலம் : 5 ;
த.செ : 1 - ஆகிய 107 பாடல்கள்

ஆ) கலித்துறை : 552 — 1 பாடல்

இ) கலிநிலைத் துறை :
169, 190, 625, 655, 681 - ஆகிய — 5 பாடல்கள்

ஈ) விருத்தக் கலித்துறை : 110, 143, 165 - ஆகிய 3 பாடல்கள்

உ) சந்தக் கலித்துறை : 182 — 1 பாடல்

33. **கலிவிருத்தம் :**
129, 145, 173, 555, 664, 685, 689 - ஆகிய 7 பாடல்கள்

34. **குறளடி வஞ்சிப்பா :** 556 — 1 பாடல்

35. **சிந்தடி வஞ்சிப்பா :** 557 — 1 பாடல்

36. **வஞ்சித்தாழிசை :** 558 — 1 பாடல்

37. **வஞ்சித்துறை :** 125, 559, 666 ;
ப.மு.கோ. இறுதியில் 2-ஆவது பாடல் ஆகிய — 4 பாடல்கள்

38. **வஞ்சி விருத்தம் :** 126, 168, 560, 669 - ஆகிய — 4 பாடல்கள்

39. **புறநிலை வாழ்த்து மருட்பா :** 561 — 1 பாடல்

40. **கைக்கிளை மருட்பா :** 148, 562, 668 - ஆகிய 3 பாடல்கள்

41. **வாயுறை வாழ்த்து மருட்பா :** 563 — 1 பாடல்

42. **செவியறிவுறூஉ மருட்பா :** 564 — 1 பாடல்

43. **சிந்து :**
மீ.குறம் : 1, 2, 4 முதல் 10 வரை,
31 முதல் 50 வரை - ஆகிய — 29 பாடல்கள்

குறிப்பு : பாடல் எண்கள், ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள், நான்காம்திப்பு, 1961-நூலில் உள்ளவாறு காட்டப்பட்டுள்ளன.

217, 227, 230, 232, 235, 250, 260, 261, 267, 271, 278, 300, 307 - ஆகிய பாடல்கள் யாப்பருங்கலக்காரிகை ஒழிபியல் விதிமுறைகளை ஒட்டி நேரிசை வெண்பாக்களாகவே எண்ணப்பட்டுள்ளன.

பிற்சேர்க்கை - 6

அடிகள் பாடியுள்ள சந்தக் குழிப்புகளும் அவை அமைந்துள்ள பாடல்களும்

அறுசீர்ச்சந்த விருத்தம்	சந்தக்குழிப்பு	பாடல்களின் எண்
1.	தான தந்தன தான தந்தன தான தந்தனனா	147
2.	தனதன தந்தன தனதன தந்தன தனதன தந்தனனா	204
3.	தனன தனத்தன தனன தனத்தன தன தனனா	438, 439
எழுசீர்ச்சந்த விருத்தம்		
4.	தனனா தனந்ததன தனனா தனந்ததன தனனா தனந்த தனனா	119, 187
5.	தானதன தத்ததன தானதன தத்தன தானதன தத்த தனனா	123
6.	தனதன தனந்த தனதன தனந்த தனதன தனந்த தய்யான	134
7.	தனதன தனந்ததன தனதன தனந்ததன தனதன தனந்த தனனா	138
8.	தனந்தா தனத்தந் தனந்தா தனத்தந் தனந்தா தனத்தந் தனதானா	146
9.	தனனத் தனனத் தனனத் தனனத் தனனத் தனனத் தனதான	176
10.	தானனத் தந்ததன தானனத் தந்ததன தானனத் தந்ததன தனனா	184
11.	தத்தனன தத்தனன தத்தனன தத்தனன தத்தனன தத்த தனன	185
12.	தனதனன தனனத்த தனதனன தனனத்த தனதனன தனனத்த தனதான	198
13.	தனதான தந்த தனதான தந்த தனதான தந்த தனனா	202

31.	தனத்தன தனத்தன தனத்தன தனத்தன தத்தத் தனத்தான தானதன தத்தன	2	359
	முப்பத்திரண்டு சீர்ச்சந்த விருத்தம்		
32.	தனன தனதன தனன தனதன தனன தனதன தய்யனத் தாத்தன	4	4
33.	தனன தனத்தத் தனாதனத் தாத்தன	8	6
34.	தனன தன்னதன தனன தன்னதன தனன தன்னதன தத்தத்த தானன	4	13
35.	தனதன தனதன தனதன தனன தனந்தன தான தனந்தத் தனந்தன	4	115
36.	தனன தத்தன தனன தத்தன தானான தத்தன தானனத் தாத்தன	4	351
37.	தனன தந்தன தனன தந்தன தனன தந்தன தய்யனத் தாத்தன	4	352
38.	தனதன தனதன தனதன தனதன தனதன தனதன தத்தத் தனந்தன	4	603
	சந்தக்கலித்துறை		
39.	தனதன தனதன தனதன தனதன தந்தானா		182
	ஆக 39 வகையிலமைந்த, சந்தப்பாடல்கள் மொத்தம்		49

குறிப்பு: இச்சந்தக் குழிப்புக்கள் டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் குறித்துள்ளவை. 187-ஆம் பாடம் 'தனனா தனந்தனன தனனா தனந்தனன தனனா தனந்த தனனா' என்று சந்தக்குழிப்பு உடையதாக ஐயர் அவர்களால் குறிக்கப் பட்டிருப்பினும் 4-ஆவது சந்தக்குழிப்பில் அடங்குவதாகவே பாடல் விளங்குவதால் அதிலேயே சேர்க்கப்பட்டுள்ளது.
* குறியிட்டுள்ள சந்தவகைப் பாடல்கள் (15,16) ஐயரவர்களால் சந்தக்குழிப்புக் குறிக்கப்பெறாத சந்தப்பாக்களாகும். அவை இக்கட்டுரையாசிரியனால் ஏற்றனவாகப் பாடல் அசைகளைச் சிறிது மாற்றி இயைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

சொற்குறிப்பு நிரல்



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

புதிய பிற்சேர்க்கை

நூலாசிரியர் சிவத்திரு. டாக்டர் ந. மாணிக்கம்

வாழ்வியல்



பெயர் : **முனைவர். ந. மாணிக்கம்**

(மாணிக்க வாசகர் நினைவாகப் பெற்றோர் வைத்த பெயர்)

தகப்பனார் : திரு. குப. அரு. நடராசன் செட்டியார் அவர்கள்

தாயார் : திருமதி. ந. தேனம்மை ஆச்சி அவர்கள்

ஊர் : வேந்தன்பட்டி பொன்னமராவதி (வட்டம்)
புதுக்கோட்டை மாவட்டம்,
அஞ்சல் எண். 622 419.

பிறந்த நாள் : 08-05-1942

படிப்பு :
- ❖ உயர்திரு. வேங்கடராமய்யர் திண்ணைப் பள்ளி, வேந்தன்பட்டி. 622419
- ❖ வலம்புரி வடுகநாதன் உயர்நிலைப்பள்ளி, வலையபட்டி. 622411.
- ❖ தியாகராசர் கலைக் கல்லூரி, மதுரை-9.
  இளங்கலை வகுப்பு, B.A., தமிழ் (1958-1961)
  முதுகலை வகுப்பு, M.A., தமிழ் (1961-1963)

பணி : 1963 முதல் தியாகராசர் கலைக்கல்லூரியில் தமிழ்த் துறையில் ஆசிரியப்பணி, பயிற்றுநராகச் சேர்ந்து, தமிழ்த்துறைத் தலைவராகச் சிறப்பாகப் பணியாற்றி மே-2000-த்தில் ஓய்வு பெற்றமை. மொத்தம் 38ஆண்டுகள் பணி.

ஆய்வுப்பட்டம்
- ❖ எம்.லிட் (M.Lit.) 1969
  தலைப்பு : சங்கப் பாலைத்திணைப் பாடல்களின் திறனாய்வு, சென்னைப் பல்கலைக்கழகம், ஆங்கிலத்தில் ஆய்வேடு
- ❖ பி.எச்.டி. (Ph.D.) 1978
  தலைப்பு : குமரகுருபர அடிகள் பாடல்கள் ஓர் ஆய்வு மதுரைப் பல்கலைக்கழகம்.



08.05.2016 – 75ஆம் பிறந்த நாள் வயின்
பெருமங்கல விழா நாயகர் டாக்டர் ந. மாணிக்கம்.



13.03.2017 – திருவள்ளுவர் நாளில் திருவாவடுதுறை
ஆதீனத்தலைவர் அவர்கள்,
டாக்டர் **ந. மாணிக்கம்** அவர்களுக்குத்
திருக்குறள் செம்மல் என்ற பட்டமும்,
ரூ.5000/– பொற்கிழியும் வழங்கிய காட்சி.

குடும்பம் : ❖ 06-12-1962 திருமணம்.

❖ மனைவி பெயர் : திருமதி. மா. வசந்தா (எ) சிவகாமி, தீட்சா நாமம் மெய்ப்பொருள் தேவி (சத்தியோ சாத சத்தி) ஆ. தெக்கூர்க் கருமுத்து குடும்பத்தில் பிறந்தவர். (6-5-2014ல் சிவலோக பதவி பெற்றார்கள்)

❖ மகள் : திருமதி. பார்வதி தியாகராசன், B.Com., இல்லத்தரசி, கணவர் - திரு. அழ. தியாகராசன், B.Com., பங்கு வணிகம், சென்னை.

❖ மகன் : டாக்டர். மா.நடராசன், M.D., மதுரை அரசு இராசாசி மருத்துவக் கல்லூரி-துறைத் தலைவர்

மருமகள்: திருமதி. இலக்குமி நடராசன் B.Sc., (Nutrition) (Nutrition) (இளம்அறிவு ஊட்டச்சத்து உணவுஇயல்)

❖ மகள்: திருமதி : அழகு மீனாள் சொக்கலிங்கம் B.E., இல்லத்தரசி, கணவர் திரு. வி. சொக்கலிங்கம் B.Com., ஆடிட்டர், மதுரை.

எழுத்துப் பணி முதலியன :

தமிழ்த்துறை வாயிலாகக் கட்டுரைத் தொகுப்பு நூல் ஒன்று வெளியிடப்பெற்றுக் கல்லூரி வகுப்புகளுக்குப் பாடமாக வைக்கப் பெற்றிருந்தது. ஆண்டுமலர்கள் பலஆண்டுகள் சிறப்பாக வெளியிடப்பெற்றன. பல கோயில் குடமுழுக்குவிழா மலர்களுக்குப் பதிப்பாசிரியராக இருந்து அவை வெளியிடப்பெற்றன.

ஒரு தனி முழுமுதல் தலைவராகிய விநாயகருக்கு 1008 போற்றிகள் நூல் கச்சியப்ப முனிவரின் 'விநாயக புராணம்' அடிப்படையில் தமிழ்ப்படுத்தி வெளியிட்டுள்ளேன். சிவனுக்குத் திருமுறைகளின் அடிப்படையில் 1008 போற்றிகளும் வெளியிட்டுள்ளேன்.

அன்பர்களுடன் திருவாசகம் முற்றோதல் 700 முறைகளுக்கு மேல் தலைமையேற்று நடத்தியுள்ளேன். மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் 2000 முதல் 2020 வரை வெள்ளிதோறும் திருக்குறள் சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளேன். கழகத்தார் திருக்குறள் நம்பி என்ற பட்டம் தந்துள்ளனர். திருவாவடுதுறை ஆதினத்தில் திருக்குறள் செம்மல் என்ற பட்டம் 13-3-1917-ல் அடியேனுக்கு வழங்கி அன்பளிப்பு ரூ.5000/- மும் தந்துள்ளார்கள்.

மதுரைக் காந்தி அருங்காட்சியகத்தில் யோகம் பயின்றேன்; இயற்கை மருத்துவ முறைகள் தெரிந்து பயன்படுத்தி வருகிறேன். அடியேனை வழிகாட்டியாகக் கொண்டு பல மாணவர்கள் M.Phil., P.hd., பட்டம் பெற்றுள்ளனர்; சிறப்பாகப் பல இடங்களில் பணி செய்து வருகின்றனர்; ஓய்வும் பெற்றுள்ளனர். ஒருவர் துணைவேந்தராய்த் திகழ்ந்துள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 40 நாள் சிறப்புப் பயிற்சி பெற்று மொழியியல் பாடத்தில் தேர்ந்துள்ளேன். மாணவர்கட்கும் பாடஞ் சொல்லியுள்ளேன். ஓர் இனிய செய்தி தமிழில் இன்னும் கண்டு விளக்க வேண்டிய கருத்துக்கள் நிறைய உள்ளன என்பது. மூத்த மொழியாகிய தமிழ் பல்திற ஆற்றல்களும், சிறப்பும் கொண்டது என்பதை அறிவோம். 79 வயதாகிற இந்த முதுமைக்காலத்தில், தமிழ் ஆற்றல், இமய உச்சியில் உள்ளது என்பதையும், பற்பல திறங்களே நாள்நாளும் கண்டு கண்டு வியக்கிறேன் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ஓர் அனுபவம் : இந்தச் சோப்பை ஒருதடவைதேய்த்தாலே போதும் என்பதற்கும், இந்தச் சோப்பை ஒருதடவை தேய்த்தாலே போதும் பொருள் வேறுபாடு அறியலாம். இடைவெளி விடாமல் ஒலிப்பதற்கும், இடைவெளி விட்டு ஒலிப்பதற்கும் எவ்வளவு பொருள் வேறுபாடு? சிலேடை முறை போல் தோன்றினாலும் நடைமுறையில் நினைக்கின்ற பொருட்பயன் விளையாமல் போய் விடுகிறதே!

மதுரைப் பகுதி சார்ந்த சிவனடியார் கூட்டத்துக்குத் திங்கள் தோறும், மீனாட்சியம்மை கோவில், சன்மார்க்க சங்க வளாகத்தில் சாத்திர தோத்திர வகுப்புகள் நடத்தியுள்ளேன். கலையன்னையார் டாக்டர். இராதா தியாகராசன் அவர்கள் தோற்றுவித்த அருள் ஞானசபைப் பொறுப்பாளராயிருந்து, ஏறத்தாழ 20 ஆண்டுகள் திங்கள் தோறும் கடைசி ஞாயிறுகளில் ஆன்மிகச் சொற்பொழிவுகள் தக்கவர்களைக் கொண்டு 20 ஆண்டுகள் நடத்தி வருவதில் மிக்க மகிழ்வடைகிறேன்.

சைவத்திலும், தமிழிலும் கொண்ட ஈடுபாட்டால், தேவகோட்டைச் சைவ சித்தாந்தச் சரபம் அருள்தவத்திரு தத்புருடதேசிகர் என்னும் மலையாள் மணவாளராகிய குருநாதர், பாலகவி இராமநாதன் செட்டியார் அவர்களிடம் ஆ.தெக்கூரில் சிவன் கோவில் குடமுழுக்கு நாளில் நானும் என் மனைவியும் சைவ சமய தீட்சை பெற்றுக் கொண்டோம். ஈசான தேவன் என்னும் ஈகை வள்ளல், திருவருளுடை அண்ணல் என்பது அடியேனுக்குரிய தீட்சா நாமம். குருநாதர் திருமகனார் ஈசான தேவர்

என்னும் இராம. சொக்கலிங்கனார் அவர்கள் இளைய குருநாதராகத் தொடர்ந்து இருந்து எங்களை வழி நடத்துகிறார்கள். 2018 பிப்பிரவரியில் திருக்கயிலாயப் பயணம் சென்று வந்தேன்.

ஏறத்தாழ 42 ஆண்டுகட்குப் பின்னர் இந்த நூல் வெளியிடப் பெறுகிறது. இன்றையச் சூழலில் வெளிவரும் தமிழ்நூல்கள், நாளேடுகள், வார இதழ்கள், தொலைக்காட்சிகள், பேச்சு வழக்குகள் ஆகியவற்றைக் காணும் போதும் கேட்கும் போதும் மிகவும் வருத்தமாக உள்ளது. அவ்வருத்தமே இந்த நூல வெளியிடத் தூண்டியது எனலாம். இந்நூலின் தமிழ்நடை, இறையருளால், நன்கு சிறப்பாகப் பிழையின்றி அமைந்துள்ளது என்று, டாக்டர் பட்டத்துக்குப் பரிந்துரைத்த இலங்கை அறிஞர் குறிப்பிட்டுப் பாராட்டி இருந்தார் என்பதை இங்கு மகிழ்வுடன் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையக் காட்சியில் பல்வகைப் பிழைகளும் நீக்கமற நிறைந்திருக்கின்றன. ஒற்றெழுத்து மிக வேண்டிய இடங்களில் மிகாமை, பன்மை எழுவாய்க்கு ஒருமை வினைமுடிபு கொடுப்பதில் கோலோச்சக் காண்கிறோம். லகர, ளகர, ழகரங்களும், ரகர, றகரங்களும் சங்கமமாகி விட்டன. வேறுபாட்டோடு ஒலிக்கப்படவில்லை. ஓர் உறுத்தலான செய்தி: ஒரு நாளேட்டின் செல்வாக்குமிக்க ஆசிரியர்; 'என்னைப் பொறுத்தவரை என்பது தவறு'. 'என்னைப் பொருத்தவரை' என்று எழுதுவதே சரியான ஒன்று என்று தம் நாளேட்டில் பிடிவாதமாக எழுதி வந்தாரே! ஆசிரியர்கள் உட்படப் பேச்சாளர்கள், மக்கள் முதலிய பல்லோரும் இந்த நிலையில் ஒரே ரகம் தான். அரசு தமிழ் வளர்ச்சித் துறை மூலம் ஏதாவது செய்ய வேண்டும்.

இயன்ற வரை நல்ல தமிழ்ச் சொற்களைப் பிழையின்றி ஆள்வதையும், வடவெழுத்துக்களைத் தமிழ் இலக்கண அறிவுரைப்படி, தமிழ் ஒலிப்படுத்தி ஒலிப்பதையும், எழுதுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளேன். சமய வழக்காறுகளில் திருமுறைகளைப் பின்பற்றி நல்ல தமிழில் கூறுவதை மேற் கொண்டுள்ளேன். அரிய யாப்பு வடிவங்களில் கவிதைகளும் எழுதியுள்ளேன். தோன்றா தோற்றித் துறை பல முடிப்பினும், இன்றையச் சூழலில் தான்தற்புகழ்தலும் தகும் புலவோற்கே! என்ற அனுமதியை ஆணையாகக் கொண்டு இக்கருத்துக்களையெல்லாம் தெரியப்படுத்திக் கொள்கிறேன். மங்கல வழக்குகளை மேற் கொள்வதையும் வழக்கத்தில் கொண்டுள்ளேன். இவையெல்லாம் என் ஆசிரியப் பெருந்தகைகள் எனக்கு வழிப்படுத்தியவை என்பதை நன்றியுடன் புலப்படுத்த விழைகிறேன்

அடியேன் இயல்பை நன்கறிந்த என் குரு நாதரும், உலகம் சுற்றிய தமிழர் சோமலே அவர்களும் என்னைக் குறிக்கும் போது மாணிக்கம் சாதாரணமானவர் இல்லை என்று கூறியமை என்னுள் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. சைவத் தொடர்புடைய தமிழ்ப் புலவரைப் பற்றி ஆராய விரும்பிய நிலையில் டாக்டர் தமிழண்ணல் அவர்கள், குமரகுருபர அடிகள் பற்றி ஆராயலாம் என்று, என்னை வழிபடுத்தினார்கள். அவர்களை நன்றியோடு நெஞ்சார நினைவு கூர்கிறேன்.

இந்த நூல் அச்சில் வெளிவருவதற்கு முழுமுதற்றுணையாய்ச் செயல்பட்டவர் திரு. க. மனோகரன் M.A., M.Phil., அவர்கள். தியாகராசர் கலைக் கல்லூரி ஆண்டுதோறும் (இலவசமாக) திருவருட்கொடையாக நடத்திவரும் வகுப்புக்களில், அவருக்கு ஆசிரியராக விளங்கும் வாய்ப்பு எனக்கு அமைந்தது. அவர் தம் உதவிக்கு மிக்க நன்றி.

மனம் கோணாமல், பல முறை பிழைத் திருத்தங்கள் செய்து, நூலை அச்சிட்டுத் தந்துள்ள கனகா அச்சக உரிமையாளர், வழக்கறிஞர். கா. இராஜசேகரன் M.A., B.L., அவர்கட்கு என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களும் நன்றியும் உரியன.

அடியேனை இப்பணியில் ஈடுபடுத்தி நன்கு நிறைவு செய்து தந்த திருவருளுக்கும், ஈகை வள்ளலாகிய திருவருளுடைய அண்ணல் ஆகிய இளைய குருநாதர் வயநாகரம். இராம. சொக்கலிங்கனார் அவர்களுக்கும் என்று நன்றியுடையேன்.

கொரோனா அனைவரையும் வீடுகளில் முடக்கியுள்ள இந்தக் காலத்தில் பெருந்துணையாக நின்ற என் குடும்பத்தார்க்கு நன்றி.

அருட்டவத்திரு. குமரகுருபர அடிகள் வாழ்த்துடன் நிறைவு செய்கிறேன்.

வாழ்த்து
(கட்டளைக் கலித்துறை)

தண்டமிழ்ச் சைவக் குமர குருபர
ஈர்ததனையால்!
அண்டினேன் ஆர்ந்தேன் அருமைச் சிவநெறி
ஆண்டதுவால்!
கொண்டேன்பே ரின்பமே கூறுநின் நூல்களை
ஆய்வு செய்து
கண்டேன் முனைவனைக் கால மெலாமுனை
வாழ்த்துவனே.

இப்படிக்கு அடியேன்,
அன்புள்ள

(ந. மாணிக்கம்)

செல் : 94432 43531

முகவரி : திருமகள் அகம்,
5/4, வல்லபாய் வீதி, சொக்கிகுளம்,
மதுரை — 625 002.

கனகா பிரிண்டர்ஸ்
154/57, மோதிலால் மெயின் ரோடு,
கரிமேடு,
மதுரை - 625 016.
போன் : 0452 - 4354803
செல் : 98940 65454